ஸ்ரீ வைத்தியநாதீயம்

[illegible]

R6
N19
120121

848 14 DEC 1919

விற்பனைக்குத் தயாராயிருக்கும்

ஸ்ரீ ஸ்வாமிகளின் படங்கள்.

		ரூ.	அ.
1.	[illegible] சர்வமத மகாசபையில் உபதேசித்த பெரிய போட்டோபடம். விலை ரூ.	3	0
2.	சிஷ்யர்களுடன் யோகநிஷ்டையில் இருக்கும் பெரிய போட்டோபடம் ...	2	0
3.	பத்மாஸனமாய் யோகநிஷ்டையில் இருக்கும்போட்டோ	2	0
4.	[illegible] இரண்டு [illegible] இரண்டு போட்டோபடங்கள்	4	0
5.	யோகபட்டையுடன் நிஷ்டையில் இருக்கும் போட்டோ	1	8
6.	தம் ஆச்ரமத்தில் வீராஸனத்துடன் நிஷ்டையிலிருக்கும் போட்டோ ...	1	8
7.	பத்மாஸனத்துடன் புலித்தோலின்மீது சயனித்திருந்தபோட்டோ	1	8
8.	சிஷ்யர்களுடன் [illegible]ன்மீது சயனித்திருந்தபோட்டோ	1	8
9.	[illegible] போட்டோ	1	8
10.	ஸ்வாமிகள் 20 வது வயதில் பிடித்தபோட்டோ ...	1	8
11	[illegible] வது வயதில் பிடித்த போட்டோ ...	1	8
12	[illegible] ஸ்ரீ ஸ்வாமிகளின் பத்னிபோட்டோ ...	1	8
13.	ஸ்ரீ ஸ்வாமிகள் [illegible] டப்பி 1-க்கு ...	10	0

ஸ்ரீ ஸ்வாமிகளின் புஸ்தகங்களும் போட்டோபடங்களும் இதனடியில் கண்டவிலாசத்திற்கு எழுதிப்பெறலாம். வேறு எவர்களுக்கு எழுதவேண்டுமோ அது அந்தந்த விலாசத்திற்கு எழுதிப்பெறவேண்டும். இவ்விரண்டு விலாசங்களில் தவிர மற்ற எந்தவிடங்களிலும் கிடைக்கமாட்டா. அனேகர் ஸ்வாமிகளின் புஸ்தகங்களுக்காக அனேக புஸ்தகஷாப்புகளில் போய் விசாரித்துப் புஸ்தகங்கள் கிடைக்காமல் ஏமாந்து விட்டார்கள். புஸ்தகங்கள் மேல்கண்டவிலாசத்தில் அதிகோப்யமாய்வைத்து விற்கப்படுகின்றன. இவ்விடத்தில் ஸ்ரீ ஸ்வாமிகளின் புஸ்தகங்கள் தவிர மற்ற எந்தப்புஸ்தகங்களும் விற்கப்படுவதில்லை.

இவைகள் வேண்டியவர்கள் அடியில்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெறலாம்.

ஸதானந்தன், வேப்பேரி, சென்னை.

சொல்லுக்குறுதி எது?

	ரூ.	அ.
திருக்குறள் மூலம் (இனேஸ்கடிதம் பாகெட்சயிஸ்) ...	0	8
,, மூலமும் பரிமேலழகர் உரையும் டெிசயின் ...	2	8

இது, பலர்வேண்டுகோளுக்கிணங்கி முத்துப்போன்ற சிறுஎழுத்தில் உயர்ந்ததாளில் அச்சுப்பிழையின்றி சுத்தபாடமாக அச்சிட்டு காலிகோபயிண்டு செய்யப்பெற்றது.

சந்தப்பொலிவுக்கு ஆதி.

இராமசேயத் திருப்புகழ் (பால அயோத்தியாகாண்டங்கள் மாத்திரம்.) இது, பழைய அரியநூல்களில் ஒன்று. இதுகாறும் வெளிவராதது. பலரும் இதன் பொருளை அறியும்வண்ணம் தெளிவாகநடையில் இலக்கணக்குறிப்புடன் பொழிப்புரை எழுதப்பெற்றது. படிக்கப் படிக்க இனிய சுவைதரும், இதன் விலை அணு ... 12

பத்திக்குவித்து எது?

பன்னிருதிருமுறைத்திரட்டு. பன்னிரு திருமுறைகளைப் படிப்பதன் பலனை இதனால் பெறலாம். இதன் விலை அணு ... 12

ஸ்ரீசுந்தரமூர்த்தி. (தடுத்தாட்கொள்ளப்பெறல்) விலை அணு 2½

காரைக்காலம்மை என்னும் புனிதவதி 4

ஸ்ரீ கிருஷ்ணன் தூது. 5

இம்மூன்றும் சிறியோரும் பெரியோரும் கற்றுக்களிப்படையும் வகையாய் எழுதப்பெற்றவை. நவரசங்களும் அடங்கிய நாடகரூபம். கல்விமான்களால் ஆமோதிக்கப்பெற்றவை.

ஸ்ரீகம்பராமாயணவசனம். (காலிகோபயிண்டு) ரூ. ... 3 8

இதன் விலை ரூ. 4 யாவரும் இதன்பலனை அனுபவிக்கும் பொருட்டு டிை குறைந்தவிலைக்கு கொடுக்கப்படுகிறது.

ஸ்ரீராமாயண அம்மானை இதன்விலை ரூ. 1 4

பெண்களுக்குமாத்திரம் அணு 12

பழநித்தலபுராணம் அணு 6

நோயற்றவாழ்வைக்கொடுப்பது எது?

தேரையர் மருத்துப்பாரத நாடகமென்னும் வைத்தியகர்ம மார்பநூல், வைத்தியசாரங்களை நவநீதம் (வெண்ணெய்) போல் திரட்டிக்கொடுப்பது இது ஒன்றே, வைத்தியர்களுக்கும், வைத்தியரல்லாதார்கட்கும் மிக்க உபயோகமானது அணு 10

மானேஜர்,

தமிழ்வளர் சங்கம்.

34, தொட்டிகலை குமாரப்பமுதலி வீதி,

சூளை - சென்னை.

ஸ்ரீ கபீர்தாஸ் சரித்ரம்,

ஸ்ரீ மீராபாய் சரித்ரம், ஸ்ரீஞானதேவ் சரித்ரம்

இவைகளின் விஷயங்கள் இந்நூல் கடைசியில் சொல்லப்பட்டிருக்கின்றன. தயைசெய்து அதைப் பாருங்கள்.

2-DEC 1919
MADRAS

தத் ஸத்

ஸ்ரீ பரப்ரஹ்மணே நம:

ஜீவப்ரஹ்மைக்ய

வேதாந்த ரஹஸ்யம்.

இது

ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதாநந்த யோகீஸ்வரர்

அவர்களால்

இயற்றப்பட்டு

சென்னை

கணேச அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

நான்காம் பதிப்பு 1,000.

1-11-1919.

All Rights Reserved.] [விலை ரூபா. 2-8-0.

Title Page only Printed at Solden & Co., Madras, S.E.

254
18·4·48

முக்ய கவனிப்பு

இடித்திரியும் மனஸை ஓடவிடாமல் நிறுத்தி முக்தி யடைவதற்காக இந்நூலாசிரியரால் வெளியாகிய முக்ய மான நூல்கள் :—

நான்காம்பதிப்பு "ஜீவ ப்ரஹ்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்" (அநேக ஆப்டோன் ப்ளாக் படங் களுடன் கூடியது.) காலிகோபயிண்டு	விலை	ரூ. 2	அ. 8
இதற்கு த்ருஷ்டாந்தம் ஸ்ரீ க்ருஷ்ணார்ஜுந ஸம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீபகவத்கீதை உயர்ந்த காலிகோபயிண்டு	விலை	1	12
ஷெடி லெஸ் ஸ்டிப்பயிண்டு.	விலை	1	4
இரண்டாம் பதிப்பு "தத்வபரிசோதனையும் அன்னதானபலனும்" என்னும் அரியநூல்	விலை	0	6
ஜ்ஞானார்த்தமாய் எழுதிய ஸ்ரீ கபீர்தாஸ் சரித்திரம், ஸம்ஸ்க்ருத பாஷையிலிருந்து கன்னடத்திலும் கன்னடத்திலிருந்து தமிழிலும் மொழிபெயர்த் தது. இதுவரையில் வெளியாகாதது.	விலை	2	4
இனி "ஸ்ரீ துளஸீதாஸ்" "ஸ்ரீஜ்ஞானதேவ்" சரித்ரங்கள் இரண்டும் ஒரேபுஸ்தகமாய் உயர்ந்த காகிதத்தில் அச்சிட்டு காலிகோபயிண்டுடன் வெளிவரப்போகின்றது. அதன்	விலை	2	4

இவைகள் வேண்டுபவர்கள், அடியில்கண்ட விலாசத்திற்கு எழுதிப்பெறலாம்.

T. கல்யாணசுந்தரம், A. ராஜகோபால்,
பெரம்பூர் பாரக்ஸ், சென்னை.

R6
N19
12020



கடப்பை ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதாநந்த யோகீஸ்வரர்.
1865௵ பிப்ரவரிமீ 16௳ குருவாரம் ஸிம்ஹ லக்னத்தில் ஜனனம்.
ஸ்ரீ ஸ்வாமிகள் நிர்விகல்ப ஸமாதியிலிருக்கும் பெரிய போட்டோ,
வி. பி. உள்பட ரூபா. 2—0—0
"ஸதாநந்தன், வேப்பேரி போஸ்ட், சென்னை" என்று எழுதிப்பெறலாம்.

GOLDEN & CO., MADRAS.

7A

1.A



மானஸ தியானோ உபாஸன பூஜா, தேவதா விஸ்வ விராட் ரூபபாவனா

ఓం
ప్రణవము



మానస ధ్యానోపాసన పూజా, దేవతా విశ్వవిరాట్ రూపభావన

Solden & Co., Printers, Madras. S.E.

விஷய அட்டவணை

	பக்கம்.
1. [illegible]	1
2. [illegible]	15
3. [illegible]	24
4. [illegible]	28
5. [illegible]	36
6. [illegible]	44
7. [illegible]	46
8. [illegible]	56
9. [illegible]	65
10. [illegible]	73
11. [illegible]	75
12. [illegible]	81
13. [illegible]	85
14. [illegible]	95
15. [illegible]	97
16. [illegible]	98
17. [illegible]	99
18. [illegible]	102
19. [illegible]	114
20. [illegible]	119
21. [illegible]	121
22. [illegible]	130
23. [illegible]	140
24. [illegible]	151
25. [illegible]	160
26. [illegible]	174
27. [illegible]	176

28. பற்றொழிவிலுள் உண்டாகும் துணை ... 178

29. கர்த்தவ்யம் [illegible] வியாதிகளையும் [illegible] செய்தல் ... 181

30. சிஷ்யர்களுக்கு கர்த்தா [illegible] ... 191

31. [illegible] ஜீவிகைகள் ... 191

32. [illegible] ஜீவிகை ... 191

33. [illegible] ஜீவிகை ... 192

34. [illegible] விகல்ப [illegible] ஆதல். ... 192

35. [illegible] ... 193

36. வ்யாதிகளை போக்கிக்கொள்ள [illegible] ... 194

37. [illegible] விடுபடுதல். ... 196

38. [illegible] ... 219

39. [illegible] ... 220

40. [illegible] உண்டாகும் [illegible] ... 244

41. [illegible] தாயத்து [illegible] ... 250

42. [illegible] தாயத்து மந்திரப்ரயோகம் ... 254

43. [illegible] பாராயணம் ... 261

44. [illegible] சாதகம் ... 266

45. [illegible] ... 272

46. [illegible] செய்தல் ... 278

47. இரவில் [illegible] பயணித்தல் ... 280

48. [illegible] ... 284

49. “ஜபம்” செய்யும் [illegible] ... 289

50. மனதின் ஸ்வபாவம் ... 294

51. [illegible] ... 306

52. [illegible] ... 308

53. [illegible] ஸந்யோகம் ... 309

54. “[illegible]” [illegible] ... 314

55. [illegible] ... 315

56. [illegible] என்ன? [illegible] என்ன? ... 318

57. [illegible] ...

58. [illegible] ... 334

59. [illegible] செய்யவேண்டியதுதான் ... 343

60. கர்மமென்றால் ஏது? அகர்மமென்றால் ஏது? ... 346

61. [illegible] களின் லக்ஷணம் ... 350

62. ஸ்ரீராமாயணத்தின் அந்தரார்த்தம் ... 353

63. தன் [illegible] தெரிந்துகொள்ள [illegible] உபதேசித்தல். ... 356

64. சிஷ்யன் தன் ஸ்வரூபத்தை ஆசார்யரிடம் சொல்லுதல் 367

65. மௌனமென்றால் ஏது? ஸமாதியென்றால் ஏது? ... 369

66. [illegible] ... 371

67. “பரமஹம்ஸ” என்றால் என்ன? ... 374

68. [illegible] ... 377

69. [illegible] உண்டாகும் பலன் ... 392

70. [illegible] ... 397

71. ஞானமடையும் மார்க்கம் ... 401

72. ஸ்ரீ [illegible] சரித்திர விஷயம் ... 413

73. வெளிவராதிருந்த ஸ்ரீ [illegible] ஸ்ரீ [illegible] சரித்திரங்களில் அடங்கியிருக்கும் விஷயங்கள் யாவும் இந்நூல் கடைசியில் 417 ம் பக்கம் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவற்றை ஒவ்வொருவரும் முக்கியமாய்க் கவனித்து வாசிக்கவேண்டும்.

படங்களின் அட்டவணை.

1. முதற்படம், ஸ்ரீ ஸ்வாமிகள் ... முகப்பு.
2. இரண்டாம்படம், [illegible] பார்வதி ஸரஸ்வதி லக்ஷ்மி [illegible] உள்ளடங்கள்.
3. மூன்றாம்படம், [illegible]
4. நான்காம்படம், [illegible] குருபூஜை.
5. [illegible] ... 19
6. [illegible] ... 29
7. [illegible] ... 41
8. ஸ்ரீமந் நாராயணமூர்த்தி [illegible] ஆலிலையின்மீது பள்ளிகொண்டிருக்கும் படம். ... 115
9. [illegible] ... 175
10. [illegible] ... 190
11. [illegible] ... 201
12. [illegible] ... 211
13. [illegible] ... 224
14. [illegible] ... 231
15. [illegible] ... 237
16. [illegible] ... 267
17. ஸ்ரீ [illegible] ... 272
18. ஸ்ரீமத் [illegible] ... 275
19. ஸ்ரீ [illegible] ... 293
20. [illegible] ... 306
21. [illegible] ... 312
22. [illegible] ... 343
23. [illegible] ... 380
24. [illegible] ... 398

One of the Seven Wise Men of Greece.

A Sophist wishing to puzzle him with difficult questions, the sage of Miletus replied to them all, without the least hesitation, and with the utmost precision :—

1. What is the oldest of all things?
"GOD, Because He has always existed."
2. What is the most beautiful of all things?
"THE WORLD, Because it is the work of God."
3. What is the greatest of all things?
"SPACE, Because it contains all that has been created."
4. What is the most constant of all things?
"HOPE, Because it still remains with man, after he has lost every thing else."
5. What is the best of all things?
"VIRTUE, Because without it there is nothing good."
6. What is the quickest of all things?
"THOUGHT, Because in less than a moment it can fly to the end of the universe."
7. What is the strongest of all things?
"NECESSITY, Which makes man face all the dangers of life."
8. What is the easiest of all things?
"TO GIVE ADVICE."
9. What is the most difficult of all things?
"TO KNOW THYSELF."
10. What is the wisest of all things?
"TIME, Because it discovers all things."

[illegible]

அருளாய் விளங்கிய

[illegible] அவர், [illegible] அளித்தனர் :—

1. எவ்வாற்றினும் பழமையானது எது ?
"கடவுள்" என்னில், அவர் [illegible]
2. எவ்வாற்றினும் [illegible] எது ?
[illegible]
3. எவ்வாற்றினும் [illegible] எது ?
[illegible]
4. எவ்வாற்றினும் [illegible] எது ?
[illegible]
5. எவ்வாற்றினும் [illegible] எது ?
[illegible]
6. எவ்வாற்றினும் [illegible] எது ?
[illegible]
7. எவ்வாற்றினும் [illegible] எது ?
[illegible]
8. எவ்வாற்றினும் [illegible] எது ?
[illegible]
9. எவ்வாற்றினும் [illegible] எது ?
[illegible]
10. எவ்வாற்றினும் [illegible] எது ?
[illegible]

Extract from the Indian Patriot of the 10th February, 1914.

LECTURES BY A YOGI AT GOOTY.

A correspondent writes :—

Swami Paramahamsa Satchidananda is the name of a very earnest and learned person and he lives now at Cuddapah. He rigidly endeavours to practise the Ashtanga Raja Yoga and knows the Gita and the Upanishads by heart. He delivered three eloquent lectures in Telugu in this town on the great imperative need for man to aspire and strive for true and spiritual enlightenment and to live a clean and pious life. His copious and ready quotations in Sanskrit from the Gita and the Upanishads are so apt and illuminative. He is anxious to deliver lectures in different centres before entering into a stage of meditation, called Samadhi.

Extract from the Army and Civil News, Bangalore. 18th January 1915.

An Indian Correspondent writes the following :—

His Holiness, Swami Paramahamsa Sachidananda Yogeeswarar of Cuddapah, performed with success the Jalasthambha feat as advertised yesterday, Sunday the 17th instant, in the tank of the Subramanya's temple, Old Madras Road, Ulsoor, Bangalore. His Holiness remained floating on the water with hands and legs folded, for over an hour and a half, and spoke with the people around him from that posture, about the practice of Brahmasutram. The feat, rare in itself, was made rarer, by the beautiful exposition of "Mind, Atman and Paramatman" but owing to the large concourse of people which continued pouring in till late in the evening, and owing to the unmanageableness of the crowd which numbered over 5000, the lecture became inaudible, especially at the end. The

Swami, therefore, at the request of many gentlemen, has kindly consented to perform the same feat, once again next Sunday the 24th instant, at the same place with the programme a little changed as stated under: (1) Lecture on "Mind and How to control it?" in the Subramanya's temple Ulsoor, 2 to 3 P. M.; (2) Jalasthamba performance in the tank attached to that temple, 3 to 4 P. M.; (3) Lecture again in the Cantonment in the Sankaranarayana Sabha Hall, Sivan Chetty Garden Street, on "Atman and its relation to the Body."

Extract From the New India, dated Friday, the 14th May 1916.

A STRANGE PULPIT.

We have been asked to publish a curious notification to the effect that a certain Swami is going to deliver three discourses in Madras, and the pulpit from which he will address the Public will be neither of wood nor of stone, but will be the surface of three temple-tanks in Madras, on which he will float by means that are apparently to be understood as being "occult." The notification is so extraordinary that we reproduce it in full.

"SWAMI PARAMAHAMSA SATCHIDANANDA YOGEESWARAR OF CUDDAPAH."

His Holiness, the above-named Swamigal will perform Jala-sthambhanam Yogam (floating in water) and deliver lectures in Tamil from that posture as follows:—

1. On the 15th instant at 6 A. M., in the Kristnappa Naicken Tank, George Town, on "Brahmasutram (Yoga)." and how to practise it.

2. On the same evening, at 5 P. M., in the Sri Parthasarathy Perumal Temple Tank, Triplicane, on "the Gross, the Subtle and the Causal bodies."

3. On the 16th evening, at 5 P. M., in the Chennakesava Perumal Temple Tank, close to Flower Bazaar, Madras, on "Mind and How to Control it."

"We should not be justified in [illegible] the Swami's pretensions." It is recorded of the Founder of Christianity that one night when the disciples saw him walking on the sea, they were troubled saying "It is a spirit; and they cried out for fear." In this case, however, the Founder of Christianity did not deliberately [illegible] "water" as a "Posture" for a discourse, but merely walked on the sea in order to come to his disciples who were in a boat. Non-Hindus are not precluded from the precincts of temple tanks, and there are perhaps not a few who would like to take advantage of such an exhibition of the apparently occult.

Extract from the New India, dated Saturday, the 15th May 1916.

A LECTURE IN FLOATING POSTURE.—The Kristnappa Naicken Tank, George Town, was this morning at 6 o'clock, the scene of a huge crowd of anxious spectators, numbering over 7,000 Indians and European men, young and old, rich and poor, educated and uneducated, to see Swami Paramahamsa Satchidananda Yogeeswarar of Cuddapah, perform Jalasthambanam Yogam (floating on water) and to hear him deliver a lecture in Tamil in that posture on "Brahmasutram and how to practise it." There were also spectators on house tops round the tank. The Swami began to demonstrate his floating (and) to deliver his lecture precisely at the appointed time at the north ghaut of the tank and took one hour and forty-five minutes to finish it, [illegible] the same ghaut. During this long time he kept himself floating round the big tank with his legs in what is known as Padmasanam and his body in sleeping posture (See page Nos. 31 and 237.) The Swami was always in touch with the people by floating near the parapet walls, so that the people might see and hear him. However, it was impossible to hear him distinctly, owing to very large number of people round the parapet walls and to the low level of the water in the tank. A very smart sale of the Swami's photographs and his book on Yoga in Telugu and Tamil was made on the spot.

Extract from the Madras Times, dated [illegible], the 17th May 1916.

A VOICE FROM THE DEEP, A PREACHER AFLOAT.

(By one of the congregation.)

The announcement in the Madras Times last week that a Swami was going to deliver a discourse afloat on the surface of a Temple Tank suggested that a novelty was in store with perhaps

A SPICE OF THE OCCULT,

and that it might be worth the trouble of a trip to Triplicane. I have seen men preaching from various kinds of pulpits; I have seen a preacher discoursing from the magnificent pulpit Saint Gudule at Brussels, a world-wonder of statuary in wood; I have seen a preacher whose pulpit was a packing case at a street-corner; I have seen a preacher discoursing from a Music hall stage; I have seen a preacher discoursing from a kitchen chair in a blind alley; I had never, however, seen a preacher afloat, and on Saturday evening I drove to the Sri Parthasarathy Perumal Temple to see His Holiness Paramahamsa Satchidananda Yogeeswarar of Cuddapah shooting [illegible] torpedoes across the waters of the big Triplicane Tank. A crowd of motor cars, carriages, jutkas and bullock-carts showed that a great number of people [illegible] my desire. The many steps of two sides of the tank were densely packed with

THE WATER PREACHER'S CONGREGATION

and listeners had posted themselves even on the roofs of the houses around. It was delightfully Indian sight. In front was the water glittering in the bright sunshine [illegible] a little red [illegible] white temple in the middle of the tank. There was the huge Indian crowd and one side of the [illegible] was particularly bright [illegible] where [illegible] matrons and maids were [illegible] for the discourse. At the back, the massive portals of the temple and its tall Gopuram frowned on the scene. I was late. The preacher was already in his pulpit and the preaching had begun. It was difficult to catch sight of him for the moment. I had expected to see him either standing or sitting [illegible] on the surface of the water and for the moment I could see nothing at all. Somebody, however pointed him out. Seen from a distance the preacher looked like

AN ALIGATOR.

On the West Coast, I have often seen aligators afloat in the back waters. The snout is to be seen and perhaps a bit of the body and the tip of the tail. The preacher floated on his back and you could see his head and his knees above water and sometimes his hands. And it was thus that he preached. I have heard of a voice crying in the wilderness; here was a voice crying in the water. Judged as a sermon, it may be said without much fear of contradiction that the sermon was a failure. Nobody could hear what the preacher said and nobody seemed in any way anxious to do so. They were not out to hear him preach but to see him float and he floated well. His discourse was supposed to be on the gross, the subtle, and the causal bodies and he could certainly have preached more effectively on dry land. What went you out for to see? A man preaching? Nay, it was to see a man floating. The Swami may be a very devout man; and a guide informed me that it was by yogic manipulation of his breath that he floated as he did. Perhaps this was the case, but I could see nothing that could not be done by ordinary means. The ordinary swimmer would certainly find it difficult to float as the Swami floats. He lies on his back in the water like a log for minutes together and talks. The ordinary swimmer could not do so.

Preface.

I thought I was singularly fortunate in having had my request granted by Swami Paramahamsa Satchidananda Yogeeswarar of Cuddapah, who has been known to me for the last few years, to write a preface to the second edition of this mystic treatise "**Jeeva Brahmykhya Vedanta Rahasyam**" (the secrets of the human soul becoming the part and parcel of the Universal soul). In my hurried preparations on my professional tours for Burma and Siam, I went hurriedly through here and there some of his instructive lectures and lessons in Upanishads. The main object of these lessons seems to me to be that five senses of human beings can be controlled without allowing themselves to fall Victims to Temptations.

The Swami floating on the surface of water in various tanks with arms and legs folded (Padmasanam) and preaching sermons in that mystic posture has attracted the admiration of the religious public and the photo describing the posture is appended in this book. When Swami was questioned by me to explain as to how he could float on water and speak in that postur, he told me that he could breath in fully into the stomach of 22 ft. and lie down on the surface of water, when he could float. Then a small quantity of air should be given out and the same quantity should be breathed in and this process repeated will help the Swami to deliver lectures. The original quantity of air, after expunging the small quantity, should remain fixed, so long as he delivers lecture on the surface of water, only the small quantity of air should be alternately breathed in and breathed out. All these can be fully understood in page No. 196 (pranayama).

All the illustrations necessary for understanding these lectures together with the exposition of their deep significance are well explained by the Swami in First Six Chapters of 'BHAGHAVATGEETA'.

The treatise has been prepared at the request of the several disciples of the Swami and it is considered desirable that these papers should be given a wide publication, and be made it easily accessible both to the rich and to the poor and with this object in view it has been decided to issue them at a cheap rate of Rs. 2—8—0.

The papers have been arranged under different headings and supplied with glossaries to understand the Sanskrit words written in Tamil and photos to suit the lectures, for the convenience of those that read the treatise.

I hope that these lectures will prove helpful in disseminating religious knowledge among the people.

I learn that the Swami is soon to go away into the Cave of Nirvikalpa Samadhi, which is situated under the temple and the plan of the temple together with the Cave is also appended here (page No. 1).

A. TIRUVENKATASWAMI MUDALIYAR, B.A.,
Consulting Geologist.

REGISTERED
12-DEC 1919
MADRAS.

ஸ்ரீ ஸர்வ பரிபூர்ண பரப்ரஹ்ம ஸ்வரூபம்.

முகவுரை.

உலகத்திலுள்ள ஜனங்கள் ஓர்மரத்தின் கிளையைக் குறிப்பிட்டு அதன்மத்தியில் காட்டும் மூன்றாம்பிறையைப்போலவும், ஆகாயத்தில் ஸப்த ரிஷிகளின் மண்டலங்களைக் குறிப்பிட்டு சண்டாளகுலத்தில் அவதரித்த வசிஷ்டரது பார்யை பதிவ்ரதா சிரோன்மணியாகிய அருந்ததி தேவியை விவாஹ காலத்தில் குறிப்பிட்டுக் காட்டுவதுபோலவும், இந்த "ஜீவ ப்ரஹ்மைக்ய வேதாந்தரஹஸ்ய" மானது, ஜ்ஞானேந்த்ரிய கர்மேந்த்ரியங்களை வெவ்வேறாய்ப் பிரித்துக்காட்டி, ஸூக்ஷ்ம ஸ்வரூபமாயிருக்கும் பரப்ரஹ்மத்தை உபதேசிக்கின்றது. ஜீவஸாக்ஷியாகிய கூடஸ்தனும், ஈஸ்வரஸாக்ஷியாகிய பரப்ரஹ்மமும் தானென்று அறியாமல் ஸ்தூல ஸூக்ஷ்ம காரணங்களினால் உண்டாகிய தேஹமே தானென்று அபிமானம்வைத்து நான் ப்ராஹ்மணனென்று ப்ரமையடைந்து அநேக யுகவருஷங்களாய் புருஷன் காலசக்ரத்தில் (சுழல்காற்றில் அகப்பட்டுக்கொண்ட செத்தையானது கிறுகிறுவென்று சுழல்வதுபோல்) சுழன்று கொண்டு நானாவித ஜந்துக்களின் யோனிகளில் பிறந்து பிறந்து

புண்யபாப மிஸ்ரகர்மங்களைச் செய்துகொண்டு சுகதுக்கங்களை அநுபவித்துப் பிறந்துகொண்டும் இறந்துகொண்டுமிருக்கின்றார்கள். ப்ரஹ்மமே நான் என்று தெரிந்துகொள்ளும் வரையில் ஜனனமரணங்கள் வந்துகொண்டேயிருக்கும். ஆதலால், உலகத்தில் ஸ்த்ரீ புருஷ ரூபமாய் சஞ்சரித்துக்கொண்டிருக்கும் மானிட ஜனங்களெல்லாம், மாயையால் கட்டுப்பட்டு மிகவும் அகாதமான ஸம்ஸாரமென்னும் பாழ்ங்கிணற்றில் வீழ்ந்து த்ருஷ்ணை என்னும் வ்யாதியினால் பிடிக்கப்பட்டு விஷயவாஸனா ரூபமாகிய அல்ப சுகங்களுக்குட்பட்டு நிரந்தரம் பரிதபித்துக்கொண்டிருப்பார்களே அல்லாமல் நித்யானந்த பதவியைக் கோரார்கள். இது, எப்படியிருக்கின்றதென்றால், காட்டில் பள்ளத்தின்மீது செழுமையாய் வளர்ந்து வைக்கப்பட்ட பயிரைப்பார்த்து, அதனால் கேடு சம்பவிக்குமென்னும் விசாரமில்லாத யானையானது அந்தப்பயிரை மேய்வதற்காக த்வரிதப்பட்டுச் சென்று அந்தப் பாழும்பள்ளத்தில் வீழ்வதுபோல் இருக்கின்றது.

"ஶப்தமாயாஸ்ருகோ ஸைவ தமலோ யாதி புஷ்கரே பிக்ஷே தமலி சைசக்வ யேகமேவாது பஶ்யதி."

என்னும் ஶ்ருதிரீதியாய் 'ஶப்த'த்தினால் ஸர்ப்பமும், 'ஸ்பர்ஶ'த்தினால் ஸமரீ ம்ருகங்களும், 'ரூப'த்தினால் விட்டில் பூச்சிகளும், 'ரஸ'த்தினால் மச்சங்களும், 'கந்த'த்தினால் தும்பிகளும் நசிக்கின்றன. அதாவது, (1) பாம்பாட்டியானவன் மோடிவாசிக்க, ஸர்ப்பங்கள் புற்றிலிருந்து வெளிவந்து அதன் ஶப்தத்தைக் கேட்டு, ஸந்தோஷித்துத் தன்னை மறந்திருக்கும் ஸமயத்தில் பாம்பாட்டியால் பிடிபட்டு அநேகபாதைகள் அடைந்து மரணமடைவதுபோலவும், (2) காட்டிலுள்ள ஸமரீ ம்ருகங்கள் வேடன்வலைக்கு அகப்படாமல் தப்பும்பொழுது வாலிலுள்ள கேஸ(ரோம)ங்கள் புதரில் அகப்பட்டுக்கொண்டு ஸ்பர்ஶத்தினால் நட ஸாத்யமாகாமல் நின்றுவிடுவதனால் வேடன்கையில் அகப்பட்டு மரணமடைவதுபோலவும், (3)

விட்டில்பூச்சிகள் தீபப்ரகாஶ ரூபத்தைப்பார்த்து பழமென ப்ரமித்து அதில்வீழ்ந்து மரணமடைவதுபோலவும், (4) தூண்டின்முள்ளில் ரஸரூபமாகிய மாமிஸங்கோர்த்து ஜலத்தில் போட்டவுடன் மச்சங்கள் ஜிஹ்வா சாபல்யத்திற்காக ஆசைப்பட்டு தூண்டின்முள்ளில் அகப்பட்டு மரணமடைவதுபோலவும், (5) ஸம்பங்கிபுஷ்ப கந்தரூபமான வாஸனைக்கு ஆசைப்பட்டுத் தும்பிகள் அப் புஷ்பத்தில் சேர்ந்து நசிப்பதுபோலவும், புருஷர்களுக்கு, பூர்வஜன்மார்ஜித புண்யவிசேஷத்தினால் துர்லபமாகிய மானவ ஜன்மம் உண்டாகியும் ஈஶ்வர பக்தியில்லாமல் ஸம்பூர்ண விஷயாஸக்தியினால், சம்ஸாரமென்னும் பாழும் பள்ளத்தில் வீழ்ந்து நசிக்கின்றார்கள். ஆதலால், சின்னாளில் அழியும் இத்தேஹத்தை நம்பி வீணாகக் காலங் கழித்துக் கெடாமல் இத்தேஹமெடுத்தது முக்யமாய் மோக்ஷத்தையடைவதற்கெனவே தெரிந்துகொள்ளவேண்டும்.

மோக்ஷமென்றால், பந்தத்திலிருந்து விடுதலை அடைதலேயாம். அப்பந்தம், பாஹ்யம் ஆந்தரம் என இரண்டு வகைப்படும்.

பாஹ்ய பந்தமாவது:—எனதுவீடு, எனதுமாடு, எனது பார்யாள், எனது புத்ரர்கள், எனது புத்ரிகைகள், எனது சரீரம், எனது க்ருஹம், எனது பூமி, எனது தோட்டம், எனது துரவுகள் என்று தனதல்லாத வேறு வஸ்துக்களைத், தனதாகப் பாவிப்பது.

ஆந்தர பந்தமாவது:—காம க்ரோத லோப மோஹ மத மத்ஸர டம்ப தர்ப்ப ஈர்ஷ்ஷை அஸூயை. இதன் ரஹஸ்யங்களை எல்லாம், 39-ஆம் பக்கத்தில் எழுதியிருக்கின்றோம். இவ்விரண்டு குணங்களினால் புருஷனுக்கு பந்தம் உண்டாகின்றது.

இந்த பந்தம் அஜ்ஞானத்தினால் ஏற்பட்டதே யன்றி வேறன்று. இவ் வஜ்ஞானத்தை விசாரிக்குமளவில் இது, கானல் நீரைப்போல ஜீவனுக்கு அநாதி மாயா கல்பிதமாகிய காரணசரீரத்தின் பூர்வஜன்மங்களின் வாஸனையினால் இவனுக்கு

தாரேஷணை (பார்யாளின்மீது ஆசை), புத்ரேஷணை (புத்ரர்களின் மீது ஆசை) தனேஷணை (பொன்வெள்ளி முதலானவைகளின்மீது ஆசை) இவைகளை எல்லாம் பக்கம் 44-முதல் 65-வரையில் எழுதியிருக்கின்றோம். இது, முக்யமாய் க்ரஹிக்க வேண்டியவிஷயம். இதைப்பார்ப்பீர்களாக. இந்த ஈஷணாத்ரயங்கள் ஜீவனுடன்கூடவே ஸூக்ஷ்மசரீரத்துடன் அணுஸ்வரூபமாய் தாயின் கர்ப்பத்திலிருக்கும் பிண்டத்தில் ப்ரவேசித்து சிசுவாய்ப் பிறந்தபோது அந்தசிசுவுடன் கூடவே இவைகள்யாவும் அடங்கியிருந்து பிறகு, சிசுவானது வ்ருத்தி யடைய வடைய இந்த ஆசாபாசங்களும் சிசுவுடன் கூடவே வ்ருத்தியாகி இடைவிடாமல் தொடர்ந்து கொண்டே வருகின்றன. ஆகலால், நாம் எல்லோரும் சிறுபிள்ளைகளா யிருந்தபோது இந்த ஈஷணாத்ரயங்களும் காமக்ரோதாதிகளும் நமக்கில்லாம லிருந்தன; பிறகு நாம் வ்ருத்தி யடையவடைய இந்த ஈஷணாத்ரயங்களென்னும் ஆசாபாசங்களும் காமக்ரோதாதிகளும் நம்முடன்கூடவே வ்ருத்தியாய் வந்தன. இவைகளை க்ரமக்ரமமாய் யோகசித்தியினாலும் ஆத்மவிசாரணையினாலும் போக்கடித்து சிதாகாச ஸ்வரூபமாகிய, ததாகார வ்ருத்தியில் நிற்பதே முக்தியடைவ தென்பதாம்.

பரமேஸ்வரன் ஜீவர்களின்மீது கருணையுடையவராய்த் தான் உஸ்வாஸித்த (ஸ்வாஸத்தை வெளிவிட்ட) போது வேதங்களையுண்டாக்கி அதன்வழியாய் ஜீவர்கள் சித்தஸுத்தி அடைந்து முக்திபெறுமாறு, அவ்வேதங்களைக் கர்மகாண்ட ஜ்ஞானகாண்டங்களாகப் பிரித்துத் தான் சகுண ரூபமாகி சங்கு, சக்ரம், கதை, கரியதிருமேனி முதலியனவைச் சுவீகரித்து விஷ்ணு மூர்த்தியாகியும், சூலம், டமாகம், வ்ருஷபவாஹனம், தவளமேனி முதலியன தரித்து மஹா தேவராகியும் முறையே வைகுண்ட கைலாஸங்களில் ப்ரவேசித்து அநுக்ரஹித்தார்கள்; ஆயினும், ஜீவர்களுக்குத் தத்வ ஜ்ஞான நிஷ்டை யுண்டாகவில்லை. ஆதலால், விஷ்ணுவானவர்

வ்யாஸராக அவதரித்து அவ்வேதவேதாந்த ஸாராம்ருதங்களைத் திரட்டி, சரத்தில் முத்துக்களைக் கோத்ததுபோல ப்ரஹ்ம ஸூத்ரங்களை ஏற்படுத்தினார். இதற்கும் உண்மைப்பொருள் விளங்காமையால் பற்பல மதஸ்தர்களும் அவரவர் கொள்கையின் கருத்திற்கேற்றபடி பற்பல வியாக்யானங்களைச் செய்து கொண்டார்கள். அதனால், ஸ்ரீ 'சம்பு'வானவர், உண்மைக் கருத்தை ஜீவர்களுக்குணர்த்தவேண்டி ஸ்ரீ ஸங்கராசார்யராக அவதரித்து, இந்த ப்ரஹ்ம ஸூத்ரத்திற்குப் பத விபாகஞ் செய்து யதார்த்த அர்த்தத்தைத் தெரிவிக்கும் சாரீரபாஷ்யத்தையும் அந்த ஆசார்யர் உண்டாக்கினார். அதுவும் சாமான்யர்கட்கு அர்த்தமாகவில்லையென்று இதர க்ரந்தங்களையும் உண்டாக்கினார். ஆயினும், அவையனைத்தும் ஸம்ஸ்க்ருத பாஷையிலிருப்பதால் அந்த பாஷா ஜ்ஞானமுள்ளோர்க்கேயன்றி ஏனையோர்க்கும் உபயோகமாகாததனால் சில பெரியோர்கள் தேசபாஷைகளில் அநேக அத்வைத க்ரந்தங்களை பத்ய கத்யரூபங்களாக அமைத்தனர்கள். அவைகளைப் படித்து அநுபவம் பெறுதற்கும் சாத்ய மாகாதவர்களுக்காக இப்பொழுது இயற்றியுள்ள இந்த "ஜீவ ப்ரஹ்மைக்ய வேதாந்த ரஹஸ்ய"மானது, மிகவும் ஸுலபமாய் ஸ்ரவண, மனன, நிதித்யாஸனங்கள் மூலமாய், சிறுவர் சிறுமியர்களும் ஆத்மாநுபவத்தைத் தெளிவாய்த்தெரிந்து கொள்ளும்படி, கரதலாமலகம் (உள்ளங்கை நெல்லிக்கனி)போல ஸ்ருதி ஸ்ம்ருதி ப்ரமாணங்களுடன் அதிக ஸுலபமான நடையில், தமிழிலும் தெலுங்கிலும் வசனரூபமாய் செய்யப்பட்டிருக்கிறது. இந்த க்ரந்தத்தை வாசிப்பதால் ப்ரஹ்மம் தானென்று அறிந்து ஆனந்திப்பதற்கு இது ஒவ்வொருவருக்கும் பஹு முக்யமானது.

உலகத்தின்கண்ணுள்ள ஒவ்வொருவரும் ஜ்ஞானத்தை அடையவேண்டுமென்று ஆவல்கொண்டிருந்தபோதிலும் அவர்களினுடைய பூர்வஜன்மங்களின் கர்மமானது, ஜ்ஞான மார்க்கத்திற்குரிய அரியநூல்களை வாசிக்கவிடாமல், நாவல்

(கதை)கள், வீண் சரித்ராங்கள், அருவருக்கத்தக்க நாடகங்கள், அசட்டுவிகடமான குயுக்தி கதைகள் முதலியவற்றை வாசிக்கச் செய்து அஞ்ஞானமென்னும் படுகுழியில் வீழ்த்தி மாயா ஸம்ஸார ஸமுத்ரத்தில் அலைந்து கொண்டிருக்கச் செய்யும். ஆதலால், பூர்வ ஸத்வாஸனை யில்லாதவர்கள் இந்த ஜன்மத்திலாகிலும் நல்லொழுக்கத்துடன் பெரியோர்களை யடுத்து, அவர்கள் மனங்களிக்க நடந்து, அவர்களால் ஞானோபதேசஞ் செய்யப்பெற்று அதை இடைவிடாமல் அப்யஸித்து வந்தால், அந்த அப்யாஸ முதிர்ச்சியினால் ஜன்மாந்தரங்களி லாயினும் மோக்ஷத்தை அடைவதற்கு ஹேதுவாகும். உள்ளபடிக்கே ஞானமார்க்கத்தின் உண்மையை அறிந்தும் உணர்ந்தவர்கள் நொடி நாவல் முதலிய வீண்கதைகளைப் படித்து தமது வாழ்நாட்களை வீணாக்கி விடார்கள்.

ஒருவன் தன் சரீரத்திலிருக்கும் வியாதியைப் போக்கடித்துக்கொள்வதற்கு வைத்யனும் ஔஷதமும் எப்படி இன்றியமையாதனவோ அப்படியே, தனது சித்தத்திலிருக்கும் காமாதி கோர மலினமென்னும் ரோகத்தை பரிஹரித்துக் கொள்வதற்கு, குருவென்னும் வைத்யனும் போதாம்ருதமென்னும் ஔஷதமும் அத்யாவஸ்யமாய் வேண்டற்பாலன.

ஸம்ஸார நிவர்த்தியானது, ஞானத்தினால் உண்டாகுமேயன்றி கர்மத்தினால் உண்டாகமாட்டாது. பூர்வஜன்ம புண்ய கர்மங்களினால் பரிபக்வமடைந்து ஸம்ஸாரத்திலிருந்து வைராக்ய மடைந்தவனே ஞானத்திற்கதிகாரி; அவனே மோக்ஷமடைய அர்ஹன். மோக்ஷமே பந்தவிமுக்தியாகிய ப்ரஹ்ம ஞான ஸ்வரூபம் எனவும், அஞ்ஞானமே பந்தத்திற்கு காரணமெனவும் விசாரித்துத் தெளிதலே மானுடயாக்கை யெடுத்ததன் ஸார பயன். ஆகவே, ஒவ்வொருவரும் ஸத்குருமுகமாய் சாஸ்த்ரங்களை ஆராய்ச்சிசெய்து அவ்வழியே யத்னித்து மேலெடுக்கும் ஜன்மங்களிலிருந்து விடுபட்டு உஜ்ஜீவிக்க வேண்டும்.

ஐயா! ஸத்குருவினால் தெரிந்துகொள்ளத்தக்க உபதேசங்கள் எல்லாம் இதில் உபதேசித்திருக்கின்றதென்றும், மோக்ஷமடைய அதிதீவிர பக்ஷ முடையவர்களுக்கு இதுவே முக்ய நூலாயிருக்கின்றதென்றும், இந்நூல் வாசித்த அனேக புண்ய புருஷர்கள் மோக்ஷப்ராப்தி அடைவார்களென்றும், அவர்கள் அடைந்த மோக்ஷபதவியில் தமக்கும் கிஞ்சித்மாத்ரம் லபிக்க வேண்டுமென்றும், அப்படி லபித்த புண்யத்தினால் தாம் கடைத்தேற வேண்டுமென்றும் உத்தேசம் கொண்டு, கோயம்புத்தூர் ஜில்லா அவநாசி தாலூக்காவைச் சார்ந்த தேக்கம்பட்டி கிராமத்திலிருக்கும் தேசியகவுண்டர் பழனி பொம்மம்மாள் இந் நான்காம் பதிப்பு அச்சிடுவதற்காக ரூபா 600 ஈஸ்வரார்ப்பணமாய்க் கொடுத்திருக்கின்றார்கள்.

இந்தப் புண்யவதி உத்தேசம்கொண்டிருப்பது எப்படி இருக்கின்றதென்றால்; ஆலயத்திற்குள் பிரவேசிக்கும் மஹாத்மாக்களினுடையவும், புண்யவான்களினுடையவும் பாதங்களினால் மிதியுண்டு அவர்களின் பாத ஸ்பர்ஸத்தினால் தாம் கடைத்தேற வேண்டுமென்று எண்ணி ஆலயங்களைக் கட்டி வைத்த புண்ய புருஷர்கள் எல்லோரும் கோபுர வாசற்படிகளிலும் மூலஸ்தானங்களிலுள்ள சித்திரப்படிகளிலும் சுற்றியுமுள்ள பிராகாரங்களிலும் ஆங்காங்கு பெரியோர்கள் செல்லும் மார்க்கங்களி லெல்லாம் தம்மைப்போன்ற உருவங்கள் கல்லிலும் சித்திரங்களிலும் அடிப்பித்து வைத்திருக்கின்றார்கள். இப்படி வைப்பதற்குக் காரணம் யாதெனில், ஆலயத்திற்குள் பிரவேசிக்கும் மஹாத்மாக்களின் பாத ஸ்பர்ஸம் பட்டாகிலும் தமது ஜன்மம் கடைத்தேற வேண்டுமென்னும் உத்தேசம்கொண்டு ஆங்காங்கு தம்தம் சிலைகளை அடித்து வைத்திருப்பது எல்லோரும் அறிந்த விஷயமே.

இவ்விடம் அப்படிப்பட்ட ஸத்பாத்ரங்களை தேடாவிட்டாலும் ஷை பொம்மம்மாள் த்ரவ்ய ஸஹாயத்தினால் வாங்கிய புஸ்தகங்களில் பதிப்பித்திருக்கும் வேதவாக்யங்களை மஹாத்

மாக்களின் வாக்கினால் உச்சரித்த மாத்திரத்தில் தமக்கு புண்ய பலன் உண்டாகுமென்றும், மற்றும் சிலர் இந்நூலில் உபதேசித்திருக்கும் 'குரு' மஹாவாக்யங்களை யெல்லாம் அறிந்து அப்யாசம்செய்து வரப்பட்டவர்களுக்கு, மனோலயமாய்ப் ப்ரஹ்மாநந்தத்தில் சொக்கியிருக்கும் ஆநந்தம், தமக்கும் லப்தமாகும் பொருட்டு இவ்வித தர்ம கைங்கர்யத்திற்கு பொருள் செலவு செய்ததாய் ஸ்பஷ்டமாய் தெரியவருகின்றது. நற்குணமுடைய புண்ய புருஷர்களின் உள்ளம் எப்பொழுதும் இப்படிப்பட்ட ஸத்கர்மங்களிலேயே தமது த்ரவ்யத்தை செலவழிக்க இச்சைகொண்டிருப்பார்களென்று அறியக் கடவீர்களாக.

ஓ ஸகோதரிகளே! ஓ ஸகோதரர்களே! பாலும் நீரும் கலந்து பிரிக்கக்கூடாத நிலையில் இருக்கையில், ஹம்ஸமானது நீரினின்று பாலைப்பிரித்து நீரை நீக்கி பாலை மாத்திரம் உட்கொள்ளுகின்றது. இதைச்செய்ய இதரபக்ஷிகளால் முடியாது. அதுபோலவே, இந்நூலைவாசிக்கும் ஸகோதரிகளும் ஸகோதரர்களும் முன்சொல்லிய ஹம்ஸபக்ஷியைப்போல் ஸத்விஷயங்களைக்கொண்டு குற்றங்களை நிவர்த்திசெய்வீர்களென்று ப்ரார்த்திக்கின்றேன்.

பாமலப்பிள்ளை வைத்தியநாதன்

21

ஸ்ரீ குருப்யோ நம:

சிறப்புப்பாயிரம்

[illegible]



Solden & Co., Madras, S.E.

சாற்றுகவி.

இது

[illegible]

ஸ்ரீ [illegible]

[illegible]

[illegible]

இயற்றியது.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

ஸ்ரீ [illegible]

[illegible]

[illegible]

[illegible]



நிர்விகல்ப குஹாஸ்ரமம்—கடப்பை.

2-DEC 1919

ஸ்ரீ

தத்ஸத்.

ஸ்ரீ பரப்ரஹ்மணே நம:

ஜீவப்ரஹ்மைக்ய
வேதாந்த ரஹஸ்யம்.

ஸ்ரீ ஸத்குருஸ்துதி.

யஸ்யாந்தர்காதிமத்யம் நஹிகரசரணம் நாமகோத்ரம் நஸூத்ரம்
நோஜாதிர் நைவவர்ணா நபவதிபுருஷோ நாநபும்ஸம் நசஸ்த்ரீ
நாகாரம் நோவிகாரம் நஹிஜநமரணம் நாஸ்திபுண்யம் நபாபம்
நோதத்வம் தத்வமேகம் ஸஹஜ ஸமரஸம் ஸத்குருந்தம் நமாமி.

ஆதிமத்யாந்த ரஹிதனும், அவயவங்க ளில்லாதவனும், பெயர் கோத்ரம் ஸூத்ரம் ஜாதி வர்ணமில்லாதவனும், ஆண் பெண் அலி என்னும் நாமரூபமற்ற எவ்வித விகாரங்களும் இல்லாதவனும், ஜனனமரணங்களும் புண்யபாபங்களும் இல்லாதவனும், தத்வாதீனமாகியும் எல்லாவற்றிலும் சமரசமாகியும் இருக்கப்பட்ட பாப்ரஹ்மமாகிய உன்னை எவ்விதமாய் ஆவாஹநம்செய்வேன்! (க்ரஹிப்பேன்) எல்லாவற்றிற்கும் ஆதாரமாயிருக்கும் உனக்குத்தகுந்த ஆஸனம் எவ்விதமாய்க் கொடுப்பேன்! ஸஹஜ ஸ்வஸ்சத்வங்களுடன் கூடிய உனக்கு அர்க்யபாத்யங்கள் எவ்விதமாய் விடுவேன்! எல்லாவற்றையும் பரிசுத்தம்செய்யும் உனக்கு ஆசமனம் எவ்விதமாய்ச் செய்வேன்! மலினமில்லாமல் பரிசுத்தமாய் ப்ரகாசித்துக் கொண்

டிருக்கும் உனக்கு வெளியிலிருக்கும் ஜலத்தினால் எவ்விதமாய்
ஸ்நானம் செய்விப்பேன்! ப்ரபஞ்சத்திற்கெல்லாம் அதீதப்
பட்ட உனக்குத் தகுந்த வஸ்த்ரத்தை எவ்விதமாய்த் தரிப்
பேன்! விசாரிக்குமளவில் குலகோத்ரமில்லாத உனக்கு யஜ்
ஞோபவீதமென்னும் பூணூலை எவ்விதமாய்த் தரிப்பேன்! அவ
யவங்களில்லாத உனக்கு நல்ல அலங்காரம் எவ்விதமாய்ச்
செய்வேன்! நிர்லிப்தனான உனக்கு மிகுந்த பூஜையை எவ்வித
மாய்ச் செய்வேன்! நிரஞ்ஜனனான உனக்குத் தூபம் எவ்வித
மாய்க்கொடுப்பேன்! ஸூர்ய சந்த்ரர்களை ப்ரகாசிக்கச்செய்யும்
ஸ்வரூபமுடைய உனக்குத்தீபம் எவ்விதமாயேற்றுவேன்! ஆத
யந்தமில்லாத உனக்கு எந்த மந்த்ரங்களினால் புஷ்பத்தைச்
சாற்றுவேன்! சர்வபரிபூர்ணனாய் நித்ய த்ருப்தனாயிருக்கும்
உனக்கு ஸ்வல்பமான எந்த நைவேத்யத்தைக் கொடுப்பேன்!
ஆனந்தத்தை யடைந்திருக்கும் உனக்குத் தாம்பூலம் எவ்வித
மாய்க் கொடுப்பேன்! ஸ்வயம் ப்ரகாசனான உனக்கு நீராஞ்ச
னம் எவ்விதமாய் விடுவேன்! ப்ரபஞ்சமெல்லாம் சரீரமாயிரு
க்கும் உன்னை ப்ரதக்ஷிணம் எவ்விதமாய்ச் செய்வேன்! நீ நான்
என்னும் பேதமில்லாமல் அத்வைத வஸ்துவாயிருக்கும் உன
க்கு நமஸ்காரம் எவ்விதமாய்ச் செய்வேன்! ஸாஸ்வதீ ஸம்
பந்தமான வாக்கிற்கெட்டாத உன்னை எவ்வித... ஸ்துதி
செய்வேன்! (ஸ்ரீ க்ருஷ்ணார்ஜுந ஸம்வாதருபமா... ந்திய
ஸ்ரீ பகவத்கீதை அத்-4, ஸ்லோகம், 11-ல், ... வதை விரிவாய்க்
காணலாம்.) ஆகவே,

ஸ்ரு || "தஸ்ய நிஸ்சிந்தா த்யாநம் ஸர்வகர்ம நிராகரண மாவா
ஹநம் நிஸ்சயஜ்ஞாந மாஸநம் உந்மநீபாவ: பாத்யம் ஸதாமாஸ்கமர்
கீ்யம் ஸதாதீப்தி ரபாராம்ருத வ்ருத்தி: ஸ்நானம் ஸர்வாத்ம பாவநா
கந்த: த்ருக்ஸ்வ ரூபாவஸ்தாந மக்ஷதாஹா: சிதாப்தி: புஷ்ப: சிதக்நி
ஸ்வரூபம் தூப: சிதாதித்ய ஸ்வரூபம் தீப: பரிபூர்ண சந்த்ராம்ருத
ஸ்யைகீகரணம் நைவேத்யம் நிஸ்சலத்வம் ப்ரதக்ஷிணம் "ஸோஹம்"
பாவோ நமஸ்கார: மௌனம் ஸ்துதி: ஸர்வஸந்தோஷோ விஸர்ஜந
மிதி." [மண்டல ப்ராஹ்மணோபநிஷத்.]

ஸர்வ கர்மங்களையும் விட்டுவிடுவதே ஆவாஹனம் செய்
வது. எங்கும் பரிபூர்ணமாய் நிறைந்திருக்கும் ப்ரஹ்மமே சத்
யம், ஜகந்மித்யை யென்னும் நிஸ்சய ஜ்ஞானமே ஆஸனம்.
நிஸ்சிந்தையாயிருப்பதே அர்க்யபாத்யங்கள் விடுவது. மனம்
சங்கல்ப விகல்பங்களில்லாமல் பரிசுத்தமாயிருப்பதே ஆசம
னம். சதா ஜ்ஞாநாகாரமாயிருப்பதே ஸ்நானம். ஸர்வம் ப்ரஹ்ம
மென்று நினைப்பதே கந்தம். த்ருஷ்டி ஸதா ப்ரஹ்மத்தில் சித
றாமல் இருப்பதே அக்ஷதைகள். ஆத்மதர்ஸநம் செய்யவேண்டு
மென்னும் ஸங்கல்பமே ஜ்ஞாநாப்தி. இந்த ஜ்ஞாநாப்தியே
புஷ்பம். ப்ரதிபந்தகமில்லாமல் ஆத்மா தானென்னும் நிஸ்ச
யத்தை யடைவதே யதார்த்தமான த்யானம். அந்தக்கரணத்
திற்குச் சாக்ஷியாய் அந்தக்கரண ப்ரதிபிம்ப சேஷ்டைகள்
இல்லாமலிருப்பதே உன்னை விஸ்தாரமாய் பக்தியுடன் பூஜை
செய்வது. புத்தியை அங்குமிங்கும் சலிக்கவிடாமல் ஆத்ம
ஜ்ஞானத்தில் ஸ்திரமாய் நிறுத்துவதே ஜ்ஞாநாக்நி. இந்த
ஜ்ஞாநாக்நியே தூபம். நேதி நேதி யென்றால் நான தேஹ
மல்ல மனசல்ல ஜீவனல்ல ப்ரபஞ்சம் சர்வமும் நானல்ல என்று
இவைகளை எல்லாம் அறியும்படியான தத்வவிவேகமே ஜ்ஞான
ஸூர்யன். இந்த ஜ்ஞான ஸூர்யனே தீபம். நானே ப்ரஹ்மம்;
ப்ரஹ்மமே நான் என்று சர்வ பரிபூர்ணமாகிய பரப்ரஹ்மத்தில்
[illegible] நைவேத்யம். சர்வ பரிபூர்ண ஸாக்ஷியில் சலிக்
காமலிருப்பதே ...ர்தக்ஷிணம். மேலேசொல்லப்போகிற 'ஹம்ஸ'
பாவத்தை நன்றாய் அறிந்து "ஸோஹம்" பாவத்தில் இருப்ப
தே த்யானம். ஆத்ம ஜ்ஞானத்திற் சலிக்காமல் ஏக நிஷ்டை
யிலிருந்து ஆனந்தத்தை அடைவதே உனது நாமசங்கீர்த்த
னம். உள்ளும் புறம்பும் எங்கும் நிறைந்து பரிபூர்ணபாவ ஸம்
பத்தை அடைவதே ஜபம். நிர்வாஸநா மௌனமே ஸ்துதி.
ஜீவாத்ம பரமாத்ம ஐக்யமே நமஸ்காரம். உள்ளும் புறம்பும்
காணப்படும் பதார்த்தங்களிரண்டின் (உள்ளே காணப்படும்
பதார்த்தம் ஸங்கல்பம், புறமே காணப்படும் பதார்த்தம் சகல

வஸ்துக்களின் தோற்றம்) நாமரூபங்களை அறவே விட்டு ஸங்கல்ப விகல்பங்களில்லாமல் அகண்டபாவத்தை அடைந்திருப்பதே மோக்ஷம். அன்றியும்,

"அஜாத மபூத மப்ரதிஷ்ட மப்ராண மமுக மஶ்ரோத்ர மகர்ண மசக்ஷு மநாம மகோத்ர மஶிர மபாணிபாத மஸ்நிக்த மலோஹித மப்ரமேய மஹ்ரஸ்வ மதீர்க்க மணுவல்ப மபார மநிர்தேஶ்யம்" [சுபாலோபநிஷத்து.]

அந்த பரப்ரஹ்மம் பிறப்பில்லாதது; ஒருவரால் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட விக்ரஹங்களைப் போன்றதல்ல. அது ப்ராணவாயு. அதற்கு, சிரசு கண்கள் மூக்கு வாய் செவிகள் கைகள் கால்கள் முதலாகிய அவயவங்களும், சிவப்பு வெண்மைமுதலிய பஞ்சவர்ணங்களும், உயரம் குட்டை ஸ்தூலம் ஸன்னம் அணு மஹத் என்னும் ரூபங்களுமில்லை. அது எல்லையில்லாதது; எண்ணிச் சொல்வதற்குச் சாத்யப்படாதது. மேலும்,

"அஶப்த மஸ்பர்ஶ மரூப மவ்யயம் ததா ரஸம் நித்ய மகந்த வஶ்ச யத் அநாத்யநந்தம் மஹதஹபரம் த்ருவம் ததேவ ஶிஷ்ய த்யமலம் நிராமயம்," [பயிங்கலோபநிஷத்து.]

அந்த பரப்ரஹ்மம் ஶப்த ஸ்பர்ஶ ரூப ரஸ கந்தங்களில்லாதது, நாசமில்லாதது, ஆத்யந்தமில்லாதது, சத்யமானது, மாயா அஜ்ஞானமில்லாதது, த்ருவமானது, நித்யமானது, நிர்மலமானது, நிராமயமானது. ஆகவே,

"ஏகமேவா த்விதீயம் ப்ரஹ்ம."

என்னும் சாந்தோக்யோபநிஷத்தின் வாக்ய ரீதியாய் ஸஜாதீய விஜாதீய ஸ்வகதபேதங்கள் இல்லாம லிருப்பதே பரப்ரஹ்மம்.

ஸஜாதீயமென்றால்:—ஓர் மனுஷ்ய ஜாதியில் ப்ராஹ்மண க்ஷத்ரிய வைஶ்ய ஶூத்ராதி பேதங்கள் தோன்றுவது.

விஜாதீயமென்றால்:—மனிதர்கள் ம்ருகங்கள் தேவதைகள் ஜீவஜந்துக்கள் வ்ருக்ஷங்கள் முதலானவைகளுக்கு வெவ்வேறு பேதங்கள் தோன்றுவது.

ஸ்வகதபேதமென்றால்:—ஓர் தேஹத்தில் சிரசு கண்கள் மூக்கு வாய் கைகள் கால்கள் முதலாகிய வெவ்வேறு ரூபங்கள்

தோன்றுவது. இவ்வகைப்பட்ட மூன்றுவித பேதங்களும் இல்லாமலிருப்பதே பரப்ரஹ்மம்.

அதாவது, ப்ரஹ்ம விஷ்ணு மஹேஶ்வராதி தேவதைகளும், ப்ராஹ்மண க்ஷத்ரிய வைஶ்ய ஶூத்ராதிமானவர்களும், பசு பக்ஷி க்ருமி கீட வ்ருக்ஷ பர்வதங்களும், சிரசு கைகள் கால்கள் முதலாகிய அவயவங்களும் இல்லாமல் நிராகாரமாயிருப்பதே பரப்ரஹ்மம்.

நாயனே! அத்யாத்மோபநிஷத்தில் இன்னும் என்ன சொல்லுகின்றதென்றால்?

"பரிபூர்ண மநாத்யந்த, மப்ரமேய மவிக்ரியம் ஸத்கநம் சித்கநம், நித்ய மாநந்த கநமவ்யயம் ப்ரத்யகேகரஸம் பூர்ண மநந்தம், ஸர்வதோமுகம் அஹேய மநுபாதேய மநாஶ்ரயம் நிர்க்குணம், நிஷ்க்ரியம் ஸூக்ஷ்மம் நிர்விகல்பம் நிரஞ்ஜநம் அநிரூப்யஸ்வரூபம், மநோவாசாம கோசரம் ஸத்யம் ருதம் ஸ்வதஸித்தம் ஶுத்தமநீத்ருஶம், ஏகமேவா த்விதீயம் ப்ரஹ்ம நேஹநாநாஸ்தி கிஞ்சந." [அத்யாத்மோப.]

அந்த பரப்ரஹ்மம் பரிபூர்ணமானது, ஆதி மத்ய அந்தமில்லாதது, அப்ரமேயமானது, விகாரமில்லாதது, சித்ரூபமானது, நித்யமானது, ஆநந்தமாயிருப்பது, நாஶமில்லாதது, ப்ரத்யேகாத்மாவாயிருப்பது, அகண்ட ஜ்ஞானஸ்வரூப அந்தமில்லாதது, ஸர்வ பரிபூர்ணமானது, ஸர்வோத்க்ருஷ்டமானது, நிராதாரமானது, ஶுத்தநிர்க்குணமானது, வ்யாபாரமில்லாதது, அதிஸூக்ஷ்மமானது, நிர்விகல்பமானது, நிரஞ்சநமானது, இப்படிப்பட்டது அப்படிப்பட்டது என்று நிரூபிக்கக் கூடாதது.

அது மனோவாக்குகளுக்கு எட்டாதது, ஸத்ரூபமானது, சித்ரூபமானது, தனக்குத்தானுப்ப்ரகாசித்துக்கொண்டிருப்பது, பரிசுத்தமானது, கேவல ஜ்ஞானாகாரமானது, தனக்குச்சமானமானவஸ்துக்கள் எதுவும் அல்லாதது, ஏகமாய் (ஒன்றாய்) இருப்பது, தன்னைவிட இரண்டாவது பதார்த்தமில்லாதது,

தன்னைவிட அனுப்ரமாண வஸ்துக்களும் அங்கமாய் இல்லதது என்று அறியக்கடவாய்.

“ஓ ஸ்வாமி! பரப்ரஹ்மத்திற்கு நாமரூபமில்லை என்று இதுவரையில் சொல்லிக்கொண்டு வந்தீர்களே! பரப்ரஹ்மமென்று சொல்வதே ஓர் நாமமாயிருக்க நாமமில்லையென்று எப்படிச்சொல்லலாம்”?

குழந்தாய்! ஆம் வாஸ்தவமே. ஆனால், அதைச் சொல்லுகிறேன் கேள்.

“ருதமாத்மா பரம்ப்ரஹ்ம ஸத்யமித்யாதிகா புத்தை: கல்பிதா
வ்யவஹாரார்த்தம் யஸ்ய ஸஞ்ஜ்ஞா மஹாத்மந:”

என்னும் மஹோபநிஷத்து வாக்யரீதியாய்—

பரப்ரஹ்மமென்னும் பெயர், மனோவாக்கினால் சொல்லுதற்குச் சாத்யப்படாத ஸ்ருஷ்டிக்கு உட்பட்ட வஸ்துவிற்கு உண்டான பெயரைப் போன்றதல்ல. உலகத்தார் கண்களுக்குக் காணப்படாத ஈஸ்வரனுக்குப் பதிலாய் ஓர் விக்ரஹத்தைக் காட்டி, அதோ ஈஸ்வரன் ஒருவன் இருக்கின்றான் என்னும் ஜ்ஞப்தியை உண்டாக்குவதுபோல, ப்ரபஞ்ச ஸ்ருஷ்டிக்குப் பூர்வத்தில் நாமரூபமில்லாத நாச ரஹிதவஸ்து ஒன்று தனக்குத்தானாகவே ஸ்வயம்ப்ரகாசமாயிருந்தது. அதை சிஷ்யனுக்கு உபதேசிப்பதற்காக அவ்வஸ்துவிற்கு பரப்ரஹ்மமென்னும் பெயர் உபசார வார்த்தையாய்ச் சொல்லப்பட்டதேயல்லாமல் பரப்ரஹ்மத்திற்கு வாஸ்தவத்தில் நாமரூபமில்லை.

இப்படிப்பட்ட பரப்ரஹ்மமானது, பிபீலிகாதி ப்ரஹ்மதேவன் வரையில் ப்ரஹ்மஸ்ருஷ்டிநாள்முதல் நாளதுவரையில் சகல ஜீவராசிகளின் ஸ்த்ரீ கர்ப்பத்திலிருக்கும் பிண்டத்தில் ஸூக்ஷ்ம சரீரத்துடன் போய் ப்ரவேசித்து, ஜநநகால முதல் மரணகால பர்யந்தம் அவனவன் செய்யப்பட்ட கர்மங்களுக்கெல்லாம் ஸாக்ஷிபூதமாய், ஜீவாத்மாவாய் வ்யாபித்திருந்து, மரணகாலத்தில் அவனவன் செய்த பாப புண்யத்

திற்குத் தகுந்த வீட்டில் ஜன்மிக்கச் செய்கின்றது. இவ்வகைப்பட்ட ஸாக்ஷி ஸ்வரூபமாயிருக்கும் ஆத்மாவே சித்ரகுப்தனென்று சொல்லப்படும். இந்த சித்ரகுப்தன் ஏதுவோ அது முன் சொல்லப்படும்.

கீதை. அத்-10. அஹமாத்மா குடாகேச! ஸர்வபூதாசயஸ்தித:
அஹமாதிச்ச மத்யஞ்ச பூதாநா மந்த ஏவச ॥ ஸ்லோ-20

சகல சரீரங்களிலும் அந்தர்யாமியாய் ஆத்மாவாய் இருந்து அவரவர்களின் கர்மானுசாரமாய் ப்ராணிகளை ஸ்ருஷ்டிக்கிறவனும், காப்பாற்றுகிறவனும், அழிக்கிறவனும் நானே என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

இவ்வித ‘ஜீவாத்மாவை’ பரப்ரஹ்மத்தில் ஐக்யம் செய்வதைக்குறித்து இதில் விசேஷமாக எழுதியிருப்பதனால் இதற்கு “ஜீவப்ரஹ்மைக்ய” மென்றும் ருக் யஜுர் ஸாம அதர்வண வேதங்களின் சிரசாகிய உபநிஷத் வாக்யங்களிலுள்ள ரஹஸ்யங்களைக் குறித்தும் எழுதப்பட்டிருப்பதனால் இந்நூல், “ஜீவ ப்ரஹ்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்” என்று பெயரிடப்பட்டது.

“அசிந்த்யா வ்யக்த ரூபாய நிர்க்குணாய குணாத்மநே
ஸமஸ்த ஜகதாதார மூர்த்தயே ப்ரஹ்மணே நம:”

சத்ய ஜ்ஞாநானந்தமானதும், மனோவாக்கிற்குக் கோசரமாகாததும், நாமரூபமில்லாததும் மாம்ஸமயமாகிய நேத்ரங்களுக்குக் காணப்படாததும், ஸகுண நிர்க்குணமானதும், சகல லோகத்திற்கும் ஆதாரமாயிருக்கப்பட்டதுமாகிய அந்தப் பரப்ரஹ்மத்தை நமஸ்கரிக்கின்றேன்.

“*நித்யாநந்தம் பரமஸுகதம் கேவலம் ஜ்ஞானமூர்த்திம்
விச்வாதீதம் ககந ஸத்ருசம் தத்வமஸ்யாதி லக்ஷ்யம்
ஏகம் நித்யம் விமலமசலம் ஸர்வதா ஸாக்ஷிபூதம்
பாவாதீதம் த்ரிகுண ரஹிதம் ஸத்குருந்தம் நமாமி.”

* ப்ரஹ்மாநந்தம் என்றும் பாடாந்தரம்.

எல்லா ஆனந்தங்களுக்கும் ஸ்ரேஷ்டமானதும் இஹபரங்களிலுள்ள எல்லாச் சுகங்களுக்கும் மேலானதும் ஜ்ஞான ஸ்வரூபமானதும் ப்ரபஞ்சாதீதமானதும் நிரவயவமானதும் மஹா வாக்யங்களுக்கு லக்ஷ்யார்த்தமானதும் அத்விதீயமானதும் நாசரஹிதமானதும் நிர்மலமானதும் சலனமற்றதும் சகல அந்தக்கரணங்களிலும் ஸாக்ஷிபூதமாயிருக்கின்றதும் கல்பனை முதலியன கடந்ததும் முக்குணங்களற்றதும் ஆனது அவிவேகத்தைப் போக்கடித்து ஜ்ஞானஸ்வரூபமாக என்னைச் செய்ததுமாகிய ஸ்ரீ ஸத்குருவின் சரணாரவிந்தத்தை நமஸ்கரிக்கின்றேன்.

"ஸச்சிதானந்த ரூபாய வ்யாபினே பரமாத்மனே
நம ஸ்ரீ குருநாதாய ப்ரகாசானந்தமூர்த்தயே."

ஸச்சிதானந்த ஸ்வரூபனும் எங்கும் வ்யாபித்திருப்பவனும் ஸ்வயம்ப்ரகாசனும் ஸதானந்தனும் பரமாத்ம ஸ்வரூபனுமான ஸ்ரீ ஸத்குரு ஸ்வாமியை நமஸ்கரிக்கின்றேன்.

"ஸத்யானந்தஸ்வரூபாய போதைகஸுககாரிணே
நமோ வேதாந்தவேத்யாய குரவே புத்திஸாக்ஷிணே."

ஸத்யஜ்ஞானானந்தமானதும் மனோவாக்கிற்கு கோசரமாகாததும் நாமரூபமில்லாததும் மாம்ஸமயமான நேத்ரங்களுக்குக் காணப்படாததும் ஸகுணநிர்க்குணமானதும் ஸகல லோகத்திற்கு ஆதாரமாயிருக்கப்பட்டதுமாகிய ஸ்ரீ ஸத்குரு பரப்ரஹ்மத்தை நமஸ்கரிக்கின்றேன்.

"யேனசேதயதேஹீதம் சித்தம் சேதயதே நயம்
ஜாக்ரத் ஸ்வப்ன ஸுஷுப்த்யாதி தஸ்மை ஸ்ரீகுரவே நம:."

எவனது ஸத்தாமாத்ரத்தினால் ஜடஸ்வரூபமாகிய இந்த சித்தம், ஆத்ம ஸ்வரூபமாய்த் தோன்றிச் சகல கார்யங்களையும் செய்கின்றதோ, எவனது ஸத்தாமாத்ரத்தினால் ஜீவன் சேதன ஸ்வரூபமாய் ஜாக்ரத் ஸ்வப்ன ஸுஷுப்தி என்னும் அவஸ்

அப்பேர்ப்பட்ட கேவல ஸாக்ஷிமாத்ர ப்ரத்யகாத்மஸ்வரூபமான ஸ்ரீ ஸத்குருவை நமஸ்கரிக்கின்றேன்.

"சைதன்யம் சாஸ்வதம் சாந்தம் வ்யோமாதீதம் நிரஞ்ஜனம்
நாதபிந்து கலாதீதம் தஸ்மை ஸ்ரீ குரவே நம:."

ஸ்வயம்ப்ரகாசமானதும் நித்யமானதும் சாந்தமானதும் ஆகாசத்தை அதிக்ரமித்ததும் நிர்தோஷமானதும் நாதபிந்து கலாதீதமானதும் சைதன்ய ஸ்வரூபமானதுமாகிய ப்ரத்யகாத்மா என்னும் ஸ்ரீ ஸத்குரு பரப்ரஹ்மத்தை நமஸ்கரிக்கின்றேன்.

"குருர்ப்ரஹ்ம குருர்விஷ்ணு குருர்தேவோ மஹேஸ்வர:
குரு ஸாக்ஷாத் பரப்ரஹ்ம தஸ்மை ஸ்ரீ குரவே நம:"

ப்ரஹ்ம விஷ்ணு மஹேஸ்வர ஸ்வரூபனும் அத்விதீய பரப்ரஹ்ம ஸ்வரூபனுமாகிய ஸ்ரீ ஸத்குரு ஸ்வாமியை நமஸ்கரிக்கின்றேன்.

"அகண்ட மண்டலாகாரம் வ்யாப்தம் யேன சராசரம்
தத்பதம் தர்சிதம் யேன தஸ்மை ஸ்ரீ குரவே நம:"

இந்த சராசர ப்ரபஞ்ச முழுமையும் ஸர்வத்ர மண்டலாகாரமாய் பரிபூர்ணமாய் வ்யாபித்திருக்கும் தத்பதலக்ஷ்யார்த்தமாகிய பரமாத்மா இப்பேர்ப்பட்டதென்று அதன் லக்ஷணத்தை எனக்கு விசிதமாய்ப் போதித்த ஸ்ரீ ஸத்குரு ஸ்வாமியை நமஸ்கரிக்கின்றேன்.

"ஸ்தாவரம் ஜங்கமம் வ்யாப்தம் யத்கிஞ்சித் ஸ சராசரம்
த்வம்பதம் தர்சிதம் யேன தஸ்மை ஸ்ரீ குரவே நம:"

இந்த சராசரங்களில் வ்யாபித்திருக்கும் த்வம்பத லக்ஷ்யார்த்தமாகிய ஜீவாத்ம ஸ்வரூபம் இப்பேர்ப்பட்டதென்று அதன் லக்ஷணத்தை எனக்கு விசிதமாய்ப் போதித்த ஸ்ரீ ஸத்குருநாதனை நமஸ்கரிக்கின்றேன்.

"சின்மயம் வ்யாபிதம் ஸர்வம் த்ரைலோக்யம் ஸ சராசரம்
அஸித்வம் தர்சிதம் யேன தஸ்மை ஸ்ரீ குரவே நம:."

அகண்ட ஸச்சிதாநந்த பரப்ரஹ்மமே பரமாத்ம ஸ்வரூபமாகவும் ஜீவாத்ம ஸ்வரூபமாகவும் இருக்கிறதென்றும், பரமாத்மா ஜீவாத்மா ஆகிய இவ்விரண்டும் அபேத பரப்ரஹ்ம ஸ்வரூபம். ஆதலால், ஜீவாத்ம ஸ்வரூபியாகிய நீயே அந்த பரப்ரஹ்மமென்றும், அந்த பரப்ரஹ்மமே நீ என்றும் ஜீவப்ரஹ்மைக்யத்தைப் போதித்து அவிபத ரஹஸ்யார்த்தத்தை எனக்கு விசிதமாய்த் தெரிவித்து என்னை க்ருதார்த்தனாகச் செய்த ஸ்ரீ ஸத்குரு பாதகமலங்களை நமஸ்கரிக்கின்றேன்.

"மந்நாத ஸ்ரீ ஜகந்நாதோ மத்குரு ஸ்ரீ ஜகத்குரு:
ஸ்வாத்மைவ ஸர்வபூதாத்மா தஸ்மை ஸ்ரீ குரவே நம:."

என் ப்ரபுவே லோகப்ரபு, என் குருவே லோககுரு; என் ஆத்மாவே ஸமஸ்த பூதங்களிலும் பரிபூர்ணமாய் நிறைந்திருக்கும் பரப்ரஹ்மம். அப்படிப்பட்ட ஸத்குரு ஸ்வரூபமான பரமாத்மா என்னும் பரப்ரஹ்மத்தை நமஸ்கரிக்கின்றேன்.

"யஸ்ய ப்ரஸாதா தஹமேவ ஸர்வம்
மய்யேவ ஸர்வம் பரிகல்பிதஞ்ச
இத்தம் விஜாநாமி ஸதாத்ம ரூபம்
தஸ்யாங்க்ரி பத்மம் ப்ரணதோஸ்மி நித்யம்."

நானே ஸர்வ பரிபூர்ண பரப்ரஹ்மமாயிருக்கின்றேன், இந்தச் சராசர ப்ரபஞ்சமெல்லாம் என்னிடத்தில் கற்பிக்கப்பட்டிருக்கின்றது என்று எந்த குருகடாக்ஷத்தினால் எனது நிஜஸ்வரூபமாகிய பரமாத்ம ஸ்வரூபத்தைத் தெரிந்துகொண்டேனோ அந்த ஸத்குருவினுடைய பாதகமலங்களை நமஸ்கரிக்கின்றேன்.

"அஜ்ஞாந திமிராந்தஸ்ய ஜ்ஞாநாஞ்ஜந ஸலாகயா
சக்ஷுருந்மீலிதம்யேந தஸ்மை ஸ்ரீ குரவே நம:."

அஜ்ஞாநாந்தகாரத்தினால் குருடனாயிருந்த என்னுடைய ஜ்ஞான நேத்ரங்கள், ப்ரஹ்மஜ்ஞான மென்னும் அஞ்ஜனத்தால் கனிகரத்துடன் எந்த மஹாநுபாவனால் திறப்பிக்கப்பட்டனவோ, அந்த மஹாநுபாவனாகிய என்னுடைய ஸத்குரு ஸ்வாமியின் சரண கமலங்களை நமஸ்கரிக்கின்றேன்.

"ஆப்ரஹ்ம ஸ்தம்பபர்யந்தம் பரமாத்ம ஸ்வரூபகம்
ஸ்தாவரம் ஜங்கமஞ்சைவ ப்ரணமாமி ஜகந்மயம்."

ப்ரஹ்மதேவன் முதல் த்ருண பர்யந்தமுள்ள ஸ்தாவர ஜங்கம ரூபங்களாகிய இந்தச் சராசர ப்ரபஞ்சமெல்லாம் பரப்ரஹ்ம ஸ்வரூபமாகவேயிருக்கின்றன. அப்பேர்ப்பட்ட பரப்ரஹ்மமே குரு ஸ்வரூபமாயிருக்கின்றது. ஆகையால், அப்படிப்பட்ட ஸ்ரீ ஸத்குரு பரப்ரஹ்மத்தை நமஸ்கரிக்கின்றேன்.

"குருஸ்ஸிவோ குருர்தேவோ குருர்பந்து ஸ்ஸரீரிணாம்
குருராத்மா குருர்ஜீவோ குரோரந்யம் நவித்யதே."
"நகுரோரதிகம் நகுரோரதிகம் நகுரோரதிகம் நகுரோரதிகம்
ஸிவஸாஸநதஸ் ஸிவஸாஸநதஸ் ஸிவஸாஸநதஸ் ஸிவஸாஸநத:."
"இதமேவ ஸிவம் இதமேவ ஸிவம் இதமேவ ஸிவம் இதமேவ ஸிவம்
மமஸாஸநதோ மமஸாஸநதோ மமஸாஸநதோ மமஸாஸநத:."
"விதிதம் விதிதம் விதிதம் விதிதம், விஜநம் விஜநம் விஜநம் விஜநம்
ஹரிஸாஸநதோ ஹரிஸாஸநதோ ஹரிஸாஸநதோ ஹரிஸாஸநத:."

தனக்கு ஜ்ஞானோபதேசம் செய்த ஸத்குரு எவரோ அவரே ஈஸ்வரன், அவரே தேவன், அவரே பந்து, அவரே ஆத்மா, அவரே ஜீவன். அவரைவிட அந்யமானதும் ஸ்ரேஷ்டமானதும் ஏதுவுமில்லை. அவரே மங்களகரமாகிய பரப்ரஹ்மம், அவரது ஸ்வரூபமே கேவல ஜ்ஞானஸ்வரூபம், அவரது ஸ்வரூபமே ஸாக்ஷிமாத்ரம், அவரது ஸ்வரூபமே ஜநநமரணாதி விகார ரஹிதம் என்று ஹரிஹராதி தேவதைகளும் உரைத்திருக்கின்றார்கள்.

நஸாதகம் வேதஸாஸ்த்ரேஷு நஸாதகம் மந்த்ரயந்த்ரகே
குரோ: ப்ரஸாதா தந்யத்ர ஸாதகம் நாஸ்தி மஹீதலே."

நான்கு வேதங்களையும், ஆறு ஸாஸ்த்ரங்களையும் ஸப்த கோடி மஹாமந்த்ரங்களையும் யந்த்ரங்களையும் தெரிந்ததினாலேயே ப்ரஹ்ம ஜ்ஞானமென்னும் ஸுகமுண்டாகமாட்டாது. ஸத்குரு கடாக்ஷத்தினாலேயே ப்ரஹ்மாநந்தமான மோக்ஷ ஸாதகம் உண்டாகும். ஆதலால், ஸத்குரு கடாக்ஷத்தைவிட விசேஷமானது வேறொன்றுமில்லை.

"ஸ்வாஶ்ரமஞ்ச ஸ்வஜாதிஞ்ச ஸ்வகீர்த்திம் புஷ்டிவர்த்தனம்
ஏதத்ஸர்வம் பரித்யஜ்ய குரோரேவ ஸமாஶ்ரயேத்."

ஸத்குருவானவர் தன்னைவிடத் தாழ்ந்த ஜாதியாரென்றும், தன்னைவிடச் சிறியவரென்றும், தன் ஆஶ்ரமத்தைவிடத் தாழ்ந்த ஆஶ்ரமத்தி லிருக்கின்றாரென்றும் பேதமெண்ணாமல், அவரது குலகோத்ர வர்ணாஶ்ரமாதிகள் ஆகிய ஸர்வத்தையும் பரித்யஜித்து, அவரை ஆஶ்ரயித்துப் பூஜிக்கவேண்டும்.

"ஶ்ரத்ததாந ஶுபாம்வித்யா மாததீதாவராதபி
அந்த்யாதபி பரம்தர்மம் ஸ்த்ரீரத்னம் துஷ்குலாதபி."

வித்யையை அப்யஸிப்பதற்கு ஶ்ரத்தையுடையவன் ஶ்ரேஷ்டமான வித்யையை ஶூத்ரனிடத்திலிருந்தாலும், மோக்ஷமார்க்கோபதேசத்தை சண்டாளனிடத்திலிருந்தாலும், குணவதியாகிய ஸ்த்ரீயை தாழ்ந்த குலத்திலிருந்தாலும் பெறலாம் எனவும், இவற்றிற்கு எந்த தோஷங்களுமில்லை யெனவும் மநுஸ்ம்ருதியிற் கூறி யிருக்கின்றது.

"தேஜஸி தர்மஜாதி சத்துரோ தத்வம்திதே
தம்தாஸ்ய தது ஸர்வஸ்ய பாவனம்"

தத்வவிசார ஶூன்யர்களுக்கு மாயா வுபாதியினால் தேஹேந்த்ரியாதிகள் உண்டாகி ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார காரியங்களைச் செய்துகொண்டிருப்பவனாகவும், தத்வ விசாரணை செய்த ஜ்ஞானிகளுக்குத் தேஹேந்த்ரியாதிகளில்லாத கேவல நிராகார சைதந்ய ஸ்வரூபனாகவும் தோன்றுகின்றான். அன்றியும், பாமரர்களுக்கு வெகுதூரத்தி லிருப்பவனாகவும், ஶ்ரவணமனநாதிகள் செய்யும் ப்ரஹ்ம ஜ்ஞானிகளுக்கு அதிக ஸமீபத்தி லிருப்பவனாகவுந் தோன்றுகின்றான். ஸகல ஜீவஜந்துக்களினுடைய ஶரீரங்களிலும் அந்தக்கரண ஸாக்ஷியாய் ஜ்ஞான ஸ்வரூபமான ஆத்மாவாய் வ்யாபித்தும் இந்த மாயா ப்ரபஞ்சத்திற்கு உள்ளும் புறம்பும் நிறைந்திருக்கின்றான்.

"குகாரஞ்ச குணாதீதம் ருகாரம் ரூபவர்ஜிதம், குணாதீத மரூபஞ்ச யோ தத்யாத் ஸ குருஸ்ம்ருத:" "குகார: ப்ரதமோவர்ணோ மாயாதி குணபாஸக:, ருகாரோஸ்தி பரம்ப்ரஹ்ம மாயாப்ராந்தி விமோசகம்"

"குகாரஶ்ச குணாதீதோ ரூபாதீதோ ருகாரக:, குணரூபவிஹீநத்வாத் குருரித்யபிதீயதே" "குகாரஸ்சாந்தகார ஸ்யாத் ருகாரஸ் தந்நிரோதக்ருத், அந்தகார விநாஶித்வாத் குருரித்யபிதீயதே" "குகாரஸ்யாந்தகாரோஹி ருகாரஸ்தேஜ உச்யதே, அஜ்ஞாந க்ராஸகம் ப்ரஹ்ம குருரேவ நஸம்ஶய:" "மந்த்ரராஜ மிதம் தேவி குருரித்யக்ஷர த்வயம், ஸ்ம்ருதி வேதார்த்த வாக்யானாம் குரு ஸாக்ஷாத் பரம்பதம்" "ஸப்தகோடி மஹாமந்த்ரா சித்தவிப்ரம காரகா:, ஏகமேவ பரோமந்த்ரோ குருரித்யக்ஷர த்வயம்."

இந்தக் குருகீதா வாக்யத்தில் 'கு-ரு' என்னும் இரண்டு அக்ஷரங்களில் 'கு' என்னும் அக்ஷரம் சுத்த நிர்க்குண ஸ்வரூபம், 'ரு' என்னும் அக்ஷரம் கேவல நிராகார பரப்ரஹ்மம். ஆகவே, குருவென்றால் சுத்த நிர்க்குண நிராகார பரப்ரஹ்மமாகின்றது என்றும்,

'கு' என்றால் மாயை, 'ரு' என்றால் அம்மாயையை நாசஞ் செய்யும் பரப்ரஹ்மம். ஆகவே, குரு என்றால் மாயையை நாசஞ்செய்யும் பரப்ரஹ்மம் என்றும்,

'கு' என்றால் ஸத்வ-ரஜ-தமோகுணங்களில்லாதது, 'ரு' என்றால் காசரணாதி அவயவங்களில்லாமல் நிராகாரமாயிருக்கப்பட்டது. ஆதலால், குரு என்றால் சுத்த நிர்க்குண நிராகார பரப்ரஹ்மம் என்றும்,

'கு' என்றால் காடாந்தகாரம், 'ரு' என்றால் அந்தக் காடாந்தகாரத்தை நாசஞ் செய்யப்பட்டவன். ஆகலால், குரு என்றால் அஜ்ஞானமாகிய காடாந்தகாரத்தை நாசஞ்செய்யப்பட்டவன் என்றும்,

'கு' என்றால் அஜ்ஞானமென்னும் இருள், 'ரு' என்றால் அந்த இருளை நாசஞ்செய்யப்பட்ட பரஞ்ஜ்யோதி. ஆகையால், 'குரு' என்றால் அஜ்ஞானமென்னும் இருளை நாசஞ்செய்யப்பட்ட பரஞ்ஜ்யோதியென்றும், மேலும் இந்த 'குரு' என்னும் இரண்டு அக்ஷரமே ஸப்தகோடி மஹாமந்த்ரங்களிலும் மிகவும் ஶ்ரேஷ்டமானவை யென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது.

ஆதலால்,

“வேதாந்தார்த்த விசாரேண ஜாயதே ஜ்ஞானமுத்தமம்.
தேனாத்யந்திக ஸம்ஸார து:கநாசோ பவத்யநு.”

வேதாந்தங்களாகிய உபநிஷத்துக்களின் ரஹஸ்யார்த்தங்களை, மேற்சொல்லிய குருவைப்போன்றவர்களா யிருக்கப்பட்டவர்களிடம் விசாரணையினால் தெரிந்துகொண்டால், தத்வ ஜ்ஞானம் அதாவது, ஆத்மாநாத்ம விவேகம் உண்டாகும். இப்படிப்பட்ட ஜ்ஞானம் உண்டாவதனால், ஜனன மரண து:க சம்சாரசாகர (சமுத்ர) த்தைத்தாண்டி ப்ரஹ்ம ஸ்வரூபனாய் முக்தியை அடைவான். முக்தி அடைவதற்கு நான்கு த்வாரபாலகர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் யாரெனில்:—

“மோக்ஷத்வாரே த்வாரபாலாஸ் சத்வார: பரிகீர்த்திதா:
ஸமோ விசாரஸ் ஸந்தோஷஸ் சதுர்த்தஸ் ஸாது ஸங்கம:
ஏகம்வா ஸர்வயத்நேந ஸர்வமுத்ஸ்ருஜ்ய ஸம்ஸ்ரயேத்
ஏகஸ்மின் வஸகே யாந்தி சத்வாரோபி வஸங்கதா:.”

என்னும் மஹோபநிஷத்து வாக்யரீதியாய், ஸாந்தம் ஆத்மாநாத்ம விவேகம், தனக்கு லபிக்காதவஸ்துக்களில் கோரிக்கையில்லாமல் பூர்வகர்மா னுசாரமாய்த் தனக்கு ஏது லபிக்கின்றதோ அதனுடன் த்ருப்தியடைந்து சந்தோஷத்துடன் இருப்பது, ப்ரஹ்ம ஜ்ஞானிகளுடன் ஸாங்கத்யம் ஆகிய இந்த நான்கு சாதனங்களே நான்கு த்வாரபாலகர்களென்று சொல்லப்படும். இவைகளில் ஏதாகிலும் ஒன்றை ப்ரயத்நத்துடன் சாதித்து வசப்படுத்திக்கொண்டால் அப்பொழுதே மற்ற மூன்றும் வசமாகும். இவைகளை வசப்படுத்திக்கொண்டால் மோக்ஷத்தை கரதலாமலகம் (உள்ளங்கை நெல்லிக்கனி)போல் காணலாம்.

“அவிசார க்ருதோபந்தோ விசாரேண் மோக்ஷோ பவதி, தஸ்மாத் ஸதா விசாரயே, ஜகஜ்ஜீவ பரமாத்மந: ஜீவபாவ ஜகத்பாவ பாதே ப்ரத்யகபிந்நம் ப்ரஹ்மைவாவ ஸிஷ்யதே” [பைங்கலோப நிஷத்து.]

விசாரணை செய்யாததனால் பந்தமும், விசாரணை செய்வதனால் மோக்ஷமும் உண்டாகும். ஆகலான், ஜகத் என்றால் ஏது?

ஜீவன் எப்படிப்பட்டது? பரமாத்மா எப்படிப்பட்டது? என்று ஜகத் ஜீவ ப்ரமாத்ம லக்ஷணங்களை சதா குருமுகமாய் விசாரணை செய்யவேண்டும். அப்படி விசாரிப்பதனால், ஜீவஜகத்து இரண்டின் லக்ஷணம் இப்படிப்பட்டதென்று விதிதமாய்த் தெரிந்துகொண்டவுடனே பரமாத்மா இப்படிப்பட்டதென்று ஸ்பஷ்டமாய்த் தெரியவரும். அப்படி பரமாத்ம லக்ஷணம் தெரிந்தவுடனே மோக்ஷம் தனக்குத்தானாகவே சித்திக்கும். ஜீவ ஜகத்துக்களின் லக்ஷணம் இப்படிப்பட்டதென்று விசாரித்துத் தெரிந்துகொள்ளாதவன், பரமாத்மாவின் லக்ஷணம் இப்படிப்பட்டதென்று தெரிந்துகொள்ளமாட்டான். எவன் பரமாத்மாவை அறியவேண்டுமென்று எண்ணுகின்றானோ அப்படிப்பட்டவன் ஜகத் ஜீவலக்ஷணங்களை குருமுகமாய் விசாரித்துத் தெரிந்துகொள்வான். தத்வாரா பரமாத்மாவின் லக்ஷணத்தையும் குருமுகமாய் விசாரித்துத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று கோரப்பட்ட முமுக்ஷுக்கள், இந்நூலையும், ஸ்ரீ க்ருஷ்ணார்ஜுன சம்வாதரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதையையும் வாசித்து இவைகளில் உபதேசித்திருக்கும் ரஹஸ்யார்த்தங்களை க்ரஹித்து ஸாஸ்த்ர விசாரணையை ஒழித்து மனசைநிறுத்தி அல்லும்பகலுமாய் த்யானத்திலிருக்கவேண்டுமென்று நிஸ்சயம் செய்துகொள்ளவேண்டும் என்பது இந்நூலின் கருத்து.

ஸம்ஸாரபந்தம் புருஷனைத் தொடர்வது.

இந்நூலுக்கு முக்ய அங்கமாயிருக்கப்பட்டது ராஜயோகம். இந்த ராஜயோகத்திற்கு அங்கம் “ஸோஹம்”. இந்த “ஸோஹம்” மந்த்ரம் எவ்விதமாய் உபதேசிக்கவேண்டுமோ அதை உபநிஷத்துக்களின் த்ருஷ்டாந்தங்களுடன் முன் உபதேசிக்கப்படும். இந்த உபதேசத்தினால் சம்சாரபந்தம் நீங்கி (பந்தத்திலிருந்துவிடுபட்டு) இச்சன்மத்திலேயே மோக்ஷத்தை அடைய

லாம். இந்த சம்சாரபந்தம் புருஷனை எவ்விதமாய் தொடர்ந்ததோ அதன்விவரத்தை இதில் சற்றே சுருக்கிச்சொல்லுகின்றோம். அதைக் கவனித்து வாசித்துப்பாருங்கள்:—

ஐயா! ஹிந்துஸ்தானிதேசத்தில்! 'ஸத்ஜங்கட' என்னும் க்ராமத்தில் ராமநாதஸ்வாமி என்னும் மஹானுபாவர் ஒருவரிருந்தார், அவரது விவாஹகாலத்தில் அவர் மாங்கல்யம் தரிக்கப்போவதற்குமுன் தம்பதிகளுக்கு மத்தியில் திரைபோட்டு வைத்தார்கள். அந்தச்சமயத்தில் ப்ராஹ்மணர்களெல்லோரும் "அதிஸ—முஹூர்த்த ஸாவதாந, அதிஸ—லக்ந ஸாவதாந" என்று எல்லோரும் ஒரேசப்தமாய்க் கோஷித்தார்கள். அப்போது தன் சமீபமாயிருக்கும் ஓர் ப்ராஹ்மணரைப்பார்த்து "ஸாவதாந, ஸாவதாந" என்று எல்லோரும் கூச்சலிடுகின்றார்களே அது என்னவிஷயமென்று மாப்பிள்ளை கேட்டார். இப்பொழுது 'ராக்ஷஸி' உன்கழுத்தில்வந்து விழப்போகின்றாள். ஆதலால், நீ ஸாவதானமாயிரு. ஏதாகிலும் உபாயமிருந்தால் அதுபோல் செய்யென்று ஸர்வமுனிஜனங்களும் உன்மீது கிருபையுடையவர்களாயிருந்து உன்னை ஜாக்ரதை படும்படி சொல்லுகின்றார்களென்று அந்த ப்ராஹ்மணன் சொல்லினன். அந்தவார்த்தை மாப்பிள்ளையினது செவியில் விழுந்தவுடனே அவன் திரையிலிருந்து தப்பித்துக்கொண்டு ஓடிவிட்டான். மறுபடியும் அவன் விவாஹம் செய்துகொள்ளவில்லை. ஜாக்ரதை படுங்களென்று எவ்வளவு சொல்லியபோதிலும் புருஷர்கள் கேளாமல் ஸ்த்ரீயிடமிருக்கும் மோஹாந்தகாரத்தினால் அவளைத் தன்வசப்படுத்திக்கொண்டு எங்கும் ஓடாமலிருப்பதற்காக முதல்முதல் மங்கள ஸூத்ரரூபமான பாசக்கயிற்றை அவளது கழுத்தில் போடுகின்றார்கள். இந்த ராக்ஷஸி ஒருவேளை அந்தப் பாசக்கயிற்றிற்கும் உட்படமாட்டாளென்று எண்ணி நவரத்ன ஆபரணரூபமாய்ச்செய்த அனேக ஸ்வர்ணமாலை பாசக்கயிறுகளும் கழுத்திற்போட்டு, இவைகளுக்கும் உட்படமாட்டாளென்று நினைத்து கைகளையும் கால்களையும் கட்டுவ

தற்காக ஆபரணரூபமாயிருக்கும் பொன்வெள்ளி விலங்குகளையும் மாட்டி, தங்கரூபமாய்ச்செய்த ஒட்டியாணத்தினால் இடுப்பை இழுத்துக்கட்டி மூக்கணாங்கயிறுபோன்ற புலாக்கை மூக்கில் போட்டு முகத்தைச் சுளித்துத் திருப்பாமலிருக்க கம்மல் கர்ணப்பூ கத்தரிப்பாவல் குருட்டுப்பாவல்களைமாட்டி, அதிகமாய் வாயாடாமலிருக்க கண்டத்தை யிறுக்கிப்பிடிப்பதற்காக கெம்பு ரவைகளால் செய்த அட்டிகைகளை கழுத்தில் இழுத்துக்கட்டும்படி புருஷன் செய்விக்கின்றான். இப்படிப்பட்ட ஆபரண பாசக்கயிற்றால் இறுக்கிக்கட்டி அவளை எங்கும் ஓடவிடாமல் தன்னுடன் அழைத்துச்செல்வதற்காக தன் இடதுகைச்சுண்டுவிரலால் அவளது வலதுகைச் சுண்டுவிரலைப் பிடித்து விவாஹரூபமாய் இழுத்துக்கொண்டு செல்லுகின்றான். அவளைத் தன் வசமாய்ச் செய்துகொள்ள இப்படிப்பட்ட ஆபரணங்களால் அலங்கரித்து இழுத்துக்கொண்டு சென்றபோதிலும் நாளாவட்டத்தில் அவனுடைய ஸாமர்த்யங்களெல்லாம் ஒழிந்து கேவலமூடனாய் அவள்வலையில் அகப்பட்டு அவளது ஆதீனமாய் அவள் நில்லென்றால் நிற்பதும் போவென்றால் போவதுமாயிருப்பான். இப்படிப்பட்ட அபவித்ர ராக்ஷஸியை மோஹிப்பதனால் அவ்விடம் என்னவிருக்கின்றது? சுகமா? அல்லது புருஷார்த்தமா? அவளால் துக்கங்களேயொழிய வேறு ஏதாகிலும் உண்டா? ஒன்றுமில்லையல்லவா? எப்படிப்பட்டவளை பார்யையென்று சொல்லலாமென்றால்:—

"கார்யேஷு—மந்த்ரீ கரணேஷு—தாஸீ போஜ்யேஷு—மாதா ஶயநேஷு—ரம்பா தர்மாநுகூலா க்ஷமயா தரித்ரீ ஷட்குணயபார்யா குலமுத்தரந்தி"

என்னும் ஸ்ம்ருதிரீதியாய் புருஷனது ஸர்வகார்யங்களிலும் யுக்தாயுக்தங்களை போதிப்பதில் மந்த்ரியைப்போலவும், சரீர ஸம்ரக்ஷணையில் தாதியைப்போலவும், ப்ரியத்துடன் புஜிக்கும்படிச்செய்வதில் தாயைப்போலவும், காமபோகத்தில் ரம்பையைப்போலவும், குலத்திற்கும் ஆஸ்ரமத்திற்கும் மதத்திற்கும் தகுந்த நடவடிக்கை யுடையவளும், பூமிதேவியைப்போன்ற

சாத்குணமுடையவளுமான பார்யையே குலத்தை உத்தரிக்கப்பட்டவளென்று வேதசாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டிருப்பதனால் இப்படிப்பட்டவளையே பார்யையென்று சொல்லலாமேயொழிய, பதியுடன்வாதாடி துர்ப்பாஷைகளால் தூஷித்துக்கொண்டிருப்பவள் உத்தமஸ்த்ரீயாகமாட்டாள். இப்படிப்பட்ட ஸ்த்ரீயுடன் கூடியிருப்பதைவிட,

"பத்தாவுக் கேற்ற பதிவிரதை யுண்டானால்
எத்தாலுங் கூடி யிருக்கலாம்—சற்றேனும்
ஏறுமா றாகி யிருப்பாளே யாமாகிற்
கூறாமற் சந்யாசங் கொள்."

என்றபடி ஸந்யாஸம்கொள்வதே உத்தமம்.

இந்த சகல ப்ரபஞ்சமும் மாயையால் கட்டுப்பட்டிருக்கின்றது. இந்த மாயாப்ரபஞ்சமோ, ரஜ்ஜுவைப்பார்த்து ஸர்ப்பமென்று பயப்படுவதுபோல் இருக்கின்றதென்று ஸ்ரீ ஸங்கராசார்யர் சொல்லியிருக்கின்றார். அதாவது:—

"ரஜ்ஜௌ ஸர்ப்பம் ப்ரமணாரூபம் தத்வது ப்ரஹ்மணி
ஜகத்ரூபம் மகவிவிசாரய வாரம்வாரம்"

ரஜ்ஜுவை (கயிற்றைப்) பார்த்து சர்ப்பமென்று ப்ரமையடைவதுபோல் இந்த மாயாப்ரபஞ்சத்தைப்பார்த்து நிஜமானதென்று நம்பி மோசம்போகின்றார்கள். இப்படி மோசம்போவதனால் ரஜ்ஜு, ஸர்ப்பத்ருஷ்டாந்தமாய் வேதாந்தத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. அவை வருமாறு:—

ஓர் க்ருஹஸ்தன் வீட்டிற்கு எதிரில் கிணறு ஒன்றுண்டு. அது, இதோ எதிரிலிருக்கும் No. 1. படத்தில் காட்டப்பட்டிருக்கின்றது.

அவ்வூரிலுள்ள ஜனங்களெல்லோரும் ஜலம் திரட்ட அந்தக் கிணற்றுக்கு வருவதுண்டு. ஒருநாள்மாலை தீபம்வைக்கும் ஸமயத்தில் ஓர் ஸ்த்ரீ ஜலம்திரட்ட மிடா எடுத்துக்கொண்டு அந்தக்கிணற்றண்டைவந்து, பாம்பு! பாம்பு! ஐ! அம்மா! எவ்வளவு பெரிய பாம்பு!. என்று உரத்த ஶப்தத்துடன் கூக்குரலிட்டு மிடாவைப் போட்டு மூர்ச்சையாய்க் கீழே விழுந்தாள்.

57

2 DEC 1919





அவளது கூச்சலைக்கேட்டுச் சுற்றுப் பக்கங்களிலிருந்த ஜனங்களெல்லோரும் ஓடிவந்து, தூரமாய் நின்றிருந்தார்கள். இரண்டு புருஷர்கள் மூர்ச்சையாய் வீழ்ந்துகிடக்கும் ஸ்த்ரீயினுடைய கையைப்பிடித்து சீதோஷ்ணங்களை தொட்டுப் பார்த்து உபசரித்தார்கள். ஒருவன் தூரமாய்நின்று கூ! கா! என்று கூச்சலிட ஆரம்பித்தான். மூன்று புருஷர்கள் மூர்ச்சையாய் விழுந்தார்கள். ஒருவன் துப்பாக்கியில் தோட்டா வைத்துத் தூரமாய் நின்று பாம்பைக் குறிபார்த்தான். ஒருவன் பெரிய தடிகொண்டு அடிக்க ப்ரயத்நப்பட்டான். ஒருவன் உறையிலிருந்த கத்தியை உருவி வெட்ட ஆரம்பித்தான். ஒருவன் பெரியகல்லைத் தலைக்குமேல் எடுத்து அதன்மேல் போட ஆரம்பித்தான். அதிக பயமுடைய ஒருவன் செடியின் மீதேறி அம்பில் பாணத்தைப்பூட்டி ப்ரயோகஞ் செய்ய குறி பார்த்து நின்றான்: ஓர் பாம்பாட்டி மோடிவாசிக்க ஆரம்பித்தான். ஒருவன் மீசையை உருவிக்கொண்டு நின்றான். இவைகள் No. 1. படத்தில் காட்டியிருக்கின்றது. ஒருவன் பிரம்பினால் பாம்பை அதட்டினான். ஒருஸ்த்ரீ குழந்தையைத் தூக்கி பாம்பைக் காட்டினாள். சில ஸ்த்ரீகளும் புருஷர்களும் தூரமாய் நின்று வேடிக்கை பார்த்திருந்தார்கள். இவ்விதமாய் அனேகர்கள் அனேக விதங்களாய் அந்தப் பாம்பைக் கொல்ல ப்ரயத்னப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இவ்விதமாயிருக்கும்போது அந்தவீட்டிலுள்ள தைர்யமுடைய ஓர்கிழவி இந்தக் கூச்சலை யெல்லாம் கேட்டு ஒரு அகல்விளக்கை ஏற்றிக் கொண்டு மெதுவாய் அந்தப் பாம்பினிடம் சென்று நின்றாள். அது ☞ எதிரிலிருக்கும் No. 2. படத்தில் காட்டப்பட்டிருக்கின்றது. பாம்பின்மீது கிழவியின் தீபப்ரகாசம் பட்டவுடனே ஜனங்களெல்லோரும் பாம்பல்ல கயிறு கயிறு என்று சொல்லி கல்லென்று சிரித்தார்கள். இதற்குள் அந்த வீட்டில் வேலைசெய்பவன் வெளியில் சென்றிருந்து மறுபடியும் தாம்புக் கயிற்றைக் கொண்டுபோகக் கிணற்றினிடம் வந்துபார்த்

நான். அப்போது இவர்கள் செய்துகொண்டிருக்கும் அட்டகாசங்களையெல்லாம்பார்த்து விழுந்துவிழுந்து சிரித்து இராட்டினத்தின் மீதிருந்த தாம்புக்கயிற்றை சுருளையாய்ச்சுற்றி தொட்டியின்மீது நானேவைத்தேன் என்று சொன்னான். அதைக்கேட்டு எல்லோரும் ஆச்சர்யமடைந்தார்கள்.

இதனால் என்ன ஏற்படுகின்றதென்றால், ரஜ்ஜு (கயிறு) ஸ்தானத்தில் ஸர்ப்பப்ரமை தோன்றிற்று. அதனால் ஸர்ப்பத்தை நாசம்செய்ய அனேக ஜனங்கள் அனேக உபாயம் செய்த போதிலும், அவைகளெல்லாம் வ்யர்த்தமாயிற்று. கடைசியில் கிழவியால் கொண்டுவரப்பட்ட தீபப்ரகாசத்தினால் ஸர்ப்ப ப்ராந்தி நிவாரணையாய் ரஜ்ஜாய் (கயிறாய்) காணப்பட்டது. அதனால் எல்லோருடைய சம்சயம் நிவாரணையாய் ஆச்சர்யத்தை உண்டாக்கியது கிழவியினுடைய தீபமல்லவோ? அதுபோலவே சம்ஸாரமென்பது ஓர் பெரிய ஸர்ப்பமாயிருக்கின்றது. இது, ஆதியில் ப்ரஹ்ம ஸ்ருஷ்டியினால் உண்டாகிய அவித்யை (அஞ்ஞானம்). இந்த அஞ்ஞானம் ப்ராந்தியினால் உண்டாயிற்று. ஆதலால், இந்தச் சம்சாரஸர்ப்பம் அனேக ஜன்மங்களாய் வந்துகொண்டிருக்கின்றது. இதிலிருந்து தப்பித்துக்கொள்ள அனேகர்கள் அனேக உபாயங்களைச் செய்துகொண்டு வருகின்றார்கள். அவை வருமாறு:—

சிலர் கஞ்ஜாபுகை சாப்பிடுவதும், சிலர் ஜபம்செய்வதும், சிலர் த்யானம் செய்வதும், சிலர் தீர்த்த யாத்ரை செய்வதும், சிலர் கர்மாநுஷ்டானங்களைச் செய்வதும், சிலர் பஜனைகளைச் செய்வதும், சிலர் பூஜை செய்வதும், சிலர் யஜ்ஞயாகாதிகள் செய்வதும், சிலர் விசேஷ தர்மங்களைச் செய்வதும், சிலர் கோயில் குளம் சத்ரங்கள் முதலானவைகளைக் கட்டுவதுமாய் இருக்கின்றார்கள். இப்படிப்பட்ட உபாயங்களினால் இந்த ஸம்ஸாரஸர்ப்பம் நாசமாகாது. பின் எப்படியென்றால் ஞான விருத்திக்காக சமாதி சாதனம் செய்யவேண்டும். அதாவது, சுத்த அசலமாகிய (அசிக்காத) 'அந்தக்கரண' மென்னும்,

அகலில் "அஹம் ப்ரஹ்மாஸ்மி" என்னும் "ஸோஹம்" மந்த்ரச் சுடரினால் நான் என்னும் தீபத்தை ப்ரகாசிக்கச்செய்தால் அந்தக்ஷணமே ஸம்ஸாரஸர்ப்பம் இறந்து சச்சிதானந்தப்ரஹ்ம ரூப ரஜ்ஜுதர்சனமாய் ஆனந்தக்கடலில் மூழ்கியிருக்கலாம். ஆதலால், ரஜ்ஜு (ஸர்ப்ப) த்ருஷ்டாந்தம் வேதாந்த சாஸ்த்ரத்திற்கு ப்ரமாணமாய்க் காட்டப்பட்டது. ப்ராணனில்லாத சரீரம் எப்படி வ்யர்த்தமோ அதுபோலவே ரஜ்ஜு (ஸர்ப்ப) த்ருஷ்டாந்தம் இல்லாவிட்டால் வேதாந்த சாஸ்த்ரத்தை ஸ்திரப்படுத்துவதற்கு சாத்யமாகமாட்டாது. இது விஷயம் தெரிந்தவரையில் இவ்விடத்தில் எழுதினோம்.

ஓங்காரரூபமாய் நிர்க்குணமாய் பரப்ரஹ்ம ஸ்வரூபமாயிருப்பதை இந்நூலில் உபதேசித்தோம். அதைச் சதாகாலமும் அப்யசித்துக்கொண்டு வரவேண்டும். இந்த நிர்க்குண த்யானம் செய்ய சாத்யமாகாவிட்டால், சகுணரூபமாகிய விக்ரஹ ஆராதனைகளைச் செய்துகொண்டுவரவேண்டும். இந்த சகுண த்யானம் சாத்யமாகாவிட்டால் நிஷ்காம கர்மத்துடன் ஓர் ரூபத்தை நிறுத்தி பரமாத்மஸ்வரூபமாய் பாவித்து பஜனைகளைச் செய்து வரவேண்டும். நிஷ்காம கர்ம ரூபமான பஜனைகளைச்செய்ய சாத்யமாகாவிட்டால் ஸகாம்ய கர்மங்களை அதாவது கோரிக்கையுடைய கர்மங்களைச் செய்து வரவேண்டும். கோரிக்கையுடன்கூடிய கர்மங்களைச்செய்யச் சக்தியில்லாவிட்டால் வாரம் வாரம் பிறந்துகொண்டும் இறந்துகொண்டும் இருப்பதே திண்ணம்.

ஆதலால், முன் சொல்லிய கயிற்றைப்பார்த்துப் பாம்பென்று எல்லோரும் ப்ரமையடைந்து மதிமயங்கி யிருக்கும் போது கிழவியால் கொண்டுவரப்பட்ட தீப ப்ரகாசத்தினால் வாஸ்தவமான கயிறு காணப்பட்டு ஸர்ப்ப ப்ராந்தி நீங்கி சந்தேஹம் நிவர்த்தியானதுபோல், இந்த "ஜீவப்ரஹ்மைக்ய வேதாந்தரஹஸ்ய" மானது கிழவியால் கொண்டுவரப்பட்ட

தீபம்போலிருந்து சகல ஸம்ஸயங்களையும் போக்கடித்து நிராகார ப்ரஹ்மத்தை தர்சிக்கும்படி செய்விக்குமென்று அறியக் கடவீர்களாக.

பிணத்தைப்பார்த்து வ்யசனப்படுபவர்களின் ஸோகம் நிவாரணை அடைய உபதேசித்தல்.

"எப்போ தாயினும் கூற்றவன் வருவான்
அப்போ தந்தக் கூற்றுவன் றன்னைப்
போற்றவும்போகான் பொருளொடும் போகான்
சாற்றவும் போகான் தமரொடும் போகான்
நல்லா ரென்னான் நல்குர வறியான்
தீயா ரென்னான் செல்வரென் றன்னான்
தரியா தொருகணம் தறுக ணாளன்
உயிர்கொடு போவான் உடல்கொடு போகான்
ஏதுக் கழுவீர் ஏழை மாந்தர்காள்."

என்னும் கபிலர் வாக்யரீதியாய்,

ஓ ஸஹோதரிகளே! ஓ ஸஹோதரர்களே!! உங்கள் குடும்ப ஸம்ரக்ஷணையில் யாவரேனும் தைவானுகூலத்தினால் காலகதி யடைந்தால் அவர்களுக்காக வ்யசனப்படவேண்டாம். அவர்கள் நம்முடன்கூட வந்தவர்களுமல்ல, வரப்பட்டவர்களுமல்ல, சந்தையின் கூட்டம்போல் மத்தியில்வந்து மத்தியிலேயே சென்று விடுகின்றார்கள். புத்ர பௌத்ர களத்ர மித்ராதிகளின் முற்பிறப்பு நமக்குத் தெரியவரமாட்டாது. அவர்கள், பிறந்த பின்புதான் நம்முடையவர்களென்று தோன்றி ப்ரமையை உண்டாக்குகின்றார்கள். மறுபடியும் மரண மடைந்தபிறகு எப்படி ஆகின்றார்களோ தெரியவராது. மத்தியில் சிலநாள் மாத்ரம் நம்முடையவர்களென்று ப்ரமையை உண்டாக்கும் புத்ர களத்ராதிகளைக் குறித்து ஏன் வ்யசனப்படவேண்டும்? காணப்படும் வஸ்துக்களெல்லாம் நசிப்பது நிஸ்சயம். இந்த பந்துக்களில் சிலர் உங்களுக்கு முன் பிறந்தவர்களும் சிலர்

பின் பிறந்தவர்களுமா யிருக்கின்றார்களல்லவா? உங்களுக்கு முன் பிறந்தவர்களுக்கு நீங்கள் பிறவாமலிருந்தபோது அவர்களுக்கு நீங்கள் என்னபந்துவா யிருந்தீர்கள்? நீங்களும் அவர்களும் பிறப்பதற்கு முன்னே இவ்விடத்தில் இப்படி இருந்தோமென்று யாதொன்றும் சொல்ல உங்களுக்குத் தெரியவரமாட்டாதல்லவா? அல்லது, அவர்கள் இறந்த பிறகாயினும் எவ்விடத்தில் எப்படி இருக்கின்றார்களோ தெரியவருமா? அதுவும் தெரியவரமாட்டாதல்லவா? அவர்கள் பிறந்து ஜீவித்திருக்குங் காலம்வரையில் உங்களுக்குக் காணப்படுகின்றார்களேயன்றி, பிறப்பதற்கு முன்னும் இறந்த பின்னும் எவ்விடத்தில் எப்படி யிருக்கின்றார்களோ தெரியவரமாட்டாதல்லவா? அப்படிப்பட்டவர்களுக்காக நீங்கள்வ்யசனப்படுவதேன்? அப்படி வ்யசனப்படுவது அறியாத் தன்மையினாலேயேயன்றி வேறல்ல. ஆத்மாநாத்ம விவேகமில்லாதவர்கள் வ்யசனப்படுவார்களேயன்றி, ஆத்மாநாத்ம விவேகமுடையவர்கள் ஜீவித்திருக்கப்பட்டவர்களைக் குறித்தேனும், இறந்தவர்களைக் குறித்தேனும், சந்தோஷமேனும் வ்யசனமேனும் கொள்ள மாட்டார்கள். ஒரு தேஹம் மரணமடைந்தால் அந்த தேஹத்திலுள்ள ஆத்மாவும் மரணமடைகின்றதென்று எண்ணுகின்றீர்களோ? அப்படி எண்ணவேண்டாம். அதற்குக் காரணம் சொல்லுகின்றோம் கேளுங்கள்:—

மரணமடைவதென்றால், ஸாஸ்வதமா யிருக்கப்பட்ட ஆத்மா ஒரு தேஹத்தினின்று மற்றொரு தேஹத்தில் ப்ரவேசிப்பதாம். ஆத்மா எந்த தேஹத்தினின்று கிளம்பிவிடுகின்றதோ அந்த தேஹமாத்ரம் மரண மடைந்ததாகின்றது. அதிலிருந்த ஆத்மா அத்தேஹத்தை விட்டு மற்றொரு தேஹத்தில் ப்ரவேசிக்கும். அதில் சிலநாள் குடியிருந்து அந்த தேஹத்தையும் விட்டு மற்றொரு தேஹத்தில் ப்ரவேசித்து இப்படியே எப்பொழுதும் எதையோ ஒரு தேஹத்தை ஆஸ்ரயித்துக் கொண்டே யிருக்கும். ஆதலால், அசத்தாகிய தேஹாதி

ஸர்வ ப்ரபஞ்சமும், கானல் ஜலத்தை முதல் பார்த்தவுடன் அது நிஜமாகிய ஜலம்போல் தோன்றிப் பிறகு அது ஜலமல்லவென்று அறிந்த ஒருவன் மற்றொருவனை நம்பும்படி சொல்லியும், ஸமீபத்தில் அழைத்துச்சென்று காட்டியும், அவன் ஸம்ஶயம் எப்படி நசிக்கப்படுகின்றதோ, அதுபோல் நசிக்கப்பட வேண்டும். அநேக ஜன்மங்களாய்ச் செய்துவந்த புண்ய விசேஷத்தினால் ஆத்மாவின் நிஜஸ்வரூபமடைந்து ஜனன மரணாதி ரூபமாகிய தேஹதாரணை விஸர்ஜனங்களில்லாத அவஸ்தைகளை அடைந்தால், அப்பொழுது அந்த ஆத்மா பரமாத்மாவுடன் ஐக்யமாகுமேயன்றி, பஞ்சபூதங்களால் உண்டாகிய தேஹத்தைப்போல் ஸ்வரூப நாசமாகப்பட்டதல்ல. அதாவது, பஞ்சபூதங்களினால் உண்டாகிய தேஹமாத்ரம் நாசமடையத்தக்கதென்றும், ஆத்மா நித்யமாகிய வஸ்துவென்றும் அறிய வேண்டும்.

ஓ ஸஹோதரர்களே! இந்த ஆத்மா பரப்ரஹ்மத்தின் அம்ஶமேயன்றி வேறல்ல. அதுவே சகல ஜந்துக்களிலும் வ்யாபித்திருக்கின்றது. அது, ப்ரக்ருதி சம்பந்தத்தை அடைந்திருப்பதனால் ஜீவாத்மா என்று சொல்லப்படுகின்றது. ப்ரக்ருதியென்றால் மாயை. இதற்கே அவித்யையென்றும், அஜ்ஞானமென்றும் நாமங்களுண்டு. பரமாத்மாவானது அப்பேர்ப்பட்ட அஜ்ஞான சம்பந்தமில்லாமல் ஸ்வயம் ப்ரகாஶமாயிருக்கும். அதனாலேயே அது பரமாத்மா (உத்க்ருஷ்டமான ஆத்மா) எனப்படும். அந்த பரமாத்மா பிறப்பு இறப்பு, உயர்வு தாழ்வு முதலான எவ்வித விகாரங்களும் இல்லாததாய் எப்பொழுதும் ஒரேவிதமாயிருக்கும். அப்படிப்பட்ட பரமாத்மாவே உங்கள் முதலானவர்களிடத்தும் இருக்கும் ஆத்மா. அது ப்ரக்ருதி சம்பந்தமான அஜ்ஞானத்துடன் கூடியிருப்பது. அப்படி அஜ்ஞானத்துடன் கூடியிருக்கும்வரையில் பிறப்பு இறப்பு அதாவது, ஒரு தேஹத்தைவிட்டு மற்றொரு தேஹத்தில் ப்ரவேசித்தல் முதலான விகாரங்களை அடைவ

தனால், அது ஜீவாத்மாவென்றே சொல்லப்படுகின்றது. இந்த ஜீவாத்மாவிற்கு எப்பொழுது அஜ்ஞானம் விட்டு ஒழிகின்றதோ அப்பொழுதே, அது பரமாத்மாவில் கலக்கும். அப்படி கலந்தபிறகு அதற்கு ஜனனமரணாதி விகாரங்கள் உண்டாகமாட்டா. பரமாத்மாவில் கலந்தலே மோக்ஷம் எனப்படும். இதற்கு த்ருஷ்டாந்தம், ஸ்ரீக்ருஷ்ணார்ஜுன சம்வாதரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை முதற்பதிப்பு 48-ஆவது பக்கம் 25-ஆவது வரியில் ஸ்ரீ க்ருஷ்ணமூர்த்தி என்னசொல்லுகின்றாரென்றால்:—

க்ருஷ்ணன்:—இவ்வுலகில் ஸ்வயமாயிருக்கப்பட்ட ஸ்வர்ணத்திற்குத் தங்கம் அல்லது அபராஞ்சி யென்றும், செம்பு முதலான இதரலோஹத்தினால் மிஶ்ரமாயிருக்கும் ஸ்வர்ணத்திற்குப் பொன்னென்றும் நாமங்கள் ஏற்பட்டிருக்கின்றன அல்லவா? அப்படி நாமபேதங்கள் உண்டான காரணத்தையும், அவற்றின் பேதத்தையும் நீ அறிவாயா?

அர்ஜுனன்:—ஆம் அறிவேன். தங்கம் ஸ்வயமானது. அதாவது, வேறு எந்த லோஹங்களுடனும் மிஶ்ரமாகாமலிருப்பது; அதனை எத்தனைவிசை உருக்கினாலும் அல்லது புடம் வைத்தாலும் தன் மாற்றிலாவது எடையிலாவது அது குறைவதும் உயர்வதும் இல்லை. பொன்னைப் புடம்வைத்தால் மாற்று உயர்ந்து எடை குறைந்துவரும். அப்படியே, புடம் போடப்போட அதிலிருக்கும் மாலின்யங்களெல்லாம் ஒழிந்து அதுவும் ஸ்வயமான ஸ்வர்ணமாகும். அதன்பிறகு எத்தனை புடங்களிட்டாலும் அது மாற்றும் எடையும் குறையாமலும் உயராமலும் தங்கமேயாகும்.

க்ருஷ்ணன்:—ஜீவாத்மா பரமாத்மாக்களுக்கும் உள்ள பேதங்களும் அதுபோலவே ஆகுமென்று அறிக. ஜீவாத்மா பொன்னைப் போன்றதும் பரமாத்மா தங்கத்தைப் போன்றதும் ஆகும். தங்கத்தை எத்தனை புடங்களிட்டாலும் அது மாற்றிலாயினும் எடையிலாயினும் எப்படி மாறுவதில்லையோ

அதுபோலவே, பரமாத்மாவும் எப்பொழுதும் எந்தவிகாரங்களையும் அடையாமல் ஒரேவிதமாயிருக்கும். பொன்னானது புடங்களால் எடைகுறைந்துகொண்டும், மாற்று உயர்ந்துகொண்டும் வரவர அதிலிருக்கும் மாலின்யங்களெல்லாம் நீங்கி ஸ்வயமான வர்ணமாய் தங்கத்துடன் எப்படி கலக்கின்றதோ அதுபோலவே, ஜீவாத்மாவும், அநேக ஜன்ம ஸம்ஸ்காரத்தினால் அஜ்ஞானம் நீங்கிக்கொண்டேவரவர கடைசியில் பூர்த்தியாய் நீங்கினபிறகு பரமாத்மாவில் கலக்கின்றது. இதற்குப் பின் வரும் விஷயங்களை கீதையில் விரிவாய்க்காணலாம். ஆதலால், உங்கள் குடும்பத்தில் இறந்தவர்களைக்குறித்து வ்யஸனம் உண்டானபோதெல்லாம் ஸ்ரீ க்ருஷ்ணார்ஜுந ஸம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம் - 2, ஶ்லோகம் - 11-முதல், 30-வரையில் வாசித்தால் உங்கள் சோகம் தீர்ந்து மனம் சாந்தியடையும்.

மனோலயத்தால் ஸகலமும் ஸித்தியடைதல்.

ஸஞ்சித ப்ராரப்த ஆகாம்ய கர்மங்கள்.

நாம் ஒவ்வொருவரும் நெடுங்காலமாக அநுபவித்து வருகின்ற ஜனனமரண ப்ரவாஹரூப துக்க ஸாகரத்திலிருந்து விடுபட்டு நித்யானந்தஸுகத்தையடைய விரும்புகின்றோமன்றோ? அதற்கென்ன செய்யவேண்டும்? கவனித்துப்பாருங்கள்!

ஒரு கன்னிகை, பருவமடைந்து விவாஹமுடிந்தபின்பு தனது குடும்பத்திலுள்ள சகலகார்யங்களையும் கவனித்து வருவதுடன், மாமன் மாமி மூத்தார் மைத்துனர் முதலானவர்களிடத்திலும் அன்பாய் அவர்களை உபசரித்து வருகின்றனள். அங்ஙனம் உபசரித்து வந்தபோதிலும்; தனது ப்ராணநாதனிடத்தில்மாத்ரம் அதிக விஶ்வாசத்தைப் பாராட்டி அன்பே வடிவாயிருப்பாள். அன்றியும், அப்பதிவதிக்குப் புத்ரபாக்யம் கிடைத்தவுடன், முன்போல் அவகாசமின்மையால் குடும்

67



ஸ்ரீ ஏகாம்பரநாதர். கடப்பை. நந்தி. பலிபீடம்.

BOLDEN & CO., MADRAS.

பத்தில் அதிக கவலையின்றி இரவும்பகலும் தனக்கு அரிதாய்க் கிடைத்த செல்வக் குழந்தையைச் சீராட்டி, அன்பார்ந் தமு ஞூட்டித் தாலாட்டி வளர்த்து, ஆனந்த மடைவாளன்றோ? அதுபோலவே நாம் அனேக ஜன்மங்களிற்செய் தவந்த புண்ய வசத்தினால் பரிபக்வமடைந்து, நல்லுணர்வுதித்து, நமது நிலை யில்லாத தேஹத்தையும், இதன்சம்பந்தமாக விளையும் பெண்டு பிள்ளை, பண்டபதார்த்த மாதியாயுள்ள போகத்தையும், நேற் றைக்கிருந்தார் இன்றைக்குக் காணோம் என்கிறபடி நீர்க்குமி ழியைப்போன்ற நிலையில்லா வாழ்க்கையையும் கவனித்து, அந்தோ! இந்நாள்வரையில் என்செய்தோம்! நமது வாணா ளெல்லாம் த்ரவ்யம் சம்பாதிப்பதில் வீணாய் விட்டதே யென்று, மரணத்திற்குப்பயந்து ஸத்லக்ஷத்திற்பயின்று, சன் மார்க்கத்தில் ப்ரவர்த்தித்து சதாசாரியர் திருவடியை ஆஸ்ர யித்து அவரால் உபதேசிக்கப்பெற்றுள்ள அந்நிலை வழுவாமல் த்யானித்து வருதல்வேண்டும். எப்படியென்னில், நாம் தேவா லயத்திற்குள் ப்ரவேசிக்குப்போது முதலில் 'பலிபீட' மிருக் கின்றது. அது எதிரிலிருக்கும் ☞ படத்தில் காட்டப்பட் டிருக்கின்றது.

"துள்ளுமறியா மனது பலிகொடுத்தேன் கன்ம துஷ்ட தேவதைகளில்லை" என்பதுபோல், நம்மனதிற் குடிகொண் டுள்ள காமக்ரோதாதி ஷட்வர்க்கங்களையும் அஹங்கார மமகா ராதி சகல துஷ்ட ம்ருகங்களையும் அந்த பலிபீடத்தினிடம் பலிகொடுத்து பரிசுத்த மனதுடன் சந்நிதானத்தினுட்புகுந்து அம்மூர்த்திகளில் தனது ப்ராணபதமாயுள்ள உபாசனா மூர்த் தியினிடத்தில்மாத்ரம், மேற்சொல்லிய ஸ்திரீயைப் போல் அதிக ப்ரீதியைப் பாராட்டி அன்பே வடிவாயிருந்து த்யானி த்து வரவேண்டும். அங்ஙனம் தைலதாரையைப்போல் இடை விடாது அப்யசித்துக்கொண்டு வருகின்றகாலத்தில், அவ்வுபா சனாமூர்த்தியின் திருவருளால் ஆனந்தமே வடிவமாகிய ஸுஜ் ஞானம் பிறக்கின்றது. அங்ஙனம் கிடைத்தற்கரிய ஜ்ஞான

ஸூர்யன் உதயமானவுடன் அதாவது பல்லாயிரக்கோடி அண்டங்களிலும் பரிபூர்ணமாய் ஸ்வயம் ப்ரகாசமாயுள்ள சுத்த சைதன்ய பரமாத்மாவாகிய ஆத்மஸ்வரூபத்தைத் தரிசித்தவுடனே, ஆயிரமாயிரமாகக் கூடியுள்ள காகத்தின் பெருங்கூட்டத்தில் ஓர் கல்லெறிந்தமாத்ரத்தில் அக்காகமனைத்தும் எப்படிக்கு அத்க்ஷணமே ஓடிக்காணாமல் மறைந்து விடுமோ அதுபோலவே, அனந்த ஜன்மங்களாக நம்மைப்பற்றியுள்ள அளவில்லாத பாபகர்ம கூட்டங்களாகிய அந்தகாரங்களாவும் ஒருங்கே தொலைந்துவிடுகின்றன. அவ்வித அப்யாசத்திலுள்ள பெரியோர்கள் சகலஜீவகோடிகளிடத்திலும் அன்பே வடிவாயிருப்பார்கள். அவர்கள் ஏழை தனிகன் நல்லவன் தீயவன் புண்யன் பாபி குலத்திலுயர்ந்தவன் தாழ்ந்தவன் வித்வான் மூடன் என்கின்ற எவ்விதபேதமுமில்லாமல் யாவரிடத்திலும் சமரசபாவனையுடையவராய் சாந்தமும் கருணையுந் ததும்பப்பெற்று ஈஸ்வரனுக் கொப்பாவார்கள்.

கீதை. அ—13. ஸமம் பஸ்யன் ஹி ஸர்வத்ர ஸமவஸ்திதமீஸ்வரம்
ந ஹினஸ்த்யாத்மநாத்மாநம் ததோ யாதி பராங்கதிம். ஸ்லோ—29.

என்றிருக்கின்றது. அதாவது, சமஸ்த ஜீவகோடிகளிடத்திலும் ஸமமாய் நிறைந்துள்ள ஆத்மஸ்வரூபத்தைத் தனது ஆத்மஸ்வரூபமாக அறிந்தவன் எவனோ, அவன் எந்த ஜீவனையும் ஹிம்ஸிக்கமாட்டான். அப்படிப்பட்டவனே எனது நிஜஸ்வரூபத்தை படைவான் என்பதாம். ஆகவே, நாம் ஒவ்வொருவரும் ஜனனமரணதுக்கத்திலிருந்து விடுபட்டு நற்கதி படையவேண்டுமாயின், நாம்பரிசுத்த மனமுடையவர்களாகி யாவத் ஜீவகோடிகளையும் சமரசமாய்ப் பாவித்து உள்ளன்புடன் கடவுளை த்யானிக்கவேண்டும். அங்ஙனம்குளிர்ந்த மனதுடன் அப்யஸித்துக்கொண்டு வருவோமாயின் நம்கடவுளின் திருவருளால் வாக்கின் சுத்தியும் ஞானசக்தியும் சர்வகார்யசித்தியும் உண்டாகும். (ஸ்ரீ க்ருஷ்ணார்ஜுன சம்வாதரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை அ-8. ஸ்லோ-9-பார்க்க) எங்ஙனமெனில்:—

மஹம்மதிய மதஸ்தர்கள், தங்கள் தேவாலயமாகிய 'மஜீதுட்'புகுந்து கைகால்கள் முகம் சுத்திசெய்து எவ்வகை வீணை
எண்ணங்களு மில்லாமல், பரிசுத்தமனசுடன் 'நிமாஸ்' என்னும்
நிஷ்டைசெய்து முடித்து அவர்கள் வெளியில் வரும்பொழுது
அம் மஜீதின் வாசற்படியின் இருபாரிசத்திலும் வரிசைவரி
சையாக வைத்துக்கொண்டிருக்கும் தோஷந்தாங்கிய குழந்தை
களின் முகத்தில் ஊதுகின்றனர். அதனால், சகலதோஷங்க
ளும் நிவர்த்தியாகின்றதென்பது உலகமறிந்த விஷயமன்றோ?
அதனால், என்ன விளங்குகின்றதென்றால், ஒருமணிநேரம் பரி
சுத்தமனசுடன் த்யானத்திலிருந்தவர்கட்கே இத்தகைய சக்தி
யுண்டாகின்றதென்றால் சதாகாலமும் த்யானத்திலிருக்கும்
பெரியோர்களிடத்தே அபாரமான சக்தி ப்ரகாசித்துக்கொண்
டிருக்கும் என்பதற்கு ஆக்ஷேபனையுமுண்டோ? இவ்வப்யாசம்
பூர்வ ஸஞ்சித கர்மங்கள் ஒழிந்தவர்களுக்கே எளிதில் வசமா
கும். கர்மங்கள் ஸஞ்சிதம், ப்ராரப்தம், ஆகாம்யம் என மூன்று
வகையாகும்.

1. ஸஞ்சிதம்:—ப்ரஹ்மதேவன் ஜீவகோடிகளை ஸ்ருஷ்டி
செய்த நாள்முதல் நாளதுவரையில் அனேககோடி ஜன்மங்களை
எடுத்து ஒவ்வொரு ஜன்மத்திலும் செய்துகொண்டுவந்த புண்ய
பாபங்களெல்லாம் மூட்டைமூட்டைகளாய்ப் பர்வதம்போல்
ஒருங்கு சேர்ந்துவந்த கர்மங்களே ஸஞ்சிதமென்று சொல்லப்
படும்.

ப்ராரப்தம்:—மேற்படி ஸஞ்சிதத்திலிருந்து, அவனவன்
செய்த கர்மானுசாரமாய் புண்ய பாபங்களைப் பங்கிட்டுக்
கொண்டுவந்து இந்த ஜன்மத்தில் அநுபவித்துக் கொண்
டிருப்பது ப்ராரப்தமாகும். இந்த ப்ராரப்த கர்மங்களை விவரித்
துச் சொல்லுகின்றோம் கேளுங்கள்: ஒருவன் அனேகஜன்மங்
களாய்ச் செய்துகொண்டுவந்த கர்மத்தில், 100-மூட்டை புண்
யமும், 5-மூட்டைபாபமும் இருப்பதாய்ப் பாவித்துக்கொள்
ளுங்கள். அவனுக்கு, 80-வயது ஏற்படுத்தி ஜன்மத்தை உண்

டாக்கினதாய் எண்ணுங்கள். இவன் புண்யம் விசேஷமாய்ச் செய்திருப்பதனால் அந்த ஜன்மத்திற்குத் தக்கபடி, 10-மூட்டை புண்யமும், பாபம் ஸ்வல்பமாய்ச் செய்திருப்பதனால் பாபத்தில் ½-மூட்டையும் அநுபவிக்கும்படி பங்கிட்டு அனுப்பி, மிகுதியாகிய கர்மம், இருப்பில் இருப்பதாய் எண்ணவேண்டும். இவன் புண்யத்தை அதிகமாகக் கொண்டுவந்தவனாதலால் இவன் ராஜன் வீட்டிலாகிலும் அல்லது பெருத்த செல்வமுடையவர்களின் வீட்டிலாகிலும் ஜன்மித்து இஹலோகசுகத்தை அதிகமாயும் வ்யஸனம் ஸ்வல்பமாயும் அநுபவித்துக் கொண்டு வருவான். இந்த வ்யஸனம் எப்படிப்பட்டதென்றால், ஸந்தானமில்லாமற்போயிற்றே என்றாகிலும், ஸந்தானமிருந்தால் துன்மார்க்கனாய்ப் பிறந்தானே என்றாகிலும், பார்யை தன் இஷ்டம்போல் நடக்கவில்லையே என்றாகிலும், தனத்தைக் கள்ளர்கள் கொண்டுபோகாவண்ணம் காப்பாற்றுவதிலாயினும் இப்படியே ஏதுவோ ஓர் வ்யஸனம் உண்டாகிக்கொண்டே இருக்கும்.

மற்றொருவனுக்கு, 100-மூட்டை பாபமும், 5-மூட்டை புண்யமும் இருப்பதாய்ப் பாவித்துக்கொள்ளுங்கள். அவனுக்கும் 80-வருஷங்கள் ஆயுர்ப்ரமாணம் உண்டென்று வைத்துக் கொள்ளுங்கள். அவன், பாபம் அதிகமாய்ச் செய்திருப்பதால் பாபத்தில் 10-மூட்டையும், புண்யம் ஸ்வல்பமாய்ச் செய்திருப்பதால் புண்ணியத்தில் ½-மூட்டையும் அநுபவிக்கும்படியாய்ச் செய்து அனுப்பப்பட்டான். அதனால் அவன் கூலிவேலை செய்யப்பட்டவர்களின் வீட்டிலாயினும், அல்லது பிச்சை எடுக்கப்பட்டவர்களின் வீட்டிலாயினும் ஜன்மித்து எப்போதும் கஷ்டதசையை அநுபவிப்பானென்று அறியவேண்டும். இவனுக்கு நித்திரைவேளை தவிர மற்றக்காலங்களிலெல்லாம் வ்யஸனமே அதிகமாயிருக்கும். 80-வருஷத்திற்கு, ½-மூட்டை புண்யம் இருப்பதால் எப்போதாகிலும் ஒவ்வொரு சமயங்களில் ஸ்வல்ப ஸந்தோஷத்தை உண்டாக்கும் என்று அறியவேண்டும்.

இதுபோலவே ஒவ்வொருவருடைய புண்யபாபங்களுக்குத் தகுந்த சரீரம் மாறிமாறி வந்துகொண்டே இருக்கும்.

ஆகாம்யம் :—இப்போதெடுத்திருக்கும் தேஹத்தினால் மரணபர்யந்தம் செய்துகொண்டுவரும் கர்மம் ஆகாம்யமென்று சொல்லப்படும். மரணமடைந்தவுடன் இது, முன் ஸஞ்சிதத்தில் சேஷமாய் நின்றிருந்த, 90-மூட்டை புண்யத்துடன் இந்த ஜன்மத்தில் செய்த புண்யம் போய்ச்சேர்ந்து வ்ருத்தியாகும். இதுபோலவே முன் தங்கியிருக்கும் 4½-மூட்டை பாபத்துடன் இந்த ஜன்மத்தில் செய்த பாபமும் போய்ச் சேர்ந்து வ்ருத்தியாகும். இவ்விதமாய் ஜன்மாந்தரங்கள் தோறும் புண்யபாபங்கள் வ்ருத்தியாய் வந்துகொண்டே இருப்பதனால் ஜன்மங்கள் வ்ருத்தியாகிக் கொண்டே வருகின்றன. ஆகாம்யத்தினால் ஸஞ்சிதம் உண்டாய் அதிலிருந்து ப்ராரப்தம் வருகின்றது. எப்படியெனில், பயிரிடுவோன் நிலத்தை உழுது நாற்றை நட்டு தண்ணீரிறைத்துக் களைபிடுங்கி பயிரைப் பாதுகாத்து, தான்யத்தைக் காலத்தில் அறுவடைசெய்து மொத்தமாய்க் களஞ்சியத்தில் சேகரித்துவைக்கின்றான். அத்தான்யத்திலிருந்து தினப்படிக்குத் தனக்கு வேண்டியமட்டும் ஸ்வல்பமாய் எடுத்துக்கொள்ளுகின்றான். நிலத்தில் தான்யத்தை அறுக்கும்வரையில் செய்யும் வ்யவஹாரங்களை ஆகாம்யத்திற்கு ஒப்பிடலாம்.

தான்யத்தைச் சேகரித்து மொத்தமாய்க் கட்டிவைத்ததே ஸஞ்சிதம். கட்டிவைத்த தான்யத்திலிருந்து எடுத்துப் புஜிப்பதே ப்ராரப்தம். இதுபோலவே கர்மத்திற்குக்காரணம் மனோ சங்கல்பம். ஒருவன் யாதேனும் ஓர் பலனை அடைவதற்கு மனதில் சங்கல்பித்துக்கொள்வதே ஆகாம்யம். இப்படிப்பட்ட சங்கல்பங்கள் அதிகமாய்ச் சேர்ந்த மொத்தமே ஸஞ்சிதம். ஸங்கல்பித்துக்கொண்டவண்ணம் பலனை அநுபவிப்பதே ப்ராரப்தம். ஆதலால், உலகத்தில் ஜனங்கள் அநுபவிக்கும் [illegible]

களுக்குக் காரணம் அவரவர்கள் பூர்வஜன்மங்களில் செய்த கர்மங்களேயாம். அதாவது, ஆசைகொண்டு எண்ணிய மனோஸங்கல்பங்களே கர்மமாகி கார்யத்திற்குவந்து, அவரவர்கள் கோரியதை அனுபவிக்கின்றார்கள். அப்படியிருக்க இதை நான் செய்தேன்; இது என்னால்வந்தது என்று ப்ரதிபுருஷனும் அஹங்காரம் கொள்ளுகின்றான். அது, அவனால் வந்ததல்ல. அவன் முன்ஜன்மத்தில் கோரிய வஸ்துக்கள் வரவேண்டுமென்று ப்ராரப்தகர்மம் இருந்தபடியால் அது அவனுக்கு உண்டாயிற்றேயொழிய அவன் ஸ்வபாவகுணத்தினால் உண்டானதல்ல. இதுபோலவே மற்றொருவன் வேறுவஸ்துக்களைக் கோருகின்றான். அது அவனுக்கு ப்ராரப்தத்தில் இல்லாமையால் லபிப்பதில்லை. இதற்கு த்ருஷ்டாந்தம்:—சிலர் புத்ரஸந்தானமில்லையென்று அநேக புண்யதீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்தும், காசி ராமேஸ்வர யாத்ரைகள் செய்தும், நாகப்ரதிஷ்டைசெய்தும், அரசமரம் ப்ரதக்ஷிணம்வந்தும், அநேக தானதர்மங்கள் செய்தும் ஸந்தானமில்லாமல் இருக்கின்றார்கள். அவ்வாறு உண்டாகாததற்குக் காரணம் என்னவென்றால், புத்ரஸந்தானம் அவர்களுக்கு ப்ராரப்தத்தில் இல்லாததனால் அவர்கள் என்னசெய்தபோதிலும் உண்டாவதில்லை. ஆனால், இந்த ஜன்மத்தில் புத்ரஸந்தானத்திற்காக மிகவும் கஷ்டப்படுவதனால், இதன் பலனை மறுஜன்மத்தில் தப்பாமல் அடைவார்கள். ஆனால், சிலர் காசிக்குச் சென்றுவருவதனால் புத்ரஸந்தானமடைகிறார்களே! அது எப்படி? என்றால், அதற்குக் காரணம் சொல்லுகின்றோம் கேளுங்கள். ஒருவன் தான் ஏதோ ஒருவயதில் காசிக்குப்போகவேண்டுமென்றும், போனபிறகே புத்ரஸந்தானம் அடையவேண்டுமென்றும், அந்தப் புத்ரன் இன்னவீட்டில் தான் இன்னார் குமாரத்தியை விவாஹம் செய்துகொள்ளவேண்டுமென்றும், அவன் இன்னின்ன புத்ர புத்ரிகைகளை பெறவேண்டுமென்றும் ப்ராரப்தமிருப்பதனாலேயே, அவ்வாறு நடக்கநேரிட்டதேயொழிய

புருஷன்செய்யும் தீர்த்தயாத்ராதிகளினால் உண்டானதல்ல. ஆதலால், பஞ்சுப்பொதியில், நெருப்புப்பொறிபட்டவுடன் அது எப்படி பஸ்மமாகின்றதோ, அதுபோல், இந்த ஸஞ்சித கர்மமானது ஜ்ஞானமென்னும் நெருப்பினால் எப்பொழுது பஸ்மிக்கப்படுகின்றதோ அப்பொழுதே ஒருவன் முக்தனாகின்றான்.

"ப்ராஜ்ஞாகஸ்மைவைதோர்யோ பூதேப்ய
ஸஸமுத்தாய நாஸியேவாது விஸ்யதி."

என்னும் ஸ்ருதிரீதியாய் அநேக ஜன்மங்களின் ஆகாம்யத்தினால் உண்டாகிய சஞ்சித கர்மங்கள் நசித்தவுடனே தேஹமும் ஜீவோபாதியும் (ஸங்கல்ப ரூபமாயிருக்கும் மனம்) நசித்து, "ப்ரஹ்மவேத ப்ரஹ்மைவ பவதி" என்னும் ஸ்ருதிரீதியாய் கடாகாசம் மஹாகாசத்திற் கலந்து ஏகமாவதுபோல், அகண்ட ஸச்சிதானந்த நித்ய நிர்மல பரிபூர்ணமாகிய பரப்ரஹ்மத்தில் ஐக்யமாய் நித்ய முக்தனாகின்றான். யாவராயிருந்தபோதிலும் ப்ராரப்த கர்மங்களை அனுபவித்தே தீரவேண்டும். புண்யபாபங்கள் செய்வதனால் சரீரமெடுத்து அவைகளை அனுபவித்தே தீரவேண்டும். எதையும் ஈஸ்வரார்ப்பணமாய்ச் செய்தால் புண்யபாபங்கள் ஸஞ்சிதத்திற் சேராமல் ஈஸ்வரனைச் சேர்ந்தபோதிலும் பூர்வ ஸஞ்சிதகர்மங்களைப் பஸ்மீகரப்படுத்த முன் சொல்லியதுபோல் எந்த எண்ணங்களும் இல்லாமல் மனதைப் பரிசுத்தமுடன் வைத்து ஒரே சமாதியிலிருக்கவேண்டும். அதாவது, அப்போதைக்கப்போது மத்தியில் மத்தியில் இடைவிடாமல் அநேககாலம் தன்னை மறந்திருப்பதே ஸமாதி எனப்படும். மேலும்,

"மனஸ்ஸங்கல்பகம் த்யாத்வா ஸம்க்ஷிப்யாத்மநி புத்திமான்
தாயித்வா ததாத்மானம் கர்மணா பரிசீர்திதா."

புத்திமான்கள், ஸகல விஷயங்களையும் ஸங்கல்பிக்கும் மனதை விஷயங்களிலிருந்து நிவர்த்தி செய்து பரமாத்ம ஸ்வரூபத்தில் ஸங்கல்பிக்கவேண்டுமென்று நிஸ்சயித்துப் பரமாத்மாவி

லேயே மனதை ஸதாகாலமும் லயிக்கச் செய்யவேண்டும். இந்தச் சமாதிநிலையே த்யானமென்று கீதையில் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆதலால், இதுவரையிற் சொல்லிவந்ததையும் இனிச்சொல்லப்போகும் ஆத்மோஜ்ஜீவனோபாயத்தையும் வாசிக்கப்பட்ட பாவத்தாலும்,

கீதை. அ—4. யோகஸந்ந்யஸ்த கர்மாணம் ஜ்ஞாநஸஞ்சிந்ந ஸம்ஶயம்
ஆத்மவந்தம் ந கர்மாணி நிபத்நந்தி தநஞ்ஜய ! ஶ்ல-41.

பலாபேக்ஷையை விட்டு ஈஶ்வரார்ப்பணபுத்தியாய்க் கர்மஞ்செய்கிற நிஷ்காம கர்மயோகி, குரு உபதேசித்த ப்ரஹ்மஜ்ஞானத்தினால் சகல ஸம்ஶயங்களையும் போக்கடித்துக்கொண்டு ப்ரஹ்மநிஷ்டையில் இருப்பவனைக் கர்மங்கள் கட்டுப்படுத்தமாட்டாது. ஆதலால், முன்சொல்லியதுபோல் எதையும் ஈஶ்வரார்ப்பணமாய்ச் செய்துவந்தால் அதனால் சித்தசுத்தியும், சித்தசுத்தியினால் ஜ்ஞானமும், ஜ்ஞானத்தினால் மோக்ஷமும் அடையலாம். இந்த்ரியங்களை அடக்கி மனதை லயப்படுத்துவதற்காக ஸ்ரீ பகவத்கீதை, முதல் 6 - அத்யாயங்களில் விசேஷார்த்தங்களுடன் தனியே எழுதப்பட்டிருக்கின்றது. இந்நூலையும் ஷை கீதையையும் வாசித்து ஏகாந்த ஸ்தலத்தில் உட்கார்ந்து மனதை வெளியில் ஓடவிடாமல் பரமாத்ம ஸ்வரூபத்தில் லயிக்கச்செய்ய எளிதில் அறிந்து அப்யஸித்து நற்கதி அடையவேண்டுமென்பது இந்நூலின் கருத்தாகும்.

ப்ரபஞ்ச விரக்தி மார்க்கம்.

"தந்தைதாய் தமர்தார மகவென்னு மிவையெலாஞ்
சந்தையிற் கூட்ட மிதிலோர்
சந்தேக மில்லைமணி மாடமா ளிகைகோட்டை
சதுரங்க சேனை யுடனே
வந்ததோர் வாழ்வுமோ ரிந்த்ரஜா லக்கோலம்
வஞ்சனை பொறாமை மேயாயம்

வைத்தமண் மாங்கிருமி சேர்ந்தமல பாண்டமோ
வாஞ்சனை யிலாத கனவே
யெந்தநா ளுஞ்சரி யெனத்தேர்ந்து தேர்ந்துமே
யிரவுபக லில்லா விடத்
தேகமாய் நின்றநின் னருள்வெள்ள மீதிலே
யானென்ப தறமூழ்கிச்
சிந்தைதான் றெளியாது சுழலும்வகை யென்கொலோ
தேடரிய சத்தாகி யென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேஜோ மயா னந்தமே."

அன்பர்களே! இச்சரீரம் மலம்நிறைந்த பாண்டம். ராஜாதிகாரத்தால் பலபொருள்களும் ஓரிடத்திற்கொண்டுவந்து சந்தை சேர்த்தபோது அச்சந்தையிற்கொள்வோர் பலர்வந்துசேர்வது போல், அவரவர்களின் கர்மாநுசாரமாய் அந்தந்தக் குடும்பத்தில் கூடுகின்றார்களாதலால், தந்தை தாய் தமர் தார மகவென்னுமிவையெலாஞ் சந்தையிற் கூட்டமென்று சொல்லப்பட்டது. சதுரங்கசேனையென்றால், அரசர்க்குரிய நால்வகைப் படை அவை தேர் யானை குதிரை காலாட்கள். ஆதலால், தாய்தந்தை முதலானோர் சந்தையிற்கூடிய கூட்டம்போன்றவர்கள். மாடமாளிகை சதுரங்கசேனை என்பவற்றோடு கூடிய வாழ்வு இந்த்ரஜாலம் போன்றது. வஞ்சனை முதலானவைகளுக்கிடமாகிய சரீரமோ ஸ்வப்நம் போன்றது. இவைகளை எக்காலத்தும் உயர்வு தாழ்வு கருதாது ஒருசீராகத் தெளிந்து, மனமானது ஒருநிலையில் நில்லாமல் சுழல்வதற்குக் காரணம் ஏதுவோ அதைச் சொல்லுகின்றோம் கேளுங்கள்:—

மனிதர்களுக்கு இச்சன்மம் பூர்வத்தில் ஸஞ்சித கர்ம பந்தத்தால் உண்டான தாய்தந்தையர்கள் புத்ரர்கள் புத்ரிகள் பார்யைகள் பர்த்தாக்கள் முதலானவர்கள், பந்துக்களாகத் தோன்றித்தோன்றி நீர்க்குமிழிகளைப்போல மறைந்தார்கள்.

நாமும் அவ்வாறே தோன்றி மறைந்துவிடப்போகின்றோம் என்று நிஸ்சயிக்கவேண்டும். இது, மாயையால் உண்டாயினும் அஜ்ஞானிகள், சரீரமே நித்யம்; இந்த ஸம்ஸாரமே ஶாஸ்வதம் என்று மாயையால் கட்டுப்பட்டு சரீர சம்பந்தமான தாரபுத்ராதிகள் பார்த்துக்கொண்டிருக்க. மரணமடைவதால் அவர்களுக்காகத் துக்கித்துக்கொண்டு மறுபடியும் ப்ரயத்நப்பட்டு துன்மார்க்கத்தை யடைந்து, காம க்ரோத லோப மோஹ மத மாச்சர்யாதிகளை அநேகவிதங்களால் விஸ்தரித்துக்கொண்டு, நமக்கு எந்தவிதத்திலும் த்ரவ்யம் கிடைத்தால் போதுமென்று துச்சமான வ்யவஹாரங்களைச்செய்து, த்ரவ்யத்தைச் சம்பாதித்துக்கொண்டு, இதுவே நமக்குச் ஸுகம் இதைவிடச் ஸுகம் வேறில்லை யென்று அந்தகர்களைப்போல் காமத்தினால் தமக்கு என்னகதி உண்டாகுமோ வென்று தெரியாமல், வேடன்வலையில் அகப்பட்டு மதிமயங்கிய பக்ஷிகளைப்போல் ஸ்த்ரீகளின் மோஹவலையில் அகப்பட்டழுந்தி எழுந்திராதபடி ஈஷணத்ரயங்களென்னும் சமுத்ரத்தில் மூழ்கி, பெண்டு பிள்ளைகளின்பேரில் மமகாரம் அதிகரித்து, அவர்களுக்காகத் தனத்தைச் சம்பாதித்து அவர்களால் ஸுகத்தை யடையாமல் காலமெல்லாம் துக்கமாய்க் கழித்து, சரீரம் விழுந்தபோது அந்தகனால் அநேகவித பாதைகளையடைந்து, நரககூபத்தில் சிலகாலிருந்து பாபாத்மாக்களாய் ப்ரபஞ்சத்தில் பிறந்துபிறந்து இறந்திறந்து, இம்மையிலிருந்து மறுமைக்கும் மறுமையிலிருந்து இம்மைக்கும் கணக்கில்லாமல் உழன்று பாதைகள் படுகின்றார்கள். ஸூக்ஷ்ம த்ருஷ்டியினால் பார்த்தபோது தேஹம் வேறு, தான்வேறாகக் காணப்படும். ஆகையால் அவர்கள்ப்ராந்தி கயிற்றின்முடிபோல் தேஹமும் தானும் ஒன்றென மயங்கி வீழ்ந்து காமாதி தசவர்க்கங்களையே வ்ருத்திசெய்து நசிக்கின்றார்கள். தசவர்க்கமென்பன:— காம க்ரோத லோப மோஹ மத மச்சர டம்ப தர்ப்ப ஈர்ஷை அஸூயை என்பனவேயாம்.

1. காமமென்பது:— தநம் தாந்யம் புத்ர பௌத்ராதிகளின்பேரில் அதிகப்ரீதி வைத்தல்.

2. க்ரோதமென்பது:—ஒருவருக்குக் கெடுதி விளைவிக்க ப்ரயத்நம் செய்ய இச்சை கொள்ளுதல்.

3. லோபமென்பது:—தனதுசொத்தில்ஜ்ஞானிகளுக்கும் கிஞ்சித்தும் கொடுக்கக்கூடாது என்னும் எண்ணமிருத்தல்.

4. மோஹமென்பது:—தாய் களத்ராதிகளின்மீது அதிகப்ரீதியைவைத்துத் தனக்கு உண்டாயிருக்கும் பொருள் போதாதென்றும் இன்னும் அதிகமாய்ச் சம்பாதிக்க வேண்டுமென்னும் ஆசையை வ்ருத்திசெய்தல்.

5. மதமென்பது:—த்ரவ்யப்பெருக்கினால் செருக்குற்றுப் பிறரை மதியாமையை விளைவித்தல்.

6. மத்ஸரமென்பது:—தன்னைப்போல் பிறரும் சுகமநுபவித்தலைச் ஸஹியாமையை விளைவிக்கும் சித்தவ்ருத்தியை யுண்டாக்குதல்.

7. டம்பமென்பது:—பலர்மெச்ச தர்மம் யாகம் முதலானவைகளைச் செய்தல்.

8. தர்ப்பமென்பது:—புத்ர மித்ர களத்ர தநதாந்யாதி சம்பத்யாதிகளில், தனக்கு நிகரானவர்கள் ஒருவருமில்லை என்று கர்வப்படுதல்.

9. ஈர்ஷை என்பது:— தனக்கு நேர்ந்த துக்கம் பிறருக்கும் நேரிடவேண்டுமென்று எண்ணுதல்.

10. அஸூயை என்பது :— கெடுதிசெய்தவனுக்குக் கெடுதிவிளைவிக்க வேண்டுமென்று எண்ணுதல்.

இதன் விவரங்களை, ஸ்ரீக்ருஷ்ணார்ஜுந ஸம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை அ - 3, ஶ்லோ - 34, அ - 6 ஶ்லோ - 7, 36 - இவைகளில் விரிவாய்க் காணலாம். இவை தள்ளத்தக்க குணங்களாகும்.

இனி கொள்ளத்தக்க குணங்களைச் சொல்லுகின்றோம் கேளுங்கள்:—அவை, இச்சை, பக்தி, ஶ்ரத்தையேயாம்.

1. இச்சை என்பது:—அன்னபானாதிகளை யுட்கொள்ளவும் மலமூத்ராதிகளை விஸர்ஜனம் செய்யவும் விரும்புதல். இவைகளைச் செய்யாவிடில் தேஹபாதை உண்டாம்: செய்வதனால் பிறருக்குக் கெடுதி யாதொன்றுமில்லை.

2. பக்தி என்பது:—குருவினிடத்திலும் ஈஶ்வரனிடத்திலும் மாறாத நேசம்வைத்து இடைவிடாப் போன்புடன் துதித்தல்.

3. ஶ்ரத்தை என்பது:—குருவாக்யத்தில் முழு நம்பிக்கை வைத்தல்.

மேற்கூறிய பத்துகுணங்களும் பிறவிக்கேதுவாகிய பல வித எண்ணங்களை விளைவித்து ஜனனமரணத்தில் அழுத்தும். அதனால் அக்குணங்களை அறவே கைவிட்டுப் பின் கூறிய மூன்றுகுணங்களைக் கடைப்பிடித் தொழுகினோர் முமுக்ஷுக்களாய் முக்தியடைவார்களென்பது கற்றுணர்ந்த பெரியோர் கருத்து.

தோன்றல் குணங்கள் பத்துங் கடிந்தபின்
மூன்று குணங் கொள்வோ ராகிப
முமுக்ஷ ஞானமொன் றடைவர். (உத்தியார்)

ஒவ்வொரு மனிதனிடத்தும் மேற்சொல்லிய பத்து குணங்களுமில்லாவிடினும், அவைகளில் ஏதாகிலும் ஒன்று இருந்தே தீரும். அது எப்படித் தெரிந்துகொள்ளலாமென்றால், மேற்சொல்லிய குணவியாபாரங்களை யாசித்துக்கொண்டு வரும்போதே தம்மிடத்துள்ள குணம் இதுவென்றுவிளங்கும். இப்பத்துக்குணங்களே, மனிதர்களுக்கு அலகால விஷமாயிருந்துகொண்டு ஜனனமரணங்களை வருத்திசெய்து கொண்டே வருகின்றன. ஆகலால்,

காளிங்கன் என்னும் ஸர்ப்பராஜன் கர்வத்தை, அடக்குதல்.

மேல்காட்டியபடத்தில் ஶ்ரீக்ருஷ்ணபரமாத்மா காளிங்கன் என்னும் ஸர்ப்பத்தின்மேல் நர்த்தனம் செய்து அதன் கர்வத்

தை அடக்குவதுபோல், நமது ஹ்ருதயத்திலிருக்கும் முன் சொல்லிய காமக்ரோதாதி மலினமாகிய சர்வத்தையெல்லாம் புத்தியினால்மிதித்து அடக்கவேண்டும். இவைகள் அடங்கியபின் ஆத்மாஎவ்விதப்பற்றுதலையு மில்லாமல் நிஷ்களங்கமாய் ஸ்படிகம்போல் ப்ரகாசித்துக்கொண்டிருக்கும். இதற்கு த்ருஷ்டாந்தம் என்னவென்றால், ஸ்படிக லிங்கத்தின்முன் வெண்மை வர்ணமுடைய புஷ்பத்தைக் காட்டியபோது, அது வெண்மை நிறமுடையதாகவும், சிவப்பு வர்ணமுடைய புஷ்பத்தைக் காட்டியபோது சிவப்புநிறமுடையதாகவும், பச்சைவர்ணமுடைய புஷ்பத்தைக் காட்டியபோது பச்சை நிறமுடையதாகவும் காணப்பட்டு, இவைகளையெல்லாம் களைந்து பார்க்கும்போது சுத்தவெண்மையுடையதாய் தன் நிஜஸ்வரூபத்துடன் ப்ரகாசித்துக்கொண்டிருக்கும். அதுபோலவே, நமது சரீரத்திற்குள் இருக்கும் ஆத்மா ஜோதி ஸ்படிகம்போல் பரிசுத்தமாய் ப்ரகாசித்துக்கொண்டிருக்கின்றதென்று அறிக. இவ்வித ஆத்மாவானது மேற்சொல்லிய காமக்ரோதாதி அழுக்குக்களால் மூடப்பட்டிருக்கின்றது. இதுவே பசுபதிபாசமென்று சொல்லப்படும். அதாவது, பசு என்றால் நாம்; பதி என்றால் கடவுள்; பாசம் என்றால் நமக்கும் கடவுளுக்கும் மத்தியில் இருக்கப்பட்ட திரை. இந்தப் பாசமென்னும் திரையை யார் ஒருவர் நீக்கிவிடுகின்றார்களோ, அவர்கள் பசுத்தன்மை நீங்கப்பெற்று பதியாய்விடுகின்றார்கள். அதாவது, பசுபதியாவார்கள். இந்தப் பதி அஜ்ஞானத்துடன் கூடியிருப்பதனால் ஜ்ஞானரத்னம் மறைவுபட்டிருக்கின்றது. அஃதெப்படி என்றால், ஓர் வீட்டில்ப்ரகாசித்துக்கொண்டிருக்கும் தீபத்தை ஒரு குடைகொண்டு மூடினால் அது எப்படி குடத்துள்மாத்திரம் ப்ரகாசித்துக்கொண்டு மற்ற இடங்களை இருளடையச் செய்யுமோ, அதுபோல், நம்மிடத்திலுள்ள ஜ்யோதிஸ்வரூபமாகிய ஆத்மா முற்கூறிய காமக்ரோதாதி அழுக்குகளினாலும் ஈஷணாத்ரயங்களினாலும் மூடப்பட்டிருக்கின்றது. இதுவே

பாசமென்று இதுவரையில் சொல்லப்பட்டது. இந்தப் பாசத்தையும் ஈஷணாத்ரயங்களையும் பஸ்மம்செய்து பார்க்குமளவில் அவ்விடம் லேசமாய் ஒன்றுமில்லாத ஆகாசவடிவமே நிற்கும். அந்த ஆகாசவடிவந்தான் நீ; அதுதான் நான்; அதுதான் ப்ரஹ்மம்; அதுதான் சிதம்பரரஹஸ்யம்; அதுதான் ஆத்மா என்று சொல்லப்படும். ஆதலால், துச்ச சுகம் அதிகரித்துத் தமது கதிகாணாமல் கர்மாநுசாரமாய் ஒவ்வொருவரும் அநுபவிக்கும் சுகம் துச்சமே. பூமியெல்லாம் பரிபாலனம் செய்தபோதிலும் இந்த்ராதிபத்யமும் வரவேண்டும் என்று தோன்றும். தாம் அநுபவிப்பது தாழ்ந்ததென்றும் இந்த்ராதிபத்யம் உயர்ந்ததென்றும் எண்ணி ப்ரஹ்மலோக பர்யந்தம் அடைந்தபோதிலும் துச்ச சுகமேயாகும். ஸ்வஸ்வரூப (தனது நிஜஸ்வரூப) ஸ்திதியைப் பெற்று மோக்ஷாநந்தத்தை அடையப்பட்டவர்களுக்கு இவைகளெல்லாம் துச்சமே. அநேகர் ஸ்த்ரீகளின் வலையில் அகப்பட்டு, மின்னலைப்போல் க்ஷணபங்குரமான சிற்றின்பங்களை அநுபவித்து மீண்டும் எழுந்திருப்பதற்கு சக்தியில்லாமல் * வீசகோசப் புழுவைப்போல வழிதெரியாமல் காமக்ரோத லோபங்களில் ஆழ்ந்து உழலுகின்றார்கள்.

ஈஷணாத்ரயமென்பன:— தாரேஷணை, புத்ரேஷணை, தனேஷணை.

தாரேஷணையென்பது:—பார்யையின்மீது ஆசைகொள்ளல்.

---

* வீசகோசப் புழுவானது, தன்னிடமாகிய நூலை ஒரு வழியில்லாதகூடாக இழைத்து அதிலிருந்து தான் வெளியில் புறப்பட்டுப் போக வழிகாணாமல் இறக்கும் தன்மையைப்போல, இவனும் பஞ்ச பாசங்களினாலும் தத்வாதத்வங்களினாலும் பந்தப்பட்டு ஈனமாகிய ஜனனமரண துக்கங்களையடைவன்.

தாரேஷணை.

ஶ்லோ || "ஸந்யாஸமக்நி ஹோத்ரஞ்ச த்விஜாதீனாம் ப்ரஶஸ்யதே."

என்னும் வித்தாரத்வசனங்களினால், புருஷர்கள் ப்ரஹ்மசர்ய வ்ரதம் பூண்டு மோக்ஷாபேக்ஷை யுடையவர்களாயிருந்தால் ஸந்யாஸாஶ்ரமும், காமஸுகத்தில் இச்சையுடையவர்களாயிருந்தால் அக்நிஹோத்ரமான க்ருஹஸ்தாஶ்ரமமும் கைக்கொள்ளவேண்டும். ப்ரஹ்மசாரியாயிருந்து ஸந்யாஸம் பெற்றவர்கள் ஸாங்க்யர்களென்றும், ப்ரஹ்மசர்யாயிருந்து க்ருஹஸ்தாஶ்ரமம் பெற்று பிறகு ஸந்யாஸாஶ்ரமம் பெற்றவர்கள் கர்மயோகிகளென்றும் சொல்லப்படுவார்கள். ஶாஸ்த்ரஜ்ஞானமுடைய பண்டிதர்களும் பாமரர்களும், மேற்சொல்லிய ப்ரமாண வசனங்களுக்கு நிஜார்த்தம் தெரியாமல் ஸாமாந்யார்த்தங்களை வஹித்து பார்யையே ஸம்ஸாரத்திற்கு பரமபுருஷார்த்தமென்று எண்ணித் தாம் ப்ரமை அடைவர்களேயன்றி இதரர்களையும் ப்ரமிக்கும்படி செய்விக்கிறார்கள்.

ஶ்ரு || 'ஆதிமத்யாவஸானேஷு துக்கம்ஸர்வமிதம்யதஸ்தஸ்மாத்ஸந்த்யக்த்வா ஜகத் ஸத்யக்தம் ஜாத்ஸத்யக்த்வா ஸுகீபவேத்'

என்று மஹாவாக்ய ரத்நாவளியில் இருக்கின்றது. ஆதலால், ஸம்ஸாரவிஷயம் விசாரிக்குமளவில் எப்பொழுதும் துக்கமாகவேயிருக்கின்றது. ஸம்ஸாரத்திற்கு மூலகாரணமாயிருக்கும் பார்யையினால் ப்ரயோஜனம் ஜ்ஞானிகளுக்கு யாதொன்றுமில்லை. ஜ்ஞானிகள்தவிர மற்றவர்கள் பார்யை வராமுன், பார்யைவரவில்லையே என்று துக்கப்படுகின்றார்கள். அவள் வந்தபிறகு, தான் சொல்லியதுபோல் செய்து உபசரணை செய்யாமல் வீண்வாதங்களாடி க்ருஹ க்ருத்யங்களையெல்லாம் வெளிப்படுத்தி இல்லாத பொய்வார்த்தைகளையெல்லாம் கற்பனைசெய்து இதரர்களுக்குச்சொல்லி கௌரவத்திற்குத் தீங்கு விளைவித்து ஜாரத்வம் சோரத்வம் மூர்க்கத்வம் முதலாகிய ராக்ஷஸகுணங்களுடன் இருந்து ப்ரீதியில்லாதவளாயும்

ஜ்ஞானஹீனமுடையவளாயும் ரோகியாயும் ரூபலாவண்யமில்லாதவளாயும் அநாசாரமுடையவளாயும் நாகரீகம்இல்லாதவளாயும் ருசியுடன் பாகம் செய்யாதவளாயும் இருப்பாளாகில், அவளால் துக்கமே ஸம்பவிக்கும். அப்படிக்கில்லாமல் ஸத்வகுணமுடையவளாயும் ரூபலாவண்யமுடையவளாயும் தன்னிடத்தில் அதிக ப்ரீதியுடையவளாயிருந்தாலும், அவள் ஸந்தானமில்லாமல் மலடியாயிருப்பாளாகில் அதனால் துக்கமே உண்டாகும். அல்லது, அவள் ரத்நாபரணங்களும் சரிகைசேலை சரிகைரவிக்கைகளும் கொண்டுவந்துகொடுக்கும்படி பாதிப்பாள். தரித்ரத்தினால் அவைகளைக் கொண்டுவந்து கொடாவிட்டால் இராப்பகலாய் இழவு பேரிழவு கல்லெடுப்பு வீட்டில் என்னைக்கொண்டுவந்து கொடுத்தார்களே என்று சட்டியைத் தூக்கிப் பானையின்மீதும் பானையைத் தூக்கிச் சட்டியின்மீதும் புருஷனைக் கண்டபோதெல்லாம் பாத்ரங்களை தூக்கிப்போட்டு உடைத்துக்கொண்டிருப்பதும் துக்கமே. அல்லது, ரோகத்தினாலாகிலும் பிசாசாதிகளினாலாகிலும் பாதைபட்டுக்கொண்டிருக்கும்போது வைத்யர்களையும், மாந்த்ரீகர்களையும் வரவழைத்து அதை நிவாரணை செய்விப்பதற்காக சரீர ப்ரயாசையும் த்ரவ்ய வ்யயமும் அதிகமாயுண்டாவதனால் துக்கமே சம்பவிக்கும். அல்லது, அவள் வ்யாதியில்லாமல் நல்ல அழகும் குணமும் ஸந்தானமும் உடையவளாயிருந்து திடீரென்று இறப்பாளாகில் அவளை நினைத்துநினைத்து துக்கத்தை அடையவேண்டியதாய் நேரிடும். ஆகலால்,

ஶ்லோ || "காமக்ரோதஶ்ச லோபஶ்ச தேஹேதிஷ்டந்தி தஸ்கராஹா ஜ்ஞாநரத்னாபஹாராய தஸ்மாஜ்ஜாக்ரத ஜாக்ரத:" "மாதா நாஸ்தி பிதா நாஸ்தி நாஸ்தி பந்து ஸஹோதரா: அர்த்தம்நாஸ்தி க்ருஹம்நாஸ்தி தஸ்மாஜ்ஜாக்ரத ஜாக்ரத:" "ஆஶயா பத்யதே லோகே கர்மணா பஹுசிந்தயா ஆயுக்ஷீணம் நஜாநாதி தஸ்மாஜ்ஜாக்ரத ஜாக்ரத" "ஜன்மதுக்கம் ஜராதுக்கம் ஜாயாதுக்கம் புன:புன: ஸம்ஸாரஸாகரம்துக்கம் தஸ்மாஜ்ஜாக்ரத ஜாக்ரத"

என்னும் ஸ்ருதிரீதியாய்த் தேஹேந்த்ரியாதிகளுக்கு வேறாயிருக்கும் ஆத்மாவாகிய தனக்கு, மாத்ரு பித்ரு களத்ர புத்ர மித்ராதிகளில்லை.

ஶ்லோ || "ஸத்யம்மாதா பிதாஜ்ஞானம் தர்மோப்ராதா தயாஸகீ
ஶாந்திபத்நீ க்ஷமாபுத்ர ஷடைதே மம பாந்தவா:"

என்னும் பாண்டவகீதா வாக்யரீதியாய் ஸர்வது:க நாஶகரமாகிய பரமோபஶாந்தி என்னும் பார்யையுடன்கூடி க்ரீடித்துக்கொண்டு ப்ரஹ்மானந்த ஸமுத்ரத்தில் மூழ்கியிருக்கும் புண்யபுருஷன், ஜீவன்முக்தனாய் பஹிர்ஸம்ஸார விஷய வியாபாரங்களும் அந்தரிந்த்ரிய விஷயஸம்ஸாரவியாபாரங்களும் இல்லாதவனாய் ஸுகியாயிருப்பானென்பது ஶாஸ்த்ர ப்ரமாணம்.

புத்ரேஷணை.

உலகத்தில் ப்ரஹ்மவேத்தாக்களைவிட இதரர்களில் சிலர் பண்டிதர்களும், பாமரர்களும் வேதஶாஸ்த்ரேதிஹாஸ புராணங்களில்,

"புத்ரேணலோகாஞ்ஜயதி, அபுத்ரஸ்ய கதிர்நாஸ்தி, புந்நாம்நோ நரகாத்த்ராயத இதிபுத்ர:, புந்நாம்நோ நரகாத்யஸ்மாத்பிதரம் த்ராயதே ஸ்வயம், தஸ்மாத்புத்ர இதி ப்ரோக்தஸ்வயமேவ ஸ்வயம்புவ:"

என்னும் ஶ்ருதிகளைக் கேட்டு அதன் நிஜஸ்திதியை அறியாதார், விபரீதார்த்தங்களை ஸங்கிரஹித்து, அதுவே ஸத்யமென்றும் புத்ரர்களை உடையவர்களுக்கே இஹபரங்களில் ஸுகமுண்டென்றும், புத்ரர்கள் இல்லாதவர்களுக்கு ஸுகமில்லையென்றும், புத்ரர்கள் தாய்தந்தையர்களின் வம்ஶத்தாரையெல்லாம் புண்யலோகத்திற்கு அனுப்புவார்களென்றும், புத்ரர்கள் இல்லாவிடில் பித்ரு ருணம் தீராதென்றும் தாம் ப்ரமை அடைவதுமேயன்றி, உலகத்தாரையும் ப்ரமிக்கச் செய்கின்றார்கள். ஆதலால், புத்ரர்களால் இஹபரங்களிலும், மோக்ஷத்திலும் யாதொரு ப்ரயோஜனமுமில்லை. புத்ரர்கள் பிறவாமுன்னும் பிறந்தபின்னும் பிறந்து இறந்தபின்னும் அதிக

துக்கமே சம்பவித்ததல்லாமல் வேறில்லை. புத்ர ஶப்தத்திற்கு நிஜமாகிய அர்த்தம் விவரித்துச்சொல்லுகின்றோம் கேளுங்கள்.

அலப்யமானஸ்தநய: பிதரௌ க்லேஶயேச்சிரம்
லப்தோ ஹிகர்ப்பபாதேந ப்ரஸவேந ச பாததே
ஜாதஸ்ய க்ரஹரோகாதி குமாரஸ்ய ச தூர்த்ததா
உபநீதேப்ய வித்யத்வமனுத்வாஹஶ்ச பண்டிதே"
"யூநஶ்ச பரதாராதி தாரித்ர்யம் ச குடும்பிந:
புத்ர து:கஸ்ய நாஸ்த்யந்தோ தநீசேந்ம்ரியதே ததா
ஏவம்விவிச்ய புத்ரேஷணா பரித்யக்த்வா
நிஜாத்மநி நிஶ்சித்ய பரமபரீதம் வீக்ஷ்யதே ததஹர்நிஶம்."

என்னும் யாஜ்ஞவல்கோபநிஷத்துவாக்யரீதியாய் புத்ரர்கள்பிறந்தபோதிலும் பிறவாமலிருந்தபோதிலும் துக்கத்தையே உண்டாகச் செய்கின்றது. எப்படியென்றால், புத்ரர்களில்லாதவர்கள், அபுத்ரர்களானோமென்னும் துக்கத்தினால் ஓர் ப்ராஹ்மணரை வரவழைத்து ஓர் பெரியமணையின்மீது உட்காரச்செய்து அவரை நமஸ்கரித்து "ஸ்வாமி! புத்ரஸந்தானமில்லாமற்போயிற்றே, எங்களுக்கு என்ன கதி" என்று கேட்க, அதற்கு அவர் சில ஶாஸ்த்ரங்களை பரிசோதித்துப் பார்த்து நீங்கள் பூர்வஜன்மங்களில் பாபகர்மங்களைச் செய்தபடியால் புத்ரஸந்தானமில்லாமற்போயிற்று. ஆதலால், நீங்கள் ராமேஶ்வராதி புண்யக்ஷேத்ரங்களை ஸேவித்துத் தீர்த்தமாடிவந்தால் பாபகர்மங்கள் நசித்து புத்ரசந்தானமுண்டாகுமென்றுசொல்ல, அவருடைய வார்த்தையை நம்பி த்ரவ்யங்களையெடுத்துக்கொண்டு அநேகமாதங்கள் தீர்த்தயாத்ரை செய்து ஆங்காங்குள்ள புண்யதீர்த்தங்களில் ஸ்நானம்செய்து தானதர்மங்கள் தர்ப்பணங்கள் ஸர்ப்பஶாந்தி நாகப்ரதிஷ்டை அஶ்வத்த (அரசமரம்) ப்ரதக்ஷிணம் முதலானவைகளை அநேகம் செய்துசெய்து வெறுத்து ப்ரயாணங்களினால் அன்னபானாதிகள் சரியாய் அகப்படாததினால் காயக்லேஶாதி முதலாகிய சகல துக்கங்களை அனுபவித்தும் இஷ்டஸித்தி கின்றவேறுமற்

போனபடியால் வேறொரு மந்த்ர ஶாஸ்த்ரவானை வரவழைத்துத் தமது அபிப்ராயத்தைத் தெரிவித்து இதற்கு ஏதாகிலும் உபாயம் சொல்லவேண்டுமென்று வேண்டிக்கொள்ள அந்த மந்த்ர ஶாஸ்த்ரவாதி உங்களுக்கு சனி போதாமலிருப்பதால் நவக்ரஹங்களுக்கு அகண்டமேற்றி மந்த்ரங்களால் அர்ச்சனை செய்வித்து மொக்குகளைப்போட்டு மந்த்ரித்து சனி நீங்கிய பிறகு புத்ரசந்தான முண்டாகுமென்று சொல்ல, அவ்வார்த்தையைக் கேட்டு அதற்குத்தக்க ப்ரயத்நங்களைச் செய்து மாந்த்ரீகனை வரவழைத்துக்கேட்டபோது பேய்பிடித்துக்கொண்டிருப்பதனால் புத்ரஸந்தான மில்லையென்றும், பேய் ஓட்டுவதற்காக ஐம்பதுவராகன் பிடிக்குமென்றுசொல்லி ஐம்பதுவராகனைப் பெற்றுக்கொண்டு ஒருவாரம்வரையில் முழுக்கில்வைத்து உடுக்கையடித்து சிலம்புபோட்டு பேயோட்டும் மந்த்ரங்களைச் சொல்லிமுடித்து இனி உங்களுக்கு சந்தானமுண்டாகுமென்றுசொல்லிச் சென்றபிறகு சந்தானமில்லாமல் போனதனால் மிகவும் வியாகுலமடைந்து மற்றொரு ஶாஸ்த்ரஜ்ஞனை வரவழைத்து 'எங்களுக்கு சந்தானமில்லை எங்கள்கதி என்ன' என்று கேட்க, அவர் ஶாஸ்த்ர க்ரந்தங்களைப் பரிசோதித்து ஆஹா! நீங்கள் மஹாபாபங்களை செய்தவர்கள். அதனால் உங்களுக்குச் சந்தானமில்லாமற்போயிற்று. நீங்கள் இருவரும் நேம நிஷ்டைகளுடன் நிராஹாரமாயிருந்து மஞ்சள் வஸ்த்ரங்களை உடுத்தி வாயைத் தாள்போட்டு திருப்பதிக்குச் சென்று வேங்கடேஶ்வரரைத் தர்சித்து நியமம் தவறாமல் நூறுவராஹன் காணிக்கைப்போட்டு மாவிளக்குடன் அகண்டமேற்றி முப்பழம் பலகாரங்களுடன் ஸமாராதனைசெய்வித்து வீடுசேர்ந்தவுடன் மறுபடியும் பாவிளக்குப்போட்டு ப்ராஹ்மண ஸந்தர்ப்பணை செய்வித்தால் உங்களுக்கு புத்ர ஸந்தானமுண்டாவதற்கு ஸந்தேஹமில்லை யென்றுசொல்ல, அவர் வார்த்தையைநம்பி அதுபோல்செய்தும் ஸந்தானமில்லாம துக்கத்தில் மூழ்கியிருக்கிறார்கள்.

ஶ்லோ || "கோடராந்தரபவோ வஹ்நிஸ்தருமேகம்தஹிஷ்யதி குபுத்ரஸ்து குலேஜாதஃ ஸ்வகுலம் நாஶயேத்பரம்" என்றிருப்பதனால் நற்குணமுடையபுத்ரன் உண்டாகவேண்டுமென்று ஈஶ்வரனை ப்ரார்த்தனைசெய்து வந்தார்கள். புத்ரஸந்தான மில்லாத தாய்தந்தைகளுக்கு பஹுவித துக்கத்தை உண்டாக்குவதற்கு ஸந்தேஹமில்லை. இப்படி துக்கப்பட்டு ஸந்தான முண்டானபோதிலும் அதனால் துக்கமே உண்டாகின்றது. அஃதெப்படியென்றால், ஸந்தான ப்ரீதியுடையவர்களுக்கு தைவாநுகூலத்தினால் தனக்குத்தானும் கர்ப்பந்தரித்து. சிலமாதங்களில் கஷ்டமேற்பட்டால் தாய்தந்தையர்களுக்குத் துக்கத்தை விசேஷமாய் உண்டாக்கும். அப்படிக்கல்லாமல் கர்ப்பம் நின்று நவமாஸங்களும் பூர்த்தியாய் ப்ரஸவவேதனை அதிகமாகப் படும்போது அந்த பாதையைப்பார்க்க ஸஹிக்காமல் மருத்துவம்செய்யப்பட்டவளைக்கொண்டுவந்து காட்டியபோது ஐயா! பட்டாசார்யரே, உமது பார்யை விசேஷமாய் ப்ரஸவவேதனைபட்டுக்கொண்டிருப்பதால் ஏதாகிலும் ப்ரார்த்தனைசெய்துகொள்ளென்று சொல்லினள். அதைக்கேட்ட பட்டாசார்யர் செய்யவேண்டிய ப்ரார்த்தனைகளெல்லாம் முந்தியே செய்துமுடிந்தது; குழந்தைக்கு ஆசைப்பட்டு பெரிய ப்ராணனுக்கே மோசம்வந்தது. இனி என்னசெய்வேன், அவள்பிழைத்தால்போதும். ஈஶ்வரன் எங்களை எல்லாவிதத்திலும் சோதிக்கத் துக்கத்தையே உண்டாக்குகின்றான் என்று சொல்லி மிகவும் வருத்தமடைகின்றான். ஒருவேளை பெரிய ப்ராணனுக்கு அபாயம் உண்டானால் அதனால் துக்கமே ப்ராப்திக்கும். அப்படியல்லாமல் ஸுகமாய் ப்ரஸவித்தால் சிசுவிற்கு பக்ஷிதோஷங்களும் சந்திதோஷங்களும் உண்டாகும். இவைகளுக்காகக் குளிச்சங்கள்கட்டி விபூதிமந்த்ரித்துக்கொடுத்து பஹுகஷ்டப்பட்டு சிசுவைக் காப்பாற்றுகின்றார்கள். பிறகு, சிசுபிறந்து பன்னிரண்டு வருஷங்கள்வரையில் பாலக்ரஹதோஷம் காண்கின்றது. அப்

போது மூன்றுசக்திகள் கூடியிருக்கும் இடத்தில் பொங்கலிட்டு ஓணான் பலிகொடுத்துப் பூசைசெய்கின்றார்கள். இப்பேர்ப்பட்ட கஷ்டத்துடன் பதினைந்துவருஷங்கள் வளர்ந்து துன்மார்க்கனாய் ஊர்ப்பிள்ளைகளை அடித்துத் தானும் அவர்களால் அடியுண்டு தன் தாய்தந்தைகளுக்கும் ஊர்ப்பிள்ளைகளின் தாய்தந்தைகளுக்கும் கலகத்தை உண்டாக்குவதனால் தாய்தந்தைகளுக்குத் துக்கத்தையே உண்டாக்குகின்றான். அப்படிக்கல்லாமல் புத்திசாலியாயிருப்பானாகில் உபநயனம் செய்து அவனை பள்ளிக்கு அனுப்புவார்கள். அவன் வாசிப்புடையவனாகாவிட்டால் அவன் மூடபுத்தியை அறியாமல் அவனுடைய தாய்தந்தைகள் உபாத்யாயரிடம்சென்று எங்கள்பிள்ளைக்கு நன்றாய் படிப்புச்சொல்லாமல் மாதம்மாதம் சம்பளமாத்ரம் பெற்றுக்கொண்டீர் உமக்கு ருணமிருந்து கொடுத்தோமென்று தூஷணைசெய்து சண்டையிடுவார்கள். பிள்ளைக்கு வித்யை வாராவிட்டால் துக்கத்தையே உண்டாக்கும். அப்படி வித்யாஹீனனாயிராமல் வாசிப்புடையவனாயிருப்பானாகில் அவனுக்கு விவாஹம் செய்விக்கவேண்டுமென்றுகன்னிப் பெண்ணிருக்குமிடம்சென்று பெண்ணைக்கேட்டபோது ஒருவன் முந்நூறு வராகன் கொடுக்கவேண்டும், அன்றியும் தலைசாமானுடன் வங்கி ஒட்டியாணமும் போடவேண்டுமென்று கேட்பான். மற்றொருவன் ஐந்நூறு வராஹன்கொடுத்து நாங்கள்கேட்கும் ஆபரணங்களைப் போடவேண்டுமென்றுகேட்டபோது தமக்கு த்ரவியம் இல்லாமல் போயிற்றல்லவென்று மிகவும் துக்காக்ராந்தனாயிருக்கும்போது, மற்றொருவன் கன்யாதானமாய்க் கொடுப்பதற்குச் சம்மதித்து பொருத்தமித்தங்கள் பார்த்தபோது வயிற்றுப்பொருத்தமில்லை நாங்கள் கொடுக்கமாட்டோம் என்றுசொன்னவுடன் ஆஹா கைக்கெட்டினது வாய்க்கெட்டாமல் போயிற்றல்லவா என்று துக்கத்தையே உண்டாக்குகின்றான். அப்படிக்கல்லாமல் பொருத்தமித்தங்கள் சரிப்பட்டு விவாஹம்முடிந்தவுடன் அவள், அழகும் நற்குணமும்

இல்லாவிட்டால் அதனால் மனோவியாகுலமே உண்டாகும். அப்படிக்கல்லாமல் எல்லாசுகுணங்களும் இருந்தபோதிலும் அவள் க்ஷயரோகத்துடன் மிகவும்மெலிந்து இருப்பாளாகில் அவளுக்கு கூஷ்பாண்டலேஹ்யம் முதலானவைகள்செய்து தகுந்த ஔஷதங்களுடன்கொடுத்தும் வியாதிதீராமலிருந்தால் குமாரன் காமாக்ராந்தனாய் பார்யை இனிஉபயோகப்படமாட்டாளென்று எண்ணி பரஸ்த்ரீகளைமோஹித்து வியாதிஸம்பவித்தபோது திரவ்யம் வியயமாவதனால் துக்கம்உண்டாவதுமேயன்றி, இவன் மோஹித்தபரஸ்த்ரீயினுடைய புருஷனால் தாவாசெய்யப்பட்டு ராஜாங்கத்தாரால் தண்டனையடைந்தபோது அதனால் தாய்தந்தைகளுக்கு துக்கத்தையே உண்டாக்கும். அப்படியல்லாமல் நல்ல மருமகளாய் வந்துவாய்த்து புத்ரஸந்தானம் அதிகமாயுண்டாய் தாரித்ரியதோஷத்தினால் ஸம்ஸாரபந்தத்தில் அகப்பட்டுக்கொண்டு அவஸ்தைபட்டுக்கொண்டிருப்பதைப்பார்த்து அவனது தாய்தந்தைகள் மிகவும் துக்கப்பட்டுக்கொண்டிருப்பார்கள். இப்படி துக்கப்பட்டுக்கொண்டிருக்கும் தாய்தந்தைகளை சில ஜனங்கள் பார்த்து என்ன வ்யஸனமாயிருக்கின்றீர்கள் என்றுகேட்டபோது புத்ர பௌத்ராதிகளெல்லோரும் கட்டவஸ்த்ரமும் புஜிப்பதற்கு அன்னபானாதிகளும் இல்லாமல் துக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள், அதைப்பார்த்து ஸஹிக்காமல் எங்களுக்கு மரணமாகிலும் வராமல் போயிற்றே என்று துக்கிக்கின்றோமென்று சொல்லுவார்கள். ஆதலால், தாய்தந்தையர்களுக்கு புத்ரன் இல்லாவிட்டாலும் இருந்தாலும் துக்கத்தையே உண்டாக்குகின்றது. இப்படிப்பட்ட புத்ரர்களால் ஸத்கதி உண்டாகுமென்பது என்னநிஸ்சயம்.

தாய்தந்தையர்கள் மரணமடைந்தபோது அவர்களுக்காக புத்ரர்கள்செய்யும் ஸ்ராத்தம் தர்ப்பணம் தானம்முதலானவைகளினால் அவர்கள் த்ருப்திஅடைந்து ஸத்கதிஅடைவார்களென்று கர்மகாண்டத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

ஆதலால், புத்ரன் எப்படிப் பட்டவனுயிருந்தபோதிலும் இருந்தே தீரவேண்டுமென்பது லோகப்ரஸித்தியாயிருக்கின்றது. புத்ரர்கள்செய்யும் தான ஸ்ராத்தங்களினுல் தாய்தந்தையர்களுக்கு த்ருப்தியும் ஸத்கதியும் உண்டாவது ஸத்யமாயிருந்தால் தாய்தந்தையர்கள் ஜீவித்திருக்கும்போது புத்ரர்கள் தாய்தந்தையர்களின் பெயரைச்சொல்லி சில ப்ராஹ்மணர்களுக்கு ஷட்ரஸங்களுடன் அவரவர்களுக்கு இஷ்டமான பதார்த்தங்களை த்ருப்தியாய் புஜிக்கும்வரையில் அளித்து, தனது தாய்தந்தையர்களுக்கு போஜனம் வைக்காமலிருந்தால் அந்தப்ராஹ்மணர்கள் த்ருப்தியுடன் புஜித்தது தாய்தந்தையர்களினுடைய பசியைப்போக்கடிக்குமா? போக்கடிக்காதல்லவா? அப்படியிருக்க அவர்கள் மரணமடைந்தபின் அவர்களுக்காக புத்ரர்கள்செய்யும் ஸ்ராத்த தானுதிகள் அவர்களுக்கு த்ருப்தியையும் ஸத்கதியையும் எப்படியுண்டாக்கும். ஆனுல், பித்ருதேவதைகளைக் குறித்துசெய்யும் ஸ்ராத்த தர்ப்பண தானுதிகள் வ்யர்த்தமா என்று கேட்கின்றீர்களோ காரணமில்லாமல் கார்யமுண்டாகமாட்டாது. ஆதலால், அவர்களின் பெயரைச்சொல்லி புத்ரர்கள்செய்யும் தானங்கள் அந்தபுத்ரர்களின் நற்கதிக்கே காரணமாயிருக்கின்றனவேயல்லாமல் வ்யர்த்தமாகமாட்டா. கர்மகாண்டவிதிப்படி ஸ்தூலஸரீரம் வீழ்ந்தபோது, ஜீவன் ஸூக்ஷ்மஸரீரத்துடன் சந்த்ரலோகம்சேர்ந்து ஸமஸ்தபோகங்களை அநுபவித்து பிறகு, மேகத்துடன்சேர்ந்து ஜலரூபமாய். ஜந்துக்களுக்குவேண்டிய ஆஹாராதி தான்யங்களில்வீழ்ந்து அன்னமாய், அந்த அன்னத்திலிருந்து ரஸமுண்டாய், அந்தரஸம் ரக்தரூபமாய், அந்தரக்தம் மாம்ஸத்தில் ப்ரவேசித்து, மாம்ஸத்திலிருந்து கொழுப்பிலும், கொழுப்பிலிருந்து அஸ்திகளிலும், அஸ்திகளிலிருந்து மூளையிலும், மூளையிலிருந்து ஸுக்லமுண்டாய், அந்த ஸுக்லம் ஸ்த்ரீகர்ப்பத்தில் ப்ரவேசித்து ஜன்மமெடுக்கின்றதென்று சிலர் சொல்லுகின்றூர்கள். ஜீவன், தேஜோமார்க்கமாய் ஸூர்ய

லோகம்சென்றுபிறகு ப்ரஹ்மலோகம்சேர்ந்து ப்ரஹ்மத்துடன் கலந்து முக்தியடைகின்றூர்களென்று சிலர் சொல்லுகின்றூர்கள். மற்றும் சிலர், ஜீவஸ்வரூபியாயிருக்கும் தான், மற்றொரு தாய்கர்ப்பத்திலிருக்கும் ஸ்தூலசரீரத்தில்போய் ப்ரவேசிப்பதற்காக இந்த ஸ்தூலசரீரத்தை விட்டுவிடுகின்றதென்றும் சொல்லுவார்கள்.

ஸ்லோ || "ஜாதஸ்யஹி த்ருவோம்ருத்யு: த்ருவம்ஜன்மம்ருதஸ்யச
அத்யவாப்தஸாரம்தேவம்ருத்யுர்வைப்ராணிநாம்த்ருவ"

என்னும் ப்ரத்ருஹரிவாக்யரீதியாய் தாய்தந்தையர்கள் மறுபடியும் ஜன்மமெடுத்தபோதிலும் அல்லது மோக்ஷத்தை அடைந்தபோதிலும் புத்ரர்கள் அவர்களைக்குறித்துச் செய்யும் புண்யகார்யபலன்கள் அவர்களுக்குச் சேரமாட்டா. இதற்கு த்ருஷ்டாந்தம் சொல்லுகின்றேரும் கேளுங்கள்:—

ஓர் ப்ராஹ்மண தம்பதிகள் இருவரும் அவர்களின் கர்மானுஸாரமாய் தன் புத்ரனது வீட்டில் வ்ருஷபமாயும், ஸுனகமாயும் (நாயாயும்) பிறந்திருந்தார்கள். அந்த புத்ரன் தனது தந்தையின் ஸ்ராத்தத்திற்காகச் செய்யவேண்டிய கர்மங்களைச் செய்துகொண்டிருக்கும் சமயத்தில் அந்த வ்ருஷபத்திற்கு வைக்கோல்போட மறந்துவிட்டான். ஸ்ராத்தத்திற்காக கொண்டுவந்து வைத்திருந்தபாலில் ஸர்ப்பம் விஷத்தைக் கக்கிற்று. நாய் அந்தப்பாலைக் கீழேகவிழ்த்தது. அதை ப்ராஹ்மணன்கண்டு வயறெரிந்து நாயைத் தடியாலடித்துக் கட்டிவிட்டு அதற்கு ஆஹாரம் வைக்காமல்போனுன். வ்ருஷப, ஸுனகமாயிருக்கும் அவனது தாய்தந்தையர்கள் அர்த்தராத்ரியில் பசியினுல் மெலிந்து வ்யாகுலப்பட்டு பூர்வஜன்மங்களில் வ்ருஷப ஸுனகங்கள் அநேக வ்ரதங்களை அநுஷ்டித்துவந்ததனுல் அந்தவ்ருஷப ஸுனகங்களுக்கு பூர்வஜ்ஞானமுண்டாய் இவன் நமக்காகவைத்த ஸ்ராத்தத்தினுல் நமக்கென்ன த்ருப்தியுண்டாயிற்று, நமக்குத் தீனியைப்போடாமல் கொல்லுகின்றூனேயென்று வ்ருஷபம் துக்கத்துடன் சொல்லிற்று.

சகல பாஷா ஜ்ஞானமுடைய அந்த ப்ராஹ்மணகுமாரன் அந்த வார்த்தைகளைக்கேட்டு மனம்நொந்து அவைகளின் பசியைத் தீர்த்தான். ஆகலால், தாய்தந்தையர்களுக்காகப் புத்ரர்கள் செய்யும் ப்ரார்த்தங்கள் அவர்களுக்குச் சேரமாட்டா. ஸநகன் ஸநந்தன ஸனத்குமாரன் ஸனத்ஸுஜாதன் நாரதர் ஹநுமான் பீஷ்மர் முதலானவர்கள் புத்ரர்களில்லாமலே ஸத்கதி அடைந்தவிஷயம் லோகப்ரஸித்தமாயில்லையா?

ச்லோ || "ஐச்வர்யம் ஸங்கரம்ஸகல ஆரோக்யம்பாஸ்கரம்ததா ।
அயுஷ்யம்ஸ்ருஷ்டிகர்த்தாரம் மோக்ஷமிச்சேஜ்ஜநார்த்தநம்."

என்னும் ஸ்ம்ருதியினால் ஸ்ரீ மஹாவிஷ்ணுவாகிய க்ருஷ்ணமூர்த்தியை புத்ரனாய்ப்பெற்ற தேவகீ வஸுதேவர்கள் க்ருஷ்ணன் மரணமடைந்த வார்த்தையை அர்ஜுனனால் கேள்விப்பட்டு புத்ரதுக்கத்தை அனுபவித்து மரணமடைந்து தமது ஸுக்ருத வசத்தினால் ஸத்கதியை அடைந்தார்கள். இந்தப்புத்ரனால், தேவகீவஸுதேவர்களுக்கு என்னலாபமுண்டாயிற்றென்றும், மேலும் ஸ்ரீராமமூர்த்தியை புத்ரனாய்ப்பெற்ற தசரதன் புத்ரசோகத்தினால் இறந்து தேவதா சக்ரவர்த்தியாகிய தேவேந்த்ரனால் கௌரவிக்கப்பட்டு ஸ்வர்க்கலோகத்திலிருக்கும்போது ராவணனைவதைத்த ஸ்ரீராமமூர்த்தியை ப்ரஹ்மா சிவன் தேவேந்த்ராதி தேவதைகள் தர்சிக்க வந்தபோது அவர்களுடன் கூடவந்த தசரதன் ஸ்ரீராமமூர்த்தியால் நமஸ்கரிக்கப்பட்டதாய் ஸ்ரீராமாயணத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. ப்ரஹ்மருத்ரேந்த்ராதிகளை தர்சனம் செய்தது ஸ்ரீராமமூர்த்தியை புத்ரனாகப் பெற்றதனாலல்லவோ என்றாலோ, "ஜ்யோதிஷ்டோமோ ஸ்வர்க்ககாமோயஜேத்" என்று ச்ருதியிருப்பதனால் இந்த தசரதன் அச்வமேதயாகாதியாகங்களைச்செய்து தபோநிஷ்டர்களாகிய வசிஷ்ட தூர்வாஸாதி மஹாருஷிகளைப் பூஜித்தபடியால் அந்தப்புண்யவிசேஷத்தினால் ஸ்வர்க்கலோகப்ராப்தியும் ப்ரஹ்மாதிதேவதா தர்சனமும் கிடைத்ததேயொழிய ஸ்ரீராமனை புத்ரனாய்ப்பெற்றதனாலல்ல.

புத்ரனால் ஸத்கதி அடைவது நிச்சயமாயிருந்தால் ஸ்ரீராமனைப் புத்ரனாய்ப்பெற்றதனாலல்ல. புத்ரனால் ஸத்கதி அடைவது நிச்சயமாயிருந்தால் ஸ்ரீராமனை புத்ரனாய்ப்பெற்ற தசரதன் புனராவர்த்தியில்லாத பரம ப்ராப்தியை அடையவேண்டியதேயொழிய புனர்ஜன்மத்திற்குக்காரணமாயிருக்கும் ஸ்வர்க்காதிபோகங்களை அடையத்தக்கதல்ல. மேலும் ஹிரண்யகசிபன் ப்ரஹ்லாதனென்ற தன்புத்ரனால் அனேக துக்கங்களை அனுபவித்து பிறகு தன்புத்ரனாலேயே மாண்டான். அன்றியும் த்ருதராஷ்டிரன் துர்யோதனாதிகளாகிய நூறுகுமாரர்களைப்பெற்று அவர்கள் யுத்தத்தில் மாண்டதனால் மிகுந்த துக்காக்ராந்தனாயிருந்து பிறகு தன் புண்யவிசேஷத்தினால் பரமகதி அடைந்தான். இவ்வாறே இன்னும் அநேகர்கள் புத்ரசோகத்தினால் நரகத்தை அடைந்தார்கள். ஆகலால், இந்த புத்ரர்களால் தாய்தந்தையர்களுக்கு துக்கமும் மரணமும் நரகமும் உண்டாகுமென்று ப்ரமாணமுண்டு. ப்ராரப்தத்தில் இல்லாத புத்ரன் எவ்விதமாய் உண்டாகும். இந்த ஜன்மத்தில் புத்ரனுக்காக கஷ்டப்படுவதனால் இது ஸஞ்சிதத்தில் போய்ச்சேர்ந்து அந்தப்பலனை மறுஜன்மத்தில் தவறாமல் பெறுவான். ஆனால், "அபுத்ரஸ்யகதிர்நாஸ்தி" என்னும் ச்ருதி அஸத்யமா என்றாலோ? அந்த ச்ருதிக்கு நிஜமாகிய அர்த்தம் என்னவென்றால், 'பும்' என்னும் கோரநரகத்திலிருக்கும் தாய்தந்தைகளை மேலெழுப்பி ரக்ஷிக்கப்பட்டவன் புத்ரன் என்பது ச்ருதியினுடைய அர்த்தம். ஜ்ஞானகாண்டரீதியாய் நரகமென்றால் துக்கம். ஸ்வர்க்கமென்றால் ஸந்தோஷம். ஒருவன் மஹா துக்கத்தில் அகப்பட்டுக்கொண்டு ஆஹாரநித்ரைகளில்லாமல் ப்ராணனைவிட்டுவிடவேண்டுமென்று எண்ணி தனக்குநிச்சயம் உண்டானபோது தேஹம்முதலாகிய ப்ரபஞ்சமெல்லாம் ஸ்வப்னம்போன்றதென்றும், ப்ரபஞ்சவிலக்ஷணனாகிய பரப்ரஹ்மம் ஒன்றே ஸத்யமானது என்றும், பரப்ரஹ்மமாகிய எனக்குத் துக்கமேது என்றும், இவ்வஜ்ஞானத்தை உண்டாக்கி முன்னி

ருந்த துக்கத்திலிருந்து உத்தரிப்பது விஜ்ஞானமென்றும், இப்படிப்பட்ட விஜ்ஞானம் உண்டாவதே புத்ரன் உண்டாவது என்பதேயாம். அப்படிப்பட்ட ஜ்ஞானம் இல்லாமல்போவதே புத்ரன் இல்லாமல்போவது. ஆதலால், பரமவைராக்ய ஸம்பந்நனாயிருந்து பரமார்த்த ஜ்ஞானத்தை ஶ்ரவண மநந நிதித்யாஸநங்களினால் ப்ரபலிக்கச்செய்து புத்ராதி ஸகல துக்கங்களையும் விட்டு சித்தவிஶ்ராந்தி அடைந்து ஆத்மஸ்வரூபனாய் தன்னில்தான் பரம ப்ரீதியுடையவனாய் ஸர்வதா ஆத்ம நிஷ்டையுடையவனாய் மோக்ஷமடையவேண்டுமென்று வேதாந்தசித்தாந்தம். மோக்ஷப்ராப்தத்திற்கு ஜ்ஞான வைராக்யங்களே முக்யமானது என்பதற்கு ஶ்ருதி ஸ்ம்ருதி ப்ரமாணம் "நகர்மணா நப்ரஜயா தநேந த்யாகேநைகே அம்ருதத்வமாநஶு:" என்று உபநிஷத்தும், "ஜ்ஞாநாதேவது கைவல்யம்" என்று ஶ்ருதியும், "பாகஸ்யவஹ்நிவத் ஜ்ஞாநம்விநாமோக்ஷோ நஸித்யதி" என்று ஆத்மபோதப்ரகரணே, "நஹிஜ்ஞாநேந ஸத்ருஶம் பவித்ரமிஹவித்யதே" என்று கீதையும், "நகர்மணா மநுஷ்டாநைர்ந தாநைஸ்தபஸாபிவா கைவல்யம் லபதேமர்த்ய: கிந்து ஜ்ஞாநேநகேவலம்" என்று ஶிவகீதை ப்ரமாணங்கள் உண்டு.

தனேஷணை:

ஶ்லோ || "யஸ்யாஸ்தி வித்தம் ஸநர: குலீந: ஸபண்டித: ஸஶ்ருதவாந் குணஜ்ஞ: ஸஏவவக்தா ஸசதர்ஶநீய: ஸர்வேகுணா: காஞ்சநமாஶ்ரயந்தி"

என்னும் பர்த்ருஹரிவாக்யரீதியாய் லௌகிக ஶாஸ்த்ர ஜ்ஞாநமுடைய சிலபண்டிதர்களும் பாமரர்களும், தனமே ஸமஸ்த புருஷார்த்தங்களிலும் உத்தமமானதென்றும் தனமுடையவனே நல்ல வம்ஸமும் பாண்டித்யமும் ஸகலவேதஶாஸ்த்ரங்களும் விஷயஜ்ஞானமும் எல்லாநற்குணமும் வாசாலத்வமுடையவனென்றும், சொல்லுவார்கள். தனமில்லாவிடில், மேற்சொல்லிய பாண்டித்யமும் ஸகலவேத ஶாஸ்த்ரங்களும்

விஷய ஜ்ஞானமும் எல்லாநற்குணமும் வாக்ஜாலத்வமும் உண்டாயிருந்தபோதிலும் வ்யர்த்தமானதென்றும் அவன்வார்த்தை உபயோகப்படாதென்றும் சொல்லுவார்கள். இஹபரலோகத்திற்கும் தனமே முக்ய ப்ரதானமானதென்றும் பரமபதமும் தனத்தினாலேயே உண்டாகுமென்றும் தனமுடையவனுக்கு கோரிய வஸ்துக்களெல்லாம் ஸித்திக்குமென்றும் தனமுடையவன் புத்திஹீனனாயிருந்தாலும் அவனை உலகத்தார் கொண்டாடுவார்களென்றும் சொல்லுவார்கள். நற்குணங்களிருந்து தனமில்லாவிட்டால் அவனை உலகத்தார் நிந்தனைசெய்வார்கள். ஆதலால், ஏழைமையைவிடத் தாழ்ந்தது ஜகத்தில் வேறொன்றில்லை. தனமுடையவனுக்கு ஜகத்தெல்லாம் ஹஸ்தத்தில் இருக்குமென்று எண்ணி அந்ததனத்தை ஸம்பாதிப்பதற்காக படாத கஷ்டங்களெல்லாம்பட்டு செல்லக்கூடாத இடங்களெல்லாம் சென்று செய்யக்கூடாத வேலைகளை எல்லாம் செய்கின்றார்கள்.

ஶ்லோ || "அர்த்தாநாமார்ஜநே து:க மார்ஜிதாநாஞ்சரக்ஷணே,
அர்ஜிதாம்சவ்யயேது:கம் திகர்த்தம் து:கபாஜநம்"
"ஆஶாபிஶாசிமவமாநயந்தம் ஆலோகயந்தம்ஜகதிந்த்ரஜாலம்"

என்று மநுவசனத்திலும் மஹாவாக்ய ரத்நாவளியிலும் சொல்லியிருக்கின்றது. ஆதலால், காலத்ரயத்திலும் துக்கஹேதுவாகிய தனத்தின்மீது ஜ்ஞானிகள் ஆசைவையாமல் அதன் வரத்துப்போக்குகளுக்கு துக்கிக்காமல் தாம் அநுபவித்துக்கொண்டும் பிறருக்குக் கொடுத்துக்கொண்டும் நித்ய ஸந்துஷ்டியை அடைந்துகொண்டிருப்பார்கள். பாமரர்கள் த்ரிகரண க்லேஸங்களுக்கு ஸஹித்து தனத்தை ஸம்பாதித்து அதைதாம் அநுபவிக்காமலும் பிறருக்குக்கொடாமலும் பயிர்விழலை காத்துக்கொண்டிருக்கும் பொம்மைபோலிருந்து கடைசியில், அந்ததனம கள்ளர்களுக்கோ துர்வ்யாஜ்யத்திற்கோ அக்நிக்கோ தான்மரணமடைந்தபிறகு தாயாதிகளுக்கோ அல

லது பார்வையின் அபிமானபுருஷனுக்கோ போய்ச்சேர்ந்து விடுகின்றது. திரவியத்தை எவர்களாகிலும் கொள்ளையிடுவார்களென்று எண்ணி புதைத்துவைத்தால் அது, பூமிதேவிக்கு ஸ்வாதீனமாகும். ஆதலால், தனம் தனக்கு துக்கத்தையே உண்டாக்குவதற்குக் காரணமாயிருக்கின்றது. வாயையும் வயிற்றையும் அடைத்து மூட்டைகட்டி வைத்த தனம் வியர்த்தமாய் உலகத்தில்போக்கடித்துக்கொண்டவர்கள் அதிகதுக்கத்தில் மூழ்கி அன்னபானாதிகளில்லாமல் மெலிந்து மாணமடைந்தவர்கள், அனேகம்பேர்களுண்டு. மேலும் தனத்தை விருத்திசெய்யாமல் செலவுசெய்துவந்தால் நாளாவட்டத்தில் குறைந்துவிடுமென்று எண்ணிக் க்ருஹம் பூமி தோட்டம் தரவு முதலானவைகளை அடமானம் வைத்து வட்டிக்குக்கொடுத்திருந்து அதனால் தாயாதிகளின் வழக்குகள் சேர்ந்தாலும் அல்லது திருட்டுச் சொத்தென்று வியாஜ்யம்நேரிட்டாலும் அதனால் துக்கத்தையே உண்டாக்கும். அப்படிக்கல்லாமல் தான் கொடுத்த ரொக்கம் முழுமையும் ஒரேமுறையாக் கவரவேண்டுமென்றால், அது கஷ்டஸாத்யமேயாகும். இதற்கு த்ருஷ்டாந்தம், "புஸ்தகம்வநிதாவித்தம் பரஹஸ்தம்கதம்கத:" என்னும் ப்ரமாணத்துடன் தான் கொடுத்த தொகை சிறுகச் சிறுக வந்துசேருமேயொழிய ஒரேமுறையாய் வருமென்று நினைக்கலாகாது. விசேஷலாபத்திற்கு ஆசைப்பட்டுச் சரக்குகளை வாங்கித் தூரதேசம் செல்வதற்காகக் கப்பல்வியாபாரம் செய்யத்தொடங்கியபோது காற்றுமழைகளால் கப்பலுக்கு அபாயம்நேரிட்டாலும், மாட்டுவண்டிகளில் செல்லும்போது கள்ளர்களால் சரக்குகளை கொள்ளையடித்தபோதிலும் அதனால் தனக்கு வேதனையை உண்டாக்கும். அப்படிக்கல்லாமல் தான் நிச்சயித்ததேசத்திற்கு சரக்குகள்போய்ச்சேர்ந்து சரக்குகளை கடன்கொடுத்து பணம்கொடாவிட்டாலும் விலைகுறைந்தாலும் கறையான்பிடித்துச் சரக்குகள் கெட்டாலும் நீர்பட்டாலும் களவுபட்டாலும் இவைகளால் துக்கவ்யாகுலமே உண்

டாகும். இப்படிப்பட்ட எவ்வித அபாயங்களுமில்லாமல் விலையுடன் விற்பனைசெய்து அந்ததனத்தை 'ஹூண்டி' எழுதி ஹூண்டி வாயிதாபோல் பணம்கொடுக்க தவறிவிட்டால் ஹூண்டி கொடுத்தவனிடம்சென்று தனம்கொடுக்கும்படிகேட்டால் நான் மிகவும் கஷ்டமடைந்தேனென்று வேஷம் போட்டு தனத்தை அபஹரித்தால் அதனால் துக்கமே உண்டாகும். அப்படிக்கல்லாமல் தனம் சுகமாய் வீடுசேர்ந்தால் அதை, பந்துக்கள் சுற்றத்தார் ஸ்னேஹிதர்கள் புத்ரர்கள் பார்யை ஸஹோதரர்கள் முதலானோர் அபஹரிக்கப் பார்ப்பார்கள். இவன் ஏமாறுமல் ஜாக்ரதையுடனிருந்தால், பந்துக்கள் முதலானவர்களின் எண்ணம் ஈடேறமாட்டாது. அதனால் அவர்கள் அவனைக்கொல்ல எண்ணங்கொள்வார்கள். தன் பந்துக்களே இவ்வாறிருந்தால் பிறரை சொல்லவும்வேண்டுமோ. இந்த தனத்திற்கு ப்ராணகாதகி என்றும்பெயருண்டு. பூர்வம் ப்ரிவஜ்ஞா என்னும் ஓர் மஹாபுருஷன் தன் பத்நியுடன் கானகம்சென்று விறகுகளை வெட்டிச் சுமைகட்டி நாட்டில்விற்பனைசெய்து ஜீவிப்பது வழக்கம். இப்படி காலங்கழித்து வரும்நாளில் ஓர்நாள் விறகுகளைவெட்டும்போது அந்த தம்பதிகளுக்கு ஸமீபமாய் புதரில் தனம் காணப்பட்டது. அதை அவர்கள் பார்த்தவுடன் ப்ராணகாதகி என்று பயந்து ஓடும்போது அம்மார்க்கமாய் வந்துகொண்டிருக்கும் ஸஹோதரர்கள் இருவரும் அவர்களைப்பார்த்து நீங்களேன் ஓடுகின்றீர்களென்று கேட்டார்கள். ப்ராணகாதகியைப்பார்த்து ஓடுகின்றோமென்று சொன்னார்கள். அந்த ப்ராணகாதகி எப்படிப்பட்டதோ பார்ப்போம் சற்றே காட்டுமென்று கேட்டார்கள். அவன் இவர்களை அழைத்துக்கொண்டுசென்று தூரமாய்நின்று புதரைக்காட்டினான். அவர்கள் புதரிலிருக்கும் தனத்தைப்பார்த்து இவர்கள் பைத்யம்பிடித்தவர்களென்று எண்ணி அவர்களைப்போகும்படிசொல்லி ஸஹோதரர்கள் இருவரும் மிகவும் ஒற்றுமையாயிருந்து ரொக்கத்தை எல்லாம்

மஹாஸந்தோஷமாய் எடுத்துக்கொண்டு ஸமீபமாயிருக்கும் க்ராமம்சென்று பங்கிட்டுக்கொள்ளலாமென்றுசொல்லி அதை ஓரிடத்தில் மறைத்து மூத்தோன் அவ்விடமே காவலிருந்து ஸஹோதரனை போஜனபதார்த்தங்களைக் கொண்டுவரும்படி க்ராமத்திற்குள் அனுப்பினான். ஸஹோதரன் செல்லும்போது நான் ஒருவனே இந்த தனத்தையெல்லாம் க்ரஹிக்கும் பக்ஷத்தில் அநேககாலம் மிகவும் ஸுகமாய் ஜீவித்திருக்கலாம்; இவனுக்கு ஏன் பங்கிட்டுக்கொடுக்கவேண்டும் என்று எண்ணி தமையனைக்கொன்றுவிட நினைத்து போஜனபதார்த்தங்களை வாங்கி அதில் சிலவற்றைத் தான் புஜித்து மற்றவைகளில் விஷத்தைக் கலந்துகொண்டுவந்தான். தனத்தினிடம் காத்திருந்த தமையன் ஸஹோதரனுக்கு தனத்தைப் பங்கிட்டுக் கொடுக்க இஷ்டமில்லாமல் அவனைவெட்டிவிட நிச்சயித்து தன்னிடமிருந்த கத்தியை நன்றாகத் தீட்டி தயார்செய்து வைத்துக்கொண்டிருந்தான். ஸஹோதரன்வந்து தின்பண்டங்களை கீழேவைக்கக் குனிந்தான். உடனே தமையன் தன் கத்தியால் ஒரேவெட்டாய்வீசி கொன்று ஓரிடத்தில் புதைத்துவிட்டு விஷம்கலந்த பதார்த்தங்களைப் புஜித்துத் தானும் மாண்டான். ஆதலால், ஶ்லோ|| "மாதாபுத்ர விரோதாய ஹிரண்யாய நமோநம:" என்னும் ஶ்ருதிவாக்யரீதியாய் ஆஹா! தனம் அவர்களை எப்படிப்பட்ட கதிக்குக்கொண்டுவந்தது பாருங்கள். கௌரவர்கள் தனத்திற்காகவேயல்லவா பதினெட்டுத் தினங்களுக்குள் சதுரங்க ஸைன்யங்களுடன் மாண்டார்கள். ராவணாதி ராக்ஷஸர்கள் தங்கள் மதத்தினாலல்லவா அன்ய ஸ்த்ரீகளையும் தனத்தையும் அபஹரிக்க எண்ணி மாண்டார்கள். ஶ்லோ|| "யாகஸ்ய ஹிமவத் ஜ்ஞானம் விநா மோக்ஷோ நஸித்யதி" என்னும் ஆசார்யவாக்யத்தினால் ஸத்கதிக்கு ஜ்ஞான காரணமேயொழிய தனம் காரணமன்று.

பூர்வத்தில், ஓர்காகம் மாணிக்கஹாரத்தை வாயில் கவ்விக்கொண்டுவந்து தன் ஸத்ருவாகிய ஸர்ப்பமிருக்கும் புற்று

க்குள் போட்டது. அதைப்பார்த்திருந்த ஒருவன் புற்றைத் தோண்டி ஸர்ப்பத்தைக்கொன்று ஹாரத்தைக் கைக்கொண்டான். ஆஹா! ஹாரம் ஸர்ப்பத்தை என்னகதிக்குக் கொண்டுவந்துவிட்டது! மேலும், ஸத்ராஜித்து என்பவன் ஸூர்யனை குறித்துத் தபம்செய்தபோது அவன் தவத்திற்கு ஸூர்யன் ஸந்தோஷித்து ப்ரதிதினம் எட்டுபாரம் தங்கம் தரத்தக்க ரத்னம் ஒன்று கொடுத்தார். அதை ஸத்ராஜித்து தன் வீட்டில் வைத்து தங்கத்தைச் சேர்த்துவந்தான். ஒருநாள் ஸத்ராஜித்து தம்பி ப்ரஸேனன் என்பவன் அந்த ரத்னத்தைக் கழுத்தில்தரித்துக்கொண்டு காட்டுக்குச்சென்றான். அவனை ஸிம்ஹம்கொன்று அந்தமணியைக்கொண்டுபோயிற்று. அந்தஸிம்ஹத்தை ஜாம்புவந்தன் கொன்று அந்த ரத்னத்தைக் கைக்கொண்டான். பிறகு ஸ்ரீ க்ருஷ்ணமூர்த்தி லோகாபவாதம்பெற அதைக்கொண்டுவந்து ஸத்ராஜித்துவிற்குக் கொடுத்தான். அதனை ஶததன்வன் அறிந்து ஸத்ராஜித்துவைக்கொன்று அந்தமணியை அபஹரித்துக்கொண்டு செல்லும்போது அதை ஸ்ரீக்ருஷ்ணமூர்த்தி தெரிந்துகொண்டு ஶததன்வனைக்கொன்று ஸத்யபாமைக்கு கொடுத்தார். ஆதலால், தனம் ப்ராணஹானியை உண்டாக்குவதற்கு முக்ய காரணமாயிருப்பதேயன்றி மானஹானியையும் உண்டாக்கும். தனமுடையவன் ஸத்குணங்களில்லாமல் ஸ்த்ரீலோலனாயிருந்தாலும் மதுபானம் செய்பவனாயிருந்தாலும் சூதாடுபவனாயிருந்தாலும் மானஹானி உண்டாவதற்கு ஸந்தேஹமில்லை. ஆதலால், இஹலோகஸுகத்திற்கு ஸாதகமானதும் ஸர்வது:கத்திற்கு ஆலயமாயிருப்பதுமாகிய தனத்தின்மீது மிகவும் ப்ரீதிவைக்காமல் இஹபரலோக ஸுகஸாதகமும் ஸகலதுக்கநாசனமும் பரமமோக்ஷஸாதனமும் நிரதிசயானந்தமென்னும் ப்ரஹ்மஜ்ஞானமே மஹாதனமென்று ஸம்பாதித்து துர்ஜனர்களாகிய உள் சத்ருக்களைஜயித்து ஸர்ஜிதமடைந்தவனே புண்யபுருஷனென்பது வேதாந்தஸித்தாந்தமாகும்.

ஆகலால், இந்த ஈஷணாத்ரயங்கள் ஸமுத்ரத்தைப்போன்றன. தாராபுத்ராதிகளைச் சம்பாதித்துத் தனது நிஜஸ்வரூபத்தைமறந்து தான்ஜீவிக்குங்காலம் வெகு அற்பமெனச் சற்றேனும் தெரிந்துகொள்ளாமல், மரணம் அடையும்வரையிலும் இந்த அநித்யமான த்ரவ்யத்தையே அவர்களுக்காகச் சம்பாதித்துக்கொண்டிருப்பார்கள். அந்த்யகாலம் வந்தபோது தனது நிஜஸ்வரூபம் தெரிந்துகொள்ளாததனால் ம்ருத்யுவிற்கு உட்பட்டு, விட்டில்பூச்சிகள் தீபத்தைப்பார்த்துப் பழமென ப்ரமைப்படைந்ததுபோல், மனிதர்கள் நாரீ ஸ்தநபர நாபீதேசம், த்ருஷ்ட்வாமாகா மோஹாவேசம், ஏதன்மாம்ஸவஸாதி விகாரம், மநஸி விசிந்தய வாரம் வாரம்' என்னும் சங்கராசார்யர் வாக்யரீதியாய், அஸ்தி சர்மம் நரம்பு ரோமம் ரக்தம் மாம்ஸம் மஜ்ஜை (கொழுப்பு) மலம் மூத்ர முதலானவைகளினால் நிறைந்திருக்கும் ஸ்த்ரீரூபத்தைப்பார்த்து ப்ரமையடைந்து அவர்கள் ஸம்ரக்ஷணார்த்தமாய் பாபங்களுக்குட்பட்டுப் பயப்படாமல் த்ரவ்யத்தைச் சம்பாதித்துக்கொண்டு சிலகாலத்துள் ம்ருத்யுவினால் சரீரத்தைவிட்டு அநேகவித யமபாதைகளையடைந்து மறுபடியும் ஜனனமெடுக்கின்றார்கள். ஆதலால், இப்படி இறந்த ஸ்த்ரீபுருஷர்கள் மறுபடியும் எவ்விதமாய் மாறிமாறி வருகின்றார்களென்றால்,

ஶ்ரு ॥ யஸ் ஸ்தந: பூர்வபீதஸ்தம் நிஷ்பீட்யமுத மஶ்நுதே
யஸ்மாஜ்ஜாதோ பகாத்பூர்வம் தஸ்மிந்நேவ பகே ரமந்."

என்னும் யோகதத்வோபநிஷத்வாக்யரீதியாய், பூர்வ எந்தஸ்தனங்களில் பாலைக்குடித்தானோ, அந்தஸ்தனங்களையே பார்த்து மோஹித்து சந்தோஷிக்கின்றான். எந்தயோனியில் முன்பிறந்தானோ அந்த யோனியைப்பார்த்து இப்போது ரமிக்கின்றான். அன்றியும்,

ஶ்ரு ॥ "யாமாதா ஸா புநர்பார்யா யா பார்யா மாத்ருகைவஹி
யா பிதா ஸ புந: புத்ரோ ய: புத்ர: ஸ புந: பிதா."

எவள் முதல் தாயாயிருந்தாளோ அவளேமறுபடியும் பார்யாளாய் வருகின்றாள். எவள் பார்யாளாயிருந்தாளோ அவளே மறுபடியும் தாயாய் வருகின்றாள். எவன் முதல் தந்தையாயிருந்தானோ அவனேமறுபடியும் புத்ரனாய்வருகின்றான். எவன் புத்ரனாயிருந்தானோ அவனேமறுபடியும் தந்தையாய் வருகின்றான்.

ஶ்ரு ॥ "ஏவம் ஸம்ஸாரசக்ரேண கூபசக்ரே கடாயிவ
ப்ரமந்தோ யோநிஜந்மாநி ஶ்ருத்வா லோகாந் ஸமஶ்நுதே."

இப்படிப்பட்ட ஸம்ஸாரசக்ரமானது, கிணற்றிலிருந்து ஜலம்கொண்டுவரும் ராட்டணம் (சக்ரம்) சுழல்வதுபோல் சுழன்றுகொண்டு, அநேகயோனிகளில் பிறந்துகொண்டிருப்பார்கள். ஆதலால், ப்ராண ப்ரயாணகாலத்தில் யார்யார் எவ்வெந்த ரூபத்தை நினைக்கின்றார்களோ ஜீவன், அந்தந்த ரூபத்தை அடைகின்றது. ஜீவன் காற்றுருவமாயிருப்பதனால் ("யத்பாவம் தத்பவதி") அது, எதையெதை இச்சிக்கின்றதோ அதை யடையும்படி ஸாக்ஷிஸ்வரூபமாயிருக்கும் ஆத்மா செய்விக்கும். இதன்விவரங்களையெல்லாம் முன்சொல்வோம்.

மருளூர் தெருளும்வந்து கதியென் பதைமறந்து
மதனன் சலதிபொங்க விரணமதான
அளிபுண் டனைவளைந்து விரல்கொண் டுறவளைந்து
சாதஞ் சுகமிதென்று பரவசமாகி
மருவுந் தொழிலின்மிகுந்து தினமுந் தினமும்மிஞ்சி
வளரும் பிறைகுறைந்த படிமதிசோர
வானரமதென்னமேனி திரையாய்.

அடிக்கடி மயக்கமும் தெளிவுமுண்டாகி நற்கதியென்பதை மறந்து காமக்கடல் பொங்கி ரணமாகிய அளிந்தபுண்ணைச் சூழ்ந்து விரலினால் மிகவும் பரிசித்து புணர்ச்சியாகிய இது இன்பமென்று பரவசப்பட்டுப் புணருந்தொழில் அதிகப்பட்டு நாள்தோறும் மிஞ்சி வ்ருத்தி அடைகின்ற சந்த்ரன் கலை குறைந்தாற்போல அறிவு சோர்வடைய சரீரம் குரங்கின் சரீரம் எனத்திரைந்து,

"வயதும் படவெழுந்து பிணியுந் திமிதிமென்று
வாயுஞ் செயலழிந்து விருமலுமாகி
அனமுஞ் செறுதலின்றி விழியுஞ் சுடர்களின்று
முகமுங் களைகளின்று சரியெனவாடி
மனையின் புறமிருந்த வினைமுங் குலைகுலைந்து
கலகஞ் செயவிருண்ட யமன்வரும் வேளை
எதுதுணை பழிகாரமனமே."

வயதும் முதிர்ந்தவர் அடங்கிக்கிடந்த வியாதிகளும் மேலெழுந்து திமிதிமியென்று உற்சாகத்தோடு வந்து செய்கையற்று உள்ளே இருமலும் உண்டாகி அன்னமிறங்குதலும் இல்லாமல் கண்களும் பஞ்சடைந்து (ஒளியில்லாமல்) முகத்தில் அழகு குறைந்திருக்கும் சமயத்தில் முடிவுகாலமென்று ஆலோசித்து, மனைவியும் ஸ்நேகமுண்டானபோது அநுபவிக்க இருந்த சுற்றமும் கட்டிக்குலைந்து பேரொலிசெய்யக் கருநிறத்தையுடைய கூற்றுவன் (யமன்) நம்மை நாடிவருங்காலத்தில் நமக்குத் துணையாயிருக்கின்று காக்கக்கூடியது யாது! எனக்குப் பழியையுண்டாக்குகிற நெஞ்சமே!

"இருப்பது பொய்! போவது மெய்!
யாதிருந்து மென்னும்?
எவரிருந்து மென்செய்வார்?
எமனவருக்காத் தேடும்
பொருள்கொடுத்துப் பிழைப்பாரோ?
தமையாளும் புலையோ?
பொய்யுரைத்தாற் சென்றிடுமோ
பிற்சனத்தே வருவேன்
உருக்கம்மையு மையாவென்
றழுதவிடு வாரோ?
வெட்டிவைத்த நிமிடம்பி
ஜெருக்கொள்ளபோ வாரோ?
செருக்கெதுவோ நிலையில்லாப்
பொருட்கழுவாய் மனமே
இச்சை யறிந்து கெட்டாய்
செப்புவரியா ருனக்கே!"

ஆதலால், முற்கூறிய காமக்ரோதாதிகளையும், ஈஷணாத்ரயங்களையும் பஸ்மம்செய்து பார்க்குமளவில் அவ்விடம் சேஷமாய் ஒன்றுமில்லாத ஜ்ஞானஸ்வரூபமாகிய ஆகாசவடிவமே நிற்கும். அந்த ஆகாசவடிவந்தான் நீ; அதுதான் நான்; அது தான் ப்ரஹ்மம்; அதுதான் சிதம்பர ரஹஸ்யம்; அது தான் ஆத்மா. அந்த ஆத்மாவில் மனதை லயப்படுத்துவதே மோக்ஷம். இப்படிப்பட்ட மோக்ஷவீட்டை அடையவொட்டாமற் செய்வது காமஸ்வரூபம்.

காமஸ்வரூபம்.

காமோகாமமஹார் ஜகத்ப்ரிய இதாஸ்தித்வாத் தாக்ஷே ஸ்வயம்
ஸ்த்ரீபும்ஸாவித்ரோ தாங்க கருணை ரஹஸ்யையாயாசார் ஸ்புடம்
அந்யோந்யம் பரிமோஹயனே ஜகமஸா ப்ரேமாது பந்தேந்தென
பந்வாயாமயதி ப்ரபஞ்சகநாம் ஸம்வர்துயக் ப்ரஹ்மஹா!

ப்ரபஞ்சத்தை ப்ரமிக்கச் செய்கின்ற மன்மதன், ஜீவகோடிகளின் சித்தத்திலிருந்து ஸ்த்ரீ புருஷர்களை பரஸ்பராங்க குணங்களாகிய ஸ்ருங்கார சேஷ்டைகளினால் சிற்றின்பத்தைப் பெருக்கி மயக்கி, ஒருவருக்கொருவர்மேல் மோஹத்தை யுண்டாக்கி ப்ரேம பந்தத்தினால் ப்ரபஞ்சத்தை ஸாஸ்வதமாய் வ்ருத்தியடையச்செய்து, ப்ரஹ்ம ஜ்ஞானத்தை நசிக்கச் செய்து, ஸ்த்ரீ புருஷர்களை ப்ரமிக்கச் செய்கின்றான். அதனால் ஸமஸ்தமாகிய ப்ராணி கோஷ்டிகளுக்கும் காமாதிசயத்தினால் போக்ய வஸ்துக்களில் வாஞ்சை யுண்டாகின்றது. ஸ்த்ரீ புருஷர்களின் அந்தரங்கத்திலிருக்கும் மன்மதன் ஆசையென்னுங் கயிற்றாற்கட்டி ஆட்டுகிறான். அதனால், ஸகல ப்ராணிகளுக்கும் காமம் அதிகரித்திருக்கின்றது. எப்படியெனில்:—தேஹம் கிழத்தனமடைந்தபோதிலும் காமம் யௌவனமாகவே இருக்கும். காமத்தை ஜயிப்பதற்கு உபாயம் என்னவென்றால், ஸங்கல்பத்தை நிவர்த்திசெய்வதே காமஜயத்திற்கு ஸாலபோ

பாயம். காமம் உதிக்காமலிருப்பதற்கு ஹேதுவென்னவெனில், போக்யவஸ்துக்களை விட்டு அது நன்றாயிருக்கிறதென்னும் எண்ணத்தைவிட்டால் அதில் கோரிக்கை உண்டாகமாட்டாது. காமம் ஸங்கல்பத்தினால் உண்டாகிறது. ஸங்கல்பம் காமத்திற்கு பீஜம். காமஜயத்திற்கு நன்றாயிருக்கிறதென்னும் எண்ணத்தை விடுவதே முக்யோபாயம். எந்தமனிதனும் நன்றாயிருக்கிறதென்னும் எண்ணத்தினாலேயே வஸ்துபதார்த்தங்களையும் இச்சிக்கின்றானேயன்றி நன்றாயிருக்கிறது என்னும் எண்ணம் இல்லாவிடில், எதையும் இச்சிக்கமாட்டான். கோரிக்கைகளை ஜயிக்க எண்ணமுண்டயவன் காணப்படும் வஸ்துக்கள் நன்றாயிருக்கிறதென்னும் எண்ணத்தை நாசம்செய்யவேண்டும். விஷயங்களில் ஸுகம் உண்டென்கிற எண்ணமே விடல்வேண்டும். ரத்நத்தைப்பார்த்து இது கல்லென்றறிந்தால் அதில் கொஞ்சமேனும் ஆசையுண்டாகமாட்டாது. அது நன்றாயிருக்கின்றது என்ற எண்ணமுண்டானால் ஆசை நிவர்த்தியாகமாட்டாது. வஸ்துவினுடைய ரூபத்தை அறிவதும், வஸ்துவில் அர்த்தமுண்டென்ன ஹநிப்பதுமே ஸங்கல்பத்தையும் காமத்தையும் ஜயிக்கும் மார்க்கம். இதனை விரிவாய்த் தெரிந்துகொள்ளவேண்டுமானால், ஸ்ரீ க்ருஷ்ணார்ஜுன ஸம்வாதரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை அ - 3, ஸ்லோகம் - 40 பார்க்க.

இந்த ஆசாபாசங்கள் நம்மைவிட்டு ஏன் நீங்குகிறதில்லையென்றால், ஆதியில் நம்மை ப்ரம்மதேவர் ஸ்ருஷ்டிசெய்த நாள்முதல் இந்நாள்வரையில் நாம், அநேககோடி ஜன்மங்கள் எடுத்து பாரம்பர்யமாய் மாறிமாறி வந்துகொண்டேயிருக்கின்றோம். இப்போது இருக்கின்ற பார்யாள் புத்ரபௌத்ராதிகள், தநதாந்யாதி க்ருஹம் பூமி முதலானவைகளைப்போல ஜன்மாந்தரங்கள்தோறும் அனேகவிதமான கர்மானுஸாரமாய் ப்ரதிஜன்மங்களிலும் வந்துகொண்டேயிருக்கின்றன. மேற்கூறியவைகளின்மீதுண்டான ஆசாபாசங்கள் இப்போது மத்தியிலேயுண்-

டானவைகளல்ல. இவை அநாதியானவை. இந்தப் பெண்டுபிள்ளைகளைப்போலவே ஆதியிலிருந்து அநேக பெண்டுபிள்ளைகள் வந்துகொண்டிருந்தார்கள். அந்தந்த ஜன்மங்களில் வந்துகொண்டிருந்த பெண்டுபிள்ளைகளை எல்லாம்விட்டு மரணமடைந்துகொண்டே வரவர முன்ஜன்மாந்தரங்களில் அவரவர்களின்மீதுள்ள ஆசாபாசங்களெல்லாம் ஸூக்ஷ்மசரீரத்துடன் கூடவேசேர்ந்து தாயின் கர்ப்பத்தில், ப்ரவேசித்து சிசுவாய்ப் பிறந்தபோது அந்தச்சிசுவுடன்கூடவே வந்த ஆசாபாசங்களெல்லாம் பால்யதசைவரையில் அடங்கியிருந்து கர்ப்பத்தில் பால்யதசைசென்று சிறுவனுக்கு யௌவனம் வரும்போது முற்கூறிய ஆசாபாசங்களுக்கும் சிறுவனைப்போல யௌவனமுண்டாய் மறுபடியும் இஜ்ஜன்மத்திலுள்ள பெண்டுபிள்ளை முதலானவைகளின்மீது ஆசையை உண்டாக்குவதற்குக் காரணமாயிருக்கின்றன. இதற்கு த்ருஷ்டாந்தம் சொல்லுகின்றோம் கேளுங்கள்:—யாதொன்றும் தெரியாமல் பரப்ரஹ்ம ஸ்வரூபமாயிருக்கும் ஒருவயதையுடைய குழந்தையின் கையில் ஓர் காலணா கொடுத்தமாத்திரத்தில் அதை ஏந்தி வாங்கிக்கொள்ளும். அதை மறுபடியும் யார் கேட்டபோதிலும் கொடுக்க மனம் வாராமல் கையில் கெட்டியாய் இறுக்கிப் பிடித்துக்கொள்ளும் விஷயம் ஒவ்வொருவரும் அறிந்தவிஷயமன்றோ? இதற்குக் காரணம் யாதெனில், சிசுவாயிருக்கும் தான் முன் ஜன்மாந்தரங்களில் பணத்தையே கையாண்டு வந்துகொண்டிருந்ததால் அந்தச் சிசுவுடன் கூடவே பணப்பிசாசும் ஸூக்ஷ்மசரீரத்துடன் தொடர்ந்துகொண்டு வருகின்றது. இவைகளுடன்கூட ஆத்மாவும், ப்ரதிசரீரங்களிலும் தொடர்ந்துகொண்டேவந்து இவைகள் செய்யப்பட்ட கார்யங்களுக்கெல்லாம் ஸாக்ஷியாயிருந்து அந்தந்த ஜீவர்களுக்குத்தக்கபடி ஸுகதுக்கங்களைக் கொடுத்துக்கொண்டு வருகின்றது. இந்த ஆத்மா, ப்ரபஞ்ச ஸ்ருஷ்டிகாலத்தில் பரப்ரஹ்மத்திலிருந்து அணுஸ்வரூபமாய்ப்புறப்பட்டு எல்லா ஜீவராசிகளிலும் வ்யா

பித்திருக்கின்றது. இந்த, விவரத்தை அன்னதானபலன் என்னும் நூலில் விரிவாய்க் காணலாம்.

மற்றொரு திருஷ்டாந்தம் சொல்லுகின்றோம் கேளுங்கள்:—ஒருவனுக்கு இரண்டு குமாரர்கள் இருந்தார்கள். அவர்களிருவரும் பள்ளிக்குச்சென்று வாசிப்பதுண்டு. அவர்களில் மூத்தகுமாரன் மாலை 6-மணிமுதல் இரவு 11-மணிவரையில் வாசித்துப் பிறகு சயனிப்பான்; மறுபடியும் 2-மணிக்கெழுந்து காலை 8-மணிவரையில் வாசித்து திறத்தி நித்யகடனை முடித்துக்கொண்டு பள்ளிக்குச் செல்வது வழக்கம். இவ்வாறு கஷ்டப்பட்டு வாசித்தும் வகுப்பில் ஸூக்ஷ்மபுத்தி யில்லாமல் மந்தபுத்தி யுடையவனாகவே யிருப்பான். இவன் ஸஹோதரன் எப்படிப்பட்டவனென்றால், காலை மாலைகளில் எப்பொழுதும் ஆட்டங்களையே ஆடிக்கொண்டிருந்து இரவு 7-மணிக்கு உட்கார்ந்து தன் பாடபுஸ்தகங்களின் ஏட்டை ஒருமுறை திருப்பிப்பார்த்து வைத்துவிட்டு, 8-மணிக்கெல்லாம் போஜனத்திற்கு எழுந்திருப்பது வழக்கம். இவர்களிருவரும் இவ்விதமாய் வாசித்துப் பரீக்ஷைக்குச் சென்றபோது மூத்தவன் இராப்பகலாய்க் கஷ்டப்பட்டு வாசித்தும் மந்தபுத்தியுடையவனாதலால், பரீக்ஷைக் கடிதத்தைக் கையில்வாங்கி அதற்குப் பதிலெழுத யாதொன்றும் தோன்றாதவனாய் எதையோ; ஒன்றை எழுதிக்கொடுத்து வந்துவிட்டான். அதனால் பரீக்ஷையில் தப்பினவனாகின்றான். இதற்குக் காரணம் யாதெனில், இவன் முன் ஜன்மங்களில் வாசிப்புடையவனல்லன்; வாசிப்பதற்கு இந்தஜன்மத்தில்தான் ப்ரயத்னப்பட்டிருக்கின்றான். இது, படிப்படியாய் ஜன்மாந்தரங்கள்தோறும் உயர்ந்து கொண்டேபோகும். இளையவனோ பரீக்ஷையில் உட்கார்ந்து, பரீக்ஷைக்கடிதத்தைக் கையில்வாங்கி முதலிருந்து கடைசிவரையில் ஒருமுறை வாசித்துப்பார்த்து இவைகளுக்கெல்லாம் பதில் எழுதவேனென்று ஸந்தோஷமுடையவனாய் ஒருகேள்வியும் தவறாமல் எல்லாவற்றையும் எழுதிப் பூர்த்திசெய்து

பரீக்ஷைக் கடிதத்தில் குறித்திருக்கும் மணிக்கு அரைமணி முந்தியே தான் எழுதிய கடிதத்தை உபாத்யாயர்களிடம் கொடுத்துவிட்டு வருவான். பரீக்ஷை முடிந்து எல்லாப்பிள்ளைகளின் கடிதங்களைப் பார்க்கும்போது இச் சிறுவன் எல்லாப் பிள்ளைகளைவிட அதிகமாய் மார்க்குவாங்கி அவர்களுக்கெல்லாம் தலைவனாய் ஏற்பட்டான். அதிக வாசிப்பில்லாமலே இவ்விதமாய் உண்டாவதற்குக் காரணம் யாதெனில்:—

"ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து" என்பதுபோல்

இவன் முன்ஜன்மங்களில் B. A., B. L. முதலாகிய பாஸ் செய்துகொண்டே வந்தவன். முன்னிருந்த சரீரங்கள்மாத்ரம் மாறிமாறி வருகின்றனவேயன்றி ஸூக்ஷ்ம சரீரம்மாத்ரம் மாறுபடாமல் முன்னிருந்த குணங்களுடன் கூடவே வந்து கொண்டிருக்கும். இவ்விதமாய்த் தொடர்ந்துவருவதே பூர்வவாஸனை என்று சொல்லப்படும். அதுபோலவே, மோக்ஷமடைய நான்குபடிகள் உண்டல்லவா? அவைகளில், இரண்டாம்படியை அப்யாஸம் செய்துகொண்டிருப்பவன், தன் அப்யாஸத்தைப் பூர்த்திசெய்து மரணமடைந்தால் மறுஜன்மத்தில் மூன்றாம்படி ப்ராரம்பிப்பான். அல்லது, அப்யாஸத்திலிருக்கும்போது மரணமடைந்தால் மறுஜன்மத்தில் தான், முன்ஜன்மத்தில் எங்கு விட்டானோ அவ்விடத்திலிருந்து ப்ராரம்பித்து அந்த ஜன்மத்தில் பூர்த்திசெய்து, மறுஜன்மத்தில் மூன்றாம்படி ஆரம்பிப்பான். இதுதான், விட்டகுறை தொட்டகுறை என்று சொல்லப்படும். இதற்கு திருஷ்டாந்தம் என்னவென்றால், ஓர் அங்குலம் நீளமுள்ள பச்சைநிறமுடைய புழுவானது இலைகளை மேய்ந்துகொண்டிருப்பதை ஒவ்வொருவரும் பார்த்திருக்கலாம். அது, நடக்கும்போது முகத்தினிடம் இருக்கும் பாதத்தை ஊன்றி உடலை மேல்தூக்கிப் பின்னிருந்த பாதத்தைக்கொண்டுவந்து சிரசினிடம் இருக்கும் பாதத்தினிடம் வைத்து ஊன்றியபின் முன்பாதத்தை எடுத்து அதற்குமுன்

வைத்து இவ்விதமாய் ஒன்றைத்தொட்டு மற்றொன்றை விடுகின்றது. அதுபோல், நாம் இந்த ஜன்மத்தில் எவ்வளவு பக்தி செய்து விட்டுவிடுகின்றோமோ மறுஜன்மத்தில் அவ்வளவிலிருந்து மேல்படி செல்வோமென்று அறியவேண்டும். பக்தி செய்யும்முறை இதனடியில் சொல்லுகின்றோம் கேளுங்கள்:—

ஸாதாரணமாய் உலகத்திலுள்ள மனிதர்கள் எவ்விதமாய் பக்தி செய்துகொண்டு வருகின்றார்களென்றால்; விக்நேஸ்வரர் மீதோ, அல்லது மற்ற எந்தத் தேவதையின்மீதோ, ஜலங்கொட்டி அபிஷேகம் செய்தாலும் ஸரி அல்லது ராமன் க்ருஷ்ணன் ஈஸ்வரன் லக்ஷ்மீ பார்வதி ஸரஸ்வதி முதலாகிய படங்களை ஆராதித்தாலும் ஸரி அச்சமயத்தில் அவர்களின் மனோநாட்டம் பூஜையின்மேலிராமல், உத்யோக விஷயத்திலோ, வ்யாபாரவிஷயத்திலோ, ஸம்ஸாரவிஷயத்திலோ, பொருள் விஷயத்திலோ, கோர்ட்டுவிஷயத்திலோ அல்லது ஆபீஸுக்குப் போகவேண்டுமே என்று சீக்ரம்சீக்ரமாய் மணியை ஆட்டி இவ்விதமாய் எதிலேயோ ஒன்றிலெண்ணத்தை நாட்டிவிட்டு பூஜை செய்கின்றார்கள். இவ்விதமாய் ஸ்ரத்தையில்லாமல் கோடி ஜன்மமெடுத்து பூஜைசெய்தவர்களாலும் மேல்படியில் ஏறாமல் இந்த முதற்படியில்தான் இருப்பார்களென்று அறியவேண்டும். ஸ்ரத்தையுடன் பக்திசெய்து முக்தியடையும் மார்க்கத்தைச் சொல்லுகின்றோம் கேளுங்கள், ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம் - 9, ஸ்லோகம் 26-ல் ஸ்ரீ க்ருஷ்ணபரமாத்மா என்ன சொல்லுகின்றாரென்றால்:—

"பத்ரம் புஷ்பம் பலம் தோயம் யோ மே பக்த்யா ப்ரயச்சதி
ததஹம் பக்த்யுபஹ்ருத மச்நாமி ப்ரயதாத்மந:"

எவன், எனக்காக ஸ்ரத்தை பக்தியுடன் வில்வம் துளசி முதலாகிய பத்ரங்களாலும், புஷ்பங்களாலும், பழங்களாலும், உதக(ஜல)மாலும் அந்தக்கரண மனதுடன் ஸமர்ப்பிக்கின்றானோ அவனுடைய பத்ர புஷ்ப பழங்களை நான் ஸ்வீகரிக்கின்றேன் என்று பகவான் சொல்லியிருக்கின்றார்.

ஆதலால், ஸ்த்ரீபுருஷர்களெல்லோரும் தேவதாபூஜை எவ்விதமாகச் செய்யவேண்டுமோ அதனை இதனடியில் விவரித்துச் சொல்லுகின்றோம் கேளுங்கள்:—

நாயனே! நமது க்ருஹத்திற்கு, நாரதர் வஸிஷ்டர் விஸ்வாமித்ரர் முதலாகிய மஹாத்மாக்கள் வந்துவிட்டால் எவ்விதமாய், அதிக ஸ்ரத்தை பக்தி விஸ்வாஸங்களுடன் அவர்களைப் பூஜிப்போமோ, அதுபோலவே ஈஸ்வர பூஜைசெய்யும் ஒவ்வொரு ஸ்த்ரீபுருஷர்களும் மனதை வெளியில் ஓடவிடாமல் சித்தசுத்தி மிகவும் பக்தி ஸ்ரத்தை விஸ்வாஸங்களுடன் நிதானமாய்ப் பூஜைசெய்து வரவேண்டும். இவ்விதமாகப் பூஜை செய்து முடிந்தபிறகு, ஸ்த்ரீகள் ஸ்நானம்செய்து பயபக்தியுடன் ஸுசி ஆசாரத்துடனிருந்து சாதம் வடிக்கும்முன் கொஞ்சம் அன்னத்தைக் கரண்டியில் எடுத்து அதில் நெய்விட்டுக் கலந்து அக்நியில்போட்டு நமஸ்கரித்து அதன்பிறகு சாதத்தை வடித்து நிமிர்த்தி அந்தப் பாண்டத்தின்மீது ஜலம் ப்ரோக்ஷித்து துணியினால் துடைத்து மூன்றுபக்கங்களிலும் விபூதி இட்டு நமஸ்கரித்து அதன்மீது தட்டைமூடி ஓர்புறமாய்வைக்க வேண்டும். பதார்த்தங்களையும் அதுபோலவே சமைத்து முடித்தபின் ஓர் தட்டில் இலைபோட்டு பதார்த்தங்களுடன் அன்னமும் பரிமாறி இடதுகையில் தட்டையெடுத்துப் பகவானுக்குக் காட்டி ப்ரஸாதம் கண்டருள்வாய் ப்ரஸாதம் கண்டருள்வாய் ப்ரஸாதம் கண்டருள்வாய் என்று மூன்றுமுறைகள் வலதுகையால் அதை க்ரஹிக்கும்படி காட்டவேண்டும். இவ்விதமாய்க் காட்டியபிறகு, மூன்று வட்டில்களில் ப்ரத்யேகமாய் ஜலம் வைத்து ஒவ்வொரு வட்டிலுள்ள ஜலத்தை உத்தரணியால் எடுத்து, தீர்த்தம் கண்டருள்வாய் தீர்த்தம் கண்டருள்வாய் தீர்த்தம் கண்டருள்வாய் என்று சொல்லி மூன்றுமுறைகள் காட்டி அந்தத் தீர்த்தத்தை வேறுவட்டிலில் விடவேண்டும்.

இவ்விதமாய் விட்டு பகவானுக்கு ஆராதனை செய்தபிறகு, சிறுகுழந்தைகளும் பெரியோர்களும் புஜிக்கவேண்டுமே

யொழிய அதற்குமுன் புஜிக்கலாகாது. ஏனென்றால், பதார்த்தங்களை அறுத்துச்சமைக்கின்றோம், ஒவ்வொருபதார்த்தத்திலும் ஜீவனுண்டு. அதையறுத்துச் சமைப்பதனால் தோஷம் உண்டாகின்றது; அவைகளை பகவானுக்கு ஆராதனை செய்து வந்தால் அந்ததோஷம் நிவாரணையாகும். இது, ப்ராஹ்மணர்கள்தவிர மற்ற எந்த வர்ணஸ்தர்களும் செய்வதில்லை. ஆதலால், இதைவாசிக்கும் ப்ராஹ்மக்ஷத்ரிய வைஸ்ய ஸூத்ரர்களாகிய நான்கு வர்ணஸ்தர்களும் இனிமேலாகிலும் இதில் சொல்லியதுபோல் ஈஸ்வர பூஜைசெய்து முடிந்தவுடன் போஜனம் செய்வீர்களாகில் மறுஜன்மத்தில் நீங்கள் உன்னதபலன் அடைவீர்களென்றால் அதுவிஷயம் ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம் - 6, ஸ்லோகம் 44-ல்,

> பூர்வாப்யாஸேந தேநைவ ஹ்ரியதேஹ்ய வஸோபிஸ:
> ஜிக்ஞாஸுரபி யோகஸ்ய ஸப்தப்ரஹ்மாதிவர்த்ததே.

அந்தாந்தகரணமனதுடன் பக்திசெய்து மரணமடைந்தவன் மறுஜன்மத்தில் தானும் ப்ரயத்னப் படாவிட்டாலும் தானே அவனை பலாத்காரமாய் த்யானாப்யாஸத்திற்கு (மனனை நிறுத்துவதற்கு) மேல்படிக்குக் கொண்டுபோகின்றேன். ஏனென்றால், பூர்வஜன்மங்களில் அவனுடன் கூடவேயிருந்து அவன்மனதிற்குச் சாக்ஷிகொடுத்துக்கொண்டிருப்பதும் விசேஷபக்தியை உண்டாக்கினவன் நானே. இந்த ஜன்மத்திலும் நான் அவனுடன்கூடவே இருப்பதனால் அவன் முன்ஜன்மத்தில் ஈஸ்வர பக்தி கால்செய்திருந்தால் அரையும், அரைசெய்திருந்தால் முக்காலும், முக்கால்செய்திருந்தால் பூர்த்தியும்செய்வது என்னுடைய கடமையேயன்றி அவனுடைய கடமையன்று என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆதலால், இதைவாசிக்கும் அன்பர்கள் யாவரும் ஈஸ்வரபக்திசெய்யும்போது மனதை வெளியில் ஓடவிடாமல் நிறுத்தி பக்திசெய்துகொண்டு வரவேண்டும். இந்த பக்திசெய்யும்மார்க்கம், "ஸ்ரீ கபீர்தாஸ்" சரித்திரத்தில் விசேஷமாய் எழுதப்பட்டிருக்கின்றது. ஆதலால், ஒவ்வொரு

113

புருஷரும் அதை வாசிப்பாராகில், ஆத்மாவுடன் சேர்ந்திருக்கும் மாயையென்னும் அழுக்கு நீங்கும். அழுக்கு நீங்குவதனால் ஆத்மா பரிசுத்தமாய் விடுகின்றான். ஆத்மா பரிசுத்தமான பிறகு அது, தன்ஸ்வரூபத்தில் போய்ச்சேரும். அதாவது ஜீவாத்மா, பரமாத்ம ஸ்வரூபத்தை அடையும்.

ஸ்ருஷ்டிக்குமுன் இந்த ப்ரபஞ்சம் எவ்விதமாயிருந்தது?

ஸ்ரு || "ஸ்ருஷ்டேபுரா நாமரூப விவர்ஜிதம் ஜகத்"
"ஸதேவஸௌம்ய இதமக்ர ஆஸீத்" [சாந்தோக்யோபநிஷத்.]

ஸ்ருஷ்டிக்குமுன் இந்த ப்ரபஞ்சம் நாமரூப மில்லாமல் கேவல நிர்விசேஷ சின்மாத்ர பரப்ரஹ்மமா யிருந்தது. அதிலிருந்து,

ஸ்ரு || "தஸ்மின் மரு ஸுக்திகா ஸ்தாணு ஸ்படிகாதென ஜல ரௌப்ய புருஷ ரேகாதிவத் லோஹித ஸுக்ல க்ருஷ்ணமயீ குணஸாம்யா நிர்வாச்யா மூலப்ரக்ருதி ராஸீத்." [பைங்கலோபநிஷத்.]

கானல்நீர், ஸுக்திரஜிதம், ஸ்தாணுபுருஷன், ரஜ்ஜுவில் காணுகிறவர்ணங்கள் இல்லாவிடினும், ப்ரமையினால் இருப்பதாய் காணப்படுவதுபோல், ஸுத்தநிர்க்குண நிராகார நிர்விகார பரப்ரஹ்மத்தில் மூல ப்ரக்ருதியென்னும் இல்லாத மாயையொன்று உண்டாயிற்று. அந்த மூலப்ரக்ருதி, வெண்மை, சிவப்பு, கறுப்பு என்னும் மூன்று வர்ணங்களுடன் கூட மூன்று ஸக்திகளாயிற்று. வெண்மைவர்ணமே மாயாஸக்தி, சிவப்புவர்ணமே அவித்யாஸக்தி, கறுப்புவர்ணமே ஆவரண விக்ஷேபஸக்தி எனப்படும். இதில்,

ஸ்ரு || "ஸத்வோத்ரிக்தா வ்யக்தாவரண ஸக்திராஸீத் தத்ப்ரதிபிம்பம் யத் ததீஸ்வர சைதன்யமாஸீத் ஸஸ்வாதீந மாய ஸர்வஜ்ஞ: ஸ்ருஷ்டி ஸ்திதி லயானா மாதிகர்த்தா ஜகதங்குர ரூபோ பவதி."
[பைங்கலோபநிஷத்.]

மாயாஶக்தி ஸத்வகுண ப்ரதானமாயிருக்கும். அதில் பரப்ரஹ்மம் ப்ரதிபலித்ததனால் உண்டாகிய ப்ரதிபிம்பமே ஈஶ்வரன் என்று சொல்லப்படும். அவர், அந்த மாயையை ஸ்வாதீனம் செய்துகொண்டு ப்ரஹ்ம விஷ்ணு மஹேஶ்வர ரூபமாய் ப்ரபஞ்ச ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களைச் செய்து கொண்டிருப்பார்; ஆதலால்,

ஶ்ரு || "ப்ரஹ்மணோ ஹ்யவ்யக்தம் அவ்யக்தான் மஹத் மஹதோ ஹங்கார ஹங்காராத் பஞ்சதன்மாத்ராணி பஞ்சதன்மாத்ரேப்யோ பஞ்சமஹாபூதானி பஞ்சமஹா பூதேப்யோ கிலம் ஜகத்."

[த்ரிபாத்விபூதி ப்ரஹ்மனோபநிஷத்.]

ப்ரஹ்மத்திலிருந்து மாயை, மாயையிலிருந்து அவித்யை, அவித்யையிலிருந்து அஹங்காரமென்னும் ஆவரணவிக்ஷேப ஶக்தியும்; அதிலிருந்து ஶப்த ஸ்பர்ஶ ரூப ரஸ கந்தங்களென்னும் பஞ்சதன்மாத்ரைகளும், அதிலிருந்து ஸூக்ஷ்மமாகிய ப்ருதிவி அப்பு தேயு வாயு ஆகாஶமென்னும் பஞ்சபூதங்களும், அதிலிருந்து ஸ்தூலமாகிய ஆகாஶாதி பஞ்சபூதங்களும், அந்த பஞ்சபூதங்களினால் ப்ரபஞ்சமும் உண்டாயின. மாயையால் உண்டாகிய ப்ரபஞ்சம், மாயாஶரீரம் நஶிக்கும்போது அதனுடன்கூடவே இந்த மாயாப்ரபஞ்சமும் நஶித்துவிடுகின்றது. மறுபடியும் இந்த மாயாஶரீரம் பிறக்கும்போது அதனுடன்கூடவே இந்த மாயா ப்ரபஞ்சமும் பிறக்கின்றது. இப்படி மாயாஶரீரம் பலதடவைகளில் பிறந்துபிறந்து நஶிப்பதால் இந்த மாயா ப்ரபஞ்சமும் பலதடவைகளில் பிறந்துபிறந்து நஶிக்கின்றது. இவ்விதமாய் அநேககோடி ஜன்மங்களெடுத்துக் கொண்டேவந்து ப்ரளயகாலத்தில் மனம் எவ்விடத்தில் தங்கியிருக்கின்றதென்றால்:—

ஶ்ரு || ப்ரஹ்மாத்யம் ஸ்தாவராந்தம் பஶ்யந்தி ஜ்ஞான சக்ஷுஷா தமேவமேவ பஶ்யந்தி பரிஶாந்தராம் விபும் த்விஜா: யஸ்மின் ஸர்வாணி ப்ரளீயந்தே லீனாஶ்சா வ்யக்ததாம் யயு: பஶ்யந்தி வ்யக்ததாம் பூயோ ஜாயந்தே புத்புதா இவ."

[ஸுபாலோபநிஷத்.]

சகல நதிகளும் சமுத்ரத்தில் விழுந்து கலந்து பேதமில்லாமல் ஏகமாவதுபோல், ப்ரஹ்மாதி ஸ்தாவராம்பரயில் ஸகலசராசர ஜகத்து எந்த பரப்ரஹ்மத்திலிருந்து உண்டாயிற்றோ அந்தபரப்ரஹ்மத்திலேயே மறுபடியும் ப்ரளயத்தில் லயிக்கும். சமுத்ரத்தில், அலைகள் நுரைகள் திவலைகள் உண்டாவதுபோல், மறுபடியும் அந்த பரப்ரஹ்மத்திலிருந்து ஸகல சராசர ஜகத்தும் உண்டாகின்றது. ஜ்ஞானமடையாத ஜீவகோடிகளெல்லாம் ப்ரளயத்தில் எங்கு அடங்கியிருந்ததென்றால், தட்டான்வேலைசெய்யும்போது அணுஸ்வரூபமாய் சிதறிவிழும் தங்கங்களையெல்லாம் மெழுகில் ஒற்றியபோது அது, எவ்விதமாய் மெழுகில் பிடித்துக்கொள்ளுகின்றதோ அது போல், ப்ரளயத்தில் ஜீவவர்க்கங்களெல்லாம் அந்த ப்ரஹ்மத்தில் பிடித்துக்கொண்டிருந்து மறுபடியும் ப்ரளயம் அந்தியமானவுடன்; மளிகைக்கடை வர்த்தகன் உப்பு, மிளகாய், புளி, பருப்புமுதலிய கூடைகளையெடுத்து ஒன்றின்மீது ஒன்றாய் வைத்து இரவில் கடையைச்சாத்திவிட்டுப் புஜித்து நித்ரை செய்கின்றான். இதுவே ப்ரளயமாகப் பாவிக்கவேண்டும். மறுபடியும் பொழுதுவிடிந்தவுடன் கடையைத்திறந்து உப்புக்கூடையிருந்தவிடத்தில் உப்பும், மிளகாய், புளி, பருப்புவகையரா கூடைகள் இருக்கவேண்டிய இடங்களில் அவ்வவைகளை வைப்பதுண்டு. இதுவே ப்ரளய அந்த்யம். அதுபோலவே, அந்த்யமானபிறகு ஈஶ்வரன் அவர்களை எங்கெங்கு ஸ்ருஷ்டிசெய்ய வேண்டுமோ அங்கங்கு ஸ்ருஷ்டிசெய்கின்றார்.

சரீரலக்ஷணம் ஸாங்க்ய விசாரணை.

சரீரலக்ஷணம் இப்பேர்ப்பட்டதென்று விசாரித்துத் தெரிந்துகொள்ளாவிடில் ஆத்மா இப்பேர்ப்பட்டதென ஆத்ம ஜ்ஞானம் உண்டாகமாட்டாது. ஆதலால், சரீரலக்ஷணம் இப்பேர்ப்பட்டதென்பதை ஶ்ரத்தையுடன் விசாரிப்பது அத்யாவஶ்யம்.

தேஹம் இப்படிப்பட்டதென்றும், தேஹி இப்படிப்பட்டவனென்றும் தெரிந்துகொள்வது, ஸாங்க்ய விசாரணையென்று சொல்லப்படும். ஜ்ஞானேந்த்ரியங்கள் ஐந்து, கர்மேந்த்ரியங்கள் ஐந்து, தந்மாத்ரைகள் ஐந்து, ப்ராணன்கள் ஐந்து, அந்தக்கரணங்கள் நான்கு என்று இப்படி 24 - தத்வங்கள் கூடினவையே ஶரீரம். இதில் வஸிக்கும் ஆத்மா (தேஹி) இவனே 25-வது, தத்வமாம். 26-வது, தத்வமே பரப்ரஹ்மம். இந்த பரப்ரஹ்மத்தில், 25-வது, தத்வமாகிய ஜீவாத்மாவைச் சேர்ப்பிக்கவேண்டும். இவ்வாறு சேருவதே மோக்ஷம் என்று சொல்லப்படும்.

ஜ்ஞானேந்த்ரியங்கள் - 5.

ஶ்ரு "ஶ்ரோத்ராதி விஜ்ஞானேந்த்ரியாணி ஶ்ரோத்ர மாகாஶே வாயௌ த்வக் அக்னௌ சக்ஷு: ரப்ஸு ஜிஹ்வ ப்ருதிவ்யாம் க்ராண மிதி." [ஶாரீரகோபநிஷத்]

1. ஶ்ரோத்ரம்:—செவி. இது, ஆகாஶத்தின் அம்ஶமானபடியால் அதன் குணமாகிய நாநாவித ஶப்தங்களைக் கேட்டுக்கொண்டிருக்கும்.

2. த்வக்கு:—தேஹசர்மம். இது, வாயுவின் அம்ஶமானபடியால் அதன் குணங்களாகிய ஶீதம் உஷ்ணம் ம்ருது கடினம் என்னும் நான்குவித ஸ்பர்ஶங்களை அறியும்.

3. சக்ஷு:—நேத்ரங்கள். இது, அக்நியின் அம்ஶமானபடியால் அதன் குணங்களாகிய வெண்மை கருமை சிவப்பு பச்சை நீலம் மிஶ்ரவர்ணம் நீளம் குட்டை ஸ்தூலம் ஸன்னம் என்னும் தஶவித ரூபங்களை அறியும்.

4. ஜிஹ்வை:—நா. இது, அப்புவின் அம்ஶமானபடியால் அதன் குணங்களாகிய உப்பு புளிப்பு இனிப்பு கசப்பு கார்ப்பு துவர்ப்பு என்னும் ஷட்ரஸங்களை அறியும்.

5. க்ராணம்:—நாசி. இது, ப்ருதிவியின் அம்ஶமானபடியால் அதன் குணமாகிய ஸுகந்த துர்க்கந்தங்களை மாத்ரம் அறி

யும். இவ்வைந்து இந்த்ரியங்களில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விஷயத்தை அறிவதனால் இவைகள் ஜ்ஞானேந்த்ரியங்கள் எனப்படும்.

கர்மேந்த்ரியங்கள் - 5.

ஶ்ரு "வாக் பாணி பாத பாயூபஸ்தாக்யானி கர்மேந்த்ரியாணி தேஷாம் க்ரமேண வசனாதான கமன விஸர்ஜனானந்தாஶ்சைதே விஷயா: ப்ருதிவ்யாதி மஹாபூதேஷு க்ரமேணோத்பன்னா:"

1. வாக்கு:—வாய். இது, ப்ருதிவியின் அம்ஶமாயிருந்தாலும் ஆகாஶத்தின் குணங்கொண்டு வசனிக்கும்.

2. பாணி:—கைகள். இவை, வாயுவின் குணத்தைக் கொண்டு, கொடுக்கல் வாங்கல் பிடித்தல் விடுதல் முதலாகிய காரியங்களைச் செய்யும்.

3. பாதம்:—கால்கள். இவை, அக்நியின் குணத்தைக் கொண்டு நடப்பது உட்காருவது நிற்பது எழுந்திருப்பது முதலான கார்யங்களைத்தாங்கி நடக்கும்.

4. பாயுரு:—குதம். இது, ப்ருதிவியின் குணத்தைக் கொண்டு மல ஜலாதிகளை விஸர்ஜனம் செய்விக்கும்.

5. உபஸ்தம்:—மர்மஸ்தானம். இது, அப்புவின் குணத்தைக்கொண்டு மூத்ரம் சுக்லம் ஶ்ரோணிதம் விடுவித்து ஆனந்தம் அடைவிக்கும். இந்த ஐந்தும், ஒவ்வொன்றும் ஒவ்வொரு கார்யத்தைச் செய்துகொண்டிருப்பதனால் கர்மேந்த்ரியங்கள் என்று சொல்லப்படும்.

அந்தக்கரணங்கள்—4.

ஶ்ரு "மனோபுத்தி ரஹங்கார சித்த மித்யந்த:கரண சதுஷ்டயம், தேஷாம் க்ரமேண ஸங்கல்ப விகல்பா த்யவஸாயாபி மானாவ தாரண ஸ்வரூபா ஶ்சைதே விஷயா:, மனஸ்தானம் கண்டம் புத்தேர்வதன அஹங்காரஶ்ச ஹ்ருதயம் சித்தஸ்ய நாபிரிதி" [ஶாரீரகோபநிஷத்.]

1. மனம்:—வாயுவின் அம்சம். ஸங்கல்ப விகல்ப ரூப வ்ருத்தியே மனமாகும். ஆதலால், இது அதன் ஸ்வரூபகுண

மாகிய நினைப்பு மறப்பென்னும் ஸங்கல்ப விகல்பங்களையே செய்துகொண்டு வாயுவைப்போல் அலையும். இதற்கு அதி தேவதை சந்த்ரன்; ஸ்தானம் கண்டம்.

2. புத்தி:—அக்நியின் அம்சம். பதார்த்தத்தின் ஸ்வரூபத்தை நிச்சயிக்கும் வடிவ வ்ருத்தியே புத்தியாம். இது, கார்யாகார்யங்களிலும் பொருள்வகையிலும் இது நல்லது இது கெட்டது என்று நிச்சயித்துணரும். இதற்கு அதி தேவதை ப்ரஹ்மா; ஸ்தானம் முகம்.

3. சித்தம்:—அப்புவின் அம்சம். பொருளின் சிந்தனை வடிவ வ்ருத்தியே சித்தமாம். இது, இந்த்ரியங்களுக்குச் சலனத்தை யுண்டாக்கி அதன் வழியாய் விஷயங்களைப்பற்றி யிழுத்துச் செல்லும். இதற்கு அதிதேவதை விஷ்ணு; ஸ்தானம் நாபி.

4. அஹங்காரம்:—ப்ருதிவியின் அம்சம். மாம்ஸபிண்டமாகிய இத்தேஹத்தையே தான் என்று அபிமானிக்கும் வடிவ வ்ருத்தியே அஹங்காரமாம். இது, கார்யாகார்யங்களை யோசிப்பதைவிட்டு நான் எனது என அபிமானித்துப் புண்ய பாபங்களைச் செய்துகொண்டிருக்கும். இதற்கு அதிதேவதை ருத்ரன்; ஸ்தானம் ஹ்ருதயம். இந்நான்கும் தேஹத்தில் வ்யாபித்துக்கொண்டு ஜ்ஞானேந்த்ரிய கர்மேந்த்ரியங்களை அவ்வவ் வ்ருத்திகளில் ப்ரவேசிக்கச் செய்கின்றன.

வாயுக்கள்—5.

"ஹ்ருதிப்ராணோ குதேபாநோ தாநு கண்ட தேசஸ்தித
ஸமாநோ நாபிதேசஸ்து வ்யாநஸ்ஸர்வ ஶரீரகா" |

1. ப்ராணவாயு:—இது, ஹ்ருதய ஸ்தானத்திலிருந்து நாசிகா ரந்த்ரங்களின் வழியே மேல்நோக்கி உச்வாஸமாகச் சஞ்சரித்துப் பசி தாஹங்களை உண்டாக்கிப் புசித்த ஆஹாரத்தை ஜீர்ணம் செய்விக்கும்.

2. அபானவாயு:—இது, குதத்தைப்பற்றி நின்று மலமூத்ரங்களையும் ரேதஸ்ஸை (சுக்லத்தை)யும் வெளியில் தள்ளும்படிச்செய்து நிஸ்வாஸ ரூபமாய்ச் ஸஞ்சரிக்கும்.

3. உதானவாயு:—இது, கண்டஸ்தானத்திலிருந்து அன்னத்தை விழுங்கும்படி செய்து அந்த அன்னரசத்தை நாடிகளுக்குள் வ்யாபிக்கச்செய்து சப்தத்தோடு கலந்து குரலோசை செய்விக்கும்.

4. ஸமானவாயு:—இது, நாபி ஸ்தானத்திலிருந்து உதான வாயுவினால் அனுப்பப்பட்ட அன்னரஸத்தை நாடிகளுக்குச் சமமாகப் பாகிக்கும்.

5. வ்யானவாயு:—இது, சரீரத்தின் சர்வபாகத்திலும் வ்யாபித்து ஸ்பர்சத்தை க்ரஹிக்கச்செய்யும். மேலும் புசித்த அன்னத்தைத் திப்பிவேறு ரசம்வேறாகச் செய்துகொண்டிருக்கும். இவ்வைந்தும், தேஹத்திலிருப்பதனால் ஒருவன் ஜீவித்திருக்கின்றானாதலால், பஞ்சப்ராணன்களெனப்படும்.

உபவாயுக்கள்—5

1. நாகன்:—இது, கண்டத்திலிருந்து வாந்தியை உண்டு பண்ணும். நேத்ரங்களினால் பார்க்கச்செய்யும்.

2. கூர்மன்:—இது, கண்களிலிருந்து திறக்கவும் மூடவும் செய்யும்.

3. க்ருகரன்:—இது, தும்மலை உண்டாக்கும்.

4. தேவதத்தன்:—இது, கொட்டாவியை உண்டாக்கும்.

5. தனஞ்ஜயன்:—இது, கர்ப்பத்திலிருக்கும் பிண்டத்தை வெளியில் தள்ளச்செய்யும். அன்றியும், மரணமடைந்த சரீரத்தையும் விடாமல் காஷ்டத்திற்குப் போகும் வரையில் ஸ்தூலமாகச்செய்யும்.

இந்தப் பத்து வாயுக்களும் பத்து நாடிகளில் திரிந்துகொண்டிருக்கும். அன்றியும்,

பூஷா, அலம்புஷா:—என்னும் நாடிகள் செவியினிடமிருந்து பற்பல சப்தங்களைக் கேட்கச்செய்யும்.

காந்தாரி, அஸ்தி ஜிஹ்வா:—என்னும் நாடிகள் நேத்ரங்களிலிருந்து த்ருஶ்ய பதார்த்தங்களைத் தெரியச்செய்யும். இது ஹ்ருதயத்திலிருந்து மேல் வ்யாபித்திருக்கின்றது.

சங்கினி குஹூ:—என்னும் இரண்டு நாடிகளும் மலமூத்ரங்களை விசர்ஜ்ஜிக்கச் செய்துகொண்டு அநாஹதசக்ர முதல் லிங்க குதஸ்தானங்களை வ்யாபித்திருக்கும்.

ரக்தவ்யாணன்:—என்னும் நாடி அநாஹத (ஹ்ருதய) முதல் ஸ்வாதிஷ்டானம் (லிங்கம்) வரையிலும் வ்யாபித்து அந்தரங்க ஸ்தானத்தில், குஹூநாடியுடன் கலந்து சுக்ல ஶோணிதங்களை ஏகமாய் வெளியில் தள்ளச்செய்யும். இந்த ஏழுநாடிகளும் அநாஹத சக்ரத்தை ஆதாரமாகச் செய்துகொண்டு நான்கு நாடிகள் ஊர்த்வமுகமாகவும் மூன்று நாடிகள் அதோமுகமாகவும் வ்யாபித்திருக்கின்றன.

இடை, பிங்களை:—இரண்டும், ஆக்நேய (நெற்றிச்) சக்ர முதல் மூலாதாரம் வரையிலும் வலமிடமாக வ்யாபித்து தமது மத்தியில் ஸுஷும்ந நாடியை அநுஸரிக்கின்றன. இவை, புருவ மத்தியிலிருந்துகொண்டு வலதுநாஸி இடதுநாஸிகளில் சேர்ந்து ப்ராணவாயுவை, உஶ்வாஸ நிஶ்வாஸங்களினால் நடத்திக்கொண்டிருக்கும்.

ஸுஷும்ந நாடி:—இது, ப்ரஹ்ம ரந்த்ரம் வரையிலும் வ்யாபித்து, நாவிற்சேர்ந்து அகாராதி க்ஷகாராந்த ஓசைகளை உண்டாக்கும். ஸ்ரீ க்ருஷ்ணார்ஜுந ஸம்வாதரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை அ - 4, ஶ்லோகம் - 2 பார்க்க.

தந்மாத்ரைகள்—5.

1. சப்தம்:—ஆகாஶத்தின் தந்மாத்ரை. இது, செவியின் உட்புறத்திலுள்ள மெல்லிய ஜவ்வின் வழியால் சப்தத்தைக் கேட்பிக்கும்.

2. ஸ்பர்ஶம்:—வாயுவின் தந்மாத்ரை. இது, தேஹத்தில் ப்ராணாதி ஸர்வவாயுக்களும் வ்யாபித்திருப்பதால், ஸ்பர்ஶ குணத்தை ஶரீரத்தினின்று அறிவிக்கும்.

3. ரூபம்:—அக்நியின் தந்மாத்ரை. இது, நேத்ரேந்த்ரியங்களில் அக்நி ஸம்பந்தித்திருப்பதால் தஶவித ரூபங்களையும் நேத்ரத்தினின்று காட்டிவைக்கும்.

4. ரஸம்:—ஜலத்தின் தந்மாத்ரை. இது, நாவில் ஜல ஸம்பந்தமிருப்பதால், அந்த நாவிலிருந்து அறுசுவையின் பேதங்களை அறிவிக்கும்.

5. கந்தம்:—ப்ருதிவியின் தந்மாத்ரை. இது, நாஸியில் ப்ருதிவி சம்பந்த மிருப்பதால், அந்த நாஸியின் வழியாய்ச் சுகந்த துர்க்கந்தங்களை அறிவிக்கும்.

இவை முதலாகிய ஸர்வேந்த்ரியங்களும், ஆத்மாவை அறியமாட்டா. ஆகவே, இத் தேஹாதி இந்த்ரியங்கள் யாவும் ஜடம் என்றும், ஆத்மா ஒன்றே ஜ்ஞானஸ்வரூபமா யிருப்பதால் சித்து என்றும் சொல்லப்படும்.

சரீரத்ரயம்.

ஸ்தூலம் ஸூக்ஷ்மம் காரணம் என்று ஶரீரம் மூன்றாகும்.

1. ஸ்தூல ஶரீரம்:—தலை கண்கள் மூக்கு வாய் கைகள் கால்கள் முதலாகிய அவயவங்களுடன் கூடிய இம்மாம்ஸ ஶரீரம், கைகளினால் பிடிப்பதற்குக் கடினமாயும் ம்ருதுவாயும் பார்வைக்கு நீளமாயும் குட்டையாயும் பெருத்தும் சிறுத்தும் தோன்றுவதால், ஸ்தூல ஶரீரம் என்று சொல்லப்படும்.

2. ஸூக்ஷ்ம ஶரீரம்:—ஜ்ஞானேந்த்ரியங்கள் - 5, கர்மேந்த்ரியங்கள் - 5, ப்ராணன்கள் - 5, மனம், புத்தி - 2, ஆகிய இந்தப் பதினேழு அவயவங்களுடன் கூடினதே ஸூக்ஷ்ம ஶரீரம் அல்லது லிங்க ஶரீரம் என்று சொல்லப்படும். இது,

கண்களுக்குத் தோன்றுமதும் கைகளாற் பிடிப்பதற்கு ஸாத்யப்படாமலும் இந்த ஸ்தூல ஶரீரத்தின் உள்ளிருப்பது.

3. காரணஶரீரம்:—முன்னிரண்டு ஶரீரங்கட்கும் வித்தாயிருந்து உத்பத்தி யொடுக்கத்தை விளைவித்துத் துன்பத்தையே ஸுகம் எனக் கருதச்செய்கின்ற அஜ்ஞானமே காரண ஶரீரம் எனப்படும்.

ஸ்தூலஶரீரம். "ஶீர்யதே ஶரீர:" ஜீர்ணித்துப்போவதால் ஶரீரம் என்றும், "தஹ்யதே தேஹ:" தஹிக்கப்படுவதால் தேஹ மென்றும் சொல்லப்படும். அது அன்னமில்லாவிடில் ஜீர்ணித்துப்போகும்; வ்யாதியினாலும் வயோதிகத்தினாலும் ஜீர்ணித்துப்போகும். அங்ஙனம் ஜீர்ணித்த பின்பு அதாவது ப்ராணன் போய்விட்டபின்பு இத்தேஹம் ஸ்மஶாநாக்னியினால் தஹிக்கப்பட்டு மண்ணாய்ப்போகும். ஸூக்ஷ்மஶரீரம் எங்ஙனம் வ்ருத்தியடையுமெனின்? ராகத்வேஷ காம க்ரோதங்கள் தினே தினே விசேஷித்து வளர்கின்றமையால் இந்த ஸூக்ஷ்ம ஶரீர வ்ருத்தியை அடைந்து வளர்கின்றது. நாளுக்கு நாள் அவைகள் குறைவுபட்டால் ஶரீரவ்ருத்தி குறைவுபட்டு நாளுக்குநாள் ஜீர்ணித்துப்போகும். ஆதலால், இந்த ராகத்வேஷாதிகள் ஸூக்ஷ்ம ஶரீரத்தின் விகாரங்களாகும். காரண ஶரீரம் எங்ஙனம் வ்ருத்தியடையும்? அஜ்ஞானத்தினால் நான் எனது என்னும் அபிமானம் நாளுக்குநாள் விசேஷிப்பதால் காரணஶரீரம் வ்ருத்தியடைகின்றது. ஆகவே, அபிமானம் நாளுக்குநாள் ஒடுங்கினால் காரணஶரீரம் ஒடுங்கி ஜீர்ணித்துவிடும். ஸூக்ஷ்ம காரண ஶரீரங்கள் இரண்டும் ஸத்குரு கடாக்ஷத்தினாலும் ஜ்ஞானாக்னியினாலும் ரூபமில்லாமல் தகித்துப் போய்விடும். இவ்விரண்டும் தகித்தவுடன் மோக்ஷம் ஸித்திக்கும்.

ஸ்தூலஶரீரம் யதார்த்த ப்ரத்யக்ஷமாய்க் காணப்படுகின்றதுபோலவே ஸூக்ஷ்மஶரீரம் ஏன் காணப்படுகின்றதில்லை? ஆதலால், அதனை உண்டென எப்படி நிஶ்சயிக்கலாகும்?

மாம்ஸமயமாகிய இந்த ஸ்தூல ஶரீரத்திற்கு நித்ரை, மரணம், மூர்ச்சையாதிகள் ஸம்பவிக்கும் ஸமயங்களில் இச்சரீரத்தின் நேத்ரங்கள் கர்ணங்கள் முதலாயுள்ள இந்த அவயவங்கள் யாவும் இருந்தபோதிலும் அந்த நேத்ரங்கள் பார்ப்பதில்லை; செவிகள் கேட்பதில்லை; இவ்விதமே ஒவ்வொரு இந்த்ரியமும் அதனதன் கார்யங்களைச் செய்வதில்லை. ஆதலால், இந்த ஸ்தூலஶரீரம் கேவலம் மாம்ஸபிண்டமாகிய மட்பாண்டமாயிருப்பதால் இதுவே ஸகல கார்யங்களையுஞ் செய்வதாகச் சொல்லப்படாது. ஆதலால், இந்த ஸ்தூல ஶரீரத்திற்குள் ஸூக்ஷ்மஶரீரம் ஒன்றிருந்தே ஸமஸ்த கார்யங்களையுஞ் செய்துகொண்டிருக்கின்றது என்பது நிஶ்சயமாகும். ஆகவே, ஸ்தூல தேஹத்தின் நேத்ராதிகளிலும் ஸூக்ஷ்ம ஶரீரத்தின் நேத்ராதிகளாகிய ஸர்வேந்த்ரியங்களும் வ்யாபித்திருப்பதனாலேயே ஸ்தூலஶரீர இந்த்ரியங்கள் ஒவ்வொன்றும் தத்தம் கார்யங்களைச் செய்துகொண்டிருக்கின்றன. அஃதெப்படியெனில், நாம் சில வஸ்துக்களைக் காண்கின்றோம். வஸ்துவைக் காணுவது கண்ணென்னும் அவயவமல்ல. கண்களுக்கும் மூளைக்கும் மத்தியிலுள்ள நாடியின் வழியாய் ஓடிக்கொண்டிருக்கும் இந்த்ரியமே, வஸ்துவைப் பார்க்க மிகவும் உபயோகமானது. கண்ணென்னும் அவயவமானது காணுந்தொழிலுள்ள இந்த்ரியத்திற்கு ஓர் கருவி. கண்ணினுடைய இந்த்ரியம் இல்லாவிடில் ஒருவனுக்கு நூறுகண்கள் இருந்தபோதிலும் ப்ரயோஜனப்படமாட்டா. கண்ணென்னுங்கருவி, இந்த்ரியம் இவைகளிரண்டும் இருந்தபோதிலும், மனம் அவ்விந்த்ரியங்களுடன் கலக்காவிட்டால் வஸ்துவைக் காணமுடியாது. ஒரு வஸ்துவைப் பார்க்கவேண்டுமானால் முதலில் கண்ணென்னுங் கருவி, அதற்குப்பின்னுள்ள இந்த்ரியம், மனம் ஆக இம்மூன்றும் வேண்டும். மனமானது வேறோர் இந்த்ரியத்துடன் சேர்ந்து வேறோர் கருவியின்மூலமாய் வேறோர் வேலையில் இருந்துவிட்டால், கண்ணிந்த்ரியமும் கருவியும் சேர்ந்து

காணுந்தொழிலைச் செய்யமுடியாது. ஆகையால், ஒருவிஷயத்தை உணரவேண்டுமானால், அவ்வுணர்ச்சிக்குக் கருவிகள், இந்த்ரியங்கள், மனம் ஆகிய இம்மூன்றும் அவஶ்யம் வேண்டும். ஶப்தத்தைக் கேட்பதற்குச் செவியென்னுங் கருவியும், செவி யிந்த்ரியமும், மனமும் வேண்டும். இவ்வாறே மற்ற எல்லா இந்த்ரியங்களும் ஆகுமென்று தெரிந்துகொள்ளவேண்டும். வஸ்துக்களைக் காணும்போது மனமானது வெளியே செல்லுகின்றது. கண்களை மூடிக்கொண்டு நினைக்கும்போது மனம், உள்ளிந்த்ரியங்களுடன் கலந்து வேலைசெய்கின்றது. வஸ்துக்களை வெளியே கவனிக்கும்போது கருவிகளின் ஸஹாயமும் உள்ளே நினைக்கும்போது இந்த்ரியங்களின் ஸஹாயமும் வேண்டும். இந்த்ரியங்களின் ஒத்தாசையில்லாமல் மனவினால் ஒன்றும் செய்யமுடியாது. ஒரு வஸ்துவின் அடையாளம் அல்லது குறியில்லாமல், மனமானது ஒன்றையும் நினைக்காது. அவ்வடையாளங்களை மனவிற்குக் கொண்டுவருவது இந்த்ரியங்களே யாம். இதன் விவரங்களையெல்லாம் ஸ்ரீ க்ருஷ்ணார்ஜுன ஸம்வாதரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதையில் விரிவாய்க் காணலாம். ஸ்தூல ஸூக்ஷ்ம ஶரீரமிரண்டும் கார்யரூபமாயிருக்கின்றன. எவ்வாறெனில்:—

புகை வருவதனால் அக்நியைக் காணாவிடினும், காரணமாகிய அக்நியிருந்தே அதன் காரியமாகிய புகை காணப்படுகின்றது என்று நிஶ்சயிப்பதுபோல், கார்யவடிவமாகிய ஸூக்ஷ்ம ஶரீரம் உண்டாவதற்குக் காரணம் ஒன்று உண்டென்று நிஶ்சயிக்கலாம். அதுவே அஜ்ஞானமாகிய காரண ஶரீரம்; அதனாலேயே ஸ்தூல ஸூக்ஷ்மஶரீரங்கட்கு ஜனனமரணாதி தாபத்ரயங்கள் உண்டாகின்றன. எப்படியெனில்,

"அஜ்ஞாநாதவிவேகஃ அவிவேகாதபிமாநஃ அபிமாநாத்ராகாதயஃ ராகாதயம் கர்மாணி கர்மணோ ஶரீரபரிக்ரஹஃ" என்றிருப்பதால் அஜ்ஞானத்தினால் அவிவேகமும், அவிவேகத்தினால் நான் எனது என்னும் அபிமானமும், அந்த அபிமானத்தினால்

காம க்ரோதாதிகளும், காமக்ரோதாதிகளால் அநேக கர்மங்களைச்செய்து அக்கர்மவசத்தினால் இந்த ஜீவாத்மா அநேக ஜனனமரணங்களை அடைந்துகொண்டேயிருக்கும். அதனால் அக்காரணஶரீரம் முற்றிலும் நசிக்காவிடில் முக்தியில்லையென்பது திண்ணம். இந்தக் காரணஶரீரமே ஸஞ்சிதமென்று அறியவேண்டும்.

பஞ்சகோஶ விவரங்கள்.

"ஆத்மாநாம ஸ்தூல ஸூக்ஷ்ம காரண ஶரீரத்ரய விலக்ஷணஃ
பஞ்சகோஶாதீதஃ அவஸ்தாத்ரய ஸாக்ஷீ ஸச்சிதாநந்தரூபஃ"

பரமாத்மா பஞ்சகோஶ விலக்ஷணனென்று ஶ்ருதிகள் முறையிடுகின்றன. பஞ்சகோஶங்களை அறியாமலே அவைகளுக்கு விலக்ஷணனான பரமாத்மாவை அறியலாகாது. ஆதலால், பஞ்சகோசத்தை விசாரிக்கலாம்.

அது, அந்நமயம் ப்ராணமயம் மநோமயம் விஜ்ஞானமயம் ஆநந்தமயமெனக் கோஶங்கள் ஐந்து வகைப்படும்.

"அந்நவிகார ஶுக்லஶோணித ஜந்ய ஷட்பாவவிகார ஸஹிதம்
அந்நேநைவ வர்த்தமாநம் இதம் ஸ்தூலஶரீரம் அந்நமயகோஶஃ
ஶுக்லஶோணித ஸம்பூதே தேஹாந்நமய உச்யதே
அந்நகார்யாணாம் ஸமூஹோ அந்நமயகோஶஃ"

1. அந்நமயகோஶம்:—தாய்தந்தைகள் புஜித்த அந்நத்தினாலுண்டாகிய சுக்ல ஶ்ரோணிதங்களால் தாயின் உதரத்திற் பிறந்து பால் அந்ந முதலிய ஆஹாரங்களால் தினே தினே விருத்தியடைந்து ஸ்தூலமாகியகரசரணாதி அவயவங்களுடன் உண்டாகுதல் இருத்தல் மாறுபடுதல் அதிகரித்தல் குறைதல் நசித்தல் என்னும் ஷட்பாவ விகாரமுடையதாய் ஸப்ததாதுமயமாய்க் காணப்படும். ஆதலால், இந்த ஸ்தூலஶரீரம் அந்நமயகோஶமாம். இது மரித்தபின்பு அந்நமயமாகி ப்ருதிவியில் ஒடுங்கும். அன்றியும்,

"யதாகடகம் தத்கோஸம் ஆம்ரபலம் த்வசா
யதா தவஸ்ச தண்டுலாதிக மாம்ஸாஸ்தபதி
யதாவாகர்ப்பம் ஜராயுரா வாரயதி
கோஸவதாஸ்ராத தத்வாத்கோஸ இத்யுச்யதே."

உறை கத்தியையும், ஓடு புளியையும், உமி அரிசியையும், மா பிண்டத்தையும் மூடிக்கொண்டு, காணக்கூடாமற் செய்வது போல், பரமாத்மாவை இவைகள் மூடிக்கொண்டு காணப்படாமல் செய்வதால் கோஸங்களெனப் பெயர் பெற்றன.

"ஆகாஸாதிகாம் தத்கோஸாதிகோமய ஸத்தாபீக்ஷா
பஞ்சகோஸா ஆமாத்ம ப்ரேக்ஷ ஸத்தாகத்வா பாவாத்
கோஸாதிப்யோ வைலக்ஷண்யாத்தமாச்சாஸ்த்ரம் ஏவமிதி சேதாஸ்ய த."

ஆனால், த்ருஷ்டாந்தத்தில் உறை கத்தி முதலியவைகள் வேறாயிருப்பதனாலும், "ஸமான தர்மங்கள் உண்டாகாததினாலும், ஒன்றையொன்று அநுஸரித்து ப்ரகாசிக்காததினாலும், அந்த உறைமுதலியவைகள் த்ரவ்யத்தை மூடிக்கொண்டு இருக்கப்பட்டவைகளே யொழிய த்ருஷ்டாந்தத்தில் கோஸங்கள் தமது ஸத்தாமாத்ரத்தினால் ப்ரகாசிக்காமல் ஆத்ம ஸத்தாவை அநுஸரித்து ஜீவித்து ப்ரகாசித்துக்கொண்டிருக்கும் பரமாத்மாவைமூடும்படியான ஸக்தி கோஸங்கட்கு எப்படி உண்டாயிற்றென்றால் :—

"ஆதித்ய கிரண பரிணாம விஸேஷத்வாத்
மேகஸ்யாதித்ய ஸத்தைவ ஸத்தா ததாபி மேகோ
ஆதித்யம் யதாச்சாதயதி அக்நிமுப
தீப்ய வர்த்தமானஸ்ய தாபஸ்ய பயஸோ ஸத்தைவ
ஸத்தா ததாபி ஸதாய அக்நிமாச்சாத
யதிவை மாத்ம ஸத்தாய ஸத்தாவத்தோபி
கோஸா ஆத்மானம் ஆச்சாதயந்தி"

ஸூர்ய கிரணத்தினால் உண்டாகிய மேகங்கள் ஸூர்யனை மூடிக்கொண்டு காணப்படாமற் செய்வது போலவும், அக்கினியினுண்டாகிய புகை அக்கினியை மூடிக்கொண்டு காணப்படாமல் செய்வதுபோலவும், ஆத்மஸத்தாவை அநுஸரித்து வ்ருத்தி

யடையும் கோஸங்களுக்குப் பரமாத்மாவை மூடும்படியான ஸக்தியுண்டாயிற்று. ஆனால், அந்நமய கோஸத்திற்கும் பரமாத்மாவிற்கும் சேர்க்கை எப்படி உண்டாயிற்றென்றால், அந்யோந்யாத்யாஸத்தினால் உண்டாயிற்று. அந்யோந்யாத்யாஸமென்றால், ஒரு வஸ்துவிலுள்ள குணங்கள் மற்றொரு வஸ்துவில் தோன்றுதல். அதாவது, நான் ஜீவன் என்பது ஜீவாத்யாஸம், நான் மனுஷ்யன் என்பது ஜாத்யாத்யாஸம்; நான் பிறந்து வளர்ந்து க்ஷீணித்து மரிக்கின்றேன் என்பது விகாராத்யாஸம்; நான் ப்ராஹ்மணன் க்ஷத்ரியன் என்பது வர்ணாத்யாஸம்; நான் ஆந்த்ரன், வேளாளன், மஹாராஷ்ட்ரன், காஸ்யபகோத்ரன், நான் ப்ரஹ்மசாரி, நான் ஸந்யாஸி, நான் ராமையன், என்பது நாமாத்யாஸம்; நான் கறுத்தவன் வெளுத்தவன் என்பது ரூபாத்யாஸம். இவையாவும் அந்நமயகோஸத்தின் லக்ஷணங்கள்.

இந்த ஸ்தூல ஸரீரம் உத்பத்திக்கு முன்னும் மரணத்திற்குப் பின்னும் இல்லை. ஆகையால், உத்பத்தி விநாஸாதி ஷட்பாவவிகார ஷட்கோஸ மயமான இந்த அந்நமயகோஸம் ஆத்மாவல்ல.

"கர்மேந்த்ரியைஸ் ஸஹப்ராணமயகோஸ: ப்ராணாதி
பஞ்சகம் ப்ராணமய: கர்மேந்த்ரியைர்யுதம்."
"ப்ராணாதிபஸ்வாயு வோந்நமயகோஸே
யதாவர்த்தம்தே ததா ப்ராணமயகோஸ:"

2. ப்ராணமயகோஸம்:—வாக் பாணி பாத பாயுரு குய்யம் என்னும் கர்மேந்த்ரியங்கள் ஐந்து. ப்ராணன் அபானன் உதானன் ஸமானன் வ்யானன் என்னும் ப்ராணன்கள் ஐந்து. ஆகிய இந்தப் பத்தும் சேர்ந்தது ப்ராணமயகோஸமாம். அன்றியும்,

ப்ராணவாயு முதலாயுள்ள தசவித வாயுக்களும் அந்நமய கோஸத்தில் எப்பொழுது ஸஞ்சரிக்குமோ அப்பொழுதே

ப்ராணமயகோசத்திற்கும் பரமாத்மாவிற்கும் சேர்க்கையுண்டாகும். எங்ஙனமெனில்:—

“அஹம் க்ஷுத்தாயுக்த அஹம் பிபாஸாவாந்
அஹம் பலவாந் அஹம் வீர்யவாந்
அஹம் க்ரியாவாந் அஹம் வக்தா.”

“அஹம்தாதா மூகஃ பங்குஃ விஹஸ்தஃ ஷண்டஃ இத்யாதி
ப்ராண விகாரத்வேஸதி வக்த்ருத்வாதி ரஹிதமாத்மாநம்
வக்தாரமிவ தாநாதிரஹித மாத்மாநம் தாதா
ரமிவ கமநாகமந பரிச்சேத்யமாத்மாநம் கர்த்தாரமிவ
க்ஷுத்பிபாஸாதி ரஹிதமாத்மாநம் க்ஷுத்பிபாஸாவத்தமிவ ஆபா
(யயதி.”

நான்; பசியும் தாஹமும் ஸாமர்த்யமும் பலமும் பராக்ரமமு முடையவன், வாய்ச்சாலகன் தாதா ஊமை முடவன் குருடன் என்பன ப்ராணமய கோசத்திலுள்ள குணங்கள்.

“ஆத்மாஃ ஸச்சிதாநந்தாஃ மமப்ராணஃ.
அஸ்திபாதி ப்ரியமிதி ப்ராணமயகோசோ ஸாதயதி.”

என்பதுபோல் பரமாத்மாவி லுண்டாயிருக்கும் ஸச்சிதாநந்தாதி குணங்கள் ப்ராணமய கோசத்தில் உண்டாயிருப்பதால் ப்ராணமுடையவனாயிருக்கின்றான். அதனால் ப்ராணமய கோசத்திற்கும் பரமாத்மாவிற்கும் சேர்க்கை யுண்டாயிற்று. இந்த ப்ராணமயகோசமே ஆத்மாவென்று சொல்லலாமெனில், எந்த ப்ராணவாயு சரீரமுதல் சிகைபர்யந்தம் அந்தரங்கமாய் வ்யாபித்து சக்ஷுராதி இந்த்ரியங்களுக்கு வ்யானரூபத்தினால் பலத்தை யுண்டாக்கி இந்த்ரியங்களை ப்ரேரேபித்துக் கொண்டிருக்கின்றதோ அந்த ப்ராணமயகோசம் கடாதிகள்போல் ஜடஸ்வபாவமுடையதாய் த்ருச்யம் பரிச்சின்னமாயிருக்கின்றது; ஆகலால் இதுவும் ஆத்மாவல்ல.

“ஜ்ஞானேந்த்ரியைர் மநோயுக்தம் மநோமய இதீரித
ஜ்ஞானேந்த்ரியாணி பஞ்சமநஸ்ச ததஸ்ரவம்
மிளித்வா மநோமயகோச இத்யுச்யதே
ஏதத்கோசத்வய ஸம்யுக்த ஆத்மாமம
ஆதிச ஸர்த்தஸம்சயஸம்சயாதி விஷயஸங்கல்பாதி
தர்மாச்ரயதாஸம்ஹாதி ததாமநோமயகோசஃ.”

3. மனோமயகோசம்:—மனசுடன் ச்ரோத்ரம் த்வக்கு சக்ஷுஸ் ஜிஹ்வை க்ராணம் என்னும் ஜ்ஞானேந்த்ரியங்கள் ஐந்தும் சேர்ந்து சப்த முதலாகிய விஷய ஸங்கல்பாதி தர்மங்களைச் செய்யும்போது இது, மனோமயகோசம் என்று சொல்லப்படும்.

இந்த மனோமய கோசத்திற்கும் பரமாத்மாவிற்கும் சேர்க்கை எப்படிக்கு உண்டாயிற்றென்றால்,

“அஹம்ஸங்கல்பவாந் அஹம்விகல்பவாந்
சோகவாந் மோஹவாந் காமீ லோபீ க்ரோதா
ப்ரஷ்டா த்ரஷ்டாச ச்ரோதாக்ராதா யதிஃ
அந்தஃ இத்யாதி மநோவிகாரத்வே ஸதிஸம்சயாதி
ரஹிதமாத்மாநம் ஸம்சயாதி வந்தம்
சோகமோஹாதி ரஹிதமாத்மாநம்
சோகமோஹாதிவந்தம் தர்சநாதி ரஹிதமாத்மாநம்
தர்சநாதிமந்தமாவாரயதி.”

நான் ஸங்கல்ப விகல்பமுடையவன் துக்கம், மோஹம் காமம் க்ரோதம் த்வேஷமுடையவன் கேட்கப்பட்டவன் இச்சை யுடையவன் ராஜஸமுடையவன் ஆக்ராணிக்கப்பட்டவன் செவிடன் நாக்கு மூக்கில்லாதவன் முதலாகிய மனோமயகோச இஷ்டமுடைய ஸங்கல்பாதி தர்மங்கள் ஆத்மாவினும், ஆத்மதர்மமாகிய ஸச்சிதாநந்தம் மனோமயகோசத்தினும் மனமிருப்பதால் தோன்றுகின்றது. ஆகலால், மனோமய கோசத்திற்கும் ஆத்மாவிற்கும் சேர்க்கையுண்டாயிற்று.

இந்த மனோமய கோசத்தையே ஆத்மாவென்று சொல்லலாமென்றால், தேஹத்தில் நான் என்னும் அபிமானமும், க்ருஹம் முதலியவைகளில் எனது என்னும் ஸ்வபாவத்தையும் உண்டாக்கும். இக்கோசம் ப்ராணமயகோசத்தைப் பார்க்கிலும் அந்தரமாய், காமக்ரோதாதி வ்யாபாரங்களையும் உண்டாக்கி நியத ஸ்வரூபமில்லாமல் தேஹாதிகளைப்போல் ஜடத்

வம், த்ருஶ்யத்வம், பரிச்சின்னத்வாதி விகாரங்களை யுடையதாதலால் இந்த மனோமயகோஶமும் ஆத்மாவல்ல.

"ஜ்ஞாநேந்த்ரியாணி பஞ்சபுத்தி ஸஹிதானிஸர்வம்
மிளித்வா விஜ்ஞானமயகோஶ இத்யுச்யதே
புத்தி ஜ்ஞானேந்திரியைர் யுக்தம் விஜ்ஞானமயகோஶகம்."

"ஏதத்கோஶத்ரய விஶிஷ்டார்த்தரேணை
தத்தத் விஶேஷத்பாஸமானாதி வ்ருத்தியோ
யதோதபத்யத்தே ததா விஜ்ஞானமயகோஶ:."

"அஹம்கர்த்தாபுத்திமான் ஸஹஜாபோஹஸதா
ஸலக்தராஜீ யோகாந்தரகாமீ
ராகத்வேஷீ ஶ்ரோத்ரிய: பண்டித: விரக்த
பக்திமான் உபாஸக: ஜ்ஞாநீத்யாதிவிஜ்ஞான
மயகோஶவிகாரத்வேனதி அகர்த்தாபோக்தமாகம்
கர்த்தாரமிவ அவிஜ்ஞாதார மாத்மானம்
விஜ்ஞாதாரமிவ நிஶ்சய ரஹிதமாத்மானம்
நிஶ்சயவந்தமிவ மாத்ஸர்யாதி ரஹிதம்
ஜாட்யாதிமந்த மிவாரயதி."

4. விஜ்ஞானமயகோஶம்:—புத்தியும் ஜ்ஞானேந்த்ரியங்கள் ஐந்தும் சேர்ந்து, அந்நமய ப்ராணமய மனோமயகோஶங்களுடன் கூடின அந்தக்கரணத்திலிருக்கும் த்யான மனனாதிகளின் வ்ருத்தி எப்பொழுது உண்டாகின்றதோ அப்பொழுதே விஜ்ஞானமயகோஶம் எனப்படும்.

இந்த விஜ்ஞானமயகோஶத்திற்கும் பரமாத்மாவிற்கும் சேர்க்கை எப்படி உண்டாயிற்றெனில்:—

நான் கர்த்தன், புத்திமான், ஸஞ்சலமுடையவன், கார்யாகார்யங்கள் செய்வதில் ஸமர்த்தமுடையவன், ஒரே வார்த்தையில் தெரிந்துகொள்ளத்தக்கவன், கவியாயிருக்கப்பட்டவன், இச்சையில்லாதவன், பண்டிதன், பக்தியுடையவன், எவ்வுலகத்திற்கும் போகப்பட்டவன் என்னும் இவைகளெல்லாம் விஜ்ஞானமயகோஶ தர்மங்கள்.

மனோமயகோஶத்திலும் மனமிருப்பதால் ஆத்ம தர்மங்களான ஸச்சிதானந்தம் தோன்றுகின்றது; அதனால், மனோமயகோஶத்திற்கும் ஆத்மாவிற்கும் சேர்க்கையுண்டாயிற்று. இந்த விஜ்ஞானமய கோஶத்தையே ஆத்மாவென்று சொல்லலாமென்றால், மனோமயகோஶ அந்தரங்கத்தில் கர்த்ருத்வ சப்தவாச்யங்களாகிய விஜ்ஞானமயகோஶம் சிதாபாஸத்துடன் கூடியிருக்கும் புத்தி, ஸுஷுப்தி காலங்களில் தனக்குக் காரணமாகிய அஜ்ஞானத்தில் லீனமாகி ஜாக்ரதையில் சிகை பர்யந்தம் வ்யாபித்து அநேக அவஸ்தைகளை உண்டாக்கி த்ருஶ்யமாயிருப்பதாலும் அதற்கு வ்ருத்தி ப்ரவாஹம் இடைவிடாமல் எப்பொழுதும் கூடியிருப்பதனாலும் இதுவும் ஆத்மாவல்ல.

"ப்ரியமோத ப்ரமோத வ்ருத்திமதஜ்ஞான
ப்ரதானமந்த:கரணம் ஆனந்தமயகோஶ இத்யுச்யதே"
"ப்ரியாதியுக்தமஜ்ஞானமானந்தமய உச்யதே."

5. ஆனந்தமயகோஶம்:—ப்ரியம் மோதம் ப்ரமோதம் என்னும் வ்ருத்திகளுடன் கூடிய அஜ்ஞானமே ப்ரதானமாயிருக்கும் அந்த:கரணமே ஆனந்தமயகோஶம்.

ப்ரியம் என்பது - இஷ்டமான பதார்த்தத்தைக் கண்டபோது உண்டாகும் ஸந்தோஷமே ப்ரியமாம்.

மோதம் என்பது - அப்பதார்த்தம் தனக்குக் கிடைத்தபோது உண்டாகும் ஸந்தோஷமே மோதமாம்.

ப்ரமோதம் என்பது - தம் கைக்குக் கிடைத்த வஸ்துவைத் தான் அநுபவித்தவுடன் உண்டாகும் ஸந்தோஷமே ப்ரமோதமாம்.

"ஏதத்கோஶ சதுஷ்டய காரணாஜ்ஞான
ஸம்ப்ருக்தம் ஸ்வகாரண ஜ்ஞானம் ஸ்வரூபஸம்பூத
ஸுதாராவ ஸ வ்ருத்தி இவயதா வர்த்ததே
ததானந்த மயகோஶ:."

அஜ்ஞானத்துடன் கூடிமேற்குறித்த நான்கு கோஶங்களுடன்சேர்ந்து ஆலவிதைக்குள் ஆலவ்ருக்ஷம் அடங்கியிருப்

பதுபோல ஸ்வரூப ஸுகத்தில் தன் காரணஜ்ஞானம் அடங்கி யிருக்கும்போது ஆநந்தமயகோஶமென்று சொல்லப்படும்.

இந்தப் பஞ்சகோஶத்திற்கும் பரமாத்மாவிற்கும் சேர்க்கை எப்படி உண்டாயிற்றெனில்:—

"அஹம்போக்தா ஸுகீ ஸந்துஷ்ட: ஸாத்விக:
ராஜஸ தாமஸ: மூட: துஷ்ட: ஶுசிர்ய:
மோஹித: அவிவேகீ ப்ராந்த இத்யாநந்தமய கோஶ
விகாரத்வேஷதி ப்ரியமோத ப்ரமோத
ரஹிதமாத்மாநம் ப்ரியமோத ப்ரமோத
மந்தமிவ அபோக்தார மாத்மாநம் போக்தாரமிவ
பரிச்சிந்ந ஸுகரஹித மாத்மாநம்
பரிச்சிந்ந ஸுகவந்த மிவாத்ஸாதயதி"

நான் போக்தன், ஸந்தோஷ முடையவன், ஸுகமுடையவன், ராஜஸன், ஸாத்விகன், தாமஸன், மூடன், ஶக்தன், ப்ராந்தியுடையவன் என்னும் இவை முதலானவைகள் ஆநந்தமயகோஶதர்மங்கள் ஆத்மாவினும்,

"ஆத்மாஸ்ஸச்சிதாநந்தாம்ஶ: ஸமஷ்ஜ்ஞானமஸ்தி
...திப்ரியமிதி ஆநந்தமயகோஶ அத்யஸ்யதி."

ஸச்சிதாநந்தம் ஆநந்தமய கோஶத்திலும், ஆநந்தமிருப்பதால் தோன்றுகின்றது. ஆகையால் ஆநந்தமயகோஶத்திற்கும் பரமாத்மாவிற்கும் சேர்க்கை புண்டாயிற்று.—ஆனால் இந்த ஆநந்தமயகோஶம் ஆத்மா ஆகாதவித மெப்படியெனில், போக்தமான ஆநந்தமயகோஶத்தில் கடாதிகளைப்போல் த்ருஶ்யம் ஜடம் பரிச்சின்ன மாதலாலும்,

"அஸ்தூல மநண்வ ஹ்ரஸ்வ மதீர்க்க மஶப்த
மஸ்பர்ஶ மரூபமவ்யயம்."

என்னும் இவ்வித லக்ஷணங்களுடன் கூடினதாதலாலும் ஆத்மா ஆகமாட்டாது. ஆனால், பரமாத்மா பஞ்சகோஶ வ்யதிரிக்த மாதலால் எப்படி ஸித்திக்கும். கத்தி உறை முதலியவைகள் ஒன்றாய்த் தோன்றினும் விசாரிக்கும்பொழுதில்,

கத்தியும் உறையும் வேறாவதுபோல், வேதாந்த ஶாஸ்த்ர விசாரணையினால் பரமாத்மா காலத்ரயத்திலும் பஞ்சகோஶங்களினின்றும் வேறுபட்டுத் தோன்றுவதால் பஞ்சகோஶவ்யதிரிக்தம் ஸித்திக்கும். இதற்கு த்ருஷ்டாந்தம்:—

"மமாயம்தேநு: மமாயம் வத்ஸ:
மமாயம்குமார: மமாயம் குமாரீ
மமாயம்ஸ்த்ரீ ஏவமாதி பதார்த்தவாந் புருஷ:
பதார்த்தேப்ய: பவதிதேப்யோ யதா விலக்ஷண:
ததா மம அந்நமயகோஶ: மமப்ராண
மயகோஶ: மம மநோமய கோஶ:
மம விஜ்ஞாநமயகோஶ: மமாநந்தமயகோஶ:
ஏவம் பஞ்சகோஶப்ரஷ்டாவாந் ஆத்மா பஞ்சகோஶாதிப்ய:
பவதிதேப்யோ விலக்ஷண:."

என்பசு என்கன்று என்புத்ரன் என்புத்ரி என்பார்யை என்று சொல்லும்போது பசு கன்று புத்ரன் புத்ரி பார்யை முதலானவர்களுக்கெல்லாம், தான் வேறாயிருந்து எப்படிச் சொல்லுகின்றானோ அதுபோலவே, என்ஶரீரம் என்ப்ராணன் என்மனசு என்புத்தி என் அஜ்ஞானம் என்று தன்னை ஸம்பந்தித்துக்கொண்டு பேசும் பஞ்ச கோஶங்களைவிட ஆத்மஸ்வரூபனாகிய தான் வேறாயிருக்கின்றான். அன்றியும், அவன் கன்று இளைத்துவிட்டது என்றாலும், அவன் பார்யாள் நல்லகுணமுடையவளென்றாலும், மூர்க்க குண முடையவளென்றாலும், சொல்லும்போது அவனது விகார குணங்களெல்லாம் அவனைப் பற்றாமலிருப்பதுபோல அந்நமயகோஶ ஸம்பந்தமான ஜாதி குல கோத்ர ரூப நாமாதி விகாரங்களும், ப்ராணமயகோஶ ஸம்பந்தமான பசி தாஹம் முதலாகிய விகாரங்களும், மனோமய கோஶ ஸம்பந்தமாகிய ஸங்கல்ப விகல்பாதி விகாரங்களும், விஜ்ஞானமய கோஶ ஸம்பந்தமான கர்த்ருத்வாதி விகாரங்களும், ஸாக்ஷியாய் ஆத்மஸ்வரூபனாயிருக்கும் தன்னைப் பற்றாது. ஆனால், பசு கன்று பார்யை முதலானவைகள் தன்னுடன் கூடாமல் வேறு வஸ்துக்களாயிருக்கின்றன.

ஆதலால், தான் வேறு தன் பசுக்கள் வேறு என்று அறியலாம். ஆத்மா, பஞ்சகோசங்களுடன் கூடச் சேர்ந்திருக்கின்றது. ஆதலால், அது பஞ்ச கோசங்களுக்கு வேறாயிருக்கின்றதென்று எவ்விதமாய் அறியலா மென்றால் :—

ஸ்ரு ॥ "பாஹ்யத்ருஷ்டிர்நேத்ரம் அந்தர்த்ருஷ்டிர்புத்தி
பாஹ்யத்ருஷ்ட்யா ஜ்ஞாதமசக்யா அபிபதார்த்தா:।
அந்தர்த்ருஷ்ட்யா ஜ்ஞாதும் சக்யந்தே."

என்னும் ஸ்லோகரீதியாய் பாஹ்ய (வெளி) த்ருஷ்டி நேத்ரங்களாகவும், அந்தர் (உள்) த்ருஷ்டி புத்தியாகவும் இருக்கின்றன. நேத்ரங்களால் அறிவதற்குக் கூடாத விஷயங்களை அந்தர் (உள்) த்ருஷ்டியாகிய புத்தியினால் அறியலாம். அஃதெப்படியென்றால், ஜலம் உஷ்ணம் இவ்விரண்டும் கலந்திருந்தபோதிலும் கைகளால் தொட்டு உஷ்ணம் வேறு ஜலம் வேறென்று புத்தியினால் அறிவதுபோலவும், சுவரின்மீது எழுதப்பட்ட சித்ரங்கள் சுவருடன் கலந்து ஒன்றாய்த் தோன்றிக் கொண்டிருந்த போதிலும் சுவர் வேறு சித்ரம் வேறென்று புத்தியினால் அறிவது போலவும் ஆத்மா வேறு பஞ்ச கோசங்கள் வேறென்று புத்தியினால் அறியலாம்.

"ஜலகதஸூர்ய ப்ரதிபிம்பம் ஜலவ்ருத்தௌ வர்த்ததே
ஜலஹ்ராஸே ஹ்ரஸதி ஜலசலனே சலதி
ஜலபேதே பித்யத இத்யேவம் ஜலதர்மாநுவிதா
யிபவதி நதுபரமார்த்த: ஸூர்யஸ்ய தத்வ
மஸ்தி ஏவம் பரமார்த்ததோ விக்ருதமேகரூப
மபிஸத் ப்ரஹ்ம தேஹாத்யுபாத்யந்த: பாவாத்
பஜத இவோபாதிதர்மான் வ்ருத்தீஹ்ராஸாதீந்."

ஜலத்தில் ப்ரதிபலிக்கும் ஸூர்யபிம்பம் ஜலம் வ்ருத்தி அடையவடைய அதுவும் வ்ருத்தி அடைகின்றது; ஜலம் குறையக்குறைய அதுவும் குறைந்துவிடுகின்றது; ஜலம் சலித்தால் அதுவுஞ் சலிக்கின்றது; ஜலம் பின்னமானால் அதுவும் பின்னமாகின்றது. இப்படி ஜலதர்மத்தை அநுசரித்துத் தோன்றுகின்றதே யொழிய, யதார்த்தமாய் ஸூர்யனுக்கு

அலைகள் எப்படி உண்மையன்றோ, எப்படி அவனைப் பற்றாதோ அப்படியே தார்ஷ்டாந்தத்தில் அந்நமயகோச இஷ்டமான ஜீவாத்ம மநுஷ்யத்வாதி தர்மங்களை ப்ராணமய கோச இஷ்டமான க்ஷுத்பிபாஸாதி குணங்களும், மனோமயகோச இஷ்டமான ஸங்கல்பாதி தர்மங்களும் விஜ்ஞானமயகோச இஷ்டமான கர்த்ருத்வாதி குணங்களும், ஆனந்தமயகோச இஷ்டமான போக்த்ருத்வாதி விகாரங்களும் யதார்த்தமன்று. அந்தரத்தில் உபாதிகள் இருப்பதால் தோற்றமேயொழிய யதார்த்தமாயில்லாத ஸத்ரூபனும் பஞ்சகோச வ்யதிரிக்தனும் ஸாக்ஷியுமான தன்னைக் காலத்ரயத்திலும் பற்றுதென்றறிக. செத்தையை நீக்கித் தர்ப்பையைக் கைக்கொள்ளுமாறு பஞ்சகோசத்திற்கு வ்யதிரிக்தமாயிருக்கும் ஆத்ம ஸ்வரூபத்தை விசாரணையினால் அடையவேண்டும். ஆதலால், இப்படி விசாரித்து அறிவதே பஞ்சகோச வ்யதிரிக்தஜ்ஞான மெனப்படும்.

பஞ்சீகரணம்.

பஞ்சமஹாபூதங்களில் ஒவ்வொரு பூதத்தையும் மற்ற பூதங்களுடன் சேர்த்தபோது பஞ்சீகரணமாயிற்று. எப்படியெனில் :—

ஆகாசத்தை இரண்டு பாகங்களாகப் பகுத்து அதில் ஒருபாகம் ஸமஷ்டிபாகமாயும் மற்றொருபாகம் வ்யஷ்டிபாகமாயும் செய்யவேண்டும். இவ்விதமாய் ப்ரதிபூதத்தையும் தனித்தனியே வெவ்வேறாகப் பாகிக்கவேண்டும். ஆகாசத்தினுடைய ஸமஷ்டிபாகம் ஜ்ஞாதாவாயிற்று. வ்யஷ்டி பாகத்தை நான்கு பாகங்களாகச் செய்து ஒவ்வொரு பாகத்தையும் தனித்தனி வாயுவுடன் சேர்த்தபோது மனஸும், அக்நியுடன் சேர்த்தபோது புத்தியும், ஜலத்துடன் சேர்த்தபோது சித்தமும், பூமியுடன் சேர்த்தபோது அஹங்காரமும் பிறந்தன.

வாயுவை மேற்சொல்லியதுபோல் இரண்டு பாகங்களாகச் செய்து, அதில் ஸமஷ்டிபாகம் வ்யானவாயுவாகவும், மற்றைய வ்யஷ்டிபாகத்தை நான்கு பாகஞ்செய்து ஒருபாகத்தைப் பூமியுடன் சேர்த்தபோது ப்ராணனும், ஜலத்துடன் சேர்த்தபோது அபானனும், அக்நியுடன் சேர்த்தபோது ஸமானனும், ஆகாஶத்துடன் சேர்த்தபோது உதானனும் பிறந்தன.

தேயுவை முன்போலவே இரண்டு பாகஞ்செய்து அதில் ஸமஷ்டிபாகத்தைச் சக்ஷுஸாகவும், மற்றைய வ்யஷ்டி பாகமாகிய நான்கையும் வாயுவுடன் சேர்த்தபோது த்வக்கும் (தேஹசர்மம்), ஆகாஶத்துடன் சேர்த்தபோது ஶ்ரோத்ரமும் (செவி) ஜலத்துடன் சேர்த்தபோது ஜிஹ்வையும் (நா), ப்ருதிவி (பூமி) யுடன் சேர்த்தபோது க்ராணமும் (மூக்கும்) பிறந்தன.

அப்புவை இரண்டுபாகஞ்செய்து அதில் ஸமஷ்டிபாகம் ரஸேந்த்ரியமாகவும், மற்றைய வ்யஷ்டிபாகமாகிய நான்கையும் ப்ருதிவியுடன் சேர்த்தபோது கந்தமும், தேயுவுடன் சேர்த்தபோது ரூபமும், வாயுவினுடன் சேர்த்தபோது ஸ்பர்ஶமும், ஆகாஶத்துடன் சேர்த்தபோது ஶப்தமும் பிறந்தன.

ப்ருதிவியை இரண்டுபாகஞ்செய்து அதில் ஸமஷ்டிபாகம் பாயுவிந்த்ரியமாகவும், மற்றைய வ்யஷ்டிபாகம் நான்கையும் அப்புடன் சேர்த்தபோது மானஸேந்த்ரியங்களும், தேயுவுடன் சேர்த்தபோது வாக்கும், வாயுவுடன் சேர்த்தபோது ஹஸ்தமும், ஆகாஶத்துடன் சேர்த்தபோது பாதமும் உண்டாயின. இவ்வகையில் இருபத்தைந்து தத்வங்கள் உண்டாயின. இவைகள் யாவும் ஆத்மாவை அறியமாட்டா. ஆகையால், இவைகள் ஜடமென்று சொல்லப்படும். மேலும் இந்தப் பூததேஹம் மரித்தவுடனே இத்தேஹத்திலிருக்கும் பஞ்சபூதங்களும் அதுவதுவே தனித்தனியாக அந்தந்தப் பூதங்களில் சேர்ந்துவிடும். மறுபடியும் ஜீவன், வேறு ஶரீரத்தை அடையும்போது அவனவன் கர்மானுஸாரமாய் எந்தத் தாயின் கர்ப்பத்தில் ஜனிக்க வேண்டுமோ அந்தக்கர்ப்பத்தில், பஞ்சபூதங்க (ப்ருதிவி அப்பு

தேயு வாயு ஆகாஶங்க)ளால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஸ்தூல ஶரீரத்தில்போய் ப்ரவேசித்து மறுபடியும் ஶிசுவாய் ஜனிக்கும். ஆத்மா, ஜ்ஞானஸ்வரூபனானபடியால் சித்தென்று சொல்லப்படுவன்.

ஸ்தூலதேஹ பஞ்சீகரண அந்தஃகரண த்ரிகுணங்கள்.

இச் ஶரீரம், ப்ருதிவி அப்பு தேயு வாயு ஆகாஶமென்னும் பஞ்சபூதங்களால் உண்டாக்கப்பட்டது.

"அஸ்திசர்ம நாடீரோம மாம்ஸஞ்சேதி ப்ருதிவ்யம்ஶா:
மூத்ர ஶ்லேஷ்மரக்த ஶுக்ல ஸ்வேதா: அபம்ஶா:
க்ஷுத் த்ருஷ்ணாலஸ்ய மோஹ மைதுநா அக்நே:
ப்ரசாரண விலேகந ஸ்தூலாக்ஷ்யுந்மேஷநிமேஷாதி வாயோ:
காமக்ரோத லோபமோஹ பயாந்யாகாஶஸ்ய."

[ஶாரீரகோபநிஷத்.]

அஸ்திகள் சர்மம் நரம்பு ரோமம் மாம்ஸம் இவ்வைந்தும் ப்ருதிவியினுடைய அம்ஶம். மூத்ரம் கபம் ரக்தம் ஶுக்லம் வியர்வை இவ்வைந்தும் ஜலாம்ஶம். பசி ஆசை நித்ரை அல்லது ஆலஸ்யம் மோஹம் மைதுநம் இவ்வைந்தும் அக்நியாம்ஶம். நடப்பது அசைவது எழுவது கண்ணிமைகள் மூடுவது திறப்பது இவைகள் வாயுவாம்ஶம். காமம் க்ரோதம் லோபம் மோஹம் பயம் இவ்வைந்தும் ஆகாஶாம்ஶமாகும்.

ஶ்ரு || "மநோபுத்தி ரஹங்காரஶ்சித்த மித்யந்த:கரண
சதுஷ்டயம் தேஷாம் க்ரமேண ஸங்கல்ப விகல்பாத்யவ
ஸாயாபி மாநாவதாரண ஸ்வரூபாஸ்தைதே விஷயா:
மநஸ்தாநம் களாந்தம் புத்தேர்வதநம் அஹங்காரஸ்ய
ஹ்ருதயம் சித்தஸ்ய நாபிரிதி."

[ஶாரீரகோபநிஷத்.]

மனம் புத்தி சித்தம் அஹங்காரம் என்னும் இந்நான்கும் அந்தஃகரண சதுஷ்டயம். இதுவே, அந்தரிந்த்ரியங்களென்று சொல்லப்படும். மனம், ஸங்கல்பவிகல்பங்கள் செய்துகொண்டிருக்கும். புத்தி, இது நல்லது இது கெட்டதென்று அறிந்து நிஶ்சயிக்கும். சித்தம், இது எப்போதும் விஷயபோகங்களை ஸ்மரித்துக்கொண்டிருக்கும். அஹங்காரம், இதன் குணம் யாதெனில், நானேகர்த்தன் என்னைவிட அதிகப்பட்டவன் எவனுமில்லையென்று அபிமானித்து கார்யாகார்யங்களை விசாரிக்காமல் தன்னிஷ்டம்போல் ஸர்வகாரியங்களையும் செய்துகொண்டிருக்கும். இந்த மனோ புத்தி சித்த அஹங்காரங்கள் ஒரு ஸ்வரூபமாய்க் கூடினதே அந்தஃகரணமென்று சொல்லப்படும்.

ஶ்ரு || "ஸாத்விக ராஜஸ தாமஸ லக்ஷணாநி த்ரயோகுணா:
அஹிம்ஸா ஸத்யமஸ்தேயம் ப்ரஹ்மசர்ய பரிக்ரஹா:
அக்ரோதோ குருஶுஶ்ரூஷா ஶௌசஸந்தோஷ
ஆர்ஜ்ஜவம் அமாநித்வ மதம்பித்வா மஹிம்ஸதா ஏதே
ஸர்வகுணம் ஜ்ஞேயாஸ்ஸாத்விகஸ்ய விஶேஷத:."

"அஹங்கர்த்தா ஸ்மயஹம் போக்தாஸ்ம்யஹம்
வக்தாபிமாநவாந் ஏதே குணா ராஜஸஸ்ய புரோச்யந்தே
ப்ரஹ்மவித்தமை:."

"நித்ராலஸ்யே மோஹராகௌ மைதுநம் சௌர்யமேவச
ஏதே குணாஸ்தாமஸஸ்ய ப்ரோச்யந்தே ப்ரஹ்மவாதிபி:."

"ஊர்த்வே ஸாத்விகோ மத்யே ராஜஸோ
தஸ்தாத்தாமஸ இதி ஸம்யக் ஜ்ஞாநம் ஸாத்விகம்
தர்மஜ்ஞாநம் ராஜஸம் திமிராந்தம் தாமஸமிதி."

[ஶாரீரகோபநிஷத்.]

ஸாத்விக ராஜஸ தாமஸமெனக் குணங்கள் மூன்றாம்.

ஸாத்விகம் :—ஜீவஹிம்ஸை செய்யாமலிருப்பது, ஸத்யமாயிருப்பது, களவுசெய்யாமலிருப்பது, ப்ரஹ்மசர்யம், அபரிக்ரஹம், கோபமில்லாமலிருப்பது, குருஶுஶ்ரூஷை, ஶௌசம், ஸந்தோஷம், ஸதாசாரம், ப்ரதிஷ்டையில்லாமலிருப்பது, டம்பமில்லாமலிருப்பது, ஜீவகாருண்யமாயிருப்பது ஆகிய இவை முதலாகிய குணங்களுடையவன் ஸாத்விகன். இக்குணத்தை அடைவதற்கு,

அந்நத்தை மந்த்ரபூர்வகமாகப் பூஜித்தல்.

"ஓம் பூர்புவஸ்ஸுவ:, ஓம் தத்ஸவிதுர்வரேண்யம், பர்கோ தேவஸ்யதீமஹி, தியோயோந: ப்ரசோதயாத்" இந்த நான்கு மந்த்ரங்களைச்சொல்லி ஜலத்தை அந்நத்தின்மீது ப்ரோக்ஷித்தால் (தெளித்தால்) அது ஸுத்தியாகின்றது. பிறகு கொஞ்சம் ஜலம் கையில் விட்டுக்கொண்டு,

"ருதம்த்வா ஸத்யேந பரிஷிஞ்சாமி."

என்றுசொல்லி இலைசுற்றிலும் ஜலம்விடவேண்டும்.

இவ்விதமாய் விட்டபிறகு மறுபடியும் கொஞ்சம் ஜலம் கையில் விட்டுக்கொண்டு,

"அம்ருதோபஸ்தரணமஸி."

என்றுசொல்லி அந்தத் தீர்த்தத்தைச் சாப்பிடவேண்டும். சாப்பிட்டபிறகு பருப்பு பதார்த்தமில்லாத வெறுஞ்சாதத்தில் நெய்விட்டு, பெருவிரல் ஆள்காட்டிவிரல் நடுவிரல்களால் கலந்து மூன்று விரல்களாலும் நனைந்து அந்நத்தை எடுத்து வாய் திறந்து பற்களில்படாமல்,

"ஓம் ப்ராணாயஸ்வாஹா
ஓம் அபாநாயஸ்வாஹா
ஓம் உதாநாயஸ்வாஹா."

என்று சொல்லிக்கொண்டே மூன்று விரல்களாலும் எடுத்த அந்நத்தை வாயில்போட்டு ருசிஅறியாமல் விழுங்கி பஞ்சப்ராணன்களுக்கும் ஆஹுதிசெய்து (ஆஹுதி என்பது, எரிந்துகொண்டிருக்கும் அக்நியில்போடுவது.) பிறகுபதார்த்தங்

களுடன் கலந்து போஜனம் செய்யவேண்டும். செய்துமுடிந்தவுடன் கையில் கொஞ்சம் ஜலம்விட்டு "அம்ருதாபிதானமஸி" என்றுசொல்லி அந்தத் தீர்த்தத்தைச் சாப்பிடவேண்டும். அப்படிச் சாப்பிடுவதனால் சாப்பிட்ட பதார்த்தங்களெல்லாம் அம்ருதமாய்விட்டனவென்னும் பாவனையேயாம்.

இப்படிச் செய்வதனால் என்னகுணங்கள் உண்டாகுமென்றால், துன்மார்க்கவ்ருத்தியில் த்ரவ்யம் ஸம்பாதிக்க இடங்கொடாமல் ந்யாயமாய் ஸம்பாதிக்க எண்ணம் உண்டாய், அப்படி ஸம்பாதித்த த்ரவ்யத்தினால் பதார்த்தம் வாங்கிச் சமைத்து பகவானுக்கு ஆராதனைசெய்து மிகுதியான சேஷத்தை நான் புஜிக்கின்றேன் என்றும், நான் புஜிக்கும் ஆஹாரம் அந்யாயமாய் ஸம்பாதித்ததல்ல ந்யாயமாய் ஸம்பாதித்தது என்று த்ருடவைராக்யம் ஏற்படும். ஆதலால், முன் சொல்லியது போல் ப்ரஹ்ம க்ஷத்ரிய வைஸ்ய ஸூத்ரர் முதலாகிய நான்கு வர்ணஸ்தர்களும் அன்னத்தை மந்த்ரபூர்வகமாய் ஸுத்திசெய்து போஜனம் செய்யவேண்டும்.

இதை வாசிக்கும் ஸ்த்ரீ புருஷர்களெல்லோரும் மத்ஸ்ய மாம்ஸாதிகளை நிவர்த்திசெய்து ஸுசியுடன் பதார்த்தங்களைச் சமைத்து ப்ரதிதினம் காலைமாலைகளில் பகவானுக்கு ஆராதனைசெய்து அந்த சேஷத்தைப் புஜித்துவரவேண்டும். அப்படிப்புஜிப்பதனால் பதார்த்தங்களிலுள்ள தோஷங்களெல்லாம் பகவானுக்கு அர்ப்பணமாய்விடுகின்றன. மத்ஸ்ய மாம்ஸாதிகளை புஜிப்பதனால் பாபம் ஸித்திக்கும். ஏனென்றால், பகவான் பிபீலிகாதி (கண்களுக்குக் காணப்படாத சிறியபுழு) முதல் ப்ரஹ்மதேவன்வரையில் ஸகலசராசர ஜந்துக்களிலும் வ்யாபித்திருக்கின்றான். எந்த ஜந்துக்களை ஹிம்ஸித்து புஜித்தாலும் ஈஸ்வரனையே ஹிம்ஸித்தவனாகின்றான். ஆதலால், எந்த ஜீவ ஜந்துக்களையும் ஹிம்ஸித்து புஜிக்கலாகாது.

சில மனிதர்கள், கஸாயித்தொழில் செய்யப்பட்டவர்கள் ஆடுமாடுகளை ஹிம்ஸிக்கின்றார்களேயொழிய நாங்கள் ஹிம்ஸிப்பதில்லை; ஆதலால், அந்தப்பாபம் கஸாயித்தொழில் செய்பவனைச் சேருகின்றதேயன்றி எங்களைச் சேரமாட்டாதென்று சொல்லுகின்றார்கள். நல்லது அவைகளைப் புஜிப்பவர்கள் இருப்பதனாலல்லவோ கஸாயித்தொழில் செய்பவன் ஆடுமாடுகளை ஹிம்ஸிக்கின்றான். அவைகளைப் புஜிப்பவர்கள் இல்லாவிட்டால் அவன் ஏன் அவைகளை ஹிம்ஸிக்கின்றான்? திருப்பதி மலையின்மீது ஏதாகிலும் கஸாயித்தொழில் செய்கின்றார்களா? இல்லையல்லவா? ஏன்? அதை புஜிப்பவர்கள் அவ்விடம் இல்லாததனால் ஜீவஹிம்ஸை செய்வதில்லை; அதுபோலவே, ப்ரபஞ்சமெங்கும் புஜிக்காம லிருப்பார்களாகில் கஸாயித்தொழில் செய்பவனுக்கு வேலையேயிராது. ஆதலால், அந்தப் பாபம் சாப்பிடப்பட்டவர்களைப் பற்றுமேயொழிய கஸாயித்தொழில் செய்யப்பட்டவனைப் பற்றாது.

மற்றும் சிலர், ஆடு கோழி முதலானவைகளை நாம் புஜிப்பதற்காகவே ஸ்ருஷ்டி செய்யப்பட்டிருக்கின்றது என்று வாதிப்பார்கள். இது அறியாமை. பகவான் எண்பத்துநான்கு லக்ஷ ஜீவராசிகளையும் ஸ்ருஷ்டி செய்திருக்கின்றார். அதில் ஆடு கோழிகளும் சேர்ந்திருக்கின்றதேயொழிய மனிதர்கள் புஜிப்பதற்காக அல்ல; இவர்களின்முன்னோர் மாம்ஸங்களைப் புஜித்துக்கொண்டே வந்தபடியால் அது பரம்பரா வ்ருத்தியாய் வந்துகொண்டேயிருக்கின்றது. மாம்ஸம் புஜித்துப் பழக்கமாய் விட்டபடியால் விடுவதற்கு மனமில்லாதவர்களாய் முன்சொல்லிய குதர்க்கங்களைச் சொல்லி வாதாடுகிறார்கள். ப்ராஹ்மணவம்ஸத்தில் பிறந்தவர்களுக்கு இவ்வித துரப்யாஸம் ஏதாகிலும் உண்டா? இல்லையல்லவா? ஏன்? அவர்களின் வம்ஸ பரம்பரையாய் வந்துகொண்டிருக்கும் தாய்தந்தைகள் இந்த துரப்யாஸத்தை அவர்களின் வீட்டில் செய்யாததனால் அவர்கள் மாம்ஸத்தைப் பார்த்தவுடன் அவர்களின் ஸரீரம் அருவருத்து மயிர்க்கூச்சலையடைகிறது. இதுவே பூர்வவாஸனை என்று சொல்லப்படும். இந்த விஷயங்களை

எல்லாம் இந்நூலில் 'காமஸ்வரூபம்' என்னும் தலைப்பின் கீழ் விரிவாய்க்காணலாம். (பக்கம் 65) மாம்ஸம் புஜிக்கப்பட்டவர்களின் மீது பகவானுக்கு க்ருபை உண்டாகமாட்டாது. மோக்ஷத்தைக் கோரப்பட்டபுருஷர்களெல்லோரும் மாம்ஸபக்ஷணையை முதல் நிவர்த்திசெய்யவேண்டும். நிவர்த்திசெய்வதனால் ஜீவகாருண்ய முண்டாகும். ஜீவகாருண்ய முண்டாவதனால் மோக்ஷப்ராப்தி ஸித்திக்குமென்று அறிவீர்களாக.

ராஜஸம் :—நான்கர்த்தன், நான்போக்தன், நான்ஸக்தன், என்று அஹங்காரங்கொண்டிருப்பவன் ராஜஸன்.

தாமஸம் :—நித்ரை, ஆலஸ்யம், மோஹம், ராகம், மைதுனம், சோரத்வம் ஆகிய இவை முதலான குணங்களுடையவன் தாமஸன். உத்தமம் ஸாத்விககுணம். மத்யமம் ராஜஸகுணம். அதமம் தாமஸகுணம்.

ஸாத்விககுணம் :—பரிசுத்த குணமுண்டாய் நிவர்த்தி மார்க்கமும் அசஞ்சல பகவத்பக்தியும் குருபக்தியும் ஸாதுஜன விஸ்வாஸமும் அபேத ப்ரஹ்மஞ்ஞானமும் உண்டாக்கும்.

ராஜஸகுணம்:—ப்ரவர்த்தி மார்க்கமும் அதாவது காம்ய கர்மாநுஷ்டானமும் அதன் ஸம்பந்தமான தேவதா உபாஸனைகள் முதலானவைகளை உண்டாக்கும்.

தாமஸகுணம் :—ஈஸ்வரனில்லை என்னும் நாஸ்திகபுத்தியும் அஹங்காரமும் அவிவேக அந்தகாரமும் உண்டாக்குவதேயாம்.

கர்ப்பத்தில் பிண்டம் தரிப்பது.

ச்லோ || "ஷட்விதோ ரஸோ ரஸாச்சோணிதம்
சோணிதாந் மாம்ஸம் மாம்ஸாந்
மேதோமேதஸோஸ்நாயவஸ்நாயுப்யோமஜ்ஜாமஜ்ஜாயாஸ்ஸுக்லம்."
[கர்ப்போபநிஷத்.

ஜீவராசிகளின் ஸரீரத்தில் ஆறுவிதரஸங்களுண்டு. புஜிக்கும் ஆஹாரத்திலிருந்து ரஸம் உண்டாகின்றது. அந்தரஸம் ரக்தரூபத்தை யடைகிறது. அந்த ரக்தம், மாம்ஸத்திலும், மாம்ஸத்திலிருந்து கொழுப்பிலும், கொழுப்பிலிருந்து அஸ்திகளிலும், அஸ்திகளிலிருந்து மூளையிலும் ப்ரவேசித்து, மூளையிலிருந்து ஸுக்லமாக மாறுகின்றது. உடம்புக்கு ரக்தம் கண்டினால் ஒருதுளி ஸுக்லம் உண்டாகின்றது. இப்படிப்பட்ட ஸுக்லம், ஒரு ஸம்போகத்திற்கு முப்பது துளிகளுக்குமேல் செலவழிந்து விடுகின்றது. அதனால் ஏழுரைப்படி ரக்தம் நஷ்டமாய்விடுகின்றது. ஆதலால், மாத ருதுகாலங்களில் அதாவது மாதவிடாயான பதினாறுதினங்களுக்குள் இரண்டு தினங்களுக்குமேல் ஸம்போகம் செய்யலாகாது. ஸம்போக காலத்தில் மனது வ்யாகுலமாய் இருக்கலாகாது. அப்படி யிருப்பாராகில் அவர்களுக்கு எப்படிப்பட்ட குழந்தைகள் ஜனிக்குமென்றால்,

ச்லோ || "வ்ருத்யஜுகுணாஹி ப்ராக்ருதி
ஸ்தோஷபித்ருஜுகுண ப்ராஜா
வ்யாகுலிதமநோ ப்யாமந்தா: கஞ்ஜா:
குப்ஜாவாமநாவ்யங்காஜாயந்தே." [கர்ப்போபநிஷத்.]

காரணத்துக்குத் தகுந்த காரியம் உண்டாகின்றது. ஆதலால் சித்தவ்ருத்திக்குத் தகுந்த குழந்தைகள் ஜனிக்கின்றன. அதாவது, ஸ்த்ரீ புருஷர்கள் கூடும்போது மனம் ஸந்தோஷமில்லாமல் வ்யாகுலமாயிருந்தால் அவர்களுக்கு கூன் குருடு நொண்டி கோணல் முதலாகிய அங்க ஹீனமுடைய குழந்தைகள் ஜனிக்கும். ஸம்போக காலத்தில் மனது வ்யாகுலமில்லாமலிருப்பதற்காக சிலர் தம் படுக்கையறை முழுமையும் மிக ஸௌந்தர்யமுள்ள படங்களை அமைத்து வைப்பது வழக்கம். ஏனென்றால், அப்படங்களின் உருவங்களை ஸதா பார்த்துக்கொண்டிருப்பதனால், அவ்வுருவங்களில் வைத்த மனது ரம்யமான புணர்ச்சிக்காலத்தில் அக்கருவிற்கு ஸௌந்தர்யத்தை

உண்டாகுமென்பது யாவரும் அறிந்த விஷயமே. மேலும் ஸ்த்ரீகள் ப்ரதி மாதமும் மாதவிடாய்வந்து ஸ்நாநம் செய்யும்போதெல்லாம், எவர்களின் முகத்தையும் பாராமல் ஸூர்யனைப் பார்க்கவேண்டுமென்று நமது முன்னோர்கள் நூல்களில் கூறியிருக்கின்றார்கள். அதை யோசிக்கையில் அக்காலத்தில் கருதரிக்கும் கருப்பை மலர்ந்திருப்பதென்றும், ஸ்நானம் செய்த நான்காநாள் ஐந்தாநாள் ஏழாநாள் புணரவேண்டுமென்றும் விதித்திருப்பதால் அக்காலத்தில் எந்த உருவம் எதிர்ப்படுகின்றதோ, அந்த உருவமே கருவில் அமையுமென்னுங் கருத்தால்தான் அவ்வாறு கூறியிருக்கின்றார்கள். மேற்கூறியபடி புணர்ச்சிக் காலத்தில் தாய் தந்தையர்களுக்கு உண்டாகும் குணபேதங்களைப் போலவும், எண்ணங்களைப் போலவும் பிள்ளைகளுக்கும் குணரூபங்கள் பேதிக்குமென்பதற்கு த்ருஷ்டாந்தமாக உலகத்தாருடைய சில வழக்கங்களைக் காட்டி நிரூபிக்கின்றோம்.

அவையாவன:—ஒரு பெண் குதிரையின் எதிரில் ஓர் விரையடித்த ஆண் குதிரையை நிறுத்தி அது த்ருஷ்டித்து மோஹித்தமாத்ரம் பெண் குதிரையின் கண்களைக்கட்டி விரையடித்த குதிரையை மறைத்து வேறு குதிரையைப் புணரவிடுத்தும், பின் புணர்ந்த குதிரையை மறைத்து முந்திய விரையடித்த குதிரையை முன்னிறுத்திப் பெண் குதிரையின் கண்களை யவிழ்த்தமாத்ரம் எதிரில் நிற்கும் விரையடித்த குதிரையைப் பார்த்து அதுவே தன்னைப் புணர்ந்ததாக நினைத்து நினைத்தவுடன் அதையொத்த குட்டியைப் போடும். ஆதலால் இதை வாசிக்கும் அன்பர்கள் யாவரும், தாம் சயனிக்கும் அறையில் ஸுந்தரமான படங்களை ஸ்த்ரீகளின் த்ருஷ்டிக்குக் காணப்படும் இடத்தில் வைத்து மிகவும் ஸந்தோஷமாயிருந்து ஸம்போகம் செய்வார்களாகில் அழகும் ஸாத்விக குணமும் ஈஸ்வர பக்தியுமுடைய குழந்தையைப் பெறுவார்கள். ஆண் குழந்தை வேண்டுமென்றால் ஆண் குழந்தையும், பெண்குழந்தை

வேண்டுமென்றால் பெண்குழந்தையும் பெற இதனடியில் சொல்லுகின்றோம், அதுபோல் ஸம்போகம் செய்வீர்களாக.

ஸ்ரு || "ஸப்தராத்ரோஷிதம் புத்புதம் பவதி
அர்த்தமாஸாப்யந்தரேண பிண்டோ பவதி
மாஸாப்யந்தரேண கடிநோ பவதி
மாஸத்வயேந ஸிர: குருதே.
மாஸத்ரயேண பாதப்ரதேஸோ பவதி
அத சதுர்த்தே மாஸே ஜடரகடிப்ரதேஸோ பவதி
பஞ்சமமாஸே ப்ருஷ்டவம்ஸோ பவதி
ஷஷ்டேமாஸே நாஸாக்ஷி ஸ்ரோத்ராணி பவந்தி
ஸப்தமமாஸே ஜீவஸம்யுக்தோ பவதி
அஷ்டமமாஸே ஸர்வஸம்பூர்ணோ பவதி
நவமே ப்ரஸவதே." [கர்ப்போபநிஷத்.]

"ஏதஸ்மாத்பி வேத்ரஜால மயமாயதந்தம் பமாஸே ஸ்திதம்
தேஹஸ்தே த்வி ஹஸ்தபாத பதப்ரோத்பூத தாராங்குரம்
பர்யாலய ஸ்யுதத்வ யௌவந ஜராவேலைதை ரனேகைர்ருதம்
பஸ்ய த்யத்தி ஸ்ருணோதி ஜிக்ரதி யதாகஸ்மாத் ததா கஸ்மதி."

ஆஹா! இந்த ப்ரபஞ்சத்திலுள்ள மாயா விசித்ர இந்த்ரஜாலவித்யையை என்னென்று சொல்லலாம்! மாதவிடாயான பின் 8, 10, 12, 14, 16 - இவ்விரட்டித்தநாட்களில் தாய்தந்தைகளிலுடைய ஸுக்ல ஸ்ரோணிதங்கள் இரண்டும் ஒன்றுசேர்ந்து, தாயின் கர்ப்பத்திலிருக்கும் கமலத்தில் பிந்துவாய்நின்று தரிக்கப்படுவது ஆணாகவும் - 5, 7, 9, 11, 13, 15 - இவ்வொற்றைப்பட்ட நாட்களில் தரிக்கப்படுவது பெண்ணாகவும் உத்பவிக்கும். அந்தஸமயத்தில், ஆணுக்கு இடைகலையும், (வலது பாகமும்) பெண்ணுக்கு பிங்கலையும், (இடது பாகமும்) ஸ்வாஸம் ஸ்த்ரீகளுக்கு நடந்துகொண்டிருக்கும். இரண்டு நாஸிகளிலும் ஸ்வாஸம் நடந்துகொண்டிருந்தால் அலியாய்ப் பிறப்பான். இருவருக்கும் ஸுக்ல ஸ்ரோணிதங்கள் வெளியானால்தான் பிண்டம் தரிக்குமென்று மநுஸ்ம்ருதியில் சொல்லப்பட்டிருக்கின்றது. அதாவது, மாதவிடாயான

பின் பதினாறுதினங்களுக்குள் பிண்டம் தரிக்கும்: அதற்கு மேல் தரிக்கப்படமாட்டாது. ஏனென்றால் மாதவிடாயான பதினாறுதினங்கள் வரையில் 'கமலம்' திறந்துகொண்டிருக்கும்; அதுஸமயம் ஶுக்லம்போய் ஶ்ரோணிதத்துடன் சேர்ந்தால் கர்ப்பம் தரிக்கும். பதினேழாவதுநாள் கமலத்தின்வாய் மூடிக்கொள்ளும். அப்போது ஶுக்லம் கமலத்திற்குள் செல்லாமல் வெளியாய்விடும். ஸ்த்ரீகளுக்கு மாதவிடாய்கின்றது, கர்ப்பம் தரித்ததுமுதல் ஶிஶு ஜனன காலம்வரையில் ஒருநாளும் தவறாமல் காலைமாலைகளில் ஓர் வெற்றிலையில் சிறிது குங்குமப்பூ வைத்து தாயானவள் சாப்பிட்டுவரவேண்டும். அவ்வாறுசாப்பிட்டுவந்தால் ஶிஶு, அழகுடையதாயும் கருப்பான் முதலாகிய ரோகங்கள் இல்லாததாயும் மிகவும் ஸுகமாய் வளர்ந்துவரும். அன்றியும், ஶிஶு பிறந்தவுடன் இந்நூலில் சொல்லியிருக்கும் கல்பத்தை ப்ரதிதினம் தவறாமல் ஓர் பாலடை காலையில் கொடுத்துக்கொண்டு வரவேண்டும். அவ்வாறு கொடுத்துவந்தால் எப்படிப்பட்ட வியாதிகளும் உண்டாகவேமாட்டா. இது அநுபவத்தில் ப்ரத்யக்ஷமாய் பார்த்து ஒவ்வொரு குடும்பத்திலுள்ள யாவத் ஸ்த்ரீகளுக்கும் சொல்லி இதுபோல் அப்யாஸம்செய்துவரும்படி [illegible]களுக்கும் சொல்வீர்களாக. பிண்டம் பதினாறுதினங்களுக்குள் தரிக்கும்[illegible]றிய அதற்குமேல் தரிக்கப்படமாட்டாது. ஏன்? ஏனென்றால் மாதவிடாயானபின் பதினாறுதினங்கள்வரையில் 'கமலம்' திறந்துகொண்டிருக்கும். பதினேழாவதுநாள் கமலத்தின்வாய் மூடிக்கொள்ளும். இவ்வாறுதரித்த ஏழுதினங்கள்வரையில் நீர்க்குமிழியைப்போலவும், பதினைந்துதினங்களில் பிண்டவடிவமாயும், ஒருமாதத்தில்கட்டிப்பிண்டமாயும், இரண்டாவது மாதத்தில் தலையும் மூளையும், மூன்றாவதுமாதத்தில் கால்களும் கைகளும், நான்காவதுமாதத்தில் வயிறும், ஐந்தாவதுமாதத்தில் முதுகெலும்புவிலாக்களும்ரோமங்களும், ஆறாவதுமாதத்தில் கண்கள் மூக்கு வாய் செவிகள் முதலாகிய ரந்த்ரங்களையுடைய அவயவங்களும் ஏற்படும். இப்படி ஏற்பட்டபிறகு, ஏழாவது

மாதத்தில் ஜீவன் ப்ரவேசிக்கின்றான். அப்போது, பிண்டம் தலைகீழாய்த்திரும்பும். பிண்டம் திரும்புவது தாய்க்கு நன்றாய்த் தெரியவரும். அப்போது தாயினுடைய ஜடராக்னி பாதை இல்லாமலிருப்பதற்காக 'ஸரஸ்தி' என்னும் பெயரையுடைய ஓர்குடலானது பிண்டத்தைச் சுற்றிக்கொண்டிருக்கும். எட்டு ஒன்பதாவது மாதங்களில் ஜ்ஞானோதயமாய் "நாநாயோநிஸஹஸ்ராணி, த்ருஷ்ட்வா சைவததாமயா, ஆஹாரா விவிதா புக்தா:, பீதாஶ்சவி விதாஸ்தநா:" என்னும் ஶ்ருதிரீதியாய் ஸ்தாவர ஜங்கமங்களாகிய எண்பத்துநான்கு லக்ஷம், அதாவது,

"ஸ்தாவரோ லக்ஷவிம்ஶத்ய ஜலஜோ நவலக்ஷ:
க்ரிமீணும் ருத்ரலக்ஷஶ்ச சாதுர்லக்ஷந்து மாநுஷ:
த்ரிம்ஶல்லக்ஷம் கவாதம்ச பக்ஷீணும் தஶலக்ஷ:"

வ்ருக்ஷாதிஸ்தாவரங்கள் 20 - லக்ஷம், ஜலத்திலுள்ள மத்ஸ்யாதி ஜலவர்க்கங்கள் 9-லக்ஷம், புழுமுதலாகிய க்ருமிவர்க்கங்கள் 11 - லக்ஷம், மநுஷ்யஜாதிபேதங்கள் 4 - லக்ஷம், கோக்கள்முதலாகிய ம்ருகவர்க்கங்கள் 30-லக்ஷம், பக்ஷிவர்க்கங்கள் 10 - லக்ஷம், ஆகமொத்தம் 84 - லக்ஷ ஜீவராஸிகளின் நானுயோனிகளில் பிறந்து பிறந்து உழன்று மரித்த தனது பூர்வ ஜன்மாந்தரங்களையெல்லாம் தான் பூமியில் ஜனிக்கும் வரையில் தாயின் உதரத்தில் மலமூத்ரஸ்தானங்களுக்கு இடையிலுள்ள கர்ப்பத்திலிருந்துகொண்டு தனக்குத்தானாகவே பின்வருமாறு துக்கித்துக்கொண்டிருக்கும்.

"ஐயோ! நான் எனது ஜன்மாந்தரங்களில் கொஞ்சமேனும் புண்யம்செய்யாமற்போனேன்; ப்ரபஞ்சாநுபவம் தெரிந்திருந்தும் என்னை யாவர் என்னசெய்வார் என்னும் கர்வத்தினால் நிஷ்காம்ய ஸத்கர்மங்களைச் செய்யாமற் போனேன்; இதரர்களை வஞ்சிப்பதற்காகவே காம்ய கர்மங்களைச் செய்தேன்; நிஷ்காம்ய ஸத்கர்மங்களைச் செவியிற் கேளாமலும், ஒருகால் கேட்டாலும் அதை மனதில் நிறுத்தாமல், பெரியோர்கள் ஸன்மார்க்க ஒழுக்கங்களைச் சொல்லியபோதெல்லாம் அவைக

ளைக்கேளாமல் என் இஷ்டம்போல் செய்வேனென்றுசொல்லி அவர்களை நிந்தித்து ஸத்கதியை விரும்பாமற்போயினேன்; அஜ்ஞானத்தினால் பரஸ்த்ரீகளை மோஹித்து அந்யாயமாய் அவர்களை மானபங்கஞ்செய்தேன்; அவிவேகத்தன்மையினால் அநேக பாபக்ருத்யங்களையும் செய்தேன்; குருவையும் பெரியோர்களையும் தாய்தந்தையர்களையும் நிந்தித்தேன்; தந்தை ஸம்பாதித்துப் பெண்பிள்ளைகளுக்குக் கொடுத்துப் பின்னுமதைக் கேட்க மறுபடியும் கொடாததனால் துக்கித்தேன்; இனி யிந்த மலமூத்ர கர்ப்பாசயத்தினின்றும் பூமியில் ஜநித்தவுடன் ஜ்ஞானம் அடைவதற்காக ஸத்குருவைநாடி ஸாங்க்யயோக பக்திமார்க்கங்களால் பரமாத்மாவைத் தரிசிப்பேன்" என்று இவ்விதமாக ஸ்மரித்துக்கொண்டிருக்கும் ஸமயத்தில் பத்துமாதங்களும்பூர்த்தியாய் பிண்டம் தாய்க்குப் பாதையை உண்டாக்கித் தநஞ்சயனெனும் வாயுவினால் தள்ளப்பட்டுப் ப்ரஸவகால ஸம்ப்ராப்தமாய்ப் பிண்டம் "ஜ்ஞாநாக் தேஜஸம் ப்ராப் நீர் யோநி மத்யம்ச கஸ்சதீ யோநிஸ்பர்ச மாத்ரேண ஜ்ஞாநரூபம் நஸ்யயா" தான் தாயின் கர்ப்பத்தில் கட்டுப்பட்டிருந்த பையிலிருந்து புறப்பட்டுப் பூமியில் ஜநித்தவுடன் வெளிஸ்பர்சம் (காற்றுப்) பட்டு பூர்வஜ்ஞானங்கெட்டு தன்னை மறந்திருக்கும் ஸமயத்தில் சவியுகஜலத்தை [illegible] முகத்தின்மீது தெளிக்க, க்வா! க்வா! க்வா! என்று வீறிடுகின்றது. அதாவது, எங்கே! எங்கே! எங்கே! எனக்குப் பூர்வஜ்ஞானமிருந்ததே அந்த ஜ்ஞானம் எங்கு போயிற்று என்று ப்ரமையான துக்கித்துக்கொண்டு நாளுக்குநாள் பால்ய யௌவன கௌமாரமென்னும் ஶரீரவிகாரங்களை மேன்மேலடைந்து ஒன்றையொன்று பார்த்துக்கொண்டும் தின்றுகொண்டும் கேட்டுக்கொண்டும் வாஸனை பார்த்துக்கொண்டும் சிரித்துக்கொண்டும் அழுதுகொண்டும் விளையாடிக்கொண்டும் பேசிக்கொண்டும் இப்படி விந்தைவிந்தைகளான அநேக கார்யங்களைச்செய்துகொண்டு, மறுபடியும் அகஸ்மாத்தாய் இருந்தாற்போலிருந்து எப்படி வந்ததோ அப்படியே சொல்லாமலே ஓடிப்போய்விடுகின்றது.

அஹா! ஜீவனில்லாத ஜடபதார்த்தமாகிய மாம்ஸமேயல்லவா இப்படி விந்தைவிந்தைகளான காமரூபங்களுடன் தோன்றி மறுபடியும் காமரூபங்கள் தோன்றாமல் மாயமாய் விடுகின்றது. இதைவிடப்பெருந்த இந்த்ரஜாலவித்தை வேறொன்றில்லை. இந்த்ரஜாலத்தைப்போன்ற இந்த மாயாப்ராந்தியினாலேயே நாநாவித ஜகத்து தோன்றுகின்றதேயல்லாமல் ப்ராந்தியில்லாதவர்களுக்கு மாயாஜகத்து இல்லவேயில்லை. எப்படியென்றால்:—"மாயாமய மிதமகிலம் ஜகத் ஜாயதே கப்ச தீதி ஜகத் இதம்ப்ரபஞ்சம் நாஸ்த்யேவ நோத்பந்நம் நோஸ்திதம் மாயா கார்யாதிகம் நாஸ்தி மாயாநாஸ்தி பயங்கஹி வந்த்யாகுமார வசநே பீதிஸ்சேத் அஸத்விதம் ஜகத்."

இந்த ஜகத்து மாயாப்ராந்தியினால் தோன்றுகின்றது. இந்த்ரஜாலம்போல் நாநாவித காமரூபங்களுடன் தோன்றி மறுபடியும் காமரூபங்கள் தோன்றாமல் அஸத்யமாய்ப்போலவே ஜகத்து. எப்படியென்றால் மனிதன் பிறந்தால் அவனுடன் கூடவே மாயாப்ரபஞ்சமும் பிறக்கின்றது; மரணமடைந்தால் மாயாப்ரபஞ்சமும் அவனுடன்கூடவே மறைகின்றது; மறுபடியும் அவன் பிறந்தால் அவனுடன்கூடவே இந்த மாயாப்ரபஞ்சமும் பிறக்கின்றது. இப்படி மாயாமயமான பலமுறைகளில் பிறந்துபிறந்து நசிக்க, மாயாப்ரபஞ்சமும் பலமுறைகளிற் பிறந்துபிறந்து நசிக்கின்றது. இந்த்ரஜாலத்தில் தோன்றும் வஸ்துக்கள் எப்படி அஸத்யமோ அதுபோல் மாயையும், இந்த மாயையினால் தோன்றும் காமரூபஜகத்தும் அஸத்யமே. மாயைக்குக்காரணம் மனம் மனஸிற்குக்காரணம் இந்த்ரியங்கள். ஆதலால்,

இந்த்ரியாணாம் ஹி சரதாம் யந்மநோ அநுவிதீயதே.
ததஸ்ய ஹரதி ப்ரஜ்ஞாம் வாயுர்நாவமிவாம்பஸி. கீதை-அ. 2. ஶ்-67.

மெய் வாய் கண்கள் மூக்கு செவிகளாகிய பஞ்சேந்த்ரியங்களிலும் எந்த இந்த்ரியத்தின் வழியாய் மனம் ப்ரவேசிக்கின்றதோ அதில் ஆசைப்படுகின்றது. அந்த இந்த்ரியம் அவனுடைய மனதை வசப்படுத்தி அந்த விஷயங்களில் ருசியை

உண்டாக்கித் தப்புமார்க்கங்களில் இழுக்கும். எப்படியெனில், ஜலத்தின்மீது மிதந்துகொண்டிருக்கும் படவை நடத்துபவன் சுக்கானால் திருப்பாவிட்டால் அந்தப்படவு போகவேண்டிய மார்க்கமாய்ப் போகாமல் தப்புமார்க்கத்தில் காற்றினால் எவ்வாறு இழுக்கப்படுமோ அதுபோலவே, புருஷனும் தன் மனமென்னும்படவை ஸன்மார்க்கத்தில் போகும்படி புத்தியென்னும் சுக்கானால் திருப்பாவிட்டால் அவனுடையமனம், இந்த்ரியங்களென்னும் காற்றினால் தப்புமார்க்கங்களில் இழுக்கப்படுவதற்குச் சந்தேஹமில்லை. இதற்குப்பின் விஷயங்களை கீதையில் விரிவாய்க்காணலாம்.

எவன்மனம் ஈச்வரனிடத்தில் சேர்க்கப்படுகின்றதோ, அவன்மனம் இந்த்ரியங்களுக்கு உட்படமாட்டாது. அப்படி உட்பட்டால், அவன் ஸ்ரேஷ்டமானஜ்ஞானம் கெட்டு விஷயாஸக்தியால் இழுக்கப்படுவான். ஆகலால்; இந்த்ரியங்கள் குதிரையைப்போன்றன, மனம் வண்டியைப்போன்றது. இதை ஸாரதி செய்பவன், மோக்ஷத்திற்கு த்ருடப்ரயத்நம் செய்துகொண்டிருக்கும் விவேகி. இந்த விவேகியானவன் புத்தியென்னும் கயிற்றைக் கடிவாளமாகப்போட்டு இந்த்ரியங்களென்னும் குதிரைகளை இழுத்துப்பிடித்தபோதிலும், நிற்காமல் அவனையும் அந்த இந்த்ரியங்கள் பலாத்காரமாய் விஷயங்களிற்பற்றி இழுக்கச்செல்லுதால் அந்த விவேகியானவன் என்னசெய்கின்றானென்றால், குதிரைகளென்னும் இந்த்ரியங்களை இழுத்துப்பிடிப்பதற்கு சக்தி இல்லாதவனாயிருப்பதால் நான் என்னும் வ்ருக்ஷத்தில் கட்டிவிடுகின்றான். அப்படிக்கட்டிவிடுவதனால், இந்த்ரியங்களென்னும் குதிரைகள் எவ்வளவு பலமுள்ளவைகளாயிருந்தபோதிலும் இழுத்துக்கொண்டுபோகமாட்டா. நான் என்னும் வ்ருக்ஷம் தேஹமல்ல; தேஹத்தின் மத்தியில் அந்தர்யாமியாயிருக்கும் ஆத்மா; அந்த ஆத்மாவில் மனதைக் கட்டிவிடவேண்டும். இதற்கு ஸ்ருதிப்ரமாணம்,—

"இந்த்ரியத்வார ஸங்க்ராஹ்யைர் அர்த்தைர்யை ராத்மலோலதாம்
ஸ்வயம் பக்த்யா ஸமாராத்ய ஜ்ஞாதம் ஸோயம் மஹாமதி!"

இந்த்ரியங்களை அதன் அதன் விகாரகார்யங்களில் போகவிடாமல் திருப்பி, ஆத்மநிஷ்டைசெய்வதே மஹாயாகம், காராடுகளாகிய வெள்ளாடுகளைக்கொன்று, அக்நிகுண்டத்தில் போட்டு பஸ்மம்செய்து புஜிப்பது யாகமல்ல. அதாவது; நமக்கு பஞ்சேந்த்ரியங்கள் உண்டு, அவையாவன:—மூக்கிந்த்ரியம் வாயிந்த்ரியம் செவியிந்த்ரியம் தேஹசர்மேந்த்ரியம் கண்ணிந்த்ரியம் என இந்த்ரியங்கள் ஐந்து. மனம், இவைகளில் ஸுகந்தமானவாஸனைகளை மூக்கிந்த்ரிய வழியாய் க்ரஹிக்கும், ருசிகரமாகிய பதார்த்தங்களை வாயிந்த்ரியவழியாய் க்ரஹிக்கும், தோடி காம்போதி பைரவி முதலாகிய ராகங்களை செவியிந்த்ரியங்களின் வழியாய் க்ரஹிக்கும், ஸீதோஷ்ணங்களை தேஹசர்ம இந்த்ரியவழியாய் க்ரஹிக்கும் ஆநந்திக்கின்றது. இந்நான்கு இந்த்ரியங்களும் புருஷனை அதோகதி செய்விப்பதில்லை. பின், எது செய்விக்கின்றதென்றால், கண்ணிந்த்ரியம் செய்விக்கின்றது. அதெப்படியென்றால், கண்ணிந்த்ரியம் எந்த வஸ்துக்களைப்பார்க்கின்றதோ அந்த வஸ்துக்களையெல்லாம் மனம் க்ரஹித்து அதை அடையவேண்டுமென்று துன்மார்க்கவ்ருத்தியில் ப்ரவேசித்து புருஷனை அதோகதிக்கு ஆளாக்கி-அநேக அனர்த்தங்களில் கொண்டுவந்துவிடும். ஆகலால், பஞ்சேந்த்ரியங்களிலும் கண்ணிந்த்ரியமே மஹாதுன்மார்க்கமானதென்று சொல்லலாம். இப்படிப்பட்ட இந்த்ரியங்களின் வ்ருத்தியையெல்லாம் அடக்கி மனதை ஆத்மநிஷ்டையில் நிறுத்துவதே மஹாயாகம்.

"ப்ராணேந்த்ரியாத்யந்தகரண குணாதே பரதரம் ஸச்சிதாநந்தமய
ஸர்வஸாக்ஷிகம் நித்யமுக்தப்ரஹ்மஸ்வரூபம் பரமபதம்."

[நிராலம்போபநிஷத்.]

பஞ்சப்ராணன்களும், மெய் வாய் கண்கள் மூக்குச் செவி என்னும் ஜ்ஞானேந்த்ரியங்கள் ஐந்தும், மனம் புத்தி சித்தம் அஹங்காரமென்னும் அந்தஃகரணங்கள் நான்கும் ஆகிய இவைகளுக்கெல்லாம் வேறாய், ஸச்சிதானந்த ஸர்வ ஸாக்ஷிய

யிருக்கும் ஆத்மாவே பரப்ரஹ்மம். அப்படிப்பட்ட ஆத்மாவில் மனதை ஸ்திரச்செய்வதே, பரமபதம் வைகுண்டம் கைலாஸம் என்று சொல்லப்படும்.

"அதஸ்ஸம்ஸாரவிஷய ஜாத ஸம்ஸர்கமேவ நரக:
ஸத்ஸம் ஸ்வர்க்க: ஸ்வர்க்க:." [நிராலம்போபநிஷத்.]

ஸம்ஸாரவிஷய வ்யவஹாரங்களில் அகப்பட்டுக்கொண்டிருப்பதே நரகம்: இதைவிட வேறு நரகமில்லை. ஸதா மனதை ப்ரஹ்மத்தில் ஸ்திரச்செய்வதே ஸ்வர்க்கம்: இதைவிட ஸ்வர்க்கம்: வேறில்லை

"ஸச்சிதாநந்த ரூபம் ஸ்வரூபம் ஜ்ஞாத்வா ஆசார்யோபதேசேன
ஸகேவலாத்மா தத்ஸம்ஸாரவிஷய ஸம்ஸர்கமேவ நரகம்."
[நிராலம்போபநிஷத்.]

ஸச்சிதாநந்த பரப்ரஹ்மமே ஆத்மாவென்றறிந்து ஸகலமும்மறந்து, ஆத்மானுபவ நிஷ்டையில் இருப்பதே பரமஸௌக்யம். பார்யா புத்ரர்கள் முதலான ஸம்ஸாரவிஷய ஸங்கல்பமே மஹாதுக்கம் என்று சொல்லப்படும். இப்படிப்பட்ட ஸம்ஸார துக்கத்தைக் கடந்து ஆனந்தத்தை யடைந்தவன் யாரென்றால்,—

"மநுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷு கச்சித் யததி ஸித்தயே
யததாமபி ஸித்தானாம் கச்சின் மாம் வேத்தி தத்த்வத:"

ஆயிரக்கணக்கான மனுஷ்யர்களில் ஒருவன் மாத்ரம் மோக்ஷத்திற்காக ப்ரயத்தனப்படுகின்றான்; இப்படி ப்ரயத்தனப்பட்டவர்கள் அநேக ஆயிரம் பெயர்களிருந்தாலும்; அப்படிப்பட்டவர்களில் ஒருவன்தான் என்னை யதார்த்தமாய் அறிகின்றான். அப்படிப்பட்டவன் யாரெனில்,—

"ய ஏவம் வேதாஹம் ப்ரஹ்மாஸ்மீதி
ஸ இதம் ஸர்வம் பவதி." [ப்ருஹதாரண்யோபநிஷத்.]

எவன் ஆத்மஸ்வரூபியாகிய நானே ப்ரஹ்மமென்று தெரிந்துகொள்ளுகின்றானோ, அவனே அந்த பரப்ரஹ்மஸ்வரூபமாகின்றான்.

"அயமாத்மா ப்ரஹ்ம." [மாண்டூக்யோபநிஷத்.]

இத்தேஹத்தில் அந்த:கரண ஸாக்ஷியாயிருக்கும் ஆத்மாவே பரப்ரஹ்மம்.

"பூதேஷு பூதேஷு விசித்ய தீரா:
ப்ரேத்யாஸ்மாத் லோகாத் அம்ருதா பவந்தி." [கேநோபநிஷத்.]

ஸமஸ்த ப்ராணிகளிலும் ஆத்மஸ்வரூபியாகிய பரப்ரஹ்மமே யிருக்கின்றதென்று தெரிந்துகொண்ட புண்யவான் எவனோ, அவன்தான் அந்தஜன்மத்திலேயே மோக்ஷஸித்தியை அடைவான். மோக்ஷமென்றால்,—

"யதா பஞ்சாவதிஷ்டந்தே ஜ்ஞானானி மனஸா ஸஹ
புத்திஶ்ச ந விசேஷ்டதே தாமாஹு: பரமாம் கதிம்."
[கடோபநிஷத்.]

ஶ்ரோத்ரங்கள் நேத்ரங்கள் முதலாகிய ஜ்ஞானேந்த்ரியங்களையும் மனஸையும் ஆத்மாவில்சேர்த்து, இதரவ்யாபாரங்களில்லாமல் ஸகல எண்ணங்களையும் மறந்து, நிஶ்சலனமாய் தன்மயமாயிருப்பதே மோக்ஷமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

"த்வமேவாஹம் நபேதோஸ்தி பூர்ணத்வாத் பரமாத்மன:."
[மண்டல ப்ராஹ்மணோபநிஷத்.]

நீயே நான், நானே நீ; நாம் இருவரும் ஸர்வபரிபூர்ண பரப்ரஹ்மமாகிய ஆத்மஸ்வரூபிகளே; நாம் இருவரும் ஏகபரப்ரஹ்மமே; நம் இருவருக்கும் ஸத்யமாய் எவ்விதபேதங்களும் இல்லை

ஸமம் ஸர்வேஷு பூதேஷு திஷ்டந்தம் பரமேஶ்வரம்
விநஶ்யத்ஸ்வ விநஶ்யந்தம் ய: பஶ்யதி ஸ பஶ்யதி. அ-13. ஶ்லோ 28.

தேவர்கள் ஜீவஜந்துக்கள் முதலாகிய ஆகாரபேதங்களில்லாமல், அந்தந்த தேஹேந்த்ரிய இயக்கங்களுக்கு ஈஶ்வரனாயிருக்கப்பட்ட பரமேஶ்வரனென்னும் ஆத்மாவை யதார்த்தமாய்த் தெரிந்துகொண்டவன் ஸம்ஸாரவிரக்தனாகின்றான்.

ஆத்மஸ்வரூபியாகிய நீயே பரப்ரஹ்மம், அந்த பரப்ரஹ்மமே நீ ஆதலால், ஸகல எண்ணங்களையும்விட்டு, ஆத்மஸ்வ

ரூபியாகிய நானே ப்ரஹ்மமென்று ஸதா ஆத்மாநுஸந்தானம் செய்துகொண்டிரு.

நீ தாயின்கர்ப்பத்தில் ஜநித்து வ்ருதா காலங்கழித்துச் சென்றுவிடாமல், இதுவரையில் சொல்லிவந்த உபநிஷத்வாக்யங்களையும், இனி சொல்லப்போகும் உபநிஷத்துக்களையும் நன்றாய் அறிந்து ஸ்வாநுபவத்திற்குக் கொண்டுவரவேண்டும்.

உபநிஷத்துக்களின் தாத்பர்யம்.

ஸம்ஸ்க்ருதபாஷையில் 'ஷதல்' என்னும் தாதுவிலிருந்து உபநிஷத்துக்களென்னும் பதம் உண்டாயிற்று. 'ஷதல்' என்றால் நாசனம்செய்யப்பட்டது. அதாவது அஜ்ஞானமென்னும் ஸம்ஸாரவ்ருக்ஷத்தை நிர்மூலமாய்க் கண்டித்து ப்ரஹ்ம லக்ஷணத்தையும் தத்வஜ்ஞானத்தையும் போதித்து ஜனனமரணங்களில்லாமற்செய்து, ப்ரஹ்மம் இப்பேர்ப்பட்டதென்று தெரிவித்து அஜ்ஞானத்தைப்போக்கடித்து ப்ரஹ்மைக்யத்தைப் போதிப்பதே உபநிஷத்துக்களென்று சொல்லப்படும்.

இந்த உபநிஷத்துக்கள் ஆதியில் மஹாப்ரளயத்தில் பரப்ரஹ்மமானது, ஸ்ரீமந்நாராயணமூர்த்திரூபமாய் அவதரித்து ஜலமத்தியில் * ஆலிலையின்மீது படுத்திருக்கும்படத்தில் காட்டியதுபோல் பவனித்துக்கொண்டு,

ஶ்லோ || "[illegible]
[illegible]."

* ஆலிலையின்மீது பவனித்துக்கொண்டிருப்பது என்று சொல்லும் குறி யாதெனில்:—ஸகல ஜீவராசிகளின் ஹ்ருதயகமலத்தில், தாமரைக்கமலம்போன்ற ஓர் கணியுண்டு. அதனை இரு பிளப்பாய்ப் பிளந்தபோது அது ஆலிலை வடிவமாயிருக்கும். அப்படிப்பட்ட கமலத்தில் ஜீவாத்மா வஸித்துக்கொண்டிருப்பதனால் அவனுக்கு ஆலிலையின்மீது பள்ளிகொண்டான் என்று பெயர் வந்தது.

என்னும் ஶ்ருதிவாக்யரீதியாய், உஶ்வாஸித்தபோது (ஶ்வாஸத்தை வெளியில்விட்டபோது) ருக், யஜுஸ், ஸாம, அதர்வணமென்னும் நான்கு வேதங்கள் உண்டாயின. அதில் கர்ம பக்தி இப்படிப்பட்டதென்றும் ஜ்ஞானாநுஷ்டானங்கள் இப்படிப்பட்டதென்றும் தெரிவித்து அதை உலகத்தில் ஶ்ருதி ஸ்ம்ருதிப்ரமாணங்களுடன்சொல்லியிருக்கின்றேன். ஆதலால், வேதங்கள் என்னுடைய ஆஜ்ஞாவாக்யங்களென்று அறிய வேண்டும். (இதுவிஷயம் ஸ்ரீ க்ருஷ்ணார்ஜுன ஸம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை முதற்பதிப்பு முகவுரை மூன்றாம்பக்கம் எட்டாவதுவரி பார்க்க.) அதிலிருந்து ருக் வேதத்தில் 21-ஶாகைகளும், யஜுர்வேதத்தில் 109-ஶாகைகளும், ஸாமவேதத்தில் 1000-ஶாகைகளும், அதர்வணவேதத்தில் 50-ஶாகைகளும், ஆகமொத்தம் ஆயிரத்து நூற்றெண்பது ஶாகைகள் உண்டாயின. இந்த ஆயிரத்து நூற்றெண்பது ஶாகைகளிலும் ஆயிரத்து நூற்றெண்பது உபநிஷத்துக்கள் உண்டாயின. இவைகளில், ருக்வேதத்திலிருந்து பத்தும்; யஜுர் வேதத்திலிருந்து ஐம்பத்தொன்றும், ஸாமவேதத்திலிருந்து பதினாறும், அதர்வணவேதத்திலிருந்து முப்பத்தொன்றும், ஆகமொத்தம் நூற்றெட்டு உபநிஷத்துக்களைமாத்ரம் எடுத்துக் கொண்டார்கள். ஏனென்றால், இந்த ஆயிரத்து நூற்றெண்பது உபநிஷத்துக்களையும் பார்ப்பதற்கு நமக்கு ஆயுர்ப்பாகம் போதாமலிருப்பதால் நாம் மோக்ஷத்தை அடைவதற்குவேண்டிய முக்யமான உபநிஷத்துக்களையெல்லாம் பரிஶோதித்துப்பார்த்தபோது நூற்றெட்டுபநிஷத்துக்கள்மாத்ரமே அகப்பட்டன, மனதை திருத்துவதற்காக எவை முக்யமான உபநிஷத்துக்களோ அவைகளில் சிலமாத்ரம் இந்நூலில் எழுதப்பட்டிருக்கின்றன. ஆதலால், ஓடித்திரியும்மனதை ஓடவிடாமல் திருத்தி நாமெல்லோரும் முக்தியடைய இதுதான் முக்யமான நூல்.

ரெயிலுக்குப்போகப்பட்டவன் தனக்குவேண்டிய வஸ்துக்களை ப்ரயாணத்திற்கு எப்படி ஸித்தப்படுத்திக்கொள்ளு

கின்றானோ அதுபோலவே, நம்முடைய ப்ரயாணகாலத்திற்கு வேண்டிய விஷயங்களையெல்லாம் தெரிந்துகொண்டு இது முதல் அப்யாஸம் செய்துகொண்டுவரவேண்டும்.

இதற்குத்ருஷ்டாந்தம்,—ஸ்ரீ க்ருஷ்ணபகவானை அர்ஜுனன் என்ன கேட்கின்றானென்றால், 'ஹே ஸ்வாமீ! மரண காலத்தில் க்ருஷ்ணாவென்று சொன்னால் மேலான பதவியை அடைவானென்று சொன்னீரல்லவா? அதுபோலவே மரண காலத்தில் நான் க்ருஷ்ணா என்று சொல்லுகின்றேன்' என்று சொல்லினன். அதற்குப்பகவான் சொல்லுகின்றார். 'ஓஹோ! அதுவா உனது அபிப்ராயம்! அப்படிக்கல்ல, நீ இப்பொழுது எந்த வஸ்துவின்மீது அதிகப்ரீதியை வைத்திருக்கின்றாயோ அந்தவஸ்துவே, உனது ப்ராணப்ரயாணகால ஸமீபத்தில் உன்னெதிரில் காணப்படும் சித்ரகுப்தபடத்தில் தோன்றுமேயொழிய, என்நாமஸ்மரணை உனக்கு உண்டாகமாட்டாது. ஆதலால் நீ இன்றுமுதல் ஸதாகாலமும் என்நாமத்தை ஸ்மரித்துக் கொண்டுவருவாயாகில் அந்த்யகாலத்தில் நீ ப்ரஜ்ஞை தப்பியிருந்தபோதிலும் அந்தஸமயத்தில் நான் உன்னுளே அந்தர்யாமியாயிருப்பதனால் என் நாமஸ்மரணை உன் ஜ்ஞாபகத்திற்கு வரும்படிச் செய்வேன். ஆதலால், இதுமுதல் என்னை ஸதா ஸ்மரித்துக்கொண்டேவரக்கடவாய்' என்றுசொல்லினார்.

இது எப்படியிருக்கின்றதென்றால், ரெயிலுக்குப்போகப்பட்டவன் பத்து நிமிஷங்களுக்குமுந்தியே போயிருக்கவேண்டும். ரெயில்வந்து நின்றபிறகு போய்ச்சேரப்பட்டவனுக்கு ரெயில் அகப்படாது. அதுபோலவே, நமது ப்ராணப்ரயாண காலம் ஸமீபித்து ஸ்மரணைதப்பியிருக்கும்போது நம்முடைய பந்துஜனங்களெல்லோரும் செவியினிடம் வந்து, அண்ணா! எனக்கென்னசொல்லுகின்றாய்? மாமா எனக்கென்னசொல்லுகின்றாய்? அப்பா எனக்கென்னசொல்லுகின்றாய்? என்று சிலரும், மற்றும்சிலர், ராமாவென்று சொல், க்ருஷ்ணாவென்று சொல், நாராயணாவென்றுசொல், கோவிந்தாவென்று சொல்

என்று உரத்த ஶப்தத்துடன் கூப்பிட்டுச் சொல்லுவார்கள். அந்தஸமயத்தில் ராமனென்றும் க்ருஷ்ணனென்றும் நாராயணனென்றும் கோவிந்தனென்றும்வந்து அவனுக்கு ஸஹாயம்செய்யப் போவதில்லை. இந்தவிஷயங்களைக்குறித்து மூந்திவரப்போகும் மஹோபநிஷத்தில், விரிவாய்க்காணலாம்.

"மாஸா பாவ்யமாரோதி தேஹகாம் யாதி தேஹத:
தேஹவாஸநயா முக்தோ தேஹதர்மைர் நலிப்யதே."

ஆதலால், இந்நூலில் சொல்லியிருக்கும் ராஜயோகமாகிய 'ஸோஹம்' மந்த்ரத்தை இடைவிடாமல் இராப்பகலாய் இன்று முதல் அப்யஸித்துவந்தால் மரணகாலத்தில் தான் ஸ்மரணை தப்பியிருந்தபோதிலும் தன்னில் ஸாக்ஷிபூதமாயிருக்கும் பரப்ரஹ்மத்தின் அம்ஶமாகிய ஆத்மா, கருணையுடையதாய் ஐயோ இதுவரையில் "ஸோஹம்" மந்த்ரத்தை ஸ்மரித்துக்கொண்டு வந்தானே, இவனைக் கைவிடலாகாதென்று எண்ணி இவன் ஸ்மரித்துக்கொண்டிருந்த "ஹம்ஸ" மந்த்ரத்தை ஜ்ஞாபகத்திற்கு வரும்படிச்செய்கின்றது.

இவ்வித அப்யாஸம்செய்வதை விட்டுவிட்டு, பத்து ஸ்நேஹிதர்களுடன் கூடிக்கொண்டு புட்பால், டெனிஸ், க்ரிகெட்டு, பாட்மிண்டன், ஸ்பேட், சதுரங்கம் முதலாகிய ஆட்டங்களை ஆடிக்கொண்டும் ஸந்தோஷமாய்ச் சிரித்துக்கொண்டும் ந்யூஸ் பேபர்களை வாசித்துக்கொண்டும் வ்ருதாகாலக்ஷேபம் செய்து கொண்டுவருங்காலில், மேற்சொல்லியவர்களில் எவராகிலும் ஒருவர் காயலாவாயிருக்கும்போது, ஐயோ! இன்னார் காயலாவாயிருக்கின்றாரே பாவம் என்று மற்ற ஒன்பது பேர்களும் கலந்து பேசிக்கொள்ளுகின்றார்கள். காயலாவாயிருக்கப்பட்டவன் மற்ற ஒன்பது பேரையும் நினையாமல் அவர்களைமறந்து ப்ரஜ்ஞைதப்பித் தன் ப்ராணகாலத்திலிருப்பான். ஆகையால், மேற்சொல்லிய ஆட்டங்களிலிருந்த போதிலும் பரப்ரஹ்மஸ்வரூபத்தில் மனதை நிறுத்தவேண்டுமென்பது இந்நூலின் கருத்து.

ஜாக்ரத் ஸ்வப்ந ஸுஷுப்தி துரீயாவஸ்தைகள்.

ஶ்ரு ॥ "ஜாக்ரத் ஸ்வப்ந ஸுஷுப்தி துரீயமிதி சதுர்விதாவஸ்தா:, ஜ்ஞானேந்த்ரிய கர்மேந்த்ரியாந்த:கரண சதுஷ்டய ஸம்யுக்தம் ஜாக்ரத், அந்த:கரண சதுஷ்டய ஸம்யுக்த ஸ்வப்ந:, சித்தைக கரண ஸுஷுப்தி:, கேவல ஜீவயுக்தமேவ துரீயமிதி."

[ஶாரீரகோபநிஷத்.]

1. ஜாக்ரத்தில் ஜாக்ரம், ஜாக்ரத்தில் ஸ்வப்நம், ஜாக்ரத்தில் ஸுஷுப்தி, ஜாக்ரத்தில் துரீயம்.

2. ஸ்வப்நத்தில் ஜாக்ரம், ஸ்வப்நத்தில் ஸ்வப்நம், ஸ்வப்நத்தில் ஸுஷுப்தி, ஸ்வப்நத்தில் துரீயம்.

3. ஸுஷுப்தியில் ஜாக்ரம், ஸுஷுப்தியில் ஸ்வப்நம், ஸுஷுப்தியில் ஸுஷுப்தி, ஸுஷுப்தியில் துரீயம்.

4. துரீயத்தில் ஜாக்ரம், துரீயத்தில் ஸ்வப்நம், துரீயத்தில் ஸுஷுப்தி, துரீயத்தில் துரீயம் என நான்கு 16. அவஸ்தைகளுண்டு.

1. ஜாக்ரத்தில் ஜாக்ரம் :—வார்த்தைகளைக் கேட்கும் போதாகிலும், அல்லது வேதாந்தஶ்ரவணம் செய்யும்போதாகிலும் ஶ்ரத்தையுடன் கேட்டு மறவாமலிருப்பது.

2. ஜாக்ரத்தில் ஸ்வப்நம் :—வேதாந்தத்தை பராமரிக்கையாய்க்கேட்டு அவ்விஷயத்தில் சிலவற்றை ஜ்ஞாபகத்திலிருத்தியும், சிலவற்றை மறந்தும் இதரர்களுக்கு சரியாய்ச் சொல்லத் தெரியாமலிருப்பது.

3. ஜாக்ரத்தில் ஸுஷுப்தி :—வேதாந்தத்தைக்கேட்க வேண்டுமென்று உட்கார்ந்து மனதை அவ்விஷயங்களில் நிறுத்தாமல் வேறு எண்ணங்களை எண்ணிக்கொண்டிருப்பதனால் கேட்டவைகளை இதரர்களுக்குச்சொல்ல ஜ்ஞப்தியில்லாமற் போவது.

4. ஜாக்ரத்தில் துரீயம்:—தத்வஜ்ஞானங்களை விசாரணை செய்து ஏகாந்தஸ்தலத்திலுட்கார்ந்து தான்கேட்ட விஷயங்களையெல்லாம் ஆலோசித்துக்கொண்டிருத்தல்.

5. ஸ்வப்நத்தில் ஜாக்ரம்:—ஸ்வப்நம் கண்டு எழுந்த பிறகு, தான் ஸ்வப்நத்திற்கண்ட விஷயங்கள் யாவற்றையும் மறவாமற் சொல்லுதல்.

6. ஸ்வப்நத்தில் ஸ்வப்நம்:—ஸ்வப்நத்தில்கண்ட விஷயங்களில் சில ஞாபகத்திலிருந்தும் சில இல்லாமலுமிருப்பது.

7. ஸ்வப்நத்தில் ஸுஷுப்தி:—ஸ்வப்நங்கண்டு எழுந்திருந்து அந்த ஸ்வப்நத்தில் தான்கண்ட விஷயங்கள் பூர்த்தியாய் ஞாபகத்திற்கு வாராமலிருப்பது.

8. ஸ்வப்நத்தில் துரீயம்:—தான் ஸ்வப்நத்திற்கண்ட நன்மை தின்மைகளை விசாரித்து ஸந்தோஷப்படாமலும், துக்காக்ராந்தனாகாமலும், இவைகளெல்லாம் மனோவ்யாபாரமென நிஸ்சயித்துக்கொண்டு ஆத்மஜ்ஞானத்தை விசாரித்திருப்பது.

9. ஸுஷுப்தியில் ஜாக்ரம்:—நித்திரை விட்டெழுந்து அந்நித்திரையின் ஸுகம் இவ்வண்ணமென இதரர்களுக்குச் சொல்லுதல்.

10. ஸுஷுப்தியில் ஸ்வப்நம்:—நித்திரைவிட்டெழுந்து நித்திரையின் ஸுகம் இவ்வகைத்தெனத் தோன்றியும் தோன்றாமலுமிருத்தல்.

11. ஸுஷுப்தியில் ஸுஷுப்தி:—நித்திரைவிட்டெழுந்து நித்திரையில்தான் கண்டது இன்னதென்றும் தோன்றாமலிருத்தல்.

12. ஸுஷுப்தியில் துரீயம்:—நித்திரைவிட்டெழுந்து இந்நித்திராவஸ்தை அஜ்ஞானவிஷயம், இதற்கு ஸாக்ஷியான ஆத்மாவே ஸத்யம் எனத் தெரிந்துகொள்ளல்.

13. துரீயத்தில் ஜாக்ரம்:—நிஷ்டையிலிருக்கும்போது ஜாக்ரவ்யாபாரங்களாகிய ப்ரபஞ்சவ்ருத்தி உண்டாவது.

14. துரீயத்தில் ஸ்வப்நம்:—நிஷ்டையிலிருக்கும்போது ஜாக்ரவ்யாபாரங்களான ப்ரபஞ்சவ்ருத்தி தோன்றாமலிருத்தல்.

15. துரீயத்தில் ஸுஷுப்தி:—நிஷ்டையில் எவ்வித ஸங்கல்ப விகல்பங்களுமில்லாமலிருத்தல்.

16. துரீயத்தில் துரீயம்:—மேற்சொல்லிய 15 - அவஸ்தைகள் இல்லாமல் அகண்ட பரிபூர்ணமான பரப்ரஹ்மமே தான் என்றும், தன்னைத்தவிர வேறொரு வஸ்துவில்லையென்றும் தெரிந்துகொண்டு தானாகவேயிருத்தல். இப்படிநான்காவது பாகமே எல்லாவற்றிற்கும் ச்ரேஷ்டமான ஸ்திதியென ஸ்பஷ்டமாய்த் தெரிந்துகொண்டால் ஸர்வம் ப்ரஹ்ம ஸ்வரூபமே என்று அறிவார்கள்.

ஜகத்ஸ்ருஷ்டி மனோஸ்ருஷ்டி லயம்.

ச்ரு॥ "ஸதேவ ஸௌம்ய இதமக்ர ஆஸீத்." [சாந்தோக்யோபநிஷத்.]

"தஸ்மின் மஹாசக்திகா ஸ்தாணு ஸ்படிகாதேன
ஜ்யோதிரூப புருஷ ஏகோபவத் லோஹித
சுக்ல க்ருஷ்ணமயீ குணஸாம்யா
நிர்வாச்யா மூலப்ரக்ருதி ராஸீத்." [பயிங்கலோபநிஷத்.]

"ஸத்வோத்ரிக்தா வ்யக்தாவரண சக்திராஸீத்
தத் ப்ரதிபிம்பம் யத் ததீஸ்வர சைதந்யமாஸீத்
ஸஸ்வாதீந மாயா ஸர்வஜ்ஞ: ஸ்ருஷ்டி
ஸ்திதி லயாநாமாதிகர்த்தா ஜகதங்குரரூபோபவதி." [பயிங்க.]

"ப்ரஹ்மணோ வ்யக்த: அவ்யக்தாத் மஹத் மஹதோ அஹங்கார:
அஹங்காராத் பஞ்சதந்மாத்ராணி பஞ்சதந்மாத்ரேப்யோ
பஞ்சமஹாபூதானி பஞ்சமஹாபூதேப்யோ கிலம் ஜகத்."
[த்ரிபாதி ப்ராஹ்மணோபநிஷத்.]

இத்யாதி ஶ்ருதிப்ரமாணங்களின் ரீதியாய், ஸ்ருஷ்டிக்குப்பூர்வத்தில் இந்தப்ரபஞ்சம், நாமரூபங்களில்லாததாய் நிர்விஶேஷ சின்மாத்ர பரப்ரஹ்மமாயிருந்தது. இந்த பரப்ரஹ்மமே அகண்ட ஜ்யோதியாகிய ஓர் தீபம். அதில் ப்ரதிபலித்த ப்ரதிபிம்பமே மாயாஶக்தி. ஓர் மாயாஶக்தி எப்பொழுது உண்டாயிற்றோ அப்பொழுதே அநேகம் தோன்றும். மித்யா ஸ்வரூபமாகிய மாயையில் ப்ரதிபலித்த ப்ரஹ்மத்திற்கு ஈஶ்வரனென்றுபெயர். அந்த ஈஶ்வரனுக்கு சித்ரவிசித்ரங்களாகிய அநேக ரூபங்கள் உண்டாயின.

சலனமாகிய மூலப்ரக்ருதியினால் உண்டாகிய ஶப்ததன்மாத்ரையாகிய ஆகாஶத்தில் ப்ரதிபலித்த ப்ரஹ்மத்திற்கு ஸதாஶிவனென்றும், ஶப்தகுணமாகிய ஆகாஶத்தினால் உண்டான ஶப்த ஸ்பர்ஶ தன்மாத்ரையாகியவாயுவில் ப்ரதிபலித்த ப்ரஹ்மத்திற்கு மஹேஶ்வரனென்றும், ஸ்பர்ஶகுணமாகிய வாயுவினால் உண்டான ஶப்த ஸ்பர்ஶ ரூப தன்மாத்ரையாகிய தேயுவில் ப்ரதிபலித்த ப்ரஹ்மத்திற்கு ருத்ரனென்றும், ரூபகுணமாகிய தேயுவினால் உண்டான ஶப்த ஸ்பர்ஶ ரூப ரஸதன்மாத்ரையாகிய ஜலத்தில் ப்ரதிபலித்த ப்ரஹ்மத்திற்கு விஷ்ணுவென்றும், ரஸ குணமாகிய ஜலத்தினால் உண்டாகிய ஶப்த ஸ்பர்ஶ ரூப ரஸ கந்ததன்மாத்ரையாகிய ப்ருதிவியில் ப்ரதிபலித்த ப்ரஹ்மத்திற்கு ப்ரஹ்மதேவனென்றும் பெயர்கள் உண்டாயின.

ப்ரபஞ்சோத்பத்திக்கு ஹேதுபூதமாகிய மாயை பரப்ரஹ்மத்தில் ஓர் அணுமாத்ரமென்று சொல்லப்படும். மாயையென்னும் ப்ரதிபிம்பத்தில் ஆகாஶமும், ஆகாஶத்தில்வாயுவும், வாயுவில்தேயுவும், தேயுவில்ஜலமும், ஜலத்தில் ப்ருதிவியும் ஐக்யமாயிருக்கின்றன. நிராகாரமாகிய பரப்ரஹ்மத்தில் தோன்றிய மாயை, பஞ்சபூதங்களிலிருந்து அவைகளைப் பரஸ்பரமாய் ஏகீபவிக்கச்செய்யும். இப்படி ஒன்றாய்ச் சேர்க்கப்பட்டவைகளெல்லாம் ஈஶ்வரனால் அநேககோடி ப்ரஹ்மாண்டங்களான

அநேக விசித்ரரூபங்களுடன் காணப்படுகின்றன. வைரக்கற்களில் காணவிதரூபங்கள் இல்லாவிடினும் ப்ரமையினால் பஞ்சவர்ணங்கள் தோன்றுவதுபோல், பஞ்சபூதங்களினால் ப்ரதிபலித்த பரப்ரஹ்மம், பஞ்சபூத ஸம்பந்த குணங்களை அநுஸரித்து ஸதாஶிவனென்றும், மஹேஶ்வரனென்றும், ருத்ரனென்றும், விஷ்ணுவென்றும், ப்ரஹ்மதேவனென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது.

இதில், ப்ரஹ்மதேவன், ஶப்த ஸ்பர்ஶ ரூப ரஸ கந்தமென்னும் ஐந்துகுணங்களையுடைய ப்ருதிவியினால் ஸ்தாவர ஜங்கம ரூபங்களாகிய ப்ரபஞ்சமெல்லாம் ஸ்ருஷ்டித்தனர். விஷ்ணு, ஶப்த ஸ்பர்ஶ ரூப ரஸமென்னும் நான்கு குணங்களையுடைய ஜலத்தினால் ஸகல ப்ரபஞ்சங்களையும் ரக்ஷிக்கின்றனர். ருத்ரன், ஶப்த ஸ்பர்ஶ ரூபமென்னும் மூன்று குணங்களையுடைய தேயுவினால் ஸகலப்ரபஞ்சங்களையும் ஸம்ஹரிக்கின்றனர். மஹேஶ்வரன், ஶப்த ஸ்பர்ஶமென்னும் இரண்டு குணங்களையுடைய வாயுவினால் மாயாஸம்பந்தமாகிய ஜீவகோடிகளுக்கெல்லாம் ப்ரமையை உண்டாக்குகின்றனர். ஸதாஶிவன், ஶப்தமென்னும் ஓர்குணமுடைய ஆகாஶத்தினால் ஜீவவர்க்கங்களுக்கு அறிவை உண்டாக்குகின்றனர். மாயை, பஞ்சபூத விகாரமான தேஹேந்த்ரியாதி ப்ரபஞ்சத்தில் நான் எனதென்னுமபிமானத்தை உண்டாக்கும். ஜாக்ரத்தில் ப்ரஹ்மதேவர், ஜீவனுக்கு பலாபலித ஸுகதுக்கங்களையுண்டாக்குகின்றனர். ஸ்வப்னத்தில் விஷ்ணு, ஜீவனுக்கு அநேக விநோதங்களைக் காணும்படி செய்கின்றனர். ஸுஷுப்தியில் ருத்ரன், ஸர்வ ஶூன்யத்தை உண்டாக்கி ஜீவனை ப்ரத்யேகப்படுத்துகின்றனர். துரீயத்தில் மஹேஶ்வரன், ஜீவனுக்கு ப்ரமையை உண்டாக்குகின்றனர், துரீயாதீதத்தில் ஸதாஶிவன், ஜீவனுக்கு ஆனந்தத்தை உண்டாக்குகின்றனர். ஶாந்த ஶூன்யமாகிய மாயை, ஸுகத்தை மறையச்செய்து ப்ரமையை உண்டாக்கும். “ஸ்வயம்ப்ரகாஶமாகிய ப்ரஹ்மம், ஸச்சிதானந்தமயமாயிருக்கின்றது.”

அப்படிப்பட்ட ஸச்சிதானந்த பரப்ரஹ்மம், மாயாந்தகாரத்தில் அகப்பட்டு வழிகாணாமல் காமக்ரோதாதி ஷட்வர்க்கங்களினாலும், ஈஷணாத்ரயங்களினாலும் பந்தப்பட்டு தான் ஜீவனென்பதைத் தெரிந்துகொள்ளாமல் துக்கங்களையெல்லாம் ஸுகமென்றெண்ணி அபரிமிதமான ஆசையில் மூழ்கி அநேககோடி ஜன்மங்களெடுத்து, ஸம்ஸாரமென்னும் மஹாசமுத்ரத்தைக்கடந்துபோக ஶக்தியற்றதாய், துக்கத்தை அநுபவித்துக்கொண்டிருக்கும். அன்றியும், பஞ்சதன்மாத்ரைகளினாலும், பஞ்சபூதங்களினாலும் உண்டான சராசரப்ரபஞ்சம், ஸர்வம் மாயா ஸம்பந்தமாகிய லீலையேயொழிய வேறன்று. தேஹாதி ப்ரபஞ்சமெல்லாம் பஞ்சபூதாம்ஶமானபடியால், அவைகளையெல்லாம் வேறுபடுத்திப்பார்க்குமளவில் அஜ்ஞானத்தினால் தேஹேந்த்ரியாதிகளெல்லாம் நான் எனது என்னும் அபிமானத்துடன் அஹங்கரித்த ப்ரமையே ஜீவனென்று விசித்ரமாய்த் தெரியவரும். ஸர்வஸாக்ஷியாகிய ஆத்மாவே பரப்ரஹ்மமென்று சொல்லப்படும்.

இந்தக்கூடஸ்தப்ரஹ்மமே, ஸ்வயம்ப்ரகாஶமாய் ப்ரகாசித்துக்கொண்டு அவஸ்தாத்ரயங்களில் காணப்படும் விஷயஸுகங்களில் பஹுவிதபேதங்களை அடைந்தபோதிலும் தான் அபேதமாயும், அவை நஶ்வரங்களாய் அநந்தமாயிருந்தபோதிலும் தான் ஶாஶ்வதமாகிய ஸத்தாயும், அவை அஜ்ஞானமயமாயிருந்தபோதிலும் தான் ஜ்ஞானமயமாயும், அவை துக்கஸ்வரூபமாயிருந்தாலும் தான் ஸுகஸ்வரூபமாயும், நிர்மலமாயும், நிர்விகாரமாயும், நிர்தோஷமாயும், நிர்விசேஷமாயும், ஸ்வயம்ப்ரகாஶமாயும், சிதாகாஶமாயுமிருக்கும்.

மாயைக்கு உட்பட்டவர்களுக்கு ப்ரஹ்மஜ்ஞானம் உண்டாகாததினால் அஹங்கார வ்ருத்தியாய் நிரந்தர துக்கம் ஸம்ப்ராப்திக்கும். ப்ரஹ்மஜ்ஞானம் அடைந்தவர்களுக்கு அநேக ஸித்திகள் தனக்குத்தானாய் லபிப்பதேயன்றி அகண்டானந்தம் உதித்துக் கைவல்யமும் ஸித்திக்கும்.

ப்ரஹ்மஜ்ஞானமடைவதற்காக முதல் ப்ரயத்நம் யாதெனில், ப்ரஹ்மாம்ஶத்தினால் தோன்றும் விக்ரஹங்களில் எதையாகிலும் ஒன்றை பக்தி ஶ்ரத்தையுடன் பூஜிக்கவேண்டும். அப்படி பூஜிப்பது, பரப்ரஹ்மத்தைப் பூஜிப்பதேயொழிய வேறல்ல. பரமபக்தர்கள் தமக்கிஷ்டமான தேவதையை ஆஶ்ரயித்துத் ததேகத்யான சித்தர்களாய் நிரந்தரம் பூஜித்து நித்யானந்தத்தை அநுபவித்துக்கொண்டு கடைசியில் ப்ரஹ்மானந்தத்தைத் தடையின்றி அடைவார்கள். ஸகுணோபாஸனமாய் ஆராதிப்பதைவிட்டு நிர்குணோபாஸனமாய் ஆராதிப்பது மிகவும் கஷ்டம். எப்படியெனில், கண்களுக்குக் காணப்படும் ஸ்வரூபத்திலேயே ஸரியாய் நிற்காத மனம் அரூபத்தில் எவ்வளவேனும் நிற்கமாட்டாது. ஆதலால், முதலில் மனம் நிற்பதற்கு ஸகுணோபாஸனை யெவ்வளவு ஸுலபோபாயம் வேறொன்றில்லை. இதற்குத்ருஷ்டாந்தம் ஸ்ரீபகவத்கீதை அத்யாயம் 3 - ஶ்லோகம் 29 - ல்,

ப்ரக்ருதேர்குண ஸம்மூடாஸ் ஸஜ்ஜந்தே குணகர்மஸு
தாநக்ருத்ஸ்நவிதோ மந்தாந் க்ருத்ஸ்நவிந்ந விசாலயேத்.

மாயையினுடைய முக்குணங்களினால், மோஹத்தை அடைந்தவர்கள் இந்த்ரியங்களினுடைய வ்யாபாரங்களில் அபிமானம் வைக்கின்றார்கள். ஆதலால் ஜ்ஞானியானவன், ஆத்மாயாத்ம ஜ்ஞானமில்லாத பாமரர்களுக்குக் கர்மத்தைவிட்டு ஜ்ஞானமார்க்கத்தில் ப்ரவர்த்திக்கும்படி போதிக்கக்கூடாது. போதித்தால் அவர்களுக்கு *ஜ்ஞானமார்க்கம் ஸித்திக்கவே மாட்டாது. இந்த ஜ்ஞானியானவன் கர்மத்தினால் ப்ரயோஜனமில்லையென்று சொன்ன வாக்யத்தை, மோஹத்தையடைந்தவர்கள் ஆதாரமாகக்கொண்டு கர்மத்தைமட்டும் விட்டுவிடுவார்கள். அதனால் கர்மபலனுண்டாக ஹேதுவுமில்லை. அவர்கள் ஜ்ஞானஸித்திக்கு யோக்யமில்லாதவர்களாய் உபயத்ர ப்ரஷ்டராகின்றார்கள். ஆதலால் ஜ்ஞானியானவன் கர்மமானது ஆத்மதர்ஶனத்திற்கு ஸாதனமானதென்று சொல்லி, தான் கர்ம

தைச்செய்தும் செய்வித்தும் காட்டவேண்டும். இந்தக் கீதையை அனுஸரித்தே ஸகுணோபாஸனை இதில் த்ருடமாய் எழுதப்பட்டிருக்கின்றது.

"புங்காநு புங்கவிஷயே க்ஷணதத்வரூபிணும்!" என்னும் ஸ்ருதிரீதியாய் மனிதர்களுக்கு க்ஷணத்திற்குள் அநேக எண்ணங்கள் உண்டாகின்றன. அப்படிப்பட்ட அநேக எண்ணங்களையுடைய மனதை சும்மா இரு என்றால் இராது. அப்படிச் சும்மா இருப்பதே வெட்டவெளி. அந்த வெட்டவெளி, ஹ்ருதயத்திற்குப் பிடிபடமாட்டாது. ஆகலால், அநேக எண்ணங்களையுடைய மனதை முதலில் ஓர் எண்ணமாகச்செய்யவேண்டும். அப்படிச் செய்வதற்காக இப்புஸ்தகத்தின் முதற்பக்கம் 2-வது படத்திற்காட்டப்பட்டிருக்கும் விக்ரஹங்களைப்போன்ற மற்ற எந்த ஆலயத்தில் எந்த விக்ரஹத்தின்மீது ப்ரீதியோ அந்த பகவானை உபாஸனாமூர்த்தியாகத் தனது ஹ்ருதயத்தில் நிறுத்தி அந்தர்முகமாய் மனவினாலேயே தர்சித்துக்கொண்டு "தைலதாரா மிவாச்சின்னம் தீர்க்க கண்டா நிநாதவத் உபாஸ்யம் ப்ரணவஸ்யாக்ரம் யஸ்தம்வேத ஸவேதவித்" என்னும் த்யானபிந்தூபநிஷத் வாக்யரீதியாய், அவிச்சின்னமாகிய தைலதாரைரீதியாயும், கண்டாநாதரீதியாயும் இடைவிடாமல் இரவும் பகலும் அநவரதமேனும் சோர்வை அடையாமல் ப்ரணவத்துடன் ஸதாகாலமும் ஸ்மரித்துக்கொண்டிருந்தால், அவ்வப்யாஸ முதிர்ச்சியினால் அநேக எண்ணங்களையுடைய மனம் ஓர் எண்ணத்தில்நிற்கும். இப்படி நிற்பதே ஸகுணோபாஸனையென்று சொல்லப்படும். (இதன் விவரங்களை ஸ்ரீ க்ருஷ்ணார்ஜுன ஸம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீபகவத்கீதை அத்யாயம், 3 ஸ்லோகம், 31 - 32-ல், விரிவாய்க் காணலாம்.) பிறகு அந்த ஓர் எண்ணமும் லக்ஷ்யமாய் நின்று ஒன்றுமில்லாமல் ஆகாச வடிவமாய் நின்றுவிடுவதே நிர்க்குணோபாஸனமென்று சொல்லப்படும். என்றால், மனம் எவ்விடத்தே உதிக்கிறதோ அவ்விடத்திலேயே லயித்தபோது லேசமாய் நின்றது ஆகாசவடிவமேயாகும்.

பெரியோர்கள், முக்யமாய் முதலில் ஸகுணோபாஸனத்தினால் சித்தசுத்தியடைந்தபிறகு நிர்க்குணோபாஸனத்திற்கு ப்ரயத்தனப்பட்ட ஸத்புருஷர்களின் மர்மங்களைக்காணாமல் ப்ரமித்து மனம் பரிபக்வமாகாத மந்தபுத்தியுடையவர்களிற் சிலர் அவர்களைப்போல் நாமும் இருக்கவேண்டுமென்று எண்ணங்கொண்டு ஸகுணோபாஸனத்தை த்யாகித்து நிர்க்குணோபாஸனத்தை ஆரம்பிப்பார்கள். இது, எப்படியிருக்கின்றதென்றால், புலியைப்பார்த்துப் பூனை சூடுபோட்டுக்கொண்டதுபோல் ஸகுணோபாஸனத்தைவிட்டு நிர்க்குணோபாஸனத்தை அப்யஸித்து சித்தசுத்தியில்லாததினால் இரண்டிற்கும் ப்ரஷ்டனாய் துக்கத்தை அநுபவிக்கவேண்டியதாய் நேரிடும். இந்த்ரியங்களை ஜயித்து மனவொடுக்கி காமக்ரோதாதி ஷட்வர்க்கங்களை நிக்ரஹித்தவன் எப்படிப்பட்டவனாயிருந்தபோதிலும் நிர்க்குணோபாஸனத்தைச் செய்யத்தகுமேயொழிய, இதரர்கள் செய்யத்தகாது. விக்ரஹ ஆராதனை செய்பவர்களும் பரப்ரஹ்மத்தை த்ரிகரணசுத்தியுடன் பூஜிப்பவர்களுமே பரமபக்தர்களெனவும், பரமபாகவதர்களெனவும் சொல்லப்படுவார்கள்.

முதலில் பக்திமார்க்கங்களை அவலம்பித்துச் சித்தசுத்தியுண்டானபிறகு யோகஸாதனத்தை அவலம்பித்து நிரந்தரம் ஸர்ப்பம்போல் வாயுபக்ஷணை செய்துகொண்டு, தேஹத்திற்கு அபாயம் உண்டாகாவண்ணம் மிகவும் ஜாக்ரதையுடன் அந்த வாயுவை காளவட்டத்தில் கும்பித்து (நிறுத்தி) வ்ருத்திசெய்துகொண்டு, அணிமாதி ஸித்திகளை ஸ்வாதீனப்படுத்திக்கொண்டு ஸ்வேச்சையாய் ஸஞ்சரித்து ஸந்தோஷிப்பவர்களே ஸித்தர்களெனப்படுவார்கள். பகவத்பக்தி, யோகாப்யாஸம், ஸத்புருஷர்களின் ஸாங்கத்யம் செய்து, இந்த்ரியங்களை பந்தித்து, மனஸைநிறுத்தி, தேஹாபிமானத்தை த்யஜித்து, பரதத்வத்தை விசாரித்து, தன்னைத்தானறிந்து ப்ரஹ்மாநுஸந்தானத்தினால் பஹிர் (வெளி) வ்யாபாரங்களெல்லாம் மறந்து ப்ரஹ்மத்தில் லயித்து ப்ரஹ்மானந்தரஸத்தைப் பானம்செய்ய

வேண்டும். அப்படிப்பட்டவர்களே முக்தர்களெனப்படுவார்கள்.

ஸர்வப்ராணிகளுக்கும் தர்மங்களான ஆஹார நித்ராதி வ்யவஹாரங்களில் அகப்பட்டுப் புருஷார்த்தசிந்தையில்லாமல் கேவலம் பசுக்களைப்போல் வர்த்திக்கும் மூடர்களைவிட விக்ரஹ ஆராதனை செய்யப்பட்டவர்களே உத்தமர்கள். அவர்களைவிட, ப்ரஹ்மத்தைத் த்யானிப்பவர்களே உத்தமர்கள். அவர்களைவிட, தன்னிடத்திலிருக்கும் ப்ரஹ்மத்தைத் தர்சிப்பவர்களே உத்தமர்கள். அவர்களைவிட, ஸச்சிதானந்த ஸம்பந்தத்தால் ஸர்வமும்மறந்து ஸாக்ஷாத்காரத்தை அடைந்தவர்களே உத்தமர்கள். அவர்களைவிட,

"இருள்நீங்கி யின்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு."

இப்படிப்பட்ட துரீயத்ருஷ்டியிலிருந்து, ஸர்வாவஸ்தைகளிலும் பாலோன்மத்த பிசாசர்களைப்போல் ஸஞ்சரித்துக்கொண்டு, ஸஹஜானந்த ஸம்பத்துடன் ப்ரகாசித்துக்கொண்டிருக்கும் மஹான்களைக் கண்டுபிடித்துப் பரமப்ரீதியுடன் அவர்களுக்கு அன்னபானாதிகளைக்கொடுத்து ஆதரிப்பவர்களே உத்தமர்கள். இப்பேர்ப்பட்ட ஸ்வப்னஸமானப் பதார்த்தத்தைக்கோராமல் துச்ச ஸுகங்களுக்கு ஆசைப்பட்டு அநேக ஆயஸ்தைப்பட்டு கர்மமென்னும் பெருச்சுமட்டையைச் சிரஸின்மேல்வைத்துக்கொண்டு சுமக்க சக்தியில்லாமல் மூச்சுக்கொண்டிருந்தும் மறுபடியும் ஸகல பதார்த்தங்களிலும் இச்சைவைத்து ப்ரதி ஜன்மங்கள்தோறும் (இந்நூல் 81-பக்கம், 17-வது வரியில்) 'ஸஞ்சிதம்' என்று சொல்லியிருக்கும் மூட்டையை அதிகப்படுத்திக்கொண்டிருக்கும் பாபசக்களைப் பலிகொள்வதற்காகக் காலன் நெருங்கியபோது என்னசெய்வார்களோ யாரை நிந்திப்பார்களோ தெரியவுமாட்டாது. எத்தனை தினங்களிருந்தபோதிலும் ஓர் தினத்தில் ஓடிப் போகவேண்டுமென்று தெரிந்துகொண்டு சாச்வதஜீவனத்திற்குப் ப்ரயத்னப்

படாமல் காலமெல்லாம் துர்விஷயங்களில் ப்ரவர்த்திப்பதினால் பெருத்த கஷ்டமேயொழிய லாபமொன்றுமில்லை. பகவத்பக்தியும் ஜீவன்முக்தியும் அடையாத ஜன்மமிருப்பதினால் ஓர் ப்ரயோஜனமுமில்லை. மந்தபுத்தியுடையவர்களுக்கு எத்தனை விதங்களாய்ப் போதித்தபோதிலும்,

"கற்பூரப் பாத்திகட்டிக் கஸ்தூரி யெருப்போட்டுக் கமழ்நீர் பாய்ச்சிப், பொற்பூர வுள்ளியினை விதைத்தாலு மதன்குணத்தைப் பொருந்தக்காட்டும், சொற்பேதை யருக்கறிவிங் கினிதாக வருமெனவே சொல்லினாலு, நற்போதம் வாராதாங் கவர்குணமே மேலாக நடக்குந்தானே."

என்பதுபோல் அவர்களின் முற்குணம் மாறாமலிருப்பதினால் செவிடன்காதில் சங்கையூதியதுபோல் நிஷ்ப்ரயோஜனமாகும். அஜ்ஞானாந்தகாரமான பாழ்ங்கிணற்றில் அழுந்தியிருக்கப்பட்டவர்களின் மனம் எப்பொழுதும் வெளிகிளம்பமாட்டாது.

ஸஜாதீய, விஜாதீய, ஸ்வகதபேதங்களில்லாமல் ஸச்சிதானந்தமயமாய், அகண்டமாய், அப்ரமேயமாய், நிராகாரமாய், ஸர்வாதாரமாய், பரிபூர்ணமாய், பரமார்த்தமாய், நிஷ்ப்ரபஞ்சமாய், நிர்விசேஷமாய், ஸர்வபாவமாய், ஸர்வதோமுகமாய், சின்மயமாய், சித்விலாஸமாய், விளங்குவது கூடஸ்தப்ரஹ்மம். அந்த ப்ரஹ்மத்தை அடைந்தவர்களுக்கே ஜனனமரணங்களினால் உண்டாகும் அந்த பரம்பரை நிவர்த்தியும் ஸர்வகர்மங்களும் நிர்மூலமாய், மோக்ஷ ஸாம்ராஜ்யபதவி உண்டாகும். பரமோத்க்ருஷ்டமாகிய இப்படிப்பட்ட ப்ரஹ்மஜ்ஞானம் உண்டாவதற்கு முதல்ஸாதனம், தனக்கு இஷ்டதேவதையை ஆராதிப்பதற்காக ஸத்குருவை அடையவேண்டும். இவ்விரண்டும் இல்லாவிடில் சாம்பலில்விட்ட நெய்யைப்போல வ்ருதாவாகும்.

"ப்ரஹ்மாத்யம் ஸ்தாவராந்தம் பச்யந்தி ஜ்ஞானசக்ஷுஷா
ப்ராஜ்ஞமேகமேவ பச்யந்தி பரிபூர்ணம் விபும் ச விஜ்ஞா
யஸ்மிம்ஸ்ஸர்வாணி ப்ரலீயந்தே லீலாஸ்ச வ்யக்தாம் யது
பச்யந்தி வ்யக்தாம்பூயோ ஜாயந்தே புத்புதா இவ."

[ஸுபாலோபநிஷத்.]

ஸகலநதிகளும் ஸமுத்ரத்திற்கலந்து பேதமில்லாமல் ஏகமாவதுபோல்; ப்ரஹ்மாதி ஸ்தாவரபர்யந்தம் ஸகல சராசரஜகத்து, எந்த பரப்ரஹ்மத்தில் உண்டாயிற்றோ அந்த பரப்ரஹ்மத்திலேயே ப்ரளயத்தில் லயித்துவிடும். ஸமுத்ரத்தில் அலைகள் நுரைகள் திவலைகள் உண்டாவது போல், மறுபடியும் பரப்ரஹ்மத்திலிருந்தே ஸகல சராசர ஜகத்துக்களும் உண்டாகிக்கொண்டிருக்கும். ஆதலால், ஸமுத்ர ஜலமே அலைகள் நுரைகள் திவலைகளாய்த்தோன்றுவதுபோல் பரப்ரஹ்மம் ஒன்றே நானாவித நாமரூபங்களுடன் ஸகல சராசர ஜகத்தாய்த்தோன்றுமேயொழிய ப்ரஹ்மத்தைவிட ப்ரபஞ்சம் வேறானதல்ல. ஜ்ஞானிகள் ஸகலப்ரபஞ்சங்களையும் ப்ரஹ்மமயமாய் பாவிப்பார்கள். ஆனால், அலைகள் நுரைகள் திவலைகள் எத்தனைவித நாமரூபங்களாய்த்தோன்றி மறுபடியும் ரூபமில்லாமல் லயித்தபோதிலும் ஸமுத்ரஜலம் மாத்ரம் எவ்விதவிகாரங்களுமில்லாமல் ஒரேவிதமாய் இருப்பதுபோல், ப்ரஹ்மாதி ஸகலப்ரபஞ்சமும் நாமரூபங்களுடன்தோன்றி மறுபடியும் ப்ரளயத்தில் நாமரூபங்களில்லாமல் லயித்தபோதிலும் ப்ரஹ்மம் மாத்ரம் எவ்வித விகாரங்களுமில்லாமல் ஏகரீதியாய் ஸத்யமாய் இருக்கும்.

ஸங்கல்பத்தால் உண்டான சரீர வ்ருக்ஷத்தில் ஜீவாத்மா பரமாத்மா வஸிப்பது.

"ஸஹஸ்ராங்குர சாகாத்ம பலபல்லவ சாலின:
அஸ்ய ஸம்ஸார வ்ருக்ஷஸ்ய மனோமூலமிதம் ஸ்திதம்."
[முக்திகோபநிஷத்.]

மனமே ஸம்ஸாரமென்னும் வ்ருக்ஷத்திற்கு மூலகாரணமாயிருக்கின்றது. இந்த வ்ருக்ஷத்தில் ராகத்வேஷாதிகளே மூலங்களாகவும், ஸ்வர்க்கநரகங்களே சாகைகளாகவும், ஸுக

து:க்கங்களே பழங்களாகவும், (தாரேஷணை) பார்யாதிகளின்மேல் ஆசை, (புத்ரேஷணை) புத்ரர்களின்மேல் ஆசை, (தநேஷணை) த்ரவ்யத்தின்மேல் ஆசை, இந்த ஈஷணாத்ரயங்களே கொழுந்துள்ள இலைகளாகவும் உண்டாயிருக்கின்றன. இந்த ஸம்ஸாரவ்ருக்ஷத்திற்கு மனமே மூலகாரணமாய் அநாதியாய் அநந்தமாயிருக்கின்றது. இவ்விதமான மனம் அபரோக்ஷ ஜ்ஞான ஸாக்ஷாத்காரமென்னும் ப்ரஹ்மாத்மைகத்வ ஜ்ஞானம் உண்டாகும் வரையில் எதினாலும் நாசமில்லாமலிருக்கும். ஜ்ஞானிகள் இந்த சண்டாள மனதினுடைய பாதையை கண்ணாய் அறிந்து இத்துக்கத்தை நிவர்த்திப்பதற்காகப் ப்ரஹ்மஜ்ஞானத்தை ஸாதனமாய்ச் செய்துகொள்வார்கள்.

"ஸங்கல்பமேவ யன்மத்யே ஸங்கல்போபசமே ந தத்
சோஷயாசு யதா சோஷமேதி ஸம்ஸாரபாதப:."
[முக்திகோபநிஷத்.]

"சங்கற்ப நாசந்தா னெளிதாக மனநாசந் தானே யெய்தும், அங்குற்ற மனமிறக்கிற் ஜநநமரணங்களெனு மாறுமாயும், இவ் விப்பார லெவின்த்திருமேல் கன்னிகைக்கண் டேன்கண்டே னிவன்போ நெஞ்சம், பொங்குற்ற விவ்வுலே நெடிதாமென்றுந் தேனிற்று பொன்று விப்பேன்."

மனஸிற்கு ஸங்கல்பமே ஸ்வரூபமாயிருக்கின்றது. ஸங்கல்பம் நசித்தால் மனம் நசித்து ஸம்ஸாரமென்னும் வ்ருக்ஷம் அதனுடன்கூடவே நசிக்கும்.

"ஜ்ஞமனோநாசமப்யேதி மனோஜ்ஞஸ்யஹி ச்ருங்கலா
நாவர்த்திலீவ வேதான்தா ஸ்சிந்தி ஹ்ருதி வாஸநா:
ஏகதத்வத்ருடாப்யாஸாத் யாவந்ந விஜிதம் மன:"
[முக்திகோபநிஷத்.]

ஜ்ஞானியினுடைய மனம் நசித்துவிடும். அஜ்ஞானியினுடைய மனம் விலங்கிட்டதுபோல் பந்தப்பட்டிருக்கும். ப்ரஹ்மநிஷ்டாப்யாஸ காரணமான மனோஜயம் எதுவரையில் அடையாதோ, அதுவரையில் இராக்காலத்தில் பயங்கரமு

டைய பேதாளாதி க்ரஹங்கள் ஸஞ்சரித்து உலகத்தாருக்குப் பயத்தை உண்டாக்குவதுபோல், ஹ்ருதயத்தில் பூர்வவாஸனைகளென்னும் பேதாள க்ரஹங்கள் ஸஞ்சரித்துக்கொண்டு ஜநநமரணங்களென்னும் து:கத்தை உண்டாக்கிக்கொண்டிருக்கும். "ததாவித்வாந் ப்ரஹ்மஜ்ஞாநாக்நிநாகர்மபந்தம் நிர்தஹேத்" என்பதுபோல் ப்ரஹ்மஜ்ஞாநாக்நியினால் அஜ்ஞாநமும் ஸகல கர்மங்களும் நசிக்கப்பட்டு ஜீவன்முக்தி அடைவன்.

"த்வா ஸுபர்ணா பவதோ ப்ரஹ்மஜோ ஹம்ஸபூத
ஸ்ததேதரோ போக்தா பவத்யச்யோஹி ஸாக்ஷிப்யதீதி
வ்ருக்ஷ தர்மமே தேன திஷ்டத அதோ போக்ரு போக்தாரௌ
பூர்வோஹி போக்தாபவதிதநேதரோ போக்தாக்ருஷ்ணோபவதி."
[கோபாலதாபிந்யுபநிஷத்.]

இந்த ஶரீரமே ஓர் வ்ருக்ஷமாயிருக்கின்றது. இச்சரீரவ்ருக்ஷத்தில் ஜீவாத்மா பரமாத்மா என்னும் இரண்டு பக்ஷிகள் வஸிக்கின்றன. அவைகளில் ஜீவாத்மா என்னும் பக்ஷி தேஹேந்த்ரியங்களே நானென்று அபிமானித்து போக்தாவிருந்து கர்மபலன்களைச் செய்துகொண்டு ஸுகது:கங்களையடையும். பரமாத்மா என்னும் பக்ஷி அபோக்தாவிருந்து எந்தக்கார்யங்களையுஞ்செய்யாமலும் எந்தக்கர்மபலன்களையும் அநுபவிக்காமலும் ஸுகது:கங்களை யடையாமலும் அதிஷ்டானமாய் ஸாக்ஷிமாத்ரமாயிருக்கும்.

"தேஹாநாம் மநுஷ்யாதீநாம் பஞ்சபூத ஸமவாய ஶரீரம்"
"ஜ்ஞாந கர்மேந்த்ரியை ப்ராணாதி பஞ்சவாயு
மனோபுத்தி பிர்ச ஸூக்ஷ்ம ஸ்வோபி லிங்க மித்யுச்யதே."
[யோகசூடாமண்யுபநிஷத்]

இருபத்தைந்து தத்வங்களே ஸ்வரூபமாயுடைய இந்த ஸ்தூல ஶரீரத்தினுள் பதினேழு தத்வங்களுடன்கூடிய ஸூக்ஷ்மஶரீரம் ஒன்றுஇருக்கின்றது. அதுயாதெனில்: மனம் புத்தி இரண்டு; ஸூக்ஷ்மஜ்ஞானேந்த்ரியங்கள்ஐந்து; ஸூக்ஷ்ம கர்மேந்த்ரியங்கள் ஐந்து; ப்ராணவாயுக்கள் ஐந்து; இந்தப்பதி

னேழு தத்வங்கள்கூடியதே ஸூக்ஷ்ம ஶரீரமென்று சொல்லப்படும். இந்த ஸூக்ஷ்மஶரீரம் அபஞ்சீக்ருதமானது. அபஞ்சீக்ருதமென்றால், ஸ்தூல ஶரீரத்தைப்போல் பஞ்சீகரணமானதல்ல. ஸூக்ஷ்மஶரீரமென்றால் கண்களுக்குக் காணப்படாத ஶரீரம்.

ஶ்லோ.|| "ஸர்வ வ்யாப்ருதிகாரணம் லிங்கமிதம் ஸ்யாச்சிதாத்மந:, பும்ஸ: வ்யாஸாதிவ ஶிவ தக்ஷண ஸ்தேஸஸ்வாத்மா பவத்யஸங்கோயம்."

என்னும் ஶ்லோகரீதியாய் தச்சனிடம் உளி முதலான ஆயுதங்களிருந்தால், தான்கர்த்தாவிருந்து மரத்தைச் செதுக்குகின்றான்; ஆயுதங்களில்லாவிடில் கர்த்தாகமாட்டான். அதுபோலவே, ஜீவன் ஸூக்ஷ்மஶரீரத்துடன் ஸம்பந்தித்திருப்பதினாலேயேதான் கர்த்ருத்வ அஹங்காரத்துடன் கூடிக்கொண்டு கர்த்தாவாய், ஸ்தூலஶரீரத்தின் வழியாய் எல்லாக்கார்யங்களையுஞ்செய்து போக்தாவாய் ஸகலமும் அநுபவித்துக்கொண்டிருக்கின்றான். இந்த ஸூக்ஷ்மஶரீர ஸம்பந்தமானது ஜீவனுக்கு இல்லாவிடில் ஜீவன் கர்த்ருத்வ அஹங்காரமில்லாதவனாகின்றான். அதனால்தான் கர்த்தாகமாட்டான். என்றால், எந்தக்கார்யங்களையுஞ் செய்யமாட்டான் என்பதும், போக்தாகமாட்டான் என்பதும் அநுபவிக்கமாட்டானென்பதும் தாத்பர்யமாகும்.

ஶ்ரு|| "ஸங்கல்பந ஸ்பர்ஶந த்ருஷ்டி மோஹைர் க்ராஸாம்பு வ்ருஷ்ட்யாசாத்ம விவ்ருத்த ஜன்மகர்மாநுகா ருக்ரமேண தேஹீஸ்தாநேஷு ரூபாண்யபி ஸம்ப்ரபத்யதே." [ஶ்வேதாஶ்வதரோபநிஷத்.]

ஸூக்ஷ்மஶரீரமானது, இந்தஸ்தூல ஶரீரத்திற் புகுந்துகொண்டு நானாவித எண்ணங்களையுடையதாய் உலகத்திலுள்ள ஸகலவிஷயங்களையும் ஸ்மரித்துக்கொண்டும், ஸ்பரிசித்துக்கொண்டும், பார்த்துக்கொண்டும், மோஹித்துக்கொண்டும், புண்யபாபகர்மங்களைச் செய்துகொண்டும், அந்தந்தப் புண்ய கர்மபலன்களை அநுபவிப்பதற்காக இந்தஸ்தூல ஶரீரத்தை

விட்டுவிடும். பின்பு, அது தேவலோகஞ்சென்று, அங்குள்ள தேவதாசரீரத்திற்புகுந்து போகாநுபோகங்களை அநுபவித்து மறுபடியும் பூர்வகர்மாநுஸாரமாய் அந்தத் தேவதாசரீரத்தையும் விட்டுவிடும் அதற்குப்பின்பு பூலோகத்தில் கர்ப்பத்திலிருக்கும் ஸ்தூலசரீரத்தில் பேர்ப்புகுந்துகொண்டு சிசுவாய்ப் பிறக்கும். இதுவே, ஜநநமென்று சொல்லப்படும். மறுபடியும் அது, பூர்வகர்மாநுஸாரமாய் கர்மங்களைச் செய்துகொண்டிருந்து மரணமடைந்து ஸ்வர்க்கநரகங்களிலிருந்து மறுபடியும் பூலோகத்தில் ஜன்மிக்கும். இவ்வண்ணம் ஜலப்ரவாஹத்தின் சுழலில் அகப்பட்டுக்கொண்ட புழுவானது அந்தச்சுழலிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கு சக்தியற்று அந்தச்சுழலில் தானே சுற்றிச்சுற்றித்திரிந்து உழல்வதுபோல் நாம் ஜநநமரண ப்ரவாஹச்சுழலில் அகப்பட்டுக்கொண்டு பலகால்பிறந்தும் இறந்தும், அதினின்றுந் தப்பித்துக்கொண்டு கடந்துபோகசக்தியில்லாமல் அலைந்து தத்தளித்துக்கொண்டிருக்குங் காலில், (ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம், 2 - ஶ்ரு - 49 - பார்க்க.)

"ஸத்கர்ம பரிபாகதோ பஹூநாம் ஜந்மநாம் அந்தே நிருணாம் மோக்ஷேச்சா ஜாயதே தத ஸத்குருமாஶ்ரித்ய சேகால சேவயா பந்தாத்மோக்ஷம் ஸம்ப்ராப்ய சச்சதி." [பைங்கலோபநிஷத்.]

இந்தச்சிதாபாஸஜீவன் ஜந்மாந்தரம் செய்த புண்யவிசேஷத்தினால் ஏதோ ஓர் ஜன்மத்தில், தான் மோக்ஷமடையவேண்டுமென்னும் கருத்துடையவனாய் ஜ்ஞாநதத்துவங்களையுடைய ஸத்குருவையடைந்து சரீரமும் நிழலும்போல் பஹுகாலம் அவரை இடைவிடாமல் சேவித்துக்கொண்டு அவரால் கடாக்ஷிக்கப்பட்ட நித்யாநித்ய விவேக ச்ரவண மனன நிதித்யாஸனங்களைச்செய்து, ஜ்ஞானதீபத்தை ஸம்பாதித்துக்கொண்டு அஜ்ஞானமென்னும் இருளைப்போக்கி, அநாவ்ருத (அந்தக்கரண ப்ரதிபிம்ப சிதாபாஸ ஜீவனென்று சொல்லப்பட்ட எனக்கு இந்த ஜீவஸ்வரூபம் மித்யாஸ்வரூபமே என்றும், தேஹேந்த்ரியாந்தக்கரணாதிகளுக்கு ஸாக்ஷியாயிருக்கும்

ஆத்மஸ்வரூபமே எனது நிஜஸ்வரூபம் என்றும், ஜீவஸ்வரூபம் நானல்ல, ஜீவவிகாரங்கள் எனக்கில்லை, தேஹேந்த்ரியங்கள் நானல்ல, தேஹேந்த்ரியங்களுக்கிருக்கும் விகாரங்கள் எனக்கில்லை, நான் தேஹத்ரய அவஸ்தாத்ரய ஜீவஸாக்ஷியாகிய ஆத்மஸ்வரூபன், அவ்வித ஆத்மஸ்வரூபனாகிய நானே ப்ரஹ்மம், ப்ரஹ்மமே நான் என்றும் அறிந்து,) ஸதா ப்ரஹ்மாத்ம அபேத ஐக்ய பாவமுடையவனாய் ஆத்மாநுஸந்தாநஞ்செய்துகொண்டு, ப்ராரப்த கர்மக்ஷயபர்யந்தம் "ராகத்வேஷ பயாதீநா மநுரூபம் சரந்நபி யோந்தர்வ்யோமவதத்யச்சஸ்ஸ ஜீவன் முக்த உச்யதே" என்னும் உபநிஷத்தின் வாக்யரீதியாய் தானும் உலகத்தாரைப் போல் ராகத்வேஷாதி குணங்களையுடையவனாய் நடித்துக்கொண்டு ஸகலகார்யங்களையும் செய்துகொண்டு தான் அந்தரத்தில் ஆகாசம்போல் நிராகாரமாய், நிர்குணமாய், நிர்விகாரமாய், ஸாக்ஷிமாத்ரமாய் பாவித்துக்கொண்டு ஜீவகாருண்யமுடையவனாய் ஸதா ஆத்மாநுஸந்தாநஞ்செய்து ஜீவன்முக்தியை அடைந்து, ப்ராரப்த கர்மம் க்ஷீணித்தவுடன் தனக்கு உண்டாயிருக்கும் ப்ரஹ்மாத்ம அபேத ஐக்ய ஜ்ஞானத்தினால் ஸ்தூலஸூக்ஷ்ம காரணதேஹங்கள் நசித்து, கடஜலம்வற்றிப் போனவுடனே அந்தக்கடஜலத்தில் தோன்றிய ப்ரதிபிம்ப ஸூர்யன் ஆகாசத்திலிருக்கும் ஸூர்யபிம்பத்திற் கலந்து லயித்ததுபோல், தன் சிதாபாஸ ஜீவஸ்வரூபம் ஆத்மாவில் லயித்து ஆத்மஸ்வரூபியாய், கடம் உடைந்தவுடன் கடாகாசம் மஹாகாசத்திற்கலந்து ஏகமாவதுபோல், ஆத்மஸ்வரூபியாகிய தான் ஸர்வபரிபூர்ண பரப்ரஹ்மத்திற் கலந்து அபேத பரப்ரஹ்ம ஸ்வரூபனாகின்றான். (இதற்கு, த்ருஷ்டாந்தம் ஸ்ரீபகவத்கீதை அத்யாயம், 3 - ஶ்ரு - 26, பார்க்க.)

இப்படிப்பட்ட ஜீவப்ரஹ்மைக்யமே, ஜநநமரணங்களில்லாத விதேஹ முக்தியென்றும், விதேஹகைவல்யமென்றும், நிஜமோக்ஷமென்றும் சொல்லப்படும். ஆதலால், உலகத்திலுள்ள ஸகல ஜந்துக்களின் ஒவ்வொரு தேஹத்திலும் ஆத்மா

வை இடைவிடாமல் சிதாபாஸ ஜீவஸ்வரூபம் வ்யாபித்திருப்பதினால் ஒவ்வொருமனிதனும், தனக்கு உண்டாயிருக்கும் சிதாபாஸ ஜீவஸ்வரூபத்தை லயிக்கச்செய்து, ஜனனமரணங்களில்லாதவனாய் பரிபூர்ணத்த ஆத்மஸ்வரூபியாய், தான் ப்ரஹ்மஸ்வரூபனாவதற்காக ப்ரஹ்மஜ்ஞானத்தை ஸாதனம் செய்யவேண்டும். ஜீவனுக்குக் கர்மாநுஸாரமாய் இந்த ஸ்தூல ஶரீரங்கள் அநேகம் மாறிமாறி வருவதும் போவதுமாயிருக்கும். ஆனால், ஸூக்ஷ்ம ஶரீரம் மாத்ரம் ஓர் ஶரீரமேயல்லாமல் பலவல்ல. ஜீவன், ஸதா ஸூக்ஷ்ம ஶரீரத்தை இடைவிடாமல் அதனுடன் கூடவே தொடர்ந்துகொண்டிருக்கும், ஜீவனுக்கு ஸூக்ஷ்ம ஶரீரம் ஸஹஜஸ்வரூபமேயொழிய ஸ்தூலஶரீரம் ஸஹஜஸ்வரூபமல்ல. ஆதலால், இந்த ஸூக்ஷ்மஶரீரம் அக்நியினால் தஹிக்கப்படாதது; ஆயுதங்களினால வெட்டப்படாதது; ஜலத்தினால் நனையப்படாதது; வாயுவினால் அசைந்து ஶோஷிக்கப்படாதது; மஹாப்ரளயத்திலும் நஶிக்கப்படாதது. ஆனால், இந்த ஸூக்ஷ்ம ஶரீரத்திற்குக் காரணமாகிய அஜ்ஞானமென்னும் காரணஶரீரம் எதுவரையில் நஶிக்காதோ அதுவரையில் ஸூக்ஷ்மஶரீரம் நஶிக்காது. காரணஶரீரமென்பது "அநாதிமாயா ஸுப்தோஜீவ:" என்னும் ஶ்ருதிரீதியாய் ஜீவனுக்கு அநாதியாய் வந்துகொண்டிருக்கும் அஜ்ஞானமே காரணஶரீரமென்று சொல்லப்படும். இந்தக் காரணஶரீரம் ஜ்ஞானாக்நியினால் நஶித்தவுடனே ஸூக்ஷ்மஶரீரம் தனக்குத்தானாகவே நஶித்துப்போய்விடும். அப்படி ஸூக்ஷ்மஶரீரம் நஶித்தவுடனே, ஜீவன் ஜனனமரண ஸமுத்ரத்தைத்தாண்டி முக்தியென்கிற மோக்ஷக்கரையையடையும், ஆதலால், லிங்கஶரீரபங்கமே அதாவது ஸூக்ஷ்மஶரீரநாஶமே முக்தி அடைவதற்குக்காரணம். இந்த ஸூக்ஷ்ம ஶரீரத்திற்குக் காரணமாகிய அஜ்ஞானமென்னும் காரணஶரீரம் நஶிக்காவிடில், இந்தஸூக்ஷ்மஶரீரம் நஶிக்காது. இந்தக் காரணஶரீரம் ஜ்ஞானாக்நியினால் நஶிக்குமேயொழிய மற்ற எதனாலும் நஶிக்கப்படமாட்டாது. இந்தக் காரண ஶரீ

ரமே ஸஞ்சிதமென்று சொல்லப்படும். ஒவ்வொருமனிதனும் அஜ்ஞானமென்னும் காரணஶரீரத்தையும் ஸூக்ஷ்மஶரீரத்தையும் லயிக்கச்செய்து முக்தியடைவதற்கு முக்யமான ப்ரயத்னப்பட்டு, ப்ரஹ்மஜ்ஞானத்தைப் பெறல்வேண்டும். "பாகஸ்ய வஹ்நிவத் ஜ்ஞாநம்விநா மோக்ஷோ நைவஸித்யதி." என்பதுபோல், ப்ரஹ்மஜ்ஞானம் லபிக்காவிடில் எவ்விதப் பேற்றினைப் பெற்றவர்களுக்கும் மோக்ஷம் லபிக்கவேமாட்டாது. ஜீவன்வேறு பரமாத்மாவேறு என்று பாவிப்பதே த்வைதமென்றும் பேதஜ்ஞானமென்றும் கூறப்படும். இவ்வித பேதஜ்ஞானத்தினால் ஜீவன் ஜநந மரணமுண்டாகித் து:கித்துக்கொண்டிருக்கும். ஆனால், "ஜீவ: பஞ்சவிம்ஶக: ஸ்வகல்பித சதுர்விம்ஶதி தத்வம் பரித்யஜ்ய ஷட்விம்ஶ பரமாத்மாஹமிதி நிஶ்சயாத் ஜீவந்முக்தோபவதி." என்னும் மண்டலப்ராஹ்மணோபநிஷத்வாக்யரீதியாய் ஜீவஸ்வரூபியாகிய நான் தேஹேந்த்ரியங்களுக்கு வேறாயிருக்கின்றேன்; தேஹேந்த்ரியங்கள் நானல்ல; மேலும், ஜீவஸ்வரூபியாகிய நான் பரமாத்மாவின் அம்ஶமாயிருக்கின்றேன்; நானே பரமாத்மா, பரமாத்மாவேநான் என்று தெரிந்து ஸதா அபேதமாய் ஜீவப்ரஹ்மைக்யாநுஸந்தாநம் செய்துகொண்டிருப்பதே அத்வைதமென்றும் ப்ரஹ்மஜ்ஞானமென்றும் சொல்லப்படும். இவ்வித அபேத அத்வைத ப்ரஹ்மஜ்ஞானமே ஜநநமரண ரஹிதமென்கிறமுக்தி. இதனாலேயே, ஜீவப்ரஹ்மைக்யம் ஸித்திக்கும். "அந்யவித்யா பரிஜ்ஞானம்வஶ்யம் நஶ்வரம் பவேத், ப்ரஹ்ம வித்யா பரிஜ்ஞானம் ப்ரஹ்மப்ராப்தி கரம் ஸ்திதம்" என்னும் ஶாக ரஹஸ்யோபநிஷத்வாக்யரீதியாய், காம்யகர்ம ஸம்பந்தமான ஸகல வித்தைகளையுங் கற்றபோதிலும் முக்தி உண்டாகமாட்டாது. ஆனால், பூர்வகர்ம புண்யவசத்தினால் ஸத்குரு தர்ஶனம்கிடைத்து அவருடைய அபாரகருணையால் ஜீவனே ப்ரஹ்மம், ப்ரஹ்மமே ஜீவன் என்னும் ஜீவப்ரஹ்மைக்யாநுஸந்தாநம் என்கிற ப்ரஹ்ம வித்யையை அப்யஸித்து, தான் ப்ரஹ்மஸ்வரூபனாயிருப்பதனால் முக்தி லபிக்கும்.

"நாஹம்ப்ரஹ்மேதி ஜாநாதி தஸ்ய முக்திர்ந ஜாயதே." [பயிங்களோ.]

ஜீவனே ப்ரஹ்மமென்று தெரியாதவனுக்கு எப்பொழுதும் மோக்ஷமுண்டாகமாட்டாது.

இந்தஜீவன் எதனால் கட்டுப்பட்டிருக்கின்றதென்றால்,—

ஶ்ரு || "துஷேணபத்தோ வ்ரீஹி ஸ்யாத் துஷாபாவேது தண்டுல:
ஏவம் பத்த ஸ்ததா ஜீவ: கர்மநாஶே ஸதாஶிவ:."
[ஸ்கந்தோபநிஷத்.]

உமியினால் மூடப்பட்டிருக்கும்போது நெல்லென்றும், உமியில்லாதபோது அரிசியென்றும் எப்படிச்சொல்லப்படுகின்றதோ அதுபோல், கர்மத்தினால் கட்டுப்பட்டிருக்கும்போது ஜீவனென்றும் கர்மம் நாஶமானபோது நித்யமங்களஸ்வரூபனாய் ஶாஶ்வதமாயிருக்கப்பட்ட பரப்ரஹ்மமென்றும் சொல்லப்படும்.

ஶ்ரு || "கர்மேதி க்ரியமாணேந்த்ரியை: கர்மண்யஹங்கரோமீதி
த்யாத்மநிஷ்டதயா க்ருதம் கர்மைவகர்ம."
[நிரலம்போபநிஷத்.]

இந்த்ரியங்களினால் செய்யப்படும் கார்யங்களை நான்செய்கின்றேன் என்று ஆத்மாவுடன்ஸம்பந்தப்படுத்திச் செய்யப்பட்ட கார்யங்களே கர்மமென்று சொல்லப்படும். இப்படிப்பட்ட ஆத்மாவிற்கு ஜாதிபேதமில்லை.

ஶ்ரு || "ஜாதிரிதி சேத் ந சர்மணோ ந ரக்தஸ்ய ந மாம்ஸஸ்ய ந
சாஸ்தீநாம் ந ஜாதிராத்மநோ ஜாதிர்வ்யவஹார ப்ரகல்பிதா."

ஜாதியென்பது, தேஹத்தின்மீதிருக்கும் சர்மத்திற்குமில்லை, ரக்தம் மாம்ஸம் அஸ்திகளுக்குமில்லை, ஆத்மாவிற்குமில்லை, வ்யவஹாரத்திற்கு மாத்ரம் ஏற்படுத்தப்பட்டது. ஆதலால்,—

"காணப்பா ஜாதிகுலம் எங்கட்கில்லை
கருத்துடனே யெங்குலஞ்சக் கிலத்தான்மைந்தா
தோணப்பா தோணுமற் சாதிபேதஞ்

சொல்லுவான் சுருக்காகச் சுருண்டுபோவான்
வீணப்பா பிரமத்தில் ஆதிகாலம்
வீரமுடன் பிறந்ததடா உயிர்களெல்லாம்
காணப்பா அப்படியே உதித்தேன்முன்னே
நன்றாக வுதித்தவிடம் நாடினேனே."

ஶ்ரு || "அத்யந்தமலினோ தேஹோ தேஹீசாத்யந்த நிர்மல:
உபயோரந்தரம் ஜ்ஞாத்வா கஸ்யஶௌசம் விதீயதே."
[முக்திகோபநிஷத்.]

தாய் தந்தைகளினுடைய ஶுக்லஶ்ரோணிதங்களினால் உண்டாகிய இந்த மாம்ஸஶரீரம் அஶுத்தம். இதில் நிவஸித்துக்கொண்டிருக்கும் ஆத்மா நிர்மலமானவர். இந்த இரண்டு தத்வங்களையும் விசாரித்த ஜ்ஞாநி எதற்கு ஶௌசம் செய்வான். அஶுத்தமாகிய தேஹத்திற்கே ஸ்நானஶௌசாதிகள் செய்யவேண்டுமேயொழிய பரிஶுத்தனாகிய ஆத்மாவிற்கு ஸ்நானஶௌசாதிகளினால் ப்ரயோஜனமில்லை. இந்த ஶௌசாதிகளினால் ஆத்மாபரிஶுத்தமாவானென்பது வ்ருதா ப்ரமையே.

ஶ்ரு || "ஸ்வஸ்வரூபஸ்ய விஜ்ஞாநாத் நாதிகம் தீர்த்தமுச்யதே."
[ஜ்ஞாநவாஸிஷ்டம்.]

ஆத்மஜ்ஞானமென்னும் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தவர்களே முக்தியை அடைவார்கள். இதரர்கள் அடையமாட்டார்கள். ஆதலால்,

ஶ்ரு || "உத்திஷ்டத ஜாக்ரத ப்ராப்ய வராந் நிபோதத க்ஷுரஸ்ய
தாரா நிஶிதா துரத்யயா துர்க்கம் பதம் தத்கவயோவதந்தி."
[கடோபநிஷத்.]

அஜ்ஞானமென்னும் இருளில் நித்ரைசெய்யும் ஓ ஸஹோதரர்களே! எழுந்திருங்கள், ஜாக்ரதைப்படுங்கள்! நிஜகுருகடாக்ஷத்தினால் ஆத்மாநாத்மவிவேகம் முதலாகிய வேதாந்த விசாரணைசெய்து ஆத்மாநுபவத்தை அடையுங்கள்!

ஜீவன்முக்தி லக்ஷணம்.

ஶ்ரு || "க்ரியாநாஶாத் பவேத் சிந்தாநாஶோ ஸ்மாத்வாஸநாக்ஷய:
வாஸநாப்ரக்ஷயோ மோக்ஷஸ் ஸஜீவன்முக்திரிஷ்யதே."
[அத்யாத்மோபநிஷத்.]

ஸகல வ்யாபாரங்களும் நசிப்பதினால் சிந்தை யில்லாமலிருக்கும். சிந்தை யில்லாமலிருப்பதினால் வாஸனாத்ரயங்கள் நசிக்கும். வாஸனாத்ரயங்கள் நசிப்பதினால் ஜீவன்முக்தியடைகின்றது.

ஶ்ரு || "ப்ரஹ்மண்யேவ விலீநாத்மா நிர்விகாரோ விநிஷ்க்ரிய:
ப்ரஹ்மாத்மநோ ஶ்சோதிதயோ ரேகபாவாவகாஹிநீ
நிர்விகல்பா ச சின்மாத்ரா வ்ருத்தி: ப்ரஜ்ஞேதி கத்யதே
ஸா ஸர்வதா பவேத்யஸ்ய ஸ ஜீவன்முக்த இஷ்யதே."
"தேஹேந்த்ரியே ஷ்வஹம்பாவ இதம்பாவ ஸ்ததந்யகே
யஸ்ய நோ பவத: க்வாபி ஸ ஜீவன்முக்த இஷ்யதே."
"ந ப்ரத்யக் ப்ரஹ்மணோர்பேதம் கதாபி ப்ரஹ்மஸர்கயோ:
ப்ரஜ்ஞயா யோ விஜாநாதி ஸ ஜீவன்முக்த இஷ்யதே."
"ஸாதுபி: பூஜ்யமாநேஸ்மின் பீட்யமாநேபி துர்ஜநை:
ஸமபாவோ பவேத்யஸ்ய ஸ ஜீவன்முக்த இஷ்யதே."
[அத்யாத்மோபநிஷத்.]

ப்ரஹ்மத்தில் லீனமான ப்ரஹ்மவேத்தா நிர்விகாரனாயும் நிஷ்க்ரியனாயும் இருப்பான். ப்ரஹ்மமே ஆத்மாவென்றும், ஆத்மாவே ப்ரஹ்மமென்றும் தத்வவிசாரணையினால் தெரிந்து ஸமரஸ ஐக்யபாவத்தை அடைந்து, ஸகல ஸங்கல்பங்களும் நசித்து, ஸகலமும் மறந்து, தானே தானாய் கேவல ஸாக்ஷிமாத்ரனாயிருக்கும் வ்ருத்தியே ப்ரஜ்ஞை யெனப்படும். இப்படிப்பட்ட ப்ராஜ்ஞையுடையவனே ஜீவன்முக்தன். தேஹேந்த்ரியங்களே நான் என்னும் அஹங்காரமே அஜ்ஞானம். இந்த அஜ்ஞானம் ஒருபோதும் இல்லாதவனே ஜீவன்முக்தன். ப்ரஹ்

மத்திற்கும் ஆத்மாவிற்கும் எப்பொழுதும் பேதம் உண்டாகமாட்டாது. ப்ரஹ்மமே ஆத்மா, ஆத்மாவே ப்ரஹ்மமென்று எவன் ஜ்ஞானத்தினால் அறிகின்றானோ அவனே ஜீவன்முக்தன். ஸாதுக்கள் தம்மைப்பூஜித்தாலும் அல்லது துர்ஜனர்கள் தூஷித்தாலும் கோபதாபங்களில்லாதவர்களாய் ஸர்வத்ர ஸமபாவத்துடன் இருப்பவர்கள் யாவர்களோ அவர்களே ஜீவன்முக்தர்கள் என்று சொல்லப்படுவார்கள்.

ஶ்ரு || "புருஷஸ்ய ஸுகதுஃகாதி லக்ஷண சித்ததர்ம:
க்லேஶரூபத்வாத் பந்தோ பவதி தந்நிரோதநம் ஜீவன்முக்தி:."
[முக்திகோபநிஷத்.]

நானே யஜமானன், ஸர்வமும் என்னால் நடக்கின்றது, என்னும் அஹங்காரங்கொண்டு ஓர் கார்யத்தைச்செய்வது கர்த்ருத்வமென்றும், அப்படிச்செய்து அதன் பலனை அனுபவிப்பது போக்த்ருத்வ மென்றும் சொல்லப்படும். மனமே நானாவித கார்யங்களையுஞ் செய்துகொண்டு ஸுகதுக்கங்களை அனுபவித்துக்கொண்டிருக்கின்றது. அந்த மனதினாலேயே பந்தம் உண்டாகின்றதேயொழிய, நான்எந்தக்கார்யங்களையும்செய்வதில்லை, நான் எதையும் அனுபவிப்பதில்லை, நான் கேவலம் ஸாக்ஷிமாத்ரன், அகர்த்தன், அபோக்தன் என்னும் நிஶ்சய ஜ்ஞானமுண்டாகிக் கர்த்ருத்வ போக்த்ருத்வமென்னும் அகங்காரஶூன்யனாகி மனோவிகாரங்களைநாசஞ்செய்து தான் கேவலஸாக்ஷிமாத்ரனாய் சின்மாத்ர ப்ரஹ்மமா யிருப்பவனே ஜீவன்முக்தன்.

ஶ்ரு || "த்ருஶ்யம் நாஸ்தீதி போதேந மநஸோ
த்ருஶ்யமார்ஜநம் ஸம்பந்நம் சேத் ததுத்பந்நா
பரா நிர்வாண நிர்வ்ருதி:." [மஹோபநிஷத்.]

த்ருஶ்யங்களெல்லாம் அஸத்யமென்று ஸகல த்ருஶ்யங்களையும் மறந்து, ஸ்வஸ்வரூபமாயிருப்பதே மோக்ஷமென்று சொல்லப்படும். அப்படிப்பட்ட ஸ்திதியை அடைந்தவனே ஜீவன்முக்தன்.

ஶ்ரு || "நமோக்ஷோ நபஸ: ப்ருஷ்டே ந பாதாலே ந பூதலே
ஸர்வாஶா ஸம்க்ஷயே சேதக்ஷயோ மோக்ஷ இதீஷ்யதே."
[அன்னபூர்ணோபநிஷத்]

மோக்ஷமென்பது ஆகாசத்திலுமில்லை, பாதாளலோகத்திலுமில்லை, பூலோகத்திலுமில்லை. ஸகல ஆசைகளும் நசித்து சித்தமும் நசித்து ஸங்கல்ப ஶூன்யமாயிருப்பதே மோக்ஷமென்று சொல்லப்படும். ஆதலால், அப்படி ஸங்கல்பஶூன்யம் செய்தவனே ஜீவன்முக்தன்.

ஶ்ரு || "அத்யாத்மரதி ரஶ்ரீக்த: பூர்ணபாவனமானஸ:
ப்ராப்தானுத்தம விஶ்ராந்திர் நகிஞ்சிதிஹ வாஞ்சதி."
"ஸர்வாதிஷ்டான ஸன்மாத்ரே நிர்விகல்பே சிதாத்மனி
யோ ஜீவதி கதஸ்னேஹ: ஸ ஜீவன்முக்த உச்யதே."
[அன்னபூர்ணோபநிஷத்.]

அத்யாத்ம நிஷ்டையிலிருந்துகொண்டு மனஸை பரப்ரஹ்மத்தில் லயிக்கச்செய்து சித்தவிஶ்ராந்தியடைந்து ஸகல போகங்களிலும் கோரிக்கையில்லாதவனாய் தாரா புத்ராதிகளென்னும் ஜகத்தில் ஸ்நேஹமில்லாதவனாய் நிர்விகல்பமாய் ப்ரஹ்மஸ்வரூபத்திலிருப்பவனே ஜீவன்முக்தன்.

ஶ்ரு || "அஶேஷேண பரித்யாக: வாஸனாயா ய உத்தம:
மோக்ஷ இத்யுச்யதே ஸத்பிஸ் ஸ ஏவ விமலக்ரம:."
[மஹோபநிஷத்.]

ஸகல மலின வாஸனைகள் பூர்த்தியாய் நசித்து சின்மாத்ரமாயிருப்பதே மோக்ஷமென்று சொல்லப்படும். அப்படிப்பட்ட ஸ்திதியை அடைந்தவனே ஜீவன்முக்தன்.

ஶ்ரு || "ந ஶாந்தவாஸனா பூயோ ஜந்மார்த்த பாகின:
ஜ்ஞாதஜ்ஞேயாஸ்த உச்யந்தே ஜீவன்முக்தா மஹாதிய:."
[மஹோபநிஷத்.]

டம்பமில்லாமலிருத்தல் காமக்ரோதாதி துர்க்குணங்களில்லாமலிருத்தல், ஶமதமாதிகள், ஶ்ரவண மனனாதிகள் என்பவைகளே ஶாந்த வாஸனைகளென்று சொல்லப்படும். இப்படிப்பட்ட ஶாந்தவாஸனை நசித்து புனர்ஜந்ம ஶூன்யமாய் ஸதா அபரோக்ஷஜ்ஞான ஸாக்ஷாத்காரத்தை அடைந்தவனே ஜீவன்முக்தன். ஜீவன்முக்தனென்றால், இதரர்களுக்கு பந்த ஸம்ஸாரியைப்போலக் காணப்பட்டு லோகவ்யாபாரங்கள் செய்தபோதிலும் தான்மாத்ரம் தன்னிடத்தில்தோன்றப்பட்ட ஜீவப்ராந்தி நசித்து ஸாக்ஷிமாத்ர பரப்ரஹ்ம ஸ்வரூபமாய் இருக்கப்பட்டவனென்னும் பாவனையேயாம்.

ஶ்ரு || "ஸர்வத்ர விகதஸ்நேஹோ யஸ்ஸாக்ஷிவதவஸ்தித:
நிரிச்சோ வர்த்ததே கார்யே ஸ ஜீவன்முக்த உச்யதே."
[மஹோபநிஷத்.]

தாராபுத்ராதிகளில் ஆசையுடையவனாய் உலகத்தாருக்குக் காணப்பட்டபோதிலும் அந்தரங்கத்தில் அவர்களின்மீது ஆசையில்லாதவனாய், தேஹேந்த்ரிய வ்யாபாரங்களுக்குத் தான் ஸாக்ஷியென்று எண்ணிக்கொண்டு கோரிக்கையில்லாமலே ஸ்நான மௌன போஜனாதி ஸகல கார்யங்களையுஞ் செய்து கொண்டிருப்பவனே ஜீவன்முக்தன்.

ஶ்ரு || "ஏகதர்ம மதர்மஞ்ச யேனோ மாநமீஹிதம் ஸர்வமந்த:
பரித்யக்தம் ஸ ஜீவன்முக்த உச்யதே." [மஹோபநிஷத்.]

வேதவிஹித தர்மாதர்மங்களுடன் தனக்கு லாபமில்லையென்று அவைகளை ஸ்மரிக்காமலும் அபேக்ஷிக்காமலும் ஸதா ஆத்மாநுஸந்தானம்செய்யப்பட்டவனே ஜீவன்முக்தன்.

ஶ்ரு || "யாவதீ த்ருஶ்யகலனா ஸகலேயம் விலோக்யதே
ஸா யேன ஸுஷ்டு ஸந்த்யக்தா ஸ ஜீவன்முக்த உச்யதே."
[மஹோபநிஷத்.]

நானாவிசித்ர நாமரூபங்களுடன் காணப்படும் ப்ரபஞ்சம் மாயாகல்பனையென்றும், அஸத்யமென்றும் தெரிந்து ப்ரபஞ்சத்தின் ஆசையைவிட்டு ஸதா ஆத்மத்யானம் செய்து கொண்டு தன்மயமாயிருப்பவனே ஜீவன்முக்தன்.

ஶ்ரு || "கட்வம்ல லவணம் திக்த மம்ருஷ்டம் ம்ருஷ்டமேவச
ஸமமேவச யோபுங்க்தே ஸ ஜீவன்முக்த உச்யதே."
[மஹோபநிஷத்.]

கார்ப்பு, புளிப்பு, உவர்ப்பு, கசப்பு, துவர்ப்பு, இனிப்பு ஆகிய ஷட்ரஸ பேதங்களும் ருசியில்லாத அன்னமும் தைவாதீனமாய் எவ்வாறு ப்ராப்தித்தபோதிலும் அதில் ருசி அருசி விசாரிக்காமல் ஸம பாவத்துடன் புஜித்து, ஸதா ஆத்மாநுஸந்தான பரனாயிருப்பவனே ஜீவன்முக்தன்.

ஶ்ரு || "ஜராமரண மாபச்ச ராஜ்யம் தாரித்ர்யமேவச
ரம்யமித்யேவ யோபுங்க்தே ஸ ஜீவன்முக்த உச்யதே"
[மஹோபநிஷத்.]

ஶரீர ஸம்பந்தமாகிய மூப்பு (கிழத்தனம்) மரணம், ஆபத்து, ராஜ்யம், ஸம்பத்து, தாரித்ரியம் முதலானவைகள் ஸம்பவித்தபோதிலும், அவைகள் தேஹத்திற்கேயன்றி ஆத்மாவிற்கில்லையென்று நிர்ப்பயமாய் ப்ரஹ்மானந்த ஸ்வரூபமாய் இருப்பவனே ஜீவன்முக்தன்.

ஶ்ரு || "ஸர்வேச்சாஸ் ஸகலாஶ்ஶங்கா ஸர்வேஹாஸ் ஸர்வநிஶ்சயா:
தியா யேந பரித்யக்தாஸ் ஸ ஜீவன்முக்த உச்யதே"
[மஹோபநிஷத்.]

ஸகல எண்ணங்களையும், ஸகல ஸந்தேஹங்களையும், ஸர்வ ப்ரபஞ்ச விஷயங்களையும், ஸர்வ ஶாஸ்த்ர ஸித்தாந்தங்களையும் விட்டுவிட்டு லோகவாஸனை, ஶாஸ்த்ரவாஸனை, தேஹவாஸனை என்னும் வாஸனாத்ரயமில்லாதவனாய் ஸதா ஆத்மாநுஸந்தானம் செய்துகொண்டிருப்பவனே ஜீவன்முக்தன்.

ஶ்ரு || "ஶாந்த ஸம்ஸார கலந: கலாவாநபி நிஷ்கல:
யஸ்ஸசித்தோऽபி நிஶ்சித்தஸ் ஸ ஜீவன்முக்த உச்யதே."
[மஹோபநிஷத்.]

ஸம்ஸாரத்திலிருந்தும் ஸம்ஸார தாபங்களில்லாதவனாயும், வித்வாம்ஸனாயிருந்தும் வித்வானென்னும் கர்வமில்லாத

வனாயும், பரிஶாந்தசித்தனாயிருந்தும் அது இல்லாதவனாயும் இருப்பவன் எவனோ அவனே ஜீவன்முக்தன்.

ஶ்ரு || "ஜாக்ரத்யேவ ஸுஷுப்தஸ்த: குருகர்மாணி வை த்விஜ
அந்தஸ்ஸர்வ பரித்யாகீ பஹி:குரு யதாகதம்."
[அன்னபூர்ணோபநிஷத்.]

ஜாக்ராவஸ்தையில் நித்ரிப்பவனைப்போல் இருந்து ஸகல கார்யங்களையும் செய்துகொண்டு அந்தரங்கத்தில் காமக்ரோதாதிகள் இல்லாதவனாய் தான் ஸாக்ஷிமாத்ரனாய் ஸுகித்துக்கொண்டு பாஹ்யத்தில் (வெளியில்) உலகத்தாரைப்போல் யதாவிதியாய் ஸகல கார்யங்களையும் செய்துகொண்டிருப்பவனே ஜீவன்முக்தன்.

ஶ்ரு || "தேஹேந்த்ரியேஷ்வஹம்பாவ
இதம்பாவஸ் ததந்யகே யஸ்ய நோபவத:
க்வாபி ஸ ஜீவன்முக்த இஷ்யதே." [அத்யாத்மோப.]

தேஹேந்த்ரியங்களே நானென்னும் அஹங்காரத்தை விட்டு தேஹேந்த்ரியங்களுக்கு விலக்ஷணனாயிருக்கும் ஆத்மாவே நானென்று எண்ணப்பட்டவனே ஜீவன்முக்தன்.

ஶ்ரு || "ராகத்வேஷ பயாதீநா மநுரூபம் சரந்நபி
யோந்தர்வ்யோமவதத்யச்சஸ் ஸ ஜீவன்முக்த உச்யதே."
[மஹோபநிஷத்.]

காமக்ரோத லோப மோஹாதி குணங்களையுடையவனாய் நடித்துக்கொண்டிருந்தபோதிலும் எவன்மனம் ப்ரஹ்மமயமாய் நிராகாரமாய் ஆகாஶத்தைப்போல் பரிஶாந்தமாயிருக்கின்றதோ அவனே ஜீவன்முக்தன்.

ஶ்ரு || "அஹங்காரமயீம் த்யக்த்வா வாஸநாம் லீலயைவய:
திஷ்டதி த்யேயஸம்த்யாகீ ஸ ஜீவன்முக்த உச்யதே."
[மஹோபநிஷத்.]

அஹங்கார ரூபமாகிய மலின வாஸனைகளை விட்டுவிட்டு தேவதா உபாஸனாதிகளை நிவர்த்திசெய்து ஸதா ஆத்மநிஷ்டையில் இருப்பவனே ஜீவன்முக்தன்.

ஶ்ரு || "யஸ்யேச்சா ததாநிச்சா ஜ்ஞஸ்வகர்மணி திஷ்டத:
தஸ்ய லிப்யதே ப்ரஜ்ஞா பத்மபத்ர மிவாம்புபி:" [மஹோப.]

எவன் இச்சையில்லாதவனாய் ஸகலகார்யங்களையும் செய்துகொண்டிருப்பானோ, அவன், ஜலபிந்துவுடன்கூடிய தாமரையிலைபோல், விஷயங்களால் உண்டாகும் ஸுகதுக்கங்களைப்பற்றாமல் அஸங்கனாயிருப்பான், அவனே ஜீவன்முக்தன்.

ஶ்ரு || "ஜ்ஞாநாம்ருத த்ருப்த யோகிநோ கிஞ்சித் கர்த்தவ்யமஸ்தி
ததஸ்திசேந்ந ஸ தத்வவித்பவதி." [பைங்கலோபநிஷத்.]

தேவாம்ருதம் வாயாரப்புஜித்தவன் பசிதாஹம் முதலானவைகளில்லாதவனாய் மிகவும் ஸந்தோஷமுடையவனாய் அன்னபானாதிகளை ஆஶ்ரயிக்காதவனாய் எவ்விடத்திலும் சஞ்சாரம்செய்யாமல் இருந்தவிடத்திலே ஸுகமாய்ப்படுத்து நித்ரிப்பதுபோல், ஜ்ஞானாம்ருத பானம்செய்து த்ருப்தியடைந்த ஜ்ஞானி ஸகலகார்யங்களும் தைவாதீனமாய் பூர்வகர்மங்களை அனுஸரித்து நடக்கின்றதேயொழிய, நான் எதுவும் செய்வதில்லையென்னும் த்ருட நிஶ்சயமுண்டாய் அஹங்காரஶூன்யனாய் எந்த வ்யாபாரமும் செய்யாமல் நிஶ்சலனாய் இருந்தவிடத்திலேயே ஸதா ப்ரஹ்மானந்த நித்ரை அடைந்துகொண்டிருப்பான். அப்படிப்பட்டவனே ஜீவன்முக்தன். மனோவ்யாபாரம் ஶூன்யமாகாவிடில் ஜீவன்முக்தனாகமாட்டான்.

ஶ்ரு || "ப்ராரப்தகர்ம பர்யந்தம் அஹி நிர்மோகவத் வ்யவஹாரீ
சந்த்ரவச்சரதே தேஹீ ஸமுக்தஶ்சாநிகேதந:"
[பைங்கலோபநிஷத்.]

ப்ராரப்தகர்மம் நசிக்கும்வரையில் எப்பேர்ப்பட்டவர்களுக்கும் தேஹம் நசிக்காததலால் ஜ்ஞானி ப்ராரப்தம் நசிக்கும்வரையில் தேஹதாரணனாயிருப்பான். (ஸ்ரீபகவத்கீதை அத்யாயம் 4. ஶ்லோகம் 19. பார்க்க.) அறுவடையான பயிர்த்தாள்கள் மறுபடியும் முளையாததுபோல் ஜ்ஞானாக்நியினால் இனிமேல் தனக்கு புனர்ஜனனமில்லாதவனாய்ச் செய்துகொண்டு பூர்ணசந்த்ரனைப்போல் நிஷ்களங்கனாய் எந்த தோஷங்

களும் இல்லாதவனாய் கர்த்ருத்வ போக்த்ருத்வமென்னும் அஹங்காரஶூன்யனாய், ஸங்கல்பஶூன்யனாய் சேற்றிலுள்ள பிள்ளைப்பூச்சி சேற்றைப்பற்றாமலிருப்பதுபோல் ஸம்ஸாரத்திலிருந்தபோதிலும் அதில் பற்றாமல் வஶீக்ருத மானஸேந்த்ரியனாய் ஸகல ஜனங்களுக்கும் மித்ரனாய் அதிக தயாளத்வமுடையவனாய் கோபதாபங்கள் அஸூயை பயம் முதலானவைகளில்லாதவனாய் தனக்கிஷ்டமாகியபதார்த்தங்கள் லபிப்பதனால் ஸந்தோஷமும், தனக்கிஷ்டமில்லாத பதார்த்தம் லபிப்பதனால் துக்கமும் இல்லாதவனாய்த் தனக்கும் பூர்வகர்மானுஸாரமாய் எதேது ப்ராப்திக்கின்றதோ அதில் த்ருப்தியடைந்து தனக்கு லபிக்காதவஸ்துக்களுக்காக துக்கப்படாமல் தூஷணை பூஷணைகள் ஸமமாகப்பாவித்து ஸதா ப்ரஹ்மைக்யாநுஸந்தானம் செய்துகொண்டிருப்பவனே ஜீவன்முக்தன்.

ஶ்ரு || "ஸர்வலோக ஸ்துதிபாத்ர ஸர்வதேஶ சஞ்சாரஶீல:
பரமாத்ம கதேபிந்தும் நிக்ஷிப்ய ஶுத்தாத்வைத
ஜாட்ய ஸஹஜாமாஸ்க யோகநித்ரா நந்த பதானுவ்ருத்யா
ஜீவந்முக்தோபவதி." [மண்டலப்ராஹ்மணோபநிஷத்.]

ஸர்வ உலகத்தாராலும் ஸ்துதிக்கப்பட்ட ஜ்ஞானி யதேச்சையாய் நிர்பயமாய் ஸர்வதேஶ ஸஞ்சாரசீலனாய் வெட்டவெளியாகிய ஸச்சிதானந்தப்ரஹ்மமே நானென்றும் ஸதா அதிலேயே புத்தியை லயிக்கச்செய்து தனக்கு அந்யமானது மற்றொன்றுமில்லையென்றும் ஸர்வம் தானாய் பரிஶுத்த அத்வைத ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரத்தையடைந்து ஸஹஜமான ஸுகயோகநித்ரையுடையவனாய் ஸதா அகண்டானந்தவ்ருத்தியுடனே யிருப்பவன் எவனோ அவனே ஜீவன்முக்தன்.

ஶ்ரு || "தீர்த்தே ஶ்வபச க்ருஹேவா
தநும் விஹாய யாதி கைவல்யம்
ப்ராணானவகீர்ய யாதி கைவல்யம்." [பைங்கலோபநிஷத்.]

காஶீ ராமேஶ்வரம் முதலாகிய புண்யஸ்தலங்களிலாகிலும் சண்டாளனுடைய க்ருஹத்திலாகிலும் எப்பேர்ப்பட்ட

இடங்களிலாகிலும் ஜ்ஞானி ப்ராரப்தம் க்ஷயித்தவுடனே ஶரீரத்தைவிட்டு ப்ரஹ்மைக்யத்வத்தை யடைவானாதலால், அவன் எப்பேர்ப்பட்டவிடத்தில் ப்ராணனை விட்டபோதிலும் தோஷமில்லை. ப்ரஹ்மஜ்ஞானிக்கு இது ப்ராஹ்மண அக்ரஹாரம், இதுபறைச்சேரியென்னும் பேதமில்லாமல் ஸர்வமும் ஸமமாய் அபேதமாயிருக்கும்.

ஶ்ரு || "யத்ர யத்ர ம்ருதோ ஜ்ஞானீ யேன வா கேன ம்ருத்யுனா
யதா ஸர்வகதம் வ்யோம தத்ர தத்ர லயங்கத:
கடாகாஶ மிவாத்மானம் விலயம்வேத்தி தத்வத:
ஸ்வச்சந்த நிராலம்பம் ஜ்ஞானாலோகம் ஸமந்தத:." [பைங்க.]

ஜ்ஞானி பறைச்சேரியிலாகிலும் அல்லது ப்ராஹ்மண அக்ரஹாரத்திலாகிலும் வ்யாதிபிடித்தனாயும் வ்யாதியில்லாதவனாயும் அறிவையுடையவனாயும் அறிவில்லாதவனாயும் எப்படி மரணித்தபோதிலும் தோஷமில்லை. ஜாதிபேதங்களும், குலகோத்ரங்களும், ஸகல ரோகங்களும், ஸகல து:க்கங்களும், ஶரீரத்திற்கேயொழிய தனக்கில்லையென்றும் தானே ப்ரஹ்மமென்றும் தெரிந்து ஆனந்திக்கின்றானாதலால் தான் மரணித்த க்ஷணமே கடம் உடைந்தவுடன் கடாகாஶம் மஹாகாஶத்தில் ஏகமாவதுபோல் ஸத்யமாய் ஸர்வ பரிபூர்ண பரப்ரஹ்மத்தில் ஐக்யமாகின்றான்.

ஶ்ரு || "தக்தஸ்ய தஹனம் நாஸ்தி பக்வஸ்ய பசனம் யதா
ஜ்ஞானாக்னி தக்ததேஹஸ்ய ந ச ஶ்ராத்தம் ந ச க்ரியா."
[மைத்ரேயோபநிஷத்.]

ப்ரஹ்மமே தானென்னும் ஜ்ஞானாக்னியினால் தேஹமே தானென்னும் ப்ராந்தி தஹிக்கப்படுமாதலால், ஜ்ஞானி, ஜ்ஞானாக்னி தக்தஶரீரியெனப்படுவான். அக்னியில் வெந்து பஸ்மமாய்ப் போன வஸ்துவை மறுபடியும் சுடுவதில்லை; அதுபோல் ஜ்ஞானாக்னியினால் தேஹமே தானென்னும் ப்ராந்தி தஹிக்கப்பட்ட ஜ்ஞானி மரணமடைந்தவுடன் அவனது ஸ்தூல ஶரீரம் மறுபடியும் ஸ்மஶானாக்னியில் தஹனம் செய்யலாகாது.

அவனுக்குத் திலோதானம் பிண்டப்ரதானம் முதலாகிய கர்மக்ரியைகள் ஶ்ராத்தம் முதலானவைகள் செய்யலாகாது. அவனது ஶரீரத்தைப் பூமியில் சேர்த்து ஸமாதிக்ரியைகள் செய்ய வேண்டும்.

ஶ்ரு || "தத்ர கோ மோஹ: க: ஶோக: ஏகத்வ மனுபஶ்யத:
தரதி ஶோகமாத்மவித் பித்யதே ஹ்ருதயக்ரந்தி
ஶித்யந்தே ஸர்வஸம்ஶயா: க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி
தஸ்மின் த்ருஷ்டே பராவரே." [கடோபநிஷத்.]

ஸர்வம் தானான பரப்ரஹ்மமே தானென்றும் அறிந்து தன்னைவிட அந்யமான பதார்த்தம் மற்றொன்று உண்டென்று எண்ணாமல் ஸர்வம் தானாகப் பாவித்துத் தன்னைத்தான் தர்ஶித்துக்கொண்டிருக்கும் ஜ்ஞானிக்கு ஶோக மோஹங்களில்லை. அவன் ஜனனமரண து:க ஸாகரத்தைக்கடந்து நித்யானந்தத்தை அடைவான். அவன், ஸகல ஸந்தேஹங்களும் ஸகல கர்மங்களும் நஶிக்கப்பட்டு ப்ரஹ்மஸ்வரூபனாகின்றான்.

ஶ்ரு || "ஜீவ: பஞ்சவிம்ஶக: ஸ்வகல்பித சதுர்விம்ஶதி தத்வம்
பரித்யஜ்ய ஷட்விம்ஶ பரமாத்மாஹமிதி நிஶ்சயாத்
ஜீவன்முக்தோ பவதி." [மண்டலப்ராஹ்மணோபநிஷத்.]

இருபத்தைந்தாவது தத்வமாய் ஜீவாத்மாவாயிருக்கும் தான், தேஹேந்த்ரியாதி இருபத்துநான்கு தத்வங்களும் அல்லவென்றும், இருபத்தாறாவது தத்வமாகிய பரப்ரஹ்மமே தானென்னும் நிஶ்சயமுடையவனே ஜீவன்முக்தன்.

"கர்த்தா நைவ போக்தா ச நபோஜயிதா ததா." [வராஹோபநிஷத்.]

நான் கர்த்தனல்ல, எதையும் செய்வதில்லை; நான்போக்தனல்ல, எதையும் அனுபவிப்பதில்லை; நான் இதரர்களை அனுபவிக்கச் செய்யப்பட்டவனுமல்ல, கேவலம் ஸாக்ஷிமாத்ரன் அகர்த்தன் அபோக்தன் என்று நிஶ்சயித்து கர்த்ருத்வ அஹங்காரமில்லாதவனாயிருப்பவனே ஜ்ஞானி. அப்படிப்பட்ட அஹங்காரமில்லாத ஜ்ஞானி எந்தக்காரியங்களையும்

செய்யமாட்டான். ஒருவேளை செய்தபோதிலும் தோஷமில்லை. இப்படிப்பட்ட ஜ்ஞானிகள் பாலோன்மத்த பிசாசாதிகளாயிருப்பார்கள்.

ஶ்ரு || "ய ஸமஸ்தார்த்த ஜாலேஷு வ்யவஹார்ய அபி நிஸ்ப்ருஹ:
பரார்த்தேஷ்விவ பூர்ணாத்மா ஸ ஜீவன்முக்த உச்யதே."
[வராஹோபநிஷத்.]

ஜ்ஞானி, உலகத்தாரைப்போல் ஸகலமான கார்யங்களையும் செய்தபோதிலும் இதரர்களினுடைய கார்யங்களில் பிடிப்பில்லாமலிருப்பதுபோல், தான் செய்யும் கார்யங்களில் பிடிப்பில்லாதவனாய் இருந்துகொண்டும் செய்துகொண்டும் ஸ்வப்னம்போல் ஜகத் மித்யை என்று எண்ணி ப்ராந்தியில்லாதவனாய் நிராசையாயிருந்துகொண்டு பரமஶாந்தியை வஹித்து ப்ரஹ்ம ஸ்வரூபனாயிருப்பான்.

ஶ்ரு || "ஜீவன்முக்த பதம் த்யக்த்வா ஸ்வதேஹே காலஸாத்க்ருதே விஶதி அதேஹ முக்தத்வம் பவனோ ஸ்பந்ததாமிவ அஶப்த மஸ்பர்ஶ மரூபமவ்யயம் ததாரஸம் நித்யமகந்தவச்ச யத் அனாத்யனந்தம் மஹத: பரம் த்ருவம் ததேவ ஶிஷ்யத்யமலம் நிராமயம்." [பைங்கலோபநிஷத்]

ஜ்ஞானி, ப்ராரப்தம் கழிந்தவுடனே தேஹத்ரயமும் ஜீவ ப்ராந்தியும் கழிந்து ஜீவன்முக்தியைவிட்டு, தேஹமில்லாத விதேஹமுக்தியையடைவான். அப்பொழுது, ஶப்த ஸ்பர்ஶ ரூப ரஸ கந்தமில்லாத நாமரூப க்ரியாஶூன்யமான ஸர்வோத்க்ருஷ்டமாயிருக்கும் நிராமயமான பரப்ரஹ்மத்தில் கலந்து ஏகமாய்ப்போகும். எப்படி என்றால்,

ஶ்ரு || "தஸ்மாத் பாவாபாவௌ பரித்யஜ்ய
பரமாத்மத்யானேன முக்தோ பவதி."
[மண்டலப்ராஹ்மணோபநிஷத்.]

பாவாபாவங்கள், அதாவது ஒன்றை நினைப்பது மறுபடியும் மறப்பது. இந்த நினைப்பு மறப்புக்கள் ஶூன்யமாய் ஸதா தான்மாத்ரனாயிருப்பவனே முக்தன்.

ஶ்ரு || "த்வே பதே பந்தமோக்ஷாய நிர்மமேதி மமேதி ச
மமேதி பத்யதே ஜந்து: நிர்மமேதி விமுச்யதே."
[பைங்கலோபநிஷத்.]

இது என்னுடையது, இது எனக்கு வேண்டுமென்பதே "மம"காரம். ஜ்ஞானானந்த ஸர்வ பரிபூர்ண பரப்ரஹ்மமே நானாகையால் இந்த தேஹாதிப்ரபஞ்சம் எதுவும் எனதல்ல என்று நினைப்பதே "மம" காரமில்லாமற்போவது. இந்த இரண்டு எண்ணங்களே பந்தமோக்ஷத்திற்குக் காரணங்கள். ஆதலால்,

ஶ்ரு || "அஹம் ப்ரஹ்மேதி நியதம் மோக்ஷஹேதுர் மஹாத்மனாம்."
[பைங்கலோபநிஷத்.]

ஆத்மஸ்வரூபியாகிய நானே பரப்ரஹ்மம், அந்தப்பரப்ரஹ்மமே நான் என்னும் "ஸோஹம்" ப்ரஹ்மத்தை இந்நூலில் சொல்லியிருப்பதுபோல் ஜபித்து மனதை ப்ரஹ்மைக்யானுஸந்தானம் செய்வதே மோக்ஷத்திற்குக் காரணமாயிருக்கின்றது.

ஸம்ஸாரவாஸனை வாஸனாத்ரயங்கள்.

ஶ்ரு || "த்ருட பாவனயா த்யக்த பூர்வாபர விசாரணம்
யதாதானம் பதார்த்தஸ்ய வாஸனா ஸா ப்ரகீர்த்திதா."
[முக்திகோபநிஷத்]

இந்த ஸம்ஸாரானுபவம் தொன்றுதொட்டு அதாவது, ப்ரஹ்மதேவன் எப்பொழுது பிறந்தானோ அப்பொழுதே நம்மையும் ஸ்ருஷ்டி செய்துவிட்டான். அதுமுதல் நாளது வரையில் இந்த அநித்யமான ஸம்ஸாரத்தையே ஸ்திரமாய் நம்பி, முன்னதுவோ பின்னதுவோ என்னும் விவேகமில்லாமல் அதிலேயே மனதைவைத்து, ஸதா அதையே ஸ்மரித்துக்கொண்டு ப்ராணனை விடுவதனால் அந்த வாஸனை நம்மைத்

தொடர்ந்து மறுபடியும் ஜநநம் எடுக்கின்றோம். இந்த ஜநநம் வாராமல் எப்பொழுது ஸபிக்குமென்றால்,

ஶ்ரு || "ஜந்மாந்தர ஶதாப்யஸ்தா மித்யா ஸம்ஸார வாஸநா
ஸா சிராப்யாஸ யோகேந விநா நக்ஷீயதே க்வசித்." [முக்தி]

அநேக ஜன்மங்களாய் வழக்கப்பட்ட இந்த மித்யா (மாயா ; மா - எது, யா - இல்லையோ, அது மாயை) ஸம்ஸார வாஸனையானது ஜீவ ப்ரஹ்மைக்ய ஜ்ஞாந யோகாப்யாஸமில்லாமல் ஸபிக்கமாட்டாது. அதாவது, யுத்தத்திற்கு புருஷனது பலமும் ஆயுதமும் வேண்டும். பலமில்லாமல் எவ்வளவு கூர்மையுடைய ஆயுதமாயிருந்தபோதிலும் புருஷனைக் கொல்லமாட்டாது. அதுபோலவே, ஜ்ஞானம் அடைய யோகம் முக்யபலமாயிருக்கின்றது. யோகமில்லாமல் ஜ்ஞானம் ஸித்திக்கமாட்டாது. ஆனால், ஜனகர் ஜடபரதர் முதலானவர்கள் யோகமில்லாமலே ஜ்ஞானஸித்தி அடையவில்லையா என்கிற கேள்வியுண்டாகும். அதற்குக்காரணம் சொல்லுகின்றோம் கேளுங்கள். அவர்கள் பூர்வ ஜன்மங்களிலேயே யோகஸித்தியை யடைந்தபடியால் பிறக்கும்போதே ஜ்ஞானஸ்வரூபமாகவே பிறந்தவர்களென்று அறிவீர்களாக. இஃதன்றியும் உலகத்தில் மூன்று வாஸனைகள் உண்டு. அவையாவன,—

ஶ்ரு || "லோக வாஸநயா ஜந்தோ ஶாஸ்த்ர வாஸநயாபி ச
தேஹவாஸநயா ஜ்ஞாநம் யதாவந்நைவ ஜாயதே." [முக்தி.]

லோகவாஸனை, ஶாஸ்த்ரவாஸனை, தேஹவாஸனை இம்மூன்றுவாஸனைகளும் ஆத்மஜ்ஞானத்தை உண்டாக்கமாட்டா.

1. லோகவாஸனை என்றால்:—உலகத்தில் தான் செய்யப்பட்ட ஸத்விஷயங்களினால் தன்னை எல்லோரும் புகழ வேண்டுமென்னும் எண்ணமுடையதே லோகவாஸனை.

2. ஶாஸ்த்ரவாஸனை என்றால்:—தாமே ஸகல ஶாஸ்த்ரங்களையும் கற்ற பண்டிதனென கர்வித்து, ஹரிஹரர்களுக்கு பேதத்தை உண்டாக்கி, ஶிவனே பெரியவன் ஶைவஸமயமே

மெய்ச்சமயம் என்றும், விஷ்ணுவே பெரியவன், வைஷ்ணவ மதமே ஶ்ரேஷ்டமானமதம் என்றும் ஒருவரோடொருவர் வாதாடிப் போராடிக்கொண்டிருப்பதே ஶாஸ்த்ர வாஸனை. இந்த ஶிவ விஷ்ணுக்களைக்குறித்து உபநிஷத்துக்கள் என்ன முறையிடுகின்றனவென்றால்:—

"ராமஏவ பரம்ப்ரஹ்ம" "ஶிவஏவ ஸ்வயம் ஸாக்ஷாதயம் ப்ரஹ்ம" "யோஹவை ந்ருஸிம்ஹோ தேவோபகவாந் யஶ்ச ப்ரஹ்ம யஶ்ச விஷ்ணு யஶ்ச மஹேஶ்வர:" "த்வம் யஜ்ஞ ஸத்வம் வஷட்காரஸ்த்வம் இந்திரஸ்த்வம் ருத்ரஸ்த்வம் விஷ்ணுஸ்த்வம் ப்ரஹ்மாத்வம் ப்ரஜாபதி:" "ஶிவாய விஷ்ணுரூபாய ஶிவரூபாய விஷ்ணவே" "ஶிவஸ்ய ஹ்ருதயம் விஷ்ணுர்விஷ்ணோஶ்ச ஹ்ருதயம் ஶிவ:."

என்னும் ராம ரஹஸ்யோபநிஷத், மஹோபநிஷத், ந்ருஸிம்ஹதாபிந்யுபநிஷத், அதர்வஶிரோபநிஷத், தைத்ரீயோபநிஷத், ஸ்கந்தோபநிஷத்துக்களின் ரீதியாய் விஷ்ணுவாகியநானும், பரமஶிவனும் நாங்களிருவரும் ஏகபரப்ரஹ்ம ஸ்வரூபமே; விஷ்ணுவாகியநானே பரமஶிவன், பரமஶிவனே நான்; எங்களிருவருக்கும் எவ்விதபேதங்களுமில்லை. மேலும் ஶிவனுடைய ஹ்ருதயமே விஷ்ணு, விஷ்ணுவினுடைய ஹ்ருதயமேஶிவன்; இவர்களிருவரிலும் எத்தபேதமும் காணப்படவில்லை. மேலும், ராமா, ராமா வென்று உலகத்தார் கொண்டாடுகின்றார்களல்லவா? அந்த ராமனைக்குறித்து உபநிஷத் வாக்யம் என்னவெனில்:—

"ஸுத்யோ 'ரா' தத் பதார்த்தஸ்யாத் 'ம' காரஸ்த்வம் பதார்த்தவாந், தயோஸ்ஸம்யோஜந மஸீத்யர்த்தே தத்வவிதோ விது:."

என்னும் ராம ரஹஸ்யோபநிஷத் ரீதியாய் 'ரா' என்னும் அக்ஷரம் "தத்" பத லக்ஷ்யார்த்தமாகிய நிராகார பரப்ரஹ்மமென்றும், 'ம' என்னும் அக்ஷரம் "த்வம்" பத லக்ஷ்யார்த்தமாகிய ப்ரத்யகாத்மா (ஜீவாத்மா) என்றும், அர்த்தமாகின்றது. ஆகையால், அப்பேர்ப்பட்ட நிராகார பரப்ரஹ்மமே ஒவ்வொரு ஜீவஜந்துக்களிலும் ஸாக்ஷிமாத்ரமாய் ஆத்மஸ்வரூபமா

யிருக்கின்றது. அதனால் ப்ரஹ்மாத்மா அபேத ஐக்யார்த்தமாகின்றது. ஆதலால், தேஹத்ரய ஸாக்ஷியாயிருக்கும் ஆத்மாவே ராமன் என்று சொல்லப்படும். இவ்வித ஆத்மாராமனைக் கர்மகாண்டம் என்ன சொல்லுகிறதென்றால்,—ராமன் பிறந்து ஸீதையை மணம்புரிந்து ராவணனைக்கொன்றதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. உபநிஷத் வாக்ய ரீதியாய் ஆத்மாராமனே ராமன்; மனமே ஸீதை; காம, க்ரோத, லோப, மோஹ, மத, மாத்ஸர்ய, டம்ப, தர்ப்ப, ஈர்ஷை, அஸூயை என்னும் தசவர்க்கங்களே தசகண்ட ராவணன் என்பதாம். ஆதலால், காமக்ரோதாதி தச (10) குணங்களை ஜயித்து மனமென்னும் ஸீதையை ஆத்மாராமனில் லயிக்கச்செய்வதே ராமாயணத்தின் அந்தரார்த்தம். (இந்த 10 குணங்கள் 89-ம் பக்கம்சொல்லப்பட்டிருக்கின்றன.) கர்மகாண்டத்தில் ராமனை த்யானஞ்செய்யும்படி ஏன் ஏற்படுத்தினார்களென்றால், மனிதர்களுக்கு க்ஷணத்திற்குள் அநேக எண்ணங்கள் உண்டாகின்றன. அப்படி உண்டாகவண்ணம் ராமத்யானத்தையே செய்துகொண்டிருந்தால் மனம் ஓர் எண்ணத்தில் நிற்கும்; பிறகு குருமுகமாய்த் தெரிந்துகொண்டு அந்த ஓர் எண்ணத்தையும் நாசம் செய்யட்டுமென்று ஏற்படுத்தினார்கள். மேலும்,

> "ரமந்தே யோகினோனந்தே ஸத்யானந்தே சிதாத்மனி
> இதி ராமபதேனாஸௌ பரப்ரஹ்மாபிதீயதே
> சின்மயஸ்யா த்விதீயஸ்ய நிஷ்களஸ்யா ஶரீரிண:."

என்னும் ராமதாபிந்யுபநிஷத் ரீதியாய் என் நிஜஸ்வரூபமான கேவல ஸத்யஜ்ஞானானந்த நித்ய நிர்மல நிராகார பரிபூர்ண பரப்ரஹ்ம ஸ்வரூபத்தை ப்ரஹ்மஜ்ஞானிகள் தனது ஆத்மஸ்வரூபமாய் அறிந்து, என் நிஜஸ்வரூபமாகிய ஆத்மாவில் ஸதா ரமித்திருக்கின்றார்கள்; ஆதலால், எனக்கு ராமனென்ப் பெயருண்டாயிற்று. என் நிஜஸ்வரூபம் வேதாந்தத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. வேதாந்தத்தை விசாரித்து என் நிஜஸ்வரூபத்தைத் தர்சித்தவர்களுக்கு நித்யமோக்ஷம் உண்டாகும்

என்று சொல்லப்பட்டிருக்கின்றது. பரப்ரஹ்மமே, சிவ விஷ்ணுக்களின் ரூபத்தை அடையும். அதாவது பரப்ரஹ்மம், ஆகாசரூபமுடையது; காற்றுடன்கலந்த பரிமளம் எங்கும் வ்யாபித்திருப்பதுபோல் பரவி இருக்கப்பட்டது. அப்படிப்பட்ட ஸ்வரூபமே, பரப்ரஹ்மமென்றும் ஸர்வஜ்ஞனென்றும் சொல்லப்படும்.

இப்படிப்பட்ட பரப்ரஹ்மத்தை ஒருவன் ஈச்வரனாய் நினைத்து, அநேக வருஷங்கள் ச்ரத்தை பக்தி விச்வாஸத்துடன் தவம்செய்துகொண்டுவந்தால், அப்படிப்பட்டவனுக்கு அந்த பரப்ரஹ்மம், ப்ருதிவி அப்பு தேயு வாயு ஆகாசமென்னும் பஞ்சபூதங்களினால்; சூலம், டமருகம், வ்ருஷபவாஹனம், தவளமேனி முதலியன தரித்து ஈச்வரரூபமாய் வந்து அவனுக்கு தர்சனம்தந்து மறுபடியும் உடனே ப்ருதிவி ப்ருதிவியிலும், அப்பு அப்புவிலும், தேயு தேயுவிலும், வாயு வாயுவிலும், ஆகாசம் ஆகாசத்திலும், அந்தந்த பூதங்களை அந்தந்த பூதங்களுடன் ஐக்யம்செய்து, தான் பரப்ரஹ்ம ஸ்வரூபமாகவே இருக்கும்.

மற்றொருவன் 'விஷ்ணு'வாய் பாவித்து தவம் செய்துகொண்டுவந்தால் அப்படிப்பட்டவனுக்கு அந்த பரப்ரஹ்மம் ப்ருதிவி அப்பு தேயு வாயு ஆகாசமென்னும் பஞ்சபூதங்களினால், தான், ஸகுண ரூபமாய் சங்கு, சக்ரம், கதை கரியதிருமேனி முதலியவாக ஸகளீகரித்து விஷ்ணுமூர்த்தியாய் வந்து தர்சனம்தந்து மறுபடியும் முன் சொல்லியதுபோல் பஞ்சபூதங்களை அந்தந்தபூதங்களில் ஐக்யம்செய்து யதாரீதியாய் தான் பரப்ரஹ்மமாகவேயிருக்கும்.

மற்றொருவன் 'அல்லா'வாய் நினைத்துத் தவம் செய்தால் அப்படிப்பட்டவனுக்கு அந்த பரப்ரஹ்மம், பஞ்சபூதங்களினால் அல்லா ரூபத்தைத் தரித்து அவனுக்குத் தர்சனம்தந்து மறுபடியும் பஞ்சபூதங்களை பஞ்சபூதங்களுடன் ஐக்யம்செய்து தான் ப்ரஹ்மஸ்வரூபமாகவேயிருக்கும்.

மற்றொருவன் 'ஏகா'காராய் எண்ணித் தவம் செய்தால், அப்படிப்பட்டவனுக்கு அந்த பரப்ரஹ்மம், பஞ்சபூதங்களினால் ஏகரூபத்தை தரித்து, அவனுக்கு தர்ஶனம்தந்து மறுபடியும் பஞ்சபூதங்களை பஞ்சபூதங்களுடன் ஐக்யம்செய்து தான் ப்ரஹ்மஸ்வரூபமாகவேயிருக்கும். ஆதலால் "யத்பாவம் தத்பவதி" யார்யார் எந்தெந்தரூபமாய் நினைக்கின்றார்களோ அவரவர்களுக்கு அந்தந்தரூபமாய் வந்து தர்ஶனம் கொடுக்கின்றார். இதற்குத்ருஷ்டாந்தம், ஸ்ரீபகவத்கீதை அத்யாயம் 4 - ஶ்ல. 11 - ல், ஸ்ரீக்ருஷ்ணன் சொல்லுகின்றார்;

யே யதா மாம் ப்ரபத்யந்தே தாம் ஸ்ததைவ பஜாம்யஹம்
மம வர்த்மாநு வர்த்தந்தே மநுஷ்யாः பார்த்த! ஸர்வஶः.

க்ருஷ்ணன் :—ஹே பார்த்தா! நீ சொல்லியதுபோல் இந்த உலகத்தில் என் நிஜரஹஸ்யம் அறியாமல், என் அவதாரஸ்வரூபமே என் நிஜஸ்வரூபமென்றெண்ணி பஜிக்கப்பட்டவர்கள் அநேகர் இருக்கின்றார்கள். அப்படிப்பட்டவர்களையும் நான் வ்யர்த்தம் செய்யமாட்டேன். அப்படிப்பட்டவர்கள், யான் பரிபூர்ண பரப்ரஹ்மம் என்னும் ஜ்ஞானத்தை அடையாமையால் மோக்ஷப்ராப்தியைப் பெறாவிடினும், அவர்களில் எவரெவர்கள் எந்தெந்தப் பலத்தைக்கோரி, என்னை எந்தெந்த தேவதாரூபமாய் நினைத்து பஜிக்கின்றார்களோ, அவரவர்களுக்கு நான் அந்தந்த ரூபத்துடனேசென்று அந்தந்தப்பலத்தைக் கொடுத்துக்கொண்டிருக்கிறேன். அதாவது, இந்த உலகத்திலுள்ள ஜனங்களெல்லோரும் என்னை அநேகாநேக ரூபங்களாய் நினைத்து பஜிக்கின்றவர்களாயிருக்கின்றார்கள். நான் ஆகாஶவடிவமாய் எங்கும் நிறைந்திருக்கும் பரப்ரஹ்மமென்று தெரிந்துகொள்ளமாட்டார்கள். நான் நிராகார பரிபூர்ண பரப்ரஹ்மமென்று ப்ரஜைகள் அறியாமல், ராமனை தெய்வமென்று ராமோபாஸனைசெய்தாலும், க்ருஷ்ணனை தெய்வமென்று க்ருஷ்ணோபாஸனை செய்தாலும், ந்ருஸிம்ஹனே தெய்வமென்று ந்ருஸிம்ஹோபாஸனைசெய்தாலும், ஈஶ்வரனே

தெய்வமென்று ஈஶ்வரோபாஸனை செய்தாலும் என்னையே ஆராதித்தவர்களாகிறார்கள், இந்த்ராத்யஷ்ட திக்பாலர்களையும், நவக்ரஹங்களையும், காளி முதலாகிய ஶக்திகளையும், மற்றுஞ் சில க்ஷுத்ரதேவதைகளையும் ஆராதிப்பவர்களும், அந்தந்தத்தேவதைகளின் ரூபங்கள் என்னையன்றி வேறாய் இல்லாமையால் என்னையே ஆராதிக்கின்றவர்களாகின்றார்கள். இந்த ப்ரபஞ்சத்தில், பிபீலிகாதி ப்ரஹ்ம பர்யந்தமாயுள்ள ஸமஸ்த சராசரங்கள் என் ஸ்வரூபமே. "ஸர்வதேவ நமஸ்காரः கேஶவம் ப்ரதிகச்சதி" என்பதுபோல் ஸர்வவிக்ரஹங்களின் மூலமாய்ச் செய்யும் ஆராதனைகள் யாவும் என்னையே சேருகின்றன. ஆதலால், அவரவர்கள் உபாஸிக்கும் தேவதாரூபங்கள் மூலமாய் அவரவர்கள் கோரிய பலன்களை நானே கொடுத்துக்கொண்டு வருகின்றேன். இந்த உலகத்தில், கேவல மூடர்களும், நாஸ்திகர்களும் தவிர, பக்தியுடன் உபாஸனை செய்யும் எம்மதஸ்தர்களும் தேவதைகளும் என்னையே ஆராதித்தவர்களாகின்றார்கள். ஆதலால், அவரவர்களின் மனோ நிஶ்சயத்திற்கும் பக்திக்கும் ஆராதனைக்கும் தக்கவாறு பலத்தை நானே கொடுத்துக்கொண்டுவருகின்றேன். ஆதலால்,

ஶ்ரு || தஸ்மாத் ஸாகார மநித்யம் நித்யம் நிராகாரமிதி."

என்னும் மஹாநாராயணோபநிஷத் வாக்யரீதியாய், ரூபநாமமுடைய என் ஸாகார ஸ்வரூபம் அநித்யமானது. ரூபநாம க்ரியைகள் இல்லாத என் நிராகார ஸ்வரூபம் நித்யமானதும் ஸத்யமானதுமாயிருக்கும். இதுவே என் நிஜஸ்வரூபம்.

ஶ்ரு || "யத்ர நாந்யத்பஶ்யதி நாந்யச்ச்ருணோதி
நாந்யத்விஜாநாதி ஸ பூமா யோவை பூமா ததம்ருதம்."
"அத யத்ராந்யத் பஶ்யத்யந்யச்ச்ருணோதி
அந்யத்விஜாநாதி ததல்பம்."
"அத யதல்பம் தந்மர்த்யம்."
"ஸம்பூர்ணம் மர்த்யத் ந்யூநம் மர்த்யத் ஸ்தூலம்."

என்னும் சாந்தோக்யோபநிஷத், ப்ருஹதாரண்யோபநிஷத் வாக்யரீதியாய், என் நிஜஸ்வரூபமாகிய நிராகாரஸ்வரூபம் அகண்ட பரிபூர்ணமென்றும், நாசமில்லாததென்றும், சொல்லப்படும். என் ஸாகாரஸ்வரூபம், அல்பமானது கண்டமானது மித்யாஸ்வரூபமானது. அதாவது நசித்துப்போகத்தக்கது.

ஸ்ரு || "யோவை பூமா தத்ஸுகம் நால்பே ஸுகமஸ்தி
பூமைவ ஸுகம் பூமாத்வேவ விஜிஜ்ஞாஸிதவ்ய இதி."

என்னும் சாந்தோக்யோபநிஷத் வாக்யரீதியாய் எது அகண்டபரிபூர்ணமாய் நிராகாரஸ்வரூபமாய் இருக்கின்றதோ அதுவே ஸுகஸ்வரூபமானது. அல்பமானதில், அதாவது கண்டஸ்வரூபமான ஸாகாரத்தில் அப்படிப்பட்ட ஸுகமிராது. அகண்ட பரிபூர்ணமாகிய நிராகாரமே ஸுகஸ்வரூபமானது. இப்படிப்பட்ட நிராகார பரப்ரஹ்மத்தை மனிதர்கள் தெரிந்துகொள்ளமாட்டார்கள். ஆகலால்,

ஸ்ரு || "யஸ்ய வாங்மனஸீ ஶாந்தே ஸம்யக்ருப்தே ச ஸர்வதா
ஸவை ஸர்வமவாப்நோதி வேதாந்தோபகமம் பலம்."

என்னும் நாரத பரிவ்ராஜகோபநிஷத் வாக்யரீதியாய் எவன், மனஸு சஞ்சலமில்லாமல் வாக்கு மௌனமாய், இந்த்ரிய வியாபாரங்களில்லாமல் பரிஶாந்தமாயிருப்பானோ, அவன் வேதாந்தத்தில் சொல்லப்பட்டிருக்கும் ஆத்மானுபவத்தை அடைவான் என்று ஸ்ரீ க்ருஷ்ணபகவான் சொல்லியிருக்கின்றார்: இன்னும் விரிவாய்த் தெரிந்துகொள்ளவேண்டுமென்று விருப்பமுள்ளவர்கள் ஸ்ரீபகவத்கீதையில் விரிவாய்க்காணலாம்.

இப்படிப்பட்ட பரப்ரஹ்மத்தின் யதார்த்தம் தெரிந்துகொள்ளாமல் ஶைவமதஸ்தர்களும் விஷ்ணுமதஸ்தர்களும் ஒருவரோடொருவர் வாதாடித் தூஷிக்கின்றார்கள்.

இப்படிப்பட்டவர்கள் ரௌரவாதி நரகங்களையே அனுபவிப்பார்கள். இவர்களை உபநிஷத்துக்கள் பாரத மூடபண்டிதர்களென்றே சொல்லலாம்.

3. தேஹவாஸனை என்றால்:—தேஹம் கெடாமலும், தலைமயிர் நரையாமலும், கிழத்தனம் வ்யாதிகள் மரணம் முதலானவைகள் வராமலுமிருக்க மூலிகைகள், ரஸௌஷதங்கள் முதலானவைகளைப் புஜித்து காயஸித்தி அடையவேண்டுமென்னும் தேஹாபிமான எண்ணமே தேஹவாஸனையென்று சொல்லப்படும். அந்தேஹாபிமானம் எதுவரையில் உண்டோ, அதுவரையில் ஆத்மஜ்ஞானம் உண்டாகமாட்டாது. ஸதா ஆத்மத்யானம் செய்துகொண்டு ஆத்மானுபவ நிஷ்டையென்னும் நிர்விகல்ப ஸமாதி நிஷ்டையை அப்யாஸம்செய்யும் பெரியோர்களுக்கு இந்த வாஸனாத்ரயங்கள் நசிக்குமேயொழிய மற்றவர்களுக்கு நசிக்கமாட்டா. இந்த வாஸனைகள் நசிக்கும்வரையில் அநேக யோநிகளிற் பிறந்து பிறந்து உழன்றுகொண்டே இருப்பார்கள். இதற்கு உபநிஷத் ப்ரமாணம்,

"நாநாயோநி ஶதங்கத்வா ஶேதே வாஸநாவஶாத்."
[த்ரிஶிகிப்ராஹ்மணோபநிஷத்.]

இந்த வாஸனாத்ரயங்களினாலேயே நாநா யோநிகளில் பிறக்கின்றார்கள். ஆதலால், அப்படிப்பட்ட யோநிகளில் பிறவாமல் தப்பித்துக்கொள்வதற்கு உபநிஷத் ப்ரமாணம்,

"வாஸநாஸ்த்வம் பரித்யஜ்ய அந்தஶ்ஶாந்த ஸமஸ்தேஹாபவ சிந்மாத்ரவாஸநா: தாமப்யஹ: பரித்யஜ்ய மனோபுத்தி ஸமாந்தாம் ஶேஷஸ்திர ஸமாதானோ மயித்வம் பவ மாருதே அஶப்த மஸ்பர்ஶ மித்யாதி." [முக்திகோபநிஷத்.]

வாஸனாத்ரயங்களும் மோக்ஷத்தின் இச்சையும் விட்டுவிட்டு, ஜகத்ஸர்வம் அநித்யமென்றும், பரப்ரஹ்மமே ஸத்யமென்றும் ப்ரஹ்மத்தையே த்யானம் செய்யவேண்டும். பிறகு அந்த த்யானத்தையும் விட்டுவிட்டு மனோபுத்திகள் இரண்டும் சஞ்சலமில்லா (அசையா)மல் ஸ்திரமாய் நிறுத்தி,

"ஹ்ருதயம் நிர்மலம் க்ருத்வா சிந்தயித்வாப்யநாமயம்
அஹமேவபரம் ஸர்வமிதி பஶ்யேத்பரம்ஸுகம்." [பைங்க.]

ஹ்ருதயத்தை ஸ்படிகம்போல் நிர்மலமாய்ச் செய்துகொண்டு அதாவது, ப்ரஹ்மஸ்ருஷ்டிநாள்முதல் நாளதுவரையில்

நாம் அநேககோடி ஜன்மங்களை யெடுத்துக்கொண்டே வருகின்றோம், இனியும் எத்தனையோகோடி ஜன்மங்களையும் எடுக்கப்போகின்றோம். (இதன் விபரங்களை எல்லாம் ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம் 2, ஶ்லோகம் 12, 13-ல், விரிவாய்க் காணலாம்.) ஆதலால், ஒவ்வொரு ஜன்மத்திலும் காமக்ரோதாதி அழுக்குகள் அதிகரித்துக்கொண்டே வருகின்றன. ஹ்ருதயகமலத்திலிருக்கும் காமக்ரோதாதி அழுக்குகளையெல்லாம் குரு உபதேசத்தினால் பஸ்மம்செய்து ஹ்ருதயத்தை, எவ்வித ஸங்கல்ப விகல்பங்களில்லாமல் ஸ்படிகம்போல் நிர்மலமாய்ச் செய்துகொண்டு (மனதை வெளியில் ஓடவிடாமல் நிறுத்தி) அந்த பரப்ரஹ்மமே நானென்றும் நானே ஸர்வமென்றும் மௌனமாயிருப்பதே பரமஸுகம். மௌனமென்றால், வார்த்தையாடாமல் வாயை மூடிக்கொண்டிருப்பதல்ல; மனதை வெளியில் ஓடவிடாமல் நிறுத்துவதே மௌனமென்று சொல்லப்படும்.

இருக்கலாம் எந்தெந்த யுகங்களுக்கும்
ஏகாந்த மானதொரு பிரம்மத்தன்னில்
பெருக்கவே மனதடக்கி மௌனம் பெற்றப்
பிரானை யாகவுந்தான் பிரமத்துள்ளே
குருக்களைப்போல் அரசனைப்போ லிந்த்ரனைப்போலும்
குணமான மூவரைப்போற் பிரபஞ்சத்துடே
திருக்கெடுத்து எந்தெந்த அவதாரங்கள்
செய்திடலாம் லயமிர்த பெரியோர்தானே.

பந்தமோக்ஷ ஆத்மாநாத்ம லக்ஷணங்கள்.

"ஆத்மாநாத்மயோர் தேஹாதிக் ஸ்வேத்யஸ் யாத்மத்வே நாபிமந்யதே
ஸோபிமான ஆத்மனோ பந்தஸ் தந்நிவ்ருத்திர் மோக்ஷ:"

தானல்லாத தேஹேந்த்ரியங்களைத் தானென்றெண்ணி அபிமானித்துக்கொண்டிருக்கின்றது! அப்படி அபிமானிப்பதனால்

உண்டான அபிமானமே பந்தம். அந்த அபிமானத்தை விட்டுவிடுவதே மோக்ஷம், எப்படியென்றால்:—

"அநாத்யவித்யா வாஸநயா ஜாதோஹமிதி ஸங்கல்போ பந்த:
பித்ருமாத்ரு ஸஹோதர தாராபத்ய க்ருஹாராம க்ஷேத்ராதிபந்த:
மமதா ஸம்ஸாராவரண ஸங்கல்போ பந்த:
கர்த்ருத்வாத்யஹங்கார ஸங்கல்போ பந்த:
அணிமாத்யஷ்டைஶ்வர்ய ஆஶாஸித்த ஸங்கல்போ பந்த:
தேவ மனுஷ்யாதி உபாஸநாகாம ஸங்கல்போ பந்த:
யமாதி அஷ்டாங்க யோகாப்யாஸாதி ஸங்கல்போ பந்த:
வர்ணாஶ்ரம தர்ம கர்ம ஸங்கல்போ பந்த:
ஆஜ்ஞாபய ஸம்ஶயார்த்மகுண ஸங்கல்போ பந்த:
யக்ஞ வ்ரத தபோ தாந விதிவிதாநஜ்ஞாந ஸங்கல்போ பந்த:
கேவல மோக்ஷாபேக்ஷா ஸங்கல்போ பந்த:
ஸங்கல்பமாத்ர ஸம்பவோ பந்த:."

"நித்யாநித்ய வஸ்து விசாராதநித்ய ஸம்ஸார ஸுகதுக்க
விஷய ஸமஸ்த க்ஷேத்ரமமதாதி ஸமஸ்த பந்த:
ஸங்கல்ப க்ஷயோ மோக்ஷ:." [நிராலம்போபநிஷத்.]

ஸத்யஜ்ஞாநாநந்த பரப்ரஹ்மமே தானென்று அறியாமல், அநாதியாய் வந்துகொண்டிருக்கும் அஜ்ஞான மயமாகிய ஜீவனே தானென்னும் ஸங்கல்பமே பந்தம்; ஸர்வஸாக்ஷியாகிய ப்ரஹ்மமே தானென்று அறியாமல் தனது தாய்தந்தையர்கள், ஸஹோதரர், களத்ரம், புத்ரர், புத்ரிகள், தோட்டம், துரவு, க்ருஹம், பூமி முதலானவைகளின்மீது இச்சைவைத்துக் கொண்டிருப்பதே பந்தம்; ஶாந்த நிர்க்குண பரப்ரஹ்மமே தானென்று அறியாமல், நான், என்னுடையது என்னும் அஹங்காரமமகாரங்கள் உண்டாய், நானே எஜமான் என்று பார்யை புத்ரர் முதலானவர்களை நானே போஷிக்கப்பட்டவன் என்னும் ஸங்கல்பமே பந்தம்; பிறப்பு இறப்பில்லாத ப்ரஹ்மமே தானென்று அறியாமல் தனக்கு மரணமுண்டென்று பயந்து, காயஸித்தியடைந்து சாகாமலிருக்க அணிமாதி அஷ்டஸித்திகளை அடையவேண்டுமென்னும் ஸங்கல்பமே பந்தம்;

தானே ஸர்வாதாரமான பரப்ரஹ்மமென்று அறியாமல், ஹரிஹராதிதேவதைகளை த்யானித்து இஷ்டார்த்தங்களை அடைய வேண்டுமென்னும் ஸங்கல்பமே பந்தம்; நித்யமுக்த நிர்விகார கேவல அத்வய பரப்ரஹ்மமே தானென்று அறியாமல் ஸகலமும் மறந்து ஸாக்ஷிமாத்ரனாய் ஆநந்திக்காமல், தன்னைவிட வேறாய் ப்ரஹ்மம் உண்டென்று அஷ்டாங்கயோகங்களைச்செய்து புருவமத்தியில் த்ருஷ்டியை நிறுத்தி, பஞ்சமுத்ரைகளில் தோன்றும் சித்ரங்களின் மண்டலங்களைப் பார்த்துக்கொண்டு அதுவே ப்ரஹ்மமென்னும் ஸங்கல்பமே பந்தம்; நாமரூபங்கள், குலகோத்ரங்களில்லாத பரப்ரஹ்மமே தானென்று அறியாமல், தனக்கு குலகோத்ரங்கள் வர்ணாஶ்ரம ஆசாரங்கள் உண்டென்னும் ஸங்கல்பமே பந்தம்; தான் கர்மஶூன்யனான பரப்ரஹ்மமென்று அறியாமல் ஜபதபவ்ரத யஜ்ஞாதிகளைக் கர்மகாண்டத்தின் ரீதியாய்த் தவறாமல் செய்யவேண்டுமென்னும் ஸங்கல்பமே பந்தம்.

நித்யாநித்ய வஸ்து விவேகமுண்டாய் ப்ரஹ்மமே ஸத்யமென்றும் ஜகந்மித்யையென்றும் அறிந்து, அநித்யமாகிய பார்யா, புத்ரர், புத்ரிகள், க்ருஹம், தனம், தாந்யம் முதலானவைகளின்மீது, உண்டாயிருக்கும் ஆசைகளை விட்டுவிட்டு ஸுகதுக்கங்கள் ஶரீரத்திற்கேயொழிய ஸாக்ஷியாகிய எனக்கு இல்லையென்று தெரிந்து, ஆத்மஸ்வரூபியாகிய நானே ப்ரஹ்மமென்று அறிந்து ஸகல ஸங்கல்பங்களையும் நாசிக்கச்செய்து ஸதா ப்ரஹ்மானந்த ஸமுத்ரத்தில் மூழ்கியிருப்பதே மோக்ஷம்.

"தஸ்மாத் பாவாபாவௌ பரித்யஜ்ய
பரமாத்ம த்யாநேந முக்தோ பவதி." [மண்டலப்ராஹ்மணோப.]

பாவாபாவங்கள் என்றால் நினைப்பு மறப்பு. இந்த நினைப்பு மறப்பு ஶூன்யமாய் ஸதா ஆகாஶவடிவமாயிருப்பதே மோக்ஷம்.

"த்வேபதே பந்தமோக்ஷாய நிர்மமேதி மமேதி ச
மமேதி பத்யதே ஜந்து நிர்மமேதி விமுச்யதே." [பைங்கலோப.]

இது என்னுடையது, இது எனக்குவேண்டும் என்பதே மமகாரம். ஜ்ஞானானந்த ஸர்வ பரிபூர்ண பரப்ரஹ்மமே நானாகையால், இத்தேஹாதி ப்ரபஞ்சம் ஸர்வமும் நானல்ல, எதுவும் என்னுடையதல்ல என்னும் எண்ணமே மமகாரங்களில்லாமல் இருப்பது. இந்த இரண்டு எண்ணங்களே பந்தம். மமகாரங்களில்லாமலிருப்பதே மோக்ஷம்.

"கவாமநேக வர்ணாநாம் க்ஷீரஸ்யாப்யேக வர்ணதா
க்ஷீரவத்பஶ்யதே ஜ்ஞாநம் லிங்கிநஸ்து கவாம் யதா."

பசுக்கள் நானாவித வர்ணங்களுடன் வெவ்வேறு ரூபங்களாயிருந்தபோதிலும் அவைகளால் உண்டாகும் பால்மாத்ரம் ஓர் நிறமாயிருப்பதுபோல் அநேக பேத புத்தியையுடையவன் ஸத்குருவையடைந்து வேதாந்த ஶ்ரவண மனன நிதித்யாஸனங்கள்செய்து, அவனுக்கு உண்டாயிருக்கும் பேத புத்தி நசித்து, அபேத புத்தியாயுள்ள ப்ரஹ்மஜ்ஞானமுண்டானால், அவன் ஸர்வஜீவ ஶரீரங்களிலும் அபேதமாய்க் கேவல ஜ்ஞானஸ்வரூபமான ப்ரஹ்மம் ஒன்றே வியாபித்திருக்கின்றதென்று அறிவான்.

"க்ருதமிவ பயஸி நிகூடம் பூதே பூதே ச வஸதி விஜ்ஞாநம்
ஸததம் மந்தயிதவ்யம் மநஸா மந்தாநபூதேந"

பாலில் நெய் ரஹஸ்யமாய் காணப்படாமல் மறைந்திருப்பதுபோல், ஸகல ஜந்துக்களிலும் பரப்ரஹ்மத்தின் அம்ஶமாகிய ஆத்மா ரஹஸ்யமாய்க் காணப்படாமல் மறைந்திருக்கின்றான்.

"கவாம்ஸர்பி ஶரீரஸ்தம் நகரோத்யங்க போஷணம்
ததேவகர்ம ரசிதம் புநஸ்தஸ்யைவ பேஷஜம்."

கோக்களின் ஶரீரத்தில் ஸஹஜமாய் நெய்யிருந்தபோதிலும் அவைகளின் ஶரீரம் போஷிப்பதற்கு உபயோகப்படமாட்டாது. பாலைக்கறந்து காய்ச்சி அதிலுண்டாகிய நெய் மாத்ரம் தேஹபோஷணத்திற்கும் வைத்யத்திற்கும் உபயோகப்படும்.

"ஏவம்ஸர்வஶரீரஸ்த ஸர்ப்பிவத்பரமேஶ்வர:
விநோபாஸநாத்தேவோ ந கரோதி ஹிதம் ந்ருணாம்."

இவ்விதமாய் நெய்யைப்போல், பரமேஶ்வரன் ஸகலஶரீரங்களில் இருந்தபோதிலும், குருவுபதேஶத்தால், ஶ்ரவண மனன நிதித்யாஸனங்களினால் ப்ரத்யக்ஷமாய் தெரியப்படுமேயொழிய இவைகளில்லாமல் மனுஷ்யர்கள் பரமானந்த ப்ராப்தியை அடையமாட்டார்கள். ஜீவாத்மா ஸஹஜமாய்ப்பரமாத்மாவிலிருந்து பின்னமாயிருந்தபோதிலும் பரமாத்மாவிற்கு அபேத ஸாக்ஷாத்காரம் உண்டானாலேயொழிய ஜீவாத்மாவிற்குப் பரமானந்தஸ்வரூப ப்ராப்தி உண்டாகமாட்டாது. இந்த பரமாத்மா தங்கத்தைப்போன்றது, ஜீவாத்மா பொன்னைப்போன்றது. இதுவிவரம், ஸ்ரீ க்ருஷ்ணார்ஜுந ஸம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம் 2, ஶ்லோ 16, பார்க்க. ஜீவாத்மாவிற்குப் பரமாத்மா ஸாக்ஷாத்காரம் உண்டாகவேண்டுமென்றால் அதற்கு என்ன செய்யவேண்டுமெனில்,

ஶ்ரு || "யதா பஞ்சாவதிஷ்டந்தே ஜ்ஞானானி மனஸா ஸஹ
புத்திஶ்ச நவிசேஷ்டேத தாமாஹு: பரமாங்கதிம்."
[கடோபநிஷத்.]

ஶ்ரோத்ரங்கள், நேத்ரங்கள் முதலாகிய ஜ்ஞானேந்த்ரியங்கள் ஐந்தையும் மனதையும் ஆத்மாவில் நிறுத்தி இதரவ்யாபாரங்களில்லாமல் ஸகல எண்ணங்களும் மறந்து நிஶ்சலனமாய் தன்மயமாயிருந்தால், ஆத்மாவிற்கு பரமாத்மா ஸாக்ஷாத்காரமுண்டாகும். அதுதான் மோக்ஷமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

ஶ்ரு || "கதம ஆத்மேதி யோயம் விஜ்ஞானமய: ப்ராணேஷு ஹ்ருத்யந்தர்ஜ்யோதி: புருஷ:" "ஸவா ஏஷ மஹானஜ ஆத்மாயோயம் விஜ்ஞானமய: ப்ராணேஷு." [ப்ருஹதாரண்யகோபநிஷத்.]

ஸகல ஶரீரங்களின் ஹ்ருதயத்திலும் அஹமஹம் (நான் நான்) என்று ஸ்மரித்துக்கொண்டிருக்கும் கேவலஜ்ஞானஸ்வரூபமான வஸ்துவே ஆத்மாவென்று சொல்லப்படும். மேலும்,

ஶ்ரு || "கோயமாத்மேதி வயமுபாஸ்மஹே கதர: ஸ ஆத்மா யேனவா ரூபம் பஶ்யதி யேனவா ஶப்தம் ஶ்ருணோதி யேனவா கந்தா நாஜிக்ரதி யேனவா வாசம் வ்யாகரோதி யேனவா ஸ்வாது சாஸ்வாது ச விஜாநாதி ஸர்வாண்யேவைதானி ப்ரஜ்ஞானஸ்ய நாமதேயானி பவந்தி."
[ஐதரேயோபநிஷத்.]

இவ்விதமாய் இச்சரீரத்தில் அந்தஃகரணவ்ருத்தியுடன் கூடிக்கொண்டு அத்யயனஞ்செய்யும் புருஷர்களினால் உச்சரிக்கப்படும் ஶப்தங்களை ஶ்ரோத்ரேந்த்ரிய (காதின்) வழியாய்க் கேட்டு விமர்ஶிக்கும் ஶக்தியுடைய புத்தியினால் இது இவன் ஶப்தம், அது அவன் ஶப்தம் என்றும் எது அறிகின்றதோ, ஜலத்திலுள்ள உஷ்ணத்தை வேறுபடுத்துவதற்கு ஸாத்யமாகாவிடினும் த்வகிந்த்ரிய (சர்ம) த்தால் ஸ்பர்ஶித்து (தொட்டு) புத்தியினால் ஜலத்திலுள்ள உஷ்ணத்தை எது ப்ரத்யேகிக்கின்றதோ, சுவரில் எழுதப்பட்ட சித்ரங்களிலுள்ள வர்ணங்களிலும் கூட்டையாயிருக்கும் ரூபங்களைப் பங்கிடுவதற்கு ஸாத்யப்படாவிடினும் சக்ஷுரிந்த்ரியங்களினால் (கண்களால்) பார்த்து புத்தியினால் அந்த வர்ணங்களை எது அறிகின்றதோ, ஜலத்தில் கலந்த ஷட்ரஸங்களை விபாகிப்பதற்கு ஸாத்யமாகாவிடினும் ஜிஹ்வேந்த்ரிய (நாக்கின்) வழியாய் ஸகலரஸங்களையும் அறிகின்றதெதுவோ, வஸ்த்ரங்களில் வியாபித்தபரிமளங்களை வேறுபடுத்த ஸாத்யமாகாவிடினும் க்ராணேந்த்ரிய (மூக்கின்) வழியாய் ஆக்ராணித்து (இழுத்து) புத்தியினால் இது ஸுகந்தம், இது துர்க்கந்தம், இது மிஶ்ரகந்தமென்று எது அறிகின்றதோ, வாக்கிந்த்ரிய (வாயின்) வழியாய் ஸகல வார்த்தைகளையும் எது வார்த்தையாடுகின்றதோ, மேலும், ஸகல இந்த்ரியங்களின் வழியாய் எது ஸகல விஷயங்களையும் அறிகின்றதோ அதுவே, ஜ்ஞானஸ்வரூபமாகிய ஆத்மாவென்று சொல்லப்படும்.

அருளுகிற பேச்செல்லாம் யான்தானையா
அவனியெல்லாம் படைத்ததுவும் யான்தானையா

இருளுகிற பேச்செல்லாம் யான்தானையா
ஈசனென்று சொல்லுவதும் யான்தானையா
வருகுகிற வாய்வெல்லாம் யான்தானையா
வையகத்தில் நடப்பதெல்லாம் யான்தானையா
உருளுகிற உற்பனமும் யான்தானையா
உடையவன்தா னென்றதும் யான்தானச்சே.

மேலும் ஜாக்ரத்தில் ஜ்ஞானேந்த்ரியம், கர்மேந்த்ரியம் அந்தரிந்த்ரியங்களென்னும் சதுர்த்தசேந்த்ரியங்களினால்தான் அநுபவித்த ஸுகதுக்கங்களையும், ஸ்வபநத்தில் தான் அநுபவித்த ஸுகதுக்கங்களையும் நித்ரையில் தான் ஸுகமாய் நித்ரைசெய்த விஷயங்களையும் சொல்வது ஒவ்வொருவருக்கும் உலகத்தில் அநுபவமாயிருக்கின்றது. ஆனால், அவஸ்தாத்ரயத்தின் விஷயங்களை, ஶரீரம் ஜ்ஞானமில்லாத ஜடபதார்த்தமாயிருப்பதால் அறியமாட்டாது. தேஹத்தைப்பார்க்கிலும் வேறொரு ஜ்ஞானஸ்வரூபமான வஸ்து இச்சரீரத்திலிருந்துகொண்டு ஸகல விஷயங்களையும் அறிந்து சொல்லுகின்றதென்பதற்கு ஸந்தேஹமில்லை. அப்படிப்பட்ட ஜ்ஞானஸ்வரூபமாகிய வஸ்துவே ஆத்மா என்று சொல்லப்படும். அவ்வாத்மா ஜநநமரணமற்றது, உத்பத்திநாஶம் வ்ருத்திக்ஷயங்கள் இல்லாதது, கட்காதி ஆயுதங்களினால் கண்டிக்கப்படாதது, அக்நியினால் தஹிக்கப்படாதது, ஜலத்தினால் நனையாதது, காற்றினால் அலைந்து ஶோஷிக்காதது, அணுவுமல்ல, மஹத்துமல்ல, ஆதி மத்ய அந்த்யமில்லாதது, பஞ்சவர்ணங்களில்லாதது, ஶப்த ஸ்பர்ஶ ரூப ரஸகந்தமில்லாதது, ஆகாஶாதி பஞ்சபூதங்களல்ல, ஆகாஶத்தைப்போல் நிராகாரம், நிர்க்குணம், ஸர்வபரிபூர்ணம், அநாதி, அசலம், பரிஶுத்தம், ஸ்வயம்ப்ரகாஶம், பரஞ்ஜ்யோதி, ஸத்ய ஜ்ஞானானந்த ஸ்வரூபமானது. தேஹம் எப்படிப்பட்டதென்றால்: ஜநநமரணங்களுடையது, உத்பத்திநாஶம் வ்ருத்திக்ஷயங்களோடு கூடினது, கட்காதி ஆயுதங்களினால் வெட்டப்படுவது, அக்நியினால் தஹிக்கப்படுவது, ஜலத்தினால் நனைக்கப்படு

வது, காற்றினால் அலைந்து சலிக்கப்படுவது, ஆகாஶாதி பஞ்சபூதங்களினால் உண்டாக்கப்பட்டது, ஷட்பாவ விகாரங்களுடையது, கரசரணாதி அவயவங்களை ஆதாரமாகக்கொண்டது, ஆதிமத்ய அந்த்யமுடையது, ஸாத்விக, ராஜஸ, தாமஸ குணங்களுடையது, ஸப்த தாதுக்கள் மயமானது, அஶுத்தமானது, அஸத்யமானது, அஜ்ஞானமுடையது, துக்கஸ்வரூபமானது, காரணமாகிய நூலே கார்யமாகியவஸ்த்ரமானதுபோல், காரணமான இந்த்ரியங்களே கார்யமாகிய ஶரீரரூபமாயிருக்கின்றது. இவ்வித இந்த்ரியங்களே ஸகல கார்யங்களையுஞ் செய்கின்றன. நிர்விகாரனாய் நிர்க்குணனாய் இருக்கும் ஆத்மா எந்தக் கார்யங்களையுஞ் செய்வதில்லை. எப்படியெனில்:—

ஶ்ரு॥ "நபோ கடயோகேந ஸுராகந்தே நலிப்யதே
ததாத்மோபாதி யோகேந தத்தர்மைர் நலிப்யதே."
[அத்யாத்மோபநிஷத்.]

கட்குடத்தில் ஆகாஶம் வ்யாபித்திருந்தபோதிலும் அக்குடத்திலுள்ள கள்ளினுடைய துர்க்கந்தம் அந்த ஆகாஶத்தைப்பற்றாமலும், அந்தமிடாவின் விகாரங்களை அடையாமலும் அஸங்கனாயிருப்பதுபோல, தேஹத்தில் ஆத்மா வஸித்தபோதிலும், தேஹத்தில் அஸங்கனாய், தேஹேந்த்ரியங்களினுடைய விகாரங்களும் தோஷங்களும் இல்லாதவனாய், அகர்த்தனாய் தான் எந்தக்கார்யங்களையுஞ் செய்யாமலும், அபோக்தனாய் தான் எதையும் அநுபவிக்காமலும், ஒருவரையும் அநுபவிக்கச்செய்யாமலும், கேவலஸாக்ஷிமாத்ரனாய் ஜ்ஞானாநந்தஸ்வரூபனாயிருக்கின்றான். அப்பேர்ப்பட்ட ஆத்மா, மாயாப்ராந்தியினால் தனது நிஜஸ்வரூபமென்று தனக்குத் தோன்றுவதே அத்யாஸமென்று சொல்லப்படும். அத்யாஸமென்றால், ஓர் வஸ்துவினுடைய குணங்கள் வேறொரு வஸ்துவிலிருப்பதுபோல் தோன்றுதல். அவ்வித அத்யாஸத்தினால் தேஹேந்த்ரியங்களே நானெனவும், தேஹத்திற்கு உண்டாயிருக்கும் ஜநநமரணாதி விகாரங்கள் எனக்கு உண்டெனவும், இந்த்ரியங்களினு

டைய ஸுகதுக்கங்கள் எனதெனவும், இந்த்ரியங்கள்செய்யும் கார்யங்களை நான் செய்கின்றேனெனவும் நினைப்பதே அஹங்காரமெனவும் அபிமானமெனவும் சொல்லப்படும்.

ஶ்ரு || "க்ருஶோஹம் து:க பத்தோஹம்
ஹஸ்தபாதாதிமானஹம் இதிபாவாநுரூபேண பத்யதே."
[மஹோபநிஷத்.]

ஆத்மாவாயிருக்கின்ற தான், அப்பேர்ப்பட்ட அபிமானத்தால், நான் ஜநநமரணமுடையவன், நான் ஸம்ஸார துக்கத்தினால் கட்டுப்பட்டிருக்கின்றேன்; நான் கரசரணாதி அவயவங்களையுடையவன், நான் அநாதிகாலமாய் கர்மபாஶபத்தனாயிருக்கின்றேன் என்று, தானல்லாதவற்றைத் தனதாகப் பாவித்து துக்கித்துக்கொண்டிருக்கின்றான். ஆதலால், தேஹேந்த்ரியங்களை நானென்றபாவிக்கும் அபிமானமே பந்தமென்று சொல்லப்படும். அந்த அபிமானத்தை விட்டொழிப்பதே மோக்ஷமென்று சொல்லப்படும். எவ்வாறெனில்;—

"சர்மம் மாம்ஸம் ரக்தாஸ்தீநி தேஹோ தஸ்ய பரோஸ்ம்யஹம் இதி நிஶ்சித வாசஸ்தத் க்ஷீணவித்யோ விமுச்யதே." "நாஹம் துக்கீ நமே தேஹோ பந்த: கேஸ்யாத்மநி ஸ்தித: இதி பாவாநுரூபேண முச்யதே." [மஹோபநிஷத்.]

சர்மம், மாம்ஸம், ரக்தம், நரம்பு, மூளை, கொழுப்பு, அஸ்திகள் என்னும் ஸப்த தாதுக்களின் மயமான ஶரீரம் நானல்ல, இந்த்ரியங்கள்நானல்ல நான் இத்தேஹேந்த்ரியங்களுக்கு வேறாயிருக்கின்றேன்; ஶரீரம் துக்க ஸ்வரூபமானது; இந்தஶரீரத்திற்கு வேறாயிருக்கும் நான் துக்கியல்ல, நான் ஸ்தாநத்தன் எனக்கு தேஹமில்லை, எந்தக்கார்யங்களையும் செய்வதில்லை, எதையும் அநுபவிப்பதில்லை, கர்மம்நானல்ல, எனக்குக்கர்மமே இல்லை, நான் ஶாந்த நிர்க்குணன், நிர்விகாரன், பரப்ரஹ்மஸ்வரூபன். ப்ரஹ்மஸ்வரூபனான எனக்கு பந்தமேது? நான் நித்யமுக்தன் என்று அறிவதே மோக்ஷமென்று சொல்லப்படும்.

"த்வேபதே பந்தமோக்ஷாய நிர்மமேதி மமேதிச
மமேதி பத்யதே ஜந்தூர் நிர்மமேதி விமுச்யதே." [மஹோப]

தேஹேந்த்ரியங்களே நானென்றும், இந்த்ரியங்கள் செய்யும் கார்யங்களை நான் செய்கின்றேனென்றும் பாவிப்பதே அஹங்கார மெனப்படும். இந்தஶரீரம் என்னுடையது, இந்த பார்யா புத்ரர்கள் தனம் க்ருஹம் பூமி இவைகளெல்லாம் என்னுடையதென்று நினைப்பதே மமகார மெனப்படும். அப்பேர்ப்பட்ட அஹங்கார மமகாரங்கள் ஆத்மாவிற்குண்டாயிருப்பதே பந்தமென்றும், அவைகளில்லாமற் போவதே மோக்ஷமென்றுங் கூறப்படும்.

"யா தபிமானம் காரயதி ஸாஹ்யவித்யா
ஸோபிமானோ யயா நிவர்த்தே ஸா வித்யா."

தேஹேந்த்ரியங்களே நான் என்னும் அபிமானம் ஆத்மாவிற்கு எதனால் உண்டாகின்றதோ, அதுவே அஜ்ஞானமெனவும் அவித்யையெனவும் சொல்லப்படும். அவ்வகைப்பட்ட அபிமானத்தை எந்த ஜ்ஞானத்தினால் நிவர்த்திக்கப்படுகின்றதோ, அந்தஜ்ஞானமே வித்யை எனப்படும். மேலும்,

"ப்ரஹ்மைவாத்மா ஜ்ஞேய: ப்ரஹ்மஜ்ஞானம் ஸமூலாநாத்ம நிவர்த்தகம் ஸத்ப்ரஹ்மணி விலீயதே" "அயமாத்மா ப்ரஹ்ம."
[ப்ருஹதாரண்யோபநிஷத்.]

ஆத்மாவே ஸத்ரூபமாகிய பரப்ரஹ்மமென்று சொல்லப்படும். எப்படியென்றால்:—

"அததி தத்வஸ்து ரூபேண வ்யாப்நோதீதி ஆத்மா"
"அதஸாதத்ய கமநே இதி தாது:"

எது ஸகல வஸ்துக்களிலும் வ்யாபித்து தனக்கு அந்யமாய் இல்லாததாய், ஸர்வம் தானாயிருக்கின்றதோ அதுவே ஆத்மாவென்று சொல்லப்படும். இதன்றியும்,

"ப்ருஹிர் ப்ரஹ்ம வ்ருத்தேவ ப்ருஹத்தோர்த்தாதோ:
அர்தானுகமாத் தேஶத: காலத: வஸ்துத: அபரிச்சின்னம்
யத்வஸ்து தத்ப்ரஹ்மேதி பாஷ்யம்."

ஒரு தேசத்திலிருக்கின்றதும் ஒரு தேசத்திலில்லாததும், ஒருகாலத்திலிருக்கின்றதும் மற்றொருகாலத்தில் இல்லையென்றும் சொல்லப்படாமல், எது ஸர்வதேச ஸர்வகால ஸர்வ வஸ்துக்களினிடத்தும் பரிபூர்ணமாய் வியாபித்து தனக்கு இரண்டாவது இல்லாததாய் ஸர்வமும் தானாயிருக்கின்றதோ, அதுவே ப்ரஹ்மமென்று சொல்லப்படும். ப்ரஹ்மம் ஆத்மா என்னும் சப்தங்கள்மாத்திரம் பேதமாயிருக்கின்றனவேயொழிய இவ்விரண்டு சப்தங்களின் அர்த்தமும் ஓர் வஸ்துவையே குறிப்பிக்கின்றது. ஆதலால் ப்ரஹ்மமே ஆத்மா என்று சொல்லப்படும். அப்பேர்ப்பட்ட ப்ரஹ்மமாகிய ஆத்மா ஒன்றே, மாயா உபாதிகளினால் பரமாத்மாவென்றும் ஜீவாத்மாவென்றும் இரண்டுவிதங்களாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது. உபாதியை நீக்கிப் பார்த்தபோது பரமாத்மா ஜீவாத்மா என்னும் பேதமே இல்லை. ஸர்வம் ஏகாத்மஸ்வரூபமாகவே இருக்கின்றது. ஆதலால் ஜீவாத்மாவே பரப்ரஹ்மமென்றும், பரப்ரஹ்மமே ஜீவாத்மாவென்றும் சொல்லப்படும். அப்பேர்ப்பட்ட பரப்ரஹ்மமாகிய ஜீவாத்மாவைத்தவிர இதர வஸ்துக்கள் எல்லாம் அநாத்மாவென்று சொல்லப்படும். அநாத்மாவாகிய வஸ்துக்களெல்லாம் பரப்ரஹ்மமாகிய ஆத்மாவில் உத்பத்தியாய் மறுபடியும், (அலைகளில்லாத ஸமுத்ரத்தில் காற்றினால் அலைகள் உண்டாகி அதிலிருந்து நுரைகள், நீர்க்குமிழிகள், திவலைகள் உண்டாய் மறுபடியும் நுரைகள், குமிழிகள், திவலைகள்யாவும் அந்த அலையில் லயித்து அலையும் ஸமுத்ரத்தில் ஐக்யமாவதுபோல்) ஆத்மாவிலேயே லயித்துக்கொண்டிருக்கும். பரப்ரஹ்மமாகிய ஆத்மா நாசமில்லாதது, ஸத்யமானது, அநாத்மாவஸ்துக்கள்யாவும் அஸத்யமாய் நசிக்கப்படுவது.

காற்றில்வைத்த தீபத்தைப்போன்று இச்சரீரத்திற்கு உண்டாயிருக்கும் ஸம்பத்து இந்த்ரஜாலம்போன்றது; புத்ர, மித்ர, களத்ர, பௌத்ர ஸமூஹம் ஸ்வப்நத்தில் காணும் வ்யாபாரமாயிருக்கின்றது; ராஜ்ய பரிபாலனம் தோல்பொம்மை நாடகமாயிருக்கின்றது.

ஶ்ரு || "அநாத்மா து ஸ ஜீவோ வியதாதி ப்ரபஞ்சக: அநாத்மா மூலம் மாயா" "தேஹேந்திரிய ப்ராண மனோஹமாதய: ஸர்வே விகாரா: விஷயா: ஸுகாதய: வ்யோமாதி பூதாந்யகிலஞ்ச விஶ்வமவ்யக்த பர்யந்த மிதம் ஹ்யநாத்மா."

தேஹம் தசேந்த்ரியங்கள், பஞ்சப்ராணங்கள், அந்தஃகரண ப்ரதிபிம்பமாகிய சிதாபாஸஜீவன், மனோபுத்தி சித்த அஹங்காரங்கள், சப்தாதிவிஷயங்கள், ஆகாசாதி பஞ்சபூதங்கள், பஞ்சபூதமயமாகிய ப்ரபஞ்சம் இவைகளெல்லாம் அநாத்மா எனப்படும்.

ஶ்லோ || "மாயா மாயாகார்யம் ஸர்வம் மஹதாதி தேஹபர்யந்தம்
அஸதிதமநாத்மகம் த்வம் வித்தி மருமரீசிகா கல்பம்."

அநாத்மாவாகிய மஹத் தத்வம்முதல் அணு தேஹம் வரையில் ஸகல தத்வங்களும் தேஹேந்த்ரியாதி ஜகத் ஸர்வம் மாயையினால் உண்டாயிற்று. இம்மாயையினால் உண்டாகிய தேஹேந்த்ரியாதி ப்ரபஞ்சம் ஸர்வம், ஸஸந்தருதுவில் நிர்ஜல சவட்டுப் பூமிகளில் ஸூர்யகிரண வெப்பத்தினால் காணப்படும் கானல் நீரை, ஜலப்ரவாஹம் போகின்றதென்னும் புத்தியினால், அந்தஜலத்தைப் பானம் செய்யவேண்டுமென்று தாஹமுடைய ம்ருகங்கள் அதைநாடி ஓடுகின்றன. அங்ஙனம் எவ்வளவோ தூரம் ஓடியும் எதிரில் கல்பனுஜலம் காணப்படுகின்றதேயொழிய ஸத்யமான ஜலமில்லை. அப்படிக் கண்களுக்குத் தோன்றினாலும் ஜலமில்லையென்னும் நிஶ்சயம் புத்திக்குத்தோன்றும் வரையில் அந்த ஜலமில்லாமற்போகாது. கண்களுக்குத் தோன்றிய ப்ராந்தியினால், மோக்ஷத்தை அடைவதற்கில்லாமல் சுழல் சுற்றித்திரிவதுபோல் மனிதர்கள் அநேக ஜன்மங்களையெடுக்கின்றார்கள். அகண்ட பரிபூர்ணமாகிய ஆத்மாவில் இந்த ஸமஸ்த ப்ரபஞ்சங்களும் தோன்றுகின்றன. இந்த ஸமஸ்த ப்ரபஞ்சத்தையும் நிஜமென்று பாவித்த மனிதர்கள் எதிரிற் காணப்படும் த்ருஶ்யத்தில் புத்தியை நிறுத்துவதேயொழிய வேறொன்றில்லை. எப்படி என்றால், கர்மகாண்டத்

தைப் பார்த்தபோது கர்மங்களைச் செய்யவேண்டுமென்னும் எண்ணமுடையவனாய் கர்மங்களைச் செய்துகொண்டு இஹபர லோகங்களில் வண்டியின் சக்ரம்போலத் திரிந்துகொண்டு முக்தியடைய சக்தியற்றவனாய் எப்படியோ ஓர் ஜன்மத்தில் ஜ்ஞானகாண்டத்தைப் பார்த்து நிஜமாகிய ஸத்தையறிந்த மஹாநுபாவர்களுக்கு மாத்ரம் மோக்ஷம் ஸித்திக்கும்.

ஶ்ரு || "ஸர்வ ஆகாசே மேகாதிரிவ த்ருஶ்யதே மாயாசாம அநாதிர்நத்வதீ ப்ரமாணு ப்ரமாண ஸாதாரணு ஸதீ ஸாஸதீ ஸதஸத் நிர்வாச்யா நிஷ்டாஸ ஸலக்ஷ்ய மாநார்த்வாணி விகல்ப நிரூப்ய மாஞேச்யாவச வ்யவஹார பேதவதீ யா கல்பிதே வஸ்துதஸ்ஸா மாயா தஸ்வரூப மஜ்ஞானம் தநேவ மூலப்ரக்ருதிர் குணஸாம்யா அவித்யேத்யா த்யநேகாகார ஜகதாகாரேண பரிணதா தநேவம் ப்ரஹ்மவிஜ்ஞாநாத் த்யநுபவதிச."

ரூபமில்லாத ஆகாசம் அனேகயோஜனதூரம் போய்க்கொண்டிருப்பதனால் நேத்ரங்களுக்கு நீலம்போல் காணப்படுகின்றது. அதுபோல் சாந்த நிர்க்குண நிராகார பரிபூர்ண பரப்ரஹ்மத்தில் மாயை தனக்குத் தானாகவே தோன்றும். அந்தமாயை அநாதியானது, கர்த்தப்போலது, ப்ரமாணு ப்ரமாணங்களுக்கு ஸாதாரணமானது. அது ஸத்தல்ல, அஸத்தல்ல, ஸதஸத்ரூபமல்ல, அநிர்வாச்யமானது. அதாவது இப்பேர்ப்பட்டது அப்பேர்ப்பட்டது என்று அதன் லக்ஷணத்தை அறிந்து சொல்வதற்கு ஸாத்யமாகாது. சாந்த நிர்க்குண பரப்ரஹ்மத்தில் தோன்றிய மாயையானது பரப்ரஹ்மத்தை மூடிக்கொண்டு, நாநாவித நாமரூபங்களையுடைய ஜீவேச்வராதிபேதங்களாய் வ்யவஹாரதசையில் தோன்றச்செய்கின்றது. யதார்த்தமாய் விசாரிக்குமளவில் (யா-மா-ஸா-மாயா) என்பதுபோல் காலத்ரயங்களிலும் எது இல்லாமற்போகுமோ அதுவே மாயை என்றுசொல்லப்படும். எது ப்ரதிபலித்து வஸ்துவாயில்லாமல் ரஜ்ஜுஸர்ப்பம், கந்தர்வநகரம், வந்த்யாபுத்ரன், ஸ்தாணுபுருஷன், சுக்திகாரஜதம், கானல்நீர் இவை

களைப்போல எது கல்பிதமாய், ப்ராந்திரூபமாய், மித்தையாய், அஸத்தாயிருக்கின்றதோ அதுவே மாயையென்றுசொல்லப்படும். அந்தமாயையின் அஜ்ஞானமே ஸ்வரூபமாயிருக்கின்றது. அந்தமாயையே மூலப்ரக்ருதியென்று சொல்லப்படும். அதுவே, ஸத்வ ரஜ தமோகுணங்களையுடையதாய், மாயை, அவித்தை, ஆவரணம், என மூன்றுரூபங்களாயிருக்கின்றது. அது ஸத்வகுண ப்ரதானமானபோது மாயாசக்தியென்றும், ரஜோகுண ப்ரதானமானபோது அவித்யா சக்தியென்றும், தமோகுண ப்ரதானமானபோது அஹங்காரமென்றும் ஆவரண விக்ஷேப சக்தி யென்றும் சொல்லப்படும். அந்தமாயையே ஸங்கல்ப விகல்பமாயிருக்கின்றது. பால்ஒன்றே பரிணமித்து நாநாவித ரூபங்களுடன் தயிர், மோர், வெண்ணெய், நெய் முதலாகியவைகள் உண்டாவதுபோல் ஓர்மாயையே பரிணமித்து நாநாவித நாமரூபங்களுடன் சராசர ஜகத்ரூபமாய்த் தோன்றுகின்றது. இப்படி மாயையினுடைய மித்யா லக்ஷணமும் ப்ரஹ்மத்தின் ஸச்சிதாநந்த லக்ஷணமும் தெரிந்து துக்க ஸ்வரூபமான மாயையை பரித்யஜித்து (நாசமாக்கி) ஸச்சிதானந்தலக்ஷணமுடைய ப்ரஹ்மமே ஸத்யமென்றும் அப்பேர்ப்பட்ட ப்ரஹ்மமே ஆத்மாவென்றுந் தெரிந்து, ஸதா ஆத்மாநுஸந்தானம் செய்துகொண்டிருப்பதே ப்ரஹ்மஜ்ஞானமென்றும் ப்ரஹ்மநிஷ்டையென்றும் சொல்லப்படும். அப்படிப்பட்ட ஆத்மாநுஸந்தானஞ்செய்பவனே, ப்ரஹ்மஜ்ஞானியென்றும் ப்ரஹ்மவேத்தனென்றும் சொல்லப்படுவான்.

215
OFFICE OF ... 2-DEC 1919 ... MADRAS

ஸ்வர சாஸ்த்ரம்.

"வெள்ளி புதனொடு திங்க ளிடமெனத்
தள்ளுமின் கால சரம்."
"செவ்வாய் சனிஞாயிறு வலமாகவே
கொள்ளிலிவ் வாறிட்ரு மில்."
"வளர்பொன் னிடம்பிறைத் தேய்வு வலமாம்
வளர்பிறை யென்றே மதி."
"வலத்திற் சனிக்கே யிராப்பகல் வாயு
செலுத்து போது செயல்."— [ஔவைக்குறள்.]

"மாறிவளர் பக்கமதிற் குறையும் பக்க
மதிநாடி கதிர்நாடி வளர்பொன் னொடிப்
பேறுமிக வுண்டாகும் பிராண னிற்கும்
பின்புரைத்த காரியங்க ளெல்லா மேலாம்
கூறுகின்ற சனிகாளிற் பகலி ராவிற்
குலவுசரம் வலமிட்டே கோனு தோடில்
காறுமலர்ப் பெருந்திருவே சொன்னே யிந்த
ஞாலமெங்கும் புகழ்பெறவே நடக்கு மென்றே."

வெள்ளி புதன் திங்கள்—சந்த்ரநாடி.
செவ்வாய் சனி ஞாயிறு—ஸூர்யநாடி.
வளர்பிறை பொன் (வியாழம்)—சந்த்ரநாடி.
தேய்பிறை பொன் (வியாழம்)—ஸூர்யநாடி.
சனிக்கிழமை இராப்பகல்—ஸூர்யநாடி.

காலை 4 மணிமுதல் 6 மணி வரையில் மேற்சொல்லிய வாரங்களில் மேற்சொல்லிய நாடிகளில் ஸ்வாஸத்தை நிறுத்தி அப்யாஸம் செய்தால் மோக்ஷவீட்டுச்செல்வம் குறையாது; மேலும் ஸ்வாஸத்தை ஸூர்யநாடியில் நிறுத்தி எந்தக்கார்யங்களைச் செய்தபோதிலும் ஸர்வமும் ஸித்திஉண்டாகும். அதை இதனடியில் சொல்லுகின்றோம், கவனமாய் வாசித்து அதுபோல் அப்யாஸம் செய்யுங்கள்.

215



ஸ்வாஸத்தை மாற்றும் விதம்.

GOLDEN & CO., MADRAS.

ஸ்வாஸத்தை நாஸிகளில் மாற்றும் விதம்.

ஸ்வாஸத்திற்கு உண்மைப்பெயர் "ஹம்ஸ" என்று சொல்லப்படும். இது, வலது இடது நாஸிகைகளில் ரேசக பூரகமாய் நடந்துகொண்டிருக்கும். இதற்கு ஸூர்யநாடி சந்த்ர நாடி என்றும், ஶிவன் சக்தி என்றும், இடா பிங்களா என்றும் சொல்லப்படும். வலது நாஸியிலிருந்துவரும் ஸ்வாஸம், ஸூர்யநாடி, சிவன், இடாநாடியென்றும் சொல்லப்படும். இடது நாஸியிலிருந்து வரும் ஸ்வாஸம்; சந்த்ரநாடி, ஶக்தி, பிங்களாநாடியென்றும் சொல்லப்படும். ஸுஷும்நாநாடியென்றால் மூலாதாரம் (குதஸ்தானம்) முதல் மஸ்தகம் (ப்ரஹ்ம கபாலம்) வரையில் ஸஞ்சரிக்கும் நாடி. இதை மாற்றுவதற்கு மேற்சொல்லியதுபோல் அதிகாலை 4 மணிக்கு முன்பே எழுந்திருந்து சந்த்ரநாடியிலிருக்கும் ஸ்வாஸத்தை ஸூர்யநாடியில் மாற்றவேண்டுமானால், எதிரிலிருக்கும் ☞ படத்தில்காட்டியதுபோல் இடதுகாலின்மேல் வலதுகாலைஸமமாய்வைத்துக் கொண்டு இடதுகையைப்பூமியில்ஊன்றி வலதுகாற்பெருவிரலின்பெருநரம்பைக் கணுக்காலிடம் வலதுகை நடுவிரலால் அசைத்துக் காட்டியிருப்பதுபோல் அசைத்துக்கொண்டேயிருந்தால், ஸூர்யநாடியில் அதாவது வலதுநாஸியில்மாறிவிடும். ஸூர்யநாடியிலிருக்கும் ஸ்வாஸத்தை சந்த்ரநாடியில் மாற்றவேண்டுமானால், மேற்சொல்லியதுபோல் வலதுகாலின்மேல் இடதுகாலை ஸமமாய்வைத்துக்கொண்டு, வலதுகையைப்பூமியில் ஊன்றி, இடதுகை நடுவிரலால் முன் அசைத்ததுபோல் அசைத்துக்கொண்டேயிருந்தால், சந்த்ரநாடியில் அதாவது இடதுநாஸியில்மாறும். இவ்விரண்டும் மாறுமிடம் ப்ருமத்ய (நெற்றி) ஸ்தானத்தில் மிகவும் சிறிய ரந்த்ரம் உண்டு. அது தான், த்ரிவேணிஸங்கமம் (சேர்க்கை) என்று சொல்லப்படும். என்றால்; இடா பிங்களா ஸுஷும்நா நாடிகள் மூன்றும்

கலக்குமிடமாதலால் த்ரிவேணி ஸங்கமென்று சொல்லப்படும். அவ்விடந்தான் ஸச்சிதாநந்தன் இருக்குமிடம்.

ஸ்லோ ॥ "த்வயோ ரந்தர்கதம் ஜ்யோதிர் ஜ்யோதிரந்தர்கதம் மந:
தந்மநோ விலயம் யாதி தத் விஷ்ணோ: பரமம்பதம்."

ப்ராண, மநோ, புத்திகளையே, நாத, பிந்து, கலை என்று பெரியோர்கள் சொல்லுவார்கள் இதற்கு ப்ரமாணம்.

ஸ்லோ ॥ "ப்ராணஏவ ஸதாநாத: மநோபிந்து ஸ்ததைவ ச
கலாது புத்தி ரித்யுக்தம் ஏவம்தீயாயேத் ஸதாயதி:."

நாத, பிந்து, கலைகளுக்கு ஆதாரம் த்ரிகூடஸ்தாநம். த்ரிகூடமென்றால், மூன்றுமார்க்கங்கள்சேர்ந்தது; இதையே ஸ்ருங்காடகமென்று சொல்லுவார்கள். இதுவே காஶி, இதுவே ப்ருமத்யஸ்தானம், "ப்ருவோர்மத்யே வாரணஸீ தத்ரைவ பரஞ்ஜ்யோதிர் விராஜதே." இடா, பிங்களா, ஸுஷும்நா, அல்லது ஸச்சிதாநந்தம்; இந்த ஸச்சிதாநந்தமே நீ என்று சாந்தோக்யோபநிஷத்தில் அருணன் ஶ்வேதகேதுவிற்கு ஒன்பதுமுறை உபதேசித்தார். மேலும், உட்கார்ந்து யோகதண்டமாகிலும் அல்லது தனக்குத்தகுந்த உயரமுள்ள மணையாகிலும், வலது அக்குளில்வைத்துக்கொண்டு அக்குளின் நரம்பு ஊன்றும்படிக்கு அழுத்தினால் சிலநிமிஷங்களில் வலது நாஸியிலிருக்கும் ஶ்வாஸம் இடது நாஸியில்மாறும். அன்றியும், அக்குளுக்கும் முழங்கைக்கும் மத்தியிலும் வைத்து ஊன்றினாலும் மாறும். இந்த ஶ்வாஸம் எப்பொழுதும் ஸூர்யநாடியிலிருப்பதற்காகவே யோகிகள் எப்பொழுதும் யோகதண்டத்தைத் தமது இடது அக்குளில் வைத்துக்கொண்டிருக்கின்றனர். ஶ்வாஸத்திற்கு வாஶியென்றும்பெயர். இந்த வாஶியை மாற்றுவதனால் அந்தயோகதண்டத்திற்கு வாஶிக்கோல் என்றும்பெயருண்டு. ஸாதாரணமாய் உட்கார்ந்தபோது சந்த்ரநாடியிலிருக்கும் ஶ்வாஸத்தை ஸூர்யநாடியில் மாற்றவேண்டுமானால் இடதுகையைப்பூமியிலூன்றி இடதுமுதுகை மாத்ரம் சுவரிற் சார்த்திக்கொண்டிருந்தால் சந்த்ரநாடியிலிருக்

கும் ஶ்வாஸம் ஸூர்யநாடியில்மாறும். ஸூர்யநாடியிலிருக்கும் ஶ்வாஸத்தை சந்த்ரநாடியில்மாற்றவேண்டுமானால், வலது கையைப் பூமியிலூன்றி வலதுமுதுகைமாத்ரம் மேற்சொல்லியதுபோல் சார்த்திக்கொண்டிருந்தால் ஶ்வாஸம் சந்த்ரநாடியில் மாறும். படுக்கையில் ஸூர்யநாடியிலிருக்கும் ஶ்வாஸத்தை மாற்றவேண்டுமானால், வலதுபுறமாய் ஒஞ்சரித்துப்படுத்து, வலதுகையைத் தலையின்கீழ் வைத்துக்கொண்டிருந்தால், ஸூர்யநாடியிலிருந்து சந்த்ரநாடியில்மாறும். சந்த்ரநாடியிலிருக்கும் ஶ்வாஸத்தை ஸூர்யநாடியில் மாற்றவேண்டுமானால் இடதுபக்கம் ஒஞ்சரித்துப்படுத்து, இடதுகையைத் தலையின் கீழ்வைத்துக்கொண்டிருந்தால், சந்த்ரநாடியிலிருந்து ஸூர்யநாடியில்மாறும். நடக்கும்போது குடையையாகிலும் அல்லது துண்டு வஸ்த்ரத்தையாகிலும் பந்தாகச்சுற்றி இடது அக்குளில் வைத்துக்கொண்டுசென்றால் ஶ்வாஸமானது ஸூர்யநாடியிலேயேயிருக்கும். சந்த்ரநாடியிலிருக்கவேண்டுமென்றால் மேற்சொல்லியதுபோல் வலதுஅக்குளில்வைக்கவேண்டும். இந்த மஹாரஹஸ்யமான விஷயங்களைச் சில காலாப்யாஸத்தினால் நிமிஷத்திற்கு இரண்டுமூன்றுமுறையும் மாற்றலாம். ப்ரதிதினமும் தவறாமல் காலை 4-மணி முதல் 6-மணி வரையில் "ஹம்ஸ" மென்னும் ஶ்வாஸத்தை மேற்சொல்லியதுபோல் அந்தந்த வாரங்களில் மாற்றிக்கொண்டிருக்கவேண்டும். இதை அப்யஸிப்பவர்கள், எந்த ஆபத்துகளுமில்லாமல் எப்போதும் மநோ உல்லாஸமாயிருப்பார்கள். எப்பேர்ப்பட்ட கார்யங்களை நினைத்துப்போனபோதிலும் கார்யஸித்தியுண்டாகும். யோகிகளானவர்கள் கொஞ்சமேனும் இடைவிடாமல் யோகாப்யாஸத்தைச் செய்துகொண்டு இரவும் பகலும் "ஹம்ஸ"த்தை ஸூர்யநாடியிலேயே வைத்துக்கொண்டிருப்பதால் அவர்களுக்குச் சிலகாலத்தில் யோகஸித்திக்கும். இந்த "ஹம்ஸ"மே ஸர்வ ஜீவஜந்துக்களிலும், தேஹமத்தியில் ப்ராணவாயுவாயிருந்து, ரேசக, பூரகமாய், (உஶ்வாஸ நிஶ்வாஸங்களாய்)

ஊர்த்வ முகமாய் (தலைகீழாய்) நாபியிலிருந்து புறப்பட்டு மூக்கின் ரந்த்ரங்களின்வழியாய்த் திரிந்துகொண்டிருக்கும். அபான வாயு, ஸூக்ஷ்மரூபமாய் அதோமுகமாய் (கீழ்ப்புறமாய்)த் திரிந்து கொண்டிருக்கும். இவ்விரண்டிற்கும் மத்தியிலிருக்கும் ஆத்மாவே "ஹம்ஸ" என்று சொல்லப்படும். இந்தஹம்ஸத்தை ப்ரதிமாதம் அமாவாஸை ப்ரதமை த்விதியை இந்நாட்களில் இரவும்பகலும் ஸூர்யநாடியில் செலுத்தினால் அம்மாதமெல்லாம் நன்மையைத்தரும். ப்ரதிவருஷம் சித்திரைமாதம் அமாவாஸை, ப்ரதமை, த்விதியை இம்மூன்று நாட்களிலும் மேற்சொல்லியதுபோல் ஹம்ஸத்தை ஸூர்யநாடியில்செலுத்தினால் வருஷமுழுமையும் ஸுகத்தைத்தரும். இதை அநுபவத்தில் காணலாம்.

இதை அடியேனுக்கு உபதேசித்த குருவானவர் என்ன சொல்லியிருக்கின்றாரென்றால், நீ இந்த ரஹஸ்யத்தை எவர்களுக்கும் உபதேசிக்கலாகாது. அப்படி உபதேசிப்பாயாகில், காசியில் காராம்பசுவைக்கொன்ற பாபத்தில் போகக்கடவாய் என்று சாபமளித்திருக்கின்றார். அடியேனொருவன் பாபத்தைஅநுபவித்து உலகத்திலுள்ள ஜனங்களெல்லோரும் ஸுகம் அநுபவித்தால் போதுமானதென்று எண்ணி இந்த மஹாரஹஸ்யத்தை உங்களுக்கு புஸ்தகமூலமாய் உபதேசித்திருக்கின்றேனென்று அறிவீர்களாக.

பற்பொடியினால் உண்டாகும் குணம்.

ஓ ஸஹோதரிகளே! ஓ ஸஹோதரர்களே! சரீரம் ஸ்திரமாய் இருக்க, ஔஷதமும் ஆஹாரமும் புஜிக்கவேண்டும். ஆஹாரம் புஜிப்பதற்காக பற்கள் அசையாமல் கெட்டியாயிருக்கவேண்டும். அப்படியில்லாமல், பல்லில் நீர்கட்டுவதும், ரத்தம் உண்டாவதும், வாயில் நீர்சுரப்பதும், வாய்நாற்றமும்

உடையவர்களுமான அனேக ஸ்த்ரீ புருஷர்கள் ப்ரபஞ்சத்தில் உண்டு. அப்படிப்பட்டவர்களுக்கும், நல்ல பற்களையுடையவர்களுக்கும் பல் ஆடாமல் பல்லின்வேர் கெட்டிப்படும்படியாகவும் காலையில் பல் தேய்ப்பதற்காக கடைத்தெருக்களிலுள்ள ஸாமான்களை சேர்த்துத் தாமாகவே தூள்செய்து பல் தேய்ப்பதற்காக இதனடியில் சொல்லப்போகின்றோம். அவ்வாறுசெய்துவருவீர்களாகில், பல்லில் ரத்தம்வருதல் வாயில் ஜலம் சுரக்குதல் வாய்நாற்றமுண்டாகுதல் முதலானவைகள் உண்டாகமாட்டா. இவ்வாறுசெய்ய உங்களால் ஸாத்யமாகாவிட்டால் அடியில்கண்டிருக்கும் விலாஸத்திற்கு எழுதிப்பெற்று ஒருநாளும் தவறாமல் பல் தேய்த்துவரவேண்டும். முசாபரி (Circuit) அல்லது யாத்ரைசென்றாலும் தங்களுடன் கூடவே எடுத்துக்கொண்டுசெல்லவேண்டும். பல் தேய்க்கும்போது வெந்நீரால் வாய்கொப்பளித்துப் பற்பொடியினால் பல்தேய்த்து வெந்நீரால் அலம்பினால் மிகவும் நன்மை. இனி கடைத்தெருக்களின் ஸாமான்களை சேர்க்கவேண்டியவிவரங்களை இதனடியில்சொல்லுகின்றோம் கேளுங்கள்:—

மூன்றுரூபா எடைகொண்டது ஒருபலம்.

படிகாரம்	பலம்	15.
செத்தையில்லாமல் ஆய்ந்த மிளகு	,,	5.
உப்பு	,,	5.
பளிங்கு சாம்பிராணி	,,	5.

ஒரு பெரிய அகலச்சட்டியை அடுப்பின்மீது வைத்து 15 - பலம் படிகாரத்தை ஷை சட்டியில் போட்டு எரியவிடவேண்டும். அப்போது அது உருகி (கரைந்து) ஜலமெல்லாம் வற்றிப்பொரிந்து வெண்மையாகும். பொரிந்து வெண்மையானபிறகு தோசையைப்போல் அதைத் திருப்பிப் போடவேண்டும். அப்போது அதிலிருக்கும் நீரெல்லாம்

வற்றிப்போம். இது செய்ய ஏறக்குறைய இரண்டுமணிநேரம் செல்லும். இவ்வாறுசெய்து ஷை பொரித்த படிகாரத்துடன் மிளகு உப்பு பளிங்குசாம்பிராணி இவைகளைச்சேர்த்து உரலில் கட்டைப்பாரையினால் இடித்துத் தூள்செய்து காப்பித்தூள்ஜலிக்கும் ஜல்லடையினால் ஜலித்து தயார்செய்து காற்றுப்போகாத மேல்மூடியுடைய ஒரு பெரியபுட்டியில் போட்டு வைத்துக்கொண்டு அதிலிருந்து ஒருவாரத்திற்குவேண்டிய பொடி மற்றொரு சிறிய டப்பியில் போட்டு வைத்து அதிலிருந்து கொஞ்சமாய் எடுத்துக்கொண்டு வெந்நீரால் வாய்கொப்பளித்துவிட்டு பல்பொடியால் பல்தேய்த்து வெந்நீரால் கழுவவேண்டும். இவ்வாறுசெய்துவருவீர்களாகில் உங்கள்பற்கள் கெட்டியாயிருப்பதுமேயன்றி, பல்லில் ரக்தம் வருதல் வாயில் ஜலம் சுரக்குதல் வாய்நாற்றமுண்டாகுதல் முதலானவைகளும் நீங்கும். ஆதலால், இதைவாசிக்கும் ஒவ்வொரு குடும்பத்திலுள்ளவர்களும் இவ்வாறு செய்துவர வேண்டும். அன்றியும் இதுவிஷயம் உங்கள் அன்பர்கள் யாவர்களுக்கும்சொல்லி அவர்களையும் இவ்வாறுசெய்து வரும்படி சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றனன். இவ்வாறு கஷ்டப்பட்டுச் செய்துகொள்ள ஸாத்யமாகாதவர்களுக்காக அடியில்கண்ட விலாஸத்தில் செய்து விற்கும்படி ஏற்பாடு செய்திருக்கின்றது. ஆதலால், வேண்டுவோர்கள்

ஸதானந்தன் வேப்பேரி போஸ்ட், சென்னை.

என்று எழுதிப்பெறலாம்.

கந்தக கல்பம்

ஸர்வ வ்யாதிகளையும் நிவாரணை செய்தல்.

அன்பர்களே! இனி, ப்ராணாயாமம் செய்யவேண்டிய க்ரமங்களை சொல்லப்போகின்றோம். அக்காலத்தில் தேஹத்திற்கு எந்த வியாதிகள் வாராமலும், மலவிஸர்ஜனம் செய்யும் போது வெட்டைச்சூட்டினால் மலம் வெளியில் வாராமல் ஆஸனத்தினிடம்வந்து தங்கியிருக்கும். அப்போது விசேஷமாய் முக்கி உட்கார்ந்தால், ஆஸனத்திற்குள் இருக்கும் சர்மத்துடன் மலம்உராய்ந்துகொண்டு மிகவும் கஷ்டத்துடன் புட்டைபுட்டைகளாய் வெளியில் வந்துவிழும். இவ்விதமாய்க் கஷ்டத்துடன் வருவதனால் ஆஸனத்திற்குள் இருக்கும் சர்மத்திலிருந்து ரக்தம் உண்டாய் மலத்துடன் சேர்ந்துவரும். இப்படி வருவதனால் மூலம் (Piles) உண்டாகும். மலம் சிக்கலில்லாமல் தாராளமாய்வந்து எந்த சர்மவ்யாதிகளும் வாராமலிருக்க மார்க்கம் சொல்லுகின்றோம் கேளுங்கள்:

சுவரை வைத்துக்கொண்டல்லவோ சித்ரமெழுதவேண்டும் என்பதுபோல், மானிட ஜன்மமெடுத்த ஒவ்வொருவரும் சரீரத்திற்கு யாதொரு வ்யாதிகளும் வாராமலிருக்க வைத்யர்களின் ஸஹாயமில்லாமல் எங்கும் கிடைக்கத்தக்க மூலிகைகளால் கந்தகம் சுத்திசெய்து அதற்கு சில மூலிகைகள் அனுபானம் சேர்த்து ஷை கந்தககல்பம் சாப்பிட்டு தேஹத்தை ஸ்திரமாய் நிறுத்திக்கொண்டபின் ஜ்ஞானமுடைய யோகஸாதனம் செய்யவேண்டும். ஆதலால், இனி கந்தகம் சுத்தி செய்யும் முறையை இதனடியில் சொல்லுகின்றோம் கவனியுங்கள்:—

ஶ்லோ || "ஷட்பலம் கந்தகஞ்ச த்ரிபலா சித்ரகம்ததா,
ஸுண்டீமரிசவ்வதேவதாரு வ்ருணவிஷ்கஞ்ச ப்ருதக்ப்ருதக்
சித்ரகஞ்சபலைகந்து சூர்ணிதம் வஸ்த்ரகாலிதம்
ஏகவிம்சத்வி விம்சதிவார பயஸாத்ய விலைவாபயேத்
ஸர்வரோக விநிர்முக்தோ ம்ருகராஜ பராக்ரம:
நீராயு: குஞ்சரபலோ ஜி வாபஸ்யதி தாரகா:
திவ்யதேஹோ பலீபூத்வா கேசரத்வம் ப்ரபத்யதே
அஸ்யமாத்ரபுரீஷாணி ஸ்பர்ஸம் டங்கநிகாஞ்சனம்
நாஸ்த்யஷ்டா அஷ்டகுஷ்டா விக்ரஹணீம்ச சதுர்விதா:
மந்தாக்னி மதிஸாரஞ்ச குல்மஷ்டவிதம்ததா
அபஸ்மிம் வாதரோகாம் ஸ்யஷ்டவிதாநிச
மநுஷ்யாணாம் ஹிதார்தாய பூஜ்யபாதேந நிர்மித:"

கந்தக குணம்

நெல்லிக்காய் கந்திக்கு நீண்பதினென் குட்டமத்தம்
வல்லிகனிசை குன்ம வாயுகண்ணோய்—பொல்லா
விடக்கட்டி மேகநோய் விஷசுரம் பேதி
திடக்கிரகணி காம்போக் தேர்.

என்னும் ஶ்லோக வாக்யரீதிகளாய் கெந்தகம் தன் குணத்வதத்தால் தேஹம் 10½-மாற்றுத் தங்கமாக ஆகும். 68, பலம் நெல்லிக்காய்கந்தகம் ஸுத்திசெய்தால் அதிலுள்ள மலினங்களெல்லாம் நீங்கி 42, பலம் கந்தகமே தேறும். பிறகு அது,தங்கத்திற்கு ஸமானமாகும். இந்த கந்தகம் நவ (ஒன்பது)முறை ஸுத்திசெய்து மூலிகைகளால் சேர்க்கப்படுவதனால் இது, கல்பமாகின்றது.

1. எருமைச் சாணப்பாலில் ஸுத்திசெய்தல்:—68,பலம் நெல்லிக்காய் கந்தகம் கொண்டுவந்து இடித்து பொடிசெய்து வைத்துக் கொள்ளவேண்டும். பிறகு, 32-பலம் எருமைச் சாணத்தில் பக்கா 4-படி ஜலம்விட்டுக் கரைத்து ஓர்சட்டியில் வடிகட்டி அதற்குமேல் மூடி சாணக்கையுடன் (மடக்குடன்) தயார்செய்து வைத்துக்கொள்ளவேண்டும். பிறகு ஓர்பெரிய

கடாயும்(வாணெலி)தோசை எடுக்கும் இரும்பு அகல சட்டுவமும் வெண்மையாய் துலக்கி தயார்செய்து வைத்துக்கொள்ள வேண்டும். பிறகு ஸ்டவ் (Stove) அதாவது மிஷன் அடுப்பு ஏற்றி சிறுதீயாய் எரித்து அதன்மீது மேற்படி கடாய்வைத்து கைச்சூடு உண்டானவுடன் மேற்படி கந்தகபஸ்மம் கடாயில் போட்டவுடன் அது வெல்லப்பாகுபோல் கரையும். அப்போது அடிபிடிக்காமல் மேற்படி சட்டுவத்தால் ஊதி கந்தகம் கரைந்தவுடன் மேற்படி சாணப்பாலில் சட்டுவத்தால் வழித்துவிடவேண்டும். விடும்போது சூடு ஆறுவதனால் கந்தகம் கடாயில் கட்டிவிடும். அதை மறுபடியும் அக்கினிசூடு காட்டி உருக்கி மேற்படி சாணப்பாலில் விடவேண்டும். அப்போது மேற்படி கந்தகம், கற்கண்டுக்கட்டிபோல் ஆகும். பிறகு அந்தச்சட்டியை சாணப்பாலுடன் அடுப்பில்வைத்து அதன்மேல் மடக்கினால்மூடி இரண்டரை மணிநேரம் அடுப்பில் கட்டைகளால் சிறுதீயில் எரியவிட்டு இறக்கியபின் அரை மணிநேரம் சென்றபிறகு நன்றாய் ஜலத்தினால் அலம்பி ஈரமில்லாமல் உலர்த்திவைத்துக்கொள்ளவேண்டும்.

உருகும்போது தீ அதிகமானால் கந்தகம் பற்றியெரியும். கட்டைகளால் எரியும் அடுப்பின்மீது கந்தகம்வைத்து எவ்வளவு சிறுதீயாய் எரியவிட்டபோதிலும் பற்றியெரியும். ஸ்டவ்வில் உருக்கினால் எரியமாட்டாது. ஸ்டவ் இல்லாதவர்கள் வெறுங்கரியால் அடுப்பை எரித்து விசிறியினால் விசிறி கடாய்க்கு சூடு உண்டானபிறகு மேற்படிகந்தகத்தை உருக்கவும் உருக்கலாம். கந்தகம் கடாயில் பற்றிக்கொண்டால் மறுபடியும் அணையாது. ஆதலால், அதிக ஜாக்ரதையுடன் சிறுதீயில் கந்தகத்தை உருக்கி, தயார்செய்து வைத்திருக்கும் அந்தந்த நீர், பால், ரஸங்களில் சட்டுவத்தால் வழித்து விட்டுவிடவேண்டும். அப்போது அது கற்கண்டு கட்டிப்போலாகும். கடாயில் கட்டியிருப்பதை மறுபடியும் உருக்கிவிடுவது பொடிகளாய் நிற்கும்.

2. பச்சரிசி கஞ்சி நீரில் ஸுத்திசெய்தல்:—பக்கா மூன்று படி பச்சரிசி கஞ்சிநீரை முன்சாணப்பால் சட்டியை நன்றாய் அலம்பி அதில் வடிகட்டி தயார்செய்து வைத்துக்கொண்டு கடாய் சட்டுவம் இவைகளை முன்போல் வெண்மையாய் துலக்கி அடுப்பின்மீது வைத்து கைச்சூடு உண்டானவுடன் மேற்படி கந்தகக்கட்டி தூள் இவைகளை கடாயில்வைத்து மேற்படி சட்டுவத்தால் கந்தகக்கட்டியை அழுத்தவேண்டும். அப்போது அது, சீக்கிரமாய் கரைந்து வரும். கரைந்தவுடன் மேற்படி கஞ்சிநீரில் சட்டுவத்தால் வழித்துவிட்டு மட்கிணல்மூடி முன்போல் இரண்டரைமணிநேரம் சிறுதீயில் எரியவிட்டு முடிந்தவுடன் அரைமணி சென்றபிறகு மேற்படி கந்தகக்கட்டியையும் தூள்களையும் நன்றாய் அலம்பி உலர்த்தித் தயார்செய்து வைத்துக்கொள்ளவேண்டும். பிறகு,

3. இளநீர் ஜலத்தில் ஸுத்திசெய்தல்;—பக்கா மூன்றுபடி இளநீர் ஜலமாகிலும் அல்லது தேங்காய் ஜலமாகிலும் வடிகட்டித் தயார்செய்து வைத்துக்கொண்டு கடாய் முன்போல் வெண்மையாய்த்துலக்கி அடுப்பின்மீது வைத்து கைச்சூடு உண்டானவுடன் மேற்படி கந்தகக்கட்டியையும் தூள்களையும் கடாயில்வைத்து மேற்படி சட்டுவத்தால் அழுத்தவேண்டும். அப்போது அது சீக்ரமாய் கரைந்துகொண்டுவரும். கரைந்தவுடன் மேற்படி இளநீர்ஜலத்தில் வழித்துவிட்டு மட்கிணல்மூடி முன்போல் இரண்டரைமணிநேரம் சிறுதீயில் எரியவிட்டு முடிந்தவுடன் அரைமணி சென்றபிறகு மேற்படி கந்தகக்கட்டியையும் தூள்களையும் நன்றாய் அலம்பி உலர்த்தித் தயார்செய்து வைத்துக்கொள்ளவேண்டும். பிறகு,

4. தேங்காய்பாலில் ஸுத்திசெய்தல்;—பக்கா மூன்றுபடி தேங்காய்ப்பால் வடிக்கட்டி தயார்செய்து வைத்துக்கொண்டு முன்போல் கந்தகத்தை உருக்கி மேற்படி பாலில்விட்டு இரண்டரை

மணிநேரம் சிறுதீயால் எரியவிட்டு முடிந்தவுடன் அரைமணி சென்றபிறகு கந்தகக்கட்டியை நன்றாய் அலம்பித் தயார்செய்து வைத்துக்கொள்ளவேண்டும். பிறகு,

5. புளித்த பசுமோரில் ஸுத்திசெய்தல்:—எட்டுதினங்கள் புளித்த மூன்று பக்காபடி பசும்மோர் வடிக்கட்டி தயார்செய்து வைத்துக்கொள்ளவேண்டும். பசுவின்மோர் கிடைக்காவிட்டால் பால்வாங்கி காச்சி தயார்செய்து வைத்துக்கொண்டு முன்சொல்லியதுபோல் கந்தகம் உருக்கி மோரில்விட்டு இரண்டரைமணிநேரம் சிறுதீயால் எரியவிட்டு முடிந்தவுடன் அரைமணிசென்றபிறகு கந்தகக்கட்டியை நன்றாய் அலம்பித் தயார்செய்து வைத்துக்கொள்ளவேண்டும். பிறகு,

6. பானகத்தில் ஸுத்திசெய்தல்:—24-பலம் கரும்புவெல்லத்தில் மூன்றுபடி ஜலம் விட்டுக்கரைத்து பானகம்செய்து வடிக்கட்டி தயார்செய்து வைத்துக்கொண்டு கந்தகத்தை முன்சொல்லியதுபோல் உருக்கி மேற்படி பானகத்தில்விட்டு இரண்டரைமணிநேரம் சிறுதீயால் எரியவிட்டு முடிந்தவுடன் அரைமணிசென்றபிறகு கந்தகக்கட்டியை நன்றாய் அலம்பித் தயார்செய்து வைத்துக்கொள்ளவேண்டும். பிறகு,

7. சுண்ணாம்பு தேட்டையில் ஸுத்திசெய்தல்:— புதிய சுண்ணாம்புநீர் தேட்டை (தெளிவு) ஜலம் வடிக்கட்டி மூன்றுபடி தயார்செய்து வைத்துக்கொண்டு கந்தகத்தை முன்சொல்லியதுபோல் உருக்கி மேற்படி தேட்டையில்விட்டு இரண்டரைமணிநேரம் சிறுதீயில் எரியவிட்டு முடிந்தவுடன் அரைமணிசென்றபிறகு கந்தகத்தை நன்றாய் அலம்பித்தயார்செய்து வைத்துக்கொள்ளவேண்டும். பிறகு,

8. கரிசிலாங்கண்ணிரஸத்தில் ஸுத்திசெய்தல்:— கரிசிலாங்கண்ணி இடித்து ரஸம் வடிக்கட்டி மூன்றுபடி தயார்செய்துவைத்துக்கொண்டு கந்தகத்தை உருக்கி மேற்படிரஸத்

தில்விட்டு இரண்டரைமணிநேரம் சிறுதீயில் எரியவிட்டு முடிந்தவுடன் கந்தகத்தை நன்றாய் அலம்பித் தயார்செய்து வைத்துக்கொள்ளவேண்டும். பிறகு,

9. மணித்தக்காளிரஸத்தில் சுத்திசெய்தல்:— அகப்படும் மணத்தக்காளி இடித்து ரஸம் பிழிந்துகொண்டு முன்போல் தயார்செய்துவைத்துக்கொண்டு கந்தகத்தை முன்போல் ரஸத்தில்விட்டு இரண்டரைமணிநேரம் சிறுதீயில் எரியவிட்டு முடிந்தவுடன் கந்தகத்தை நன்றாய் அலம்பித் தயார்செய்துவைத்துக்கொள்ளவேண்டும். இவ்விதமாய் 9 முறை சுத்திசெய்த பிறகு, பொன் புடம்போட்டதுபோல் அதிலிருக்கும் மாலின்யங்களெல்லாம் நீங்கி [illegible] பார்க்க அழகான [illegible] கந்தகம் சுத்திசெய்ய அதிலிருக்கும் [illegible] நீங்கி [illegible] கந்தகமாயிருக்கும். 68 - பலம் கெந்தி [illegible] சுத்திசெய்தபின் எடைபோட்டால் 42-பலம் கந்தகம் தேறும். அதைப் [illegible] வஸ்திரகாயம் செய்து வைத்துக்கொள்ளவேண்டும். பிறகு,

பச்சை சித்ரமூலம் வேர்கொணர்ந்து கழுவி அரை வீசை பட்டையெடுத்து அது மூழ்கும் அவ்வளவு ஜலத்தில் [illegible] அவ்வளவு புதுச்சலவைத்துணி கட்டி நனையாமல் நன்றாய்க்கட்டி மேற்படி சித்ரமூலப்பட்டை [illegible] போட்டு [illegible] அனல் [illegible] ஜலம் [illegible] திருப்பிக்கொண்டே வரவேண்டும். அரைமணிக்குள் சித்ரமூலத்திலிருக்கும் விஷமெல்லாம் இறங்கி காகிதப் பழுப்பு வர்ணத்துடன் ஜலம் குழம்பாய் இருக்கும். அதைத் [illegible] 4 - முறை [illegible] சுத்திசெய்து [illegible] வஸ்திரகாயம் செய்து வைத்துக்கொள்ளவேண்டும். பிறகு திரிபலை சூர்ணம், அதாவது:—

1. தான்றிக்காய்ச் சதை எடை	ரூபாய்	4	0	0
2. விதையுடைய கடுக்காய்ச் சதை எடை	„	2	0	0
3. பழுத்து உதிர்ந்து உலர்ந்த நெல்லிமுள்ளி [illegible] சதை எடை	„	8	0	0
ஆக எடை	ரூபாய்	14	0	0

4. [illegible]	பலம் 4
5. தோல்சீவிய [illegible]	„ 4
6. மிளகு	„ 4
7. அரிசித்திப்பிலி	„ 4
ஆக	பலம் 16

இவைகளை [illegible] இடித்து வஸ்திரகாயம்செய்து முடிந்தவுடன் இதுவரையில் சுத்திசெய்து வைத்திருக்கும் சித்ரமூலம் [illegible] பலம் 7 எடுத்து மேற்படி சூர்ணங்களுடன் சேர்த்து தயார்செய்திருக்கும் சுத்திசெய்து வைத்திருக்கும் 42-பலம் கந்தகத்தில் இவைகளெல்லாம் நன்றாய் சேர்த்து காற்றுப்போகாத [illegible] ஜாடியில் போட்டு வைக்கவேண்டும். இவ்விதமாய் தயார்செய்து வைத்துக்கொண்டு,

[illegible] பசுவின் நெய் ஒருபலம் சேர்த்து மேற்படி கந்தகக்கல்பத்தில் ரூபாயெடை ¼ (கால்) சேர்த்து 10-தினங்கள் வரையில் காலைமாலைகளில் சாப்பிடவேண்டும். 10-தினங்கள் சென்றபிறகு [illegible] செய்து [illegible],

10-தினங்கள் வரையில் காலைமாலைகளில் ரூபாயெடை ½ (அரை) முன்சொல்லிய பசுநெய்யுடன் சேர்த்து சாப்பிடவேண்டும்.

இவ்வாறு 20-தினங்களை சாப்பிட்டபிறகு மற்ற 20-தினங்கள் வரையில் காலைமாலைகளில் ரூபாயெடை ¾ (முக்கால்) சாப்

பிட்டு வரவேண்டும். ஸ்நானம்செய்யும்போது பத்யத்துடன் இருக்கவேண்டும். இவ்விதமாய் ஒரு மண்டலம் அடியில் சொல்லப்போகும் பத்யத்துடன் இருந்து சாப்பிடுவோராகில் எப்படிப்பட்ட வியாதிகளாயிருந்தபோதிலும் நீங்கி தேஹத்திற்கு ஆரோக்யம் உண்டாக்கும்.

இந்த கல்பம், சொறிசிரங்கு கட்டிகள் எல்லாவித படைகள் கண்டமாலை நீராத ரணங்கள் கைகால்வெடிப்பு கைகால் பிடிப்பு மூத்ரவியாதிகள் யோனிப்புற்று பகந்தரம் (லிங்ககுதங்களுக்கு மத்தியில) சந்தாங்களையுடைய ரணங்கள் மூலம் க்ஷயம் அமலபர்தம் (மலத்துடன் சீழ் வெண்ணிறமாய் கலந்து வருதல்) எண்பது வாயுக்கள் வாக்கைவலி குல்மவலி முதலிய வியாதிகளும் நீங்குவதேயன்றி மலச்சிக்கலில்லாமல் மிகவும் தாராளமாய் வரும். மூன்றுமண்டலம் சாப்பிட்டால் பதினெட்டு குஷ்டங்களும் நீங்கும். இது, சாப்பிடப்பட்டவர்களுக்குப் பத்யம்.

பருப்பு நெய் பசும்பால் பசுமோருடன் சாதம் சாப்பிடலாம். இதற்கு நெல்லிவற்றல் துவையல்மாத்ரம் உதவும். இதற்கு வேண்டிய உப்பு சேர்க்கலாம். அன்றியும் உப்புமா பூரி கோதுமைரொட்டி காபி டீ பால் பழமும் சாப்பிடலாம்.

* ஐயா! கந்தகம் முன்சொல்லியதுபோல் சுத்திசெய்து சாப்பிட உங்களுக்கு சக்தியில்லாவிட்டால் முன்சொல்லிய மூலிகைகளால் சுத்திசெய்து கணக்குப்போல் அதில் சேர்க்க வேண்டிய மூலிகைகள் நூதனமாய் மலையிலிருந்து கொண்டுவந்து சேர்த்து செய்த 'கந்தகக்கல்பம்' அடியிலகண்ட விலாசத்தில் விற்கப்படும். அதில் ஒருமண்டலம் அதாவது 40 தினங்களுக்கு வேண்டிய ஔஷதம் ரூபாவெடை 45-வேண்டும். மேற்படி 'கல்பம்' வரவழைத்து 10 தினங்கள்வரையில் காலைமாலையில் ரூபாவெடை ¼ காலும், பிறகு 10-தினங்கள் வரையில் ரூபாவெடை ½ அரையும் மற்ற 20-தினங்களுக்கு

ரூபாவெடை முக்கால் சாப்பிடவேண்டும். இது, காய்ச்சிய ஆழாக்கு பசும்பாலுடன் மேற்படி எடைபோல்சேர்த்து ஒருபலம் பசுவின் நெய்விட்டு கலந்து சூடாகவே இரண்டுவேளைகளிலும் ப்ரதிதினம் தவறாமல் சாப்பிட்டு வருவீர்களாகில் எல்லாவியாதிகளும் நிவாரணையாகும். அன்றியும் வியாதிகளில்லாத ஸ்த்ரீபுருஷர்களும் இதைச் சாப்பிட்டுவரலாம். சாப்பிட்டபிறகு உங்கள் தேஹ ஆரோக்யம் அநுபவத்தில் ப்ரத்யக்ஷமாய்க் காணலாம்.

வைத்யர்கள் அந்தந்த வியாதிகளுக்குத் தக்கபடி மேற்படி கந்தககல்பம் தங்கள் ஔஷதங்களுடன் ரூபாவெடை ½ (அரை) சேர்த்து கொடுப்பார்களாகில் எல்லா வியாதிகளும் உடனே நிவாரணமாகும். எந்த வியாதிகளும் இல்லாதவர்களும் மேற்படி கல்பம் சாப்பிடுவதானால் வாதபித்த ஸ்லேஷ்மங்களை ஸமமாய்வைத்து யோகாப்யாஸத்தை விருத்திசெய்வித்து வீர்யவ்ருத்தி உண்டாக்கும். இதன்றியும் நரம்புகளை இழுக்கத்தக்க ஸர்வ வியாதிகளும் நீங்கும். அன்றியும் அடியிற் சொல்லப்போகும் அநுபானத்துடன் சாப்பிடுவோர்களாகில் அந்தந்த வியாதிகள் நிவாரணமாகும். ×

அதாவது, அரைரூபா எடை கந்தககல்பத்தில் அரைரூபாவெடை அடியிற் சொல்லப்போகும் அநுபானத்துடன் சேர்த்து சாப்பிடவேண்டும்:—

அரைரூபாவெடை கந்தககல்பம் காலைமாலைகளில் பசும்பாலில்கலந்து சாப்பிட்டால் மலம்தாராளமாய்வரும். த்ரிபலசூர்ணம், அதாவது, கடுக்காய் நெல்லிக்காய் தான்றிக்காய் சதைகளை ஸமமாய்க்கிறுத்து இடித்து வஸ்த்ரகாயம்செய்து கந்தககல்பத்தில் அரைரூபா எடையுடன் த்ரிபலசூர்ணம் ½ அரைரூபா எடைகலந்துசாப்பிட்டால் நேத்ரரோகம் நீங்கும். பசுவின்நெய்யுடன்கலந்துசாப்பிட்டால் ரணங்கள் தீரும். மிளகுசூர்ணம், பசுவின்நெய்யுடன் சேர்த்துச் சாப்பிட்டாலும்சரி அல்லது இ

சிவிசூர்ணம் நெய்யுடன் கலந்து சாப்பிட்டாலும் சரி [illegible] நீங்கும். கண்டங்கத்திரிவிதை பொடிசெய்து நெய்யுடன்சேர்த்துச்சாப்பிட்டால் மேல் ம்பவாஸம் நீங்கும். திப்பிலிசூர்ணம் தேனுடன்கலந்துசாப்பிட்டால் தொண்டைகட்டுதல் நிவாரணமாகும். வெற்றிலைச்சாற்றுடன் கலந்துசாப்பிட்டால் மாரிப்நோய்தீரும். [illegible] சாப்பிட்டால் வாந்திபேதி நிவாரணமாகும். வெல்லத்துடன் சேர்த்துசாப்பிட்டால் வெள்ளைரோகம் நீங்கும். நெல்லிக்காய் சூர்ணத்துடன்சேர்த்து சாப்பிட்டால் அஜீர்ணம் நிவாரணமாகும். உளவெண்ணெயுடன்சேர்த்துச் சாப்பிட்டால் தேகத்திலுள்ள தடிப்புகள் நீங்கும். சுக்குபொடித்துடன் சேர்த்து சாப்பிட்டால் காலராபேதி நிவாரணமாகும். வேப்பம்பட்டை புஷ்பம் இலைகளை உலர்த்தி பஸ்மம்செய்து சேர்த்துச்சாப்பிட்டால் மலக்குடல் புண்களும் நீங்கும். ஆவாரம்பூ நெய்யுடன் சேர்த்துச்சாப்பிட்டால் வாதரோகமும் பசுவின்நெய்யுடன் சேர்த்துச்சாப்பிட்டால் பித்தரோகமும் சுக்குசூர்ணம் வெல்லத்துடன்சேர்த்துச் சாப்பிட்டால் கபரோகமும் இதுமுதலாய வியாதிகளை போக்கடிக்கும். 10-பலம் கந்தகாம்லத்தில், 5-பலம் [illegible] கண்ணிலவம்சேர்த்து அரைத்து சூரணம் செய்துவைத்துக்கொண்டு மேற்படி சூர்ணத்தில் பாகப்ரமாணம் கடுக்காய்ச்சூர்ணங்கலந்து, 6-மாதம் வரையில் இரண்டுவேளைகளிலும் சாப்பிட்டுவந்தால் தேஹத்தணம்நீங்கி [illegible] ப்ராக்ரமகுணமும் (பார்ண) பலமும் உண்டாகும்.

1-மண்டலம் ஔஷதம் விலை ரூபா 10—0—0.

வேண்டியவர்கள்—ஸ்காந்தன், டிப்போ, சென்னை.

இவ்விஷயத்திற்கு [illegible]

சிரங்குகளுக்கு கந்தகம் புடமுறை.

கந்தகம் கருஞ்சீரகம் ஸமபாகமாய் தேங்காய்எண்ணெயுடன் மைபோல் அரைத்து 4-தினங்கள் தேஹமெல்லாம் காலையில் பூசி பகலில் ஸ்நானஞ்செய்துவந்தால் சிரங்குகள் போம்.

[illegible]

நிவாரணமாக மூலிகைகள்.

ஒருபிடி [illegible] நெல்லிக்காயளவில் 20-மிளகுகளும், 5-உரித்தபூண்டுத் திரிகளும் வைத்து மெழுகுபோல அரைத்து மேற்கும் நெல்லிக்காய்ப்ரமாணம் காலைமாலைகள் மூன்று தினங்கள் கொடுத்தால் உடனே ஜ்வரம் நிவாரணமாகும்.

மற்றொருமுறை சொல்லுகிறேன். [illegible]— ஒருபிடி வேர்க்காய் இலையுடன் [illegible] உடன், 20-மிளகுகள் வைத்து மெழுகுபோல அரைத்து முன்போல் நெல்லிக்காய்ப்ரமாணம் சாப்பிட்டால் ஜ்வரம் [illegible] வேளைகளில் போக்கடிக்கும்.

[illegible] குடல்களில் கிருமி (புழு) சேர்ந்திருக்கும். அது வெளிப்படுத்த [illegible] உத்தமமானவை 60-துளி முதல் 100-துளிகள் வரையில் [illegible] வயிற்றிலுள்ள கிருமிகளெல்லாம் வெளிவரும். 30-துளிகளை [illegible] வெண்ணெயுடன் கலந்து சாப்பிட்டால் ஜ்வரமும் நிவாரணமாகும்.

[illegible]

மாதவிடாயான [illegible] உத்தமமான [illegible] நெய்விட்டு இடித்து [illegible] சாப்பிட்டால் [illegible]

என்புத்திக்கு தெரியவருகின்றது. ஆனால் ப்ராணாயாமம்செய்து வரும் புருஷர்களின் குடும்பவிஷயத்தில் அனேக ஆபத்துக்களையும் மிகவும் கஷ்டதசையையும் உண்டாக்கி புருஷனை அதோகதி செய்விக்குமென்றும் அவைகளுக்கெல்லாம் மனோதீரனாயிருந்து ப்ராணாயாமம் செய்துவரவேண்டுமென்றும் சொன்னீர்களல்லவா? அப்படிப்பட்ட ஆபத்துகளும் கஷ்டங்களும் உண்டாவதற்குக் காரணம்யாதோ? அதுவிஷயம் எனக்குத்தெரியச்சொல்லும் ஸ்வாமி!

நாயனே! நீ மிகவும் ஸூக்ஷ்மபுத்தியுடையவனாயிருப்பதானால் இப்படிப்பட்ட ரஹஸ்யமானகேள்வியை கேட்கவேண்டுமென்று உனக்குத் தோன்றியது.

இது, மிகவும் விசேஷமானகேள்விதான்? இதற்குக்காரணம் சொல்லுகின்றேன் கேள்.

B. A, க்ளாஸில் ஒருவன் ரெண்டுமூன்றுவருஷம் இராப்பகலாய் வாசித்து பரீக்ஷைக்குச்சென்று உபாத்யாயர்களால் கொடுக்கும் பரீக்ஷைக்குறித்த கேள்விகளுக்கெல்லாம் சரியானபதில் எழுதிவிட்டால், அப்போ பாஸ். இவன் அதிக கஷ்டப்பட்டு வாசிக்கவனாயிருக்கின்றானென்று B. L, க்ளாஸ் போக ஸர்டிபிகேட்டு உபாத்யாயர்கள் கொடுக்கின்றார்கள். கஷ்டப்பட்டுவாசித்து, B. A, பாஸ் செய்தபடியால், கவர்ன்மெண்டோஷித்து அவனுக்குத் தன்னையால் B. A, கவுன்கொடுக்கின்றார். பரீக்ஷையில் தப்பிவிட்டவனுக்கு அப்படிசெய்யாமல் அவனை, மறுவருஷமும் வாசிக்கும்படிசொல்லி பரீக்ஷையில் தேறும்படி உபாத்யாயர்கள் கற்றுக்கொடுப்பார்கள். அதுபோலவே, நாம் நமது சரீரத்திலிருக்கும் B. A, போன்ற ஜீவாத்மாவை, B. L, போன்ற பரமாத்மா க்ளாஸில் சேர்க்க ப்ரயத்னப்பட்டு ப்ராணாயாமமென்னும் வித்யையை 'குரு' என்னும் உபாத்யாயரால் போதித்து அப்யாஸம்செய்து வரும்போது முன் B. A, க்ளாஸில் உபாத்யாயர்கள் பரீக்ஷித்தது போல பகவான் ப்ராணாயாமம்செய்துவரும் புருஷனை பரீக்ஷிப்

பதற்காக அனேகவிக்னங்களும் ஆபத்துகளும் கஷ்டங்களும் உண்டாக்கி இவனைபரீக்ஷிக்கின்றார். அப்படிப்பட்ட கஷ்டங்களுக்கெல்லாம் சளிக்காமல் மனோதீரனாயிருந்து கஷ்டப்பட்டு ப்ராணாயாமம்செய்து பாஸ் செய்துவிட்டால் 'கவர்னர்' ஸந்தோஷித்து B. A, கவுன்கொடுத்ததுபோல 'பகவானுக்கு' அனுக்ரஹம் உண்டாய் மறுபடியும் ஏதுவிக்னங்களும் உண்டாக்காமல் யோகஸித்தி அடையும்படிசெய்வித்து தன்னில் ஐக்யம்செய்து கொள்வார். இந்த ரஹஸ்யம் பாமரஜனங்கள் அறியாமல், இராப்பகலாய் கஷ்டப்பட்டு ப்ராணாயாமம்செய்து மோக்ஷமடைவதற்குப்பதிலாய், தமக்குலக்ஷக்கணக்காய் இருக்கப்பட்ட ஆஸ்திகள்போதாதென்று எண்ணி இராப்பகலாய் மேஜைகாரர்களின்மீதும் குதிரைவண்டிகளின்மீதும் ஏறிப்பறந்து அலைந்து திரிந்துதிரிந்து இன்னும் அதிகமாய் த்ரவ்யத்தைச் ஸம்பாதித்துக்கொண்டே வாழ்வு ஓர்நாளில் ஆகஸ்மாத்தாய் இருந்தாப்போலிருந்து ஜீவர்கள் இந்த சரீரத்திலிருந்துகிளம்பி வேறோர் சரீரத்தில் போய்ப்புகுந்து மறுபடியும் அந்தஜன்மத்திலும் அவ்வாறேசெய்துகொண்டு வருவார்கள். இதற்குக்காரணம் அவர்களின் பூர்வஜன்ம கர்மங்களேயாம். நாம் ஜீவித்திருப்பது தீர்க்கஸ்வப்னம் போன்றதாயிருக்கின்றது. அதாவது 80 - வருஷங்கள்ஜீவித்து மரணமடைவதே தீர்க்கஸ்வப்னமென்று நினைக்கவேண்டும். ஆகையால், இப்போது உன்னிடமிருக்கும் பதினாயிரம்ரூபாய்கள் உன்குடும்ப ஸம்ரக்ஷணைக்குப் போதுமானதாயிருக்கிறது. இதைவரியாய் வைத்துக் காப்பாற்றிக்கொண்டு வருவாயாகில் உன்புத்ர பௌத்ராதிகள் தலைமுறைதலைமுறையாய் ஸுகஜீவிகளாய் ஜீவித்துவரலாம். நீ இனி த்ரவ்யம் அதிகமாய் சேகரிக்க ப்ரயத்னப்படாமல் உன்வியாபாரத்தை எல்லாம் இதுவரையில் நிறுத்தி உன் ப்ராணப்ரயாணகாலத்திற்கு வேண்டியபொருள் இந்நூலில் சொல்லியிருக்கின்றது. இதைப்பெற்றுக்கொண்டு ஸம்பாதித்து ஸம்ஸாரபந்தத்திலிருந்து நீங்கி மோக்ஷமென்னும் பதவியை அடையக்கடவாய்.

ப்ராணயாமாப்யாஸத்தினால் ப்ராணன் ஶரீரத்திலிருந்து விடுபடுதல்.

ஶ்லோ || "ரேசகோச்வாஸ நிச்வாஸ: பூரக பரிசக்ஷதே
தத்ரோத்ர கும்பகஸ்சைவ ப்ராணயாமஸ்ய உச்யதே

"உருத்தரித்த நாடியில் ஓடுகின்ற வாயுவை
கருத்தினால் இருத்தியே கபாலமேற்ற வல்லிரேல்
விருத்தருமே பாலராவர் மேனியுஞ் சிவந்திடும்
அருட்டரித்த நாதர்பாதம் அம்மைபாதம் உண்மையே.

ஓடி ஓடி ஓடி ஓடி உட்கலந்த சோதியை
நாடி நாடி நாடி நாடி நாட்களும் கழிந்துபோய்
வாடி வாடி வாடி வாடி மாண்டுபோன மானிடர்
தேடி தேடி தேடி தேடி எண்ணிறந்த கோடியே.

காணவேணும் என்றநீர் கடல்மலைகள் ஏறுவீர்
ஆணவமதல்லவோ அறிவில்லாத மூடரே
வேணுமென்ற ஈசர்பாதம் மெய்யுளே விளங்கினால்
காணலாகும் நாதனைக் கடந்துநின்ற ஜோதியே.

புத்தகங்களைச் சுமந்து பொய்களைப் பிதற்றுவீர்
செத்திடம் பிறந்திடம் தெங்கனென்று அறிகிலீர்
அத்தனைய சித்தனை யறிந்துநோக்க வல்லிரேல்
உத்தமத்து நாயஜோதி புணரும்யோக மாகுமே.

நாலுவேத மோதுவீர் ஞானமொன்று சொல்லுவீர்
பாலினூடு நெய்கலந்த பான்மையை யறிகிலீர்
ஆலகண்ட கண்டனுமக் கத்துளே யிருக்கையில்
காலனென்று சொல்லுவீர் கனவிலுமக் கில்லையே."

"சாற்றடா என்மகனே மாணாக்கனே
ஸத்தியமா யோகமென்ற தனையைச்சொல்வேன்
ஏற்றடா பின்சொல்லும் மௌனம்பூட்டி
இன்பமுடன் பேரொளிவு மெண்ணிக்காணும்

சாற்றடா சித்தமூர்த்தான் ஒன்னைரவீசம்
வளமான பிராணயாமம் வசமாய்க்கூட்டு
போற்றடா பதினெட்டு மாதமட்டும்
புத்திரனே பிராணயாமம் பொருந்தக்கூட்டே.

நாட்டமுடன் கும்பகபூ ரகத்தினோடே
நலமான ரேசகமு மூன்றுமொன்றாய்
வாட்டமுட னொன்றாகக் கலையைவாங்கி
வலுவாகும் மேல்நோக்கி யமுதமுண்ணு
நாட்டமுடன் சதகோடி ரவியுந்தோணும்
நமர்திறக்கும் வாசலங்கே நயவாய்த்தோணும்
பூட்டமுடன் பூரகத்தி லேறினக்கால்
புத்திரனே பொல்லாப்பு போகுந்தானே.

கடத்துவா யோகமுந்தான் தாண்டித்தானால்
நலமான கும்பகத்தில் நாடிச்செல்லு
அடத்துவா யோங்காரத் துன்னொடுங்கி
ஆதிலஸ்து வுண்டென்றும் அறிவித்தங்கி
முடத்துவாய் மூன்னணியாய்ப் பூசைசெய்து
மூதண்ட பிரமனையு மோதித்தாக்கிக்
கடத்துவாய் கரிமாலைக் கருவாய்க்கொண்டு
கருவிகளைச் சேர்த்துகடத் தேறுவாயே.

ஏறுவாய் இப்படியே ஆனபின்பு
என்மகனே அங்குஷ்ட மாகிப்போவாய்
தேறுவாய் கற்பூரச் சுடர்போலிருப்பாய்
தேவியுந்தா னுனைமுந் தொண்டுசெய்வாள்
நேருவாய் பாக்கியமு முனக்குக் கிட்டும்
கோரண ஸவிமதியு மாண்டுபோகும்
பாருபார் பராபரனு மீயுமாவாய்
பழுதில்லாச் சித்தனென்று பகரலாமே.

நீஞ்சலர் மினைவிட்டாற் கற்பமில்லை
சித்தமூர்த்தா னிம்மூலவ் சொன்னவேணும்
பாஞ்சலாந் சிகாரமுடன் மகாரம்ரெண்டும்
பத்தியுடன் அனுவளவு விட்டிடாதே

வாஞ்சலாம் பதின்மூன்று வருடங்சொன்னு
　வாசியென்ற மயில்மீதி லணைந்ததில்லு
ஆஞ்சலா மைவருந்தான் பட்டுப்போவார்
　ஆன்மாவைக் காணவா மறிந்துபாரே.

பாரப்பா அப்படியே உண்டேன்யானும்
　பலவிதயோ சனைகளெல்லாம் பாழாய்ப்போச்சு
ஆரப்பா மூம்மூல மந்த்ரங்கொண்டேன்
　ஆதிவஸ்துவை யனுதினமும் பணிந்துகொண்டேன்
சேரப்பா யோகத்தி னிலையைக்கண்டேன்
　நிச்சயத்தைப் பக்தியுடன் நிலைத்துக்கொண்டேன்
காரப்பா கருவிகளும் பட்டுப்போச்சு
　ஸச்சிதாநந்தனென்ற வக்கனுக்குப் பெருமாச்சே.

ஆச்சப்பா ஆறுதல மையூர்க்குள்ளே
　அறிவான ஆத்மாவை யறிந்துகொண்டேன்
எச்சப்பா யிடைகலையில் கலையிரண்டும்
　இயல்பாக வாசியினி லிழுத்துக்கொண்டேன்
வாச்சப்பா வாசிக்கா லுங்கொண்டேன்
　மாருத லிஞ்சிவி வாழும்கொண்டேன்
மூச்சப்பா மூக்கண்ணை யமுக்கிப்பார்த்து
　முன்னணியாய் நாலுமினிக் கண்டிட்டேனே.

மாட்டினேன் கும்பகத்தில் மதிக்கச்சொன்னேன்
　மார்கும லமுதமதை யுண்ணச்சொன்னேன்
பூட்டினேன் புருவமையத் தமர்திறந்து
　பொல்லாத கருவிகளைப் போக்கச்சொன்னேன்
ஆட்டினேன் அண்டாண்ட வெளியிற்குள்ளே
　அரும்பொருளா யநுதினமும் வாழச்சொன்னேன்
காட்டினேன் கருவையெல்லாம் திறந்துமைந்தா
　கபடற்ற பூரகத்தைக் கண்டுகொண்டேன்

உஸ்வாஸ நிஸ்வாஸௌ - ப்ராணவாயுவை வெளியில் விடுவதும் உள்ளுக்கிழுப்பதும், ரேசகஃ - ரேசகமென்றும், பூரகஃ - பூரகமென்றும், பரிசக்ஷதே - சொல்லப்படுகின்றது, தத்ரோதஃ - அந்த ப்ராணவாயுவை உள்ளுக்கும் வெளிக்கும் போகவிடா

மல் நிறுத்துவது, கும்பகஃ - கும்பகமென்றும், பரிசக்ஷதே - சொல்லப்படுகின்றது, ஸஃ - அது, ப்ராணயாமஃ - ப்ராணயாமமென்று, உச்யதே - சொல்லப்படுகின்றது.

தாத்பர்யம்:—ப்ராணவாயுவை வெளியில் விடுவது ரேசகமென்றும் உள்ளுக்கிழுப்பது பூரகமென்றும் சொல்லப்படுகின்றது. அந்த ப்ராணவாயுவை உள்ளுக்கிழுத்து வெளியில் போகவிடாமல் நிறுத்துவது கும்பகமென்று சொல்லப்படுகின்றது. என்றால், ப்ராணனை அடக்கி ஆளுவதே ப்ராணயாமமென்பார். இம்மூன்றையும் விவரித்துச் சொல்லுகின்றோம்; கேளுங்கள்,

ரேசகமென்பது:— காயத்திலிருக்கும் ஶ்வாஸத்தை நாஸிகா ரந்த்ரங்களின் வழியாய் வெளியில் விடுவது. இது உஶ்வாஸமென்று சொல்லப்படும்.

பூரகமென்பது:—வெளியிலுள்ள ப்ராணவாயுவை, நாஸிகா ரந்த்ரங்களின் வழியாய் ஶ்வாஸத்தை உள்ளுக்கிழுப்பது. இது நிஶ்வாஸமென்று சொல்லப்படும்.

கும்பகமென்பது:—உள்ளுக்கிழுத்த ஶ்வாஸத்தை வெளியில் போகவிடாமல் காயத்தில்நிறுத்துவது. (இதன் விவரங்களை, ஸ்ரீக்ருஷ்ணார்ஜுந ஸம்வாதரூபமாய்எழுதிய ஸ்ரீபகவத்கீதை அத்யாயம் - 4, ஶ் - 29-29½, அத்யாயம் - 6, ஶ் - 44, பார்க்க.)

இது குருவினால் தெரிந்துகொண்டு அப்யாஸம் செய்துவரவேண்டும். ஆதலால், இந்தப்ராணயாமாப்யாஸம் செய்துகொண்டுவரவேண்டுமென்று கோரப்பட்ட புருஷர்கள் இதையே குருவாக்காயெண்ணி இதில்சொல்லியிருப்பதுபோல் யாரொருவர் அப்யாஸம்செய்துகொண்டுவருகின்றார்களோ அவர்கள் யோகஸித்தியை அடைவார்களென்று அறிவீர்களாக.

அன்பர்களே! மனம் லயப்படுவதற்காக, ஏகாந்தமான ஸ்தலத்தில் காற்றுச்செல்லாத ஓர்பரிபூர்ணத்தமான இருட்டு

அறையில் பரிமள சுகந்தவாஸனைகளை வைத்து நிருபம்செய்ய வேண்டும், பிறகு, எறும்பு மூட்டைப்பூச்சி முதலானவைகளின் பாதையில்லாமலிருப்பதற்காக மிகவும் உயரமாயும் தாழ்வாயும் இல்லாமல் இரண்டங்குல உயரமுள்ள ஓர் பெரிய மணையை அமைத்து மனம் சலனமில்லாமல் நிஸ்சலனமாய் நின்று யோகாப்யாஸம் செய்வதற்காக அந்தமணையின்மீது தர்ப்பாஸனமும் அதன்மீது மான்தோலும்போட்டு ப்ராணாயாமம் செய்யும்போது ஸ்வாஸத்தை நாஸிகாரந்த்ரங்களின் வழியாய் குரு உபதேசித்தபோல இழுத்து அதை வெளியில்விடாமல் நிறுத்தியபோது அப்யாஸ முதிர்ச்சியினால் குடலில் நிறுத்திய வாயு வெளியில் வாராதபடி கண்டத்தை மூடிவிடுவதால் குதத்தின் வழியாய் அது அபானவாயுவாய்ப் போகும்.

அந்த அபானவாயு மேற்சொல்லிய மான்தோல்மீது படாமலிருப்பதற்காக அதின்மீது வெள்ளைவஸ்த்ரம் விரித்துப் போட்டு * பத்மாஸனத்திலாவது † சித்தாஸனத்திலாவது உட்கார்ந்து இனிமேல் சொல்லப்புகும் யோகத்தை அப்யாஸம் செய்துவரவேண்டும்.

யோகாப்யாஸம் நாளுக்குநாள் வ்ருத்தியாகி வருவதால் உள்ளே நிறுத்தியிருக்கும் வாயு குடலில் ப்ரவேசிக்கும். குடலில் ப்ரவேசித்த வாயுவானது சும்மா இராமல் மேலுக்கும்

---

* பத்மாஸனமென்றால் வலது பாதத்தை இடது தொடையின் மீதும் இடது பாதத்தை வலது தொடையின்மீதும் வைத்து இரண்டு பாதங்களும் ஆகாசத்தைப்பார்க்கும்படி வைப்பது பத்மாஸனமென்று சொல்லப்படும்.

† சித்தாஸனமென்றால் இடதுபாதத்தை வலது தொடையின்மேல் வைத்து, வலதுபாதத்தை இடதுதொடைக்கும் முழங்கால் கணுக்கால் இரண்டிற்கும் மத்தியில்வைத்து, கழுத்து ஸிரஸ் மார்பு ஸமமாய் நிறுத்தி இடுப்பு உள்வளையாமல் ஸ்தம்பம்போல் நிறுத்தி சின்முத்திரையுடன், 'நிஷ்டை' யில் இருப்பது. இந்த சின்முத்திரையின் விவரம் இனிமேல் சொல்லப்போகின்றோம்.



Selden & Co., Madras.

கிழக்கும் ஏறிக்கொண்டும் இறங்கிக்கொண்டும் மலமூத்ரங்களை வெளியில் தள்ளச்செய்யும். ஆதலால், மலமூத்ரங்களை விஸர்ஜித்தபிறகு ப்ராணாயாமம்செய்ய ஆரம்பிக்கவேண்டும்.

எதிரில் 'ஶிரஸ்ஸினுடைய படம்' காட்டியிருக்கின்றது. அந்தப்படத்தில் காட்டியிருக்கும் காற்றுப்பை வழியாய்ச்சென்று நுரையீரலில் (Lungs ல்) தங்கியிருக்கும் ஶ்வாஸத்தையெல்லாம் வெளியில் விட்டுவிடவேண்டும். இப்படி விட்டுவிடுவதே 'ரேசக' மென்று சொல்லப்படும். இவ்விதமாய் ஶ்வாஸம் வெளியில் விட்டவுடன், அதன் தொடர்ச்சியாகவே ஶ்வாஸத்தை, இனிமேல் சொல்லப்போகும் 'ஓம்' என்னும் ப்ரணவ மந்த்ரத்துடன் உள்ளுக்கிழுத்து கர்ப்பத்தில் நிறுத்துவதுதான், ஸரியான 'காயத்ரீ' ஜபமேயொழிய வலதுகைப் பெருவிரல் மோதிர விரல்களை வலது இடது நாஸிகளின்மீது வைத்து,

ஓம் பூ:, ஓம் புவ:, ஓம் ஸுவ:, ஓம் மஹ:, ஓம் ஜந:, ஓம் தப: ஓம் ஸத்யம், தத்ஸவிதுர்வரேண்யம், பர்கோதேவஸ்யதீமஹி, தியோ யோந: ப்ரசோதயாத், ஓம் ஆபோஜ்யோதி ரஸோம்ருதம் ப்ரஹ்ம பூர்புவஸ்ஸுவரோம்.

என்னும் 'காயத்ரீ' மந்த்ரத்தை கர்மவாக்கினால் சொல்லி, உச்ச்வாஸ நிஶ்வாஸங்களை விட்டுக்கொண்டு இடதுகை விரல்களை மடிப்பது காயத்ரியாகமாட்டா. இந்த 'காயத்ரீ' ப்ராணாயாமம் செய்யும்போது சொல்லவேண்டிய மந்த்ரம்.

சிறுபிள்ளைகளுக்கு எட்டாவது வயதில் உபநயனம் செய்யும்போது ப்ராணாயாமம்செய்யும் மார்க்கத்தை உபதேஶம்செய்ய மாட்டார்கள். ஏனென்றால், ப்ராணாயாமம்செய்ய தமக்கே ஶக்தியில்லாமலிருக்கின்றார்கள். ஆதலால், ஶ்வாஸத்தை நிறுத்தின பாவனையாய் சிறுவர்களின் மூக்கின்மீது மோதிரவிரல் பெருவிரல்களை எவ்விதமாய்வைக்கவேண்டுமோ அவ்விதமாய் வைத்துக் காட்டிக்கொடுத்து முன்சொல்லிய 'காயத்ரீ' மந்

தரத்தைச் சொல்லும்படி கற்றுக்கொடுப்பார்கள். அதுபோலவே சிறுவர்கள் எட்டுவயது முதல் எண்பது வயதுவரையில் அதையே ஜபித்துவந்து ப்ராணாயாமத்தின் அந்தரார்த்தம் தெரிந்துகொள்ளாமல் மரணமடைகின்றார்கள். அதன் ரஹஸ்யத்தை இதனடியில் சொல்லுகின்றோம் கேளுங்கள்:—

நாயனே! நூதனமாய் யோகாப்யாஸம் செய்யப்பட்டவர்கள் பத்மாஸனத்தில் உட்காருவது மிகவும் கஷ்டம். ஆதலால், முன்சொல்லியதுபோல் சித்தாஸனத்தில் உட்கார்ந்து கண்களை மூடி வலதுகைப் பெருவிரல் மோதிரவிரல் இவைகளை வலது இடது நாசிகளின்மீது வைத்து இடது நாசியை மூடி வலது நாசியைத்திறந்து, நுரையீரலில் தங்கியிருக்கும் ஸ்வாஸத்தையெல்லாம் வெளியில் விட்டுவிட்டு அதன் தொடர்ச்சியாகவே ஸ்வாஸத்தை வலது நாசியில் இழுக்கவேண்டும். இழுக்கும்போது மேற்சொல்லிய 'காயத்ரி' யிலிருக்கும், ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்! என்னும் ப்ரணவத்தைமாத்ரம் எடுத்துக்கொண்டு அஜபாவாய். (மனவினாலேயே) ஸ்வாஸத்துடன் சேர்த்து நுரையீரலில் எவ்வளவு ஸ்வாஸம் கொள்ளுகின்றதோ அவ்வளவு ஸ்வாஸத்தை இழுத்து விழுங்கி மறுபடியும் இன்னும் ஸ்வாஸம் உட்கொள்ளுகின்றதாவென்று பார்ப்பதற்காக ஸ்வாஸத்தை இழுத்துப் பார்க்கவேண்டும்; அச்சமயம் அரை, ஒன்று, இரண்டு, மூன்றங்குல நீளம்வரையில் ஸ்வாஸம் உள்ளுக்குச்செல்லும்; அப்படிச்சென்ற ஸ்வாஸத்தையும் மறுபடியும் விழுங்கவேண்டும். இதுவே "பூரக" மென்று சொல்லப்படும். இவ்விதமாய் இழுத்து விழுங்கியபின் ஸ்வாஸம் வெளியில் செல்லாமலிருப்பதற்காக 201-வது, பக்கம் காட்டியிருக்கும் 'மிரஸ்—னுடைய படத்தில் ☞ No. 1 என்று குறித்திருக்கும் இடத்தில் கண்டத்தை மூடவேண்டும். மூடினவுடன் இரண்டு கைகளையும் இரண்டு தொடைகளின்மீது வைத்துக்கொண்டு வலதுகை ஐந்து விரல்களையும் விடவேண்டும். விடும்போது, ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்! என்று மனவி

னால் உச்சரித்துக்கொண்டு விடவேண்டும். இவ்விதமாய் ப்ரணவத்தை உச்சரித்துக்கொண்டு வலதுகை ஐந்துவிரல்களையும் விட்டபின், இடதுகை சுண்டுவிரலை மடக்கவேண்டும். இவ்வகையில் இடதுகை ஐந்துவிரல்களையும் மடக்கினால் இது கணக்கில் $5 \times 5 = 25$ ப்ரணவங்களாகும். 25 ஆனவுடன் (கண்கள் மூடியிருப்பதனால் சிலருக்கு இருளாகவும் சிலருக்கு வெளிச்சமாகவும் தோன்றும். அந்த வெளிச்சத்தில்) 1 என்று பெரிய லக்கமாய் மனவினாலேயே புருவமத்தியில் நிறுத்தி, அதன்மீது த்ருஷ்டிவைத்து மறுபடியும் முன்போலவே, 25 ஆனவுடன் புருவமத்தியில் முன்னிருந்த 1 என்னும் லக்கத்தை மனவினாலேயே எடுத்துவிட்டு, 2 என்று லக்கத்தை மாற்றவேண்டும். அப்போது அது 50 எண்ணும்வரையில் ஸ்வாஸத்தை நிறுத்தினதாகின்றது. இப்படி நிறுத்துவதே 'கும்பக' மென்று சொல்லப்படும். நூதனமாய் ப்ராணாயாமம் செய்யப்பழகும் புருஷர்களாகிலும் ஸ்த்ரீகளாகிலும் 50 எண்ணிக்கைவரையில் மாத்ரம் ஸ்வாஸத்தை நிறுத்தவேண்டும். இதற்குமேல் ஸ்வாஸத்தை நிறுத்துவது மிகவும் கஷ்டமாயிருக்கும். 50 எண்ணிக்கையானவுடன் உள்ளே நிறுத்தியிருக்கும் ஸ்வாஸத்தை வெளியில் விடவேண்டும். அது எவ்விதமாய் விடவேண்டுமென்றால், வலதுகைப் பெருவிரல் மோதிரவிரல்களை வலது இடது நாசிகளின்மீது வைத்து வலது நாசியைமூடி, கவடைப்பற்களைக் கெட்டியாய் இறுக்கிக்கொண்டு இடதுநாசியின் வழியாய், 4 அங்குலம் ஸ்வாஸத்தை 'ஓம்' என்னும் மந்த்ரத்துடன் வெளியில்விட்டு மறுபடியும் அந்த 4-அங்குலம் ஸ்வாஸத்தை அதேநாசியில் 'ஓம்' என்னும் மந்த்ரத்துடன் உள்ளுக்கிழுத்து இடது நாசியை மூடி வலது நாசியைத்திறந்து முன்போல் நாலங்குலம் ஸ்வாஸம் 'ஓம்' என்னும் மந்த்ரத்துடன் வெளியில்விட்டு அதே நாசியில் 'ஓம்' என்னும் மந்த்ரத்துடன் உள்ளுக்கிழுத்து இவ்விதமாய் ஸ்வாஸத்தின் வேகம் அடங்கும்வரையில் நாசிகை

கனை விரல்களால் மாற்றிமாற்றி ஐந்து நிமிஷங்கள் வரையில் நிதானமாய்விட்டு காலிலைகளின்மீதிருக்கும் கை எடுத்துவிட்டு அந்தாலத்துல ஸ்வாஸத்தைமாத்ரம் உள்வாங்கி ஸ்வாஸங்களைவிட்டுக்கொண்டு மற்ற ஸ்வாஸத்தையெல்லாம் கர்ப்பத்தில் நிறுத்திவைக்கவேண்டும். இவ்விதமாய் அப்யாஸம் செய்யும்போது ஸ்வாஸம், ஸர்ப்பம்போல் சீறிக்கொண்டு "புஸ்" "புஸ்" என்று அதிவேகமாய் வெளியில்வரும். அப்படி சீறிக்கொண்டுவரும் ஸ்வாஸத்தை அதிவேகமாய் விடாமல் அடக்கி முன்சொல்லியதுபோல் 'ஓம்' என்னும் மந்த்ரத்துடன், 4-அங்குலம் வெளியும், 4-அங்குலம் உள்ளுமாய் ஸ்வாஸத்தை விட்டுக்கொண்டு சிந்முத்ரையுடன் ☞ எதிரிலிருக்கும் படத்தில் காட்டியதுபோல் உட்கார்ந்து ஸ்ரமம் தீருமட்டாக, 5 நிமிஷங்கள் வரையில் † நிஷ்டையில் இருக்கவேண்டும். இது முதல் ப்ராணாயாமம்செய்து முடிந்ததாகும். இந்த சிந்முத்ரையின் விபரம் எதிரிலிருக்கும் படத்தில் காண்க.

சித்தைப் பிறக்கச் செய்தசெல்வன் முத்திரை
செம்பொற் சொரிக்காப் படைச்செல்வன் முத்திரை
பத்தத் திருத்திர மாமெல்லன் முத்திரை
பரவின் மேற் கல்லாற் கண்சொன்ன முத்திரை. (க)

தெள்ளி வித்தைக் கொடாதெய்வன் முத்திரை
வெண்ணிலா சென்னைக் கைத்திட்ட முத்திரை
பண்ணி பழிக்கப் படாதெய்வன் முத்திரை
பார்ப்பறப் பார்க்கும் பரஞான முத்திரை. (உ)

வெண்ணிலாவிற் கோலைப் படாதெய்வன் முத்திரை
வேதமா நாவின் விளங்கின்ற முத்திரை

† நிஷ்டை என்றால் எவ்வித ஸங்கல்பங்களும் அற்ற ஸவிகல்பமும், பஞ்சாக்ஷர அஷ்டாக்ஷர முதலிய மந்த்ர தந்த்ர ஜபங்களும் இல்லாமல் சும்மாயிருப்பதே நிஷ்டையென்று சொல்லப்படும். இதை மௌனமென்றும் பெரியோர்கள் சொல்லுவார்கள்.

பெண்ணுணலாத பெருமான் றன்முத்திரை
பேசற் கரிய பெரியோன்றன் முத்திரை. (ஙு)

குன்றாத மூவுருவாய் அருவாய் ஞானக்
கொழுந்தாகி யறுசமயக் கூத்து மாடி
நின்றுயே மாயையெனும் திரையை நீக்கி
நின்னையா ரறியவல்லார் நினைப்போர் நெஞ்சம்
மன்றாக வின்பக்கூத் தாட வல்ல
மணியேயென் கண்ணே மாமருந்தே நால்வர்க்
கன்றாலின் கீழிருந்து மோனஞான
மமைத்த 'சிந்முத்ரை'க் கடலே யமரரேறே.

O Thou Imperishable Triple Form, and Formless! O Thou [Supreme,
Intelligence Working Steadfast in the six forms of Religion!
Who could know Thee after raising the curtain of **Maya**?
Thou dost dance in the hearts of Those who think of Thee,
Thou art the Priceless Jewel; Thou my eye;
Thou, the Supreme Panacea;
Thou the Ocean of **Chinmudra** Wisdom,
Who didst teach the four ancient sons,
Mauna Jnana from under the Sacred Banyan Tree
Thou, the Deva of Devas.

இவ்வாறு சிந்முத்ரையுடன் நிஷ்டையிலிருந்து முதல் ப்ராணாயாமம்செய்து முடிந்தபின், நுரையீரலில் முன்தங்கியிருக்கும் ஸ்வாஸத்தை எல்லாம் மறுபடியும் இடதுநாஸியின் வழியாய் முதல்ப்ராணாயாமத்தில் விட்டுவிட்டதுபோல் விட்டுவிட்டு, அதன்தொடர்ச்சியாகவே முன்சொல்லிய 'காயத்ரி'யில் இருக்கும், ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்! என்னும் ப்ரணவத்தைமாத்ரம் எடுத்துக்கொண்டு, அஜபாவாய் (மனதினாலேயே) ஸ்வாஸத்துடன் சேர்த்து, நுரையீரலில் எவ்வளவு ஸ்வாஸம் கொள்ளுமென்றதோ அவ்வளவு ஸ்வாஸத்தை உள்ளுக்கிழுத்து, மறுபடியும் இன்னும் ஸ்வாஸம்

உட்கொள்ளுகின்றதாவென்று பார்ப்பதற்காக ஸ்வாஸத்தை இழுத்துப்பார்க்கவேண்டும். அச்சமயம் முன்போல அரை, ஒன்று, இரண்டு, மூன்று அங்குலநீளம்வரையில் ஸ்வாஸம் உள்ளுக்குச்செல்லும்; அப்போது அதையும் விழுங்க வேண்டும். விழுங்கியபின் ஸ்வாஸம் வெளியில் செல்லாமலிருப்பதற்காக, 201-வது பக்கம் ஸ்ரீஸனுடைய படத்தில் No. 1 என்று காட்டியிருக்கும் இடத்தில் கண்டத்தைமூடி, இரண்டுகைகளையும் இரண்டு தொடைகளின்மீது வைத்துக்கொண்டு வலதுகை ஐந்துவிரல்களையும்விடவேண்டும். விடும்போது, ஒவ்வொருவிரலையும், ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்! என்று மனவினால் உச்சரித்துக்கொண்டே விடவேண்டும். இவ்விதமாய் ப்ரணவத்தை உச்சரித்துக்கொண்டு ஐந்துவிரல்களையும் விட்டபின், இடதுகைசுண்டுவிரலை மடக்கவேண்டும். இவ்வகையில் இடதுகை ஐந்துவிரல்களையும் மடக்கினால் இது, கணக்கில் 5×5=25, ப்ரணவங்களாகும். 25 ஆனவுடன் (கண்களைமூடியிருப்பதனால் சிலருக்கு இருளாகவும் மற்றும்சிலருக்கு வெளிச்சமாகவும் தோன்றும். அந்தவெளிச்சத்தில்) 1 என்று பெரிய லக்கமாய் மனவினாலேயே புருவமத்தியில் நிறுத்தி அதன்மீது த்ருஷ்டியைவைத்து மறுபடியும் முன்போலவே 25, ஆனவுடன் முன்னிருந்த 1 என்னும்லக்கத்தை மனவினாலேயே எடுத்துவிட்டு, 2 என்று லக்கத்தை மாற்றவேண்டும். இது கணக்கில், 50 என்னும்வரையில் ஸ்வாஸத்தை நிறுத்தினதாகின்றது. 50 எண்ணிக்கையானவுடன் உள்ளேநிறுத்தியிருக்கும் ஸ்வாஸத்தை வெளியில்விடவேண்டும். அது எவ்விதமாய் விடவேண்டுமென்றால், வலதுகைநடுவிரலால், இடதுநாஸியைமூடித் தவடைப்பற்களைக் கெட்டியாய் இருக்கிக்கொண்டு வலதுநாஸியின் வழியாய் ஸ்வாஸத்தை விடவேண்டும். விடும்போது 'புஸ்' 'புஸ்' என்று ஸர்ப்பம்போல் சீறிக்கொண்டு அதிவேகமாய் வெளியில்வரும். அப்படிசீறிக்கொண்டுவரும் ஸ்வாஸத்தையெல்லாம்விடாமல் அடக்கி, 4-

அங்குலம் நீளம்வரையில் ஓம் என்னும் ப்ரணவத்துடன் வெளியில்விட்டு மறுபடியும் அந்த 4-அங்குலம் ஸ்வாஸத்தை ப்ரணவத்துடன் உள்ளுக்கிழுத்து வலதுநாஸியைமூடி, மறுபடியும் இடதுநாஸியைத்திறந்து மேற்சொல்லியதுபோல், 4-அங்குலம்நீளம்வரையில் ஸ்வாஸத்தை வெளியில்விட்டு மறுபடியும் அந்த 4-அங்குலஸ்வாஸத்தையே உள்ளுக்கிழுத்து இடதுநாஸியைமூடி வலதுநாஸியைத்திறந்து மேற்சொல்லியதுபோல் 4-அங்குலம்ஸ்வாஸத்தை வெளியில்விட்டு மறுபடியும், 4-அங்குலஸ்வாஸத்தையே உள்ளுக்கிழுத்து இவ்விதமாய் ஸ்வாஸத்தின்வேகம் அடங்கும்வரையில் தராசைப்போல, ஸமமாய் சுமார் ஐந்துநிமிஷங்கள்வரையில் ப்ரணவத்தை உச்சரித்துக்கொண்டே நிதானமாய்விட்டுக்கொண்டிருந்து ஸ்வாஸத்தின்வேகம் அடங்கினபிறகு, கையெடுத்துவிட்டு சின்முத்திரையுடன், 5-நிமிஷங்கள்வரையில் முன்சொல்லியதுபோல் நிஷ்டையில் இருக்கவேண்டும். இது, இரண்டாவது ப்ராணயாமம்செய்து முடித்ததாகும்.

வலது இடதுநாஸிகளில் ப்ராணயாமம்செய்து முடித்தபின், இரண்டுநாஸிகளிலும் ஸ்வாஸத்தையிழுத்து அப்யாஸம் செய்யவேண்டும். அஃதெப்படியெனில், நுரையீரலில் முன் தங்கியிருந்த ஸ்வாஸத்தையெல்லாம் வெளியில்விடவேண்டும். அதுஎவ்விதமாய் விடவேண்டுமென்றால், வலதுகைப் பெருவிரல் மோதிரவிரல் இவைகளை வலது இடதுநாஸிகளின்மீது வைத்து இடதுநாஸியை மூடி வலதுநாஸியின்வழியாய் 4-அங்குலமஸ்வாஸம் வெளியிலோடும்படிவிட்டு வலதுநாஸியை மூடி, இடதுநாஸியைத்திறந்து முன்விட்டதுபோல் 4-அங்குலம் ஸ்வாஸம் வெளியிலோடும்படிவிட்டு இடதுநாஸியை மூடி, மறுபடியும் வலதுநாஸியைத்திறந்து முன்போல் 4-அங்குலம்விட்டு இவ்விதமாய் உள் தங்கியிருக்கும் ஸ்வாஸத்தையெல்லாம் இரண்டு நாஸிகைகளின்வழியாய் மாற்றிமாற்றி விட்டுக்கொண்டேவந்து கடைசியாய்வலதுநாஸியில் எல்லா

ஶ்வாஸத்தையும் விட்டுவிட்டு அதன்தொடர்ச்சியாகவே மறுபடியும் 4-அங்குலம் ஶ்வாஸத்தை உள்ளுக்கிழுத்து மூடி, இடதுநாஸியைத்திறந்து 4-அங்குலம் ஶ்வாஸத்தை யிழுத்து மூடி, வலதுநாஸியைத்திறந்து 4-அங்குலம் ஶ்வாஸத்தை யிழுத்துமூடி, இவ்விதமாய் நாஸிகையில் எவ்வளவுஶ்வாஸம் கொள்ளுகின்றதோ அவ்வளவு ஶ்வாஸத்தை 'ஓம்' என்னும் ப்ரணவத்துடன் இழுத்து விழுங்கிக் கண்டத்தைமூடி முன்னிரண்டுமுறைகளில் சொல்லியதுபோல் 50 என்னும்வரையில் ப்ரணவத்தை உச்சரித்து, முடிந்தவுடன், உள்ளேநிறுத்தியிருக்கும் ஶ்வாஸத்தை முன்போல் நாஸிகைகளை விரல்களால் மாற்றிமாற்றி விட்டுக்கொண்டேவந்து ஶ்வாஸத்தின்வேகம் அடங்கியபின் கையெடுத்துவிட்டு 10 நிமிஷங்கள் வரையில் நிஷ்டையிலிருக்கவேண்டும். இதுமூன்றாவது ப்ராணாயாமம்.

ஐயா! நீங்கள் இதை அப்யாஸம் செய்யவேண்டுமானால் புஸ்தகம் கையில்வைத்துக்கொண்டு எந்த நாஸியைமூடி எந்த நாஸியில் ஶ்வாஸத்தை விட்டுச்சொல்லுகின்றதோ அல்லது இழுக்கச்சொல்லுகின்றதோ அதுபோல் விரல்களைவைத்து அப்யாஸம்செய்வீர்களானால் ஶீக்ரமாய் மனதிற்குக் கோசரமாகும்."

இந்தப்ராணாயாமம் ஶீக்ரமாய் ஸித்திக்கவேண்டுமென்று எண்ணி ஶ்வாஸத்தைநிறுத்தி; 50, 100, 150, 200, 300, 400, 500 இவ்விதமாய் உயர்த்திக்கொண்டு வரலாகாது; பின் எப்படியென்றால்:—

"ப்ராணாயாமேனயுக்தேந ஸர்வரோகக்ஷயோ பவேத்
ப்ராணாயாமவியுக்தேப்யஸ்ஸர்வரோக ஸமுத்பவ:
ஹிக்காகாஸஸ்ததா ஶ்வாஸ ஶ்ஶிர:கர்ணாக்ஷிவேதநா:
பவந்திவிவிதாரோகா: பவநவ்யத்யயக்ரமாத்
யதாஸிம்ஹோகஜோவ்யாக்ரோ பவேத்வஶ்யஶ்ஶனைஶ்ஶனை:
ததைவஸேவிதோ வாயு ரந்யதாஹந்திஸாதகம்

யுக்தம்யுக்தம் த்யஜேத்வாயும் யுக்தம்யுக்தஞ்ச பூரயேத்
யுக்தம்யுக்தம் ப்ரத்நீயா தேவம்ஸித்திமவாப்நுயாத்."
[யோகசூடாமண்யுபநிஷத்.]

"அப்யாஸகாலேப்ரதமம் ஶஸ்தம் க்ஷீராஜ்யபோஜநம்
ததோப்யாஸே ஸ்திரீபூதேநதாதம் நியமக்ரஹ:
யதாஸிம்ஹோ கஜோவ்யாக்ரோ பவேத்வஶ்ய ஶ்ஶனைஶ்ஶன
ததைவஸேவிதோவாயு ரந்யதா ஹந்திஸாதகம் [னை:
யுக்தம்யுக்தம் த்யஜேத்வாயும் யுக்தம்யுக்தம் யுக்தஞ்சபூரயேத்
யுக்தம்யுக்தேந ப்ரத்நீயா தேவம்ஸித்தி மவாப்நுயாத்"
[ஶாண்டில்யோபநிஷத்.]

இந்த உபநிஷத்துக்களின் வாக்யரீதியாய், ஆரண்யத்தில் வஸித்துக்கொண்டிருக்கும், ஸிம்ஹம் யானைகளை ஒருவன் கொண்டுவந்து தான்சொல்லுவதுபோல அவைகள் நடந்து கொள்வதற்கு நாளாவட்டத்தில் க்ரமக்ரமமாய் தனவஶப்படுத்திக்கொள்ளவேண்டும். அப்படிசெய்யாமல் சிலநாள் அப்யாஸித்தால் அவைகளின் ஸமீபத்தில் சென்றால் அவை ஸமயம் பார்த்து அவனைக்கொல்லும். அதுபோலவே யோகாப்யாஸி எப்பொழுதும் க்ஷீரான்னம்புஜித்துக்கொண்டு நாளாவட்டத்தில் க்ரமக்ரமமாய் சிறுகச்சிறுக நிதானமாய் ஶ்வாஸத்தை நிறுத்தி உயர்த்திக்கொண்டே வரவேண்டும். அப்படி அப்யஸித்துவருவானாகில் தன்ஶரீரத்திலிருக்கும் ஸர்வ வ்யாதிகளும் தினேதினே க்ஷீணிக்கும் இதுபோல் அப்யஸிக்காமல் த்வரிதப்பட்டு ஶ்வாஸத்தைநிறுத்தி எண்ணிக்கைகளை அதிகமாய் உயர்த்திக்கொண்டுசென்றால் அது, வித்யாஸப்பட்டு அனேகவியாதிகளை உண்டாக்கி மனிதனை அதோகதிசெய்விக்கும். ஆதலால், காட்டில் வஸித்துக்கொண்டிருக்கும் ஸிம்ஹம் யானை புலிமுதலானவைகளைப் பிடித்துக்கொண்டுவந்து நாளாவட்டத்தில் வஶப்படுத்திக்கொள்வதுபோல், ப்ராணாயாமம் செய்யும்புருஷன் நாளாவட்டத்தில் க்ரமக்ரமமாய் ஶ்வாஸத்தைநிறுத்த உயர்த்திக்கொண்டே போகவேண்டும்.

இந்தமூன்று ப்ராணாயாமங்களையும் காலைமாலைகளில் அப்யாஸம்செய்து முடித்து, 15-நிமிஷங்கள் சென்றபிறகு போஜனம் செய்யவேண்டும். ப்ரதிதினம் காலை பகல் மாலை இம்மூன்று வேளைகளிலும் ப்ராணாயாமம்செய்து (காட்டிலிருக்கும் 'ஸர்ப்ப'த்தைப் பாம்பாட்டியானவன் பிடித்து, பெட்டியில் அடைத்துக்கொண்டுவந்து எல்லோருக்கும் வேடிக்கை காட்டுவதற்காகப் பெட்டியின் மேல்மூடியைத் திறக்கின்றான்: அது புது 'ஸர்ப்ப'மானபடியால் மேல்மூடியை எடுத்தவுடன் சுமார் ஒருமுழத்திற்கு மேல்கிளம்பிப் படத்தையெடுத்துக்கொண்டு "புஸ்" "புஸ்" என்றுசீறி அடித்து ஆடும். இவ்விதமாய் ஒருவாரம்வரையில் அநேகமுறைகளில் மேல்மூடியை எடுத்து ஆட்டிக்கொண்டே வருவதனால், 8-தினங்களுக்கெல்லாம் அதன்பலம் குறைந்துவிடுகின்றது. 8-தினங்கள் சென்றவுடன் மேல்மூடியைத் திறந்தால் முன்போல் கிளம்ப ஶக்தியில்லாமல் படத்தை விரித்துக்கொண்டே ஜாணளவில் மேல் கிளம்பி உடனே பெட்டியில் படுத்துக்கொள்ளும். இவ்விதமாய், 8-தினங்கள் சென்றபிறகு மேல்மூடியைத்திறந்தால் முன்போல் ஜாணளவும் மேல்கிளம்பாமல் பெட்டியில் படுத்துக்கொண்டேயிருக்கும். அப்போது பாம்பாட்டியானவன் கையினால்குத்தி எழுப்புகின்றான். அச்சமயத்தில் எழுந்திருக்க ஶக்தியில்லாமல் படத்தை விரித்துக்கொண்டு மெதுவாய் ஶிரஸை எடுத்துக்காட்டி மறுபடியும் பெட்டிக்குள் படுத்துக்கொள்ளும். இதுபோலவே ஶ்வாஸமும் ஸர்ப்பமென்றறிக.) ஶ்வாஸமாகிய ஸர்ப்பத்தை அடக்கிக்கொண்டு வரப்பட்டவனே பாம்பாட்டி. இவன் ஶ்வாஸத்தை முன்சொல்லிய பாம்பாட்டியைப்போல் பிடித்து ஆட்டுவதனால் ஶ்வாஸத்தின் வேகம் அடங்கிவிடும். இந்த அப்யாஸம் ப்ரதிதினம் தவறாமல்செய்து ஶ்வாஸத்தை அதிக நேரம் நிறுத்தப் பழக்கஞ் செய்யவேண்டும்.

அப்போது 'ப்ராணன் ஶரீரத்திலிருந்து' விடுபட்டுக்கொண்டேவரும். அது விடுபடுவது நன்றாய்த் தெரியவரும்.

இதற்கு த்ருஷ்டாந்தம் என்னவென்றால், 'எலக்ட்ரிக் பாட்டரி' (Electric Battery) இருக்கும் சிறிய பெட்டியின் வெளிப்புறத்தில் இரண்டு செப்புக்குழாய்கள் இருக்கின்றன. அவ்விரண்டையும் இரண்டு கைகளில் ஒருவன் பிடித்துக்கொள்ளுகின்றான். மற்றொருவன் பெட்டிக்குச் சாவி கொடுக்கின்றான். அப்போது பெட்டிக்குள் இருக்கும் 'பாட்டரி' (Battery) அசைவதனால் அவன்ஶரீரத்திலிருக்கும் நரம்புகளையெல்லாம் இழுக்கும். அது, இழுப்பது நன்றாய்த் தெரியவரும். அதுபோலவே, ப்ராணாயாமம்செய்துமுடித்தயோகி ஸாதாரணமாய் நின்றாலும் உட்கார்ந்தாலும் படுத்தாலும் அல்லது ஸாவகாஶமாய் ப்ரஜ்ஞையுடன் நிஷ்டையிலிருந்தாலும் பாதத்திலிருந்து முழங்கால் தொடை இடை வரையிலும், இடையிலிருந்து முதுகு கழுத்து ஶிரஸ்வரையிலும், புஜத்திலிருந்து கைகளின் நுனிவிரல்கள் வரையிலும் ஒவ்வொரு அங்கத்திலும் ஜாணளவு தூரம் நரம்புகளையும் சதைகளையும் இருந்தாற்போலிருந்து அடிக்கடி இழுத்துக்கொண்டேவரும். இதை அநுபவத்தில் காணலாம். யோகாப்யாஸம்செய்து ஸித்தியடைந்த மஹாத்மாக்களுக்கு:—'ப்ராணன் ஶரீரத்தில் பிசினைப்போல் பிடித்துக்கொண்டிராமல்' ப்ரத்யேகமாயிருக்கும். இவர்கள் தம் ஶரீரத்தைவிட்டு மற்றொரு ஶரீரத்திலும் ப்ரவேஶிப்பார்கள். இதை பரகாயப்ரவேஶமென்றும் சொல்லுவார்கள். இதற்கு த்ருஷ்டாந்தம் சொல்லுகின்றோம் கேளுங்கள்:—

"ஸ்ரீ ஆதிஶங்கராசார்யர் ஸகல தேஶங்களிலும் ஸஞ்சரித்து துர்மதங்களைக் கண்டித்து துராசாரங்களைத் தூரப்படுத்திக்கொண்டே வந்து காஶ்மீரம் சேர்ந்தார். அவ்விடம் மண்டனமிஶ்ரன் என்பவர் ப்ரசண்டவித்வானாய் இருந்தார். அவரை ஸ்ரீ ஶங்கராசார்யர் ஜயித்தார். உடனே அவரது பத்தினியானவள், ஸ்ரீ ஶங்கரரைப்பார்த்து என்னையுங்கூட ஜயித்தாலல்லவோ ஸம்பூர்ண ஜயமாகுமென்று சொல்லி ஸ்ரீ ஶங்கரருடன் வாதாடினாள். இப்படி சிலநாள் வாதாடி அவரது

அபரிமிதமான பாஷ்யங்களுக்கெல்லாம் பயந்து இவர் ஸாதாரணமான ஸங்கரனல்ல ஸாக்ஷாத் பரமசிவனே ஸங்கராசார்யரூபமாய் அவதரித்தவர்; இவரை ஜயிக்க நம்மால் ஸாத்யப்படமாட்டாது; இவர் சிறுப்ராயத்திலேயே ஸந்யஸித்தவரானதால் இவரை 'கோக்கோஹ' ஸாஸ்த்ரத்தினால் ஜயிக்கவேண்டுமென்று எண்ணங்கொண்டு, கொக்கோகத்திலுள்ள சில விஷயங்களைக்கேட்கலாம், அதற்குப்பதில் சொல்லுவாராகில் இவர் பால்யத்திலேயே ஸந்யாஸம் பெற்றுக்கொண்டபடியால் இவருக்கு இவ்விஷயம் எவ்விதமாய்த்தெரிந்ததென்று ப்ரஜைகளால் அவமானப்பட்டுமென்று எண்ணங்கொண்டவளாய் கொக்கோஹ ஸாஸ்த்ரத்தில் சிலகேள்விகளைக் கேட்டாள். அக்கேள்விக்கு விடைகொடுக்க ஸக்தியுடையவராயிருந்தபோதிலும் உலகத்தாருக்காக அச்சமுண்டாய் சிலகாலம் சென்றபிறகு இதற்குப்பதில் சொல்லலாமென்று எண்ணி அவளிடத்தில் சிலகாலம் வ்யவதி (கெடுவு) பெற்றுக்கொண்டு ஆங்காங்கு ஸஞ்சரித்துக்கொண்டுவரும்போது ஓரிடத்தில் அநேகஸ்த்ரீகள் கூடிக்கூக்குரலிட்டு அழுதுகொண்டிருப்பதை ஸ்ரீஸங்கரர் பார்த்து அவ்வூர் அரசன் மாண்டானென்று தெரிந்துகொண்டு அவ்விடமிருந்து தம் ஸிஷ்யர்களுடன் சிலதூரஞ்சென்று தன்கலேபரத்தை ரஹஸ்யமான ஸ்தலத்தில்வைத்துக்காப்பாற்றவேண்டும்; கலேபரத்திற்கு ஏதாகிலும் ஆபத்துவந்தால் "தத்வமஸி தத்வமஸி தத்வமஸிராஜந்" என்று அரண்மனைச்சுற்றிலும் சொல்வீர்களாகவென்று சொல்லிவிட்டு, ஸீக்ர ஸயனித்து ஆத்மா தன்கலேபரத்தைவிட்டு, ராஜன் கலேபரத்தில்போய் ப்ரவேசித்தது. ப்ரவேசித்தவுடன் ராஜனெழுந்து உட்கார்ந்தான். ஸ்த்ரீகளும் மந்த்ரிமார்களும் ப்ரஜைகளும்பார்த்து ஆச்சர்யப்பட்டு ஸந்தோஷித்தார்கள். ராஜன்முன்போல் ராஜ்யபரிபாலனம்செய்து ஸமஸ்தபோகங்களையும் அனுபவித்தார். அப்போது அந்ததேஸம் இரண்டாவது ஸ்வர்க்கம்போல் காணப்பட்டது. 'பட்டதேவி' யானவள் ஸயனித்ததில் ஸந்தேஹங்கொண்டு இவர் முன்ராஜனல்ல இந்தஸரீரத்தில் யாரோ 'மஹாத்மா' ப்ரவேசித்திருக்கின்றாரென்று நன்றாய் அறிந்துகொண்டு மந்த்ரிமார்களை வரவழைத்து இந்தவிஷயங்களையெல்லாம் அவர்களுக்குச்சொல்லினள்.

அதற்குமந்திரிமார்கள் தாயே! நாங்களும் பரீக்ஷித்தோம்; இந்தராஜன் பூர்வராஜனைப்போல் இல்லாமல் ஸகலவித்யையிலும் புத்திநுட்பத்திலும் யோசனையிலும் இவரைப்போன்ற அரசன் எவ்விடத்திலும் இருக்கமாட்டார்களென்று சொன்னார்கள். இந்தப்புருஷனை இந்தஸரீரத்திலேயே இருக்கச்செய்வது மிகவும் நன்மையென்றுயோசித்து நமதுராஜ்யத்தில் மரணமடைந்த கலேபரங்கள் எங்கெங்கிருக்கின்றனவோ அவைகளை எல்லாம் எடுத்து தஹனம்செய்விக்கவேண்டும் என்று பட்டதேவி ஆஜ்ஞாபித்தாள். அதுபோலவே ஸேவகர்கள் சென்று எங்கெங்கிருக்கும் பிணங்களையெல்லாம் எடுத்து தஹனம்செய்துகொண்டேவந்து அதிகோப்யமாய்வைத்திருக்கும் ஸ்ரீஸங்கரரது கலேபரத்தைக் கண்டுபிடித்துக் காஷ்டத்திற்குக்கொண்டுபோய் தீ மூட்டினார்கள். ஸிஷ்யர்களெல்லோரும் அரண்மனைச்சுற்றிலும் "தத்வமஸி தத்வமஸி தத்வமஸிராஜந்" என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். ஆசார்யர் ஸயனித்துக்கொண்டே அந்த ஸ்லோகத்தைக்கேட்டவுடன் ஆத்மா ராஜன் கலேபரத்தைவிட்டுக் காஷ்டத்திலிருக்கும் தன் கலேபரத்தில் போய்ப்ரவேசித்தது.

ஸ்லோ॥ ஸ்ரீமத்பயோநிதிநிகேதந சக்ரபாணே
போகீந்த்ர போகமணி ராஜித புண்யமூர்த்தே
யோகீஸ ஸாஸ்வத ஸரண்ய பவாப்திபோத
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மமதேஹி கராவலம்பம்.

என்று பாடினமாத்ரத்தில் அக்நிஜ்வாலை தணிந்து அங்கஹீனமாகாமல், ஸயனித்து எழுந்தவர்போல் தான் யதாரூபத்துடன் எழுந்து பக்தர்களைக் கடாக்ஷித்து ஷடி ஸ்த்ரீயை ஜயித்ததாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. இஃதன்றியும்,

"ஸ்ரீ ஸாகேர் கபீர்தாஸ்ரூபமாய் லோகோத்தாரணார்த்தமாய் அவதரித்து உலகத்திலுள்ள துர்மதங்களையெல்லாம் கண்டித்து அநேகர்களுக்கு பக்திரஸத்தை ஊட்டி தத்வோபதேசஞ்செய்து தான் வந்தகார்யங்களையெல்லாம் பூர்த்திசெய்தவுடன் ஸாக்ஷாத் நாராயணமூர்த்தி அவருக்கு ப்ரஸன்னமாய் 'கபீர் நீ அவதரித்த காரியங்களெல்லாம் முடிந்தன, இனி நீ பரமபதம்வந்து சேரக்கடவாய்." என்று ஆஜ்ஞாபித்துச்சென்றார். பகவான் அத்ருஸ்யமானவுடன் கபீர் பத்மாஸனத்தில் உட்கார்ந்து ப்ராணாயாமஞ்செய்து, நாபியிலிருக்கும் குண்டலீஸக்தியைக்கிளப்பி ப்ரஹ்ம கபாலத்தைத் திறந்துகொண்டு ஸாக்ஷப்ரஹ்மரிஷியாய் திவ்யவிமானமேறி ஸுரர்களும் முனிவர்களும் எதிர்கொண்டுவந்து பஹுவித மர்யாதையுடன் அழைத்துச்சென்றார்கள். இந்த கபீர்தாஸ்சரித்ரம் தனியாய் எழுதியிருக்கின்றோம்; இது, வாசிக்க மனஸிற்கு பக்திரஸம் அதிகரித்துவரும். அதனால், பாபகார்யங்களைச்செய்ய மனஸிலும் இடங்கொடாமல் எப்போதும் ஸத்கார்யங்களிலேயே மனம் ப்ரவர்த்திக்கும். இது, ஸாதாரணமான பக்தவிஜயமென்று எண்ணவேண்டாம். இந்தபக்தவிஜயம் ஆதியில் ஸம்ஸ்க்ருதபாஷையில் உண்டானது. இது; மைஸூர்தேசத்தை ஆண்டுவந்த அரசர்களில் 21-வது ஸந்ததியில்வந்த ஸ்ரீக்ருஷ்ணராஜ உடையார் பஹதூர் அவர்களால் கன்னடத்தில் மொழிபெயர்த்து எழுதப்பட்டது. இதுவரையில் அதைத் தமிழ்பாஷையில் மொழிபெயர்த்து எழுதினதில்லை. இப்போதுதான் அது தமிழில் மொழிபெயர்த்து எழுதப்பட்டது. ஆதலால், இதனை ஒவ்வொருவரும் வாசித்தால் தம்மில் இருக்கும் துர்க்குணங்களெல்லாம் நீங்கி பக்தி அதிகரித்து முக்திபெற மார்க்கமுண்டாகுமென்று அறியவேண்டும்." இப்படிப்பட்ட அருமையான ப்ராணாயாமமென்னும் ப்ரஹ்மவித்யையைத் தெரிந்து, இந்நூலில் ப்ராணாயாமத்தில் சொல்லியதுபோல் ஸ்வாநுபவத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்பதே இந்நூலின் கருத்து.

புருவமே லூஞ்சுழி யூடே சார்வையும்
வலமிட முஞ்செய வேதான் வாயுவை
புலையுள தெங்கணும் மேலே தேடிய பதியோராய்

புசியமு தஞ்சிர் ஆடே காடியி
லொழுகிவ ரும்படி யாமே தாரனை
புரியும் தம்பெற வேதான் ரேசக புணர்வாகும்

இருதய முஞ்சில ஸாரா யுனைய
ஒருவிம் லிழ்த்திட வேதோ வாதனை
யிடக்கட விர்ந்திட லாயோர் ஞானமு மிதுதானே

இமையவர் கஞ்சனமு ராரீ யீசனு
மறவியும் விண்குடி போனு ராசையி
லெவர்களி ருந்தவர் கூறாய் கர்மைதகன் வழுவாமல்

சொரூபம றிந்தவர் யாரோ பார்மிசை
சருவப ரம்பரை யோகி யேயறி
சகருமி வர்தெரி யாதே போயினர் தொலைதூரம்

சசெகடு செஞ்சையு ஞலே நிமையை
விடுவிடு லைம்புல ஞவா மாயையை
துறந்துறை சங்கைசெ யாதே நீடிய வியலீதே

இடைகலை யிற்றிகழ் சோட சந்தனை
ரவிகலை யிற்புக லாக வுஞ்செய
விருகலை யைத்திசை மாறி மாறியே யிதுபோல

இஞ்சையுமி நகதனை பூர கந்தனி
லிருதொகை தப்பிவி டாம னின்றிடு
வெழில்புரு வச்சுழி மூல நாடியி லிருநீயே

இனியச தூர்த்திவி ரோச னஞ்செய
நவமினி லைப்படு பாதி கங்குலி
லிருவிழி யுச்சியை மேவி யாருநி யிருசாமம்

இடரூத விர்தைவி தாய கந்தனி
லுழைமரு மத்துயின் மீதி லங்கிரு
பமனுமெ திர்த்தவ ராத் ஞாயமு மிதுவாமே

அடருமன த்தைவி டாதே யைம்பொறி
விடயமு மைப்புழி போட வந்திடு
மதிப விச்சொரு வோர மேதக ரனாளாய்

அறுசுவை விச்சைகொ ளாதகன்றிடு
புகையிலை சித்திரை கோப முந்தனு
யபினிக ளைக்குடி யாதே லாகிரி விடவேணும்.

நூதனமாய்ப்ராணாப்யாஸம்செய்யப்பட்டவர்கள் மூன்று மாதங்களுக்கு 50 - எண்ணும்வரையில், ஶ்வாஸத்தை நிறுத்த வேண்டும். 50-க்குமேல் உயர்த்தலாகாது இது, ஆரம்பத்தில் கர்ப்பத்தில் கொஞ்சம் பாதையை உண்டாக்கும். இந்தபாதை ஶ்வாஸத்தை நிறுத்தும்போதுமாத்ரம் இருக்குமேயல்லாமல் மற்றக்காலங்களில் இராது. அப்யாஸமுதிர்ச்சியினால் மூன்று மாதத்திற்குள் அந்த பாதை நிவாரணமாகும். நிவாரணமானவுடன், வலதுநாஸியில் 75 இடதுநாஸியில் 75 இரண்டுநாஸிகளிலும் 75-எண்ணும்வரையில் ஶ்வாஸத்தை நிறுத்தப்பழக வேண்டும். அப்போது முன்போலவே மறுபடியும் வயிற்றில் பாதையை உண்டாக்கும். மூன்றுமாதம் அப்யாஸம்செய்தால் அந்தபாதை நிவாரணமாகும். நிவாரணமானவுடன் வலது நாஸியில், 100 - இடதுநாஸியில் 100 - இரண்டுநாஸிகளிலும் 100 - எண்ணும்வரையில் ஶ்வாஸத்தை நிறுத்தப்பழகவேண்டும். அப்போது முன்போலவே கொஞ்சம் பாதையை உண்டாக்கும். இவ்விதமாய் மூன்றுமாதம் அப்யஸித்தால் பாதை நிவாரணமாகும்.

100-எண்ணும்வரையில் ஶ்வாஸத்தை நிறுத்த, பூர்த்தியாய்த்தேர்ந்தபிறகு ஒவ்வொரு நாஸிகளிலும் ஶ்வாஸத்தை நிறுத்தி, 100-எண்ணிமுடிந்தவுடன் கொஞ்சம் ஶ்வாஸத்தை 1½-அடி நீளம் வெளியில் ஓடும்படிவிட்டு மறுபடியும் ஶ்வாஸம் எவ்வளவு கொள்ளுகின்றதோ அவ்வளவு ஶ்வாஸத்தை உள்ளுக்கிழுத்துவிழுங்கி, 25-எண்ணும் வரையில் நிறுத்தவேண்டும். இவ்விரண்டும்சேர்ந்து கணக்கில் 125-ஆகும். இதுபோலவே இடதுநாஸியிலும் அப்யாஸம்செய்து முடிந்தவுடன் இரண்டுநாஸிகளிலும் செய்யவேண்டும். இப்படி மூன்றுமாதம் செய்தபின்.

ஶ்வாஸத்தை நிறுத்தி, 100-எண்ணி முடிந்ததும் முன் போலக் கொஞ்சம் ஶ்வாஸத்தை 1½-அடி நீளம் வெளியில் ஓடும்படிவிட்டு மறுபடியும் எவ்வளவு ஶ்வாஸம் கொள்ளுகின்றதோ அவ்வளவு ஶ்வாஸம் உள்ளுக்கிழுத்து விழுங்கி, 50-எண்ணும்வரையில் நிறுத்தவேண்டும். இவ்விரண்டும்சேர்ந்து கணக்கில் 150-ஆகும். இவ்விதமாகவே சிறுகச்சிறுக இதையும், 100-வரையில் உயர்த்திக்கொண்டு வரவேண்டும்.

அதாவது, ஒவ்வொரு நாஸியிலும், 100-எண்ணும்வரையில் ஶ்வாஸத்தை நிறுத்தப்பழகியபின் மேற்படி ஶ்வாஸத்திலிருந்து கொஞ்சம்ஶ்வாஸத்தை வெளியில்விட்டு, விட்டஅவ்வளவு ஶ்வாஸத்தைமறுபடியும் உள்ளுக்கிழுத்துவிழுங்கி மறுபடியும், 100 - எண்ணும்வரையில் ஶ்வாஸத்தை நிறுத்தப்பழகியபின் மேற்படி ஶ்வாஸத்திலிருந்து கொஞ்சம் ஶ்வாஸத்தை வெளியில்விட்டு, விட்டஅவ்வளவு ஶ்வாஸத்தை மறுபடியும் உள்ளுக்கிழுத்து விழுங்கி மறுபடியும் 100-எண்ணும்வரையில் ஶ்வாஸத்தை நிறுத்தப்பழகியபின், மேற்படி ஶ்வாஸத்திலிருந்து கொஞ்சம் ஶ்வாஸத்தைவெளியில்விட்டு,விட்டஅவ்வளவு ஶ்வாஸத்தை மறுபடியும் உள்ளுக்கிழுத்து விழுங்கி மறுபடியும் 100 - எண்ணும்வரையில் நிறுத்தி அப்யாஸம்செய்து கொண்டு வரவேண்டும் என்பதாம்.

இவ்வாறு பழகும்போது மாதம் மூன்று முறைக்குமேல் ஸம்போகம் செய்யலாகாது. இதற்குமேல் ஸம்போகம் செய்யப்பட்டவர்கள், 100-ல் இருந்து, 80-க்கு, இறங்கிவிடுவார்கள். ஏன்? அதிக 'பிந்து' (இந்த்ரியம்) நஷ்டமாவதனால், பலம் குறைந்துவிடுகின்றது. பலம்குறைவதனால் ஶ்வாஸத்தை நிறுத்த ஶக்தியற்றவனாகின்றான்; அதனால், 100 - ல், இருந்து 80 - க்கு, இறங்கிவிடுகின்றான். இந்த பிந்து இச்சரீரத்திற்கு ரத்நத்தைப் போன்றதாயிருக்கின்றது. ஆதலால், ரதன்கு ஜதங்கரோ! ஸதங்மே சர்க்கரோ! என்றுசொல்லப்பட்டிருக்கின்றது. அதாவது இந்தரத்நம், நாம் புஜிக்கப்பட்ட ஆஹாரத்தி

விருந்து ரஸமுண்டாய் அந்தரஸம், ரக்தரூபமாய் அந்தரக்தம் மாம்ஸத்தில் ப்ரவேஶித்து மாம்ஸத்திலிருந்து கொழுப்பிலும் கொழுப்பிலிருந்து அஸ்திகளிலும் அஸ்திகளிலிருந்து மூளையிலும் மூளையிலிருந்து ஶுக்லமும் உண்டாகின்றன. இன்றுபுஜித்தபதார்த்தங்களின்ரஸம் எட்டாவது தினத்தில் உழக்குரக்தம் சுண்டி ஒருதுளி ஶுக்லம் உண்டாகின்றது. இப்படிப்பட்ட ஶுக்லங்கள் ஒருஸம்போகத்திற்கு, 30-துளிகளுக்குமேல் செலவழிந்துவிடுகிறபடியால் 7½படி ரக்தம் நஷ்டமாய்விடும். அப்போது யோகாப்யாஸத்தில் ஶ்வாஸம் அதிகநேரம் நிறுத்த ஶக்தியற்றவனாகின்றான். இதற்கு ஶ்ருதிப்ரமாணம் 102-ம்பக்கம் 'கர்ப்பத்தில்பிண்டம்தரிப்பது' என்பதில்காண்க. இப்படிப்பட்ட ரக்தத்தை அதிகமாய்ச் செலவழிக்கப்பட்டவர்களினுடைய தேஹசர்மம், 60-வது, வயதிற்கெல்லாம் சுருக்கமுண்டாய் கண்பார்வை குறைந்து கையில் ஓர் ஊன்றுகோல் இல்லாமல் அவர்கள் நடவார்கள். இதற்குக் காரணம்யாதெனில் நமது இந்துதேஶம் மிகவும் உஷ்ணபூமி. அதனால் இந்தியர்களுக்குக்காமத்தை அதிகமாய்உண்டாக்கும். ஐரோப்பாதேஶம் மிகவும் குளிர்ச்சியானதேஶமாதலால், அவ்விடம்காமம் அதிகமாய் உண்டாகமாட்டாது. அதனால் அவர்கள், 40 - வயதிற்குமேல் விவாஹம்செய்துகொண்டு போகம் ஸ்வல்பமாய் அனுபவித்துக்கொண்டுவருவதனால் அவர்களின் ஶரீரம் தளர்ச்சியடையாமல் மிகவும் வலிமையுடையதாய் இருக்கின்றது. ஆதலால், இதனைவாசிக்கப்பட்ட அன்பர்கள் யாவரும், மாதம்மூன்றுமுறைக்குமேல் ஸம்போகம்செய்யாமலிருந்தால், ஶரீரம்தளர்ச்சியடையாமலும் கண்பார்வை குறையாமலும் அதிக பலமுடையவர்களாய் இருக்கலாம். மாதம் இரண்டுமுறை செய்தால் இதைவிடவிஶேஷமே. இவ்விதமாய் ஸ்த்ரீபத்யத்துடன்இருந்து ஒவ்வொருகாலையிலும், 200-ப்ரணவங்கள் உச்சரிக்கும்வரையில் ஶ்வாஸத்தை நிறுத்தப்பழகவேண்டும். பழகியபின் முன்சொல்லியதுபோல், கர்ப்பத்தில்

நிறுத்தியிருக்கும் ஶ்வாஸத்திலிருந்து, 1¼-அடிநீளம் ஶ்வாஸத்தை இடதுநாஸியைமூடி வலதுநாஸியின் வழியாய் வெளியில் விட்டு அதாவது நாபிவரையில்விட்டு, விட்ட அவ்வளவு ஶ்வாஸத்தை உள்ளுக்கிழுத்து மறுபடியும் 200-ப்ரணவங்கள் உச்சரிக்கும்வரையில் ஶ்வாஸத்தை நிறுத்தப்பழகவேண்டும்.

ப்ராணாயாமம் செய்யச்செய்ய அதாவது ஶ்வாஸத்தை நிறுத்த அதிகமாய் உயர்த்திக்கொண்டு போகப்போக தேஹமாத்யந்தம் விஶேஷமாய் வியர்க்கும்; அக்காலத்தில் வேஷ்டியினால் துடைக்காமல் தேஹத்திலேயே இழுகும்படியாய் தைலம்போல் கைகளால் தேய்த்துவிடவேண்டும். இந்த ப்ராணாயாமம் செய்யும்போது தேஹத்திற்கு அதிக உஷ்ணத்தை உண்டாக்கும். அந்த உஷ்ணம் தணிக்க ஸ்நானம் இதனடியில் எழுதியிருக்கின்றோம்.

உஷ்ணம் தணிக்க ஸ்நானம் செய்யும்முறை.

யோகாப்யாஸம்செய்து வருங்காலத்தில் தேஹத்தில் உஷ்ணம்அதிகரித்து ஶிரஸுமுதல் பாதம்வரையில் அக்நி ஜ்வாலைபோல் வீசிக்கொண்டிருக்கும். அதைச்சாந்தி செய்யும் விபரமாவது:—

வெள்ளை மிளகு	... ...	பலம் 10
பாதம் பருப்பு	... ...	,, 5
கஸ்தூரி மஞ்சள்	... ...	,, 2½
கடுக்காய்த் தோல்	... ...	,, 2½
நெல்லிக்காய்த் தோல்	... ...	,, 2½
பூலாங்கிழங்கு	... ...	,, 2½
வேப்பம்பருப்பு	... ...	,, 2½
	ஆக	பலம் 27½

இலைகளை உலர்த்திஇடித்து வஸ்த்ரகாயம் செய்துவைத்துக்கொண்டு ஆழாக்குப் பசுவின்பாலில் இத்தூள் ஒரு

பலம்சேர்த்து சுண்டக்காய்ச்சி * இதரர்களால் தேய்த்துக் கொள்ளாமல்தானாகவே பத்துநிமிஷங்கள்வரையில்தேய்த்துக் கொண்டு நகசிகபர்யந்தம் (பாதப்பெருவிரல்முதல் உச்சிவரையில்) பூசி அரைமணிநேரம் ஊறியபிறகு அருணோதயத்திற்கு முந்தியே குளிர்ந்தஜலத்தில் ஸ்நானம்செய்து வரவேண்டும். மிகுந்த உஷ்ணம் சாந்தியாகும்.

வெட்டைச்சூட்டைத் தணிப்பதற்குக் காப்பித்தூளுக்குப் பதில்தூள்.

நன்னாரிவேர்	...	...	பலம் 20
பறங்கிச்சக்கை	...	...	,, 10
உலர்ந்த ஆவாரம்பூ		...	,, 5
சுக்கு	...	...	,, 5
ஏலரிசி	...	...	,, 5
தனியா	...	...	,, 5
		ஆக பலம்	50

இவைகளை நன்றாய் உலர்த்திப்பொடிசெய்து ஓர்டப்பியில் வைத்துக் காலை மாலைகளில் காப்பித்தூளுக்குப் பதிலாய் இப் பொடியை உபயோகம் செய்துகொண்டுவந்தால், அதன்பலன் யாதெனில், வெட்டைச்சூட்டைத் தணிக்கச்செய்து மலச்சிக்கலை நீக்கி தேஹத்திற்கு ஆரோக்யமும் ஜீர்ண சக்தியும் உ

* இதரர்களால்ஏன் தேய்த்துக்கொள்ளக்கூடாதென்றால், அவர்களுக்கு அநேகவ்யாதிகள் இருக்கலாம். அவர்களின் ஹஸ்தம் சரீரத்தின் மேல்வைத்துத் தேய்க்கும்போது சூடுண்டாகும். அந்தச்சூட்டின்வழியாய் அவன் வ்யாதி இவனுக்குச் செல்லும். அதனால் இதரர்களால் தேய்த்துக்கொள்ளலாகாது.

டாக்கி சரீரத்தைக் கலகலத்திருக்கும்படி செய்விக்கும். காப்பித்தூள் உபயோகப்படுத்தும்போது இருந்த ஸுகமும், இத்தூளை உபயோகப்படுத்தும்போது இருக்கும் ஸுகமும் ஸ்வாநுபவத்தில்காணலாம். வெல்லத்திற்குப்பதிலாய் வெள்ளை சர்க்கரைஉபயோகப்படுத்தவேண்டும். முன்சொல்லியதுபோல் ஸ்நானம்செய்து நன்னாரிவேர் காப்பி சாப்பிட்டு உஷ்ணம் தணிக்கச்செய்துகொண்டு ப்ராணாயாமம் செய்துவரவேண்டும்.

அன்பர்களே! 200 எண்ணும் வரையில் ச்வாஸத்தை நிறுத்தும்படி யல்லவோ முன் சொல்லியிருக்கின்றோம்! சொன்னவிஷயமே மறுபடியும் சொல்லுகின்றோமென்று எண்ணவேண்டாம்; உங்கள் மனதிற்குநன்றாய்ப் பிடிப்படும்படியாய் பலமுறைகளில் சொல்லிக்கொண்டுவந்தால்தான் தெரியவரும். ஆதலால்,

முதல் வலதுநாஸியை எடுத்துக்கொள்வோம்.

இடநாஸியைமூடி வலதுநாஸியில் தங்கியிருக்கும் ச்வாஸமெல்லாம் வலதுநாஸியில் விட்டு அதன் தொடர்ச்சியாகவே ஸ்வாஸம் உள்ளுக்கிழுத்து 100 எண்ணும்வரையில் ச்வாஸத்தை நிறுத்தி அதிலிருந்து கொஞ்சம் ச்வாஸம் இடதுநாஸியைமூடி வலதுநாஸியின்வழியாய் $1\frac{1}{2}$ அடி நீளம் அதாவது நாபிவரையில் ச்வாஸம் வெளியில்விட்டு, மறுபடியும் உள்ளுக்கிழுத்து,

100 - எண்ணும்வரையில் ஸ்வாஸத்தை நிறுத்தி மறுபடியும் கொஞ்சம் ஸ்வாஸத்தை முன்போல் நாபிவரையில்விட்டு, மறுபடியும் உள்ளுக்கிழுத்து,

100 - எண்ணும்வரையில் ஸ்வாஸத்தை நிறுத்தி மறுபடியும் கொஞ்சம் ச்வாஸத்தை முன்போலவே வெளியில்விட்டு, மறுபடியும் உள்ளுக்கிழுத்து,

100 - எண்ணும் வரையில் ஸ்வாஸத்தை நிறுத்தி மறுபடியும் கொஞ்சம் ஸ்வாஸத்தை வெளியில்விட்டு மறுபடியும்

உள்ளுக்கிழுத்து நிறுத்தவேண்டும். இவ்விதமாய் 4 முறை ஸ்வாஸம்விட்டு 4 முறைகள் இழுத்து,

பிறகு ஸ்வாஸத்தை விடும்போது இடதுநாஸியில் 4-அங்குலம் ஸ்வாஸத்தைவிட்டு, விட்ட அவ்வளவு ஸ்வாஸத்தைமாத்ரம் மறுபடியும் உள்ளுக்கிழுத்து நாஸிகளை மாற்றி மாற்றி † உச்வாஸ ‡ நிச்வாஸங்களாய்விட்டு மிகுதி ஸ்வாஸத்தையெல்லாம் கர்ப்பத்திலேயே சேர்த்துவைத்துக்கொண்டு நிஷ்டையில் இருக்கவேண்டும். அப்போது குடலில் தங்கியிருக்கும் வாயு பஞ்சவாயுவை அதாவது, ஸங்கல்பரூபமாயிருக்கும் மனஸை வெளியில் ஓடவிடாமல் காவல் செய்யும். 400-எண்ணும்வரையில் ஸ்வாஸத்தை நிறுத்த மிகவும் கஷ்டமாயிருக்கும். ஆகலால், நூற்றிற்கு ஒருமுறை கொஞ்சம் ஸ்வாஸத்தைவிட்டு உள்ளுக்கிழுத்து நான்குமுறை செய்யவேண்டும். இவையெல்லாம் சேர்த்து கணக்கில் 400-எண்ணும்வரையில் ஸ்வாஸத்தை நிறுத்தினதாகின்றது. இவ்விதமாய் வலதுநாஸியில் செய்துமுடிந்தவுடன்,

இடதுநாஸியிலும் மேற்சொல்லியதுபோல் அப்யாஸம் செய்யவேண்டும். வலது இடது நாஸிகளில் செய்துமுடிந்தவுடன் வலதுகைப்பெருவிரல் மோதிரவிரல்களை வலது இடது நாஸிகளின்மீதுவைத்து வலதுநாஸியைமூடி உள் தங்கியிருக்கும் ஸ்வாஸத்தை இடதுநாஸியில் கொஞ்சம் வெளியில்விட்டு இடதுநாஸியைமூடி வலது நாஸியைத்திறந்து கொஞ்சம் ஸ்வாஸத்தைவிட்டுமூடி இடதுநாஸியைத்திறந்து கொஞ்சம் ஸ்வாஸத்தை விட்டுமூடி இவ்விதமாய் நாஸிகளை மாற்றிமாற்றி நுரையீரலில் தங்கியிருக்கும் ஸ்வாஸத்தையெல்லாம் கடைசியாய் இடதுநாஸியில் விட்டுவிட்டு, அதன் தொடர்ச்சியாகவே இடதுநாஸியில் கொஞ்சம் ஸ்வாஸத்தை யிழுத்துமூடி வலது

† உச்வாஸம் - ஸ்வாஸம் வெளியில் விடுவது.
‡ நிச்வாஸம் - ஸ்வாஸம் உள்ளுக்கிழுப்பது.

நாஸியைத்திறந்து கொஞ்சம் ஸ்வாஸத்தையிழுத்துமூடி மறுபடியும் இடதுநாஸியைத்திறந்து கொஞ்சம் ஸ்வாஸத்தையிழுத்துமூடி இவ்விதமாய் இரண்டுநாஸிகைகளிலும் தராசைப்போல் ஸமமாய் எவ்வளவுஸ்வாஸம் கொள்ளுகின்றதோ அவ்வளவு ஸ்வாஸத்தையிழுத்து முன்சொல்லிய கணக்கைப்போல் நூறுநூறாக 400-வரையில் இடதுநாஸியில் நிறுத்தி முடிந்தவுடன், கடைசியில் விடும்போது இடதுநாஸியைமூடி வலது நாஸியில் கொஞ்சம் ஸ்வாஸம்விட்டு, விட்ட அவ்வளவு ஸ்வாஸம் உள்ளுக்கிழுத்துமூடி மறுபடியும் இடதுநாஸியைத்திறந்து முன்விட்ட அவ்வளவு ஸ்வாஸத்தை வெளியில்விட்டு, விட்ட அவ்வளவு ஸ்வாஸத்தையே உள்ளுக்கிழுத்து இவ்விதமாய் ஸ்வாஸத்தினவேகம் அடங்கும்வரையில் நிதானமாய் விட்டு, வேகம்அடங்கியபின் கையையெடுத்துவிட்டு நிஷ்டையில் இருக்கவேண்டும். இந்த மூன்று நாஸிகளிலும் செய்த மொத்ததொகை எவ்வளவென்றால், 3 × 400 = 1200 - ஆகின்றது. இவ்விதமாய் அப்யாஸம்செய்து உயர்த்திக்கொண்டு, 3,000 - முதல், 5,000 - எண்ணும்வரையில் ஸ்வாஸத்தை நிறுத்தப்பழகவேண்டும். அப்படி பழகியபின் ஸ்வாஸம் குடலில் ப்ரவேசிக்கும். அது, ப்ரவேசிப்பது நன்றாய்த்தெரிய வரும். குடல், 22-அடி நீளமுள்ளது. பெட்டியில் ஸர்ப்பம் சுற்றிக்கொண்டிருப்பதுபோல் குடல் வயிற்றில்சுற்றிக்கொண்டிருக்கும். யோகாப்யாஸம் செய்யும்போது தேஹத்திற்கு அனேகவிதபாதையை உண்டாக்கும். அந்தபாதைகளுக்கெல்லாம் ஸஹித்துக்கொண்டு அப்யாஸம்செய்து வரவேண்டும். இவ்விதமாய் அனேகதினங்கள் செய்துவந்தால் (ஸ்வாஸம் நுரையீரல் (Lungs) நிறைந்து 4000 எண்ணும்வரையில் அவ்விடம் தங்கியிருக்கும். இப்படித்தங்கி மறுபடியும் ஸ்வாஸம் வெளியில்வரும். அப்போது அதைப்போகவிடாமல் 201-பக்கம் விஷ்ணுவுடைய படத்தில் No 1 என்றுகாட்டியிருக்குமிடத்தில் யோகிகண்டத்தை மூடிவிடுகின்றான். அதனால்அந்த

ஸ்வாஸம் வெளியில் செல்வதற்கு வேறுமார்க்கமில்லாததனால் ஸ்வாஸம் கண்டத்தை வென்றிக்கொண்டு (கண்டத்தை உதைத்து) மறுபடியும் அரைவிரலில் செல்லாமல் தீனிப்பை வழியாய் குடலில்செல்லும். 'குடல் பெட்டியைப்போல் சுற்றிக்கொண்டிருப்பதனால்.' ஸ்வாஸம் நேராய் உட்ப்ரவேசிப்பதற்கு ஸக்தியில்லாமல் சிலதூரம்சென்று அதின்பலம் குறைந்து மறுபடியும் வெளியில்வர ப்ரயத்நப்படும். அதைவெளியில் போகவிடாமல் கண்டத்தை மூடியிருப்பதால், (ஓர் சிறிய கால்வாய் தாண்டும்போது பாதத்தை வென்றிக்கொண்டு தாண்டுகின்றோம். பெரிய கால்வாயைத் தாண்டவேண்டியதனால் சிலதூரத்திலிருந்து ஓடிவந்து பாதத்தை வென்றித் தாண்டுகின்றோம். அதுபோல) ஸ்வாஸம், கண்டம்வரையில் வந்து, (அதாவது காற்றுப்பை தீனிப்பை படத்தில் No 1 என்று காட்டியிருக்கும் இடத்தில் ஸ்வாஸம் குடலிலிருந்து பின்னுக்கேவந்து) கண்டத்தை வென்றிக்கொண்டு மறுபடியும் முன்சென்றதைவிட சிலதூரம் அதிகமாய் குடலில்செல்லும். மறுபடியும் ஸக்திகுறைவதால் ஸ்வாஸம் பின்னுக்கேவந்து கண்டத்தை வென்றிக்கொண்டு குடலில் வேகமாய்ச்செல்லும். சென்றதைவிட ஸ்வாஸம் சிலதூரம் அதிகமாய்ச்செல்லும். மறுபடியும் ஸ்வாஸம்குடலில் அதிகமாய்ச்செல்ல ஸக்திகுறைவதால் பின்னுக்குவந்து கண்டத்தை வென்றிக்கொண்டு அதிகவேகமாய்ச்செல்லும். குடல்பெட்டியைப்போல் சுற்றிக்கொண்டிருப்பதை எதிரிலிருக்கும் படத்தில் ☞ காட்டியிருக்கின்றது. இது, 22-அடி நீளமுள்ளது. முன்சொல்லியதுபோல ஸ்வாஸம் கண்டத்தை வென்றிக்கொண்டு, 22-அடி நீளமுள்ள குடல் முழுமையும்சென்று கடைசியில் குதஸ்தானத்தின் வழியாய் அபானவாயு செல்லுவதுபோல் செல்லும். அச்சமயத்தில் அதை வெளியில் போகவிடாமல் இரண்டு ப்ருஷ்ட பாகங்களையும் கெட்டியாய் இடுக்கிப் பிடிக்கவேண்டும். எவ்வளவு இடுக்கிப்பிடித்தபோதிலும் சிறிதாகிலும் வெளியில்

செல்லும். அச்சமயத்தில் விசேஷபாதையை உண்டாக்கும். இது, எல்லாப்பாதையைவிட அதிகமாயிருக்கும். சிலமாத அப்யாஸத்தால் அந்த பாதை நிவாரணமாகும். குடலில் வாயு ப்ரவேசிக்க ஆரம்பித்தவுடன் குடல் கூச்சலிடும். அந்தக்கூச்சல் எப்படியிருக்குமென்றால், தவளையை ஸர்ப்பம் பிடித்தபோது எவ்விதமாய் கூச்சலிடுகின்றதோ அதுபோலக் கூச்சலிடும். அந்தக்கூச்சல் வயிற்றின் வலது இடதுபாகங்களிலும் நாபியின் கீழும் கூச்சலிட்டு குடுகுடுவென்று இரைந்துகொண்டோடும். இதை அநுபவத்தில் காணலாம். குடலில் வாயு எப்பொழுது ப்ரவேசிக்கின்றதோ அந்நாள்முதல் ஒவ்வொரு ப்ராணாயாமம் அதாவது வலதுநாஸியிலும் இடதுநாஸியிலும் இரண்டுநாஸிகளிலும் ஸ்வாஸத்தை இழுத்து நிறுத்துவதற்குமுன் நான்குவிழுங்கு ஜலம்சாப்பிட்டு ஐந்துநிமிஷம் சென்றபிறகு ஸ்வாஸத்தை உள்ளுக்கிழுத்து அப்யாஸம் செய்யவேண்டும். ஜலம் சாப்பிடாமல் காற்றைமாத்ரம் உள்ளுக்கிழுத்தால் அபாயமுண்டாகும். ஜலம் சாப்பிடுவதனால் சுருங்கியிருக்கும் குடலானது, கொஞ்சம் தளர்ச்சியடைகின்றது. அப்போது வாயு தாராளமாய்க் குடலில்செல்லும். இதுபோலவே போஜனகாலத்தில் முதல் சாப்பிடும்சாதம் நெய் கலந்து சாப்பிடவேண்டும். அப்படி சாப்பிடுவதனால் குடலெல்லாம் நெய்பட்டிருக்கும்; அதனால் சாப்பிடும் ஆஹாரம் தாராளமாய்க் குடலில்நழுவிச்செல்லும். நெய்விட்டு சாப்பிட ஸக்தியில்லாதவர்கள் நான்குவிழுங்குஜலம் சாப்பிட்டு ஐந்துநிமிஷங்கள் சென்றபிறகு போஜனம் செய்யவேண்டும். 'ஆங்கிலேயர்கள்' நெய்யிற்கு பதிலாய் முதல் 'ஸூப்' சாப்பிட்டு பிறகு ஆஹாரத்தைப் புஜிக்கின்றார்கள்; அந்த ஸூப்பில் நெய்ப்பசையிருப்பதால் புஜிக்கும்ஆஹாரம் தாராளமாய் நழுவிச்செல்லும். இல்லாவிடில் விக்கல் உண்டாவது ஒவ்வொருவருக்கும் ப்ரத்யக்ஷம். அச்சமயத்தில் உடனே ஜலம் சாப்பிடுவதனால் புஜித்த ஆஹாரம் குடலில் தாராளமாய் நழுவிச்செல்லும். அது

போல், யோகிகள் காற்றைப் புஜிப்பதற்குமுன் ஜலத்தைப் பானம் செய்வார்கள். காற்றைப்புஜிப்பதே வாயுபக்ஷணை என்றுசொல்லப்படும். யோகிகள் எப்பொழுதும் கமண்டலத்தில் ஜலம் வைத்துக்கொண்டிருப்பதற்குக்காரணம் இதுவே. இவ்விதமாய் கஷ்டப்பட்டு வாயுவைக் குடலில் நிறுத்திவைத்தால் அந்தவாயுவானது, வெளியில் ஓடித்திரியும் மனோவாயுவைவெளியில் ஓடவிடாமல் நாஶஞ்செய்யும். அஃதெப்படியெனில், (வண்டல்ஜலத்தைத் தெளிவிப்பதற்காகத் தேற்றான் கொட்டையின் சந்தனத்தை விட்டபோது அந்தச்சந்தனமானது வண்டலை அடியில் தங்கச்செய்து, தானும் அந்தச் சேற்றுடன் அடியில் அழுந்தி, அந்த ஜலத்தை ஶுத்தோதகமாய்ச்செய்வதுபோல்) மனோவாயுவானது குடலில்தங்கிய ப்ராணவாயுவுடன்கலந்துவிடுவதனால் பரிஶுத்தமான ப்ரஹ்மஸ்வரூபம் தனக்குத்தானாய் ப்ரகாஶித்துக்கொண்டிருக்கும் ஆத்மஸ்வரூபத்தை மனம் பார்க்கமாட்டாது. ஆத்மஸ்வரூபமாயிருக்கும் பரப்ரஹ்மத்திற்கு மனம் ஶத்ருவாயிருக்கின்றது. அந்தமனம் ஶூன்யமானால் தன் நிஜஸ்வரூபம் தானாகவே ப்ரகாஶித்துக்கொண்டிருக்கும்.

ஶுகப்ரஹ்ம ருஷியினுடைய யோகஶாஸ்த்ர விதிப்படி 6-நிமிஷங்கள் ஶ்வாஸத்தை நிறுத்தப்பழகினவன் ப்ராணாயாமஞ்செய்து முடித்தவனாவான் எனவும், காசிகாண்டத்தில், 500-விநாடிகள் ஶ்வாஸத்தை நிறுத்தப்பழகினவன் ப்ராணாயாமம் செய்து முடித்தவனாவான் எனவும் சொல்லப்பட்டிருக்கின்றது. இப்படி ப்ராணாயாமம் செய்து முடித்த யோகிகள் தங்கள் மனம் ஸங்கல்பத்திற் செல்லாவண்ணம், மனித ஸஞ்சாரமில்லாத ஏகாந்தமான இடங்களை நாடிச்சென்றிருந்து, மனதை ஏகதாட்டத்தில் வைக்கப்பழகுவார்கள்.

அன்பர்களே! இவ்விதமாய்க் கஷ்டப்பட்டு ப்ராணாயாமம் செய்வதனால் உண்டாகும் பலன் யாதெனில், "தத க்ஷீயதே ப்ரகாஶாவரணம்" ப்ரகாஶமென்றால் சத்தைதன்

269 A



Golden & Co., Madras.

யம் இவைகளை மூடிக்கொண்டிருப்பது தமோகுணம். இது, நித்ராலஸ்யாதி தோஷங்களை யுண்டாக்கும். இப்படிப்பட்ட தமோகுணம் ப்ராணுயாம அப்யாஸத்தினுல் நசிக்கும். இதுவே ப்ராணுயாமத்தின் பலன். இஃதன்றியும், மற்றெரு பலனும் உண்டு. அதுயாதெனில், "தாரணுஸுச யோக்யதாமநஸ:" மூலாதாரம் நாபிசக்ரம் ஹ்ருதயகமலம் ப்ருமத்யம் ப்ரஹ்மரந்த்ரம் இவை முதலாகிய இடங்களில் சித்தத்தையிழுத்து நிறுத்தச்செய்யும் "தேஸபந்தச் சித்தஸ்யதாரணு" இந்த ஸூத்ரத்தினுல் மூலாதாராதி இடங்களில் சித்தமானது நின்றிருக்கும். இந்த ப்ராணுயாமம் ரஜோகுணத்தினுல் உண்டாகும் நித்ராலஸ்யாதி தோஷங்களை நிவர்த்திசெய்து மனதை ஸத்த ஸர்வ ப்ரதானமாய்ச்செய்து ஸுபாஸ்ரயத்தில் ஸ்திரமாய் நிற்கும்படி செய்விக்கும். இஃதன்றியும் "ப்ராணுயாமோபவே வேதக் பாதகேந்தநபாவக:" புண்ய பாபங்களென்னும் விறகுகளை ப்ராணுயாமமென்னும் அக்நியானது தக்தம் செய்கின்றது. (இந்த அக்நி நாபியிலிருந்து உண்டாகும். அது இந்நூலுக்கு முதல் இரண்டாவது பக்கத்தில் காட்டியிருக்கும் கணபதிபடத்திற்கு நான்காவது படத்தில் காணலாம்.) புண்யபாபங்கள் எப்பொழுது ஒழிந்துவிடுகின்றனவோ, அப்பொழுதே ஸஞ்சிதமென்னும் மூட்டை பஸ்மமாய் விடுகின்றது. அதனுல், புனர்ஜனனமில்லாத விதேஹமுக்தியை அடைகின்றான். இதனை இன்னும் விவரித்துச் சொல்லுகின்றேம் கேளுங்கள்.

"கூடஸ்த நிசகர்மாணி கோடிஜந்மார்ஜிதாந்யபி
ஜ்நேநைவ விநஸ்யந்தி நதுகர்மாயுதைரபி"
"ஜ்ஞாநாதூர்த்தவம் சயத்கிஞ்சித் புண்யம் வா பாபமேவவா
க்ரியதே பஹுலாப்யல்பம் நதேநாயம் விலிப்யதே"
"ஶரீராரம்பகம்யத்து ப்ராரப்தம் கர்மதந்மதம்
தத்போகேநைவ நஷ்டம் ஸ்யாந்நது ஜ்ஞாநேந நஸ்யதி."
[பத்மபுராணம் ஶிவகீதை.]

அநேக ஜன்மங்களாய் கூடஸ்தன் ஸம்பாதித்துக்கொண்டு வந்த புண்ய பாபகர்மங்களினால், ஸஞ்சிதமென்னும் கர்மம் நசிக்கமாட்டாது. அது, ஜ்ஞானத்தினால் நசிக்கும். ஜ்ஞானத்தைவிட புண்யங்கள் எவ்வளவுசெய்தபோதிலும் மோக்ஷம் உண்டாகமாட்டாது. ஶரீராரம்பத்திலேயே உண்டாகிய ப்ராரப்தகர்மம் அநுபவித்தே தீரவேண்டும். இதற்கு த்ருஷ்டாந்தம் ஸ்ரீ க்ருஷ்ணார்ஜுந ஸம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம், 2-ஶ்லோகம், 40-41, பார்க்க.

நாயனே! ப்ராணாயாமம் செய்யும் புருஷர்கள்,

கொள்ளவேபாசிப்பயறு படியரைக்கால்
குருவைநெல் பச்சரிசி படியரைக்கால்
மெள்ளவே ஆவின்பால் தன்னிற்பொங்கி
மெய்ஞ்ஞானம் வேணுமென்று விரும்பியுண்
தள்ளவே நித்தமொரு நேரங்கொள்ளு
தப்பாமற் பசிதானும் தளர்ந்துபோகும்
விள்ளவே யோகமதை விரும்பிப்பாரு
மெய்ஞ்ஞானி யென்றுவெளி யேறலாமே.

மேற்சொல்லியதுபோல் பொங்கி ப்ரதிதினம் ஒருவேளை புஜித்து ப்ராணாயாமம் செய்யும் புருஷர்களுக்கு சிலகாலத்தில் வாயு, குடலில் ப்ரவேசிக்கும். அச்சமயம் ஆஹாரத்தை நீக்கவேண்டும். அஃதெவ்வாறெனில்; ஸாதாரணமாய் ஒவ்வொருவரும் சாப்பிடும் சாதம், 21-பிடிகள்; இதை நாளாவட்டத்தில் ஒவ்வொரு பிடியாய்க் குறைத்துக்கொண்டுவந்து, 12-பிடிகளில் நிறுத்திப் பிறகு கோதுமையினால் செய்த ரோட்டி, பூரி, உப்புமா, நெய், சர்க்கரை, பழம், பாலும் சாப்பிடலாம். அன்றியும், அரை ஆழாக்கு கோதுமை நொய்யுடன் அரை ஆழாக்கு ஜவ்வரிசிசேர்த்துப்பொங்கி அரைபடி கட்டித்தயிரில், கடுகு சீரகம் உளுத்தம்பருப்பு பச்சைக்கறிவேப்பிலை இஞ்சி பச்சைமிளகாயுடன் நெய்யில் வதக்கி ஷை தயிரில்

கலந்து பொங்கியநொய்யுடன்சேர்த்து அதனுடன் 6-பலம் வெண்ணெய் கலந்து நன்றாய் கரைத்துவிடவேண்டும். இதை யகளாபாத் என்று சொல்லுவார்கள். இது, உஷ்ணம் தணிக்கச்செய்யும். இவ்விதஞ் சாப்பிட்டு ஸ்த்ரீ பத்யத்துடன் இருந்து யோகஸாதனம் செய்யவேண்டும்.

ப்ராணாயாமம் செய்யும்போது, ஶ்வாஸத்தை யிழுத்து நிறுத்தி, 1-2-3-4-5-6-7-8-9-10 என்று மனதினால் எண்ணிக்கொண்டே ஏன் செய்துகொண்டுபோகவேண்டுமென்று யோசிக்கின்றீர்களோ என்ன, அதற்குக் காரணம் சொல்லுகின்றோம் கேளுங்கள் :—

ஶ்வாஸத்தை இடதுநாஸியைமூடி வலது நாஸியில் உள்ளுக்கிழுத்து, (1) பதினையாயிரம் எண்ணும்வரையில் நிறுத்தி அதிலிருந்து கொஞ்சம் ஶ்வாஸத்தை இடதுநாஸியைமூடி வலதுநாஸியின்வழியாய் வெளியில்விட்டு மறுபடியும் உள்ளுக்கிழுத்து (2) பதினையாயிரம் எண்ணும்வரையில் நிறுத்தி, மறுபடியும் அதிலிருந்து கொஞ்சம் ஶ்வாஸத்தைவிட்டு முன்போல் உள்ளுக்கிழுத்து, (3) பதினையாயிரம் எண்ணும்வரையில் நிறுத்தி, மறுபடியும் அதிலிருந்து கொஞ்சம் ஶ்வாஸத்தைவிட்டு, முன்போல் உள்ளுக்கிழுத்து, (4) பதினையாயிரம் எண்ணும்வரையில் நிறுத்தி, இவ்விதமாய் நான்கு முறைவிட்டு, நான்குமுறை இழுத்து நிறுத்தி, கடைசியில் முன்சொல்லியதுபோல் 4-அங்குலம் ஶ்வாஸத்தை அடக்கி நிதானமாய் வெளியில்விட்டு, விட்ட அவ்வளவு ஶ்வாஸத்தை உள்ளுக்கிழுத்து, அந்த 4-அங்குல ஶ்வாஸத்தையே * உச்வாஸ + நிஶ்வாஸங்களாய் ஆடச்செய்து மிகுதிஶ்வாஸத்தை எல்லாம் கர்ப்பத்திலேயே நிறுத்திவைக்கவேண்டும். முன்சொல்லிய லக்ஷங்களெல்லாம் சேர்த்து, அறுபதினாயிரம் எண்ணும்வரையில் ஶ்வாஸத்தை நிறுத்தினதாகின்றன.

* உச்வாஸம் - ஶ்வாஸம் வெளியில் விடுவது.
+ நிஶ்வாஸம் - ஶ்வாஸம் உள்ளுக்கிழுப்பது.

இவ்வளவு பெருக்க தொகையை கணக்கிடுவதற்கு அவ்விடம் அவகாசமிராது. ஆகலால் ஶ்வாஸத்தை வலது கை ஐந்து விரலையும் ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்! என்று எண்ணி இடதுகை ஒருவிரலை மடக்கவேண்டும். இவ்விதமாய் இடது கையில் 600 - விட்டால், 600 × 5=3,000 இது, கணக்கில் மூவாயிரம் ஆகும். இவ்விதமாய் ஶ்வாஸத்தை நான்குமுறை விட்டு நான்குமுறையிழுத்து நிறுத்தினால் அது, பன்னிராயிரம் ஆகும்; முதலில் இந்தப் பன்னிராயிரமும் வலது நாசியில் செய்துமுடிந்து, 10 - நிமிஷங்கள் நிஷ்டையிலிருந்து மறுபடியும் முன்போலவே இடது நாசியில் ஶ்வாஸத்தையிழுத்து, பன்னிராயிரம் என்னுமளவையில் நிறுத்தி முடிந்தவுடன் 10-நிமிஷங்கள் நிஷ்டையிலிருந்து மறுபடியும் இரண்டு நாசிகளிலும் முன்செய்ததுபோல் செய்து நிஷ்டையில் இருக்கப்பட்டவர்கள், ஸர்வ ப்ரஜ்ஞை தப்பி தன்னைத்தான் மறந்து ப்ரஹ்மானந்த ஸமாதி நிலையில் நின்றிருப்பார்கள். ஆயினும்; தன்மனதை யோகத்தினால் நிறுத்த அப்யாஸஞ்செய்துகொண்டுவந்தால் கடைசியில் அந்தயோகம் பழுத்து சித்த ஸாந்தி உண்டாகும். எப்பொழுது ஸாந்தசித்தனாகின்றானோ அப்பொழுதே என்னை அடைந்தவனாகின்றான். என்றால், ஜனனமரணாதி ஸம்ஸாரம் ரஹிதமாய் (நீங்கி) நிர்வாணத்தை அடைகின்றான் என்று அத்யாயம் 6, ஶ்-15, ல், சொல்லியிருக்கின்றது. இதன் விவரங்களை இன்னும் விசிதமாய்த் தெரிந்து கொள்ளவேண்டுமானால், ஸ்ரீ க்ருஷ்ணார்ஜுன ஸம்வாதரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம் 6, ஶ் 11, 12, 13, 14 - லில் பார்க்கவும். இது விஷயம், ப்ராணாயாம ப்ரத்யாஹார தாரணை த்யான ஸமாதியிலும் விவரமாய் முன்சொல்வோம். அறுபதினாயிரம் அளவையில் ஶ்வாஸம் நிறுத்தினால்தான் ஸமாதி நிலையை அடையலாம்.

ஶ்வாஸத்தை கர்ப்பத்தில் நிறுத்தி சிக்முத்ரையுடன் ஜலத்தின்மீது ஸயனித்து ஸமாதியிலும் இருக்கலாம். அந்த

ஜலஸமாதி எதிரிலிருக்கும் படத்தில் காட்டப்பட்டிருக்கின்றது.

ஓ ஸஹோதரிகளே! ஓ ஸஹோதரர்களே! இந்த யோகத்தைக்குறித்து கீதையில் சில த்ருஷ்டாந்தங்கள் சொல்லுகின்றோம். அதைக் கவனித்து வாசிக்கவேண்டும். அதாவது அத்யாயம், 8, ஶ்- 13-ல்,

ஓமித்யேகாக்ஷரம் ப்ரஹ்ம வ்யாஹரன் மா மநுஸ்மரந்
யப்ரயாதி த்யஜன் தேஹம் ஸ யாதி பரமாங்கதிம்.

எவன் தன்னுடைய ஸமஸ்த இந்த்ரிய த்வாரங்களை நன்ருய் அடக்கி மனத்தை ஹ்ருதய கமலத்திலிருக்கும் அந்தர்யாமியாகிய என்னிடத்தில் நிறுத்தி, ஸஹஸ்ராரமென்னும் ப்ரஹ்ம கபாலத்தில் ப்ராணவாயுவை நிறுத்தி, த்யானயோகத்திலிருந்துகொண்டு ப்ரஹ்மபதத்தை அறிவிக்கிற "ஓம்" என்னும் ஏகாக்ஷரத்தை மனதினுல் உச்சரித்து, அதற்கு லக்ஷ்யார்த்தமான என்னை த்யானிக்கிறவனும் ஶரீரத்தை அபிமானிக்காதவனும் இருக்கப்பட்டவன் எவனே அவன் ஶ்ரேஷ்டமான கதியை அனுபவிப்பானென்று சொல்லப்பட்டிருக்கின்றது.

முதல் ஶரீராபிமானத்தை விட்டுவிட்டு, முன் சொல்லிய ப்ரணவத்தை ஶ்வாஸத்துடன் அஜபாவாய் (மனதினுலேயே) சேர்த்து, நாஸிகா ரந்த்ரங்களின் வழியாய் ஶ்வாஸத்தை உள் ளிழுத்து, ஸமஸ்த இந்த்ரிய த்வாரங்களின் வழியாய் அதைப் போகவிடாமல் நிறுத்தி ஓம் என்னும் ஏகாக்ஷரத்தை வலதுகை ஐந்துவிரல்களினுலும் எண்ணி முடிந்தவுடன், இடதுகை ஒருவிரலை மடக்கவேண்டும்; இப்படி இடதுகை ஐந்து விரல்களையும் மடக்கினுல் அது கணக்கில் 25-ப்ரணவங்களாகும். 25, ப்ரணவங்களானவுடனே ஹ்ருதய கமலத்தில் எந்த க்ருஷ்ண விக்ரஹமும் இல்லாமல் ஆகாஶவடிவமாயிருக்கும் ப்ரஹ்மத்தையே க்ருஷ்ணனென்று சொல்லினர். அந்த ஹ்ருதய கமலத்திலிருக்கும் ஆகாஶத்தில், 1-என்று மனதினுலேயே லக்ஷமிட்டு அந்த லக்ஷத்தின்மீது த்ருஷ்டியை நிறுத்தி

மறுபடியும் 25, எண்ணி முடித்தவுடன் 2-என்று லக்கத்தை மாற்றவேண்டும். அப்போது 50-எண்ணும் வரையில் ஶ்வாஸத்தை நிறுத்தினவனாகின்றான். இவ்விதமாய் 50-எண்ணி முடித்தவுடன் முன்சொல்லியதுபோல் ஶ்வாஸத்துடன் கூட 'ஓம்' என்னும் ப்ரணவத்தைச் சேர்த்துக்கொண்டு நாஸிகளை மாற்றிமாற்றி நிதானமாய் விடவேண்டும். இப்படி க்ரமக்ரமமாய் நாளாவட்டத்தில் உயர்த்திக்கொண்டு வருவதே அப்யாஸ யோகமென்று சொல்லப்படும். இந்த அப்யாஸயோகத்தினால் மனம் உலக வ்யாபாரங்களில் செல்லாமல் நின்றுவிடும்.

இன்னும் அத்யாயம் 6-ஶ்லோகம் 20, 21, 22, 23-ல், ஸ்ரீ க்ருஷ்ணன் சொல்லுகின்றார்.

க்ருஷ்ணன்:—ஓ அர்ஜுனா! யோகாப்யாஸம் செய்யப்பட்ட மஹாத்மாவினுடைய லக்ஷணம் இன்னும் எப்படிப்பட்டதென்றால் அதைச்சொல்லுகின்றேன் கேள்:—

யோகாப்யாஸம் செய்வதனால் காற்றில்லாத இடத்தில் இருக்கப்பட்ட தீபம்போல் நிஶ்சலனமாய் ([illegible]) யிருக்கப்பட்ட மனஸானது ஸ்வரூபஸமாதியிலிருந்து சலிக்காமலிருக்கும். அந்த ஸமாதியினால், அந்தக்கரணம் பரிஶுத்தமாய் பரஞ்ஜ்யோதி ஸ்வரூபத்தை அடைந்து, ஆனந்தித்துக்கொண்டிருப்பான். இந்த பரஞ்ஜ்யோதி ஸ்வரூபம், இந்த்ரியங்களால் தெரிந்துகொள்ளத் தக்கதல்ல. அதாவது, நேத்ரங்களால் பார்க்கத்தக்கதும், செவிகளால் கேட்கத்தக்கதும், மூக்கினால் முகரத்தக்கதும், வாக்கினால் சொல்லத்தக்கதும், தேஹத்தினால் ஸ்பரிஶிக்க (தொட)த்தக்கதுமல்ல; பின் எப்படிப்பட்டதென்றால், ஜ்ஞானகர்மேந்த்ரிய விஷயங்களுக்கு எட்டாததும் யோகாப்யாஸத்தினால், பரிஶுத்தமான புத்திக்கு மாத்ரம் எட்டுவதாயும் இருக்கப்பட்டது. இவ்விதமான ஸுகத்தை அனுபவித்துக்கொண்டிருப்பவன்; அந்த ஸுகத்தை விட்டு நீங்கான். அப்படிப்பட்ட ஸ்வரூப ஸுகத்திலிருப்

பவன் இதரமான ஸுகங்களை மித்தையென்றும், துச்சமானதென்றும் நினைப்பான். மித்யாபூதமான ப்ரபஞ்சத்தில் ஶரீரம் இருக்கும் வரையில் ப்ராரப்த வசத்தினால் உண்டாகும் ஶோகாதி துக்கங்களுக்கு வ்யஸனப்படமாட்டான். ஸமஸ்த துக்காஶ்ரய ஸம்ஸாரத்திலிருந்து விமுக்தியடைவதற்குச் செய்யப்படும் ப்ரயத்னவிஶேஷமே யோகமென்று சொல்லப்படும். அந்த யோகவித்தையைப் பிடிவாதத்துடன் இருந்து அப்யாஸம் செய்யப்பட்டவன், அதாவது ரஸவாதம் செய்யப்பட்ட புருஷன் பொன் வெள்ளி செய்வதற்காக எவ்வளவு கஷ்டப்பட்டு பாடுபட்டுக்கொண்டுவந்தபோதிலும் ஸித்தியாகாவிடில் வ்யஸனப்படாமல் மறுபடியும் அதைவிடாமல் அப்யஸிப்பதுபோல், (யோகியும்) அனேகவித பாதைகளை அனுபவித்தபோதிலும் அவைகளை லக்ஷ்யம் வைக்காமலும் இவ்வளவுகாலம்வரையில் யோகம் செய்தும் ஸித்திக்கவில்லையேயென்னும் மனக்கவலையில்லாதவனாய், எவ்வளவு கஷ்டமாயிருந்தாலும் ஸஹித்துக்கொண்டு அதை ஸாதித்து அடையவேண்டுமென்னும் ஸவைராக்யத்துடனிருந்தாலேயன்றி, அப்படிப்பட்ட யோகஸித்தி அவனுக்கு லபிக்கமாட்டாது. இன்னும் 24, 25-ஶ்லோகங்களில் என்ன சொல்லுகின்றாரென்றால் :—

ஓ அர்ஜுனா! யோகியானவன் முக்யமாய்ச் செய்யவேண்டிய விஷயம் என்னவென்றால், இந்த்ரியங்களை நிறுத்தவேண்டும். நிறுத்துவதென்றாலோ, கண்கள் மூக்கு வாய் செவிகள் முதலானவைகளினால் செய்யத்தக்கவைகளல்ல; ஏனென்றால் ஓர் வஸ்துவை நேத்ரங்களால் பார்த்து அதில் இச்சையுண்டானபோது நேத்ரங்களை மூடிக்கொண்டால் அந்தவஸ்துவில் உண்டாகிய ஆஶா அவ்வளவிலேயே விட்டொழியாது. இப்படியே ஒவ்வோரிந்த்ரியங்களினாலும் உண்டாகிய ஆஶா, அந்தந்த இந்த்ரியங்களை மூடிக்கொண்ட மாத்ரத்திலேயே நிவர்த்தியாகமாட்டாது. பின் எப்படி நிவர்த்தியாகுமென்றால், மனஸினால் மாத்ரமே நிவர்த்தியாகவேண்டியதாகவிருக்கின்றது.

ஏனென்றால், இந்த்ரியங்கள் எந்தவிஷயங்களில் ஓடிக்கொண்டிருக்கின்றனவோ அந்தவிஷயங்களில் உண்டாகும் இச்சை ஸங்கல்பத்தினால் உண்டாகின்றது. அந்த ஸங்கல்பத்திற்கு உத்பத்திஸ்தானம் மனஸாகவே இருக்கின்றது. ஆதலால், ஸங்கல்பத்திற்கு மனஸை இடங்கொடாமலிருந்தால் எண்ணங்கள் உண்டாகாமலிருக்குமல்லவா? யோகியானவன் தன் மனஸுக்கு எப்பேர்ப்பட்ட ஸங்கல்பத்தையும் ஸங்கல்பிக்கஇடங்கொடுக்கலாகாது. அப்படிச் செய்வதனால் அவனுடைய மனதில் அநேக எண்ணங்கள் உண்டாகமாட்டா. எப்பொழுது எண்ணங்கள் இல்லாமலிருக்கின்றனவோ அப்பொழுது, அவனுடைய இந்த்ரியங்கள் எந்தவிஷயங்களில் ஓடியபோதிலும் அந்த விஷயங்களில் அவனுக்கு இச்சையிராது. ஆதலால், அவன் இந்த்ரியங்களை மனதினால் ஜயித்தவனாகின்றான். ஆனால் அப்படிச்செய்வது, புத்திபலமுடையவனுக்கேயன்றி சலிக்கின்ற மனஸையுடையவனுக்கல்ல. த்ருடமான நிச்சயமுடைய புத்தியினால் மனஸை மேற்சொல்லியதுபோல் வசப்படுத்தவேண்டும். ஸங்கல்பத்தினால் உண்டாகும் மனஸைக் குறித்து, ச்லோகம் ப்ரமாணம்.

"யாஹி சேதஸ்த்வமிதஸ்ததோபி தேஹேந்த்ரியாத்யைர் ஸஹ குருஷ்வகர்மத்வம் யத்குருத்ராப்யுபவிஸ்யஷித்யம் விசாரயஸ்வஸ்வமிதம் மத்த ?"

ஓ ஸஞ்சலமுடைய மனமே! உன்னிஷ்டம்போல் இங்குமங்கும் குரங்கைப்போல் ஓடாதே; சரீரம் இந்த்ரியம் முதலானவைகளுடன்கூடி முக்திக்கு ப்ரதிபந்தகமாகிய விஷய ப்ரவர்த்திரூபகர்மங்களைச் செய்யாதே, அப்படிப்பட்டவிஷயப்ரவர்த்தியைவிட்டு நீ முதலாகிய ஸமஸ்த ப்ரபஞ்சத்திற்கும் அதிஷ்டானமாயிருக்கும் ஆத்மஸ்வரூப விசாரணையைச்செய். அதாவது, அவித்யை நசித்து ஸ்வஸ்வரூபாநுபவம் உண்டானபோது மித்தையாகிய ஜகத்து உண்டென்னும் ப்ரமை உண்டாகமாட்டாது. ஆதலால், யோகாப்யாஸம் செய்யும்

போது எவ்வளவு கஷ்டங்களிருந்தபோதிலும் அந்தக் கஷ்டங்களுக்கெல்லாம் அஞ்சப்படாத மனதையுடையவனாயிருந்து அப்படிப்பட்ட த்யானயோக ஸித்தியை அடையவேண்டுமென்று பிடிவாதத்துடனிருந்து அடையவேண்டும்.

யோகாப்யாஸஞ்செய்து மனஸை நிறுத்தவேண்டுமென்னும் பிடிவாதம் இருக்கும் பக்ஷத்தில் அந்தப் பிடிவாதத்தினால் யோகாப்யாஸத்தில், தன்தேஹத்திற்கு எவ்வளவுபாதைகள் இருந்தபோதிலும் அந்தபாதைகளுக்கெல்லாம் ஸஹித்துக்கொண்டு, எவன் யோகாப்யாஸம் செய்கின்றானோ, அப்படிப்பட்டவன் த்யானயோக (மனதை நிறுத்தும்) ஸித்தியை அடைவான். இதற்குப் பின்வரும் விஷயங்களை கீதையில் விரிவாய்க் காணலாம்.

இந்தயோகம், யம, நியம, ஆஸன, ப்ராணாயாம, ப்ரத்யாஹார, தாரண, த்யான, ஸமாதி என்று அஷ்ட (எட்டு) விதங்களுண்டு. இது யோகயஜ்ஞமென்று சொல்லப்படும்.

யமம்:—அஹிம்ஸை; அதாவது, ஜீவகோடிகளை வார்த்தைகளினாலாவது, அல்லது கெட்ட எண்ணங்களினாலாவது, ஹிம்ஸைசெய்து பாதை உண்டாக்காமலிருப்பது. "அஹிம்ஸா பரமோதர்ம:" என்று வியாஸ ஸூத்ரமாகிய ப்ரஹ்மஸூத்ரத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. எல்லா தர்மங்களிலும் "அஹிம்ஸையே" ப்ரதானமான தர்மம். ஹிம்ஸையென்றால் ஓர் ஜீவனை வதைப்பதேயல்ல; தம்மைவிடத் தாழ்ந்த புருஷனை மனம் நோகப்பேசுதலும் ஹிம்ஸையேயாகும். அஸத்யமாயில்லாமலிருப்பது, பொய்சொல்லாமலிருப்பது, எதிலும் இச்சையில்லாமலிருப்பது, தான்செய்த விஷயங்களுக்கு ப்ரதி ப்ரயோஜனம் கோராமலிருப்பது, பரஸ்திரீகளை மோஹிக்காமலிருப்பது, தயை க்ஷமம் மிதஆஹாரம் மிதநித்ரையுடன் இருப்பது,இவையெல்லாம் யமம். இந்த யமமானது மனஸை நிர்மலமாகச்செய்யும்.

நியமம்:—ஸௌசம், தேஹஸுத்தி, ஆசாரம், தீங்கு செய்தவர்களுக்குக் கெடுதி செய்யாமலிருப்பது, தேஹாபிமானம் விட்டுவிடுவது, இதரர்களின் ஸொத்தை அாக்ரமிக்காமலிருப்பது, எப்பொழுதும் ஸந்தோஷமாயிருப்பது, ஸ்ருஷ்டிசெய்யப்பட்ட ஏக ப்ரஹ்மத்தை அலங்கரித்து ஏகாக்ர த்யானத்திலிருப்பது, வேதாந்த ஸ்ரவணம் (கேட்பது) ஜபம் செய்வது இவையெல்லாம் 'நியமம்'.

ஆஸனம்:—ஸ்வஸ்திகம் கோமுகம் வீரம் ஸிம்ஹம் பத்மம் மயூரம் சித்த பத்ரம் ஸுகாஸனம் என்று நவ (ஒன்பது) வித ஆஸனங்களுண்டு.

ப்ராணயாமம்:—ஸ்வாஸத்தை நாஸிகா ரந்த்ரங்களின்வழியாய்க் குடல் நிரம்ப பூர்த்தியாய், 'ஓம்' என்னும் ப்ரணவத்தை ஸ்வாஸத்துடன், அஜபாவாய் (மனதிலேயே) உச்சரித்து உள்ளுக்கிழுத்திழுத்து ஆயிரம் ப்ரணவங்களை எண்ணும் வரையில் ஸ்வாஸத்தை வெளிவிடாமல் நிறுத்தி, பிறகு கொஞ்சம் ஸ்வாஸத்தை அதாவது நாலு அங்குலம்வரையில் ஸ்வாஸம் வெளியில் ஓடும்படி விட்டு, மறுபடியும் அந்த நாலு அங்குல ஸ்வாஸத்தையே என்றால், அவ்வளவு ஸ்வாஸம் வெளியில்விடுகின்றீர்களோ அவ்வளவு ஸ்வாஸத்தைமாத்ரம் உள்ளுக்கிழுத்து இவ்விதமாய் முன்சொல்லியதுபோல், ஸ்வாஸத்தின்வேகம் அடங்கும்வரையில் நாஸிகைகளைமாற்றி மாற்றி நிதானமாய்விட்டு அதை உஸ்வாஸ நிஸ்வாஸங்களைவிட்டுக்கொண்டு மற்ற ஸ்வாஸத்தையெல்லாம் கர்ப்பத்திலேயே நிறுத்தி, பத்மாஸனத்திலாவது ஸித்தாஸனத்திலாவது உட்கார்ந்து சின்முத்திரையுடன் நிஷ்டையிலிருக்கவேண்டும். குடலில் தங்கியிருக்கும் வாயுவானது, வெளியில் ஓடிக்கொண்டிருக்கும் மனோவாயுவை ஓடவிடாமல் நிறுத்தும்.

குடல் நிறைய ஸ்வாஸத்தை நிறுத்தி ஜலத்தின்மீது ஸயனித்து 12-அங்குலம் ஸ்வாஸத்தை வெளியில் ஓடவிட்டு அந்த

283



குடலில் ஸ்வாஸத்தை நிறுத்தி ஜலத்தின்மேல் பத்மாஸனத்துடன் ஸயனித்து, யோக நித்ரை செய்கிறது. போட்டோ காபி 1-க்கு விலை ரூபா 1—4—0.

12-அங்குல ஸ்வாஸத்தையே மறுபடியும் உள்ளுக்கிழுத்துக் கொண்டு அதை உஸ்வாஸ நிஸ்வாஸங்களாய் விட்டுக்கொண்டு ஜலத்தின்மீது பத்மாஸனத்துடன் ஸயனித்தபடியே உபக்யாஸமும் செய்யலாம். ஜலத்தின்மீது பத்மாஸனத்துடன் ஸயனித்திருப்பதை எதிரிலிருக்கும்படத்தில் காட்டப்பட்டிருக்கின்றது. (இதன்விவரங்களை எல்லாம் ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம் 4, ஸ்ல - 29 - 29½, பார்க்க.)

ப்ரத்யாஹாரம்:—பதினையிரம் ப்ரணவங்கள் உச்சரிக்கும் (எண்ணும்) வரையில் ஸ்வாஸத்தைநிறுத்தி, முடிந்தவுடன் பிறகு நாலங்குல ஸ்வாஸத்தை வெளியில்விட்டு அதை உஸ்வாஸ நிஸ்வாஸங்களாய் விட்டுக்கொண்டு நிஷ்டையிலிருந்தால், பஞ்சபூதங்கள் லயித்து, நிஸ்சலனமாய் ஏகாந்த ஸ்தானத்தில் இருப்பது.

தாரணை:—பதினையாயிரம் ப்ரணவங்கள் உச்சரிக்கும் வரையில் ஸ்வாஸத்தைநிறுத்தி முடிந்தவுடன் முன்போல் நாலங்குல ஸ்வாஸத்தை வெளியில்விட்டு அதை உஸ்வாஸ நிஸ்வாஸங்களாய் விட்டுக்கொண்டு நிஷ்டையிலிருந்தால் பஞ்சபூதங்கள் லயித்து, மனம் ஸ்திரமாய் ப்ரஹ்மஸ்வரூபத்தில் லயித்து த்யானத்திலிருப்பது. (இதன்விவரங்களை எல்லாம் ஸ்ரீ க்ருஷ்ணர்ஜுந ஸம்வாதரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம், 6-ஸ், 18 - பார்க்க.)

த்யானம்:—மேற்சொல்லிய தாரணையில் நின்றபிறகு தான் ஆநந்த ஜ்யோதிமய மாகின்றான். இந்த ஜ்யோதியை வேதாந்திகள் துரீயபூமியென்றும், யோகிகள் ஆத்மஸ்வரூபி என்றும் சொல்லுவார்கள்.

ஸமாதி:—யோகிகள் வாயுபக்ஷணை செய்து, அன்ன ஆஹாரமில்லாமல், நிர்விகல்பத்தில் நின்று, மதுவை (தேனை) யுண்ட ப்ரமரம் (வண்டு)போல் ஸ்தம்பித்து இருப்பது. இந்த ஸமாதிநிலைமையைக் குறித்து கீதை,

அ-8. அநந்யசேதா: ஸததம் யோ மாம் ஸ்மரதி நித்யச:
தஸ்யாஹம் ஸுலப: பார்த்த நித்ய யுக்தஸ்ய யோகின: ஶ்லோ-14.

" இதரவிஷயங்களில் போகவிடாத மனதையுடையவனாகிய யோகி என்னை எப்பொழுது சிந்தனை செய்கின்றானோ, அப்படிப்பட்ட ஸ்திரமான ஸமாதியையுடைய த்யாநாப்யாஸிக்கு நான் ப்ரயாஸையில்லாமல் அடையத்தக்கவனாயிருக்கின்றேன்" என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

அதாவது, எந்த இதரவிஷயங்களிலும் மனதைப் போகவிடாமல் பரமாத்ம ஸ்வரூபத்திலேயே ஐக்யம் செய்தவனே யோகி. மனம் புத்தி சித்த அஹங்காரமென்னும் அந்தக்கரணங்கள் லயித்து, தன்னை ஆனந்தஜ்யோதி ஆவரித்து (மூடிக்கொண்டு) ஆத்மஸ்வரூபியாயிருப்பதே ஸமாதிநிஷ்டையென்று சொல்லப்படும்.

பிணத்தையும் ஸமாதியென்று சொல்லலாமோவெனின் கூடாது. பிணத்திற்கு மேற்சொல்லிய அந்தக்கரணங்களும் ஆத்மாவும் நசித்து விடுவதனால் சொல்லலாகாது. ஸமாதி நிஷ்டையிலிருக்கப்பட்டவனுக்கு, அந்தக்கரணங்கள் லயித்து, தான் ஆத்ம ஸ்வரூபனாயிருப்பதே, ஸமாதி நிஷ்டையென்று சொல்லப்படும். (இது விவரங்களை எல்லாம் ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம், 6-ஶ்லோ. 18-பார்க்க.) இந்த ஸமாதிநிஷ்டையே த்யானமென்று கீதையில் பலவிடங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. இச்சமாதி நிலையில் இருக்கும்பொழுது நாபிமுதல் [illegible] பர்யந்தம் யோகாக்நி ஜ்வாலை உண்டாகும். அந்த ஜ்வாலையினால் ப்ரஹ்ம ரந்த்ரத்திலிருந்து அம்ருதமானது கஸிந்து கண்டத்தின் மூல ரந்த்ர வழியாய்ச் சொட்டுச் சொட்டென்று விழுந்துகொண்டிருக்கும். இதற்கு ஶ்ருதி ப்ரமாணம்:—

"ஷஷ்டம் தாலுசக்ரம் தத்ர அம்ருத தாராப்ரவாஹ:
கண்டிகா மூலரந்த்ர ராஜதந்தி ஸங்க்ஞி விவரத்வாரம்
தத்ர ஶூந்யம் த்யாயேத் சித்தலயோ பவதி

அந்த ஜ்வாலை, இந்நூலின் முதலில் இரண்டாவதுபக்கம் கணபதி படத்திற்கு நான்காம் சித்ரஹத்தில் காட்டப்பட்டிருக்கின்றது. அந்தஜ்வாலை, முன்செய்துவந்த ஸஞ்சிதகர்மங்களையெல்லாம் பஸ்மம் செய்விக்கும்.

இப்படிப்பட்ட ப்ரஹ்ம நிஷ்டாபரர்களாகிய ஜ்ஞானிகளுக்கு மனமேதானறி ஸகல கார்யங்களைச்செய்துகொண்டிருந்தபோதிலும்,

ஶ்ரு: " ப்ரபஞ்சஸ்ய மநகல்பிதத்வாத் ததோபேதா பாவாத்
ததாசித்பஹிர்கதேபி மித்யாத்வபாவாத்
ஸக்ருத்விபாத ஸதாநந்தாநுபவைகசேரசரோ
ப்ரஹ்மவித்தேவ பவதி." [மண்டலப்ராஹ்மணோபநிஷத்.]

ஓர் ஜாரஸ்த்ரீ தன்கணவனோடு ஸம்போகம் செய்துகொண்டிருந்தாலும் அவளது மனமாத்ரம் ஜாரபுருஷன்மீது சிறந்து அவன்மீதே ஜ்ஞாபகமாயிருப்பதுபோல் ப்ரஹ்மநிஷ்டையில் மனம் லயித்து ப்ரஹ்மானந்தத்தை அனுபவித்திருக்கும் ஜ்ஞானிகள் நிஷ்டைகலைந்து மனமடங்கி ப்ரபஞ்சத்திலுள்ள ஸகலகார்யங்களையும் செய்துகொண்டிருந்தபோதிலும், இந்த ஜகத் மனோகல்பிதமென்று த்ருடநிச்சயமுண்டாய் தாமே ப்ரஹ்மமென்று தத்தகத்யானமாயிருப்பார்களாதலால், அவர்களுக்கு ஜகத்தோன்றினாலும் தோஷமில்லை. அதாவது, அக்கினியினால் தக்தமான வேஷ்டிகள் மடிப்புகளுடன் இருந்தபோதிலும், அவைகளை எடுத்து கட்டிக்கொள்ள (உபயோகிக்க) எப்படிமுடியாதோ, அதுபோல் அவர்களின் மனம் ஜ்ஞானாக்கினியினால் பஸ்மமாய் விடுவதனால் கர்த்ருத்வஶூன்யமாய் அதாவது அவர்கள் செய்யும் தொழிலில் மனமில்லாமல் செய்வார்கள். அவ்யக்த அஹங்காராதி விஷயங்களினுடைய க்ரியைகள் இப்படிப்பட்ட ப்ரஹ்மவேத்தாக்களைப் பற்றா; இதற்கு த்ருஷ்டாந்தம் என்னவென்றால், தாமரையிலையில் ஜலம் ஒட்டாமலிருப்பதுபோல் இந்ததேஹமென்னும் தாமரையிலையில் விஷயங்களென்னும் ஜலம் எப்பொழுதும் ஒட்டாது. இப்படிப்

பட்ட ப்ரஹ்மவேத்தர்களை சிலமனுஷ்யர்கள் தெரிந்துகொள்ளாமல் நம்மைப்போல் ஸம்ஸாரியாய் ஸமஸ்த வ்யவஹாரங்களையும் செய்கின்றான்; ஆதலால், இவனை ப்ரஹ்ம ஸ்வரூபனென்று எப்படிச் சொல்லலாமென்று தூஷிக்கப்பட்டவர்களுக்கு, அந்த மஹாயோகியினுடைய தேஹேந்த்ரியாதி சலனத்தினால் உண்டாகிய பாபகர்மங்கள் அப்போதே அவர்களுக்கு உண்டாகும். அந்த ப்ரஹ்மவேத்தர்களை மற்றும் சில மனுஷ்யர்கள் விசேஷபக்தி விஶ்வாஸங்களுடன் பூஜித்துக்கொண்டு எப்பொழுதும் அந்த ப்ரஹ்மவேத்துவினுடைய விஷயங்களை ஆனந்தத்துடன் இதரர்களுக்கு சொல்லிக்கொண்டு சில க்ரியைகள் ஸ்தூல த்ருஷ்டியினால் பாபங்களாய்க் காணப்பட்டபோதிலும் அந்த க்ரியைகளுக்கு நல்லதாகவே தாத்பர்யங்கள் சொல்லிக்கொண்டு வரப்பட்டவர்களுக்கு கோரிக்கையில்லாத மஹாத்மாவான யோகிசெய்த புண்யகர்மங்கள் அவர்களுக்குண்டாகும். ஆதலால், இப்படிப்பட்ட ப்ரஹ்மாத்மாநுபவமுடைய இந்த அத்யாத்மவித்யையைத் தெரிந்துகொள்ளாமல் ஶரீரம் 'நான்' என்னும் மாயையில் வீழ்ந்து பந்தத்தில் அகப்பட்டு இருக்கப்பட்டவர்களுக்கு இந்த ஜீவன் முக்தி அநுபவம் எவ்விதமாய் உண்டாகும்!

ஸ்ரீ க்ருஷ்ணார்ஜுன ஸம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை முதற்பதிப்பு 253-வது, பக்கம் 16-வது, வரியில் அர்ஜுனன் கேட்கின்றான்;

அர்ஜுனன் :—ஓ ஸ்வாமி! இப்பொழுது நீர்சொல்லிய யஜ்ஞத்தில் யோகயஜ்ஞமும் அதாவது, யம நியம ப்ராணாயாமாத்யஷ்டாங்க யோகத்தையும், ஓர் யஜ்ஞமாய்ச் சொன்னீரல்லவா? அது எப்படி யஜ்ஞமாகும்? அதில் ஹவிஸ் எது? அக்நி எது? விவரித்துச்சொல்லும் க்ருஷ்ணா!

அ-4. அபானே ஜுஹ்வதி ப்ராணம் ப்ராணேऽபானம் ததாபரே ।
ப்ராணாபானகதீ ருத்த்வா ப்ராணாயாமபராயணா: ॥ ஶ்லோ-29.
அபரே நியதாஹாரா: ப்ராணான் ப்ராணேஷு ஜுஹ்வதி ஶ்லோ-29½.

க்ருஷ்ணன் :—ஓ அர்ஜுனா! யோகயஜ்ஞமென்பது உனக்குஸரியாய்த் தெரியவில்லைபோல் தோன்றுகிறது. அதனை மறுபடியும் விவரித்துச் சொல்லுகின்றேன் கேள். யோகத்திற்கு முக்யமான அங்கம் ப்ராணாயாமம். அந்த ப்ராணாயாமம் எப்படிப்பட்டதென்றால் நாஸிகாரந்த்ரங்களில் நடந்துகொண்டிருக்கும் ஶ்வாஸத்தை மந்த்ரபூர்வகமாய்க்கர்ப்பத்தில் நிறுத்தவேண்டும். ப்ராணாயாமம் செய்வதற்கு ரேசக பூரக கும்பகமென்று மூன்றுவித ஸாதனங்களுண்டு. ரேசகமென்றால் கர்ப்பத்திலிருக்கும் ஶ்வாஸத்தை நாஸிகாரந்த்ரங்களின் வழியாய் வெளியில்விடுவது; இது உச்ஶ்வாஸமென்று சொல்லப்படும். பூரகமென்றால் வெளிவாயுவை நாஸிகாரந்த்ரங்களின் வழியாய் ஶ்வாஸத்தை உள்ளுக்கிழுப்பது; இது நிஶ்வாஸமென்று சொல்லப்படும். இதன்பாகமே குதஸ்தானத்தின் வழியாய் போவது. இது அபானமென்று சொல்லப்படும். கும்பகமென்றால், உள்ளே இழுத்த ஶ்வாஸத்தை வெளிவிடாமல் மந்த்ரபூர்வகமாய்நிறுத்துவது. ப்ராணனென்றால், ஹ்ருதயத்திலிருக்கப்பட்டவாயு. அபானனென்றால், குதஸ்தானத்திலிருக்கப்பட்டவாயு என்றால், ஊர்த்வமுகமாயிருக்கப்பட்ட வாயு ப்ராணனென்றும், அதோமுகமாய் இருக்கப்பட்டவாயு அபானனென்றும் சொல்லப்படும். ப்ராணாயாமம் செய்யப்பட்ட யோகி ஓர்நாஸியைமூடி மற்றோர்நாஸியில் வாயுவை இழுத்து நிறுத்தி மறுபடியும் ஶ்வாஸத்தை விடும்போது முன்மூடியிருந்த நாஸிகாரந்த்ரங்களின்வழியாய் விடுகின்றான். இவ்விதமாய் வாயுவை அப்யாஸம்செய்வதனால் ஊர்த்வ வாயுவும் அதோ வாயுவும் சேர்ப்பித்தவனாகின்றான். ஆதலால், ப்ராணனை அபானத்தில் சேர்த்ததாகின்றது. இப்படிச்செய்வதே ப்ராணனை அபானத்தில் ஹோமம்செய்வது என்று சொல்லப்படும். இதற்கே பூரகமென்றும், நிஶ்வாஸமென்றும், அபானனென்றும் பெயர். உள்ளுக்கிழுத்த வாயுவை வெளியில்விடுவதால் அதோமுகமாயிருக்கும்வாயு ஊர்த்வமுகமாய் செல்லும் அதாவது, அபானத்தை ப்ராணனுடன் சேர்த்ததாகின்றது.

இதுவே ரேசகமென்றும், உச்வாஸமென்றும் சொல்லப்படும். சிலர் ஸ்வல்ப ஆஹாரத்தைப்புஜித்து ப்ராணவாயுவை வெளியில்விடாமல் கர்ப்பத்திலேயே நிறுத்துவார்கள். இதுவே கும்பகமென்னும் ப்ராணாயாமம். இப்படிச்செய்து ப்ராணவாயுவை பந்திக்கின்றார்கள். அதாவது, ப்ராணாபான வ்யானோதான ஸமானமென்னும் பஞ்ச ப்ராணங்களினுடைய வியாபாரங்களாகிய உச்வாஸ நிச்வாஸங்களையும், நாக கூர்ம க்ருகர தேவதத்த தனஞ்ஜயனென்னும் உபப்ராணவாயுக்களையும் ஸ்தம்பித்து (நிறுத்தி) நிச்சேஷ்டிதராய் (எந்தசேஷ்டைகளும் இல்லாதவர்களாய்) யிருப்பார்கள்.

அர்ஜுனன் :—ஓ ஸ்வாமீ! அப்படிச்செய்வது கேவலசரீர ஸாதனமாயிருக்கின்றது. இது, ஸாதாரணமாய் ஜாலவித்தைக்காரன் உதரபோஷணார்த்தமாய் அப்யஸிக்கும் வித்யையாயிருக்கின்றது. இப்போர்ப்பட்டவித்யை எப்படி மோக்ஷஸாதனமாகும்? இதனால் யோகீசுளுக்கு என்னப்ரயோஜனம்?

க்ருஷ்ணன் :—அர்ஜுனா! நீ சொல்லியது வாஸ்தவமே. ஆனால் ஜாலவித்தை செய்பவன், தான் வாயுதாரணையின் ஸாமர்த்யங்களை இதரர்களுக்குக்காட்டி தத்வாரா உதரபோஷணார்த்தம் செய்துகொள்ளுகின்றானே யொழிய அவனுக்கு அது மோக்ஷஸாதனமல்ல. யோகிகளோ அப்படியல்ல. அவர்கள், ஏன் இதை அப்யஸிக்கின்றார்களென்றால், மனம் சாஞ்சல்யத்தில் சலிக்காமல் நின்றிருப்பதற்கு அநுகூலமானதாய் இருக்கின்றதென்று அப்யஸிக்கின்றார்கள். என்றால், அவர்கள் தமது மனதை பரமாத்மாவில் ஐக்யம் செய்பவர்களாயிருக்கின்றார்கள். இப்படி ஐக்யம்செய்ய இது ஸாதனமாயிருக்கின்றது. ஆதலால், இதனை அப்யாஸம்செய்கின்றார்கள். இது மோக்ஷஸாதனத்திற்கு முக்யமானதாயிருக்கின்றது.

அர்ஜுனன் :—ஐயா! இப்பொழுது நீர்சொல்லிய ப்ராணாயாமங்களில் கும்பகமென்னும் ப்ராணாயாமத்திற்கு ஸ்வல்ப ஆஹாரத்தைப்புஜித்து ப்ராணவாயுவை வெளியிடாமல், கர்ப்பத்திலேயே நிறுத்திவைப்பார்களென்று சொல்வதற்குக் காரணமென்ன? மற்ற ப்ராணாயாமங்களுக்கு இல்லாத ஸ்வல்ப ஆஹாரம் இதற்குமாத்ரம் எப்படி உண்டாயிற்று, சொல்லும், க்ருஷ்ணா!

க்ருஷ்ணன் :—இந்த கும்பகமென்னும் ப்ராணாயாமம் மற்ற ரேசக பூரகங்களைவிட, மிகவும் கஷ்டமானது. கேவல ஸ்வல்ப ஆஹாரத்தைப் புஜிப்பவர்களுக்குமாத்ரமே இது ஸாத்யமாகுமேயொழிய இதரர்களுக்கு ஸாத்யமாகமாட்டாது. ஏனென்றால், இந்த ப்ராணாயாமம் செய்வதனால் ப்ராணவாயுவை வெளிவிடாமல் நிறுத்தக்கூடும். அப்படி நிறுத்துவதற்கு குடலில் இடம்வேண்டியதாயிருக்கின்றது. ஆதலால் ஸ்வல்ப ஆஹாரம் புஜிக்கவேண்டும். வயிறாரப்புஜித்தால் குடலில் ப்ராணவாயு தங்குவதற்கு இடமில்லாமலிருக்கும். ப்ராணாயாமம் செய்பவர்கள் மித ஆஹாரம் புஜிக்கவேண்டும். அங்ஙனம் புஜித்தால் தான் ப்ராணவாயு கும்பகத்தினால் குடலில் தங்கியிருக்கும். இதற்குப்பின்வரும் விஷயங்களை கீதையில் விரிவாய்க்காணலாம்.

நில்லடா வாசியைத்தான் வாங்கிக்கொள்ளு
  நீங்காத கருவிகளை வதைத்துப்போடு
அல்லடா என்னைப்போலே ஆசானப்பா
  அப்பனே யுன்றனுக்கு வாயாதப்பா
சொல்லடா சிவஞானந் தன்னைத்தேர்ந்து
  சொற்பெரிய மும்மூச்சுத் தன்னைப்போற்றி
செல்லடா சிவஞான கருவுக்குள்ளே
  தினந்தினந்தான் பணிந்துமினித் திடமாய்நில்லே.
ஆட்டுமடா ஆசையற்று ரோஷமற்று
  அன்னைசுற்றந் தனைமறந்து அகண்டமேவும்
பூட்டுமடா நவத்வாரங்கள் தன்னைப்
  பொறிகளைந்துஞ் சேருமடா புனிதமாக
காட்டிலென்ன நாட்டிலென்ன மௌனங்கண்டால்
  காமதேன் கற்பகமும் உனக்கேசித்தி
வீட்டிலே தீபம்வைத்தாற் பிரகாசிக்கும்
  வெளியேறி னாற்றீபம் விழலாய்ப்போமே.

ப்ராணாயாமம் முற்றிற்று.

ௐ

ஓம் தத் ஸத் பரப்ரஹ்மணே நம:.

இந்நூலாசிரியருக்கு உண்டாகிய தேஹபாதை.

இதை வாசிக்கும் ஸஹோதரி ஸஹோதரர்களுக்கு, சொல்லப்போகும்விஷயங்கள் மிகவும் முக்யமானவைகள். அதாவது, உங்கள் புண்யபாப கர்மங்களென்னும் மூட்டைகளை யோகாக்நியினால் தஹம்செய்து ஜனனமரணமென்னும் ஸம்ஸார ஸமுத்ரத்தைத்தாண்டிக்கரைபேற இந்நூல் படகைப்போன்றதாயிருக்கின்றது. ஆதலால், இதை ச்ரத்தையுடன் வாசித்து இச்ஜன்மத்திலேயே முக்திபெற ஒவ்வொருவரும் ப்ரயத்னம் செய்யவேண்டும். இந்நூலாசிரியர் ப்ராணாயாமம் செய்யும்போது பட்ட கஷ்டங்களை எல்லாம் இதனடியில் சொல்லுகின்றேன் கேளுங்கள்.

இந்நூலாசிரியர், ப்ராணாயாமம்செய்யும் மார்க்கங்களை முதல் பதிப்பைவிட இரண்டாம்பதிப்பில் அதிகமாயும் இரண்டாம் பதிப்பைவிட மூன்றாம்பதிப்பில் விசேஷமாயும் மூன்றாம் பதிப்பைவிட இந்நான்காம்பதிப்பில் இன்னும் அதிக விசேஷமாயும் எழுதியிருக்கின்றார். ப்ராணாயாமம் செய்யும்க்ரமம் ஒரே பதிப்பில் எழுதினால் வாசிக்கப்பட்டவர்கள் பயந்து அப்யாஸம் செய்யாமல் விட்டுவிடுவார்களென்று எண்ணியே ஒவ்வொரு பதிப்பிலும் சிறுகச்சிறுக வுயர்த்திக்கொண்டுவந்து இந்நான்காம் பதிப்பில் எல்லாம் உபதேசித்துவிட்டனர்.

ஓர் அரசன் வேற்றரசனை ஜயிக்கக் காட்டின்வழியாய்ச் செல்லும்போது முதலில் பயனீர் (pioneer) பட்டாளம் காடுகளைவெட்டி பாட்டைபோட்டுக்கொண்டே செல்லும். சென்ற பிறகு அவர்களைப்பின்தொடர்ந்து பதாதிகளும்(சிப்பாய்களும்) அவர்களுக்குப்பின் குதிரைவீரர்களும், அவர்களுக்குப்பின் பீரங்கிகளும் தனிக்குதிரைகளும் அதற்குப்பின் அதிடன் மேஜர் கர்னல் முதலானவர்களுடன்சென்று யுத்தாங்கம்சேர்ந்து வேற்றரசனை ஜயிக்கின்றார்கள். அதுபோலவே இந்

தேஹமென்னும் காட்டில் 'ஆத்மா' என்னும் ராஜன் வசித்துக்கொண்டிருக்கின்றான். அவனை தர்சிப்பதற்காக, நாஸிகாரந்த்ரங்களின் வழியாய் ச்வாஸத்தையிழுத்து நுனிவிரல் நிறையும் பிடித்து நிறுத்தவேண்டும். சரீரத்தில் எழுபத்திரண்டாயிரம் ரோம ரந்த்ரங்களுண்டு. இதற்கு எழுபத்தீராயிரம் நாடிகளென்று சொல்வார்கள். இந்த ரந்த்ரங்கள், மாம்ஸம் ரக்தம் கொழுப்பு முதலானவைகளினால் மூடப்பட்டிருக்கின்றன. அவைகளையெல்லாம், மூன்றுநாசியில் நிறுத்திவைத்திருந்த ச்வாஸமானது, இத்தசரீரத்தில் ஓடிக்கொண்டிருக்கும் ரக்தக் குழாய்களின் வழியாய் கூரான அம்புபோல் எழுபத்திரண்டாயிரம் ரோம ரந்த்ரங்களின் வழியாய்ச்சென்று, மாம்ஸங்களையெல்லாம் வியர்வையுடன்சேர்த்து ஒவ்வொரு ரோமத்வாரங்களின் வழியாய் வெளியில் கொண்டுவந்துவிடும். அந்தஸமயத்தில் தேள்கொட்டிவிட்டால் எவ்வளவு பாதையை உண்டாக்குமோ அவ்வளவு பாதையை உண்டாக்குகின்றதாம். அப்போது சரீரமெல்லாம் அலண்டு அந்தந்தநாடி நரம்புகள் தளர்ந்து, தம்தம் ஸ்தானங்களைவிட்டு ஸர்ப்பம்போல் சீறிக்கொண்டு கர்ணத்தின் (காதுகளின்) வழியாய் தச (பத்து) வித வாத்யங்கள், 'ஓம்' என்னும் சப்தத்திலிருந்து உண்டாய் ஸதாகாலமும் நாதசப்தம் காதில் கேட்டுக்கொண்டிருக்குமென்றும், இதை அநுபவத்தில் காணலாம் என்று சொல்லினர். இதுவிஷயம் 'தசவிதநாதங்கள்' என்பதில் ச்ருதிப்ரமாணங்களுடன் இந்நூலில் சொல்லியிருக்கின்றார்.

இவ்வித கஷ்டத்துடன் ப்ராணாயாமம் செய்யப்பட்டவர்களுக்கு ச்வாஸம் தேஹமாத்யந்தம் கூரான அம்புபோல் செல்வதனால் பாதப்பெருவிரல்முதல் உச்சிவரையிலுள்ள அவயவங்களெல்லாம் ரணம்போலிருக்குமென்றும் அப்படிப்பட்ட ஸமயத்தில் ஆஹாரம் புசிக்கவேண்டுமென்று நினைத்து எந்தக் கைகளையாகிலும் ஸரி, வாயினிடம் கொண்டுபோக நினைத்தால் கை மேல்கிளம்ப ஸக்தியற்றதாயிருக்குமென்று சொல்லினர்.

அப்போது இடதுகை ஸகாயத்தினால் வலதுகையை மெதுவாய் மேலுக்கெடுத்து வாயினிடம் கொண்டுபோய் வைக்கவேண்டுமென்றும், இவர்கள் படுக்கையிலிருந்து எழுந்து உட்காரவேண்டுமென்று எண்ணினால் தேஹமெல்லாம் அதிக பாரமாய் இருக்குமென்றும், அதுஸமயம் எழுந்திருக்கச் சக்தியற்று மெதுவாய் கைகளையன்றி எழுந்திருக்க இரண்டு நிமிஷங்கள் செல்லுமென்றும், படுக்கவேண்டுமென்றாலும் அவ்வளவு கஷ்டமாகவே படுக்கவேண்டுமென்றும் சொல்லினர். இவ்விதமாய் எவ்வளவு கஷ்டங்களிருந்தபோதிலும் அந்த பாதைகளுக்கெல்லாம் ஸஹித்துக்கொண்டு ப்ரதிதினம் காலை பகல் மாலைகளிலும் தவறாமல் ப்ராணாயாமம் செய்துவந்தால், முன்சொல்லிய பயனீர்பட்டாளம் ஆயுதங்களுடன் சென்று காட்டைவெட்டி பாட்டைபோட்டதுபோல், முன் தலையில் நிறுத்திவைத்திருந்த ஸ்வாஸமானது, கூரான அம்பு போன்ற ஆயுதம்போல் சென்று ஸ்வாஸம் தேஹமென்னும் காட்டைத்துளைத்துக்கொண்டு தாராளமாய்ச்செல்ல பாட்டையை உண்டாக்கிக்கொள்ளுமென்றும், ஸ்வாஸம் தாராளமாய்ச் செல்லபாட்டை உண்டானபிறகு முன்சொல்லியபாதைகளெல்லாம் நீங்கிற்று என்றும் பாதை நீங்கினபிறகு தேஹத்திற்கு அதிகவலிவை உண்டாக்கிற்றென்றும் சொல்லினர். ஸ்வாஸம், தேஹமெல்லாம் தாராளமாய் ஓடித்திரிய பாட்டையை உண்டாக்கிக்கொண்டபிறகு நாபிகமலத்தினிடம்சென்று அவ்விடமிருக்கும் குண்டலிஸக்தியை ஸ்வாஸம் மேல்கிளப்புகின்றது. மேல்கிளப்பினவுடனே அதிலிருந்து யோகாக்நிஜ்வாலை உண்டாகின்றது. அந்தயோகாக்நி ஜ்வாலை இந்நூலுக்கு முதலில் ஸ்வாமிகளின் படத்திற்குப் பின்னிருக்கும் கணபதிபடத்திற்கு நான்காவது சித்ரத்தில், யோகாக்நி அக்நிஹோத்ர த்யாக ஸமாதிபூஜா என்று ஆங்கிலேயபாஷையில் எழுதப்பட்டிருக்கின்றது. அந்த யோகாக்நியினால், ஸஞ்சிதமென்னும் பாபபுண்யங்களின் மூட்டையை பஸ்மம் செய்விக்கவேண்டுமேயொழிய மற்ற எப்படிப்பட்ட யஜ்ஞயாகாதிகளினால் உண்

டாகும் புண்யங்களினால் ஸஞ்சிதமென்னும் மூட்டை பஸ்மமாகமாட்டாது. அந்தயஜ்ஞயாகாதிகளினால் புண்யம் விசேஷித்து மேலானஜன்மங்களைத் தந்துகொண்டு செல்லுமேயொழிய மோக்ஷஸாம்ராஜ்யபதவியை உண்டாக்கமாட்டாது. முன்சொல்லியபாதைகளை எல்லாம் இந்நூலாசிரியர் 1891 வருஷம் பட்டிருக்கின்றார். இப்படிப்பட்ட கஷ்டஸாத்யமான ப்ராணாயாமம் எவ்வளவுசெய்து விட்டுவிடுகின்றார்களோ அதற்குத் தக்க பலத்தைத்தரும். (இந்த பலன் ஸ்ரீ க்ருஷ்ணார்ஜுன ஸம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை முதற்பதிப்பு 469 ஆவது பக்கம், 8-வது வரியில் காணலாம்.) இவ்வித பாதைகளுடன் கஷ்டப்பட்டு ஸ்வாஸத்தை ஸ்வாதீனம் செய்துகொண்டு நிர்விகல்ப ஸமாதியிலிருந்தால் என்னபலன் அடையலாமென்றால்,

"யாமமாத்ரம் வாஸுதேவம் சிந்தயேத் கும்பகேயத:
ஸப்த ஜந்மார்ஜிதம்பாபம் நஸ்யத்யபி யோகிந:"

என்னும் ச்ருதி "ப்ரஹ்மமேனும் நிஷ்டவாக்யரீதியாய் ஒருஜாமம் (இரண்டரைமணிநேரம்) ஸ்வாஸம்வெளிவிடாமல் கும்பகத்தில் நிறுத்தினால் தன்சித்தம் வாஸுதேவனில் லயிக்கும். அப்படி ஒருஜாமம் வாஸுதேவனில் அதாவது ப்ரஹ்மத்தில் லயித்திருந்தால் ஏழுஜன்மங்களாய்ச் செய்துவந்த புண்யபாபங்கள் முன்சொல்லியயோகாக்நியினால் பஸ்மமாகும். ஸதா காலமும் நிர்விகல்ப ஸமாதியிலிருந்தால் அநேக ஜன்மங்களாய்செய்துகொண்டுவந்த புண்யபாபங்களெல்லாம் யோகாக்நியினால் தக்தமாய்விடும். பிறகு அவர்களின் வம்ஸத்தில்வந்த இருபத்தோர் தலைமுறையார் எங்கெங்கு ஜனித்திருக்கின்றார்களோ அவர்களின் புண்யபாபங்களும் பஸ்மமாய் அவர்களும் மோக்ஷமடைகின்றார்கள். முன்சொல்லிய ஸமாதியில் இருக்க கடப்பை ஜில்லா டிஸ்ட்ரிக்டு கோர்ட்டுக்கெதிரில் குஹாலய கட்டடம்கட்ட ஏற்பாடுசெய்திருப்பதனால் அதற்குப்பொருள் ஸஹாயம்வேண்டும். க்ருஹஸ்தாஸ்ரமம் எப்படிப்பட்டதென்

குஸ் வரப்பட்ட அதிதி அப்யாகதிகளுக்கு உண்டாகும் அந்த பாவத்தை நிவாரணைசெய்வதற்கும்; ஸந்யாஸிகள் யோகிகள் இச்சைகொண்டிருக்கும் கார்யங்களைத் தம்மால் இயன்றவரையில் ஈஸ்வரார்ப்பணமாய்த்தந்து அவர்களின் மனோபீஷ்டத்தைப் பூர்த்திசெய்யும்பொருட்டு க்ருஹஸ்தர்களுக்கு தர்மம் ஏற்பட்டதென்று பெரியோர்களால் சொல்லப்பட்டிருக்கின்றது:—

* ஈஸ்வரார்ப்பணமாய் தர்மம்செய்துவந்தால் அதனால் உண்டாகும்புண்யம் ஸஞ்சிதம் என்னும் புண்யத்தில் போய்ச்சேரமாட்டாது. அவ்வாறு புண்யம் உண்டாகாவிட்டால் என் தர்மம்செய்யவேண்டுமென்று நீர் கேள்வி உண்டாகின்றதல்லவா? அதற்குக்காரணம் சொல்லுகின்றேன் கேளுங்கள். இச்சைகொண்டு காம்யரூபமான கர்மங்களைச்செய்துவரும் புண்யத்தினால் சரீரமெடுத்து அந்தபுண்யபலனை அனுபவிக்கவேண்டும். பலத்தைக்கோராமல் நிஷ்காம்ய காம்யரூபமான கர்மங்களைச் செய்துவருவார்களாயின் மோக்ஷத்தைத் தரத்தக்க புண்யம் உண்டாகும். ஆதலால், இவைகாரிகளும், ஸந்நோதரிகளும் ஸந்நோதரர்களும் ஸ்வாமிகளின் கட்டட தர்மகைங்கர்யத்திற்காக அவரவர்களுக்கு இயன்றவரையில் பக்தியாவுவாம் ஈஸ்வரார்ப்பணமாய் கொடுக்கும் தொகையை அடியில்கண்ட விலாஸத்திற்கு அனுப்புவீர்களாயின் பெயரை ரிஜிஸ்டர் செய்து அச்சிட்டு ஆச்ரமாலயத்தில் வைக்கப்படும் இது விஷயமாய் தேவைகஷ்டமெடுத்து தொகையைவசூல்செய்து அனுப்பப்பட்டவர்களுக்கு விசேஷபுண்யம் உண்டாகும்.

* அர்த்தமின் ஞானிதன் ஞானச் சீவனில்
வைத்திடு ஞூடேனாம் வெய்யச் சீவனி
ஞுத்த காயாளி தகி ஞானெரு
வர்த்தாய் வரிக்குமை வாகும் வையமே.
எண்ணிலா ஞானி யுடலெரி தாங்கி
லண்ணை தக்கேரிப் புவிட்ட நாடெனாக்கு
மண்ணனின் மழைவிழா வையகம் பஞ்சமா
மெண்ணுரு மன்னர் சிறப்பாராமே.

புண்ணிய மாயவர் தம்மைப் புதைப்பது
மண்ணி யனல்போக்கி ஞுட்டி வழிவாகு
மண்ணி வழிபி ஸம்ஸ்கார புங்கமா
மண்ணுல கெல்லா மயங்குமனை மண்டியே.

அர்த்தமில் ஞானி யருமை யடைத்தக்கா
லத்த வுடனுன் குலமடைய இருத்திடும்
சத்த மன்னரும் தெய்புவி புன்மெனாகு
மத்தமி விளம் வருண் பெறுவரே.

ஸச்சிதானந்த சங்கர ஞானியே
வச்சக்குப் அன்னைத்திரத்தின
நசச மாக்குயர்த் தேஹமலி யாகமை
மிச்சிலானவை யார்க்கினா வெண்ணிரே.

எப்பொருட்டனக்கு யப்பொருத் திருத்தலா லெனக்கியாரும்
ஒப்பரா லிஸ்பி ரின்று தாமென லொருவ ரில்லை
யிப்படி யறிபு மெய்யர் பக்தியே யாஞ்சிறப
யப்படி யவரு மெய்யா லக்குள மமர்ந்திருப்பார்."

என்னும் திருபகவத் பகவத்கீதை முதலானவைகளின் வாக்யங்களின்படியாய் வெளியூர்களிலுள்ள பக்தர்கள் ஸ்ரீசரண்மனி ஸ்வாமிகளின் கட்டடதர்ம கைங்கர்யத்திற்காக தொகைகளை வசூல்செய்து அனுப்பவேண்டிய விலாஸம்.

ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீச்வரர்
கட்டளை.

இப்படிக்கு,
அடியார்க்குமடியேன்:—"ஸதானந்தன்."

உபநயந காயத்ரீ ரஹஸ்யம்.

"ஜன்மனாஜாயதே ஸூத்ர:, கர்மணாஜாயதே த்விஜ:
வேதபாடாத்து விப்ராணாம், ப்ரஹ்மஜ்ஞாநாத்து ப்ராஹ்மண:."

ஜன்மனாஜாயதேஸூத்ர: - பிறந்தவுடன் ஸூத்ரனாயிருக்கின்றான்; கர்மணாஜாயதே த்விஜ: - உபநயந கர்மம் செய்வதனால் த்விஜ (இரண்டாவது ஜனனம் அடைந்தவ) னாகின்றான்; வேதபாடாத்து விப்ராணாம் - வேதங்களை வாசிப்பதனால் விப்ரனாகின்றான்; ப்ரஹ்மஜ்ஞாநாத்து ப்ராஹ்மண: - ப்ரஹ்மஜ்ஞானமடைந்தவன் ப்ராஹ்மணனாகின்றான்.

ஓ ஸஹோதரிகளே! ஓ ஸஹோதரர்களே! குழந்தையானது பிறந்தவுடன் ஸூத்ரனாயிருக்கின்றான். அவனுக்கு எட்டாவது வயதில் உபநயநம் (உப - மேல், நயநம் - கண், முக்கண்ணைத்திறப்பது உபநயநம்.) அதாவது, நெற்றிக்கண்ணைத் திறக்கச்செய்தால் இரண்டாவது ஜன்மத்தை அடைந்தவனாகின்றான். உபநயநகாலத்தில் மூன்று இழைகளையுடைய பூணூலை (பூணும்நூல் - பூணூல்,) மாத்ரம் போடுகின்றார்கள்.

ஓ யோகீஸ்வரரே! உபநயநகாலத்தில் 2, 4, 6 இழைகளையுடைய பூணூலைப்போடாமல் மூன்று இழைகளையுடைய பூணூலைமாத்ரம் போடுவதற்குக் காரணமென்ன. இதன் ரஹஸ்யத்தை தெரியச்சொல்லும் ஸ்வாமி!

நாயகர! பெரியோர்கள் இதை மஹாகோப்யமாய்வைத்து எவர்களுக்கும் உபதேசம்செய்யாமல் அனேகர்களை பரிக்ஷித்து மர்க்கடரூபமாயிருக்கும் சிஷ்யனுக்கு உபதேசித்து பிறகு தாம் மார்ஜாலரூபமாயிருந்து கற்றுக்கொடுக்கின்றார்கள். அதாவது, குரங்கின் குட்டி அனாயேஷமாயினும் தாயைவிடாமல் வயிற்றைச்சேர்த்து அணைத்துப்பிடித்து தாய் எத்தனை கிளைகளின்மீது எகிறிகுதித்தாலும் தாயைவிடாமல் தானும் தாயின் கர்ப்பத்தை கவ்விக்கொண்டு அதனுடன்

கூடவே எகிறிக்கொண்டும், நடக்கும்போது வயிற்றைவிடாமல் கவ்விக்கொண்டு செல்லும். இதுவே மர்க்கடரூபமென்று சொல்லப்படும். ஷெ குரங்குக்குட்டியைப்போல் விடாமல் ஸதாகாலமும் குருசேவை செய்துகொண்டுவரும் சிஷ்யன்மீது குருவிற்கு அனுக்ரஹமுண்டாய் இந்தரஹஸ்யத்தை உபதேசிக்கின்றார். பிறகு பூனை குட்டிபோட்டவுடன் அதை ஓரிடம் வையாமல் தான் எங்கெங்கு செல்லுகின்றதோ அங்கங்கு குட்டிகளை வாயினால் கவ்விக்கொண்டுபோய் அனேக இடங்களில் வைப்பதுண்டு. அதுபோலவே குருவானவர் குரங்குப்பிடியைப்போல் தன்னுடன்கூடவேயிருந்த சிஷ்யனுக்கு உபதேசம் செய்தபிறகு ஷெ குருவானவர் முன்சொல்லிய பூனைக்குட்டியைப்போல் சிஷ்யனை கைவிடாமல் தான் எங்கெங்கு சென்றாலும் அவனை அங்கங்கு அழைத்துச்சென்று தன் ஸமீபமாய் வைத்துக்கொண்டு ப்ரதிதினம் தான் உபதேசித்ததை அப்யாஸம்செய்யும்படி தூண்டிக்கொண்டேயிருப்பார். உபதேசிப்பதனால் இப்படிப்பட்ட கஷ்டங்கள் தமக்கு உண்டாகுமென்று எண்ணியே பெரியோர்கள் உபதேசம் செய்யாமல் ஏதோ ஓர் மந்த்ரம் ஜபிக்கும்படி சொல்லிவிட்டு சென்றுவிடுவார்கள். அப்படிப்பட்ட மஹா ரஹஸ்யம் நீ இப்போது கேட்கின்றாய். அதை எல்லோரும் அறிந்து அதுபோல் ஸ்வாநுபாவத்திற்குக் கொண்டுவர இந்நூலில் சொல்லுகின்றோம் கேட்கக்கடவாய்.

"அறியாத பாவிக்கு ஞானமேது
ஸச்சிதாநந்தன் சொன்னதொரு நூலைப்பாரு
பரிபாஷை யாகவுந்தான் சொல்லவில்லை
ப்ரஹ்மைக்ய என்னுடைய நூலைப்பாரு
விரிவாகச் சித்தர்சொன்ன நூலையெல்லாம்
வீணாக மறைப்பாகச் சொன்னாரையா
குறியான அண்டமதை யொளித்தேவிட்டார்
கூறினார் வெவ்வேறாய்க் கூறந்தானே."

நாயனே! எல்லா ஶாஸ்த்ரங்களிலும் மறைவாய்ச்சொல்லி யதுபோல் இந்த ஜீவப்ரஹ்மைக்யத்தில் சொல்லாமல் எல்லா ரஹஸ்யமும் வெட்டவெளியாய் இதில் கூறியிருக்கின்றோம். ஏனென்றால், எங்கள் பரம்பரை வெட்டவெளியாயிருப்பதனால் எல்லா ரஹஸ்யங்களும் இந்நூலில் வெட்டவெளியாகவே சொல்லிக்கொண்டு வருகின்றோம். இப்போது நீ கேட்டகேள் வியும் வெட்டவெளியே அதற்குப்பதில் சொல்லப்போவதும் வெட்டவெளியே அதாவது இப்பொழுது சொல்லப்போகும் விஷயத்தை நீ அப்யஸித்துவருவாயாகில் மனம் ஶூந்யமாய் வெட்டவெளியில் ஐக்யமாய்விடுவாய். ஆதலால், அதனை இத னடியில் சொல்லுகின்றோம்கேள்.

நமது ஶரீரத்தில் எழுபத்தீராயிரம் ரோமத்வாரங்களுண்டு இதையே எழுபத்தீராயிரம் நாடிகளென்று சொல்லுவார்கள். இதில் நூற்றெட்டுநாடிகள் ஶ்ரேஷ்டமானவைகள். அதில் ஸுஷும்நா இடா பிங்களா குஹூ ஸரஸ்வதி பயஸ்வினி பூஷ விஶ்வோதர வருணா ஹஸ்திஜிஹ்வா யஶஸ்வினி ஶங்கினி காந்தாரி அலம்புஸா என்னும் இந்த பதினான்கு நாடிகளும் ஶ்ரேஷ்டமான வைகள். இவைகளிலும் ஸுஷும்நா இடா பிங்களா என்னும் இம்மூன்று நாடிகளும் மிகவும் ஶ்ரேஷ்டமானவைகள். இம் மூன்று நாடிகளும் வலது இடது நாஸிகைகளிலும் புருவமத்தி யிலும் இருந்துகொண்டு உஶ்வாஸ நிஶ்வாஸங்களாய் ஆடிக் கொண்டிருக்கின்றன. இந்தமூன்று நாடிகளே மூன்று யஜ்ஞோ பவீதமென்று (பூணூலென்று) அறியக்கடவாய்; கழுத்தில் தரித்திருக்கும் யஜ்ஞோபவீதம் கைகளால்பிடித்து அறுக்கத் தக்கதும் ஆவணியாவட்டம் காலத்தில் கழற்றி எறியத்தக்கது மாயிருக்கின்றது. ஶரீரத்தில் மூக்கின் ரந்த்ரங்களின் வழியாய் ஆடிக்கொண்டிருக்கும் யஜ்ஞோபவீதம் கைகளால் பிடிக்கத் தக்கதும் ஆவணியாவட்டம் காலத்தில் கழற்றி எறியத்தக்கது மல்ல; அன்றியும் உபநயனகாலத்தில் வந்த நூலிழை யஜ் ஞோபவீதம்போல் மத்தியில் வந்ததல்ல. இது அநேகஜன்மாந்

ரங்களாய் ஜாதி குலபேதமில்லாமல் அந்தந்த வம்ஶத்தில் ஜனனகாலம்முதல் மரணகாலம்வரையில் ஶரீரத்துடன்கூடவே வந்துகொண்டிருக்கின்றது. இதற்கே யஜ்ஞோபவீதமென்று சொல்லப்படும். மத்தியில் உபநயனமென்று பெயர்வைத்து மூன்று நூலிழைகளை கழுத்தில் தரித்துக்கொள்வது யஜ் ஞோபவீதமல்ல. ஆதலால், ப்ராணமென்னும் யஜ்ஞோபவீ தத்தை வெளிவிடாமல் கர்ப்பத்தில் நிறுத்தி ஸ்த்ரீ புருஷர் களும் காயத்ரீமந்த்ரம் ஜபித்துவரவேண்டும். புருஷர்கள்மாத்ரம் அப்யஸித்து ஸ்த்ரீகள் அப்யஸிக்காவிட்டால் அவர்களை ஶூத்ர ஸ்த்ரீகளே என்று சொல்லலாம். ஸந்த்யாவந்தன மென்பது ப்ராணாயாமமேயொழிய மூக்கின்மீது விரல்களை வைத்து காயத்ரீமந்த்ரம் கர்மவாக்கில் ஜபித்துக்கொண்டிருப் பதல்ல. அப்படி ஜபம்செய்பவர்களை கர்ம ப்ராஹ்மணர்க ளென்றேசொல்லப்படும். ப்ராணவாயுவை கும்பித்து (நிறுத்தி) ஸப்த வ்யாஹ்ருதிகள் காயத்ரீமந்த்ரம் ஶிரோமந்த்ரங்களுடன் மூன்றுமுறைகள் ஹ்ருதயத்தில் ஜபிப்பது ஒரு ப்ராணாயாம மாகின்றது. இது, மைத்ரேயி ஸுலப ஶார்ங்கி ஶாண்டிலி தபஸ்வினி என்னும் முதலாகிய ஸ்த்ரீகளும் இன்னும் அநே கர்களும் அப்யஸித்துவந்து யோகஸித்தியினால் ஜ்ஞான மடைந்தார்கள். ஆதலால், ப்ரஹ்ம க்ஷத்ரிய வைஶ்ய ஶூத் ரர்களாகிய இந்நான்கு வர்ணஸ்தர்களும் ஸந்த்யாவந்தனம் செய்யவேண்டிய க்ரமம் இதனடியில் சொல்லுகின்றோம். அது போல் ஒவ்வொருவரும் அப்யஸித்துவரவேண்டும்.

"ஆதுவா னந்தவஸ்தி யுச்சியென்றால்
அப்பனே ரவிமதியுங் கடர்மூன்றுங்கூடும்
ஏகுவாய் மூன்றுமொன்றாய்ப் பின்னலாகி
இருந்திடமே பரம்மாண்ட நிலையதாகும்
போகுமே நீசெய்த கர்மமெல்லாம்
புவனதிரி சூலியுட னிருப்பையாலே
வாகுமே ஸ்ருஷ்டியோடே சேர்ந்தாயானால்
வாணியுந்தான் நாவில்நடனஞ் செய்வாள்பாரே."

இதனடியில் சொல்லப்போகும் மூன்றுபாடிகளையும் ஒன்றாய்ச்சேர்த்து காயத்ரீமந்த்ரம் ஜபித்துவந்தால் ஸஞ்சிதமென்னும் கர்மமெல்லாம் பஸ்மமாகி அதாவது, ஸ்தூல, ஸூக்ஷ்ம காரண சரீரங்கள் மூன்றும் கடந்து மஹத்தாகிய மோக்ஷானந்த பதவியை அடையலாம்.

உபநயந காயத்ரீ மந்த்ரோபதேசம்.

"ஓம் பூ: ஹம்ஸஸ்ஸோஹம் - ஓம் புவ: ஹம்ஸஸ்ஸோஹம்
ஓம் ஸுவ: ஹம்ஸஸ்ஸோஹம் ஓம் மஹ: ஹம்ஸஸ்ஸோஹம்
ஓம் ஜந: ஹம்ஸஸ்ஸோஹம் - ஓம் தப: ஹம்ஸஸ்ஸோஹம்
ஓம் ஸத்யம் ஹம்ஸஸ்ஸோஹம் - ஓம் தத்ஸவிதுர்வரேண்யம்
ஹம்ஸஸ்ஸோஹம்
ஓம் பர்கோதேவஸ்ய தீமஹி ஹம்ஸஸ்ஸோஹம்
ஓம் தியோயோந: ப்ரசோதயாத் ஹம்ஸஸ்ஸோஹம்
ஓம் ஆபோஜ்யோதீ ரஸோம்ருதம் ப்ரஹ்ம
பூர்புவஸ்ஸுவரோம் ஹம்ஸஸ்ஸோஹம் தத்வமஸி."

இந்த காயத்ரீமந்த்ர ரஹஸ்யத்தினால் "தத்வமஸி"; தத் - பரப்ரஹ்மம், த்வம் - ஜீவாத்ம ஸ்வரூபமாயிருக்கப்பட்ட நீ, அஸி - ஆகின்றாய். அதாவது, இந்த காயத்ரீமந்த்ரம் ஜபித்து வந்தால், ஜீவாத்மஸ்வரூபமாயிருக்கும் நீ அந்த ஸாக்ஷாத் பரப்ரஹ்ம ஸ்வரூபமாகின்றாய்.

'ஓம்' என்னும்பீஜம் வேதங்களுக்கு ப்ரதம அக்ஷரமாயிருக்கின்றது. மேற்சொல்லிய ஹம்ஸகாயத்ரியில் (தத்ஸவிதுர்வரேண்யம்) (பர்கோதேவஸ்ய தீமஹி) (தியோயோந: ப்ரசோதயாத்) என்னும் இம்மூன்று வாக்கியங்களும் 'அ' கார 'உ' கார 'ம' காரங்களாய், த்ர்யக்ஷரமாயிருக்கின்றது. இந்த ப்ரணவாக்ஷரம் ரேசகமே 'அ' காரம்; பூரகமே 'உ' காரம்; கும்பகமே 'ம' காரம். இந்த 'ஓம்' காரமே 'ஸோஹம்.' 'ஸோ' என்பதில் 'ஓ' என்னும் ஜீவாக்ஷரமும், 'ஹம்' என்பதில் 'ம்' என்னும் ஜீவாக்ஷரமும் சேர்ந்து 'ஓம்' என்னும் பதம்

உண்டாயிற்று. ஆதலால், இந்த த்ரிலோகமும் ஓங்காரமாகவே யிருக்கின்றது. இந்த 'அ' கார 'உ' கார 'ம' காரமென்னும் * ரேசக, † பூரக, ‡ கும்பகங்களினால் குண்டலிசக்தி மேல்கிளம்பி தபஸித்வாதங்கள் கேட்கும். இதுவிஷயம் முன் சொல்லப்படும்.

நுரையீரலில் தங்கியிருக்கும் ஶ்வாஸமெல்லாம் நாஸிகாரந்த்ரங்களின் வழியாய் வெளியில் விட்டுவிடுவது 'அ' காரம், அதன் தொடர்ச்சியாகவே ஶ்வாஸம் உள்ளுக்கிழுப்பது 'உ' காரம் உள்ளுக்கிழுத்த ஶ்வாஸம் வெளிவிடாமல் கர்ப்பத்தில் நிறுத்துவது 'ம' காரம். பத்மாஸனத்திலாவது அல்லது ஸித்தாஸனத்திலாவது உட்கார்ந்து இடதுகை நடுவிரலால் இடதுநாஸியை மூடி நுரையீரலில் தங்கியிருக்கும் ஶ்வாஸத்தை எல்லாம் வலதுநாஸியின்வழியாய் விட்டுவிட்டு அதன் தொடர்ச்சியாகவே ஶ்வாஸம் உள்ளுக்கிழுக்கவேண்டும். உள்ளுக்கிழுக்கும்போது ஓம்! ஓம்! ஓம்! ஓம்! என்னும் மந்த்ரத்தை ஶ்வாஸத்துடன்சேர்த்து மனதினால் உச்சரித்துக்கொண்டு உள்ளுக்கிழுத்து முடிந்தவுடன், மூக்கின் மீதிருக்கும் இடதுகை எடுத்துவிட்டு ஶ்வாஸம் வெளிவிடாமல் நிறுத்தி இரண்டுகைகளையும் இரண்டு தொடைகளின் மீதுவைத்து,

"ஓம் பூ:, ஓம் புவ:, ஓம் ஸுவ:, ஓம் மஹ:, ஓம் ஜந:, ஓம் தப:,
ஓம் ஸத்யம்; ஓம் தத்ஸவிதுர்வரேண்யம்; பர்கோதேவஸ்ய தீமஹி,
தியோயோந: ப்ரசோதயாத், ஓம் ஆபோஜ்யோதீரஸோம்ருதம்
ப்ரஹ்ம பூர்புவஸ்ஸுவரோம்."

என்னும் காயத்ரீமந்த்ரம் மனதினால் உச்சரித்து முடிந்தவுடன் மறுபடியும் இடதுநாஸியைமூடி வலதுநாஸியின் வழி

---

* ரேசகம் - ஶ்வாஸம் வெளியில் விடுவது.
† பூரகம் - ஶ்வாஸம் உள்ளுக்கிழுப்பது.
‡ கும்பகம் - உள்ளுக்கிழுத்த ஶ்வாஸம் வெளிவிடாமல் நிறுத்துவது.

யாய் கொஞ்சம் ஸ்வாஸம் "ஓம்" என்று வெளியில் விட்டு மறுபடியும் ஸ்வாஸம் எவ்வளவுகொள்ளுகின்றதோ அவ்வளவு ஸ்வாஸம் "ஓம்" என்னும் மந்த்ரம் சேர்த்து வலது நாஸியின் வழியாய் உள்ளுக்கிழுத்து விழுங்கி புருவமத்தியில் 1 - என்று மனதினால் லக்ஷம்வைத்து அந்தலக்ஷத்தின்மீது த்ருஷ்டி வைத்து முன்சொல்லியதுபோல் காயத்ரீமந்த்ரம் சொல்லி முடிந்தவுடன் முன்போல் இடது நாஸியைமுடி வலதுநாஸியின் வழியாய் கொஞ்சம் ஸ்வாஸம் "ஓம்" என்று வெளியில் விட்டு மறுபடியும் "ஓம்" என்னும் மந்த்ரம் ஸ்வாஸத்துடன் சேர்த்து வலதுநாஸியின்வழியாய் உள்ளுக்கிழுத்து விழுங்கி புருவமத்தியில் முன்வைத்திருந்த 1 - என்னும் லக்ஷத்தை மனதினாலேயே எடுத்துவிட்டு 2 - என்று அப்புருவமத்தியில் லக்ஷம்வைத்து அந்தலக்ஷத்தின்மீது த்ருஷ்டி நிறுத்தி மறுபடியும் முன்சொல்லியதுபோல் காயத்ரீ சொல்லிமுடிந்தவுடன் முன்போல் இடது நாஸியைமுடி வலதுநாஸியின் வழியாய் கொஞ்சம் ஸ்வாஸம் "ஓம்" என்று வெளியில்விட்டு மறுபடியும் "ஓம்" என்னும் மந்த்ரம் ஸ்வாஸத்துடன் சேர்த்து வலதுநாஸியின்வழியாய் உள்ளுக்கிழுத்து விழுங்கி புருவமத்தியில் முன்வைத்திருந்த 2 - என்னும் லக்ஷத்தை மனதினாலேயே எடுத்துவிட்டு 3 - என்று மனதினால் லக்ஷம்வைத்து அந்த லக்ஷத்தின்மீது த்ருஷ்டி நிறுத்தி மறுபடியும் முன்சொல்லியது போல் காயத்ரீமந்த்ரம் சொல்லிமுடிந்தவுடன் வலதுகை விரலால் வலதுநாஸியைமுடி தலையைப் புறகே கெட்டியாய் இழுக்கிக்கொண்டு இடதுநாஸியில் "ஓம்" என்னும் மந்த்ரத்துடன் 4 - அங்குலஸ்வாஸம் வெளியில்விட்டு, மறுபடியும் அந்த 4 - அங்குல ஸ்வாஸத்தையே "ஓம்" என்று உள்ளுக்கிழுத்து இடது நாஸியைமுடி வலதுநாஸியைத்திறந்து முன் சொல்லியதுபோல் "ஓம்" என்னும் மந்த்ரத்துடன் 4 - அங்குல ஸ்வாஸம் வெளியில்விட்டு, 4 - அங்குலஸ்வாஸம் உள்ளுக்கிழுத்து வலதுநாஸியைமுடி இவ்விதமாய் ஸ்வாஸத்தின்வேகம் அடங்

கும் வரையில் "ஓம்" என்னும் மந்த்ரத்துடன் 4 - அங்குலம் வரையில் ஸ்வாஸம் வெளியில்விட்டு அதே அளவு ஸ்வாஸத்தை மறுபடியும் உள்ளுக்கிழுத்து இவ்விதமாய் நாஸிகைகளை மாற்றி மாற்றி ஸ்வாஸத்தின்வேகம் அடங்கும்வரையில் நிதானமாய் விட்டு மற்றஸ்வாஸத்தை எல்லாம் காயத்தில் நிறுத்திவைக்க வேண்டும். இவ்விதமாய் ஸ்வாஸத்தை நிறுத்தி வலதுநாஸியில் மூன்று காயத்ரீஜபம் செய்தால் இது ஒருகாயத்ரீயாகும். ஒருகாயத்ரீ செய்துமுடிந்தவுடன் இளைப்பாறுவதற்காக ஐந்து நிமிஷங்கள் நிஷ்டையிலிருந்து மறுபடியும் முன்செய்தது போல் இடதுநாஸியிலும் செய்யவேண்டும்.

இடதுநாஸியில் மூன்றுமுறை ஸ்வாஸம்நிறுத்தி மூன்று காயத்ரீ ஜபம்செய்தால் இது இரண்டாவது காயத்ரீஜபம் செய்ததாகும்.

வலது இடது நாஸிகைகளிலும் செய்துமுடிந்தவுடன் உள் தங்கியிருக்கும் ஸ்வாஸமெல்லாம் இரண்டு நாஸிகைகளின் வழியாய் வெளிவிடுவதற்காக பெருவிரல் மோதிரவிரல்களை வலது இடது நாஸிகளின்மீது வைத்து (உலைக்களத்தில் கன்னான் இரண்டு துருத்திகளை வைத்து இரண்டுகைகளால் மாற்றி மாற்றி ஊதுவதுபோல்) உள் தங்கியிருக்கும் ஸ்வாஸமெல்லாம் சிறுகச்சிறுக இரண்டுநாஸிகைகளின்வழியாய் விரல்களால் மாற்றிமாற்றி எல்லாஸ்வாஸமும் இரண்டுநாஸிகளிலும் ஸமமாய் வெளியில்விட்டு அதன் தொடர்ச்சியாகவே இரண்டு நாஸிகளிலும் ஸ்வாஸம் ஸமமாய் உள்ளுக்கிழுத்து நிறுத்தி முன்சொல்லியதுபோல் காயத்ரீமந்த்ரம் மூன்றுமுறைகள் ஜபிக்கவேண்டும். இவ்விதமாய் காலை பகல் மாலை இம்மூன்று வேளைகளிலும் ப்ரதிதினம் அப்யாஸம் செய்துவரவேண்டும். இதற்குப்பலன் யாதெனில் ப்ரதிதினம் செய்துவரும் ஆகாம்யமென்னும் புண்யபாபங்களெல்லாம், காயத்ரீஜபம் அக்நியினால் பஸ்மமாய்விடுவதேயல்லாமல் அநேகஜன்மங்களாய் வந்துகொண்டிருக்கும் ஸஞ்சிதமென்னும் புண்யபாபமும்

களின் மூட்டையும் பஸ்மமாய்விடும். அதாவது, ஸ்தூல ஸூக்ஷ்ம காரண சரீரங்களுக்கு விதையாயிருக்கும் ஸஞ்சித மென்னும் மூட்டை தக்தமாவதனால் புனர்ஜன்மமில்லாத விதேஹ கைவல்யபதவியை அடையலாம்.

ஸ்வாஸத்தைநிறுத்தி முன்சொல்லிய பதினொருகாயத்ரீ மந்த்ரங்களையும் ஜபிப்பதற்கு உங்களால் ஸாத்யமாகமாட்டா. பின்னெவ்வாறு ஜபிக்கவேண்டுமென்றால்; ஸ்வாஸத்தை முன்சொல்லியதுபோல் இழுத்துநிறுத்தி "ஓம்பூ:," "ஓம் புவ:," "ஓம்ஸுவ:," "ஓம்மஹ:," "ஓம்ஜந:" என்னும் இந்த ஐந்துமந்த்ரங்களையும் ஜபித்து முடிந்தவுடன், ஸ்வாஸத்தை "ஓம்" என்னும்மந்த்ரத்துடன் கொஞ்சம்ஸ்வாஸம் வெளியில் விட்டு மறுபடியும் "ஓம்" என்னும்மந்த்ரத்துடன் விசேஷமாய் ஸ்வாஸம் எவ்வளவுகொள்ளுகின்றதோ அவ்வளவு ஸ்வாஸம் உள்ளுக்கிழுத்துநிறுத்தி மறுபடியும்முன்சொல்லிய ஐந்து மந்த்ரங்களைஜபித்து இவ்விதமாய் மூன்றுமுறைகள் ஒவ்வொரு காலையிலும் ஒருமாதம்வரையில ப்ரதிதினம் மூன்றுவேளையாகிலும் அல்லது இரண்டுவேளையாகிலும் செய்துவரவும். பிறகு இனி ஓர்மந்த்ரம் அதிகமாய்ச் சேர்த்துக்கொள்ளலாமென்று உங்களுக்கு மனோதைர்யம் உண்டானால், ஓர்மந்த்ரம் அதிகமாய்ச்சேர்த்து ஸ்வாஸத்தைநிறுத்தப்பழகியபின் உங்கள் சரீரத்திற்கு யாதொரு பாதையுமில்லையென்று மனோதைர்யமாயிருந்தால் இன்னொருமந்த்ரம் அதிகமாயுச்சரிக்கும்வரையில் ஸ்வாஸத்தை நிறுத்தப்பழகவேண்டும். இவ்விதமாய் சிறுகச்சிறுக நாளாவட்டத்தில் ஒவ்வொரு மந்த்ரமாய் உயர்த்திக்கொண்டு போகவேண்டியதேயொழிய சீக்ரமாய் ஸித்தி அடையவேண்டுமென்று எண்ணி முரட்டுத்தனமாய் ஸ்வாஸத்தை அதிகநேரம் நிறுத்தலாகாது. அப்படி நிறுத்துவீர்களானால்;

"யதாஸிம்ஹோகஜோ வ்யாக்ரோ பவேத்வஸ்ய: ஸநைஸ்ஸநை:
ததைவஸேவிதோவாயு ரந்யதா ஹந்திஸாதகம்"

என்னும் ஸாண்டில்யோபநிஷத்வாக்யாநுஸாரம் ஸிம்ஹம் யானை புலி முதலானவைகளை நாளாவட்டத்தில் எப்படி வசமாய் படித்திக்கொள்ளுகின்றார்களோ அதுபோலவே சிறுகச்சிறுக நாளாவட்டத்தில் அப்யாஸம்செய்துவரும் வாயு வசமாகும். அப்படிக்கல்லாமல் சீக்ரம்சீக்ரமாய் செய்துவந்தால் அது, ஸிம்ஹம் புலி முதலானவைகளைப்போல் அப்யாஸியைக்கொல்லும். ஆதலால், நீங்கள் ஸ்வாஸத்தைநிறுத்தி காயத்ரீமந்த்ரங்களை ஒன்றின்பின் ஒன்றாய் நாளாவட்டத்தில் உயர்த்திக்கொண்டே வரவேண்டும்.

ஆனால், இந்தகாயத்ரீமந்த்ரம் கடைசியில் 'ஓம்ஆபோஜ்யோதீ ரஸோம்ருதம் ப்ரஹ்ம பூர்புவஸ்ஸுவரோம்' என்று ஜாஸ்தியாய் சொல்லவேண்டியதாயிருக்கின்றது; ஸ்வாஸத்தை நிறுத்தி இவ்வளவு பெரிதாகியமந்த்ரம் ஜபிப்பதற்கு அவ்விடம் அவகாசமிராது. ஆகலால், இதைவிட ப்ராணாயாமத்தில் சொல்லிய "ஓம்" என்னும் ஏகாக்ஷரமந்த்ரம் எடுத்துக்கொண்டு ஜபித்துவந்தால் அவ்வளவுகஷ்டமிராது. ஆதலால், இதைவிட ப்ராணாயாமம் செய்துவருவதே விசேஷமானதாயிருக்கின்றதென்று தோன்றுகின்றது. ஆனால், உங்கள் கருத்து எப்படியிருக்கின்றதோ அதுபோல்செய்துவரலாம். அதாவது, ப்ராணாயாமம்செய்ய இஷ்டமோ அல்லது காயத்ரீசெய்ய இஷ்டமோ அதுபோல் செய்துவரலாம்.

ப்ராணாயாமம் அல்லது, காயத்ரீஜபம் செய்துவரப்பட்டவர்களுக்கு ஸதாகாலமும் நாதசப்தம் கேட்டுக்கொண்டேயிருக்கும். அது உபநிஷத்துகளின் திருஷ்டாந்தங்களுடன் முன்சொல்லப்படும்.

நில்லடா வாக்குமன மொன்றாய்நில்லு
நிச்சயத்தைப் பற்றிபினி நினைவாய்நில்லு
அல்லடா ஆறுதலங் கடந்தீரானால்
ஆயிரத் தெட்டிமாற் றழகுமுண்டு

வல்லடா வாசியைத்தான் மேலேநோக்கு
மைந்தனே கீழ்நோக்க மாட்டாதப்பா
அல்லடா இதையறிந்து செய்தீரானால்
ஆத்மாவும் நீயாச்சு ஞயாபாரே.

முன்சொல்லியதுபோல் கஷ்டப்பட்டு ஶ்வாஸத்தை நிறுத்தி காயத்ரீமந்த்ரம் ஜபித்து வருவதனால் உண்டாகும் பலன் யாதெனில்;

"யாமமாத்ரம் வாஸுதேவம் சிந்தயேத் கும்பகேநய:
ஸப்தஜந்மார்ஜிதம் பாபம் தஸ்யாஶ்யதி யோகிந:"

என்னும் த்ரிஶிகி ப்ராஹ்மணோபநிஷத் வாக்யரீதியாய் இரண்டரைமணிநேரம் ஶ்வாஸம் வெளிவிடாமல் கர்ப்பத்தில் நிறுத்தினால் ஏழு ஜன்மங்களாய் செய்துவந்த புண்ய பாபங்களெல்லாம் நசித்துவிடும். இதுபோல் ஸதாகாலமும் ஶ்வாஸம் வெளிவிடாமல் கர்ப்பத்தில் நிறுத்தி அப்யஸித்துவரும் புண்ய புருஷர்களின்மஹிமையை சொல்லவும்வேண்டுமோ? ஆதலால் இதை வாசிக்கும் அன்பர்களாவரும் ப்ராணாயாமம் செய்யும்பொழுது ஶ்வாஸம் கர்ப்பத்தில் நிறுத்தவேண்டும். அந்தஸமயம்மாத்ரம் கர்ப்பத்தில் கொஞ்சம் பாதையை உண்டாக்கும். ப்ராணாயாமம்செய்வது கஷ்டமென்று யோசிக்கவேண்டாம். 25 - ப்ரணவங்கள் எண்ணும்வரையில் ஶ்வாஸம்நிறுத்தப்பழக வேண்டும். இவ்விதமாய் மூன்றுமாதங்கள் பழகியபின் நான்காம்மாதம் ஐம்பது எண்ணும்வரையில் அப்யாசம்செய்யவேண்டும். இவ்விதமாய் மூன்றுமாதத்திற்கொருதரம் இருபத்தைந்து உயர்த்திக்கொண்டேசென்றால் எவ்விதகஷ்டங்களும் இல்லாமல் ஸித்திபெறலாமென்று அறிவீர்களாக.

ப்ராணயாம ப்ராணலயம்.

"ஜ்ஞாத்வா ஸுஷும்நா ஸத்பேதம் க்ருத்வா வாயும் ச மத்யகம்
ஸ்தித்வா ஸதைவ ஸுஸ்தாநே ப்ரஹ்மரந்த்ரே நிரோதயேத்."

"ஸுராஜ்யே தார்மிகே தேஶே" நல்லராஜ்யமும் தர்மமுடைய தேஶமும் என்று சொல்லப்பட்ட லக்ஷணமுடைய நல்ல ஸ்தானத்தில் வஸித்து, ஸுஷும்நா என்னும் ஸத்ய நாடியை ஸரியாய்பேதிக்கும் ஸ்திதியை குருமுகமாய் அறிந்து ப்ரஹ்மதண்டி (முதுகெலும்பின்) மத்தியிலிருக்கும் வெள்ளை நரம்பின் சிறியரந்த்ரத்தின் வழியாய், ப்ராணவாயுவை, மத்தியில் போகும்படிசெய்து, ப்ரஹ்மரந்த்ரத்தில் நிறுத்தவேண்டும். வாஸிஷ்டத்தில்,

"அப்யாஸேந பரிஸ்பந்தே ப்ராணாநாம் க்ஷயமாகதே
மந: ப்ரஶம மாயாதி நிர்வாண மவஶிஷ்யதே."

அப்யாஸத்தினால் ப்ராணத்தினுடைய சலனத்திற்கு நாஶம் உண்டானபோது மனம் மிகவும் ஶாந்தி அடைகின்றது; அப்போது ஆகாஶம் ஶேஷமாய் நிற்கும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ப்ராணவாயு மனோவாயு இவ்விரண்டும் லயமானபோது எண்ணங்களெல்லாம் ஸமாதியிற்கூடிய அந்தக்கரணத்தில் ஐக்யமாய், ஆத்மஸாக்ஷாத்காரமுண்டாகின்றது. அப்போது ஜீவஸ்வரூபியாயிருந்து முக்தனாகின்றான். ஸுஷும்நா மார்க்கமாய் வாயு, ப்ரஹ்மரந்த்ரத்தில் எப்பொழுது ஸஞ்சரிக்கின்றதோ, அப்பொழுது அல்லும் பகலும் ஸ்வரூபமான காலம் அல்லாததால் "ஸுஷும்நா" காலத்தை புஜிக்கத்தக்கதாயிருக்கின்றது என்று சொல்லப்படும்.

எதுவரையில் ப்ரஹ்ம கபாலத்தில் வாயு செல்லுகின்றதோ அதுவரையில் யோகிகளுக்கு ஆயுர் விருத்தியாகின்றது. நீர்க்கலாம் ஸமாதியை அப்யஸித்த யோகியானவன் பூர்வமே மரணகாலத்தைத்தெரிந்துகொண்டு ப்ரஹ்மரந்த்ரத்தில் ப்ரா

னவாயுவை நிறுத்திக் காலனை ஜயிக்கின்றான். தனக்கிஷ்டமானபோது ப்ராணனை விட்டுவிடுவான். (இதற்கு திருஷ்டாந்தம் ஸ்ரீ கபீர்தாஸ் சரித்ரம் பார்க்க.

"த்வாஸப்ததி ஸஹஸ்ராணி நாடீ த்வாராணி பஞ்ஜரே
ஸுஷும்நா ஶாம்பவீ ஶக்தி: ஶேஷாஸ்த்வேவ நிரர்தகா:."

இச்சரீரக் கூண்டில் எழுபத்தீராயிர நாடிகளிலும் வாயு ப்ரவேசிக்கும் மார்க்கம் உண்டு. அவைகளில் ஸுஷும்நா என்னும் மத்யநாடி ஶாம்பவிஶக்தியாகும். மற்ற இடாபிங்களா முதலானவைகள் ப்ரயோஜனமற்றவை. எழுபத்தீராயிரம் நாடிகளில்; ஸுஷும்நா, இடா பிங்களா குஹூ, ஸரஸ்வதி பயஸ்வினி, பூஷா, விஶ்வோதரா, வருணா, ஹஸ்திஜிஹ்வா, யஶஸ்வினி, ஶங்கினீ, காந்தாரி, அலம்புஷா என்னும் பதினான்கு நாடிகள் ஶ்ரேஷ்டமானவை. இவைகளிலும் ஸுஷும்நா, இடா பிங்களா என்னும் மூன்றுநாடிகள் ப்ரதானமானவை. அவைகளில்ஸுஷும்நா நாடியே ஶ்ரேஷ்டமானது. இதுவே ப்ரஹ்ம நாடியென்று சொல்லப்படும். இதற்கு தேவதை ஶிவன் ஸுஷும்நாநாடிக்கு இடது பாகத்திலிருப்பது இடாநாடி; அது இடது நாஸியில் வ்யாபித்திருக்கும். இதற்கு தேவதை விஷ்ணு. ஸுஷும்நாநாடிக்கு வலதுபாகத்திலிருப்பது பிங்களாநாடி அது வலதுநாஸியில் வ்யாபித்திருக்கும். இதற்கு தேவதை ப்ரஹ்மா. இப்படியாக பதினான்குநாடிகளிலும் பதினான்கு தேவதைகள் வஸித்துக்கொண்டு அரச இலையைப் போன்றநரம்புகள் கிளை கிளைகளாய் இச்சரீரத்தில் ஓடிக்கொண்டிருக்கின்றன. யோகாப்யாஸத்தால் ப்ராணவாயு கட்டுப்படும்.

"பவனோ பத்யதே யேந மநஸ்தேநைவ பத்யதே
மநஶ்ச பத்யதே யேந பவநஸ்தேந பத்யதே."

"மனமன மெங்குண்டு வாயு அங்குண்டு மனமன மெங்கில்லை வாயு அங்கில்லை" என்பதுபோல், எந்தயோகியினால் ப்ராணவாயு கட்டப்படுகின்றதோ அந்த யோகியினால் மனம் கட்டப்படுகின்றது: எவனால் மனம் கட்டப்படுகின்றதோ அவனால் ப்ராணன் கட்டப்படுகின்றது. மனம் ப்ராணன் என்னும் இவ்விரண்டில் ஒன்றைக்கட்டினால் இரண்டாவதும் கட்டுப்படுவது திண்ணம்.

"ஹேதுத்வயம்ஹி சித்தஸ்ய வாஸநா ச ஸமீரண:
தயோர்விநஷ்ட ஏகஸ்மிம் ஸ்தேந த்வா வபிவிநஶ்யத:."

சித்தத்திற்கு ப்ராணசலனமும் வாஸனை, அவைகளில் ஒன்று நஷ்டமானால் இரண்டாவதும் உடனே நஷ்டமாகுமென்று சொல்லப்பட்டிருக்கின்றது.

"ஸதுதீர்க்ககாலநைரந்தர்யஸத்கா ராஸேவிதோ த்ருடபூமி:."

அநேக ஜன்மங்களாய் ஶ்ரத்தா பக்த்யாதி குணங்களுடன் கூடி நிரந்தரம் அநேககாலமாய் செய்யப்பட்ட அப்யாஸத்தினால் அநாதியாய் வந்துகொண்டிருக்கும் ஸர்வவாஸனைகளும் நஶித்து முக்திபெற, யோகஸாதனத்திற்கு மார்க்கத்தை யுண்டாக்கும். யோகாப்யாஸம் அப்யஸிக்க எண்ணங்கொண்ட புருஷன் தினங்களிலாகிலும் மாஸங்களிலாகிலும் யோகத்தினுடைய ஸித்தியை எண்ணங்கொண்டால் உண்டாகமாட்டாது. அநேக வருஷங்களிலாகிலும் அநேக ஜன்மங்களிலாகிலும் யோகம் ஸித்திக்குமென்று எண்ணி அநேககாலம் அப்யஸிக்கவேண்டும். யோகம் அநேககாலம் செய்தாலேயொழிய ஸித்தியுண்டாக மாட்டாதென்று உபநிஷத்துகளில் சொல்லப்பட்டிருக்கின்றது.

"அநேகஜன்ம ஸம்ஸித்த: ததோயாதி பராங்கதிம்."

அநேக ஜன்மங்களாய் யோகம் அப்யஸிப்பதனால் ஸித்தியுண்டாகும், பிறகு மோக்ஷம் ஸித்திக்கும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

"ருஸ்யகஸ்மிக்ஶ்ரிதேவாங்கபவத்யதீ:
நித்யத்ருப்த: ப்ரஶாந்தாத்மா ஸ ஆத்மந்யேவ திஷ்டதி."

தத்வஜ்ஞானமுடைய யோகி, ஆத்மாவிற்கு வ்யதிரிக்தமான எப்படிப்பட்ட விஷயங்களிலும் புத்தியை ப்ரவர்த்திக்கச்

செய்யமாட்டான். ஸர்வகாலத்திலும் அத்யந்த த்ருப்தியுடையவனாய் ராகத்வேஷாதி ஶூன்யமாய் சித்தத்துடன் கூடிக்கொண்டு, பரமாத்மாவிலேயே நிஷ்டையுடையவனா யிருப்பான்.

"மஹாபுருஷோயச்சித்தம் தஸ்ஸர்வதாமய்யேவாவதிஷ்டதே
தஸ்மாதஹம்ஸ தஸ்மிந்நேவ ஸ்தீயதே."

என்னும் உபநிஷத்வாக்யரீதியாய் வேதோக்தமாகிய ஜ்ஞானகர்மங்களை அனுஷ்டிக்கப்பட்டவர்களில் யோகியாகிய பரமஹம்ஸரு மிகவும் உத்தமன். ஆதலால், அவனை மஹாபுருஷனென்றே சொல்லப்படும். அந்த மஹாபுருஷன் ஸம்ஸாரவிஷயங்களில் வ்யாபித்துக்கொண்டிருக்கும் சித்தவ்ருத்திகளையெல்லாம் அப்யாஸவைராக்யத்தினால் நிரோதித்திருப்பதனால் தனதுசித்தம் எப்பொழுதும் பரமேஶ்வரனான என்னிடத்திலேயே லயித்திருக்கும். ஆகையால், நானும் யோகியினுடைய சித்தத்தில் ஸச்சிதானந்த அத்விதீய பரப்ரஹ்மஸ்வரூபத்துடன் ஆவரித்துக் (கலந்து) கொண்டிருப்பேன். அஜ்ஞானிகளாகிய புருஷர்கள் அவித்யையினால் மூடப்பட்டிருப்பார்கள். அவர்களிடத்தில் நான் இருக்கமாட்டேன். தத்வவேத்தர்களாக இருந்தபோதிலும் யோகியாகாதவர்கள் பாஹ்ய (வெளி) விஷயங்களில சித்தவ்ருத்தி யுடையவர்களாதலால் அவர்களிடத்திலும் நான் இருக்கமாட்டேன் என்று ஶ்ருதியில் சொல்லப்பட்டிருக்கின்றது.

"தர்ஶனா தர்ஶநே ஹித்வா ஸ்வயம் கேவலரூபத:
யஸ்திஷ்டதி ஸதுப்ரஹ்மன் ப்ரஹ்மந ப்ரஹ்ம வித்ஸ்வயம்."

எந்தப்புருஷன் ஜ்ஞான அஜ்ஞானங்கள் இரண்டையும் கேவல ஸ்வரூபத்தில் ப்ரகாசிக்கச்செய்கின்றானோ அப்புருஷன் ஸாக்ஷாத் பரப்ரஹ்மமேயொழிய ப்ரஹ்மவேத்தனென்று சொல்லப்படமாட்டான்.

ஶ்லோ || "ஸர்வேப்ரஹ்ம வதிஷ்யந்தி ஸம்ப்ராப்தேது கலௌயுகே
நாநுதிஷ்டந்தி மைத்ரேய ஶிஶ்னோதர பராயணா."

கலியுகம் உண்டானவுடன் ப்ரபஞ்சத்திலுள்ள மனிதர்கள், பரப்ரஹ்மமென்று சொல்லுகின்றார்களே யொழிய ஜ்ஞானஸ்வரூபமான அனுஷ்டானங்களில்லாமல் ஸ்த்ரீ ஸம்போகம் உதரபோஷணம் இவைகளில் ஆஸையுடையவர்களாயிருக்கின்றார்கள். யோகிகளாகிய பரமஹம்ஸர்களுக்கோ இவ்வித தோஷங்களில்லாம லிருக்கும்.

ஶ்ரு || "தஸ்யபுத்ரா தாயமுபயந்தி ஸுஹ்ருதஸ்ஸாது
க்ருத்யாம் த்விஷந்த: பாபக்ருத்யாம்."

தத்வஜ்ஞானமுடைய யோகியின் க்ருஹ க்ஷேத்ராதி த்ரவ்யங்களைப் புத்ரர்கள் க்ரஹிக்கின்றார்கள். அன்னபானாதி பூஜைகளினால அவர்களை ஆதரிக்கும் ஸஜ்ஜனர்கள் அவர்களின் புண்யத்தை க்ரஹிக்கின்றார்கள். அவர்களை தரஸ்காரம் செய்து பரிஹாஸாதி க்ருத்யங்களைச் செய்யப்பட்டவர்கள் அவர்களின் பாபக்ருத்யங்களை க்ரஹிக்கின்றார்கள்.

ஶ்லோ || "ஏதாவதேவக்ஷ லிங்கமலிங்க மூர்த்தேஸ்ம, ஶாந்தஸம்
ஶ்ருதிஶிரபாம நிர்வ்ருதஸ்ய தக்ஞஸ்ய யக்மதந கோபவிஷாத மோஹ
லோபாவதாமநுதிநம் நிபுணம் தநுத்வம்."

பரமதத்வ ஜ்ஞான விஶிஷ்டனுக்கு, அநேககால வ்ருத்தியாகிய ஸம்ஸாரப்ராந்தி நஶித்ததனால், காமக்ரோத விஷயாதி மோஹ லோபாதி தோஷங்களெல்லாம் தினேதினே க்ஷீணித்துப்போவதே த்ருஷ்டாந்தம்.

ஶ்லோ || "மநஸ்சக்ஷுரா சேந்த்ரியாணாஞ்ச ஐகாக்ரியம் பரமந்தப:
தஜ்ஜ்யாயஸ்ஸர்வதர்மேப்ய: ஸதர்ம: பரவுச்யதே."

மனம் சக்ஷுராதீந்த்ரியங்களை ஒரே நிலையில் நியத்துவதே, ஶ்ரேஷ்டமாகிய தபமென்று முனிவர்களால் சொல்லப்பட்டிருக்கின்றது. இந்தத் தபத்தினால் ஜனன மரணங்களில்லை. நிர்விகல்ப ஸமாதியும் தபம் என்று சொல்லப்படும்.

"யாவத்விலீநம் நமநோ நதாவந் த்வாஸநாக்ஷய:
க்ஷீணே வாஸநா யாவ சித்தம் தாவந்ந ஶாம்யதி"

யாவத்யாதி விஜ்ஞாநம் தாவச்சித்தோபஸம:
யாவந்ந சித்தோபஸமோ ந தாவத்தத்வவேதநம்
யாவந்ந வாஸநாநாஸ ஸ்தாவ தத்வ கம: குத:
யாவந்ந தத்வ ஸம்ப்ராப்திர் நாவ த்வாஸநாக்ஷய:
தத்வஜ்ஞாநம் மநோநாஸோ வாஸநாக்ஷய ஏவச மிதா:
காரணதாம் கதா துஸ்ஸாத்யா ஸ்திதாஞ்யத:
த்ரய ஏதஸமம் யாவந்ந த்விபயஸ்தா முஹுர் முஹு:
யாவந்ந தத்வ ஸம்ப்ராப்திர் ப்யவத்யபி ஸமாஸ்குதே:."

மனம் க்ஷீணமாகாதவரையில் வாஸனை நசிக்காது; வாஸனை நசிக்கும்வரையில் சித்தம் நசிக்காது; சித்தம் சமிக்கும்வரையில் தத்வஜ்ஞானம் உண்டாகமாட்டாது. தத்வஜ்ஞானம் உண்டாகும்வரையில் வாஸனாக்ஷயம் உண்டாக மாட்டாது. தத்வஜ்ஞானம், மனோநாஸம், வாஸனாக்ஷயம் என்னும் இவை மூன்றையொன்று காரணத்திதியை அடைந்து ஸாதிப்பதற்கு எதுவரையில் ஸமமாய் அப்யஸிக்கப்படமாட்டாதோ, அதுவரையில் தத்வஜ்ஞானம் உண்டாகமாட்டாது என்று அன்னபூர்ணோபநிஷத்திலும், முக்திகோபநிஷத்திலும் சொல்லப்பட்டிருக்கின்றது.

தசவித நாதங்கள்.

கேளப்பா கேசரமே அண்டவுச்சி
  கெட்டியாய்க் கண்டவர்க்கே பவுனமாகும்
ஆளப்பா பரப்பிரமம் யோகமென்று
  அடுக்கையிலே போதமுத்தான் உயரத்துச்சும்
வாளப்பா கெவுனமணி விந்நாதம்
  வலுத்ததடா கெட்டியாய்த் திரண்டுபோகும்
காளப்பா அண்டமெலாஞ் சித்திபோடும்
  நடனமிடுஞ் சிலம்பொலியுங் காணலாமே.

நமது முதுகெலும்பு ப்ரஹ்மதண்டியென்று சொல்லப்படும். அது, மூலாதாரம்முதல் மஸ்தகம்வரையிலும் அதாவது இரண்டு ப்ருஷ்டபாகங்களிலிருந்து கழுத்தின்மேற்புறம் மிரவின் கீழ்ப்புறம்வரையில் 33 எலும்புக் கண்டுகளையுடைய படிகளாயிருக்கின்றது. அதற்குமத்தியில் ஒரு த்வாரமுண்டு. அந்தத்வாரத்தில் வெள்ளைநரம்பொன்றுண்டு. அதன் இரு பக்கங்களிலும் இரண்டு கால்வாய்கள் உண்டு. பிபீலிகாதி ப்ரஹ்மபர்யந்தம் விடப்பட்ட உச்வாஸ நிச்வாஸங்கள் அந்தக் கால்வாயின் வழியாய்ச்செல்லும் யோகிகளுக்கு அந்தக் கால்வாயின் வழியாய்ச்செல்லாமல் மேற்சொல்லிய வெள்ளை நரம்பில், (தாமரைக்கொடியிலுள்ள சிறிய நூலைப்போன்ற) மிக்க சிறிய த்வாரம் அந்த நரம்பில் உண்டு; அதுதான் 'ஸுஷும்நாநாடி' என்று சொல்லப்படும். அந்த ஸுஷும்நா நாடி எதிரிலிருக்கும்படத்தில் [illegible] காட்டப்பட்டிருக்கின்றது. உள்ளேகிறுத்திய ஸ்வாஸமானது அந்த ஸுஷும்நா நாடியின்வழியாச்செல்லவேண்டும். ப்ராணாயாமம் செய்தால் அந்த ஸுஷும்நா நாடியின்வழியாய்ச்செல்லும். இந்த ப்ராணாயாமம் முன்சொல்லியிருக்கின்றோம். நன்றாய்ப்பிடிபடுவதற்காக இதிலும் சொல்லுகின்றோம். கவனியுங்கள்:—

பத்மாஸனத்திலாவது சித்தாஸனத்திலாவது முன்சொல்லியதுபோல், உட்கார்ந்து இடதுநாஸியைமூடி உள் தங்கிய ஸ்வாஸத்தையெல்லாம் வலதுநாஸியின்வழியாய்விட்டு அதன் தொடர்ச்சியாகவே ஸ்வாஸத்தை உள்ளுக்கிழுத்து விழுங்கி இன்னும் ஸ்வாஸம் ஏதாகிலும் கொள்ளுகின்றதா என்னவென்று பார்ப்பதற்காகக் கொஞ்சம் ஸ்வாஸத்தை இழுத்துப் பார்க்கவேண்டும். அப்போது ஒரு அங்குலம் அல்லது அரை, காலங்குலமாகிலும் ஸ்வாஸம் உள் ப்ரவேசிக்கும். அதையும் இழுத்துவிழுங்கி வலதுகை, 1, 2, 3, 4, 5, விரல்களையும் எண்ணி, இடதுகைச் சுண்டுவிரலை மடக்கவேண்டும். இப்படி இடதுகை ஐந்து விரலையும் விட்டபிறகு புருவமத்தியில்

1 என்று லக்கம்வைத்து அதன்மீது த்ருஷ்டியை நிறுத்தி மறுபடியும் இடதுகை ஐந்துவிரலையும் விட்டுப்பிறகு முன்னிருந்த 1 என்னும் லக்கத்தை மனதினால் எடுத்துவிட்டு, 2 என்று லக்கம்வைத்து இடதுகையில் 30 - முறைவிடவேண்டும். அப்போது அது முப்பத்துக்கால் 7½ ஆகும். அதாவது, 25 × 30 = 750 என்னும்வரையில் ஸ்வாஸத்தை நிறுத்தினதாகின்றது. இடதுகையில் 30 - எண்ணிமுடித்தவுடன், அந்த ஸ்வாஸத்திலிருந்து கொஞ்சம் ஸ்வாஸத்தை வெளியில்விட்டு உள்ளுக்கிழுத்து, மறுபடியும் இடதுகையில், 30 எண்ணும் வரையில் ஸ்வாஸத்தை நிறுத்தி, மறுபடியும் ஸ்வாஸத்தை வெளியில்விட்டு உள்ளுக்கிழுத்து, இவ்விதமாய் 4 முறை செய்யவேண்டும். இவையெல்லாம் சேர்த்து நால்முக்கால் மூன்று கணக்காகும். அதாவது, 25 × 30 × 4 = 3,000 என்னும்வரையில் ஸ்வாஸத்தை நிறுத்தினவனாகின்றான். இதற்கு 10 நிமிஷங்களாகும். இதுமுடிந்தவுடன் இடதுநாஸியிலும் இவ்வாறேசெய்து முடித்து மறுபடியும் வலது இடது இரண்டு நாஸிகளிலும் அப்யாஸம்செய்து நிஷ்டையில் இருக்கவேண்டும். அப்போது ஸ்வாஸமானது அந்த ஸுஷும்னா நாடியின் வழியாய்ச்சென்று ப்ரஹ்மகபாலத்தைத்தாக்கி அவ்விடமிருந்து இச்சரீரத்திலிருக்கும் எழுபத்திரண்டாயிரம் நாடிகளிலும் சென்று, அந்தந்த நாடிகளை அவ்வவ்விடம் தங்கவிடாமல் அந்தந்த ஸ்தானங்களிலிருந்து அவைகளைக் கிளப்பிவிடுவதனால் அவைகள் தம்தம்ஸ்தானத்தை விட்டுக் கிளம்பி ஸர்ப்பம்போல் சீறிக்கொண்டு "ஓம்" காரத்துடன்; கிணி கிணி கிணி ஸங்கம், வேணு, வீணை, தாளம், கண்டா, பேரி, ம்ருதங்கம், மேகநாதங்கள்முதலான இந்தபத் (பத்து)வித வாத்தியங்களுடன் முன் சொல்லிய நாடிகளிலிருந்து த்வனித்துக்கொண்டு கர்ணத்தின் (காதின்) வழியாய் நமக்கிவ்வாத்யங்கள் ஸதாகாலமும் கேட்டுக்கொண்டேயிருக்கும். இதற்கு நம்மனுபவமே ப்ரமாணம்.

313



No 93 (ஸுஷும்னாநாடி)

Selden & Co., Madras.

"தர்ஜன்யங்குஷ்டாப்யாம் கர்ணத்ரேணி நிமீல்ய நாதம் ஸ்ருணுயாத், ப்ரதமம் சிணிசிணி, த்விதீயா சிணீ, த்ருதீயாஸங்கம், சதுர்த்தோ வேணுநாதம், பஞ்சமம் வீணாநாதம், ஷஷ்டம் தாளம், ஸப்தமம், அஷ்டமம், கண்டா பேரி, நவமம் ம்ருதங்கம், தஸமம் மேகநாதம் தஸமம் பரித்யஜ்ய ப்ரணமாத்ர மப்யஸேத் தத்ர "ஓங்" காரே மனோலீநம் பவதி."

என்னும் ப்ரமாணத்துடன் இவ்வித வாத்யங்களுடன் ஸதா த்வனித்துக்கொண்டேயிருக்கும். (இதுவிஷயம் ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம், 5-ஸ், 27, 28 பார்க்க.) ஓர் கிழஅரசன் பேரில் வேற்றரசன் யுத்தத்திற்கு வந்தபோது கிழஅரசன் தன்குமாரனை வரவழைத்து "அப்பா! வேற்றரசன் நமதுமீது படையெடுத்துவந்திருக்கின்றான் நீ சென்று அந்த வேற்றரசனை வெற்றிபெற்று வரக்கடவாய்" என்று ஆசீர்வதித்தனுப்ப அந்தக்குமாரன்சென்று வேற்றரசனை வெற்றியடைந்து ஜெயத்துடன் திரும்பிவருகையில், அவன் தந்தையாகிய கிழவரசன் கேள்விப்பட்டுத் தன்னிடமிருக்கும் ராஜவாத்யங்களையனுப்பி எதிர்கொள்வதுபோலவே, நமதுபகவானுவர், அப்பா! கஷ்டப்பட்டு ப்ராணாயாமம்செய்து ஸம்ஸாரஸமுத்ரத்தைக்கடந்து கரையேறிவிட்டாயாவென்று ஸந்தோஷித்து மேற்கூறிய தஸவிதநாதங்களையும் முக்தி அநுபவிக்கத்தந்து காட்சியைத்தருகின்றார். இந்த உண்மையநுபவத்தை நமது புராதனமாயுள்ள ஸகல ஆலயங்களிலும் ப்ரத்யக்ஷமாய்க்காணலாம். எப்படியெனில்:—

நமது ஆலயங்களில் அபிஷேகம்செய்கின்ற காலங்களில் நாம்அங்குள்ள மூர்த்தங்களைத்தரிஸிக்கப்போகும்போது ஸர்வவாத்யமண்டபத்தில் தஸவிதவாத்யங்களும் வாசிக்கக்கேட்கின்றோம். பின்பு நாம் மூலவரை ஸேவிக்கப் போகுங்காலத்தில் அந்தவாத்யங்களைக் கேட்டுக்கொண்டே மூலஸ்தானம்சென்று அந்த மூலவிக்ரஹஸ்வரூபத்தின்மீது நமது பூர்ணத்ருஷ்டியை வைத்தபோது, அந்தவிக்ரஹஸ்வரூபத்தில் மனம்லயித்து விடு

கின்றமையால், அதற்குமுன் கேட்டுக்கொண்டிருந்த வாத்ய ஶப்தம் கேளாமற் போய்விடுகின்றது. அதுபோலவே இந்த தேஹாலயத்திலும் மேற்கூறிய நாதஶப்தங்களை கேட்டுக்கொண்டிருந்து பிறகு அதைக்கடந்து ப்ரஹ்மகபாலத்திலிருக்கும் ஆகாஶவடிவத்தில் மனம்லீனமாய்விடும். இவ்விதம் லீனமாய்விடுவதால் தனது நிஜஸ்வரூபம் தானேவே விளங்கிக்கொண்டிருக்கும்.

முப்பத்தாறு தத்வங்களுக்கும் அதிகப்பட்ட இந்த நாதஶப்தத்தை யார் கேட்கின்றார்களோ அவர்களே முக்தர்கள், அவர்களே ப்ரஹ்மஜ்ஞானிகள். இப்படி அப்யஸித்து மோக்ஷ மடைந்திருக்கும் மஹாநுபாவர்கள் யாரெனில்:—

"கிமிஷார்த்தம் ஏநிஷ்டக்தி ஸ்ருத்ஸிர ப்ரஹ்ம மயீம்ஸிரா
யதா நிஷ்டந்தி ப்ரஹ்மாத்யா ஸநாத்யா ஶுகாதய:
தஸ்மாத் ஸர்வம் பரித்யஜ்ய தத்வநிஷ்டேர பவாசக
போதேச்சாம் நாதஸ்த்யக்த்வா த்ரயமேம தத்ஸமாஸா
வாஸகா ஷய விஜ்ஞான மனோநாஶா மஹாமதே
ஸ்வஸ்வரூபாநுஸந்தான மேவம் க்ருத்வா ஸ்வாத்மபவ
ஸ்வரூபாநுஸந்தாந வ்யதிரிக்தாந்ய ஶாஸ்த்ராப்யாஸை
ருஷ்ட்ரகுங்கும பாரவத் வ்யர்த்தா
ஸ்வரூபாநு ஸந்தானம் விநான்யதாசர பரோஹவேத்
ஸம்ஶாந்த ஸர்வஸங்கல்பா ப்ரஶாந்த ஸர்வேஷணா
நிர்விகல்ப பதம்கத்வா ஸ்வஸ்தோ ஹ முநீஸ்வர."

தேஜோபிந்தூபநிஷத், துரியாதீதாவதூதோபநிஷத், அன்னபூர்ணோபநிஷத், ஸந்யாஸோபநிஷத், வராஹோபநிஷத், மஹோபநிஷத், இத்யாதி ஶ்ருதி வாக்யங்களின் ரீதியாய ஸநகஸநந்தநாதிகள், ஶுகப்ரஹ்மம், வஸிஷ்டாதி முதலாகிய மஹாநுபாவர்கள் ப்ரஹ்மாநந்தமென்னர்களாய் இடைவிடாத மௌன நிஷ்டையிலிருந்து ஸாதித்ததுபோல் யார் ஒருவர் ஸகலஸங்கல்பங்களையும்விட்டு சித்தவிஶ்ராந்தி அடைந்து அப்யஸாஸ்த்ரங்களிலும் போகங்களிலும் இச்சையில்லாதவர்களாய், ப்ரமை

வலையில் அகப்படாமல் ஸ்வயம்ப்ரகாஶமான ப்ரஹ்மஜ்ஞானத்தினால் நிர்விகல்பஸமாதியி லிருப்பார்களோ அவர்களே ஜீவன்முக்தர்கள். மேற்சொல்லிய மஹாநுபாவர்கள் தேவலோகஞ்சென்று தேவஸபையில் மாத்ரம் மனவையுடையவர்களாய்ப்பேசி ஸபைகலைந்து வெளியில்வந்தவுடன் அவர்களின் மனமானது எப்படியிருக்குமென்றால்:—

"பத்மபத்ரம் யதா தோயை: ஸ்வஸ்தைரபி ந லிப்யதே
ஶப்தாதி விஷயாம்போபி ஸ்தத்வ ஜ்ஞானீ ந லிப்யதே
யஸ்யான் மந்த்ரபலோ பேத: க்ரீடன் ஸர்ப்பைர்ந தஶ்யதே
க்ரீடன்னபி ந லிப்யதே தத்வ இந்திரிய பந்நகை:."

தாமரையிலையின்மீது ஜலமிருந்து இருந்தபோதிலும், அந்த ஜலத்தினால் ஒட்டாமலிருப்பதுபோல், அவர்களுடைய விஷயங் (ஸங்கல்பங்) களும் அந்த ஜலத்தைப்போல ஒட்டமாட்டா. எப்படியென்றால்:—

மாந்த்ரீகத்தைக் கற்றவர்கள் ஸர்ப்பங்களுடன் விளையாடிக்கொண்டிருந்தபோதிலும் அந்த ஸர்ப்பங்களின் கடிக்குட்படாமல் எப்படி தப்பித்துக்கொள்ளுகின்றார்களோ, அது போல அவர்களுடைய இந்த்ரியங்கள், ஸர்ப்பங்களென்னும் விஷயங்களின் கடிக்கு உட்படமாட்டா. அப்பேர்ப்பட்டவர்களின் மனம் ப்ரஹ்மத்தில் எப்படி ஐக்யமாகிறதென்றால்:—

"லவணம் தோயஸம்ஸ்பர்ஶாத் த்ரவதோயமயம்பவேத்
மனோஹி ப்ரஹ்ம ஸம்ஸ்பர்ஶாத் ததா ப்ரஹ்மமயம்பவேத்."

உப்பு,ஜலத்தில் போட்டவுடன் ஜலஸ்வரூபமாவதுபோல் மனம் ப்ரஹ்மத்திற் கலந்த உடனே ப்ரஹ்ம ஸ்வரூபமாகின்றது. அப்படிக்கு அந்த மனம் ப்ரஹ்ம ஸ்வரூபமானவுடனே மனோமயமாகிய, ப்ரபஞ்சமெல்லாம் ப்ரஹ்ம ஸ்வரூபமேயாகின்றது. ஆகலால்,

"மனஸா மனஸா த்ருஷ்ட்யா க்ருஷ்யதே ஞானசக்ஷுஷா
அஹமேவ ஸமத்யோர்ய இதி புத்த்யத்வ மஞ்ஜஸா"

மனவினாலும் வாக்கினாலும், சதுர்தசேந்த்ரிய வ்யாபாரங்களினாலும் (அதாவது-மனம், புத்தி, சித்தம், அஹங்காரமென்னும் அந்தரிந்த்ரியங்கள் நான்கும், ஶ்ரோத்ரம் (செவிகள்) த்வக்கு (தேஹசர்மம்), நேத்ரம் (கண்கள்), ஜிஹ்வை (நாக்கு), க்ராணம் (மூக்கு), என்னும் ஜ்ஞானேந்த்ரியங்கள் ஐந்தும், வாக்கு (வாய்), பாணி (கைகள்), பாதம் (கால்கள்), குய்யம், குதம் என்னும் கர்மேந்த்ரியங்கள் ஐந்தும் ஒன்றாய்க் கூடினதே சதுர்தசேந்த்ரிய வ்யாபாரங்கள் என்று சொல்லப்படும்.) இவைகளினால் பார்ப்பது, வார்த்தையாடுவது என்னுவது முதலானவைகளெல்லாம் பரப்ரஹ்மமே என்றும் அந்தப்பரப்ரஹ்மமே தாமென்றும் சஞ்சலமில்லாமல் இருப்பார்கள். மனம் முதலாகிய பதினான்கு இந்த்ரியங்களும் அடங்கி ஜீவன் கேவல ப்ரஜ்ஞா ஸ்வரூபமாயிருப்பதே துரீயாவஸ்தை என்று சொல்லப்படும்.

ஒடுங்கினேன் ஓங்கார நிலையிற்றுள்ளி
உற்பனமாய்ச் சிவலிங்க முன்னே கண்டேன்
நடுங்கினேன் மும்மூலங் கொள்ளும்போது
காற்பற்று முக்கோணம் நடுவாய்ச்சென்றேன்
அடங்கினேன் ஆண்பாவுக் குள்ளே மைந்தா
அடங்காத சித்தனென்று அறிவிற்சேர்ந்தேன்
தடங்கினேன் சத்திதனி லேறிக்கொண்டே
தாய்பதத்தை எந்நாளும் போற்றினேனே.

மனம் உதிக்கும் இடத்தை உபதேசித்தல்.

பக்தஜன ப்ரோன்மணிகளே! ஜீவன்முக்தி பதவியை அடைவதற்கு யோகாப்யாஸம்செய்ய இஷ்டமாயிருக்கப்பட்டவர்கள் "ஸோஹம்" என்னும் ராஜயோக ரஹஸ்யத்தை இந்நூலில் சொல்லியிருப்பதுபோல் இடைவிடாமல் ஸதாகாலமும்

அப்யஸித்து மனதை ஓர்காட்டத்தில் நிறுத்திய பிறகு அந்த ஓர்காட்டத்தையும் ஸாக்ஷியமாய்ச்செய்து, எப்பொழுதும் ஸுகாஸனத்திலேயே யிருக்கலாம்.

ஸ்ரீ ரங்கநாதர்.

ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீரங்கநாதர் ஸர்வ ஸங்கல்பங்களையும் ஒழிக்கச்செய்து, ஸுகாஸனமாய் ஆதிசேஷன் மீது ஶயனித்து யோகநித்ரை செய்கின்றார். யோகநித்ரைசெய்யும் விக்ரஹம் மேல்காட்டியிருக்கின்றது. அதுபோலவே, நாமும் யோகாப்யாஸத்தினாலாவது அல்லது ராஜயோகத்தினாலாவது ஸகல எண்ணங்களையும் நாசக்கச்செய்து யோகநித்ரைசெய்யவேண்டும், ஆதலால் மனம் லயப்படுவதற்காக இன்னும் சில விஷயங்களை இதனடியில் உபநிஷத்துக்களின் த்ருஷ்டாந்தங்களுடன் சொல்லுகின்றோம். அதை உபாயமாய்ப்பார்த்து ஶ்ரத்தையுடன் அப்யஸிக்கப்பட்டவர்கள். ஸங்கல்பம் (மனம்) ஒழித்து எந்த எண்ணங்களுமில்லாமல் தன்னைத்தான்மறந்து மௌன ஸமாதியில் நின்றிருக்கலாம். மனதை நிறுத்துவதற்

காக அனேகவழிகள் உண்டு; அவைகளெல்லாம் இந்நூலில் எழுதப்பட்டிருக்கின்றது. அதில் எவரெவர்களுக்கு எதைத எடுத்துக்கொள்ளவேண்டுமோ அதையதை எடுத்துக்கொண்டு ஸ்வாநுபவத்திற்குக் கொண்டுவரலாம்.

"சித்தம் ஸஞ்ஜாயதே ஜந்ம ஜராமரணகாரணம்." [முக்திகோப.]

மனமே ஜனனமரணங்களை உண்டாக்குவதற்குக் காரணமாயிருக்கின்றது. ஆதலால்,

"யஸ்ய ஸங்கல்ப நாசஸ்யாத் தஸ்ய முக்தி: கரேஸ்திதா."
[மண்டல ப்ராஹ்மணோபநிஷத்.]

எவர்களுக்கு எண்ணங்களெல்லாம் நசித்துவிடுகின்றனவோ அவர்களுக்கு மோக்ஷம் கரதலாமலகம் (உள்ளங்கை நெல்லிக்கனி) போல் இருக்கும்.

"யதா ஸர்வே ப்ரமுச்யந்தே காமாயேஸ்ய ஹ்ருதிஸ்திதா:
அதமர்த்யோ ம்ருதோ பவத்யத்ர ப்ரஹ்ம ஸமஸ்நுதே."
[கடோபநிஷத்.]

எப்பொழுது, ஸகலவெண்ணங்களையும் நசிக்கச்செய்கின்றார்களோ அப்பொழுதே ப்ரஹ்மஸ்வரூபர்களாய் முக்தியை அடைகின்றார்கள். ஸகலவெண்ணங்களையும் நாசஞ்செய்ய ஓர் உபாயம் சொல்லுகின்றோம். அதை ப்ரீதியுடன் கவனித்து அதுபோல் அப்யாஸம்செய்துவந்தால், ஸகலவெண்ணங்களும்நசித்து ப்ரஹ்மானந்தபதவியை அடையலாம். எண்ணங்களினாலேயே ஜன்மங்கள் உண்டாகின்றன; எண்ணங்கள் இல்லாவிடில் ஜன்மங்களில்லையென்று உபநிஷத்துக்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆதலால்,

"உபாய மேகமேவாஸ்தி மநஸஸ்ஸ்வஸ்ய நிக்ரஹே
மநஸோப்யுதயோநாசோ மநோநாசோ மஹோதய:"
[முக்திகோபநிஷத்.]

ஸகல எண்ணங்களையும் தலையெடுக்கவிடாமல் செய்வதே மநோநாசத்திற்கு முக்யமான உபாயம். எப்படியென்றால், நமக்கு எண்ணங்களெல்லாம் ப்ரஹ்மஸ்தானத்திலிருந்து உண்டாகின்றது. ப்ரஹ்மஸ்தானமென்றால், மஹாப்ரளய அந்தத்தில் ஸ்ரீமந்நாராயணமூர்த்தி ப்ரஹ்மதேவரை ஸ்ருஷ்டிக்க ஸங்கல்பித்தவுடனே, தன் நாபியிலிருந்து ப்ரஹ்மதேவர் உதித்தார், அது ☞ எதிரிலிருக்கும் படத்தில் காட்டப்பட்டிருக்கின்றது.



ஸ்ரீமந் நாராயணமூர்த்தி.

அவர் மூலமாய் எண்பத்துநான்கு லக்ஷ ஜீவராசிகளும் ஸ்ருஷ்டிக்கப்பட்டன. இது விஷயம் இந்நூலில் 107-வது பக்கம் 10-வது வரியில் சொல்லியிருக்கின்றோம். ஆதலால், நமக்கு உண்டாகும் எண்ணங்களாவும், அந்த 'நாபி'யிலிருந்தே பிறக்கின்றன. அந்நாபியின்தானத்தை வெட்டவெளியாய்ப் பார்த்தபோது எண்ணங்க (ஸங்கல்பங்க)ளெல்லாம், உதித்த இடத்திலேயே ஒடுங்கும். எப்படியென்றால் "சென்னப்பட்டணம்" என்று மனம் நினைக்க ஆரம்பித்தவுடனே 'சே' என்னும் அக்ஷரம் நாபியிலிருந்து புறப்படும். அதை நாபியிலிருந்து வெளியில் வரவிடாமல் அந்தர் (உள்) முகமாய் அந்நாபியின் தானத்தை ஆகாசரூபமாய்ப் பார்த்தபோது, 'சே' என்னும் அக்ஷரம் உதித்தவிடத்திலேயே ஒடுங்கும். முதல் அக்ஷரம் ஒடுங்குவதனால் அதன்பிறகு வரும் விஷயங்களெல்லாம் ஒடுங்கிவிடும். இந்த எண்ணங்களே மனமென்று சொல்லப்படும். ஆதலால்,

நான்முக னுக்கிட மானது ரெங்கனார்
நான்மறை யுந்துதி செய்யுமா ரெங்கனார்
தேவுக்குத் தேவா யிருக்குமா ரெங்கனார்
தேவர்க ளன்றித் திரியுமா ரெங்கனார். (1)

தோற்றமு வாகத் தணிந்தது ரெங்கனார்
சோகமோ கங்க ளிறந்தது ரெங்கனார்
ஏற்ற வடியார்க் கடைத்தது ரெங்கனார்
ஏகாந்த மாயே யிருக்குமா ரெங்கனார் (2)

காமக் குரோதங் கழிந்தது ரெங்கனார்
கல்விக் கடலைக் கடந்தது ரெங்கனார்
நாமரூ பங்க டவிர்ந்தது ரெங்கனார்
ஞானயோ காகனின் றது ரெங்கனார். (3)

அறிவிட் டறியாமை போக்குமா ரெங்கனார்
அன்னிய மொன்றுமி லாதது ரெங்கனார்

குறியிட்டு தென்னவொன் றானது ரெங்கனார்
கோசங்க ளைந்துங் குலைந்தது ரெங்கனார். (4)

புத்தி விகற்ப மறுக்குமா ரெங்கனார்
பூரண போதமே யானது ரெங்கனார்
வித்தும் விளைவு மிலாதது ரெங்கனார்
விண்முதற் பூதம் விளைந்தது ரெங்கனார். (5)

எட்டுத் திசையு நிறைந்தது ரெங்கனார்
ஏகாந்த மாகி யிருக்குமா ரெங்கனார்
தட்டற்ற யோகிக டங்குமா ரெங்கனார்
தன்மபா வங்க டவிர்ந்தது ரெங்கனார். (6)

உலகத்தை யெல்லா மொருக்குமா ரெங்கனார்
றுண்மையொன் றாகியொன் றானது ரெங்கனார்
இலுக்கற்ற சிற்பர மானது ரெங்கனார்
சித்தினை விட்டுத் தெளிந்தது ரெங்கனார். (7)

உள்ளப் படாவுணர் வானது ரெங்கனார்
றுள்ளொளி யாகி யிருக்குமா ரெங்கனார்
கண்ணுக் கணிந்தா யிருக்குமா ரெங்கனார்
கள்ளப் புலனைக் கழிந்தது ரெங்கனார். (8)

சுத்தஞ் சிறுகு மிலாதது ரெங்கனார்
காண்பானுங் காட்சியு மற்றது ரெங்கனார்
சுத்த வெளியிலே தோன்றுமா ரெங்கனார்
சோம்பர் சுகமென் றுணர்ந்தது ரெங்கனார். (9)

உலக முழுது முதித்திட மெங்கனார்
ஒருதே வையு மற்றிட மெங்கனார்
கலகா நிலை யாகிய தெங்கனார்
கரு ணாகர னார்கழ லெங்கனார். (10)

இத்தி யுக்களவர் சேர்விலதெங்கனார்
ரின்ப நற்பயி ரோங்கிய தெங்கனார்

பந்த மற்றவர் பற்றிட மெங்களுர்.
பார்வையற்ற பரம்பொரு ளெங்களுர். (11
விர் கர்க்கதி ஆரம தெங்களுர்
விமலர் கட்கண்ணி தாயு தெங்களுர்.
துரியத்தொளிர் சோதிப் தெங்களுர்
ஐய்ய சற்கரு ணைக்கழ லெங்களுர். (12

தேடிக்கண்டுகொண்டேன் தேஜோமய மென்னுளே
தேடித்தேடியுங் காணுத்தேவனைத் (தேடி
வாடியலைந்து நான் மறைகட்கு மெட்டாத
நாடு சுகர்முக ஞிந்த இடத்தனைத் (தேடி
பாயு மனதினைப் பாயவொட்டாமலே
நாயேன் மனமெழுந்தல்ல இடத்தனைத் (தேடி

மனக்குரங்கை ஈஶ்வரனிடத்தில் அர்ப்பணம் செய்தல்.

“ஸதாமோஹாடவ்யாம் சரதி யுவதீனாம் குசகிரௌ நடத்யாஶா ஶாகாஸ்வடதி ஜடிதி ஸ்வைரமபிதா கபாலின் பிக்ஷோ மே ஹ்ருதய கபிமத்யந்த சபலம் த்ருடம் பக்த்யா பத்வா ஶிவ பவதீனம் குரு.” விபோ.”

“ஏவமீஶ்வர ப்ரீதிம் ஸம்ப்ரார்த்ய மமசித்த சாபல்யம் பரிஹ்ருத்ய மச்சித்தம் த்வதீனம் குருஷ்வேதி ப்ரார்தயன் யதாஹ ஸதாமோஹேதி.” “போ விபோ ஸர்வவ்யாபக போ ஶிவ ஶுகஸ்வருப போ கபாலின் கபாலமஸ்யாஸ்தீதி தஸ்ய ஸம்புத்தி: போ பிக்ஷோ ஹ்ருதய கபி: ஸதா ஸர்வதா மோஹாடவ்யாம் மோஹா ஸம்ஸாரேச்சாஸ்வபாடவீ அரண்யந்தஸ்யாம் சரதி ஸஞ்சரதி யுவதீனாம் நாரீணாம் குசகிரௌ ஸ்தனபர்வதே குசாவேவ கிரி: தஸ்மின் நடதி ந்ருத்யம் கரோதி ஆஶா ஶாகாஸு ஆஶயே வ புத்ர தாராதிஷு ப்ரேமாணி தாயேவ ஶாகா: விடபா: தாஸ்வடதி ஸஞ்சரதி ஜடிதி ஶீக்ரம் அபிதா இதஸ்தத ஸ்வைரம் ஸ்வேச்சா விஹாரம் யதாததா அடதி ஸஞ்சரதி அத்யந்தம் சபல மதிசபலம் மே மாம்ஹ்ருதயகபிம்ஹ்ருதய மேவகபிரிதி

ரூபகம் தம்சித்த் வாநரம் த்ருடம் நிதாந்தம் பக்த்யா க்யயா ரஜ்வாலத்வா சேஷ்டா ரஹிதம் க்ருத்வா பவதீனம் த்வதீனம் குரு குருஷ்வ ஸம்ஸார நிமக்னம் மச்சித்தம் ஸதாஸ்வதேக ஶரணம் குர்விதி தாத்பர்யம்.”
[ஶிவானந்த லஹரி, இது ஸ்ரீ ஶங்கராசார்யர் சொல்லியது.”

“பெண்ணுமிவர்தொருமாயப்பிசாசம்பிடித்திட்டென்னைக்
கண்ணால்வெருட்டிமுலையான்மயக்கிக்கடிதடத்துப்
புண்ணாங்குழியிடைத்தள்ளியென்போதப்பொருள்பறிக்க
எண்ணுதனைமறந்தேனிறைவாகச்சியேகம்பனே.”

ஹே விபோ! ஓ ஸர்வ வ்யாபகனு யிருக்கப்பட்டவனே, ஹேஶிவ - ஓ ஶுகஸ்வருபனே, ஹேகபாலின் - ஓ ப்ரஹ்ம கபாலத்தை ஹஸ்தத்தில் வைத்துக்கொண் டிருக்கப்பட்டவனே, ஸதா - எப்பொழுதும், மே - என்னுடைய, சித்தம் - மன்மானது, மோஹாடவ்யாம் - ஸம்ஸாரமென்னும் ஆரண்யத்தில் ஸஞ்சரித்துக்கொண்டு, யுவதீநாம் - ஸ்த்ரீகளினுடைய, குச-ஸ்தனங்களென்னும், கிரௌ - பர்வதத்தின்மீது, நடதி - நாட்யம்செய்துகொண்டு, ஆஶா - தாராபுத்ராதிகளின் மீதுள்ள ஆசை என்னும், ஶாகாஸு - கிளைகளின்மீது, அடதி - திரிந்துகொண்டிருக்கின்றது; ஜடிதி - சீக்ரமாய், அபித: - எல்லா இடங்களிலும், யதாததா - தனனிஷ்டம்போல், அடதி - ஸஞ்சரிக்கின்றது, அத்யந்தசபலம் - அதிகசஞ்சலமான, மே - என்னுடைய, ஹ்ருதய - மனஸு என்னும், கபிம் - வானரத்தை, த்ருடம் - த்ருடமாய், பக்த்யா - உன் பக்தியென்னும் கயிற்றால், பத்வா - கட்டி, பவதீநம் - உன்ஸ்வாதீனம் செய்துகொள்ளக்கடவாய்.

எங்கும் பரிபூர்ணமாய் நிறைந்திருக்கப்பட்டவனே! ப்ரஹ்ம கபாலத்தை ஹஸ்தத்தில் வைத்துக்கொண்டு பிக்ஷை எடுக்கப்பட்டவனே! என்மனஸு என்னும் வானரமானது, எப்பொழுதும் ஸ்த்ரீகளின் ஸ்தனங்களென்னும் பர்வதத்தின் மீது நாட்யம் (நடனம்)செய்துகொண்டு, தாராபுத்ராதிகளென்னும் கிளைகளின்மீது திரிந்துகொண்டு, மோஹமென்னும்

ஆரண்யத்தில் அலைந்துகொண்டிருக்கின்றது. இவ்விதமாய் தன் இஷ்டம்போல் அலைந்துகொண்டிருக்கும் என் மனஸ் என்னும் குரங்கை த்ருடமாய் உன் பக்தி என்னும் கயிற்றால் கட்டி உன் ஸ்வாதீனம் செய்துகொண்டால் அதனால் பிக்ஷை எடுக்க உனக்கும் நலமாயிருக்கும்; அது, என்னைவிட்டு ஒழிவதனால் நானும் ஸத்கதி அடைவேன். ஆகலால், அடியேன் மீது அனுக்ரஹம் வைத்து என் மனஸ் என்னும் குரங்கை உன் ஸ்வாதீனம் செய்துகொண்டு என்னை பந்தத்திலிருந்து விமுக்தனாகச் செய்யக்கடவாய்.

நாயனே! இரவில் ஶயனிக்கும்போது ஈஶ்வரனை ஸ்துதி செய்து, நாள்தோறும் செய்துவரும் புண்யபாபங்களை அவருக்கு அர்ப்பணம்செய்து ஶயனித்துவந்தால், பந்தத்திலிருந்து விமுக்தர்களாகலாம். அதை இதனடியில் உபதேசிக்கின்றோம்; கவனமாய் ச்ரத்தையுடன் வாசித்து அதுபோல் அப்யாஸம் செய்துவந்தால் நற்கதியடையலாம்.

இரவில் ஈஶ்வரனை ஸ்துதிசெய்து ஶயனித்தல்.

ஓ ஸஹோதரர்களே! உலகத்திலுள்ள மனிதர்களெல்லோரும், காலைமுதல் மாலைவரையில் அவரவர்களுக்குத்தக்க வ்யாபாரம் உத்யோகங்கள்செய்து போஜனமுண்டு வீண்வார்த்தைகளையாடி சற்று ஈஶ்வரத்யானமும் இல்லாமல் ஶயனித்து தன்மனம், ஸம்ஸார விஷயத்திலோ, புத்ரர்களின் விஷயத்திலோ, புத்ரிகளின் விஷயத்திலோ, பார்யாள் தன்னிஷ்டம்போல் நடக்கவில்லையே என்னும் விஷயத்திலோ, மருமகன் மகளை ஹிம்ஸிக்கும் விஷயத்திலோ, மருமகள் விஷயத்திலோ, பேரன்பேர்த்திமார்களின் விஷயத்திலோ, ஸந்தானமில்லையே யென்னும்விஷயத்திலோ, ஒருவேளை ஸந்தானமிருந்தால் தன்மார்க்கனுப்பவந்து உத்பவித்தாளே (பிறந்தாளே) என்னும் விஷ

யத்திலோ, உத்யோக விஷயத்திலோ, வ்யாபாரவிஷயத்திலோ, கோர்ட்விஷயத்திலோ, பொருள் விஷயத்திலோ, வட்டிவிஷயத்திலோ, இதுவரையில்செய்து நின்றிருக்கும் கார்யங்களின் விஷயத்திலோ, இனிச்செய்யவேண்டிய கார்யங்களின் விஷயத்திலோ, ஒருவர் சொத்தை அராக்ரமாய் அபஹரிக்கும் விஷயத்திலோ, ஒருவரை மோசம் செய்யவேண்டிய விஷயத்திலோ, ஊர் வ்யாபார விஷயத்திலோ, அல்லது ஸ்த்ரீகளின் மீது மோஹங்கொண்டிருக்கும் விஷயத்திலோ இவ்விதமாய் ஏதிலேயோ வொன்றில் வ்ருதாவாய் மனஸை செலுத்திக்கொண்டே நித்ரைசெய்து விடுகின்றார்கள். இவ்விதமாய் அனேகனேக எண்ணங்களை யெண்ணிக்கொண்டு நித்ரை செய்வதனால் அவர்களுக்கு அனேகவித துஸ்ஸ்வப்னங்கள் வந்துகொண்டேயிருக்கும். ஆதலால்,

இதைவாசிக்கும் அன்பர்களியாவரும் ஶயனிப்பதற்காகப் படுக்கையில் உட்கார்ந்து, "எங்கும் பரிபூர்ணமாய் நிறைந்து எண்பத்துநான்குலக்ஷ ஜீவராசிகளிலும் ஸாக்ஷிஸ்வரூபமாய் ஜீவாத்மாவாய் வ்யாபித்திருக்கும் ஓ பரப்ரஹ்மமே! இன்று காலை ஐந்துமணிமுதல் ஶயனிக்கும்வரையில் அடியேன், கால்களாலும் கைகளாலும் தெரிந்தும் தெரியாமலும்செய்த புண்ய பாபங்களையெல்லாம் உனக்கு அர்ப்பணம் செய்துவிட்டேன்" என்று மனஸினால் நினைத்துமுடிந்தவுடன், "நீ என்னுளே அந்தர்யாமியாயும் ஸாக்ஷிஸ்வரூபனாயும் இருப்பதனால், இன்றிரவு நித்ரித்து எழுந்தவுடன் என்மனஸை, பாபகார்யங்களைச்செய்யாமல் ஸத்விஷய கார்யங்களிலேயே நடக்கும்படி உன்கருணை யென்னும் சாவியைக்கொடுத்துத் திருப்பக்கடவாய்" என்று சிலநேரம் ஸ்துதிசெய்து முடிந்தவுடன், இந்நூலில் 204-வது பக்கம் காட்டியிருக்கும்படத்தில் 'சின்முத்ரை'யுடன் உட்கார்ந்து, எந்த எண்ணங்களுமில்லாமல் ப்ரஹ்மநிஷ்டையில் இருப்பதுபோல் சிலநேரம் இருந்து ஶயனித்து, மறுபடியும் மனக்குரங்கை ஹ்ருதயத்தில் ப்ரவேசிக்கவிடாமல் நித்ரைசெய்ய

வேண்டும். அப்படி நித்ரிப்பதனால் எந்தஸ்வப்னங்களும் உண்டாகமாட்டா. ஒருவேளை ஸ்வப்னம் உண்டானால் அது, வாஸ்தவமாய் நடக்கும் ஸ்வப்னமாகவேயிருக்கும்.

ஐயா! நீங்கள், மனதை நிறுத்தவேண்டுமென்று மேற்சொல்லியதுபோல் உட்கார்ந்தால், அந்த ஸமயத்தில்தான் இல்லாத எண்ணங்களெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாய் அநேக அநேக ஸங்கல்பங் (எண்ணங்)கள் வந்துகொண்டேயிருக்கும். இந்த ஸங்கல்பங்களை ப்ராணாயாமம் ஒன்றுதான் நாஶப்படுத்துமேயொழிய மற்ற எதுவும் நாஶம்செய்யமாட்டாது. இந்த ப்ராணாயாமம் செய்வதுமிகவும் கஷ்டம். இதற்குக் கீழ்ப்படி ராஜயோகம். இந்த ராஜயோகம் ஒவ்வொரு குடும்பத்திலுள்ள ஸ்த்ரீ புருஷர்களும் அப்யாஸஞ்செய்து வரலாம். அந்த ராஜயோகம் செய்யும் மார்க்கம் இனி சொல்லப்போகின்றோம். அதை இவ்விடத்திலும் சொல்லுகின்றோம் கேளுங்கள்.

முன்சொல்லியதுபோல் படுக்கையில் உட்கார்ந்து பரப்ரஹ்மத்தை ஸ்துதிசெய்து முடிந்தவுடன், ஶயனித்துக்கொண்டு 'ஸோ' என்னும் மந்த்ரத்தை கர்மவாக்கினால் சொல்லாமல் அஜபாவாய் (மனதினாலேயே) அந்த ஶ்வாஸத்துடன் 'ஸோ' என்றுசேர்த்து உள்ளுக்கிழுத்து மறுபடியும் ஶ்வாஸம் வெளியில் விடும்போது 'ஹம்' என்னும் மந்த்ரத்துடன் சேர்த்துவிடவேண்டும். இவ்விதமாய் ஒவ்வொரு ஶ்வாஸத்திலும் மேற்சொல்லிய இரண்டுமந்த்ரங்களையும், ஶ்வாஸம் உள்ளுக்கிழுக்கும்போதும் வெளியில் விடும்போதும் சேர்த்துவிட்டுக்கொண்டே நித்ரைசெய்யவேண்டும். 'ஸோ' என்னும் மந்த்ரத்தில், 'ஓ' என்னும் ஜீவாக்ஷரமும், 'ஹம்' என்னும் மந்த்ரத்தில் 'ம்' என்னும் ஜீவாக்ஷரமும் சேர்ந்து 'ஓம்' என்னும் ஶப்தம் உண்டாயிற்று. ஆதலால் இந்தப்ரபஞ்சமெங்கும் ஓங்காரமாகவேயிருக்கின்றது. இந்த ஶ்வாஸமானது நாஸிக்குள் ப்ரவேசிக்கும்போது 'ஸோ' என்னும் மந்த்ரத்துடன் ப்ரவேசித்து ஶ்வாஸம் மறுபடியும் வெளியில் வரும்போது 'ஹம்' என்னும்

மந்த்ரத்துடன், நாளொன்றுக்கு 21,600 முறை தனக்குத்தானாகவே ஜபித்துக்கொண்டு, மரணகாலபர்யந்தம் நடந்துகொண்டேயிருக்கும். இந்த ரஹஸ்யத்தைத் தெரிந்துகொள்ளாத சிலபுருஷர்கள், ஶ்வாஸத்திற்கும் 'ஸோஹம்' மந்த்ரத்திற்கும் யாதொரு ஸம்பந்தமில்லாமலே "ஸோஹம்" "ஸோஹம்" "ஸோஹம்" "ஸோஹம்" "ஸோஹம்" என்று ஸதாகாலமும் கர்மவாக்கினால் சொல்லிக்கொண்டே இருப்பார்கள். இவ்விதமாய் நாளொன்றுக்குப் பதினாயிரம்முறை செய்துவந்தபோதிலும் முன்சொல்லிய ஒரு "ஸோஹம்" மந்த்ரத்திற்கு இணையாகமாட்டாது. ஏனென்றால், 'ஸோஹம்' மந்த்ரம் கர்மவாக்கினால் ஜபித்துக்கொண்டுவந்தாலும், மனம் வேறுவிஷயங்களில் ஓடிக்கொண்டிருக்கும், ஆதலால், இந்தமந்த்ரத்தை வாக்கினால்சொல்லாமல் மனதினால், ஶ்வாஸத்துடன் கூடவே சேர்த்து ஶ்வாஸம் உட்செல்லும்போதும் வெளிவரும்போதும் ஜபித்துக்கொண்டுவந்தால், மனம் வெளியில் ஓட அவகாஶமிராமல் ஶ்வாஸத்திலேயே லயித்துவிடும், அந்தஸமயம் புருஷன் தன்னைத்தான்மறந்து ஶிலாவடிவமாய் நின்றுவிடுவான். இதுவே ஜாக்ரத்தில் ஸுஷுப்தியென்று சொல்லப்படும். தூங்காமற்றூங்கி ஸுகம்பெறுவதுஎன்று பெரியோர்கள்சொல்லியதிதுவே. இதுவே ராஜயோகத்தின் ரஹஸ்யம். இதுவே தாரக மந்த்ரம். இது, வேத வாக்யம்; மஹா ரஹஸ்யமானது; குருவினால் தெரிந்துகொள்ளத்தக்கது. இப்படிப்பட்ட மஹாரஹஸ்யத்தை உங்களுக்குப் புஸ்தகமூலமாய் உபதேசித்திருக்கின்றோம். ஆதலால், நீங்கள் வ்யாபார உத்யோகங்கள் செய்யும்போதுமாத்ரம் ஷை 'ஸோஹம்' மந்த்ரம் ஜபிப்பதை நிறுத்தி, அந்தந்த வ்யாபார உத்யோகங்கள் செய்துமுடிந்தவுடன் மற்றக்காலங்களெல்லாம் அதாவது நடக்கும்போதும் உட்காரும்போதும் மலஜலம் விடும் போதும், படுக்கும்போதும் அணுவேனும் சோராமல் தைலதாரையைப்போல் ஸதாகாலமும் அப்யாஸம் செய்துவருவீர்களாகில், ஸாக்ஷி ஸ்வரூபமாயிருக்கும் பரப்ரஹ்மத்தின்

அம்ஸமாகிய ஆத்மா, உங்கள் மரணகாலத்தில் எந்த ஸம்ஸார பந்தத்தையும் கிட்ட நெருங்கவிடாமல் செய்வித்து நற்கதி அடையும்படி செய்விக்கும்.

பாரப்பா சிஷர்களை பழைப்பான்பாவி
பணம்பறிக்க வுபதேசம் பண்வோமென்பான்
ஆரப்பா ப்ரம்மத்தை காட்டாமற்றான்
ஆகாசப் பொய்களையு மவன்தான்சொல்வான்
கோப்பா சிஷனுக்குப் பாவமாச்சு
நிஷ்டைசொல்லும் குருக்களுக்குத் தோஷமாச்சு
வீரப்பா அடங்குகின்ற இடத்தைப்பாரான்
விதிபோலே முடிந்ததென்று விளம்புவானே.

ஏழு சக்ரங்களிலும் ஸ்வாஸம் நடந்து நம்முடைய ஆயுர்ப்பாகம் காட்டுதல்.

"ப்ராணஸ்ய ஸ்வாஸ நிஸ்வாஸ ப்ரத்யக்ஷ விஷயக்ரஹணம் நிஸ்சேஷ்டோ நிர்விகாரஸ்ச லயோ ஹ்யபி யேஷிதாம்."

நாம் உள்ளுக்கிழுக்கும் ஸ்வாஸம் நிஸ்வாஸமென்றும், வெளியில்விடும் ஸ்வாஸம் உஸ்வாஸமென்றும் சொல்லப்படும். இந்த நிஸ்வாஸ உஸ்வாஸங்கள் நஷ்டமானால் ஸப்தாதி விஷயங்களும்; ஸரீர வ்யாபாரங்களும், விகாரங்களும் (அந்தக்கரண சேஷ்டைகளும்) இல்லாமலிருக்கும். இதுவே லயமென்று சொல்லப்படும். இந்த லயமே யோகிகளுக்கு ஸ்ரேஷ்டமானது. இந்த நிஸ்வாஸ உஸ்வாஸங்களே "ஹம்ஸ" என்று சொல்லப்படும். இந்த "ஹம்ஸ" மானது, மூலாதார, ஸ்வாதிஷ்டான, மணிபூரக, அநாஹத, விஸுத்தி, ஆஜ்ஞேய, ஸஹஸ்ராரம் என்னும் ஏழுசக்ரங்களிலும் இருந்துகொண்டு நம்முடைய ஆயுர்ப்பாகத்தைக் காட்டுகின்றது. இதற்கு ஸ்ருதி ப்ரமாணம்.

"ஷட்ஸதம் கணநாதஸ்ய ஷட்ஸஹஸ்ரம் ப்ரஜாபதே:
ஷட்ஸஹஸ்ரம் மஹாவிஷ்ணோ: ஷட்ஸஹஸ்ரம் மஹேஸ்வர:
ஸஹஸ்ரம் ஜீவரூபஸ்ய ஸஹஸ்ரம் ஈஸ்வராத்மந:
ஸஹஸ்ரம் குருரூபஸ்ய ஏகம்புத்யா ப்ரகல்பயேத்."

1. மூலாதாரத்திற்கு அதாவது குதஸ்தானத்திற்கு அதிதேவதை கணபதி. அவருக்கு காலை 6 மணி முதல் 6-40 நிமிஷங்கள் வரையில் 600, ஸ்வாஸங்கள் நடக்கும்; நடந்தவுடன் அவருக்கு கர்ப்பம் நிறைந்து ஸ்வாதிஷ்டானத்திற்கு ப்ரவேசிக்கும்.

2. ஸ்வாதிஷ்டானத்திற்கு அதாவது குஹ்ய ஸ்தானத்திற்கு அதிதேவதை ப்ரஜாபதி (ப்ரஹ்மா) அவருக்கு 6-40, நிமிஷங்கள்முதல் பகல் 1-20, நிமிஷங்கள் வரையில் 6,000- ஸ்வாஸங்கள் நடக்கும், நடந்தவுடன் அவருக்கு கர்ப்பம் நிறைந்து மணிபூரகத்தில் அதாவது நாபியில் ப்ரவேசிக்கும்.

3. மணிபூரகத்திற்கு அதிதேவதை விஷ்ணு. அவருக்குப் பகல் 1-20, நிமிஷங்கள் முதல் இரவு 8-மணி வரையில் 6,000 ஸ்வாஸங்கள் நடக்கும். நடந்தவுடன் அவருக்குக் கர்ப்பம் நிறைந்து அநாஹதத்திற்கு அதாவது ஹ்ருதயத்திற்குப் ப்ரவேசிக்கும்.

4. அநாஹதத்திற்கு அதிதேவதை ருத்ரன். அவருக்கு இரவு 8-மணிமுதல் 2-40, நிமிஷங்கள் வரையில் 6,000 ஸ்வாஸங்கள் நடக்கும்; நடந்தவுடன் அவருக்குக் கர்ப்பம் நிறைந்து விஸுத்தியில் அதாவது அடிநாவில் (நெஞ்சக்குழியில்) ப்ரவேசிக்கும்.

5. விஸுத்திக்கு அதிதேவதை ஜீவன். அவருக்கு 2-40, நிமிஷங்கள் முதல் 3-46, நிமிஷங்கள் வரையில் 1,000 ஸ்வாஸங்கள் நடக்கும்; நடந்தவுடன் அவருக்குக் கர்ப்பம் நிறைந்து ஆஜ்ஞேயத்திற்கு அதாவது நெற்றிக்கு ப்ரவேசிக்கும்.

6. ஆஜ்ஞேயத்திற்கு அதிதேவதை ஈஶ்வரன். அவருக்கு 3-46, நிமிஷங்கள்முதல் 4-53, நிமிஷங்கள் வரையில் 1,000 ஶ்வாஸங்கள் நடக்கும்; நடந்தவுடன் அவருக்குக் கர்ப்பம் நிறைந்து ஸஹஸ்ராரமென்னும் ப்ரஹ்ம கபாலத்திற்கு (உச்சிக்கு) ப்ரவேஶிக்கும்.

7. ஸஹஸ்ராரத்திற்கு அதிதேவதை பரமாத்மா. அவருக்கு 4-53, நிமிஷங்கள்முதல் காலை 6-மணிவரையில் 1,000 ஶ்வாஸங்கள் நடக்கும்; நடந்தவுடன் அவருக்குக் கர்ப்பம் நிறைந்து மறுபடியும் காலை 6-மணி முதல் மூலாதாரத்திற்குப் ப்ரவேஶிக்கும்.

கடிகாரத்திலுள்ள பெண்டுலமானது ஆடிக்கொண்டே மணியைக் காட்டுவதுபோல் இந்தஶ்வாஸமானது முன்சொல்லிய ஏழுசக்ரங்களிலும் மேற்கூறிய கணக்கைப்போல நிமிஷத்திற்கு 15, ஶ்வாஸங்கள் நடக்கும். 60 நிமிஷத்திற்கு, 15 × 60 = 900, ஶ்வாஸங்கள் நடந்து, நாள் ஒன்றுக்கு 24-மணி நேரத்திற்குள் 900 × 24 = 21,600-இருபத்தோராயிரத்து அறுநூறு ஶ்வாஸங்கள் நடந்துகொண்டு நம்முடைய ஆயுர்ப்பாகத்தைக் காட்டுகின்றது. கடிகாரத்திற்கு மணியைக் காட்டும் தொழிலும் ஸூர்யசந்த்ராதிகளுக்கு நாள்கள் மாதங்கள் வருஷங்கள் யுகங்கள் காட்டும் தொழிலும் ஜீவகோடிகளுக்கு ஶ்வாஸம் ஆயுர்ப்பாகத்தைக் காட்டும் தொழிலாயிருக்கின்றது. ஆதலால், இச்சரீரத்திலுள்ள ஆறு சக்ரங்களே திருப்பதியின் ஆறு பர்வதங்கள். ஏழாவது சக்ரமாகிய ஸஹஸ்ராரத்தில் பரமாத்மா வஸித்துக்கொண்டிருப்பதே ஏழாவது மலையில் ஸ்ரீ வேங்கடேஶப்பெருமாள் நிவஸித்துக்கொண்டிருப்பது; அன்றியும் இந்த ஆறு ஆதாரங்களே ஸ்ரீரங்கத்திலுள்ள ஆறு ப்ராஹாரங்களாகவும். ஏழாவது சக்ரமாகிய ஸஹஸ்ராரத்திலுள்ள பரமாத்மாவே ஏழாவது ப்ராஹாரத்தில் ஸ்ரீரங்கநாதர் நிவஸிப்பதாகவும் எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றது. அப்படிப்பட்ட பரமாத்மா "ஹம்ஸ" ரூபமாய் 'ஸோஹம்

பாவமாய் "ஓங்"காரமாய் ப்ரபஞ்சமெங்கும் நிறைந்திருக்கின்றது இந்த "ஸோஹ"மே "ஓம்" என்னும் தாரகமந்த்ரம். இந்த ரஹஸ்யத்தை யோகிகளாகிய மஹாநுபாவர்கள் தெரிந்துகொண்டு ஏழாவது சக்ரமாகிய ஸஹஸ்ராரத்தில் ஶ்வாஸத்தைக் கொண்டுபோய் நிறுத்துவார்கள். அப்போது அவர்கள் காலனை ஜயித்து யுகங்கள் பர்யந்தம் ஸமாதியில் இருப்பார்கள். நம்முடைய ஆயுர்ப்பாகம் இந்த ஶ்வாஸமேயொழிய ஸூர்ய சந்த்ரர்கள் நடக்கும் நாளல்ல. ஒவ்வொரு மனிதனுக்கும் இத்தனைகோடி ஶ்வாஸங்களென்று ஜனனகாலத்திலேயே பஞ்சபூதங்களினால் உண்டான ஶரீரத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றது. இப்பேர்ப்பட்ட மஹாரஹஸ்யமாகிய ஶ்வாஸத்தைத் தெரிந்துகொள்ளாமல்,

மனிதர்கள் ஸாதாரணமாய்ப் பேசும்போது 12-அங்குல ஶ்வாஸம் வெளியில்வந்து 8-அங்குல ஶ்வாஸம் உட்சென்று 4-அங்குல ஶ்வாஸம் வெளியில் நஷ்டமாய்விடும்;

நடக்கும்போது 16-அங்குல ஶ்வாஸம் வெளியில்வந்து 8-அங்குல ஶ்வாஸம் உட்சென்று 8-அங்குல ஶ்வாஸம் நஷ்டமாய்விடும்;

கைத்தொழில் செய்யும்போது 20-அங்குல ஶ்வாஸம் வெளியில்வந்து 10-அங்குல ஶ்வாஸம் உட்சென்று 10-அங்குல ஶ்வாஸம் நஷ்டமாய்விடும்;

சண்டையில் 24-அங்குல ஶ்வாஸம் வெளியில் வந்து 12-அங்குல ஶ்வாஸம் உட்சென்று 12-அங்குல ஶ்வாஸம் நஷ்டமாய்விடும்;

நித்ரையில் 48-அங்குல ஶ்வாஸம் வெளியில்வந்து 30-அங்குல ஶ்வாஸம் உட்சென்று 18-அங்குல ஶ்வாஸம் நஷ்டமாய் விடும்;

ஓடும்போது 64-அங்குல ஸ்வாஸம் வெளியில் வந்து 27-அங்குல ஸ்வாஸம் உட்சென்று 27 - அங்குல ஸ்வாஸம் நஷ்டமாய்விடும்.

ஸம்போககாலத்தில் 64 - அங்குல ஸ்வாஸம் வெளியில் வந்து 24-அங்குல ஸ்வாஸம் உட்சென்று 40 - அங்குல ஸ்வாஸம் நஷ்டமாய்விடும்.

இவ்விதமாய் ஒவ்வொருவரும் நாள் ஒன்றுக்கு 30, 40 ஆயிரக்கணக்காய் "ஸ்வாஸத்தை" செலவழித்துவிட்டு 70, 80-வருஷத்திற்குள் மரணமடைகின்றார்கள். ஸகல ஜீவஜந்துக்களுக்கும் நாள் ஒன்றுக்கு 21,600 ஸ்வாஸங்கள் கணக்கு ஏற்பட்டிருக்கின்றது. மனிதர்கள், ஈஸ்வரனால் கொடுக்கப்பட்ட வயது நூறாயிருந்தாலும் மேற்சொல்லியதுபோல் ஸ்வாஸத்தைச் செலவழித்து விடுவதால், 80 - வயதிற்குமேல் ஜீவித்திருக்கமாட்டார்கள்.

குழந்தையானது பிறந்த மூன்றும்மாதம் இறந்துவிட்டால் அக்குழந்தைக்கு 19, 44,000-பத்தொன்பது லக்ஷத்து நாற்பத்து நாலாயிரம் ஸ்வாஸமே யிருந்தபடியால் அவைசெலவழிந்தவுடன் ஜீவன்போய்விட்டது என்று அறியலாம். பத்தொன்பது லக்ஷத்து நாற்பத்து நாலாயிரம் எவ்விதமாய் வந்ததென்றால், மாதம் மூன்றுக்கு நாள்கள் 90. நாள் ஒன்றுக்கு, 21,600 ஸ்வாஸங்கள் நடக்கின்றன; ஆதலால்,— 21,600 × 90 = 19, 44,000 ஸ்வாஸங்கள் ஆகின்றன.

"ஹம்ஸ" ஸூத்ர ரஹஸ்யம்.

ஶ்ரு || "ஹம்ஸோ கணேஶோ விதிரேவ ஹம்ஸோ
ஹம்ஸோ ஹரி ர்விஶ்வமயஶ் ஶம்பு:
ஹம்ஸோஹ மாத்மா குருரேவ ஹம்ஸோ
ஹம்ஸோஹ ஹம்ஸ: பரமாத்ம ஹம்ஸ:."

இந்த "ஹம்ஸ" மே, கணபதி ஹரி ஶம்பு: ஆத்மா குரு பரமாத்மாவென்று சொல்லப்படும்.

ஶ்ரு || "ஸ்வப்ரகாஶ சிதாநந்தம் ஸ ஹம்ஸ இதி கீயதே."
(ப்ரஹ்மவித்யோபநிஷத்.)

ஸ்வயம்ப்ரகாஶமாய், பரஞ்ஜ்யோதியாய், ஜ்ஞாநாநந்த ஸ்வரூபமாய், ஸர்வஸாக்ஷியாய் ப்ரகாஶித்துக்கொண்டிருக்கும் பரப்ரஹ்மமாகிய ஆத்மாவே "ஹம்ஸ" என்று சொல்லப்படும். இந்த "ஹம்ஸ" இச்சரீரத்தில் எவ்விடம் நிவஸிக்கின்றதென்றால்:—

"ஜாக்ரந் நேத்ர த்வயோர்மத்யே "ஹம்ஸ" ஏவப்ரகாஶதே
ஸகார: கேசரீ ப்ரோக்தா ஸ்த்வம்பதம் சேதிநிஶ்சிதம்
ஹகார: பரமேஶ ஸ்யாத் தத்பதம் சேதி நிஶ்சிதம்
ஸகாரோ த்யாயதேஜந்து: ஹகாரோஹி பவேத் த்ருவம்."
[யோகசூடாமண்யுபநிஷத்.]

இரண்டு நேத்ரங்களுக்கு மத்தியில் (ப்ரூமத்யஸ்தானத்தில்) "ஹம்ஸ"மானது ப்ரகாஶித்துக் கொண்டிருக்கின்றது. "ஹம்ஸ" என்னும்பதத்தில் 'ஹ' என்னும் அக்ஷரம், 'ம்' 'ஸ' என்னும் அக்ஷரம் ஆக இம்மூன்றும் சேர்ந்திருக்கின்றன. அதில் 'ஹ' என்றால் பரமாத்மா, 'ஸ' என்றால் ஜீவன் என்று சொல்லப்படும். 'ஹ - ஸ' என்னும் இவ்விரண்டு அக்ஷரங்களின் மத்தியிலிருக்கும் (ம்) என்பது பரமாத்மாவே ஜீவாத்மா, ஜீவாத்மாவே பரமாத்மா என்று இவ்விரண்டின் (ஸந்தி) ஐக்யத்தையே போதிக்கின்றது. இந்த ஜீவாத்மா நாபி, ஹ்ருதயகம

லம், கண்டம், ப்ரஹ்மரந்த்ரம் இவைகளில் ஸஞ்சரிக்கின்றது என்று ப்ரஹ்மோபநிஷத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆதலால்,

"ஹம்ஸ" மந்த்ரத்தை ஜபிக்கப்பட்டவர்கள் ஸத்யமாய் பரமாத்ம ஸ்வரூபத்தை அடைகின்றார்கள். இதற்கு ஸந்தேஹமில்லை. இது ஸத்யம் ஸத்யம்.

ஶ்ரு || "ஸகாரஞ்சஹகாரஞ்சஜீவோஜபதிஸர்வதா" [ப்ரஹ்மவித்யோ.]

ஜீவன் ப்ரூமத்ய ஸ்தானத்திலிருந்துகொண்டு, 'ஸ' காரத்தையும் 'ஹ' காரத்தையும் ஸதா தானாகவே ஸ்மரித்துக் கொண்டிருக்கும்; இதற்கு ஶ்ருதி ப்ரமாணம்:—

ஶ்ரு || "ப்ராணாபாந வஶோ ஜீவோ ஹ்யதஶ்சோர்த்வம் ப்ரதாவதி
வாமதக்ஷிண மார்க்கேண ஸஞ்சலத்வாந்ந த்ருஶ்யதே
ஆக்ஷிப்தோ புஜதண்டேந யதோச்சலதி கந்துக:
ப்ராணாபாந ஸமாக்ஷிப்த ஸ்தத்வஜ்ஜீவோ நவிஶ்ரமேத்
அபாநாத்கர்ஷதி ப்ராணோ பாந: ப்ராணாச்ச கர்ஷதி
ககாரஜ்ஜுவ நித்யேதத் யோஜாநாதி ஸயோகவித்
ஹகாரேண பஹிர்யாதி ஸகாரேண விஶேத்புந:
ஹம்ஸஹம்ஸேத்ய மந்த்ரம் ஜீவோ ஜபதி ஸர்வதா."

சிறுபிள்ளைகள் கையினால் உயரவிடும் பந்தானது கீழும் மேலும் எகிறிக்கொண்டிருப்பதுபோல் ப்ராண அபானவாயுக்கள் இரண்டும் இத்தேஹமத்தியில் ஷடாதாரங்களின் (ஏழு சக்ரங்களின்) வழியாய் ஶ்வாஸம் உள் ப்ரவேஶிக்கும்போது 'ஸ' காரத்துடனும் என்றால் 'ஸோ' என்னும் மந்த்ரத்துடனும் வெளியில் வரும்போது 'ஹ' காரத்துடனும் என்றால் 'ஹம்' என்னும் மந்த்ரத்துடனும் ஏறி பிறங்கிக்கொண்டு ப்ரதிதினம் முன்சொல்லியிருக்கும் கணக்கைப்போல் 21,600 முறை * ரேசக † பூரகமாய் நாஸிகா ரந்த்ரங்களின் வழியாய் த்வாதஶாங்குல (12-அங்குல) அஷ்டாங்குல (8-அங்குல)ம்

* ரேசகம் = ஶ்வாஸம் வெளியில் விடுவது.

† பூரகம் = ஶ்வாஸம் உட்கொள்வது.

வரையில் (அதாவது இடதுநாஸியில் வரும்ஶ்வாஸம் 12-அங்குலம், வலதுநாஸியில் வரும்ஶ்வாஸம் 8-அங்குலம்) வெளிவந்து மறுபடியும் உள் ப்ரவேஶிக்கின்றது. இவ்விதமாய் இடா என்னும் ஸூர்யநாடி (வலதுநாஸி)யிலிருந்து பிங்களா என்னும் சந்த்ரநாடி (இடதுநாஸி) மார்க்கமாகவும், பிங்களா என்னும் சந்த்ரநாடியிலிருந்து இடா என்னும் ஸூர்யநாடி மார்க்கமாகவும் மாறிமாறித் திரிந்துகொண்டிருக்கும்.

ஓர் கயிற்றால் கட்டப்பட்ட பக்ஷி அந்தக் கயிற்றை எப்படி இழுத்துக்கொண்டிருக்குமோ, அதுபோல் ரேசக, பூரகங்கள், ப்ராணாபானங்களுக்கு மத்தியிலிருக்கும் ஜீவனை மேலுக்கும் கீழுக்கும் அதாவது உள்ளுக்கும் வெளிக்கும் இழுத்துக்கொண்டேயிருக்கும். இந்த ஜீவன் தத்வாரா "ஹம்ஸ" மந்த்ரலேகத்தை "ஸோஹம்" என்னும் வாக்யத்தைத் தனக்குத் தானாகவே ஜபித்துக்கொண்டிருக்கும்; இந்த ரஹஸ்யத்தைத் தெரிந்து இராப்பகலாய் அப்யாஸம்செய்துகொண்டு வரப்பட்டவர்களே ராஜயோகிகள். இந்த ராஜயோகிகள் யாருக்கு ஸமானர்களெனில்:—

ஶ்ரு || "ஹம்ஸஹம்ஸேதி யோ ப்ரூயாத் ஹம்ஸோநாம ஹரிஶ்ஶிவ:
குருவக்த்ராத்லப்யேத ப்ரத்யக்ஷஸ் ஸர்வதோமுகம்."
[ப்ரஹ்மவித்யோபநிஷத்.]

ப்ரஹ்மைக்யத்திற்குக் காரணமாகிய இந்த 'ஹம்ஸ' ஸ்வரூப ஸஞ்சார ரஹஸ்யத்தைக் குருமுகமாய்த் தெரிந்து த்யானிக்கப்பட்டவர்களே ஆத்மாராமத்யானம் செய்யும் ப்ரஹ்மஜ்ஞானிகள் என்று சொல்லப்படுவார்கள். இப்படி 'ஹம்ஸ' த்யானம்செய்பவர்கள் ஹரிஹராதி தேவதைகளுக்கு ஸமானமாகின்றார்கள். இந்த "குருகீலகம் முன்சொல்லப்படும்."

"ஜ்ஞான ஸ்வரூபம் பரமஹம்ஸ மந்த்ரம் ஸமுச்சரேத்
ப்ராணிநாம் தேஹமத்யே து ஸ்திதோ ஹம்ஸ ஸதார்த்யுத:
ஹம்ஸஏவ பரம்ஸத்யம் ஹம்ஸஏவது ஶக்திகம்
ஹம்ஸஏவ பரம்வாக்யம் ஹம்ஸஏவது வைதிகம்
ஹம்ஸஏவ பரோருத்ர: ஹம்ஸஏவ பராத்பர:"

"ஸோஹ மபாபோ விரஜோ நிர்முக்த"
"யோஸா வஸௌ புருஷஸ்ஸோஹமஸ்மி"
"ஸர்வதேவஸ்ய மத்யஸ்தம் தா ஹம்ஸஏவ மஹேச்வர
ஸதா ஸமாதிம் குர்வீத ஹம்ஸமந்த்ர மநுஸ்மரன்
நிர்மல ஸ்படிகாகாரம் திவ்யரூப மநுபமம்
மத்யேதேஹ பரமஹம்ஸ ஜ்ஞாநமுத்ராத்மகம்"
[ப்ரஹ்மவித்ய, ஈசாவாஸ்ய, தைத்ரீயோபநிஷத்துகள்.]

அப்பேர்ப்பட்ட ஜ்ஞான ஸ்வரூபமான 'ஹம்ஸ'மே ஆத்மாவே தேஹமத்தியில் (புத்தியென்னும் குஹையில்) ஸ்வயம் ப்ரகாசமாய் ஸாக்ஷி ஸ்வரூபமாய்ப் ப்ரகாசித்துக்கொண்டு ஸோஹம் ஸோஹம் (நானே ப்ரஹ்மம், ப்ரஹ்மமே நான்) என்று ஸதா தனக்குத் தானாகவே அஜபா மந்த்ரம் ஜபித்து நாஸிகா ரந்த்ரங்களின் வழியாய் நடந்துகொண்டிருக்கும்.

சொல்லுமெனக் கேட்டுகந்த மாணக்காவுன்
தூலகா ரணப்ரமந் துரியாதீதம்
அல்லுமல்ல பகலுமல்ல நிஷ்களங்கம்
'ஹம்ஸோஹம்' அஜபமந் நிரத்யானம்
செல்லுமல னேகமென் றபிமானிக்கும்
சித்தவ்ருத்தி நிரோதகமாம் யோகத்தாலே
வெல்லறிஞர் பலபோக விரத்தியோகி
விவேகத்யா னிகளோ மேலாம் ப்ரஹ்மம்.

இதை ஜபிக்கவேண்டிய ரஹஸ்யம், "ஸோஹம்" மந்த்ர ஜபமே ஸம்ப்ரஜ்ஞாதஸமாதி என்பதில் முன்சொல்லப்படும். அதை அறிந்து அதுபோல், அப்யாஸம்செய்து வரவேண்டும். இந்த 'ஹம்ஸ'மே ஸத்யஸ்வரூபன், இவனே பரதத்பரன். இவன்வாக்கே 'ஸோஹம்.' ஸப்தகோடி மஹாமந்த்ரங்களிலும் இதுவே ச்ரேஷ்டமான மந்த்ரம். இந்தரஹஸ்யமே ஸோஹம் மந்த்ரம். இந்த ஸோஹம் மந்த்ரமே ப்ரஹ்மைக்யத்திற்குக் காரணமாயிருக்கின்றது.

நாம் தேவாலயத்திற்குச்சென்று இரண்டு கைகளையும் குவித்து அஞ்சலிஹஸ்தர்களாய் விக்ரஹங்களை நமஸ்கரிக்கவேண்டிய காரணமென்னவெனில், என் ஆத்மாவை ப்ரஹ்மத்தில் சேர்க்கவேண்டுமென்னும் ஐக்யபாவமே இரண்டு ஹஸ்தங்களையும் குவிப்பதற்குக் காரணம். அதற்கு அந்த விக்ரஹங்கள் நமக்கு என்ன காட்டுகின்றதென்றால்,

2-DEC 1919

ஸ்ரீ பார்த்தஸாரதிப்பெருமாள்.

ஒருகையில் சங்கும், மற்றொருகையில் சக்ரமும், இன்னொருகையால் தன் பாதத்தைக்காட்டிப் பாதத்தின்மீது த்ருஷ்டியைவைத்து மனலை நிறுத்தினால் உன் ஆத்மா ப்ரஹ்மத்

தில் ஐக்யமாகும் என்னும் பாவனையாய் நமக்கு ஸதா ஹம்ஸதத்தைக் காட்டுகின்றது. அப்படி மனம் நின்றால் இவ்வாத்மா பரமாத்மாவில் ஐக்யமாகும். மனதை நிறுத்துவதற்கே தேவாலயங்களில் விக்ரஹங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த ஹம்ஸமே 'ஸத்குரு' கோப்யம். இதுவே நான்கு மஹா வாக்யங்களினுடைய ஸாரம், அஜபாகாயத்ரீ, மௌனம், நிர்க்குணம், ஆத்மத்யானம். இதுவே ஆத்மாராமதாரகம். இந்த ஹம்ஸ ஸூத்ரத்தைத் தெரிந்துகொண்டவர்களே நிஜமான ப்ராஹ்மணர்கள். இவர்களே ப்ரஹ்மஜ்ஞானிகள்.

நாநாவிஷயங்களில் ஓடித்திரியும் மனதை (குரங்கை ஓடவிடாமல் ஓர் கயிற்றால் கட்டிக்கொண்டுவந்து ஓரிடத்தில் கட்டிவைத்தால் எங்கும் ஓடாமலிருப்பதுபோல) இந்த ஹம்ஸ ஸூத்ரத்தால் (கயிற்றால்) கட்டிவிட்டால் எங்கும் ஓடாமல் நாபியிலேயே நிம்மதியாய் உட்கார்ந்திருக்கும். இதைவிட வேறே எந்த உபாயங்களினாலும் மனம் கட்டுப்பட்டு நிலைபடாது. உலகத்தில் மனிதர்களுக்கு இந்தமனம் சாந்தமாயும் அசாந்தமாயும் இருக்கின்றது.

மனஸின் ஸ்வபாவம்.

"ஓம் மனோஹி த்விவிதம் ப்ரோக்தம் சுத்தஞ்சா சுத்தமேவச
அசுத்தம் காமஸங்கல்பம் சுத்தம் காமவிவர்ஜிதம்."

மனம், சுத்தம் அசுத்தம் என இரண்டுவகைப்படும். காமக்ரோத லோப மோஹ மத மத்ஸராதிஸங்கல்பஸஹிதமான மனம் அசுத்தமான மனமென்றும், காமக்ரோத லோப மோஹ மத மத்ஸராதிஸங்கல்ப ரஹிதமாய் சமதமாதி ஸத்குணங்கள், விஷயவைராக்யம், ஆத்மாநாத்மவிவேகம் முதலானவைகள் உண்டாயிருக்கும் மனம் சுத்தமானமனம் என்றும் சொல்லப்

படும்; இந்த த்ரிலோகமும் மனஸின் ஸ்வரூபமாகவே யிருக்கின்றது. எப்படியென்றால்,

ஸ்ரு|| "மனஏவ ஜகத்ஸர்வம் மனஏவ ஸ்ரீஹரிபு:, மனஏவஹி ஸம்ஸாரோ மனஏவஜகத்ரயம், மனஏவ மஹத்துக்கம் மனஏவ ஜராதிகம், மனஏவஹி காலஞ்ச மனஏவ மலம்ததா, மனஏவஹி ஸங்கல்போ மனஏவஹி ஜீவக:, மனஏவஹி சித்தஞ்ச மனோஹங்கார ஏவச, மனஏவமஹத்பந்தம், மனோந்தக்கரணஞ்சதத், மனஏவஹி பூமிஸ்ச மனஏவஹி தோயகம், மனஏவஹி தேஜஸ்ச மனஏவ மருத்மஹான், மனஏவஹி ஆகாசம் மனஏவஹி சப்தகம், ஸ்பர்சரூபம் ரஸகந்தம் கோசா: பஞ்சமனோபவா: ஜாக்ரத்ஸ்வப்ந ஸுஷுப்த்யாதி மனோமயமிதீரிதம், திக்பாலா வஸவோருத்ரா ஆதித்யாஸ்ச மனோமயா:, த்ருஸ்யம் ஜடம் த்வம் த்வஜ்ஞாமஜ்ஞானம் மானஸம் ஸ்ம்ருதம், ஸங்கல்பமேவ யத்கிஞ்சித் தத்வம் நாஸ்தீதி நிஸ்சித நாஸ்தி நாஸ்தி ஜகத்ஸர்வம் குருஸிஷ்யாதிகம் நஹி." [தேஜோபிந்தூபநிஷத்.]

ஒரே பொன்னானது நாநாவித நாமரூபங்களையுடைய நாநாவித பூஷணங்களாவதுபோல, ஓர்மனமே நாநாவித நாமரூபங்களையுடைய ப்ரபஞ்சரூபமாய்க் காணப்படுகின்றது. அப்போற்பட்ட மனமே, நமக்குப்பெருத்த சத்ருவாயிருக்கின்றது. அந்தமனமே ஸம்ஸாரரூபமாகவும், ஜகத்ரயமாகவும் இருக்கின்றது. மனமே, துக்கஸ்வரூபமாயிருக்கின்றது. அதுவே, பால்யயௌவன, கௌமார வார்த்திக்யங்களாயிருக்கின்றது. அதுவே, காமரூபமாகவும் மலமாகவும் இருக்கின்றது, மனமே, ஸங்கல்ப விகல்பங்களாகவும், ஜீவரூபமாகவும், புத்தி, சித்தம், அஹங்காரமாகவும், அந்தக்கரணங்களாகவும் இருக்கின்றது. மனமே பந்தமாயிருக்கின்றது. மனமே ஆகாசாதி பஞ்சபூதங்களாகவும், சப்த ஸ்பர்சாதி பஞ்சதந்மாத்ரைகளாகவும், அன்னமயாதி பஞ்சகோசங்களாகவும், ஜ்ஞானேந்த்ரிய கர்மேந்த்ரிய பஞ்சப்ராணன்களாகவும், காம, க்ரோத, லோப, மோஹ, மத, மத்ஸராதிகளாகவும், ஸத்வ ரஜஸ்தமோ குணங்களாகவும் இருக்கின்றது. ஜாக்ரத், ஸ்வப்ந, ஸுஷுப்தி என்னும் அவஸ்தாத்ரயங்களும் மனோமயமாகவேயிருக்கின்றன. அஷ்டதிக்பாலகர்களும், அஷ்டவஸுக்களும், ஏகாதச

ருத்ரர்களும் த்வாதசாதித்யர்களும் மனஸாகவேயிருக்கின்றார்கள். எல்லாத்ருஶ்யங்களும் மனஸாகவேயிருக்கின்றன, மனமேநினைப்பு மறப்பாகவும், ஜ்ஞான அஜ்ஞானங்களாகவும், குரு(ஜ்ஞானம்) ஶிஷ்யர்(அஜ்ஞானங்)களாகவும்,மாயை அவித்யையாகவும் இருக்கின்றது. நாமரூபங்களையுடைய இந்த சராசரப்ரபஞ்சம் ஸர்வமும் மனஸாகவே யிருக்கின்றது.

ஶ்ரு || "இதஸ்சே தஶ்ய ஸௌவ்யக்ரம் வ்யர்த்தமேவாபி தாவதி மனோ ஹ்யாதரம் யாதி க்ராமே ஶௌனேயகோ யதா."

[மஹோபநிஷத்.

மனம், இது நல்லது இதுகெட்டது என்று அறிந்து கெட்டதை விட்டுவிட்டு நல்லதை யெடுத்துக்கொள்ளாமல் ஸர்வ வஸ்துக்களிலும் ஆசையுடையதாய், க்ராமத்திலிருக்கும் நாயானது யாதொரு வேலையுமில்லாமல் வ்ருதாவாய் இங்கும் அங்கும் ஓடித்திரிவதுபோல் இந்த மனமானது க்ஷணத்திற்குள்ளே ஸ்வர்க்க மத்ய பாதாளலோகம்வரையில் ஓடி அலைந்து திரிந்து கெட்டு யர்த்துவிடுகின்றது. இப்படி மனமானது நான்கு பக்கங்களிலும் ஓடித்திரிவதனாலேயே எல்லோருக்கும் ஜநநமரண துக்கங்கள் ஸம்பவித்துக்கொண்டே யிருக்கின்றன

ஶ்ரு || "ஸ்வஸங்கல்பித தந்மாத்ர ஜாலாப்யந்தர வர்த்தினி பராம் விவஶதா மேதி ஶ்ருங்கலாபத்த ஸிம்ஹவத்"

[மஹோபநிஷத்.

ஜீவன், மனோவஶமாய் விஷய வாஸனாலோலனாய், ஸிம்ஹமானது சங்கிலியினால் கட்டப்பட்டதுபோல் ஸம்ஸாரத்தில் கட்டப்பட்டு ஜநந மரண ஸமுத்ரத்தில் மூழ்கிக்கொண்டு ஸௌக துக்கங்களை அநுபவித்துக்கொண்டிருந்து இச்சரீரத்தைவிட்டு எப்படி ஓடி விடுகின்றதென்றால்:—

"ஜோ தானஹ பஞ்ஜர்மே தேக்! ஜோ போல்போல்கே உஸ்மே கைஸா ஸோதா தேக்! ஜாதா உப்பர் உட்கர் தேக்! தோதா ஸாத் ஜான் பாபர் போகுதபார் ஜீவா." (இதன் விவரம் ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம் - 2, ஶ் - 11, பார்க்க.) .

எழுபத்திரண்டாயிரம் நாடிகளையுடைய இந்த ஸ்தூல ஶரீரத்தில் பதினேழு தத்வங்களையுடைய ஸூக்ஷ்மஶரீரம் ஒன்று இருக்கின்றது; அதுயாதெனில், மநம் புத்தி இரண்டு, ஸூக்ஷ்ம ஜ்ஞானேந்த்ரியங்கள் ஐந்து, ஸூக்ஷ்ம கர்மேந்த்ரியங்கள் ஐந்து, ப்ராணவாயுக்கள் ஐந்து, இந்தப் பதினேழு தத்வங்கள் கூடினதே ஸூக்ஷ்மஶரீரம். இதற்கு மத்தியிலிருக்கும் கூண்டுக்குள் ஜீவாத்மா என்னும் கிளியானது நடுநாயகனாயிருந்துகொண்டு கீதைகளையும் வேதஶாஸ்த்ரங்களையும் பார்த்துக்கொண்டும் கேட்டுக்கொண்டும் அந்தக்கிளி என்னும் ஜீவாத்மா எப்படித் தூங்கிக்கொண்டிருக்கின்றது பார்! இப்படித் தூங்கிக்கொண்டிருந்த அந்த ஸ்தூல ஶரீரத்தை விட்டுவிட்டு, அந்தக் கிளியாகிய ஜீவாத்மா ஸூக்ஷ்மசரீரத்துடன் ககனமார்க்கமாய் எகிறிச்சென்று அவனவன் செய்த கர்மாநுஸாரமாய்அந்தந்த தாய்கர்ப்பத்திலிருக்கும் ஸ்தூல ஶரீரத்தில் போய்ப்புகுந்துகொண்டு ஶிஶுவாய்ப் பிறக்கின்றது.

நாட்டுவார் சித்தரெல்லாம் பேதமாக
நலம்போலே சாஸ்திரங்கள் கட்டினார்கள்
பூட்டியே மனிதரெல்லாம் நூலைப்பார்த்துப்
பூரணமாய் அண்டமதைப் பாராமற்றான்
காட்டிலே திரிந்தலைந்த மானைப்போலே
கபடமாய் வாய்ஜ்ஞானம் பேசுவார்கள்
கூட்டிலே அடைந்திருக்கும் குயிலைப்பாரார்
கூறுத மந்திரத்தின் குறியைப்பாரே.

முக்யமாய் நாம் ஜநநமெடுத்தது அந்த ஜீவனைக் கட்டிலிருந்து விடுதலை செய்வதற்கேயன்றி, பெண்டுபிள்ளைகளின் மீதும், தனதான்யம், க்ருஹம், பூமி முதலானவைகளின் மீதும் சிலநாட்கள் ஆஶாபாஶமாயிருந்து மாணமடைவதற்கல்ல. முன்சொல்லிய பதினேழு தத்வங்களுக்கும் மனமே ப்ரதானமாயிருப்பதால் அப்பேர்ப்பட்ட மனஸை நஶிக்கச்செய்தால், மற்ற பதினாறு தத்வங்களும் தனக்குத்தானாகவே நஶித்து

ஜீவனானது, (சங்கிலியினால் கட்டப்பட்ட ஸிம்ஹத்தைக் கட்டிலிருந்து விடுவித்தவுடன் அது எப்படி காட்டுக்கு ஓடிவிடுமோ அதுபோல்) கட்டிலிருந்து விடுபட்டவுடன் அப்பா! ஆதியில் அந்த சதுர் (நான்) முகனால் இந்த ஸூக்ஷ்ம சரீரத்தில் கட்டுப்பட்டிருந்தேன். இப்போது மனிதன் ஸங்கல்ப ரூபமாயிருக்கும் மனதை சூன்யமாய் (யாதொன்றுமில்லாமற்) செய்தபடியால், மற்ற பதினாறு தத்வங்களும் நசித்து ஸஞ்சித கர்மங்கள் ஒழிந்து நான் கட்டிலிருந்து விடுபட்டேன் என்று ஜீவாத்மா, பரமாத்மாவில் ஐக்யமாய் விடுகின்றது.

இப்பேர்ப்பட்ட ஜீவப்ரஹ்மைக்யமே முக்தி எனப்படும். உலகத்திலுள்ள புருஷர்களும் ஸ்த்ரீகளும் எல்லோரும் அந்த மனஸினால் வந்தவர்களேயொழிய வேறல்ல. அந்த மனமே மஹா பந்தமாயிருக்கின்றது. இதற்கு ஶ்ருதிப்ரமாணம்.

ஶ்ரு || "மனஏவ மனுஷ்யாணாம் காரணம் பந்தமோக்ஷயோ:
பந்தாய விஷயாஸக்தம் முக்த்யை நிர்விஷயம் ஸ்ம்ருதம்."

ப்ரதி புருஷனுக்கும் அவன் மனமே பந்தமோக்ஷத்திற்குக் காரணமாயிருக்கின்றது. ஸ்த்ரீ, சந்தனம், புஷ்பம், தாம்பூலாதி விஷயங்களில் ஆசையுடைய மனம் அசுத்தமான மனம்; அதனால் ஜீவனுக்கு பந்தம் உண்டாகின்றது. (இது விஷயம் ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம், 6-ம்-5, ல் பார்க்க.) விஷயாஸக்தியை அடையாதமனம் சுத்தமானமனம், அதனால் ஜீவனுக்கு மோக்ஷமுண்டாகின்றது. எப்படியென்றால்:—

ஶ்லோ || "வாயுநா ஜாயதே மேகோ புனஸ்தேநைவ நீயதே
மநஸா கல்ப்யதே பந்தோ மோக்ஷஸ்தேநைவ கல்ப்யதே."

நிர்மலமான ஆகாசத்தில் மேகங்கள் உண்டாவதற்கும் மறுபடியும் அந்த மேகங்களில்லாமற் போவதற்கும் வாயுவே காரணமாயிருப்பதுபோல், மனிதர்களுக்குப் பந்தம் உண்டாவதற்கும் மறுபடியும் அந்தபந்தம் நசித்து மோக்ஷமுண்டாவதற்கும் மனமே காரணமாயிருக்கின்றது.

ஶ்ரு || "யதோ நிர்விஷயஸ்யாஸ்ய மனஸோ முக்தி ரிஷ்யதே
தஸ்மாத் நிர்விஷயம் நித்யம் மனஃ கார்யம் முமுக்ஷுணா."

மனம் எப்பொழுது விஷய ஸம்பந்தமில்லாமலிருக்கின்றதோ, அதாவது - புத்ர, மித்ர, களத்ர, க்ருஹ, தனதான்யாதிகளும், "இது எனது" "இது எனது" என்னும் மமகாரமும், இவைகளுக்கெல்லாம் நானே கர்த்தனென்னும் அஹங்காரமும், இவ்விரண்டும் பூர்வஜன்மங்களின் வாஸனையினால் ஜீவனுக்கு அணுஸ்வரூபமாய் கர்ப்பத்திலேயே ப்ரவேசித்து சிசுவாய்ப் பிறந்தவுடன் அது, கர்ப்பத்திலேயே அடங்கியிருந்து சிசு வ்ருத்தியடையவடைய அவ்விரண்டும் சிசுவுடனே வ்ருத்தியாகிக்கொண்டே வருகின்றது. நாமெல்லோரும் சிறுபிள்ளைகளாயிருந்தபோது எந்த ஆசாபாசங்களும் நமக்கு இல்லாமலிருந்தது. பிறகு நாம் வ்ருத்தியடையவடைய அந்த ஆசாபாசங்களும் நம்முடன் கூடவே வ்ருத்தியாகிக்கொண்டே வந்துவிட்டன. இவ்விரண்டும் மனதிற்கு எப்பொழுது இல்லாமற் போகின்றனவோ அப்பொழுதே ஜீவன், முக்தி அடைகின்றது. மோக்ஷாபேக்ஷையுடையவர்களெல்லாம் மனதை விஷய ஸம்பந்தமில்லாமற்படிக்குப் பரிசுத்தமாகச் செய்துகொள்ளவேண்டும். அதாவது, ஹ்ருதயகமலத்தில் மேற்சொல்லிய காமக்ரோதாதி அழுக்குகள் இல்லாமற்செய்து, பரிசுத்தமாய் வைத்தால் தனது நிஜஸ்வரூபத்தை அடையலாம். அப்படி மனம் பரிசுத்தமாகாவிடில் அந்த மனதின் கதி என்னவாகின்றதென்றால்:—

"மானஸா பாவ்யமானோஹி தேஹதாம் யாதி தேஹக:
தேஹவாஸநயா முக்தோ தேஹதர்மைர் நலிப்யதே." [மஹோ.]

ப்ராண ப்ரயாணகாலத்தில் மனமானது எதையெதை ஸ்மரித்துக்கொண்டு ப்ராணனை விடுகின்றதோ ஜீவனுக்கு அந்தந்த ஜன்மங்கள் உண்டாகின்றன. எப்படியென்றால், ஸதா பார்யாளை ஸ்மரித்துக்கொண்டிருந்தால், ப்ராணன்போகும்போது சித்ர குப்தம் (சித்ரம்-படம், குப்தம் - ரஹஸ்யம்)

என்னும் படம் தோன்றும். அச்சமயத்தில் கண்களைத்திறந்து கொண்டிருந்தாலும் மூடிக்கொண்டிருந்தாலும் கண்களுக்கு முன் அந்தப்படத்தில் பார்யாளின் உருவம் தோன்றும்படி, ஸாக்ஷியாய் இருக்கப்பட்ட ஜீவாத்மா காட்டுகின்றான். இது விஷயம் இனி விவரமாய்ச் சொல்லப்படும்.

> வைஷா ஸ்வபாவாபிமதம் ஸ்வயம் ஸங்கல்ப்ய தாவதி
> சிச்சைத்யம் ஸ்வய மம்லாகம் மானாங் மா உச்யதே." [மஹோப.]

இந்த மனோவாஸனை தனக்கிஷ்டமான விஷயங்களை ஸங்கல்பித்துக்கொண்டு அந்த விஷயங்களிலேயே விசேஷமாய் ஓடிக்கொண்டிருக்கும். இப்படி மனம் சற்றாகிலும் வாடாமல் காலுக்குகாள் வ்ருத்தி அடைந்துகொண்டேயிருக்கும். ப்ரபஞ்ச விஷயத்தையும், ப்ரபஞ்சவிஷயத்தை அறியும்படியான ஶாந்த அறிவாகிய பரப்ரஹ்மத்தையும் ஸ்மரித்துக்கொண்டிருப்பதனால் இது, மனம் என்று சொல்லப்படும்.

> "ஸங்கல்பநம் மனோவித்தி ஸங்கல்ப ஸ்தத்ரவித்யதே
> யத்ர ஸங்கல்பநம் தத்ர மனோஸ்தீ த்யவ கம்யதாம்." [மஹோப.]

ஸங்கல்பமே மனம் என்று சொல்லப்படும். ஸங்கல்பத்தைவிட மனது வேறானதல்ல. ஸங்கல்பம் எங்குபிறக்கின்றதோ அங்கு மனம் இருக்கிறதென்று கண்டிதமாய்த்தெரிந்து கொள்ளவேண்டும். இந்த மனம் உதிக்குமிடம் நான்முகன் உதித்தவிடமென்று முன்சொல்லியிருக்கின்றோம். அந்தஇடத்தை ஆகாஶரூபமாய் பார்த்தால்,

> "எங்குஞ் சிவமே இரண்டற்று நிற்குநெஞ்சே
> தங்கும் சுகம் சலியாதே—அங்கிங்கென்
> றெண்ணாதே பாழி லிறந்து பிறந்துழலப்
> பண்ணாதே யானுன் பரம்."

என்னும் ஸ்ரீ தாயுமானவர் வாக்யரீதியாய் எங்கும் ஓடித்திரியும் மனஸை ஓடவிடாமல், முன்சொல்லியதுபோல் நிறுத்தினால், தானே தானாகின்றான். அதாவது எங்கும் நிறைந்திருக்கும் பரிபூர்ண பரப்ரஹ்மத்தில் தான் ஐக்யமாகின்றான்.

> "விரிஞ்சி ரூபாந்மனஸ கல்பிதத்வா ஜகத் ஸ்திதே
> தாவத் ஸ்திரியம் ப்ரோக்தா தந்நாஶே நாஶமாப்நுயாத்."
> [மஹோபநிஷத்.]

ஸங்கல்ப ரூபமாயிருக்கும் மனஸினாலேயே இந்தப்ரபஞ்சம் கல்பிக்கப்பட்டது. அவ்விதமான மனஸே, சதுர்முக ப்ரஹ்மதேவனென்றும் ஸ்ருஷ்டிக்குக் காரணகர்த்தனென்றும் சொல்லப்படும்.

> "சித்தமேவஹி ஸம்ஸாரோ ராகாதி க்லேஶ தூஷிதம்
> ததேவதைர்விநிர்முக்தம் பவாந்த இதி கத்யதே." [மஹோப.]

மனஸே ராகத்வேஷ காமக்ரோதாதி வ்ருத்திகளாகவும் ஈஷணாத்ரயங்களாகவும் இருக்கின்றது. அவ்வித வ்ருத்தியான மனஸே, மஹா ஸம்ஸாரமாயிருக்கின்றது. ராகத்வேஷ காமக்ரோதாதிகளும் ஈஷணாத்ரயங்களின் வ்ருத்திகளும் ப்ரஹ்மஜ்ஞானத்தினால் நஶிக்கச்செய்வதே, மனோநாஶமென்று சொல்லப்படும். அதுதான் மோக்ஷம்.

> சொல்லுகின்றேன் என்மகனே மாணகேளு
> ஸூக்ஷமெல்லா மவனுடைய சூட்சமல்லால்
> வெல்லுதற்கு வேறுமொரு விதமுங்காணோம்
> வெட்டவெளி யொன்றுநிசம் வெளியேமைந்தா
> அல்லுகின்ற ஆன்மாவே ஒன்றேதெய்வம்
> அவனியிலே தெய்வமுந்தா னையாயில்லை
> தன்னுகிற கருவிகளைத் தள்ளினக்கால்
> தானவனைத் தன்னுளே அறியலாமே.

> "த்ஸ்ய சஞ்சலதா யைஷாத்வ வித்யா வாஸனாத்மிகா
> வாஸனா பராநாம்நீ தாம் விசாரேண விநாஶய." [மஹோபநிஷத்]

அதையும் மனஸே அவித்யாவாஸனையென்று சொல்லப்படும். அதை ஆத்மவிசாரணையினால் நாஶம்செய்யவேண்டும்.

> "ததாந்யப குர்வந்தி கமித்ராணி நபாந்தவா:
> நகாயக்லேஶ வைதுர்யம் நதீர்தா யதநாஶ்ரயா:
> கேவலம் தந்மனோமாத்ர ஜயேநா ஸாத்யதே பதம்." [மஹோபநி.]

ப்ராண ப்ரயாணகாலத்தில் தாம், மித்ரர்கள், பந்துக்கள் முதலானவர்கள் உபகாரம் செய்யமாட்டார்கள். ஶரீரகஷ்டத்துடனிருக்கும் ஜாகரஉபவாஸங்கள், புண்யதீர்த்தயாத்ரை, தேவாலயதர்ஶநம், ப்ரம்ஹசர்யம், ஸந்யாஸம் முதலானவைகளினால் மோக்ஷம் உண்டாகமாட்டாது. ஆனால், சஞ்சலரூபமாயிருக்கும் மனதைஜயித்தால் மோக்ஷத்தை யடையலாம். ஆதலால், எல்லாஜயத்தைவிட மனோஜயமே ஶ்ரேஷ்டமானது.

காணப்பா கோவிலென்றுந் தீர்த்தமென்றும்
காசினியிற் செம்பால் விக்ரகமென்றும்
பேணப்பா உலகத்தோர் தங்களுந்தான்
பேய்போலே திரிந்தலையப் படைத்தாரீசன்
காணப்பா தேவதையைப் பணிந்திட்டாலும்
நதிகளெல்லாந் தேடிப்போய் முழுகினாலும்
வணப்பா உள்விட்டுக் குள்ளிருக்கும்
ஒளிவுள்ள வஸ்துவைத்தா னறிந்துகாணே.

ஶ்ரு || "மநஸைவ மநஶ்சித்வா பாஶம் பரமபந்தநம்
பவாதுத்தாரயேதாத்மாநம் நாஸாவந்யேந தார்யதே." [மஹோப.]

விஷத்தை விஷத்தினாலும், பாணத்தை அதற்கு ஸமமான வேறொரு பாணத்தினாலும் கண்டிப்பதுபோல் மனதை மனதினாலேயே நாஶம்செய்யவேண்டும். எப்படியென்றால், ஜ்ஞான ஸ்வரூபமான பரிஶுத்த மனதினால் அஶுத்தமான மனதை அதாவது காமக்ரோதாதி வ்ருத்திரூபமாயிருக்கும் மனதை நாஶம் செய்யவேண்டும்.

ஶ்ரு || "மநோவ்யாதே சிகிச்சார்த்த முபாயம் கதயாமி தே
யத்த ஸ்வாபிமதம் வஸ்து தத்யஜன் மோக்ஷமஶ்நுதே."
[மஹோபநிஷத்.]

ஸகல எண்ணங்களையும் விட்டுவிடுவதே மனோ வ்யாதிக்குப் பரம ஔஷதம்; அதைவிட வேறொரு ஔஷதமில்லை.

ஶ்ரு || "நிரஸ்த விஷயாஸங்கம் ஸந்நிருத்தம் மநோஹ்ருதி
யதா யாத்யுந்மநீ பாவம் ததா தத்பரமம் பதம்."

மனம் விஷயங்களிலிருந்து நீங்கி "நான்" "எனது" என்னும் "அஹங்கார" "மமகாரங்கள்" இல்லாததாய், ஆத்மஸ்வரூபத்தில் எப்பொழுது லயிக்கின்றதோ அப்பொழுது அது பரமபதத்தை (மோக்ஷத்தை) அடையும்.

ஶ்ரு || "மநஃ ப்ரஶமநோபாயோ யோக இத்யபிதீயதே." [மஹோப.]

மனம் ஸங்கல்ப விகல்பங்களில்லாமல் ப்ரஹ்மத்தில் லயித்து உபஶாந்தி அடைவதே ஜ்ஞானயோகமென்று சொல்லப்படும்.

ஶ்ரு || "அஸங்கல்பந ஶஸ்த்ரேண சிந்நம் சித்தமிதம் யதா
ஸர்வம் ஸர்வகதம் ஶாந்தம் ப்ரஹ்ம ஸம்பத்யதே ததா."
[மஹோபநிஷத்.]

மனம் ஸங்கல்ப விகல்பங்களற்று ப்ரஹ்மத்தில் எப்பொழுது லயிக்கின்றதோ அப்பொழுதே அது அகண்ட பரிபூர்ண பரப்ரஹ்ம ஸ்வரூபமாகின்றது.

ஶ்ரு || "மநஸா மந ஆலோக்ய வ்ருத்திஶூந்யம் யதா பவேத்
ததா பரம்ப்ரஹ்ம த்ருஶ்யம் த்ருஶ்யதே ச ஸுதுர்லபம்
மநஸா மந ஆலோக்ய முக்தோ பவதி யோகவித்
மநஸா மந ஆலோக்ய உந்மந்யந்தம் ஸதா ஸ்மரேத்
மநஸா மந ஆலோக்ய யோகநிஷ்ட ஸ்ஸதா பவேத்."
[யோகஶிகோபநிஷத்.]

மனமே, ஸமஸ்த ப்ராணிகளையும் காமக்ரோதாதி அரிஷட்வர்க்கங்களுக்குட்படுத்தி துக்கமயமாகிய போகங்களையெல்லாம் ஸுகமென்றெண்ணி ஸம்ஸாரமென்னும் ஸமுத்ரத்தில் மூழ்கச்செய்து மறுபடியும் தலையெடுக்காவண்ணம் அஜ்ஞானமென்னும் பாறையால் மூடும்படிச்செய்கின்றது. மனமே புண்யபாபங்களின் மூட்டையை பெருத்தசுமையாய்ச்சுமந்து ஸ்வர்க்கநரகங்களிலிருந்து ஸுகதுக்கங்களை அநுபவிக்கச்செய்கின்றது. இந்த புண்யபாபங்களின் மூட்டையே ஸஞ்சித

மென்று சொல்லப்படும். ஆதலால், அந்தமனம் இப்பேர்ப்பட்டதென்று அறிந்து, அதை ப்ராஹ்மநிஷ்டையில் நிறுத்தி ஸங்கல்பஶூன்யம் செய்தபோது அதுமிகவும் ஸூலயமாய் ப்ரஹ்மஸ்வரூபத்தை அடையும். அவ்வண்ணமான மநம் இப்பேர்ப்பட்டதென்று அறிந்து, அதை வ்ருத்தி ஶூன்யமாய்ச் செய்தவனே, முக்தனென்றும் ராஜயோகியென்றும் ப்ரஹ்ம ஜ்ஞாநியென்றும் சொல்லப்படுவன்.

ஶ்ரு || "தாவதேவ நிரோத்தவ்யம் யாவத்ருதி கதம் க்ஷயம்
ஏதத் ஜ்ஞாநஞ்ச மோக்ஷஞ்ச அதோந்யோ க்ரந்த விஸ்தர:"

மனம் எதுவரையில் நஶிக்கவில்லையோ அதாவது ஸங்கல்ப விகல்ப ரஹிதமான ஸ்திதியை (நிர்விகல்பம்) அடையவில்லையோ அதுவரையில் அதை நாஶஞ்செய்யப்பட்ட ப்ரஹ்மநிஷ்டையை அப்யாஸஞ்செய்வதே, ப்ரஹ்மஜ்ஞானமென்றும் மோக்ஷமென்றும் சொல்லப்படும். ஶாஸ்த்ராப்யாஸத்தினால் உண்டாகும்ஜ்ஞானம், ப்ரஹ்மஜ்ஞானமென்றும் மோக்ஷமென்றும் சொல்லப்படமாட்டாது. இப்பேர்ப்பட்ட ப்ரஹ்மஜ்ஞானம் ப்ராஹ்மணத்வத்தினால் உண்டாகவேண்டும். அந்த ப்ராஹ்மணத்வம் எப்பேர்ப்பட்டதெனில்:—

ஶ்ரு || "ததே தத்ருசாப்யுக்தம் ஏஷநித்யோமஹிமா, ப்ராஹ்மணஸ்ய நவர்த்ததே கர்மணா நோகநீயாந்" "தஸ்யைவ ஸ்யாத்பதவித்தம் விதித்வா நலிப்யதே கர்மணா பாபகேநேதி" "தஸ்மாதேவம் விச்சாந்தோதாந்த உபரதி ஸ்திதிக்ஷு ஸ்ஸமாஹிதோ பூத்வா ஆத்மந்யேவாத்மாநம் பஶ்யதி ஸர்வமாத்மாநம் பஶ்யதி நைநம் பாப்மா தரதி ஸர்வம் பாப்மாநம் தரதி நைநம் பாப்மா தபதி ஸர்வம் பாப்மாநம் தபதி விபாபோ விரஜோ விசிகித்ஸோ ப்ராஹ்மணோ பவதி."

[ப்ருஹதாரண்யோபநிஷத்.]

ப்ராஹ்மணத்வம், ப்ரஹ்மஜ்ஞானத்தினால் உண்டாகுமேயொழிய கர்மாநுஷ்டானங்களினால் உண்டாகமாட்டாது. அப்பேர்ப்பட்ட ப்ரஹ்ம ஜ்ஞானமுடைய ப்ராஹ்மணன் கர்மாநுஷ்டானங்களைச் செய்யமாட்டான். ஒருவேளை, தான்

உலகத்தாருக்காகக் கர்மாநுஷ்டானங்களைச் செய்தபோதிலும் அவன் அந்தக் கர்மத்திற்குப் பாத்ரனாகமாட்டான். ஶாந்தி (காமக்ரோதாதிநாஶம்) தாந்தி (இந்த்ரிய நிக்ரஹம்) உபரதி (நிராஶை) திதீக்ஷை (ஶாந்தம்) ஶ்ரத்தை விஶ்வாஸம் ஸமாதானமென்னும் ஶமதமாதி ஷட்குண ஸம்பத்துடையவனாய் ஆத்மஸ்வரூபனாய், தன்னைத்தான் ப்ரஹ்மமென்று அறிந்து ஸதா ஆத்மாநுஸந்தானம் செய்துகொண்டு ப்ரபஞ்சம் ஸர்வம் ப்ரஹ்ம ஸ்வரூபமே என்று நினைக்கப்பட்ட அஹங்கார ரஹிதன் ப்ராஹ்மணனேயொழிய ஜந்மங்களினாலும் கர்மாநுஷ்டானங்களினாலும் ப்ராஹ்மணனாகமாட்டான். இப்பேர்ப்பட்ட ப்ரஹ்ம ஜ்ஞானமுடைய ப்ராஹ்மணன், எப்படியிருப்பானென்றால்,

ஶ்ரு || "யோஹேரிவ குணாத்பீதஸ் ஸந்மாநாந் நரகாதிவ
குணபாதிவ யஸ்த்ரீப்யஸ் தம் தேவா: ப்ராஹ்மணம் விது:"

உலகத்தார் ஸர்ப்பத்தைப் பார்த்து பயப்படுவதுபோல் ஜனஸமூஹத்தைப்பார்த்து மருளப்பட்டவனும், உலகத்தார் தனக்குச் செய்யப்பட்ட ஸன்மானங்களை நரகத்திற்கு ஸமானமாய்ப் பார்க்கப்பட்டவனுமாகிய ஒருவன், ஆண், பெண், நபும்ஸகமென்பது ஶரீரத்திற்கேயொழிய ஆத்மாவிற்கல்லவென்றும், மேற்சொல்லிய ஶரீரங்கள் அவர்களின் ஸங்கல்பத்தால் அந்தந்தரூபங்களை அடைகின்றனவென்றும் அறிந்து, ஆண் பெண் என்னும் வேற்றுமைகள் இராததனால் ஸ்த்ரீகளைப் பிணங்களாக நினைத்து திரஸ்காரஞ்செய்து ஸதா ஜ்ஞாநாநுபவ நிஷ்டையிலிருப்பான். மேலும்,

ஶ்லோ || "ஏக பூர்ண மிவாகாஶம் பவத்யேகோ ஸர்வதா
ஶூந்யம் யஸ்ய ஜநாகீர்ணம் தம் தேவா: ப்ராஹ்மணம் விது:"

ஆகாஶத்தைப்போல் ஸர்வ பரிபூர்ணமாயிருக்கும் ப்ரஹ்மமே தானென்று ஆத்மாநுஸந்தானஞ்செய்துகொண்டு ஸதா பரிபூர்ணத்தன்மையிலிருந்து தனது நிர்விகல்ப ஸமாதிநிஷ்டைக்கு ஜனஸங்கமான இடம் தகாதென்றெண்ணி ஏகாந்த

ஸ்தலத்தை யடைந்திருப்பவனே, தேவதைகளால் புகழப்பட்ட ப்ராஹ்மணனென்று சொல்லப்படுவான். (அந்த ஏகாந்த ஸ்தலம் ☞ எதிரிலிருக்கும் படத்தில் காட்டப்பட்டிருக்கின்றது.) இந்த ப்ராஹ்மணனே ப்ரஹ்ம ஸூத்ரத்தைத் தரித்துக் கொண்டிருப்பவன். அந்த ப்ரஹ்மஸூத்ரம் எப்பேர்ப்பட்டதென்றால்:—

ப்ரஹ்ம ஸூத்ரமே யஜ்ஞோபவீத தாரணை.

ஸ்ரு "ஏக ஸர்வமிதம் ப்ரோதம் ஸூத்ரே மணிகணா இவ
தத்ஸூத்ரம் தாரயேத் யோகீ யோகவித் தத்வதர்சிவான்
பஹிஸ்ஸூத்ரம் த்யஜேத் வித்வான் யோகமுத்தமமாஸ்ரித:
ப்ரஹ்மபாவமிதம் ஸூத்ரம் தாரயேத்ய: ஸசேதந:
தாரணாத் தஸ்ய ஸூத்ரஸ்ய நோச்சிஷ்டோ நாசுசிர்பவேத்
ஸூத்ரமந்தர்கதம் யேஷாம் ஜ்ஞாந யஜ்ஞோபவீதிநாம்
தே வை ஸூத்ரவிதோ லோகே தே ச யஜ்ஞோபவீதிந:
ஜ்ஞாநசிகினோ ஜ்ஞாநநிஷ்டா: ஜ்ஞாநயஜ்ஞோபவீதிந:
ஜ்ஞாநமேவ பரம் தேஷாம் பவித்ரம் ஜ்ஞாநமுச்யதே."
[ப்ரஹ்மோபநிஷத்.]

ஓர் முத்துவடத்திலுள்ள ஒவ்வொரு முத்திலும் ஒரே ஸூத்ரமானது வ்யாபித்திருப்பதுபோல், ஸகல ஜீவஜந்துக்களின் ஹ்ருதயத்தில் பரமாத்மா ஒருவனே வ்யாபித்திருக்கின்றான்; அப்பேர்ப்பட்ட பரமாத்மாவே, மஹா ஸூத்ரம் மஹா யஜ்ஞோபவீதம், நிஜமான ஜ்ஞான ஸந்த்யா வந்தனம் என்று சொல்லப்படுவன். அந்த மஹா ஸூத்ரமான ப்ரஹ்மத்தைத் தெரிந்துகொண்டு ப்ரஹ்மாநுஸந்தானஞ்செய்வதே யஜ்ஞோபவீத தாரணையென்று சொல்லப்படும். ப்ரஹ்மஜ்ஞானியாகிய ப்ராஹ்மணன் ப்ரஹ்மாநுபூதியென்னும் ப்ரஹ்ம ஸூத்ரத்தைத் தரித்து நாஸிமுகங்களையுடைய பூணூலை த்யஜிக்கவேண்டும். அந்த ப்ரஹ்மஸூத்ரத்தைத்தரித்த ஜ்ஞா



GOLDEN & CO., MADRAS.

ஷியாதிய ப்ராஹ்மணனுக்கு, உச்சிஷ்டம் ஸூசி என்னும் பேதமே இராது; ஸர்வமும் அபேத பரப்ரஹ்ம ஸ்வரூபமாகவே இருக்கும். அந்த ப்ரஹ்மமென்னும் ஸூத்ரத்தைத் தெரிந்து, ஸதா அதை இடைவிடாமல் த்யானித்துக்கொண்டிருப்பவனே 'ஸூத்ரம்' இப்படிப்பட்டதென்று தெரிந்த யஜ்ஞோபவீதத்தைத்தரித்த ப்ராஹ்மணன் என்று சொல்லப்படுவன். அவ்வித ப்ரஹ்மஸூத்ரத்தைத் தெரிந்தவனே ஜீவித்திருப்பவன். மற்றவர்கள் ஜீவித்திருக்கும் பிணத்திற்கு ஸமானரே. ப்ரஹ்மஜ்ஞானமே 'பரமா யஜ்ஞோபவீதம்' என்று சொல்லப்படும். இப்படிப்பட்ட ப்ரஹ்மஜ்ஞானமுடையவன் ப்ராஹ்மணனேயொழிய ஜன்மங்களினாலும் கர்மானுஷ்டானங்களினாலும் ப்ராஹ்மணனாகமாட்டான்.

ஶ்ரு || "நிராலம்போபநிஷதம் யோதீதே குர்வநுக்ரஹாத்ஸ
ஸோக்நிபூதோ பவதி ஸவாயுபூதோ பவதி ந ஸ புநரா
வர்த்ததே ந ஸ புநராவர்த்ததே புநர்நாபிஜாயதே,
புநர்நாபிஜாயதே இத்யுபநிஷத்." [நிராலம்போபநிஷத்.]

இந்த நிராலம்போபநிஷத்தில் சொல்லப்பட்ட ப்ரஹ்மஸூத்ரத்தைக் குரு முகமாகத் தெரிந்துகொண்டு, இடைவிடாத ஜலப்ரவாஹம்போல் அப்யஸிப்பவர்கள் அக்நியைப் போலும் வாயுவைப்போலும் பவித்ரமாகின்றார்கள்; அவர்களுக்குப் புநராவர்த்தி இல்லை; புநர்ஜனனமும் இல்லவே இல்லை. இந்த உபநிஷத் வாக்யங்கள், மஹா ரஹஸ்யம். இது பரம கோப்யம். இந்த ப்ரஹ்ம ஸூத்ரத்தைத்தெரிந்து அப்யாஸம் செய்துகொண்டிருப்பதே ஸம்ப்ரஜ்ஞாத ஸமாதி யென்றும் அல்லது ஸவிகல்பஸமாதி யென்றும் சொல்லப்படும். அதை இதனடியில் சொல்லப்போகின்றோம். எல்லோரும் முக்யமாய் கவனிக்கவேண்டும்.

"ஸோஹம்" மந்த்ரஜபமே ஸம்ப்ரஜ்ஞாத ஸமாதி ராஜயோகம்.

ஶ்ரு || "ஸம்ப்ரஜ்ஞாத ஸமாதி ஸ்யாத் த்யாநாப்யாஸ ப்ரகர்ஷத:
பரமாநந்த வ்ருத்திகம் சித்தம் பரமாநந்த தீபகம்."
[முக்திகோபநிஷத்

பாரப்பா இதையறியார் சித்தர்கூடிப்
பார்தனிலே அறுபத்து நாலுயோகம்
ஆரப்பா இருக்குதென்று வெவ்வேறாக
அலைந்தலைந்து கெட்டவர்க ளனந்தங்கோடி–
வீரப்பா ராஜாங்க யோகம்பார்த்து
நிலையறிந்து கண்டவனே கோடிக்கொன்று
வீரப்பா பேசாமல் மனக்கண்ணாலே
விந்துவடா பாய்ந்தலம் வெளியைக்காணே.
முத்தியடா மந்திரத்தை நினைக்கும்போது
மோசமடா மனந்தானும் ரெண்டாய்ப்போகும்
சத்தியடா மனந்தானே யேகமாகத்
தனித்திருந்து நித்திரையைத் தள்ளிமைந்தா
புத்தியடா பிரம்மத்திற் புகுந்துகொண்டால்
பூலோக மெல்லாந்தான் பணிவாருன்னை
எத்திசை திரியாமற் பிடரிமார்க்கம்
ஏறுகின்ற வாசியுந்தான் கற்பந்தானே.
கண்ணான பிடரிமுது கோடுரந்த்ரம்
கால்கூட்டிப் பார்த்தாலே தலைமேலாகும்
விண்ணான பெருவெளிக்கு ளினமானால்
விமோசனமாம் நிராலம்ப மெனத்தான்சொல்லு
நுண்ணான யோகமல்லோ இக்கதிஷ்டை
உபதேசம்பெற்றவர்க்கே உண்மையாகும்
அண்ணாந்து பார்த்திருந்தால் வருயோகஞானம்
அஜபாமந்திரதியானம் அறைகிறேனே.

அறைகிறேன் அஜபையெனும் ப்ராணன்மாலை
அகண்டபரா பரத்தினுள்ளே ஐக்யஞ்செய்ய
குறைவில்லை "ஓம்"கார மூலவட்டக்
குண்டலியாய் நின்றிடத்திற் குறைதீர்ந்தான்
நிறைகிறேன் நாசிகா ரந்த்ர வாயு
நீங்காம லேகமாய் நிர்ணயித்துப்
பறைகிறே னக்ஷாக்ஷர தனமுந்தள்ளிப்
பந்தமற்ற மகாமோக்ஷப் பதிபெற்றேனே.
மகிமையென்று யோகசா தனையினாலே
மகாகாச நிர்விகற்ப வாழ்க்கையாச்சு
அகமகமென் றுணவத்தை நீக்கலாச்சு
அத்துவித பிரஹ்மசிகா னந்தகாரம்
சகலாதி தங்கடந்த களாதீதத்தில்
சாதித்தேன் தன்மயமாய்ச் சார்ந்துபோச்சு
பகலிருளில் லாதவெளிக் கப்பாலாச்சு
பந்தமற்ற மகாமோக்ஷ பதம்பெற்றேனே.
பெற்றதனைச் சொல்லிவிட்டேன் வடநூல்பாஷை
பிரித்துமுப்பத் தொன்றினிலே பிரம்மஜ்ஞானம்
தத்துவத்தைச் சொல்லிவைத்தேன் யோகியானால்
சாதனைசெய் வானறிவான் சைதன்யத்தில்
முத்தியடை வானதிலே நிருத்தஞ்செய்வான்
மும்மூட்சுத் துவமறிந்த மூர்த்தியாவான்
நித்யமெனு முபநிடதப் பொருள்தான்சொல்லும்
நிலவரத்தால் யோகநிஷ்டை நிறைந்துமுற்றே.

இதுவே, ராஜயோகம்.

ஜபம் செய்யவேண்டுமென்று கோரப்பட்ட ஸ்த்ரீகளாயினும் புருஷர்களாயினும் ஏகாந்தமாயிருக்கும் ஓர் அறைக்குள்ளிருந்த பரிமளமுள்ள வாஸனை வஸ்துக்களை வைத்து மனலை ஓர் வட்டத்தில் நிறுத்துவதற்காக ஓர் பெரிய மணையின்மீது

மான்தோல்போட்டு அதன்மீது வெள்ளைவஸ்த்ரம் மடித்துப் போட்டு ஶப்தங்கள் காதில் விழாதபடி கதவைச்சாத்தி ஷை யணையின்மீது ஸித்தாஸனத்துடன் உட்கார்ந்து இதனடியில் சொல்லப்போகும் 'ஸோஹம்' மந்த்ரம் ப்ரதிதினம் காலைமாலை களில் ஸாதனம்செய்து வரவேண்டும்.

நாஸிகாரந்த்ரங்களின்வழியாய் ஶ்வாஸம் உள்ப்ரவேஶிக் கும்போது அந்தஶ்வாஸத்துடன் 'ஸோ' என்னும் மந்த்ரத்தை அஜபாவாய் (மனதினாலேயே) சேர்த்து ஶ்வாஸத்தை உள் ளுக்கிழுத்து வெளிவிடாமல் சிலநேரம்நிறுத்தி மறுபடியும் ஶ்வாஸம் விடும்போது 'ஹம்' என்னும் மந்த்ரத்துடன் விட வேண்டும். இவ்விதமாய் ஒவ்வொரு ஶ்வாஸத்திலும் கலந்து விட்டுக்கொண்டு மனதை நானாவித விஷயங்களில் போக விடாமல் ஏகத்யானமாயிருப்பதே ராஜயோகமென்று சொல் லப்படும். இந்த ராஜயோகம் செய்யப்பட்டவர்கள் வியாபாரம் அல்லது உத்யோகம்செய்யச் செல்லுங்காலத்தில் தன்னை எதிர் நோக்கி வரப்பட்ட ஸ்த்ரீ புருஷர்களை ஏறெடுத்துப் பார்க்கலா காது. அப்படி பார்ப்பதனால் பல துர்எண்ணங்களுக்கிடமுண் டாய் அனேக அனர்த்தங்களில் கொண்டுவந்துவிடும். அதா வது, கண்கள் மூக்கு வாய் செவிகள் தேஹசர்மமென்னும் பஞ் சேந்த்ரியங்களில் கண் என்னும் இந்த்ரியம் மாத்ரம், விஶேஷ அனர்த்தங்களை உண்டாக்குவதற்குக் காரணமாயிருக்கின்றது. ஆதலால், அப்படிப்பட்ட அனர்த்தங்கள் உண்டாகாவண்ணம் இடதுகை ஓரமாய்ச்சென்று தலையைக்குனிந்து தனது பாதப் பெருவிரலிலிருந்து மூன்றடிதூரத்தில் த்ருஷ்டியை நிறுத்தி, 'ஸோ' என்னும் மந்த்ரத்தை ஶ்வாஸத்துடன்சேர்த்து உள்ளுக் கிழுத்து மறுபடியும் வெளியில்விடும்போது 'ஹம்' என்னும் மந்த்ரத்தை ஶ்வாஸத்துடன் சேர்த்துவிடவேண்டும். இப் படியே ஒவ்வொருஶ்வாஸத்திலும்சேர்த்து விட்டுக்கொண்டே சென்று, வியாபார உத்யோகங்கள் செய்யும்போதுமாத்ரம் இவ்வப்யாஸத்தைநிறுத்தி, அந்தந்த வ்யவஹாரங்களில் மன

னை ப்ரவர்த்திக்கச்செய்து வேலைமுடிந்தவுடன், மறுபடியும் மேல்சொல்லிய த்யானத்திலேயே வரவேண்டும். வரும்போது தான் எந்தஸ்தலத்தை நாடிச்செல்லுகின்றானோ அதைமறந்து அதிகதூரம் சென்றுவிடுவான். ஏனென்றால் மனம் 'ஸோஹம்' மந்த்ரத்துடன் ஶ்வாஸத்தில் சேர்த்து ஜபித்துக்கொண்டே செல்வதனால் தான்குறித்திருந்த ஸ்தலம் தப்பி வெகுதூரம் சென்றுவிடுவான். ஷை ஜபம்நிறுத்தி உலகவியாபாரத்தில் மனதைத்திருப்பிப்பார்த்தபோது வெகுதூரம்வந்துவிட்டோ மென்று எண்ணி தான் குறித்தஇடம்போக மறுபடியும் பின் னுக்குசெல்வான். இதை நீங்கள் அப்யாஸம்செய்துபாருங் கள்; ப்ரத்யக்ஷ திருஷ்டாந்தமாய்த் தெரியவரும்.

இரமென்ன 'ஹம்ஸோஹம்' மந்த்ராதிதம்
இருச்யகுன் யாதிகளே தியானமாகும்
சரமென்ன சாக்ஷாத்தா வவித்தைதருண்யம்
சாதனையே சமாதியெனத் தானேபோகும்
வரமென்ன விபரீத விருத்திமார்க்கம்
வாசனையே சாதனமாய் வகுத்துக்காட்டும்
தரமென்ன இதையறிந்தால் யோகியாவான்
அஞ்ஞான மவரிடத்தி லணுகாதென்னே.

பகற்காலங்களில் முன்சொல்லியதுபோல் அப்யஸித்து, இரவில் போஜனமுண்டு படுக்கையில் உட்கார்ந்து 280 - வது பக்கம்சொல்லியிருப்பதுபோல் சிலநிமிஷங்கள் ஈஶ்வரனை ஸ்துதிசெய்து ஶயனித்து ஷை 'ஸோஹம்' மந்த்ரம் ஶ்வாஸத் துடன்சேர்த்து முன்போல்ஜபித்துக்கொண்டே நித்ரைசெய்ய வேண்டும். இவ்விதமாய் நித்ரித்து காலைமூன்றுமணிக்கு எழுந் திருக்கவேண்டும்.

இந்த்ரிய வ்யாபாரம் மனோ வ்யாபாரம் என இரண்டு வ்யாபாரங்கள் நமக்குண்டு. இந்த்ரிய வ்யாபாரமென்றால், மன தைநிறுத்தவேண்டுமென்று வீட்டில் உட்கார்ந்தபோது வீட் டிலுள்ளவர்கள் பேசும் ஶப்தங்களையெல்லாம் காதினால்கேட்

டுக்கொண்டிருத்தல். மறு வ்யாபாரமென்றால், மனம் வெளியில் ஸஞ்சாரம் செய்யப்போகுதல், இவ்விரண்டும் ஏககாலத்தில் ஒழிப்பது மிகவும்கஷ்டமாயிருக்கும். ராத்ரிமூன்றுமணிக்கு ப்ரளயகாலம்போல் நிஶ்ஶப்தமாயிருப்பதால், அக்காலத்தில் இந்த்ரிய வ்யாபாரமிராது; அச்சமயத்தில் படுக்கைவிட்டெழுந்து மறுபடியும் நித்ரைவாராவண்ணம் கைகால்களை ஶுத்திசெய்து கொண்டு முன் சொல்லிய ஏகாந்தமான அறையில், எறும்பு மூட்டைப்பூச்சிகளின் பாதைகள் இல்லாமலிருப்பதற்காக தணக்குத்தகுந்த, ஒருபெரிய மணையின்மீது மான்தோலாகிலும் அல்லது வேறு எந்தத் தோலாகிலும் போட்டு அபானவாயு படாவண்ணம் அதன்மீது வெள்ளைவஸ்த்ரம்விரித்து வடக்குமுகமாய்நோக்கி உட்கார்ந்து எதிரிருக்கும்படத்தில்,

☛ வலதுகையில் காட்டப்பட்டிருக்கும் ஆகாஶவடிவத்தில் மனம் லயிக்கும்படி அப்யாஸம் செய்துகொண்டு வரவேண்டும்.

இப்படி வடதிஶையை நோக்கிச்செய்வது நிஷ்காம்யம். இதனால், ஜ்ஞானமடைவார்கள். கிழக்குத்திஶையை நோக்கிச் செய்வது காம்யம். இதனால், அவரவர்கள் கோரிய பலன்களை மறுஜன்மத்தில் அடைவார்கள். இவ்வப்யாஸத்தால் சிலமாதங்களில் படத்தில்காட்டிய ஆகாஶக்குறியில் மனம்லயித்துச் சுற்றிலுமிருக்கும்பெருவிரல், ஆள்காட்டிவிரல்களின் ஓரங்களெல்லாம் புலப்படாமல் அகண்டாகார வ்ருத்தியாய் தன்னைத்தான் மறந்து, தான் எங்கு உட்கார்ந்திருப்பதும் என்ன செய்வதும் தனக்குத்தெரியாமல், மனம் கைக்குறியின்நடுவிலுள்ள ஆகாஶவடிவத்தில் லயித்துவிடும். அதுதான் "தூங்காமல் தூங்கி ஸுகம்பெறுவது" என்றுசொல்லப்படும். ஆனால் அந்த கைக்குறியை நீங்கள் கையினால் பிடித்துக்கொண்டு கண்களால் பார்த்துக்கொண்டிருக்கவேண்டாம். அக்குறியிலுள்ள ஆகாஶத்தை ஹ்ருதயகமலத்தில் நிறுத்தி, கண்களைமூடி, அந்தர்

கடப்பை ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதாநந்த யோகீஶ்வரர் ஹிந்து பிரைமரி பாடசாலை.
பங்களாமேடு மேட்டுப்பாளையம். இது, V. நாராயணசாமி நாயுடு அவர்களால் கட்டப்பட்டு
1919ஹு ஜூன்மீ 12வ. ஷை ஸ்வாமிகளால் திறக்கப்பட்டது.



கைக்குறியினுட்காட்டிய ஆகாஶத்தில் மனதை லயப்படுத்தல், சிவநேசத்திருக்கூட்டத்தினர், மேட்டுப்பாளையம்.

Soldon & Co., Madras, S.E.

(உள்) முகமாய் மனவினால் பார்த்துக்கொண்டிருந்தால் மனம் லயமாகும். காலை 5-மணிமுதல் இரவு நித்திரைக்கும்வரையில் முன்சொல்லிய ராஜயோகமாகிய 'ஸோஹம்' மந்த்ரத்தை ச்வாஸத்துடன்சேர்த்து ஜபித்துக்கொண்டே நித்திரைசெய்து காலை மூன்றுமணிக்கு எழுந்து 'ஸோஹம்' மந்த்ரத்தை ஜபிக்காமல் 312-வது பக்கம் காட்டியிருக்கும் கைக்குறியிலுள்ள ஆகாய வடிவத்தில் மனதைநிறுத்த அப்பியாஸம்செய்து வரவேண்டும். மறுபடியும்காலை 5-மணிமுதல் 'ஸோஹம்' மந்த்ரத்தை ஜபிக்க வேண்டும். இந்த 'ஸோஹம்' மந்த்ரத்தை விசேஷமாய் ஜபித்துக்கொண்டு வரப்பட்டவர்களுக்கு ஸகல எண்ணங்களும் எரிந்துவிடும். பிறகு 'ஸோஹம்' மந்த்ரத்தை ஜபிக்காமல் நிறுத்தி ஸகலமும் மறந்து எந்த எண்ணங்களும் இல்லாமல் ஸதாகாலமும் ஆகாயவடிவமாகவே இருக்கவேண்டும். இப்படியிருப்பதே அஸம்ப்ரஜ்ஞாத ஸமாதியென்று சொல்லப்படும். இதற்கு ஸ்ருதி ப்ரமாணம், 314-வது பக்கம் பார்க்க.

விட்டுப்போம் சம்சார வியாபாரங்கள்
விடயசுக இச்சைவைத்தால் விவேகம்போச்சு
தொட்டுவிட லாகாது ஞானமார்க்கம்
துரியநிலை [illegible]த் தோன்றுமட்டும்
எட்டுகின்ற பரியந்தம் சுருதிவாக்கியத்
தென்னையெனுந் தியானத்தா லெய்தும்முத்தி
தட்டுகின்ற ஜீவத்வம் தனக்கில்லாமற்
சமாதியுற்றால் ஸாமனுவே ஸாக்ஷாத்காரம்.
வீணல்லோ சாதனப்பிர யோஜனங்கள்
மெய்ஞ்ஞான அபரோக்ஷம் வந்தபோது
வீணல்லோ வேதபா டத்திலிச்சை
வியோமபரி பூரணத்தில் மேவிநின்றால்
வீணல்லோ இருட்டறையிற் பொருளைக்காண
விளக்கதனை மறந்தவண்ணை விடுதல்போலும்
வீணல்லோ தியானதா ரணைகளெல்லாம்
மெய்ப்பிரகா சிக்கும்வரை வேணுந்தானே.

"ஸோஹம்" மந்த்ரஜபம் கண்டனே.

---*---

ஶ்ரு || "ஸோஹம் சின்மாத்ரமேவேதி சிந்தநம் த்யாநமுச்யதே.
த்யாநஸ்ய விஸ்ம்ருதி: ஸம்யக்ஸமாதீ ரபிதீயதே."
[த்ரிஶிகிப்ராஹ்மணோபநிஷத்.]

"அநந்தாத்மப்ரயத்நஸ ஸோஹமஸ்மி ப்ரத்யயத்நா நிர்காத்ர ஸம்பஸீ திரஸ்தி."
[மைத்ரேயோபநிஷத்.]

"ஜ்ஞாத்வா ஸ்வம் ப்ரத்யகாத்மாநம் புத்தி தத்வ்ருத்தி ஸாக்ஷிணம்
ஸோஹமித்யேதத் வ்ருத்யா ஸ்வாத்யத்ராத்ம மதிம் த்யஜேத்."
[அத்யாத்மோபநிஷத்.]

திரமென்ன ஹம்ஸோஹம் மந்த்ராதிதம்
திருஷ்யருஞ் வாதிகளே தியானமாகும்
சரமென்ன சாக்ரசத்ர ஸவித்தைநூன்யம்
சாதனையே சமாதியெனத் தானேபோகும்
வரமென்ன விபரீத விருத்திமார்க்கம்
வாசனையே சாதனமாய் வகுத்துக்காட்டும்
அரமென்ன இதையறிந்தால் யோகியாவான்
அஞ்ஞான மவரிடத்தி லணுவாதென்னே.

"ஹம்ஸ" ரஹஸ்யமாகிய 'ஸோஹம்' மந்த்ரத்தை ஸதா ஸ்மரித்துக்கொண்டிருப்பதே ஆத்மத்யானமென்று சொல்லப்படும். இது, ஜ்ஞானிகளுக்கு ஜ்ஞானகாயத்ரியா யிருக்கின்றது. இந்த ஜ்ஞான காயத்ரியே அஜபா காயத்ரீ அந்த அஜபாகாயத்ரி விட்டு ஸகலமும்மறந்து கேவல ப்ரஜ்ஞாமாத்ரனாய் தூஷ்ணீம் பாவ ஸ்திதியிலிருப்பதே ஆத்ம ஸாக்ஷாத்காரமென்றும், ப்ரஹ்மநிஷ்டையென்றும், 'நிர்விகல்பஸமாதி' என்றும், சொல்லப்படும். இந்த நிர்விகல்ப ஸமாதியை அஸம்ப்ரஜ்ஞாத ஸமாதி என்றும் சொல்வதுண்டு. (இதன்விவரம் ஸ்ரீக்ருஷ்ணார்ஜுந ஸம்வாதரூபமாய் எழுதியமுதற்பதிப்பு 125-வது பக்கம், ஆத்ம விஷயவிவேக ஜ்ஞானமுடையவர்கள், கண்டபடிபார்க்க.)

அஸம்ப்ரஜ்ஞாத ஸமாதி.

ஶ்ரு || "அஸம்ப்ரஜ்ஞாத நாமாயம் ஸமாதிர்யோகிநாம் ப்ரிய:
ப்ரபாமயஞ்யம் மநஸ்பந்தஞ்யம் [illegible]ஞ்யம் சிதாத்மகம்"
[முக்திகோபநிஷத்.]

முத்தியடா மந்திரத்தை நினைக்கும்போது
மோசமடா மனந்தானும் இரண்டாய்ப்போகும்
சுத்தியடா மனந்தானும் ஏகமாகத்
தனித்திருந்து நித்திரையைத் தள்ளிமைந்தா
புத்தியடா பிரஹ்மத்திற் புகுந்துகொண்டால்
பூலோகமெல்லாந்தான் பணியுமுன்னே
எத்தியே திரியாமற் பிடிமார்க்கம்
ஏறுகின்ற வாசிபுக்கான் கற்பந்தானே.

நானேப்ரஹ்மம், ப்ரஹ்மமே நான் என்னும் (ஸோஹம்) மந்த்ரத்தை மறந்து மனோ புத்திகள் இரண்டும் ஶூன்யமாய் ஸகல எண்ணங்களும் (முன் ஸவதுகையில் காட்டிய ஆகாஶக் குறியில்) மறைந்து தேஹாதி ப்ரபஞ்சமிருகிய ஸகல த்ருஶ்யங்களையும் மறந்து, தானே தானாய் தன்மயமாய் கேவல சின்மாத்ரனாய் ஸாக்ஷியாயிருப்பதே அஸம்ப்ரஜ்ஞாத ஸமாதி என்றும் நிர்விகல்பஸமாதி என்றும் சொல்லப்படும். ஆதலால், மோக்ஷத்தைக்கொடுக்கும் அஸம்ப்ரஜ்ஞாத ஸமாதி உயர்ந்தது. அந்த ஸமாதியை அடையுமுன் மனஸையே விஷயமாகக்கொண்டு ஸங்கல்ப விகல்பங்கள் உண்டாகும் விதங்களையறிந்து, அவைகள் உண்டாகாவண்ணம் தடுக்கவேண்டும். மனவில் ஒரு ஸங்கல்பமும் உண்டாகாமல் தடுத்துவிட்டால் அதுவே அஸம்ப்ரஜ்ஞாத ஸமாதியாகும். ஸங்கல்பமே மனவிற்கு ஸ்வரூபமானபடியால், ஸங்கல்பங்கள் உண்டாகாமல் நின்றுவிட்டால், மனமிறந்ததென யோகிகள் கூறுகின்றார்கள். மனமிறந்த ஸமாதியே அஸம்ப்ரஜ்ஞாத ஸமாதி. அந்த ஸமாதியில் ஆத்மா

தான்மாத்ரமாய் நிற்கும். ஸம்ப்ரஜ்ஞாத ஸமாதியில் சித்த வ்ருத்திகள் அடங்கியிருந்தபோதிலும், ஸமாதியிலிருக்கிறோ மென்றும், தத்வங்களின் உண்மையை அறியவேண்டுமென் னும் மனோஸங்கல்பம் இருப்பதால், அடங்கியிருந்த சித்த வ்ருத்திகள் மனஸுக்கு, பலமாய்க் கவரத்தக்க விஷயங்களின் ஸம்பர்க்கம் நேரிட்டால், வெளியே கிளம்பி யோகத்தில் உட் கார்ந்த புருஷனை உலக வ்யாபாரத்தில் இழுத்துச்செல்லும். அஸம்ப்ரஜ்ஞாத ஸமாதியில் மனமில்லாமல் ஆத்மாமாத்ரம் நின்றிருப்பதால், மனோஸங்கல்பங்களுண்டாவதற்கு ஹேது வில்லை. ஆதலால், மனம் விஷயாந்தரங்களில் மனிதனை இழுத் துச்சென்று அனர்த்தத்தை விளைவிக்காது.

ஶ்ரு || "அஜ்ஞாநஹ்ருதய க்ரந்திர்நிஶ்ஶேஷ விலய ஸ்ததா
ஸமாதிநா விகல்பேந யதா அத்வைதாத்ம தர்ஶநம்."
[அத்யாத்மோபநிஷத்.]

இருத்தியே ஹ்ருதயத்தில் மனதொன்றாக
ஏகபரமாம்பொருளை யிருத்தியொன்றாய்
நிறுத்தியே வெகுகோடி கல்பமட்டும்
நிர்விகற்ப ஸமாதியிலே நிறைந்தோர்களும்
பொருத்தியே லலாடக்கண் திறந்துபார்க்கப்
பூலோக மெங்குமென்றாய் நிறைந்தேன்மைந்தா
கருத்தொன்றாய் நிறுத்தியபடா கபாடம்நீக்கிக்
காரணத்தைக் கண்டுவிளை யாடுவாயே.

இந்த நிர்விகல்ப ஸமாதி நிஷ்டாப்யாஸத்தினால் அஜ் ஞானமயமாகிய ஸமஸ்த ஹ்ருதய க்ரந்திகள் நசித்து அநா வ்ருத ஸங்கல்ப விகல்பங்கள் ஶூந்யமாய் கேவல அத்வய ப்ரஹ்மமாகிய ஆத்ம ஸாக்ஷாத்காரம் உண்டாகும்.

ஶ்ரு ||. "ஸமாதி நிஷ்டதாமேத்ய நிர்விகல்போ பவாநக." [அத்யாத்.]

ஸதா நிர்விகல்பஸமாதி நிஷ்டாப்யாஸம் செய்துகொண்டு நிர்விகாரமா யிருப்பதற்கு ஒவ்வொருவரும் ப்ரயத்னம் செய்ய வேண்டும்.

ஶ்ரு || "தர்மமேக மிமம் ப்ராஹுஃ ஸமாதிம் யோகவித்தமாஃ
வர்ஷத்யேவ யதா தர்மாம்ருத தாராஃ ஸஹஸ்ரஶஃ
அமுநா வாஸநாஜாலே நிஶ்ஶேஷம் ப்ரவிலாபிதே."
[அத்யாத்மோபநிஷத்.]

இந்த ☞ நிர்விகல்ப ஸமாதியை, தர்மமேகமென்று பெரி யோர்கள் சொல்லுவார்கள், இதனால் ஸ்வாநுபவானந்தாம்ருதம் அதிகமாய் வர்ஷித்து தேஹவாஸனை, ஶாஸ்த்ரவாஸனை, லோகவாஸனை என்னும் தாபத்ரயங்கள் நீங்குவதனால்,

ஶ்ரு || "யதா ஜலே ஜலம் க்ஷிப்தம் க்ஷீரம் க்ஷீரே க்ருதம் க்ருதே
அவிஶேஷோ பவேத்தத்வத் ஜீவாத்ம பரமாத்மநோஃ"
"யதோதகே தோயமதுப்ரவிஷ்டம் ததாத்மரூபோ நிருபாதி ஸம்ஸ்திதஃ"
[பைங்கலோபநிஷத்.]

ஜலத்தில் ஜலமும், பாலில் பாலும், நெய்யில் நெய்யும் கலந்து ஏகமாவதுபோல் இந்த ஶரீரம் நசித்தவுடனே ஜீவோ பாதி (ஸங்கல்ப ரூபமாயிருக்கும் மனம்) நசித்து ப்ரஹ்மத்தில் ஆத்மா கலந்து ஏகமாய்ப்போவதே விதேஹமுக்தி எனப்படும்.

ஶ்லோ || "ஆத்மாநாத்ம விவேகேந புநஸ் ஸம்ஸார நிர்வ்ருதிஃ
தத்விநா ஜன்மகோட்யாபி முக்திஶ்சேதோ நவிந்த்யதி,"

என்னும் ஶ்லோகரீதியாய், ஆத்மா அநாத்மா என்னும் விவேகமில்லாதவர்கள் கோடி ஜன்மங்கள் எடுத்தபோதிலும் மோக்ஷத்தை அடையமாட்டார்கள்.

ஶ்ரு || "அயமாத்மா ப்ரஹ்ம ஆத்மா நாராயணஃ பரஃ"

என்னும் ஶ்ருதிரீதியாய், ஆத்மாவே பரப்ரஹ்மமென்று அறிந்து ஆத்மாநுபவம் அடையாதவர்கள் வனவாஸம்சென்று தலைகீழாய் நின்று அன்ன ஆஹாரங்களில்லாமல் தவஞ் செய்து எவ்வளவு கஷ்டப்பட்டபோதிலும் மோக்ஷத்தை அடையமாட்டார்கள்.

"அஜ்ஞாநாம் பாவநார்த்தாய ப்ரதிமாஃ பரிகல்பிதாஃ."

ஆத்மஜ்ஞானமில்லாதவர்களுக்கே விக்ரஹ ஆராதனைகள் சொல்லப்பட்டதேயொழிய கேவலம் ஆத்மஜ்ஞானிகளுக்கு விக்ரஹ ஆராதனைகளினால் ப்ரயோஜனமில்லை. ஆத்மஜ்ஞானிகள் எதை ஆராதிக்கின்றார்களென்றால்:—

"தேஹோ தேவாலய: ப்ரோக்தோ ஜீவோ தேவஸ் ஸநாதந:
த்யஜேதஜ்ஞாந நிர்மால்யம் ஸோஹம்பாவேந பூஜயேத்."

நமது தேஹமே தேவாலயமென்றும், அதில் வாஸம்செய்யும் ஜீவனே புராதனபுருஷனாகிய பரப்ரஹ்மமென்றும் பாவனை செய்து, அஜ்ஞானமென்னும் பழையபுஷ்பங்களைக் களைந்து, "ஸோஹம்" ப்ரஹ்மநிஷ்டை என்னும் புதிய புஷ்பங்களினால் பூஜைசெய்து, அதையும் மறந்து, ப்ரஹ்மைக்யரூபத்தை அடைந்தவர்களே புனர்ஜந்மமில்லாதவர்களாய் நித்யமுக்தியை அடைவார்களேயன்றி மற்றவர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டபோதிலும் முக்தியை அடையமாட்டார்கள்.

ஶ்லோ || "அவிச்சின்ந சிதாத்மைக: புமாநஸ்தீஹ நேதர:
ஸ்வஸங்கல்பவஶாத்பத்தோ நிஸ்ஸங்கல்பஸ்து முச்யதே."

தேசகால வஸ்து பரிச்சேதமில்லாத சித்ரூபனான பரமபுருஷன் ஒருவனே இருக்கின்றான்; மற்றொருவனில்லை. அப்புருஷன், தனது ஸங்கல்பமென்னும் மாயாஶக்தியினால் பந்தப்பட்டு ஸம்ஸாரத்தை அநுபவிக்கின்றான். ஸங்கல்பஶூன்யமானால் முக்தனாகின்றான்.

சிதாகாஶமென்றால் எது?
நிர்விகல்ப ஸமாதி யென்றால் எது?

ஶ்ரு || "தேஶாத்தேஶாந்தரம் ப்ராப்தே ஸம்விதோ மத்யமேவ யத்
நிமேஷேண சிதாகாஶம் தத்வித்தி முநிபுங்கவ."
[மஹோபநிஷத்.]

" ஒருபொருளைநீக்கி ஒருபொருளைப்பற்றி, இருபொருளையும்போக்கி
இடையேயொரு பொருளுமற்ற நிலையாதோ அதுவே உன்நிலை".

மனமானது க்ஷணத்திற்குள்ளே ஓரிடமிருந்து மற்றோரிடத்தில் ஸஞ்சரித்துக்கொண்டிருக்கும். அப்படி ஓரிடமிருந்து மற்றோரிடத்தில் ஸஞ்சரிக்கும்போது, இவ்விரண்டிற்கும் மத்தியில் எந்த ஜ்ஞானம் மத்யஸ்தமாயிருக்கின்றதோ அந்த ஜ்ஞானமே சிதாகாஶம். இந்த சிதாகாஶமே நீயென்று அறிந்து தத்ரூபமாயிருக்கவேண்டும்.

ஶ்ரு || "தஸ்மிந் நிரஸ்த நிஶ்ஶேஷ ஸங்கல்பஸ்திதி மேஷிசேத்
ஸர்வாத்மகம் பதம் ஶாந்தம் ததா ப்ராப்ஸ்யஸ்யஸம்ஶய:."
[மஹோபநிஷத்]

அப்படிப்பட்ட சிதாகாஶத்தில் ஸகல ஸங்கல்பங்களும் லயித்து தன்மயமாய் இருப்பாயாகில், ஸர்வாதிஷ்டானமாய் பரமஶாந்தமாயிருக்கும் ப்ரஹ்ம ஸ்வரூபத்தில் ஐக்யமாய் விடுவாய். இப்படி ஐக்யமாவதே "நிர்விகல்பஸமாதி" என்று சொல்லப்படும். இதற்கு ஶ்ருதி ப்ரமாணம்.

" அர்த்தா தர்த்தாந்தரம் சித்தே யாதி மத்யேது யா ஸ்திதி:
ஸாத்வஸ்த மநநாகார ஸ்வரூப ஸ்திதி ருச்யதே."

என்னும் மஹோபநிஷத்ஶ்ருதியாய் மனமானது, ஓர் விஷயத்திலிருந்து மற்றோர்விஷயத்திற்குப்போகும்போது அதன் மத்தியில் சித்தசலனமில்லாமல்நிற்கும் நிலையெதுவோ அதுவே நிர்விகல்ப ஸமாதி என்றும் ஸ்வரூபமென்றும் சொல்லப்படும்.

ஶ்ரு || "சித்தம் த்வமே பரித்யஜ்ய யோகீ ஸோகீ ஸ்திரோபவ."
[மஹோபநிஷத்.]

ஸங்கல்பவிகல்ப ரூபமாயிருக்கும் மனதை தூரப்படுத்தி சேஷித்த ஜ்ஞானமே உன் ஸ்வரூபமாதலால், சஞ்சலமில்லாமல் ஸ்திரமாய் இருக்கவேண்டும்.

ஶ்ரு || "நாஹம் தேஹமிதி த்யாயந் நிஷ்டத்வமசலாசல, ஆத்மநோ
ஜகதஶ்சாந்தர் த்ரஷ்டுர்த்ருஶ்ய தஶாந்தரே
தர்ஶநாக்யம் ஸ்வமாத்மாநம் ஸர்வதா பாவயந்பவ."
[மஹோபநிஷத்.]

இந்த தேஹேந்த்ரிய அஹங்காரங்கள் நானல்ல, இந்த ஜகத்து மித்யாஸ்வரூபமானது, என்று நிஶ்சயமாய் அறிந்து இந்த தேஹேந்த்ரிய ஜகத்தை, ஸாக்ஷி மாத்ரமாய் இருந்து கொண்டு எது அறிகின்றதோ, அந்த ஸாக்ஷியே உன் ஸ்வரூபமென்று அறிந்து, ஸதா அந்த ஸாக்ஷியையே த்யானித்துக் கொண்டு தன்மயமாயிருக்கவேண்டும்.

ஶ்ரு || "அவலம்ப்ய நிராலம்பம் மத்யே மத்யே ஸ்திரோபவ."
[மஹோபநிஷத்.]

தேஹேந்த்ரியாதி ஜகத்திற்கு ஸாக்ஷியாயிருக்கும் வஸ்துவே, ஆத்மாவென்றும் ப்ரஹ்மமென்றும் சொல்லப்படும். அப்படி ஸாக்ஷிஸ்வரூபமாகிய ஆத்மா, ஸமஸ்தத்திற்கும் ஆதாரமானது. அப்படிப்பட்ட ஆத்மாவிற்கு ஆதாரம் ஒன்றுமில்லை. அது நிராதாரமானது. அப்படிப்பட்ட ஆத்மாவே நீ யென்று அறிந்து த்ருட நிஶ்சயமுடையவனாய் ஸதா அதை த்யானித்துக்கொண்டு தன்மயமாயிருக்கவேண்டும்.

ஶ்ரு || "த்ரஷ்ட்ருதர்ஶந த்ருஶ்யாநாம் மத்யே யத்தர்ஶநம் ஸ்ம்ருதம்
நாதபரதரம் கிஞ்சிந்நிஶ்சயோ ஸ்த்யபரோமுநே."
[மஹோபநிஷத்.]

த்ரஷ்டா, தர்ஶந, த்ருஶ்யங்கள் அதாவது பார்ப்பவன், பார்வை, பார்வைக்குக் காணப்படும் த்ருஶ்ய ப்ரபஞ்சம், இம் மூன்றும் த்ரிபுடியென்று சொல்லப்படும். அப்படிப்பட்ட த்ரிபுடி மத்தியில் ஸாக்ஷியாய் வந்த அறிவு ப்ரகாசிக்கின்றதோ அந்த அறிவே ஆத்மாவென்றும் ப்ரஹ்மமென்றும் சொல்லப்படும். அந்த அறிவே தானென்று தெரிந்து ஸதா தன்மயமாயிருப்பதைவிட வேறு ஶாஸ்த்ரார்த்த ஸாராம்ஶம் இல்லையாதலால், ஸதா அந்த அறிவே தானென்று அறிந்து எப்பொழுதும் தன்மயமாயிருக்கவேண்டும். இதற்கு த்ருஷ்டாந்தம் என்னவென்றால்,

ஶ்லோ || ஸவர்தமனை ஸாக்ஷ்யமுர்யாத ஸம்ஸ்ருஷ்டபக்தி விலக்ஷணம் அவிகார மதாஸீநம் த்ருஷ்டாந்தம் ப்ரதீயதே"

என்னும் ஸ்லோகார்த்தியாய் ஓர்வீட்டிலுள்ள கூடத்தில் தீபம் ப்ரகாசித்துக்கொண்டிருக்கும்போது அந்த தீபத்தை அனுஸரித்து ஜனங்கள் அந்த கூடத்தில் நடந்துகொண்டு ஸகல கார்யங்களைச் செய்துகொண்டு வந்தபோதிலும், அந்த தீபமாத்ரம் எந்தக்கார்யங்களைச் செய்யாமலும் எந்தவிகாரங்களை அடையாமலும் சலிக்காமலும் இருப்பதுபோல், ஜீவஜந்துக்களின் தேஹமத்தியில் புத்தியென்னும் குஹையில் ப்ரகாசித்துக்கொண்டிருக்கும் ஆத்மசைதன்யத்தை ஆஶ்ரயித்துக்கொண்டிருக்கும் மனம் புத்தி சித்த அஹங்காரங்கள் சலித்துக்கொண்டு அதது அதனதன் கார்யங்களைச் செய்து கொண்டிருந்தபோதிலும் ஆத்மாமாத்ரம் கூடத்திலுள்ள தீபம்போல் இருந்துகொண்டு எந்த விகாரங்களில்லாமலும் எந்தக்கார்யங்களைச் செய்யாமலும் சலிக்காமலும் ஸாக்ஷிஸ்வரூபமாயிருக்கின்றது. இப்படி ஸாக்ஷிஸ்வரூபமாயிருக்கப்பட்ட ஆத்மாவே "கூடஸ்தன்" என்று சொல்லப்படும்.

ஆத்மா மாயாஶக்தியினால் பந்தப்பட்டு ஸம்ஸாரத்தை அனுபவிக்கின்றான்.

அன்பர்களே! உலகத்தில் கர்மகாண்டம், ஜ்ஞானகாண்டமென்று இரண்டு காண்டங்களுண்டு. கர்மகாண்டத்தினால் ஜன்மங்கள் அதிகரித்துக்கொண்டே வரும். ஜ்ஞானகாண்டத்தினால் மோக்ஷப்ராப்தி உண்டாகும். ஆகலால் ஜ்ஞானகாண்டத்தையே அனுஷ்டிக்கவேண்டும். இதற்கு ப்ரமாணம்:—

"ஹஸ்தம்ஹஸ்தேந ஸம்பீட்ய தந்தைர்தந்தாந் விசூர்ண்ய ச, அங்காந்யங்கைரிவாக்ரம்ய ஜயேதாதௌ ஸ்வகம்மந:" [மஹோபநிஷத்.]

ஹஸ்தம் ஹஸ்தேந=கர்மகாண்டத்தை ஜ்ஞானகாண்டத்தினால் கண்டித்து, தந்தைர் தந்தாந்=ஸங்கல்பமென்னும் தந்தங்களை ஜ்ஞான தந்தங்களினால் பொடிசெய்து,

அங்காங்கங்கை:— யோகாஷ்டாங்கங்களை ஜ்ஞானாஷ்டாங்கங்களினால் கண்டித்து, மனஸை ஆத்மாவில் லயிக்கும்படி அப்யஸித்தால் மனோஜயமுண்டாகும்.

"மநஸோஹ்யுந்மநீ பாவே த்வைதம் நைவோபலப்யதே
யதாயாத்யுந்மநீ பாவ ததா தத் பரமம்பதம்." [பைங்கலோபநிஷத்.]

இந்த மனமே மஹா மாயையென்று சொல்லப்படும். இதனாலேயே நீ நான் என்னும் த்வைதபேதங்கள் உண்டாகின்றன. இந்த மனமே நித்யமுக்த ப்ரஹ்மம் தானென்பதையும் மறந்து தேஹமே தானென்னும் ப்ரமையை உண்டாக்கும். இந்த மனமே புத்தி, சித்தம், அஹங்காரங்களாகவும், காமக்ரோதாதிகளாகவும், மாறிக்கொண்டு என் பார்யாள், என் குமாரர்கள், என் குமாரிகள் என் பொருள்கள் என்று இவ்விதமாய் அநேகவித பாசைகளை உண்டாக்கிக் கொண்டிருக்கும். இப்படிப்பட்ட சண்டாளமனம் நித்ரையில் மாத்ரம் சற்று லயித்திருக்கும். எப்படியென்றால்,

"ஸுஷுப்தௌ ஸுகமாத்ராயாம் போதோ கேவலோகித:
சித்தமூலோ விகல்போயம் சித்தாபாவே நகஸ்சந
அதஸ்சித்தம் ஸமாதேஹி ப்ரத்யக்ரூபே பராத்மநி."
[அத்யாத்மோபநிஷத்.]

இந்த மனம் நித்ரையில் லயித்து இருப்பதனால் ப்ரபஞ்சம் தோன்றுவதில்லை நித்ரையைவிட்டு எழுந்தவுடனே மறுபடியும் மனம் தோன்றுவதனால் ப்ரபஞ்ச வ்யவஹாரங்கள் உண்டாகின்றன. இப்படிப்பட்ட சண்டாள மனதை ப்ரஹ்ம நிஷ்டையில லயிக்கச்செய்தால் த்வைதப்ராந்தி நசித்து ப்ரபஞ்சம் தோன்றாமல் ஸர்வம் தானான ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரம் உண்டாகும்.

ஸ்வாமி! மனம் நித்ரையில் லயித்து ப்ரபஞ்சம் தோன்றாமலிருக்க மறுபடியும் ப்ரஹ்ம நிஷ்டையில் லயிக்கும்படி ஏன் அப்யாஸம் செய்யவேண்டும்?

[...]யனே! நீ கேட்ட கேள்வி மிகவும் உத்தமமானதாகவே இருக்கிறது. அதன் விவரத்தைச் சொல்லுகின்றோம் கேள்.

"ஸுஷுப்தி [...]மாத்யோர்மநோலயா விஶேஷேபி மஹதஸ் த்யபேயோர்பேத: த[...]லீனத்வாத் முக்திஹேதுத்வாபாவாச்சஸமா தேன ம்ருதித தமோ[...]காரதா, காரகாரித அகண்டாகார வ்ருத் யாத்மக ஸாக்ஷிசைதந்யே [...]ப்ரபஞ்சலயஸம்பத்யதே."
[மண்டலப்ராஹ்மணோபநிஷத்.]

அஜ்ஞானமென்னும் [...] இருளில் லயித்திருப்பதால் ஈரபூமியில் விழுந்தவிதை பூமியில் லயித்து மறுபடியும் முளையெடுப்பதுபோல் ஜாக்ரதாவஸ்தையில் மனம் மறுபடியும் தோன்றிக்கொண்டிருக்கும். மேலும் நித்ரையில் மனதுடன்கூட ஜீவனும் அஜ்ஞானத்தில் லயித்து தானே ப்ரஹ்மமென்று தெரியாமல் தன்னை மறந்து இருளடைந்த பாழ்ங்கிணற்றில்விழுந்த குருடனைப்போல் வீழ்ந்திருக்கும். அதனால் ஜீவன் முக்தி அடையமாட்டாது. ப்ரஹ்மநிஷ்டையில் மனம் ஜ்ஞானாக்நியில் லயிக்கப்பட்டிருப்பதால் அக்நியில்விழுந்தவிதை மறுபடியும் முளையெடுக்காமல் நசிப்பதுபோல் அந்த மனம் நசித்துவிடும். ஆதலால் ப்ரஹ்மநிஷ்டாபரர்களாகிய ஜ்ஞானிகளுக்குத்தான் ஜீவனென்னும் த்வைதப்ராந்தி நசித்து ப்ரபஞ்சம் தோன்றாமல் தான் கேவல ஸாக்ஷிமாத்ர ஸ்வயம்ப்ரகாச பரப்ரஹ்மமாகியிருக்கும். இதுதான் நினைவில் ஸுஷுப்தியென்று சொல்லப்படும். ஆதலால், நித்ரைசெய்பவனுக்கும் ப்ரஹ்ம நிஷ்டையிலிருப்பவனுக்கும் விசேஷபேதமுண்டு. ப்ரஹ்மநிஷ்டையில் இருப்பவர்களுக்கு மரணகாலத்தில் ம்ருத்யு உண்டாகமாட்டாது. ப்ரஹ்மநிஷ்டையை மறந்தவர்களுக்கே ம்ருத்யு உண்டாகும்.

மரணகாலத்தில் எவனெவன் எதையெதை நினைத்து ப்ராணனை விடுகின்றானோ அவனவனுக்கு அந்தந்த ஜன்மங்கள் உண்டாகின்றன. இதற்கோர் த்ருஷ்டாந்தம் சொல்லுகின்றோம் கேளுங்கள்.

ஒருவனுக்கு லக்ஷவராகன் இருந்தன. அவன் மரண காலஸமீபத்தில் ஆஸ்ட்ரேலியாதேசத்தினின்று [illegible] வைத்து அதை ஆயிரம்வராகன்களுக்கு வாங்கி அதன்மீது அதிகப்ரீதிவைத்துக் காப்பாற்றிக்கொண்டுவந்தான். இவனுக்கோர் ப்ராணப்ரயாணகாலம் ஸமீபித்தது. ப்ராணன்போகும் போது ஒவ்வொருவருக்கும் சித்ரகுப்தமென்னும் படமொன்று காணப்படும். (சித்ரகுப்தம்; சித்ரம்-படம், குப்தம்-ரஹஸ்யம், அதாவது, ரஹஸ்யமான படம் [illegible] இதை உலகத்திலுள்ளவர்கள் சித்ராபுத்ரன் என்றுசொல்வார்கள்.) அவனவன் செய்துவரும் புண்யபாபங்களையெல்லாம்வேறோர்சித்ராபுத்ரன் இருந்தெழுதுவதல்ல. பின் எப்படியென்றால், ஸாக்ஷிஸ்வரூபமாயிருக்கும் ஆத்மா, ஜனனகாலம்முதல் மரணகாலபர்யந்தம் அவனவன்செய்துவரும் புண்யபாபங்களையெல்லாம் பார்த்திருந்து, எவனெவனை எந்தெந்தஜன்மத்தில் யார்யார்வீட்டில் ஜனிப்பிக்கச்செய்யவேண்டுமோ அவனவனை, அந்தந்தவீட்டில் ஜனிப்பிக்கச்செய்கின்றான். மனம்கோரியவிஷயங்களையெல்லாம் ஆத்மா அறிகின்றது. ஆதலால், மரணகாலத்தில் இவன் கோரியவிஷயங்களையெல்லாம் மேற்சொல்லிய சித்ரகுப்தபடத்தில் ஆத்மா காட்டுவதனால், அந்த ஆத்மாவிற்கு சித்ரகுப்தனென்றுபெயர் வந்தது. பயாஸ்கோப் (Bioscope) படங்கள் எப்படிகாட்டப்பட்டு, ஒன்றின்பின் ஒன்றாய் துரிதத்துடன் போகின்றதோ, அதுபோலவே, சித்ரகுப்தனும் மரணமடையப்பட்டவன் எந்தெந்த எண்ணங்களை எண்ணியிருந்தானோ அவைகளையெல்லாம் அந்தப்படத்தில் காட்டிக்கொண்டேபோய் எந்தவஸ்துவின்மீது அதிகப்ரீதியை வைத்திருந்தானோ அந்தவஸ்துவைக் கொண்டுவந்து கடைசியில் நிறுத்திவிடும். இவன்கோரியிருந்த வஸ்து இவன்முன்வந்து நின்றிருப்பதால் இவன்மனம் அதில் ஆழ்ந்துவிடும். அந்தஸமயத்தில் அவனது பந்துஜனங்களெல்லோரும் அவனைச்சூழ்ந்துகொண்டு 'நான்யார், அவர் யார், இவள்யார், அவன்யார், எனக்கென்ன சொல்லுகின்றாய்,

இவனுக்கென்ன சொல்லுகின்றாய், அவனுக்கென்ன சொல்லுகின்றாய்' என்று சிலரும்; மற்றும் சிலர் 'நாராயணாவென்று சொல், கோவிந்தா வென்றுசொல், ராமாவென்றுசொல், க்ருஷ்ணாவென்று சொல்லென்று சிலரும் அவனுக்குத் தொந்தரவைகொடுத்துக்கொண்டிருப்பார்கள். ஆனால், அவர்கள்சொல்லும்விஷயம் ஏதுவும் அவனுக்குக் கேட்கமாட்டாது. ஏன்? மனம், கண் இந்த்ரியத்துடன்சேர்ந்து பார்க்குந்தொழிலில் ப்ரவேசித்திருப்பதனால் ச்ரவணேந்த்ரியம் ஒன்றும் க்ரஹிக்க மாட்டாது. இப்படிப்பட்டவனுக்கு நூறுசெவிகள் இருந்த போதிலும் ப்ரயோஜனப்படமாட்டா. செவியிந்த்ரியங்களுடன்கூட மனம் சேர்ந்தால்தான் விஷயங்களை க்ரஹிக்கும். ஆதலால், ப்ராணப்ரயாணகாலத்தில் இருக்கப்பட்டவர்களுக்கு ஏது சொல்லியபோதிலும் கேட்கமாட்டாது. இப்போது மனம் ஸம்ஸாரவிஷயத்திலேயே அதிகமாய் உழன்றுகொண்டு வந்தால் மரணகாலத்தில் மேற்சொல்லிய 'சித்ரகுப்த' படத்தில் அந்த ஸம்ஸாரமே வந்துநிற்கும். ஸம்ஸாரயந்த்ரத்தைவிட்டு ஸதாகாலமும் ஈச்வரத்யானத்திலேயே இருப்போமாகில் அந்த ஈச்வரஸ்வரூபமே அந்தப்படத்தில் தோன்றும். அதனால், மறுஜன்மத்தில் மேல்படியில் ஆத்மா கொண்டுபோய் விடும். இப்போது ஸம்ஸாரவிஷயங்களைப் பார்த்துக்கொண்டிருந்து மரணகாலத்தில் ஈச்வரத்யானம் செய்துகொள்ளலாமென்று யோசிக்கின்றீர்களோ? அப்படியோசிக்கவேண்டாம். ஏனென்றால், இப்போது மனம், எந்தவிஷயத்தில் விசேஷமாய் ப்ரவர்த்திக்கின்றதோ அந்தவிஷயம் மாத்ரம் மரணகாலத்தில் ஞாபகத்திற்கு வருமேயொழிய ஈச்வரத்யானம் ஞாபகத்திற்கு வரமாட்டாது. ஆதலால், இதில் சொல்லியிருக்கும் ராஜயோக ரஹஸ்யத்தைத் தெரிந்துகொண்டு மரணகாலபர்யந்தம் யார் அப்யஸித்து வருகின்றார்களோ அவர்கள் நற்கதியை அடைவார்கள்.

இந்த உபதேசமும் இதுவரையில் நிறுத்தி இனி குதிரை வாங்கிய லக்ஷாதிபதி எவ்விதமானுனே அதனைத் தெரிந்துச் சொல்லுகின்றோம் கேளுங்கள் :—

மேற்சொல்லிய லக்ஷாதிபதிக்குக் குதிரையின்மீது அதிக ப்ரீதியிருந்தபடியால் கடைசியில் அவனுடைய குதிரைரூபம், முன்சொல்லியபடத்தில் காணப்படும். அப்போது அந்தக் குதிரையைப்பார்த்து உன்னை ஆயிரம் வராகன்கொடுத்து வாங்கி அதிகநாள் ஸவாரிசெய்யாமல் உன்னைவிட்டு மரணமடைகின்றேனேயென்று நினைத்துக்கொண்டே அவன் ஜீவனை விடுகின்றான். ஜீவன் இவ்விதமாய் எண்ணிக்கொண்டிருந்தவைகளையெல்லாம் யார் பார்த்துக்கொண்டிருந்தார்களென்றால்,

ஏகோ தேவ ஸ்ஸர்வபூதேஷு கூட ஸ்ஸர்வவ்யாபீ ஸர்வ
பூதாந்தராத்மா கர்மாத்யக்ஷ ஸ்ஸர்வபூதாதி வாஸஸ்ஸாக்ஷீ
சேதா கேவலோ நிர்குணஸ்ச [ஸ்வேதாஸ்வதரோபநிஷத்.]

ஓர் முத்து ஸரத்திலிருக்கப்பட்ட ஒவ்வொரு முத்திலும் ஓரே ஸூத்ரமானது வ்யாபித்திருப்பதுபோல் பரப்ரஹ்மமாகிய ஆத்மா, ஸகலஜீவஜந்துக்களிலும் ஸாக்ஷிஸ்வரூபமாய் வ்யாபித்து அந்தந்த ஜீவர்கள் செய்யப்பட்ட கார்யங்களுக்கெல்லாம் ஸாக்ஷியாய் இருக்கின்றான். இப்படிப்பட்ட ஸாக்ஷி ஸ்வரூபமாயிருக்கும் ஆத்மாவே, சித்ரகுப்தனென்று சொல்லப்படும். இப்படி ஸாக்ஷி ஸ்வரூபமாயிருக்கும் ஆத்மா பார்த்துக்கொண்டிருந்து முன்சொல்லிய லக்ஷாதிபதி புண்யம் செய்திருந்தால் ஆஸ்ட்ரேலியா தேசத்திலுள்ள குதிரையின் கர்ப்பத்தில் ப்ரவேசிக்கச்செய்கின்றது. பாபம்செய்திருந்தால் ஜட்கா வண்டிகளின் குதிரை கர்ப்பத்தில் ப்ரவேசிக்கச்செய்கின்றது. ஆஸ்ட்ரேலியா தேசக்குதிரைகள் மிகவும் விலையுள்ளது. அதைப்பெருத்த உத்யோகஸ்தர்கள் மாத்ரம் வாங்கி ப்ரதி தினம் 5, அல்லது, 6 மைல்கள் மாத்ரம் ஸவாரிசெய்து ஸுகமாய் வைத்திருப்பார்கள். பாபம்செய்த ஜட்காவண்டிக்குதிரை

களைக் காலை 6-மணிமுதல் பகல் இரண்டுமணிவரையில் நன்றாய் அடித்தடித்து ஸவாரிசெய்து கொல்லுகின்றார்கள். குதிரையேயல்ல எதையெதை நினைத்து ஜீவனை விடுகின்றானோ அந்தந்த ரூபத்தை மறுஜன்மத்தில் அடைகின்றான். இவன் லக்ஷாதிபதியாயிருந்து குதிரையின் ஜன்மம் ஏன் அடையவேண்டுமென்று கேட்கின்றீர்களோ? அதற்குக்காரணம் சொல்லுகின்றோம் கேளுங்கள். இவன் பூர்வஜன்மங்களில் செய்துகொண்டுவந்த புண்ய விசேஷத்தினால் அந்தப் புண்யபலனை அனுபவிப்பதற்காக இப்போது லக்ஷாதிபதிவீட்டில் ஜனித்து அது எவ்வளவு அனுபவிக்கவேண்டுமோ அவ்வளவும் அனுபவித்து முடிந்தவுடன் மரணமடைகின்றான். இதுபோலவே பாபங்களையும் அனுபவிக்கவேண்டியவனாயிருப்பதால் "புத்தி: கர்மாநுஸாரே" என்பதுபோல் எந்தக்கர்மத்தை அனுபவிக்கவேண்டியவனாயிருக்கின்றானோ அந்தக் கர்மத்திற்குத் தகுந்த புத்தி மரணகாலத்தில் உண்டாகும். எந்த எண்ணங்களுமில்லாமல் ப்ரஹ்மநிஷ்டையிலிருந்து ஜீவனை விடப்பட்டவர்களுக்கு புனர்ஜன்மமில்லை. இந்த ஜீவர்கள் செய்யும் புண்ய பாபங்கள் ஆத்மாவைப் பற்றமாட்டா, எப்படியென்றால்,

"ஸூர்யோ யதா ஸர்வலோகஸ்ய சக்ஷுர் ந லிப்யதே சாக்ஷு
ஷைர் பாஹ்ய தோஷை ரேகஸ்ததா ஸர்வபூதாந்தராத்மா ந லிப்யதே
லோகதுக்கேந பாஹ்ய." [கடோபநிஷத்.]

ஸூர்யகிரணங்கள் ஸுகந்த துர்க்கந்தங்களிற் ப்ரகாசித்துக்கொண்டிருந்தபோதிலும் அந்த ஸுகந்த துர்க்கந்தங்கள் ஸூர்யனைப் பற்றாமலிருப்பதுபோல் ஸகல ஜீவஜந்துக்களினுடைய ஹ்ருதயத்தில் வஸித்துக்கொண்டிருக்கும் பரப்ரஹ்மமாகிய ஆத்மாவிற்கு அந்தந்த ஜந்துக்கள் செய்யும் புண்யபாபங்கள் பற்றமாட்டா. ஆத்மா, புண்யபாபங்களில்லாத நிர்த்தோஷியாவதால் நிர்மலனாகின்றான். புண்யபாபங்கள் நம்மைப் பற்றாமலிருப்பதற்காக நாம் செய்யப்பட்ட கார்யங்களையெல்லாம் ஈஸ்வரார்ப்பணமாய் அல்லது க்ருஷ்ணார்ப்பணமாய்ச்

செய்தவர்தால் ஸகல புண்யபாபங்களும் நம்மைப்பற்றாமல் ஈஸ்வரனைச் சேருகின்றன. எப்பொழுது புண்யபாபங்கள் ஒழிந்துவிடுகின்றனவோ அப்போதே முக்தனாகின்றான்.

"ஏகதா பஹுதா சைவ த்ருஶ்யதே ஜலசந்த்ரவத்."
[த்ரிபுராதாபிந்யுபநிஷத்]

ஓர்சந்த்ரனே அநேகநீர்க்குடங்களில் பிரதிபிம்பித்து அநேக சந்த்ரர்களாய்த் தோன்றுவதுபோல், பரப்ரஹ்மமாகிய ஆத்மா ஒன்றே, நானாஜந்துக்களின் ஶரீரத்தில் ப்ரதிபிம்பித்து அநேக ஜீவர்களாய்த் தோன்றுகின்றான். (நீர்க்குடத்தின்ஜலம் அசையாமலிருந்தால் அதில ப்ரதிபிம்பித்திருக்கும் சந்த்ரன் அசையாமல் பரிசுத்தமாய்க் காணப்படும். ஜலம் அசைந்தால் குடத்தில் ப்ரதிபிம்பித்த சந்த்ரனும் அசைவதாய்க் காணப்படுமே யன்றி வாஸ்தவமான சந்த்ரன் அசைவதில்லை. அதுபோலவே மனமானது சலித்து (ஓடி)க்கொண்டிருப்பதனால் நம்மில் இருக்கும் ஆத்மாவைத் தெரிந்துகொள்ளாமலிருக்கின்றோம். ஆதலால், மனதை எங்கும் ஓடாமல் நிறுத்திவிட்டால் ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரம் உண்டாகும்.)

ஶ்ரு || "ஸதாஸீவ ப்ராக்ருதிலிங்கஸ்ய தத்ர முஹ்யதே
நாநாயோநி ஶதம் கத்வா ஶேதே வை
வாஸநாவஶாத் விமோக்ஷாத் ஸஞ்சரத்யேவ மத்ஸ்ய
கூலத்வயம்யதா." [த்ரிஶிகிப்ராஹ்மணோபநிஷத்.]

ஶ்ரு || "கர்மேந்த்ரியாணி ஜ்ஞானேந்த்ரியாணி தத்தத்விஷயான்
ப்ராணான் ஸம்ஸ்ருத்ய காமகர்மாவித்யாவித்யாபூத
வேஷ்டிதோ ஜீவோ தேஹமாத்ரம் ப்ராப்ய
லோகாந்தரம் கச்சதி ப்ராக்கர்மப்ரயாணேன ஆவர்த்தாந்தர
கீடவத் விஶ்ராந்திம் நைவலப்ஸதி." [பைங்கலோபநிஷத்.]

ஆனால், ஆகாஶசந்த்ரனைப்போல் ஜலசந்த்ரனும் அசையாமலிருந்தபோதிலும், ஜலம் அசைவதால் ஜலசந்த்ரனும் அசைந்துகொண்டிருக்கும். அதுபோலவே நிர்விகாரபரப்ரஹ்மமாகிய ஆத்மாவினுடைய ப்ரதிபிம்பமாகிய ஜீவனும் நிர்விகார

னாய் (எந்தவிகாரங்களும் இல்லாதவனாய்) இருந்தபோதிலும் அந்தஜீவன் மாயாமோஹிதனாய் அஜ்ஞானத்தை அடைந்து, ஸங்கல்பவிகல்பங்கள் உண்டாய் பாதரஸம்போல் சலித்துக் கொண்டிருக்கும் அந்தஃகரணங்களுடன் கூடிக்கொண்டு, என் தேஹம் என்பாரியை என்னும் தேஹாபிமானமும் அஹங்கார மமகாரங்களும் காம க்ரோத லோப மோஹ மத மாத்ஸர்யங்களாதி குணங்களையுடையவனாய் ஸ்தூலஶரீரத்தின் மூலமாய் அநேக கர்மங்களைச்செய்துகொண்டு அதன்பலன்களை அனுபவித்துக்கொண்டு மரணமடைந்தபின் ஸூக்ஷ்மஶரீரத்துடன் கூடிக்கொண்டு ஸூக்ஷ்மஶரீரியாய் ஸ்வர்க்கநரகங்களை அடைந்து ஸுகதுஃகங்களை அனுபவித்து மறுபடியும் கர்மஶேஷத்திற்காக ஜனனமெடுத்து அவைகளை அனுபவிக்க நானாயோனிகளில் பிறந்துகொண்டும் இறந்துகொண்டும் இவ்விதமாய், (ஓர்குளத்தில் அகப்பட்டுக்கொண்டு அந்தக்குளத்தைவிட்டு வெளிசெல்ல ஶக்தியில்லாமல் இக்கரைக்கும் அக்கரைக்கும் நீந்திக்கொண்டிருக்கும் மீன்குட்டியைப்போலும், சுழல்நீரில் அகப்பட்டுக்கொண்டு அதிலிருந்து தப்பிப்போக ஶக்தியில்லாமல் அந்தச்சுழலில்தானே சுற்றிச்சுற்றித் திரிந்துகொண்டிருக்கும் வண்டுபோலும்) இந்தஜீவன் ஜனனமரண துஃகஸமுத்ரத்தில்மூழ்கி அதிலிருந்து தப்பித்துக்கொண்டுபோக ஶக்தியில்லாமல் அலைந்துகொண்டிருக்கும். ஆதலால்,

ஶ்ரு || "ப்ரஜ்ஞானகனவைதேப்ய
ஸ்ஸமுத்தாய தான்யேவானு விநஶ்யதி."

இப்படிப்பட்ட ஜீவனுக்கு ஸஞ்சிதகர்மமும் ப்ராரப்தகர்மமும் நசித்தவுடனே தேஹமும் ஜீவோபாதியும் நசித்து, "ப்ரஹ்மவேத ப்ரஹ்மைவபவதி" என்னும் ஶ்ருதிரீதியாய், கடாகாஶம் மஹாகாஶத்தில்கலந்து ஏகமாவதுபோல் அகண்ட ஸச்சிதானந்த நித்யநிர்மல பரிபூர்ணமாகிய பரப்ரஹ்மத்தில் ஐக்யமாய் நித்யமுக்தனாகின்றான்.

ஶ்ரு || "ஏகோ பஹூநாம் யோ விததாதி காமாந்." [கடோபநிஷத்.]

பரப்ரஹ்மமாகிய ஆத்மா ஒருவனே ஸகல ஜீவராசிகளுக்கும் ஸாக்ஷியாயிருந்துகொண்டு அவரவர்கள் கோரியபலன்களைக்கொடுத்துக்கொண்டிருக்கின்றான். (இதற்குத்ருஷ்டாந்தம் ஸ்ரீ க்ருஷ்ணார்ஜுந ஸம்வாதரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை, அத்யாயம் 4, ஶ்-11, பார்க்க.) "நானேப்ரஹ்மம்" "ப்ரஹ்மமேநான்" என்று பேதமில்லாமலிருக்கும் ஜ்ஞானிகளைமாத்ரம் தன்னில் ஐக்யம்செய்துகொள்ளுகின்றார். ப்ரஹ்மம் வேறு தான்வேறென்று பேதமாய் எண்ணப்பட்டவர்களை ஈஶ்வரன் தன்னில்ஐக்யம்செய்துகொள்ளாமல் வேறாய் பேதரூபமுடையவனாகவே காட்டுகின்றான்.

ஶ்ரு || "அவ்யக்த லேஶாஜ்ஞாநாச்சாதித பாரமார்த்திக ஜீவஸ்ய தத்வமஸ்யாதி வாக்யாநி ப்ரஹ்மைகதாம் ஜகு:" [பைங்களோபநிஷத்.]

இந்த உலகத்தில் வஸிக்கும் மனிதர்கள் முதல் ஸகலஜந்துக்களும் ஜீவன்களென்று சொல்லப்படும். பரப்ரஹ்மத்தின் ப்ரதிபிம்பமாகிய இந்தஜீவன் மாயையென்னும் அஜ்ஞானத்தினால் மூடப்பட்டிருக்கின்றான். இப்படிப்பட்ட ஜீவன், ப்ரஹ்மைக்யத்தை போதிக்கும் தத்வமஸ்யாதி மஹாவாக்யங்களை விசாரணைசெய்தால், ஜனனமரணங்களில்லாதவனாய் ப்ரஹ்மைக்யமென்னும் முக்தியை அடையுமேயொழிய மற்றவைகளால் அடையமாட்டாது. "தத்வமஸி" தத் - அது, த்வம் - நீ, அஸி - ஆகின்றாய், அதாவது; தத் - அந்த பரப்ரஹ்மம், த்வம்-ஜீவாத்மஸ்வரூபமாயிருக்கப்பட்ட நீ, அஸி-ஆகின்றாய்.

ஜீவாத்ம ஸ்வரூபமாயிருக்கப்பட்ட நீ, அந்த பரப்ரஹ்ம ஸ்வரூபமாகின்றாய்.

அக்நிர்யதைகோ புவநம் ப்ரவிஷ்டோ ரூபம்ரூபம் ப்ரதிரூபோ பபூவ ஏகஸ்ததா ஸர்வபூதாந்தராத்மா ரூபம்ரூபம் ப்ரதிரூபோ பஹிஶ்ச [கடோபநிஷத்.]

ஓர் வர்த்தியில் ப்ரகாஶித்துக் கொண்டிருக்கும் தீபத்திலிருந்து அநேகவர்த்திகளை ஏற்றியபோது அந்த ஓர் தீபமே அநேகவர்த்திகளில் வ்யாபித்திருப்பதுபோல். ஓர் ஆத்மாவே, அநேக தேஹங்களில் வ்யாபித்து அநேக ஆத்மாக்களாய்த் தோன்றுகின்றது.

வாயுர்யதைகோ புவநம் ப்ரவிஷ்டோ ரூபம்ரூபம் ப்ரதிரூபோ பபூவ ஏகஸ்ததா ஸர்வபூதாந்தராத்மா ரூபம்ரூபம் ப்ரதிரூபோ பஹிஶ்ச [கடோபநிஷத்.]

ப்ரபஞ்சமெல்லாம் ஓர் வாயுவே வ்யாபித்து ப்ராணவாயுவென்றும், மலயமாருதமென்றும், சுழல்காற்றென்றும், சொல்லப்படுவதுபோல் ஓர் ஆத்மாவே, பிபீலிகாதி ப்ரஹ்ம பர்யந்தம் ஸகலஜீவ ஜந்துக்களிலும் வ்யாபித்து அநேக ஆத்மாக்களாய்த் தோன்றுகின்றது.

யதேவேஹ ததமுத்ர யதமுத்ர ததந்விஹ, ம்ருத்யோ: ஸ ம்ருத்யுமாப்நோதி, ய இஹ நாநேவ பஶ்யதி. [கடோபநிஷத்.]

இந்த ஶரீரத்தில் வஸிக்கும் ஆத்மாவே அந்தப் பரலோகத்திலிருக்கும் பரப்ரஹ்மமாயிருக்கின்றது. அந்தப் பரலோகத்திலிருக்கும் பரப்ரஹ்மமே இந்த உலகத்தில் நமது ஶரீரத்தில் ஆத்ம ஸ்வரூபமாய் நிவஸித்துக் கொண்டிருக்கின்றது. ஓர் ஆகாஶமே கடோபாதையினால் கடாகாஶமென்றும் உபாதையில்லாமலிருப்பதால் மஹாகாஶமென்றும் சொல்லப்படுவது. ஸர்வபரிபூர்ண பரப்ரஹ்மம், இந்ததேஹத்தில் வஸிப்பதால் தேஹோபாதையினால் ஆத்மாவென்று சொல்லப்படும்.

கடத்திலிருக்கும் ஆகாஶத்தில் யாதொரு ஸங்கல்பங்களுமில்லாமல் பரிஶுத்த ஆகாஶமாயிருக்கின்றது. ஆதலால், கடத்திற்கு உபாதையாயிருக்கும் ஓடு உடைந்த உடனே அந்த கடாகாஶம் மஹாகாஶத்தில் சேர்ந்துவிடும். கடத்தைப் போன்ற நமதுஶரீரத்திலிருக்கும்ஆத்மாவுடன் மனமொன்று சேர்ந்திருப்பதால் கடமாகிய இந்தஶரீரம் நஶித்தவுடனே மனமுடன்கூடிய ஆத்மா வேறுஶரீரத்தை அடைகின்றது.

இந்த ஆத்மா மனஸுடன் கூடி எதுவரையில் ஸம்பந்தப்பட்டிருக்கின்றதோ அதுவரையில் அநேகஶரீரங்களை அடைந்துகொண்டேவரும். எப்பொழுது மனஸு நசித்துவிடுகின்றதோ அப்பொழுதே ஆத்மா பரப்ரஹ்மத்தில் ஐக்யமாய்விடும்.

"அணோரணீயாந் மஹதோ மஹீயாந்
ஆத்மாஸ்ய ஜந்தோர் நிஹிதோ குஹாயாம்." [கடோபநிஷத்.]

இந்த உலகத்தில் அணுவைவிட மிகவும் சிறிய ஜந்துக்களிலும், யானை அல்லது ஹிமவத்பர்வதம்போன்ற பெரிய ஜந்துக்களினுடைய ஶரீரத்திலும் ஆத்மா வஸித்துக்கொண்டிருக்கின்றது.

'அஶரீரம் ஶரீரேஷு அநவஸ்தேஷ்வவஸ்திதம்' [கடோபநிஷத்]

ஆத்மா, தனக்கு ஶரீரமில்லாமல் நாமரூபரஹிதனாய் இந்த ஶரீரத்திலேயே வஸித்துக்கொண்டிருக்கின்றான்.

ஆத்மா, காற்றுருவமாய் இருக்கப்பட்டது. ஆதலால், இந்தஶரீரத்திலேயே ரூபமில்லாமல் நாமரஹிதனாய் வஸித்துக்கொண்டிருக்கின்றான். இந்த ஶரீரத்திற்கே நாசமேயொழிய ஆத்மாவிற்கு நாசமில்லை. இதற்கு த்ருஷ்டாந்தம், ஸ்ரீ க்ருஷ்ணார்ஜுந ஸம்வாதரூபமாய் எழுதிய ஸ்ரீபகவத்கீதை அத்யாயம் 2-ஶ்லோகம் 23, 24, 25-ல், ஸ்ரீ பகவான் என்ன சொல்லுகின்றாரென்றால்,

இந்த தேஹம் ஆயுதங்களினால் வெட்டப்பட்டபோதிலும், அக்நியினால் தஹிக்கப்பட்டபோதிலும், ஜலத்தினால் நனைக்கப்பட்டபோதிலும் காற்றினால்ஶோஷிக்கப்பட்டபோதிலும் இந்ததேஹத்திலிருக்கும் ஆத்மா அதனைவிட்டு மற்றொரு தேஹத்தில் ப்ரவேஶிக்கின்றதேயன்றி தேஹத்துடன் நசிக்கப்படமாட்டாது. அப்படி சேதிப்பது தஹிப்பது நனைப்பது ஶோஷிப்பது நசிப்பது முதலானவைகள் ஶரீரத்திற்கு ஸம்பந்தப்பட்டனவேயன்றி ஆத்மாவிற்கு ஸம்பந்தப்பட்டவையல்ல. ஶரீரத்திற்கு மாத்ரம் மாறுதலுண்டேயன்றி ஆத்மா

விற்கு எப்பொழுதும் மாறுதலில்லை. இந்த ஆத்மா, ஆயுதம் அக்நி ஜலம் வாயு முதலானவைகள் எவற்றினாலும் நசிக்கப்படமாட்டாது. இது நித்யமானது; அதாவது ஒருபோதிருந்தும் ஒருபோது இல்லாமல் இருப்பதுமல்ல. மாயா ஸம்ஸாரத்திலிருந்து தப்பித்துக்கொண்டு பரப்ரஹ்மத்தில் ஐக்யமாகும்வரையில் எப்பொழுதும் எதையோ ஓர் தேஹத்தை ஆஶ்ரயித்துக்கொண்டேயிருக்கும். 'ஸர்வகதம்' அதாவது, பிபீலிகாதி ப்ரஹ்மபர்யந்தம் ஸகலஜந்துக்களின் ஹ்ருதயத்தில் ஆத்மா வ்யாபித்திருக்கப்பட்டது.

'ஸ்தாணு' நிஶ்சலமானது; அதாவது, தான் தரித்திருக்கும் தேஹங்கள் அப்போதைக்கப்போது மாறினாலும் தான் மாத்ரம் மாறாமல் எப்பொழுதும் ஒரே விதமாயிருக்கும்.

இன்னும் இந்த ஆத்மா எப்படிப்பட்டதென்றால், ஜ்ஞாநேந்த்ரியங்களினாலும் அறியக்கூடாதவனென்பதற்கு ஶ்ருதிப்ரமாணமென்னவென்றால், "நதத்ர சக்ஷுர்கச்சதி நவாக்கச்சதி நோமந: நவித்மோ ந விஜாநீம:" ஆத்மா கண்களுக்குக் காணப்படாதது, மனதினால் நினைப்பதற்கு ஸாத்யப்படாதது, இப்படிப்பட்டதென்று நிரூபித்து சொல்வதற்கு வாக்கு ப்ரவர்த்திக்கமாட்டாது. இப்பேர்ப்பட்ட எந்த விகாரங்களும் ஆத்மாவிற்கு இல்லையென்று தத்வஜ்ஞானிகள் சொல்லுகின்றார்கள். ஒரு தடவை சொல்லிய விஷயங்களைப்போலவே மறுபடியும் சொல்லுகின்றேனென்று யோசிக்கின்றாயா? பரமாத்ம ஸ்வரூபம் இப்படிப்பட்டதென்று உன் மனஸுக்கு நன்றாய்ப்பிடிபடும்படி ஶப்தங்களைமாற்றி மாற்றித் தெரிவிக்கின்றேன். ஆதலால், ஆத்மா இப்படிப்பட்டதென்று தெரிந்துகொண்டு யுத்தம் செய்வதற்குத் துக்கப்படவேண்டாம். இன்னும் 26-வது ஶ்லோகத்தில் ஸ்ரீபகவான் சொல்லுகின்றார்.

ஓ அர்ஜுனா:—ஆத்ம தத்வம் இப்படிப்பட்டதென்று நான் இதுவரையில் 12-வது ஶ்லோகம் முதல் 25-வது

ஸ்லோகம் வரையில் போதித்தேன். ஆதலால், மறுபடியும் இந்த ஆத்மா பிறக்கின்றவனென்றும் இறக்கின்றவனென்றும் நினைக்கவேண்டாம். இந்த ஆத்மாவைக்குறித்து நீ துக்கப்படவேண்டாம்; ஏனென்றால், பிறந்தவன் இறப்பதும், இறந்தவன் மறுபடியும் பிறப்பதும் தப்பாதல்லவா? ஆதலால், பிறந்து இறந்து கொண்டிருக்கும் ஸ்வபாவமுடைய பீஷ்மாதிகள் இன்று உன்னால் கொல்லப்பட்டாலும் நாளையதினம் மறுபடியும் தப்பாமல் பிறப்பார்கள்; பூர்த்தியாய் நாஸமாவதானால் வ்யஸனப்படவேண்டியதுதான். நித்ரித்து எழுந்தவனைப்போல் இன்றைக்கிறந்து நாளையதினம் பிறப்பவர்களைக் குறித்து விசாரப்படவேண்டாம். இறந்தவர்கள் பிறப்பார்களல்லவா? இதற்குப் பின்வரும் விஷயங்களை கீதையில் விரிவாய்க் காணலாம்.

"ஸவா ஏஷ மஹாநஜ ஆத்மா ஜரோ மரோ ம்ருதோ பயோ
ப்ரஹ்மாபயம் ஹி வை ப்ரஹ்மபவதி" [ப்ருஹதாரண்யோ.]

ஆத்மா, பால்ய யௌவன வார்த்திக்யங்கள் இல்லாதது. இந்த ஸரீரத்திற்கே பால்ய யௌவன வார்த்திக்யாதி அவஸ்தைகள் உண்டு. இந்த ஆத்மா, பயமில்லாதவன். அப்படிப்பட்ட ஆத்மா இந்த ஸரீரத்தில் எவ்விடம் வஸிக்கின்றதென்றால்,

"அந்தஶ்ஶரீரே நிஹிதோ குஹாயாம்." [அத்யாத்மோபநிஷத்.]

ஆத்மா, இந்த ஸரீரத்தில் பஞ்சகோஸங்களில் வஸிக்கின்றது. அது, அன்னமய ப்ராணமய மனோமய விஜ்ஞானமய ஆனந்தமயமென்று சொல்லப்படும்.

இந்த ஸ்தூல ஸரீரம் ஆகாரமில்லாவிடில் ஸரித்துவிடும். அப்படி ஸரிக்காமல் நிற்பதற்காக அன்னமயகோஸமும், ஸூக்ஷ்மஸரீரம் நிற்பதற்காக ப்ராணமய மனோமய விஜ்ஞானமய இந்த மூன்றுகோஸங்களும் ஆதாரமாயிருக்கின்றன. இதில் ப்ராணவாயு கர்மேந்த்ரியங்கள் சேர்ந்து ப்ராணமயகோஸமாகும்.

சித்தம் கர்மேந்த்ரியங்கள் சேர்ந்து மனோமயகோஸமாகும் புத்தி ஜ்ஞானேந்த்ரியங்கள் சேர்ந்து விஜ்ஞானமய கோஸமாகும். காரணஸரீரம் ஆனந்தமயகோஸமென்று சொல்லப்படும். இப்படிப்பட்ட கோஸங்கள் ஜ்ஞானத்தை எவ்விதமாய் மூடிக்கொண்டிருக்கின்றதென்றால், ஸ்ரீக்ருஷ்ணார்ஜுந ஸம்வாதரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம், 3-ல், 38-39-ல், ஸ்ரீ க்ருஷ்ணன் சொல்லுகின்றார்:—

ஓ குந்தீ புத்ரா:— அக்நி புகையினாலும் கண்ணாடி அழுக்கினாலும் கர்ப்பத்திலிருக்கும் பிண்டம் மாயையினாலும் எவ்வாறு மூடப்பட்டிருக்கின்றனவோ அவ்வாறே ஜ்ஞானமானது ஆசையினால், மூடப்பட்டுள்ளதென்று சொல்லப்பட்டிருக்கின்றது. இம்மூன்று த்ருஷ்டாந்தங்களும் மூன்றுவித மனிதரைக் குறிக்கும். அம்மூவகை மனிதராவார்:—

1. புகையினால் அக்நி மூடப்பட்டிருப்பதுபோல் ஆசையாகிய புகையினால் ஆத்மஜ்ஞானமாகிய அக்நிமூடப்பட்டிருப்பவர்கள் ஆத்மஜ்ஞானமுள்ளவர்களே யாவார்கள்.

எப்படியெனில், நிஷ்களங்கமாகிய ஆத்மஜ்ஞானத்திலேயே நிலையில்லாமலும், விஷயப்பற்றுதலை முழுதும் விடாமலும் இருப்பார்கள். அக்நியைச் சூழ்ந்திருக்கும் புகை எவ்வளவு வ்யாபகமாயினும் அக்நியின்மீது காற்று மோதப்படுதலால் புகைவிலகப்பட்டு, அது ஜ்வாலையைவிட்டு ப்ரகாசிக்கத் தொடங்கினவுடனே புகை இருந்தவிடந்தெரியாமல் எப்படி மறைகின்றதோ அப்படியே குரு உபதேஸத்தினாலும் ஸத்ஸங்கத்தினாலும் இவர்களுக்கு இச்சை நசித்து கூடிய சீக்ரமாகவே அப்யாஸத்தினால் ஆத்மஜ்ஞானத்தை அடைவார்கள். ஆதலால், இவர்கள் முதல் வகுப்பினர் ஆவார்கள்.

2. அழுக்கினால் மூடப்பட்ட கண்ணாடியைப் பார்க்கும் ஒருவனது முகம், ப்ரகாஸமாகவும் ஸ்பஷ்டமாகவும் தெரியாவிட்டாலும், ஏகதேசமாய்த்தெரியுமன்றோ? அவனுக்குத் தன்

முகம் ப்ரகாஶமாய்த் தெரியவேண்டும் என்கிற எண்ணம் மாத்ரம் இருக்கின்றதேயன்றி அழுக்கைப் போக்கினால் கண்ணாடியில் முகம் ப்ரகாசிக்கும் என்கிற ஜ்ஞானம் இல்லை. அது போலவே, ஆத்மஜ்ஞானத்தை ஸம்பாதிக்க வேண்டுமென்கிற அபேக்ஷைமாத்ரம் இருக்கப்பெற்று, ஆசையை ஒழித்தாலன்றி அத்தனைக்கிட்டுவது கூடாதென்கிற நிஶ்சயமில்லாமல் கலக்கமுற்றிருப்பான். இந்த ஆசையைப் போக்கடித்துக் கொண்டால் ஆத்மஜ்ஞானத்தை அடையலாம் என்கிற நிஶ்சயஜ்ஞானம் இல்லாமலிருப்பான். இப்போப்பட்டவனுக்கு குரு உபதேஶத்தினாலும் ஸத்ஸங்கத்தினாலும் சிலகாலங்களுக்குப்பின் ஜ்ஞானோதயமாகும். இப்படிப்பட்டவர்கள் இரண்டாவது வகுப்பினராவார்கள்.

3. கருப்பைக்குள் அடையுண்டு கிடக்கும் பிண்டமானது, தானாகவே அந்தப்பையைவிட்டு வர ஶக்தியற்றதாயிருப்பதுபோல, ஆத்மஜ்ஞானமில்லாதவர்கள் ஆத்மா இப்படிப்பட்டதென்று அறியாமல், ஆசைவலையில் அகப்பட்டுக் கொண்டிருப்பார்கள். ஆசையை நிவர்த்தி செய்துகொள்ள ஶக்தியற்ற இவர்களுக்கு குரு உபதேஶத்தினாலும் ஸத்ஸங்கத்தினாலும் ப்ரயோஜனமில்லை, இவர்களே மூன்றாவது வகுப்பினர் ஆவார்கள்.

அர்ஜுனா! புகைந்துகொண்டிருக்கும் அக்நி ஊதுவதனாலேயோ அல்லது விசிறுவதனாலேயோ புகை நீங்கி ஜ்வாலையை உண்டாக்குகின்றதல்லவா? அழுக்கினால் மூடப்பட்ட கண்ணாடியைக் கழுவுவதனாலேயோ அல்லது துடைப்பதனாலேயோ அழுக்கு நீங்கிக் கண்ணாடி துலாம்பரமாயிருக்குமல்லவா? ப்ரஸவித்தவுடன் ஶிஶுவை மூடிக்கொண்டிருந்த 'மா' வீழ்ந்துவிடுகின்றதல்லவா? அதுபோலவே யோகாப்யாஸத்தினால் இந்தக் காமக்ரோதங்கள் நீங்கி ஜ்ஞானம் ப்ரகாசிக்கும்.

அர்ஜுநன்:—ஓ ஸ்வாமீ! புகையினால் மூடப்பட்ட அக்நி ஊதுவதனால் எரிந்து, ஊதுவதை நிறுத்தினவுடனே எரிவது நின்று, மறுபடியும் புகைந்துகொண்டிருக்குமல்லவா? அது போலவே இந்த ஜ்ஞானமும் காமக்ரோதங்களால் மறைபட்டும் வெளிப்பட்டுக்கொண்டும் இருக்குமல்லவா?

க்ருஷ்ணன்:—ஆம், புகைந்துகொண்டிருக்கும் அக்நியை விசிறினால் எரிந்து, மறுபடியும் அணைந்து மறுபடியும் புகைந்து, மறுபடியும் எரிந்து வரவர, சிலநேரத்தில் ஜ்வாலை ப்ரகாசித்துப் பெருந்தீயை உண்டாக்கும். அதன்பிறகு விசிறுவதாயினும், ஊதுவதாயினும் இல்லாமலே தனக்குத் தானாய் எப்படி யெரிகின்றதோ அதுபோலவே, யோகாப்யாஸிக்கு காமக்ரோதங்கள், மனம் புத்தி இந்த்ரியங்கள் அவஶஞ்செய்யும் மனோநிக்ரஹத்தினால் நிவர்த்தியாய், மறுபடியும் தோன்றி மறுபடியும் மனோபுத்தீந்த்ரிய நிக்ரஹத்தினால் நிவர்த்தியாய் இப்படிச் சிலகாலவரையில் அவனைப் பாதித்துக்கொண்டிருக்கும். ஆனால், அவைகள் தோன்றும் போதெல்லாம் அந்த யோகாப்யாஸி விடாமல் பிடிவாதத்துடன் மனோபுத்தீந்த்ரியங்களை நிக்ரஹித்துக்கொண்டேவருவானாயின் அவைகள் அனைத்தும் அவனைவிட்டொழியும். அப்படி ஊக்கத்துடன் விடாமல் செய்துகொண்டுவரும் அப்யாஸத்தினால் சில காலங்களுக்குள் பூர்ணவைராக்யமுண்டாகும். அப்பொழுது, அந்தக் காமக்ரோதங்கள் அவனைவிட்டொழியும். அதன்பிறகு ஜ்ஞானம் நிர்மலமானதாய் அவிச்சின்னமாய் ப்ரகாசித்துக்கொண்டிருக்கும். இதன் விஷயமாய் ஒருகதையுண்டு. அதனைச் சொல்லுகின்றோம் கேளுங்கள்:—

ஒரு பட்டணத்தில் கள்ளன் ஒருவனிருந்தான். அவன், ஒருநாள் இரவு அந்தப்பட்டணத்தை ஆளும் ராஜனுடைய படுக்கையறையில் ரஹஸ்யமாய் ப்ரவேஶித்து ராஜனும் அவனுடையபத்நியும் காடாந்தநித்ரைசெய்யும்பொழுது அவர்களினுடைய ஆபரணங்களையெல்லாம் எடுத்துக்கொண்டு

போவதற்கு ஸமயம்பார்த்துக்கொண்டு ஒருபுறமாய்ப்பதுங்கி
யிருந்தான். ராஜனும் பத்நியும் பள்ளியறையில் ப்ரவேசித்து
ஸந்தோஷமாய் வார்த்தையாடிக் கொண்டிருந்தார்கள். அந்த
ஸமயத்தில் ராஜனானவன், தன் குமாரத்தியை ஒரு பாகவ
தோத்தமனுக்கு அதாவது ஸதாகாலமும் பகவந்நாமஸ்மரணை
செய்துகொண்டிருக்கப்பட்டவனுக்கு அவனுடைய குல
கோத்ரம் யாதாயிருந்தபோதிலும் விசாரிக்காமல் கொடுத்து
விவாஹம் செய்வித்து தன்னுடைய ராஜ்யத்தில் பாதிகொடுப்
பதாய் த்ருடமாய்த் தன்பத்நியிடம் சொல்லினன். இவை
களைக் கேட்டமாத்ரத்தில் அவ்விடத்தில் பதுங்கியிருந்த கள்
ளன், தான் முன் உத்தேசித்திருந்த சோரக்ருத்யங்களைச்
செய்வதனால் அது நிர்விக்நமாய் நடந்தேறியபோதிலும் ஸ்வ
ல்ப பலமே உண்டாகுமென்றும், அல்லது ஒருவேளை க்ருத
சாரம் போதாமல் பிடிபட்டாலோ ராஜதண்டனைக்குப் பாத்ர
னாகவேண்டுமென்றும் எண்ணினவனாய் இப்படிப்பட்ட கார்
யங்களைச் செய்வதைப் பார்க்கிலும், சில காலம் வரையில்
பகவத்பக்தனாய் வேஷந்தரித்து ஸதா பகவத்குணானுபவம்
செய்துகொண்டுவந்தால் ராஜகுமாரத்தியையும் அந்த ராஜ்யத்
தையும் அடையலாம் என்று எண்ணி தான் எப்படி ப்ரவே
சித்தானோ அப்படியே ரஹஸ்யமாய் வெளியேசென்று, மறு
நாள் அருணோதயத்திலேயே நதீதீரஞ்சென்று நீராடி த்வா
தசோர்த்வ புண்ட்ரங்களைத்தரித்து, பகவத்பக்த சின்னங்க
ளுடன் ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் பகவந்நாமத்தையே
ஜபித்துக்கொண்டிருந்தான். இவ்வாறிருக்க, மறுநாள் உதயத்
தில், ராஜன் படுக்கையினின்று எழுந்து காலக்ரம க்ருத்யங்
களை முடித்துக்கொண்டு ஆஸ்தான மண்டபத்தில் உட்கார்ந்து
மந்த்ரிமார்களைப்பார்த்துத் தன்குமாரத்தியின் விவாஹத்தைக்
குறித்துத் தான்கொண்டிருக்கும் மனோ நிச்சயத்தைத் தெரி
வித்து அப்போர்ப்பட்ட புருஷன் எவ்விடத்திலேனும் காணப்
பட்டால், ஆறுமாதம் வரையில் அவனுடைய நடத்தைகளைப்

பார்த்து, அதன் பிறகு அவனைத் தன்னிடத்தில் அழைத்துக்
கொண்டு வரும்படி ஆஜ்ஞாபித்து, தகுந்த ஸேவகர்களை நிய
மிக்கவேண்டுமென்று கட்டளையிட்டான். அதுபோலவே மந்
த்ரிமார்களும் தகுந்தஸேவகர்களைநியமித்து ஏவினார்கள். அந்த
ஸேவகர்கள்சென்று பட்டணமெங்கும் தேடியலைந்தபோது
அன்றிரவு ராஜனது படுக்கையறையில் பதுங்கியிருந்து வெளி
யான அந்த வேஷதாரியே ஸேவகர்களுக்குத் தென்பட்டான்.
ஸேவகர்களும் அவன் சென்ற இடமெல்லாம் அவனுக்குத்
தெரியாமல் மறைந்து உடன்சென்று பார்த்துக்கொண்டிருந்
தார்கள். இவர்கள் தன்னைக்கண்டு பிடிக்கத்திரிந்து கொண்
டிருப்பதை வேஷதாரி அறிந்து, தன் மனோரதம் ஸித்திக்கு
மென்னும் நம்பகத்துடன் ஒருக்ஷணமேனும் ஓயாமல் பகவந்
நாமத்தை ஸ்மரித்துக்கொண்டே வந்தான். இவ்வாறு செய்
யவே அப்யாஸவசத்தினால் பகவந்நாமத்தில் உண்மையாகவே
ருசியுண்டாய் அவனுக்கு முன்னிருந்த துன்மார்க்க உத்தேசம்
க்ரமக்ரமமாய் கழிந்து பகவத்பக்தி அதிகரித்து நாளுக்குநாள்
விஷயங்களில் விரக்தி உயர்ந்துகொண்டேவந்தது. இதனைக்
கண்ட ஸேவகர்கள் ஆறுமாதம் சென்றதும், அவனை ராஜ
ஸபைக்கு அழைத்துக்கொண்டு சென்றார்கள். ராஜன் ஸேவ
கர்களால் அவனது விஸ்தாரங்களையெல்லாம் செவ்வனே
கேட்டுத் தன் உத்தேசத்தின்படியே தனது குமாரத்திக்குத்
தகுந்தவரன் இவனே யாவானென்று நிச்சயித்துத் தன்குமா
ரத்தியைப் பாணிக்ரஹணம் செய்துகொள்ள வேண்டுமென்
றும் தனது அர்த்தராஜ்யத்தை அங்கீகரிக்க வேண்டுமென்றும்
அவனை ப்ரார்த்தித்தான். அவனோ அப்யாஸவசத்தினால் பக
வந்நாமத்திலுள்ள ருசியறிந்து முன்னிருந்த துர்விஷயம் நசித்
துப்போய் விஷயவாஞ்சை பூர்த்தியாய்விட்டவனாதலால் ராஜ
னுடைய ப்ரார்த்தனையின்மீது அலக்ஷ்யமுண்டாகி அதனை
அங்கீகரிக்காதவனாய் திடீரென்று எழுந்து வெளியே சென்
றான். ஆதலால், பகவத்குணானுபவத்தின் ருசியறிந்து ததேக

நிஷ்டனாய் ஆத்மானுபவமுடைய அவனுக்கு ஐஹிக விஷயங்களில் ருசி உண்டாகுமா? உண்டாகமாட்டாது. சில ஸமயங்களில், அவனுடைய மனம் தூர்விஷயங்களில் திரும்பினாலும், அவ்வாறு போகவொட்டாமல் அதனை உடனே திருப்பிக் கொள்வான்.

ஓ அன்பர்களே! ஆத்மா மனஸுடன் கூட எதுவரையில் ஸம்பந்தப்பட்டிருக்கின்றதோ அதுவரையில் ஜனனமரணங்களை அடைந்துகொண்டே வரும். மனம் நசித்தால் ஜீவன் மோக்ஷத்தை அடையும். அஃதெப்படியென்றால், ஆத்மாவிற்கு ஸஹாயகாரியாயிருந்த மனம் நசித்துவிட்டபடியால் பின் வேறு ஸரீரங்களில் புகுந்தொழில் நீங்கி தன் ஸ்வரூபமாகிய பரப்ரஹ்மத்துடன் சேர்ந்து ஐக்யமாய்விடும்.

அணு (கண்களுக்குக் காணப்படாத சிறியபுழு) முதல் ப்ரஹ்மதேவன் வரையில், அநேககோடி ஜன்மங்களை யுகங்கள் தோறும் எடுத்துக்கொண்டுவந்தபோதிலும், எதுவோ ஓர் ஜன்மத்தில் அந்தப் பரப்ரஹ்மத்தில்போய்ச் சேரவேண்டியது திண்ணம். ஆனால், ஜீவகோடிகள் பரப்ரஹ்மத்தில்போய்ச் சேருவது மிகவும் கஷ்டஸாத்யம். ஏனென்றால் ப்ரஹ்மதேவர் ஜீவர்களை ஸ்ருஷ்டிசெய்த நாள்முதல் நாளது வரையில் எத்தனையோ கோடி ஜன்மங்கள் எடுத்து ஒவ்வொரு ஜன்மத்திலும் மாறிமாறி வந்துகொண்டிருக்கும் பெண்டு பிள்ளைகளின் மீதும் க்ருஹம் பூமி தனம் தான்யங்களின்மீதும் அதிக ப்ரீதியைவைத்து மரணமடைந்துகொண்டே வருவதால் இவர்களுக்கு ஜன்மங்கள்தோறும் பெண்டு பிள்ளைகளின்மீதுள்ள இச்சை அதிகரித்து மென்மேலும் ஸம்ஸாரவாஸனையில் இழுத்துக்கொண்டு செல்லுமேயொழிய மோக்ஷத்தை அடைய இச்சை உண்டாக்கமாட்டாது. இப்படிப்பட்ட மாயாசக்ரத்தில் அகப்பட்டுக்கொண்டிருப்பவர்கள் என்றைக்கோ ஓர்நாள் அத்வைத உபந்யாஸங்களைக் கேட்கவேண்டுமென்று இச்சை உண்டாய் உபந்யாஸம்செய்யும் இடத்திற்குச்சென்று உட்-

கார்ந்தபோதிலும் உபந்யாஸம் ப்ராரம்பித்தவுடனே, "ஐயோ மாயாஸம்ஸார சக்ரத்தில் மூழ்கியிருக்கப்பட்ட நீ இந்த வேதாந்த ரஹஸ்யங்களைக்கேட்க அர்ஹனல்லவே யென்று மூதேவியானவள் ப்ரஸன்னமாகின்றாள்." (இந்த ஸம்ஸார சக்ரத்தை, ஸ்ரீ க்ருஷ்ணார்ஜுந ஸம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம், 3 ஸ்லோகம் 16-ல், விரிவாய்க் காணலாம்.) அந்த மூதேவி யாரென்றால், ஜன்மாந்தரங்கள் தோறும் இவனுடன் கூட ஸாக்ஷியாய் வந்துகொண்டிருக்கும் பரப்ரஹ்மத்தின் அம்சமாகிய ஆத்மாவேயென்று சொல்லப்படும்.

இந்த ஆத்மா, நித்ரைவராத மற்றும்சிலருடைய மனஸை உபந்யாஸங்களைக் கேட்கவிடாமல் வேறு விஷயங்களில் பற்றி; அதாவது ஸம்ஸாரத்திலோ வ்யாபாரத்திலோ உத்யோகத்திலோ கோர்ட்டு விஷயத்திலோ அல்லது உபந்யாஸம் கேட்க வந்த மாதர்களின்மீதோ எதிலேயோ ஓர் விஷயத்தில் இழுத்துச்செல்லும். இப்படிப்பட்டவர்களின் மனஸை, ஸங்கீதத்தின்மீதாகிலும் தாஸிகளின் கச்சேரிமீதாகிலும் அகடவிகடமான குயுக்தி கதைகளின்மீதாகிலும் அருவருக்கத்தக்க நாடகங்களின்மீதாகிலும் ஸந்தோஷிக்கச்செய்யும். இப்படிப்பட்டவைகளின்மீது அதிக ப்ரீதிவைத்து மீன்குத்திப் பக்ஷியைப்போல் தூங்காமல்விழித்து, நாடகங்களைப்பார்த்துக்கொண்டு அந்தந்த ஸந்தர்ப்பங்களில் 'ஒன்ஸ்மோர்' 'ஒன்ஸ்மோர்' (Once more, Once more) என்றுசொல்லி எக்காளம் போட்டுக் கைகொட்டி ஹ! ஹ!! ஹ!!! ஹா!!!! வென்று சிரித்துக்கொண்டிருப்பார்கள். ஓர் ஸமயங்களில் நித்ரை வருவதாயிருந்தால் வெளியில்சென்று ஸோடா லெம்மனேட் புட்டிகளைச் சாப்பிட்டு தாம்பூலம்போட்டு ஸிகரெட் பீடிகளைப் பிடித்து நித்ரையைப் போக்கிக்கொண்டு வந்து உட்காருவதுமுண்டு. இவர்கள் ஜன்மமெடுத்தது இதற்கேயன்றி மோக்ஷத்தை அடைவதற்கல்லவென்று அறிக. இவ்விதமாய் ஒவ்வொன்றிலும்

1,85

பற்றுதல் அதிகமாயிருப்பதால் ஜன்மங்கள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. இப்படிப்பட்ட விஷயங்களையெல்லாம்விட்டு மோக்ஷத்திற்குரிய ஸாதனங்களைச் செய்துவந்தால் சிலஜன்மங்களில் 'முக்தி' பெறலாம். இவ்வாறு எழுதினேனென்று கோபிக்கவேண்டாம் உலகத்தில்நடக்கிறதேதுவரும் விஷயங்களை எடுத்துக்காட்டியிருக்கின்றதேயன்றி வேறல்ல. உலகத்திலுள்ளயாவர்களும், அந்தபரப்ரஹ்மத்தில் ஐக்யமாக வேண்டுமென்னுமெண்ணத்தினால் எழுதினதேயன்றிவேறல்ல. இதற்கு த்ருஷ்டாந்தம் ஸ்ரீக்ருஷ்ணார்ஜுன ஸம்வாதரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம் 4-ஶ்லோகம் 8-ல்,

"லாலநே தாடநே மாதுர் நவைஷம்யம் யதார்பகே, தத்வதேவ மஹேசஸ்ய நியந்தர் குணதோஷயோ:" என்று சொல்லியிருக்கின்றது. அதாவது,

தாய்சொல்வதுபோல்கேட்கும் குமாரனை அவள் அதிகப்ரீதியுடன் விஶ்வஸிப்பாள். தன்வார்த்தையைகேளாத குமாரனை அடிப்பாளன்றோ? அப்படிஅடிப்பதும், தான்சொன்னபடிகேட்டு அவனும் நல்வழிக்கு வரவேண்டுமென்னும் எண்ணத்தினால் அடிக்கின்றாளேயொழிய அவன்மீதுள்ள விரோதத்தினாலல்ல? அதுபோலவே ஸகலபுருஷர்களும் நல்லுணர்வுணர்ந்து மோக்ஷானந்தபதவியை அடையும்பொருட்டு இவ்வாறெழுத நேரிட்டதென்று அறிவீர்களாக.

மேற்சொல்லியதுபோல் எவனொருவன் தன்னுடைய மனம் ஸதா பகவத்விஷயத்தில் ரமிக்கும்படி அப்யஸித்து வருகின்றானோ அவனுக்கு க்ரமக்ரமாய் இந்த்ரியங்கள் வஶமாகும். ஸகல இந்த்ரியங்களும் எப்பொழுது ஸரியாய் வஶப்பட்டு நிற்கின்றனவோ அப்பொழுது தான் ,ஸ்திரமான ஞானமுடையவனாயிருப்பான். ஆதலால், மனஸையும் இந்த்ரியங்களையும் ஸ்வாதீனம்செய்துகொண்டு ஸமாதியில் இருக்கவேண்டும். இன்னும் அதிகமாய்த் தெரிந்துகொள்ளவேண்டியவர்கள் ஸ்ரீக்ருஷ்ணார்ஜுன ஸம்வாதரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம் 2, ஶ்லோகம் 61-ல், பார்க்க.



இவை, போட்டோ படங்கள், 8½ அங்குலம் உயரம், 6½ அங்குலம் அகலமுள்ளது. ஸதாசந்தன், வேப்பேரி போஸ்ட், சென்னை—இவ்விடம் பெறலாம்.

மோக்ஷத்தை அடையும் மார்க்கங்கள்.

மோக்ஷம் அடைவதற்கு முதல்ஸாதனம் யோகம் இரண்டாவது ப்ரஹ்மஸூத்ரம், இதை 280-வது பக்க முதல், 284-வது பக்கம் வரையிலும், 308-வது பக்கமுதல் 313-வது பக்கம் வரையிலும் முந்தியே உபதேசித்திருக்கின்றது. மூன்றாவது பஞ்சமுத்ரைகள். இவைகளில் எதையாகிலும் ஒன்றை அப்யஸித்து மனதை ஆகாய வடிவத்தில் லயிக்கச்செய்யவேண்டும். இப்போது யோகத்தைக்குறித்துச்சொல்லுகின்றோம். அதற்குப்பின் பஞ்சமுத்ரைகளின் லக்ஷணங்கள் சொல்லப்படும்.

மூத்ரப்பை தீனிப்பை குடல்களைக்கழுவி காயசுத்திசெய்யப் பழகுதல்.

யோகம் எப்படிப்பட்டதென்றால்:—காயசுத்தி செய்து; அதாவது இரவு மூன்றுமணிக்கெழுந்திருந்து இரண்டுபடி ஜலத்தை ஓர் பாத்ரத்தில் வைத்து அதனுடன் ஓர் 'பஞ்சபாத்ரம்' வைத்துக்கொண்டு ஷை பெரியபாத்ரத்திலிருக்கும் ஜலத்தை 'பஞ்சபாத்ரம்' நிறைய விட்டுக்கொண்டு அதிலிருந்து பத்து விழுங்கு ஜலத்தைச்சாப்பிட்டு பாத்ரத்தைக் கீழேவைத்து எதிரிலிருக்கும் முதற்படம் **No. 1**-ல், கண்டபடி மூச்சைப்பிடித்து வயிற்றையெக்கி எவ்விதமாய் உட்கார்ந்துகொண்டிருக்கின்றதோ அதுபோல உட்கார்ந்து மூச்சைவிடாமல் வயிற்றை முன்னுக்குத்தள்ளி மறுபடியும் மூச்சைவிடாமல் வயிற்றை உள்ளுக்கு எக்கிக்கொண்டு, மறுபடியும் மூச்சை விடாமல் வயிற்றை முன்னுக்குத்தள்ளி மறுபடியும் மூச்சை விடாமல் வயிற்றை உள்ளுக்கு எக்கிக்கொண்டு, இவ்விதமாய் மூச்சைப்பிடிக்க எவ்வளவு நேரம் சக்தியுண்டோ அவ்வளவு நேரம் மூச்சைப்பிடித்து எக்கிக்கொண்டு, முன்னுக்கும் பின்

னுக்குமாய் வயிற்றை அசைத்து அசைத்துக் குலுக்கி, மூச்சைப்பிடிக்க ஶக்தியற்றபோது மூச்சைவிட்டுவிட்டு இரண்டு நிமிஷங்கள் சும்மா உட்கார்ந்து ஶ்ரமந்தீர்த்துக்கொண்டு மறுபடியும் ஷை ஜலத்திலிருந்து பத்து விழுங்கு ஜலத்தைச் சாப்பிட்டு முன்போலவே ஸாதனம் செய்யவேண்டும். இவ்விதமாய் இரண்டுமுறை ஜலத்தைச்சாப்பிட்டு அப்யாஸம்செய்தபிறகு No. 2 படத்தில் எழுந்துநின்று மூச்சைப்பிடித்து வயிற்றை எக்கிக்காட்டியிருப்பதுபோல் எக்கிக்கொண்டு மூச்சைப்பிடித்துக்கொண்டே வயிற்றை முன்னுக்குத்தள்ளி மறுபடியும் மூச்சைப்பிடித்துக்கொண்டே வயிற்றைஎக்கிக்கொண்டு சுமார் பத்து அல்லது பதினைந்துவிசை வயிற்றை முன்னுக்கும் பின்னுக்குமாய் அசைத்து அசைத்து மூச்சைப்பிடிக்க ஶக்தியற்றபோது மூச்சைவிட்டு இரண்டு நிமிஷங்கள் இளைப்பாறி மறுபடியும் பத்து விழுங்கு ஜலம்சாப்பிட்டு, உட்கார்ந்து சிலநேரமும், நின்று சிலநேரமும், ஸாதனம் செய்யவேண்டும். இவ்விதமாய் ஸாதனம்செய்து சிறுகச்சிறுக இரண்டுபடிஜலத்தையும் சாப்பிட்டுக்கொண்டே வரவர, (ஓர்தோல்பையில் அரைபாகம் ஜலம்விட்டு வாயைமூடிக் குலுக்கியபோது என்ன ஶப்தம் உண்டாகின்றதோ அந்த ஶப்தம்போல்) குடலை அசைக்கும்போதெல்லாம் ஶப்தமுண்டாகும். இவ்விதமாய் ஸாதனம் செய்யும்போது பத்துநிமிஷங்களுக்கொருதரம் அடிக்கடி மூத்ரம் சுரந்துகொண்டேவரும். மூத்ரம் அடிக்கடி சுரந்துகொண்டு வருவதனால் மூத்ரப்பை பரிஶுத்தமாய்விடும். மூத்ரப்பை எப்பொழுது பரிஶுத்தமாய்விடுகின்றதோ அதன்பிறகு அதில் தங்கும் மூத்ரம் பரிஶுத்தமான ஜலமாயிருக்கும். அப்போது அதைப்பிடித்து யூரினுமிடர் (Urinometer) டிகிரி (Degree) போட்டுப் பார்த்தபோது ஜலம் நிற்கும் குறி அளவில் அந்த யூரினுமிடரில் காட்டும். இதை அநுபோகத்தில் காணலாம். மூச்சைப்பிடித்து வயிற்றை முன்னுக்கும் பின்னுக்குமாய் அசைத்து அசைத்து குலுக்குவதனால் மூத்ரப்பையில் சென்ற

ஜலம்போக, தீனிப்பையில் மிகுதியாயிருக்கும் ஜலமானது கட்டியாயிருக்கும் மலத்தையெல்லாம் கலக்கிச் சிலநேரத்திற்குள் மலத்தை அதிவேகமாய் வெளியில் கொண்டுவரும். அச்சமயத்தில் மலபாதையைத்தீர்த்துக்கொண்டு வரவேண்டும். இவ்வப்யாஸம் செய்து வெளியில்வரும் மலம் கட்டியாய் வாராமல் மிகவும் தாராளமாய்வரும். மறுபடியும் முன்போலவே பத்து அல்லது பன்னிரண்டு விழுங்குஜலம் சாப்பிட்டு உட்கார்ந்து சிலநேரமும், நின்று சிலநேரமும், மூச்சைப்பிடித்து வயிற்றை அசைத்துக்குலுக்கி அப்யாஸம் செய்தால், மறுபடியும் சில நிமிஷங்களுக்குள் கொஞ்சம் கட்டியாயும் குழம்பாயும் வரும். கைகால் ஶுத்திசெய்துகொண்டு மறுபடியும் ஜலம் சாப்பிட்டு உட்கார்ந்து சிலநேரமும், நின்று சிலநேரமும், ஸாதனம் செய்யவேண்டும். இந்தஸாதனத்தினால் இரண்டு மூன்றுவிசை மலம் குழம்பாய்வந்து, மறுபடியும் செய்யும்போது வெறும் ஜலமாகவேவரும். அஃதெப்படியெனில், கசாயித்தொழில்செய்பவன் ஆட்டினுடைய ஈரிப்பையையும் குடலையும்ஜலத்தினால் நன்றாய் அலம்பி எவ்விதமாய் ஶுத்தம்செய்துவிடுகின்றானோ அதுபோலவே, காயஶுத்திசெய்யப்பழகிய புருஷர்கள் ஒரு பெரியசெம்பு ஜலம் சாப்பிட்டு இரண்டுகால்களையும் அகலமாய் விரித்து வயிற்றை ஓர் அசக்கு அசக்கினவுடன் மலமும் ஜலமுமாக ஆஸனத்தின்வழியாய் வந்துவிடும். மறுபடியும் ஓர் பெரியசெம்பு ஜலம்சாப்பிட்டு வயிற்றை அசக்கினால் வெறும் ஜலமாகவே வந்துவிடும். இவ்விதமாய்க்குடலைக்கழுவி ஶுத்தம்செய்தபிறகு இன்னும்கொஞ்சம் ஜலம் தீனிப்பையில் தங்கியிருக்கும். அப்போது ஆள்காட்டும்விரல் நடுவிரல் இவ்விரண்டையும் வாயினுள்விட்டு உண்ணாக்கில்படும்படியாய் அசக்கவேண்டும். அப்படி அசக்கினவுடனே விஶேஷப்புளிப்புடன் ஜலமும் அதாவது, டார்டாரிக் ஆஸிட் (Tartaric acid) போன்ற புளிப்பு, வெண்மை நிறமுடன் பால்போல் வந்து விழும். இப்புளிப்பானது எல்லாப்புளிப்பைவிட அதிகமா

யிருக்கும். இது, ஹ்ருதபத்திலிருந்துகொண்டு புஜித்த ஆஹா ரங்களை ஜீர்ணிக்கச்செய்யும். இப்படிப்பழகுவதே காயஶுத்தி என்று சொல்லப்படும். காயஶுத்திசெய்து முடிந்தவுடன் இந்நூலில் 196-வது, பக்கம்முதல் 243-வது பக்கம்வரையில், ப்ராணாயாமத்தில் சொல்லியதுபோல அக்குடல் நிரம்பக் காற் றைப்பிடித்தடைத்து பத்துநிமிஷங்கள்வரையில் ஶ்வாஸத் தை நிறுத்தி அதிலிருந்து கொஞ்சம் ஶ்வாஸத்தை வெளியில் விட்டுவிட்டு அதை உச்வாஸ நிச்வாஸங்களாய் ஆடச்செய்து நிஷ்டையிலிருக்கவேண்டும். அக்காலத்தில் ஸங்கல்பரூபமா யிருக்கும் மனோவாயு, வெளியிற்செல்லாமல் குடலில்தங்கிய வாயுவில் ஐக்யமாய்விடும். அத்தருணத்தில், யோகியானவன், தன்னைத்தான்மறந்து ஸர்வவடிவமாய் ஆத்மஸ்வரூபியாய்த் தானே ப்ரஹ்மமாகின்றான்.

'கல்ப' மென்றால் எது? 'அமரி' யென்றால் எது?

அன்பர்களே!. நமது இந்து தேசத்தில் ஶிஶுக்கள் பிறந்தவுடன் அவைகளுக்கு இதரகுழந்தைகளின் சிறுநீரைப் பிடித்து மூன்றுதினங்கள் கொடுப்பது உலகமறிந்த விஷய மன்றோ? இவ்வப்யாஸம், ஆதியில் பெரியோர்களால் ஏற்படுத் தப்பட்டது. மூன்று தினங்கள் கொடுத்து நிறுத்தி விடுவத னால் யாதொரு ப்ரயோஜனமும் உண்டாகமாட்டாது. இதற்கு ஶ்ருதிப்ரமாணம்,

"† அமிரீம் யபிபேந்நித்யம் நஸ்யம்குர்வந் திநேதிநே" "பித் தோல்பணத்வாத் ப்ரதமாம்புதாராம் விஹாயநிஸ்ஸாரதயாந்த்யதாராம் நிஷேவ்யதே ஶீதலமத்யதாரா." [ஹடயோகப்ரதீபிகை.]

ஶிஶுவிற்கு யாதொரு வியாதியும் வாராமல் ஸுகமா யிருக்க வேண்டுமென்று கோரப்பட்ட தாயானவள் என்ன

† அமிரீம் - அமுர்தம் இது குருவினால் தெரிந்துகொள்ளத்தக்கது.

செய்யவேண்டுமென்றால், ஶிஶுபிறந்தநாள்முதல் புத்திவரும் வரையில் ஒருநாளும் தவறாமல் அதேதினவாய் ப்ரதிதினம் காலையில் ஶிஶு விடும் முதற்பாகம் சிறுநீர் பித்தமாயும் கடை சியில்விடும் சிறுநீர் ப்ரயோஜனமற்றதாயும் இருப்பதனால் இவ்விரண்டுபாகங்களையும் நீக்கி மத்தியில்வரும் தாரை அமி ரியா (அமுர்தமா)யிருப்பதால் அதை ஒரு சிறிய கிண்ணத்தில் பிடித்துக்கொண்டு ஶிஶுவிற்கு பால்கொடாமல் அடி சிறு நீரில் இரண்டுபாலடை குடிப்பித்து பத்துநிமிஷங்கள் சென்ற பிறகு தாயானவள் பால்கொடுக்கவேண்டும். அவன் புத்தி அறியும்வரையில் இவ்விதமாய் கொடுத்து புத்திவந்தவுடன் அப்பா நாயனா! நீ காலையில் எழுந்தவுடன் ப்ரதிதினம் சிறுநீர் விடும்போது முதல்வரப்பட்ட சிறுநீரைக் கொஞ்சம் விட்டு விட்டு மத்தியில்வரப்பட்ட சிறுநீரில் மூன்றுகை சாப்பிட்டுக் கடைசியாய்வரும் சிறுநீரை விட்டுவிடவேண்டும். இவ்வித மாய் ஒருநாளும் தவறாமல் ப்ரதிதினம் அப்யாஸம் செய்து வருவாயாகில் உனக்கு எந்தவ்யாதியும் வாராது என்று நல்ல வார்த்தையாய்ச்சொல்லி சிறுநீரைப் பானம்செய்யும்படி ப்ரதி தினம் எச்சரிக்கைசெய்துகொண்டே வரவேண்டும். இவ்வப் யாஸம் செய்துவரும் சிறுவர் சிறுமியர்கள் யாதொரு பிணியும் வாராமல் எப்பொழுதும் மிகவும் ஸுகமாகவே யிருப்பார்கள். இச்ஸுகத்தை அநுபோகத்தில் காணலாம். இவ்வப்யாஸம் சில குடும்பங்களில் ஆண்பெண் குழந்தைகளுக்கு அவாளவாள் சிறுநீரையேபிடித்துக் குடிப்பித்துக்கொண்டு வருகின்றார்கள். அக்குழந்தைகள் யாதொரு பிணியுமில்லாமல் மிகவும் ஸௌக்யமாயிருக்கின்றன. இவ்விஷயம் அவர்களின் கடிதமூல மாய்த் தெரியவந்தது. பெரியோர்களால் ஏற்படுத்திய மறை வட்பொருளாகிய இந்த ரஹஸ்யம் எல்லோரும் அறிந்து அதுபோல் அப்யாஸம் செய்யும்பொருட்டே இந்நூலில் எழு தப்பட்டது. பெரியோர்களால் ஏற்படுத்தப்பட்ட இந்த மஹா ரஹஸ்யமான பொருளை அஸஹ்யமென்றெண்ணி பிறந்த

வுடன் மூன்றுநான்மாத்ரம் ஸம்ஸாரிகளுக்குக்கொடுத்து நிறுத்திவிடுகின்றார்கள். அதனால் தான் ஸம்ஸாரிகளுக்கு அடிக்கடி பலவ்யாதிகளும் சிரங்குகளும் வந்துகொண்டேயிருக்கின்றன. இது, அஸஹ்யமான வஸ்துவென்று எண்ணிய பெரியோர்கள் இதற்கு 'கல்ப'மென்றும் 'அமிரி' என்றும் மறைவான பெயரைத்தந்தார்கள், ஆதலால், இதை வாசிக்கப்பட்ட, யாவரும் "ஸங்குதீர்த்தம் கையில்பிடித்து பொங்குதீர்த்தம்" பானம் செய்யவேண்டும். அதாவது; ப்ரதிதினம் காலையில் விடும் சிறுநீரில் முதற்பாகமும் கடைசிபாகமும் எடுத்துக்கொள்ளாமல் மத்தியில்வரும் பொங்கும் தீர்த்தம் மூன்றுகைபிடித்துச் சாப்பிட்டுக்கொண்டு வந்தால் முதல் உப்பாகவும், சிலநாள் சென்றபிறகு வாயில்வைக்க ஸஹிக்காமல் விஷத்திற்கு ஸமானமாய் ருசி மாறிக்கொண்டேவரும். இவ்விதமாய் எத்தனைவித வெகுட்டலாயிருந்தபோதிலும் அதைஸஹித்துக்கொண்டு எப்படிப்பட்ட ரோகங்கள் சேர்ந்தபோதிலும் ஒருநாளும் தவறாமல் ப்ரதிதினம் காலையில் அதே ஞாபகமாய் யார் ஒருவர் பன்னிரண்டு வருஷங்கள் சாப்பிட்டுக்கொண்டு வருகின்றார்களோ அப்படிப்பட்டவர்களின் ஸரீரத்தை விஷப்பூச்கள், அதாவது தேள் ஸர்ப்பம் முதலாகிய விஷஜந்துக்கள் தீண்டியபோதிலும் அவர்களுக்கு விஷம்ஏறமாட்டாது. ஏன்? அநேக வருஷங்களாய் ஒருநாளும் தவறாமல் 'கல்பம்' சாப்பிட்டு வருவதனால் அவர்களின் ஸரீரம் விஷமாய்விடுகின்றது. ஆதலால், அவர்களுக்கு விஷம் ஏறுவதில்லை. இதற்கு த்ருஷ்டாந்தம் சொல்லுகின்றோம் கேளுங்கள். இந்நூலாசிரியரை இருபத்தைந்து வயதுவரையில் அநேகதேள்கள் கொட்டியதுண்டு.

ஒவ்வொரு முறையும் தேள் கொட்டிய போதெல்லாம் 'தீக்' என்று நெருப்பைப்போல் பற்றிக்கொண்டு துடைவரையில் ஏறி, அந்நாள்முழுதும் விசேஷபாதையைத் தந்துகொண்டிருக்கும். இவ்விதமாய் ஒவ்வொரு முறையும் பாதைப்பட-

டுக்கொண்டிருப்பது வழக்கம். அதன்பிறகு "கல்பம்" ரஹஸ்யத்தை 'குரு' மூலமாய் அறிந்து 'குரு' வாக்யைப்போல் ஒருநாளும் தவறாமல் அநேக வருஷங்கள் சாப்பிட்டுக்கொண்டு வந்தனர். இப்படிச் சாப்பிட்டுக்கொண்டு வரும் நாளில் ஒருநாள் பகல் நல்ல வெயிலில் வலது கைப்பெருவிரல் நுனியில் தேள் கொட்டிற்று. அப்போது எறும்பு கடித்ததுபோல் இருந்தது. உடனே பரீக்ஷித்துப் பார்த்தபோது, இரண்டங்குலம் நீளமுள்ள ஓர் பெரிய செந்தேளாயிருந்தது. தர்மங்களில் முதல் தர்மம் 'அஹிம்ஸா' ஆதலால், எந்த ஜீவஜந்துக்களாகிலும் தனக்குக் கெடுதியை விளைத்தபோதிலும் தாம் மாத்ரம் மறுபடியும் அந்த ஜீவஜந்துக்களுக்குக் கெடுதியை உண்டாக்கவில்லை. ப்ரஹ்ம ஸூத்ரத்தில் முதல் வாக்யம் என்னவென்றால் அஹிம்ஸா பரமோ தர்மஃ என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த வாக்யம் நன்றாய் அறிந்தபடியால் அந்தத்தேள் கொல்லப்படாமல் பிடிப்பித்து ஓர் புதரில் விட்டுவிடப்பட்டது. அத்தேள் கொட்டின உடனே முன்விஷம் ஏறிக்கொண்டிருந்ததுபோல் ஏறாமல் கொட்டினவுடன் எறும்பு கடித்ததுபோல் இருந்து க்ஷணமே ஒன்றுமில்லாமற்போய்விட்டது. ஏனென்றால், 'கல்பம்' சாப்பிட்டு ஸரீரம் விஷமாய்விட்டபடியால் தேளின் விஷத்தை ஸரீரம் ஸஹ்யம் செய்யவில்லை. ஆதலால், ஒருநாளும் தவறாமல் காலையில் வரும் சிறுநீரை மத்தியில் பிடித்து மூன்று கை சாப்பிட்டுக்கொண்டு வரும் 'அமிரியே' 'கல்ப' மென்று சொல்லப்படும். இதை சிலப்பெரியோர்கள் பாட்டாகவும் பாடியிருக்கின்றார்கள். ஆதலால் யாதொரு வ்யாதியும் வாராமலிருக்கவேண்டுமென்று எண்ணங்கொள்ளும் புருஷர்களும் ஸ்த்ரீகளும் இக்கல்பத்தைச் சாப்பிட்டுக்கொண்டு வரலாம்.

பஞ்ச முத்ரைகளின் லக்ஷணங்கள்.

கேசரி, பூசரி, மத்யலக்ஷணம், ஷண்முகீ, ஶாம்பவி என முத்ரைகள் ஐந்து.

1. கேசரி:—விழிகளை மத்தியிலிருத்தி மேனோக்கி சிதாகாஶத்தைப்பார்த்துக் கொண்டிருப்பதே கேசரி எனப்படும்.

2. பூசரி:—கண்களை அசைக்காமல் தன் மூக்கு நுனிக்குறியில் லக்ஷ்யம் வைத்துப் பார்த்துக் கொண்டிருப்பதே பூசரி எனப்படும்.

3. மத்யலக்ஷணம்:—கண்களை அரைப் பார்வையுடன் மூடி மூக்குமத்தியில் த்ருஷ்டியை நிறுத்திப் பார்த்துக்கொண்டிருப்பதே மத்யலக்ஷணம் எனப்படும்.

4. ஷண்முகீ:—செவி கண்கள் மூக்கு வாய் இவைகளை விரல்களால் மூடி பஹிர்முக த்ருஷ்டியையும் மனதையும் அந்தர் (உள்) முகமாக்கி கண்விழிகளை மத்தியில் நிறுத்தி நாத (ப்ராணன்), பிந்து (மனம்), கலை (புத்தி) இவைகளை ஒன்றாய்ச் சேர்ப்பதே ஷண்முகீ எனப்படும்.

5. ஶாம்பவி:—கண்களை இமைகொட்டாமல் திறந்த பார்வையை சிதாகாஶத்தில் நிறுத்தி, அங்குள்ள விந்தைகளான மண்டலங்களைப் பார்த்துக்கொண்டு சொக்கியிருப்பதே ஶாம்பவி எனப்படும்.

ஶாம்பவி.

ஶ்லோ || "அந்தர் லக்ஷ்யம் பஹிர் த்ருஷ்டி ர்நிமேஷோந்மேஷவர்ஜிதா ஏஷாஸா ஶாம்பவீ ஜ்ஞேயா ஸர்வதந்த்ரேஷு கோபிதா." [ஶ்ருதி

"தத்தர்ஶனேதிஸ்ரோ த்ருஷ்டய: அமா ப்ரதிபத்பூர்ணிமேதி
நிமீலித தர்ஶனம் அமாத்ருஷ்டி: அர்த்தோந்மீலிதம் ப்ரதிபத்
ஸர்வோந்மீலனம் பூர்ணிமா பவதி தாஸு பூர்ணிமா அப்யாஸ:
கர்தவ்ய: தல்லக்ஷ்யம் நாஸாக்ரம் ததா தாலுமூலே ஸூக்ஷ்ம தமோ த்ரு
ஶ்யதே தப்யாஸாத் அகண்ட மண்டலாகார ஜ்யோதிர் த்ருஶ்யதே
ததேவ ஸச்சிதானந்தம் ப்ரஹ்மா பவதி தாமேவ கேசரீமாஹு:

தத்ப்யாஸாத் மனஸ்தைர்யம் ததோ வாயுஸ்தைர்யம்
தச்சிஹ்னானி ஆதௌ தாரகவத் த்ருஶ்யதே ததோ வஜ்ரதர்பணம்
ததோபரிபூர்ண சந்த்ரமண்டலம் ததோ நவரத்ன ப்ரபாமண்டலம்
ததோ மத்யாஹ்ன ஸூர்யமண்டலம் ததோ வஹ்னிஶிகா
மண்டலம் க்ரமாத் த்ருஶ்யதே அஹம் ஹஸ்பர்த்த நேத்ரேண
மத்வயாப்யாஸேன மன: ப்ராணயோரைக்யம் பவதி."

இவ் வர்த்தத்தையே ஸ்ரீ ஶங்கராசார்யரும் ஶ்ரீஶ்ருதியில் அருளிச்செய்திருக்கின்றார்.

ஏகமாய் இரண்டாவது இல்லாததாய் ப்ரகாஶித்துக்கொண்டிருக்கும் ஆத்மாவை ஸாவதான சித்தத்துடன் பாட்யமி, அமாவாஸ்யை, பௌர்ணமி என்னும் மூன்றுவித த்ருஷ்டிகளையுடையது ஶாம்பவி முத்ரை யென்று சொல்லப்படும்.

1. நிமீலித த்ருஷ்டி பாட்யமி த்ருஷ்டி யென்றும், கண்களை மூடிக்கொண்டு பார்க்கும் த்ருஷ்டி அமாவாஸ்யை த்ருஷ்டியென்றும், இமைகொட்டாமல் பார்க்கும் த்ருஷ்டி பௌர்ணமி அமாவாஸ்ய த்ருஷ்டி யென்றும் சொல்லப்படும். இம்மூன்றில் முதலிரண்டையும் நிவர்த்திசெய்து ப்ரஹ்மாகாரவ்ருத்தியில் ப்ரகாஶித்துக்கொண்டிருக்கும் புத்தியினால் இமைகொட்டாமலிருக்கும் பௌர்ணமி அமாவாஸ்ய த்ருஷ்டியை அப்யஸிக்கவேண்டும். மேற்சொல்லியதுபோல் ஶ்ரவணஞ்செய்து அந்தரத்திலிருக்கும் பரமாத்ம ஸ்வரூபத்தைத் தர்ஶித்துக்கொண்டு இந்த பாஹ்யத்தில் (வெளியில்) காணப்படும் நாமரூபத்தை அடையாத த்ருஷ்டி ஶாம்பவி முத்ரையென்று சொல்லப்படும். இந்த முத்ரையைக் கண்களில் நிறுத்தி சித்தத்தை ஏகாக்ரமாய்ப் பொருந்தச்செய்து இரண்டு ஜாமங்கள் (6-மணிநேரம்) அப்யஸித்தால் க்ஷீரோதகம் (பாலும் நீரும்) போல் மன:ப்ராணன்கள் இரண்டும் ஏகமாய் அந்தரத்திலேயே நின்றிருக்கும். அந்தமன: ப்ராணன்களில் ஏதாகிலும் ஒன்று சலித்தால் இரண்டாவதும் அம்யாக்கமாகவே சலித்துக் கெடும். ஆகையால், இதை ஶ்ரவணம்செய்து அவ்விரண்டை

யும் துரிடத்தில் பொருந்தச்செய்து, ப்ரபஞ்ச த்ருஶ்யங்க
ளெல்லாவற்றையும் மறந்து, சலனமற்றிருக்கும் ஸமயத்தில்
நிர்விகல்ப ஸமாதியாய் ப்ரகாஶிக்கும்.

அதாவது:—இரண்டு கண்களின் கரியவிழிகளைக் கண்க
ளின் உட்புற மூலையில் கொண்டுவந்து நிறுத்தி மேல்நோக்கி
ப்ருமத்ய ஸ்தானத்தைப் பார்க்கவேண்டும். அப்படி பார்க்கும்
போது மேற்சொல்லிய ஸ்வலோகத்தில் கண்டுள்ள எல்லா மண்
டலங்களும் காணப்பட்டுக் கடைசியில் ஒன்றும் காணாமல்
மனம் ஆகாஶவடிவத்தில் லயித்துவிடுவதே நிர்விகல்பஸமாதி
யென்று சொல்லப்படும். மனிதர்களிற் பெரும்பான்மையோர்
முன்சொல்லிய மண்டலங்களைப் பார்த்துக்கொண்டே மோ
க்ஷம் போய்விடுகின்றார்கள். அம்மண்டலத்தைக்கடந்து ஒன்று
மில்லாமல் ஶூன்யமாயிருக்கும் ஆகாஶ வடிவத்தில் மனம்
லயமாய் விடுவதே ஜீவ ப்ரஹ்மைக்ய மென்றும் மோக்ஷ
மென்றும் சொல்லப்படும். இதை அப்யஸிக்கும்போது கண்க
ளின் விழிகள் மேல்முகமாகப் புரளுவதனால் விழிகளுக்குப்
பாதையுண்டாய் பிறகு எரிச்சலெடுத்து கண்களினின்று தாரை
தாரையாய் ஜலம் வடிந்துகொண்டிருக்கும். இப்படி எவ்வளவு
பாதைகள் உண்டானபோதிலும் இமைகொட்டாமல் ப்ருமத்ய
ஸ்தானத்தை மேல்நோக்கி இரண்டு ஜாமங்கள் (6-மணிநேரம்)
அப்யஸித்தால் மோக்ஷ வீட்டை அடைவார்கள். யோகாப்
யாஸம் ஶாம்பவிமுத்ரை இவ்விரண்டையும் அப்யஸிப்பது கஷ்டமான
மார்க்கங்கள் என்பதற்குத் தடையில்லை. ஆதலால், ப்ரஹ்ம
ஸூத்ரமாகிய "ஸோஹம்" மந்த்ரத்தை முன்கூறியவாறு ஸதா
ஸ்மரித்துக்கொண்டிருந்து; ராத்ரி 8-மணிமுதல் முன்படத்
தில் காட்டப்பட்டிருக்கும் ஸைக்குறிப்புள்ள ஆகாஶ வடிவத்
தில் மனதை நிறுத்தி அப்யஸித்துவந்தால் அவ்வப்யாஸ
முதிர்ச்சியினால் மோக்ஷத்தை அடையலாம். இவ்வப்யாஸம்
செய்யப்பட்டவர்கள் ஸத்யம் தவறாமல், பொய் சொல்லாமல்,
ஜீவஹிம்ஸை செய்யாமல், ப்ராணிகோடிகளை துஷ்டவார்த்தை

களினாலும், கெட்ட எண்ணங்களினாலும், துன்மார்க்க கார்யங்
களினாலும் துன்பப்படுத்தாமல், பரஸ்த்ரீகமனம் செய்யாமல்
இருக்கவேண்டும். இவ்வித பத்யங்களுடன் இருக்கப்பட்டவர்
களுக்கே மோக்ஷம் ஸித்திக்கும்.

ஸ்ரீராமாயணத்தின் அந்தரார்த்தம்.

பக்த ஜன சிரோன்மணிகளே!

ஆனந்தமயமே அயோத்யா நகரமென்று சொல்லப்படும்.
அந்நகரத்தை ஆள்பவர் பரப்ரஹ்மமென்னும் தஸரதர். அவ
ருக்கு இச்சாஶக்தி க்ரியாஶக்தி ஞானஶக்தியென்னும் மூன்று
பார்யைகள் உண்டு. அவர்களில் ஞானஶக்தி யென்னும்
கௌஸல்யாதேவியின் கர்ப்பத்தில் ஆத்மாவென்னும் ஸ்ரீராம
மூர்த்தி அவதரித்தனர். அவர், அவ்யக்தமென்னும் பால்ய
வஸ்தையினால் தன் நிஜஸ்வரூபத்தை மறந்து, அஞ்ஞானமய
மாகிய ஜீவாத்மாவே தானென்று ப்ரமித்து, தேஹேந்த்ரியாதி
ப்ரபஞ்சங்களினால் அபிமானிக்கப்பட்டு ஶ்ரவணமன்ன வஸிஷ்
டோபதேஶத்தினால் மறுபடியும் அறிவை அறிந்து, வைராக்ய
மென்னும் லக்ஷ்மணமூர்த்தியை தன்னுடன் அழைத்துக்கொ
ண்டு, மனனமென்னும் விஶ்வாமித்ரனுடன் புறப்பட்டு, பஞ்ச
மஹாபாதகமென்னும் பர்வதங்களைக்கடந்து, ஞானமென்
னும் தீக்ஷண்ய பாணத்தினால் ஆவரணவிக்ஷேப ஶக்தியென்
னும் தாடகையை வதைத்து, இச்சையென்னும் மாரீசனை
ஸமுத்ரத்தில் மூழ்கச்செய்து, துராசாரமென்னும் ஶிலையைக்
காலினால் மிதித்து, ஸதாசாரமென்னும் அகலிகையின் ஶாப
த்தை நீக்கி, ஏகாந்தமென்னும் மிதிலாபுரம் ப்ரவேஶித்து, ஶாந்
தமென்னும் ஜனகனைத் தர்ஶித்து, அஸூயையென்னும் ஶிவ
னுடையவில்லைமுறித்து, ஆனந்தமென்னும் ஸீதையை மணம்
புரிந்து, மதமென்னும் பரஶுராமனைப்பங்கப்படுத்தி, மோக்ஷ
மென்னும் அயோத்யாநகரம் சேர்ந்து, ஜீவத்வ த்யாகமென்

னும் பட்டாபிஷேகத்திற்கு அர்ஹனுயிருக்க, க்ரியாஶக்தியென்னும் கைகேயினால் சபலத்வமென்னும் விக்நமுண்டாகப்பெற்று ப்ரஹ்மமென்னும் தஶரதனைப்பிரிந்து, மோக்ஷமென்னும் அயோத்யா நகரத்தைவிட்டு, ஆனந்தமென்னும் ஸீதை, வைராக்யமென்னும் லக்ஷ்மணனுடன் புறப்பட்டு, சித்தமென்னும் ஸரயு நதியைக்கடந்து, புத்தியென்னும் குஹனைத் துணையாகக்கொண்டு, விக்ஷேபமென்னும் மஹா ஆரண்யத்திற் புகுந்து, தபஸ் என்னும் சித்ரகூடத்தில் நின்று, அஹங்காரமென்னும்விராதனை பலிகொடுத்து, மனமென்னும் காகாஸுரனை வதைத்து ஸங்கல்பமென்னும் கண்ணைக்குத்தி, நிர்விகல்பமென்னும் கண்ணைத்தந்து, வீர்யமென்னும் அகஸ்த்யமுனிவரை ஆஶ்ரயித்து, தைர்யமென்னும் அஸ்த்ரத்தைப்ரயோகித்து, காமமென்னும் ஸூர்ப்பநகையைப் பின்னப்படுத்தி, ஆகாம்ய கர்மங்களென்னும் மாரீசன் வஞ்சித்தபோது ராஜஸமென்னும் ராவணன் டம்பமென்னும் ஸந்யாஸிவேடம் பூண்டு, ஆனந்தமென்னும் ஸீதையை அபகரித்துக்கொண்டு போக, ஆனந்தமென்னும் ஸீதையைக் காணாமல் அதிக துயரப்பட்டு, வைராக்யமென்னும் லக்ஷ்மணனுடன், விக்ஷேபமென்னும் ஆரண்யத்தில் சென்று விவேகமென்னும் ஜடாயுவை ஸத்கதி யடையச்செய்து, சிந்தையென்னும் கபந்தனை வதைத்து, ஸந்தோஷமென்னும் ஶபரியின் பூஜையை அங்கீகரித்து, நிதித்யாஸனமென்னும் ஹநுமானைத் துணையாகக்கொண்டு, பயமென்னும் வாலியைக்கொன்று, நிர்ப்பயமென்னும் ஸுக்ரீவனை ஆதரித்து, நிதித்யாஸனமென்னும் ஹநுமானை யனுப்ப, அவர் மோஹமென்னும் மஹா ஸமுத்ரத்தைக்கடந்து, லோபமென்னும் லங்கையைத்தாண்டி, துர்வாஸனைகளென்னும் ராக்ஷஸர்களை ஜயித்து, ஆனந்தமென்னும் ஸீதையைக்கண்டு, ஸங்கல்பமென்னும் அஶோகவனத்தை நாஶஞ்செய்து, அஜ்ஞானமென்னும் ஜம்புமாலியை பஸ்மம் செய்து, ஸம்ஶயமென்னும் அக்ஷனை வக்ஷித்து, விபரீத

மென்னும் இந்த்ரஜித்தை திரஸ்கரித்து, ப்ரமையென்னும் பாஶத்தை அறுத்து, ராஜஸமென்னும் ராவணனை எதிர்த்து மௌனமென்னும் மஹா அக்நியை ஜ்வலிக்கச்செய்து, துக்கமென்னும் லங்கையை தக்தப்படுத்தி, மோஹமென்னும் மஹா ஸமுத்ரத்தைத் தாண்டி, ஆனந்தமென்னும் ஸீதையைக் கண்டு ஆத்மா என்னும் ஸ்ரீராமமூர்த்தியிடம் சொல்ல அப்போதே ஆத்மாராமன் ப்ரயாணப்பட்டு, மோஹமென்னும் ஸமுத்ரத்தைப் பங்கப்படுத்தி, நிஶ்சலத்வமென்னும் ஸேதுவைக்கட்டி, ஸத்வமென்னும் விபீஷணனைக் கைப்பிடித்து, விபரீதமென்னும் இந்த்ரஜித்தை யெதிர்த்து, ஸந்தேஹமென்னும் நாகபாஶத்தினால் கட்டுண்டு, ஸத்விசாரமென்னும் கருடனால் விடுபட்டு, தாமஸமென்னும் கும்பகர்ணனை ஸம்ஹரித்து, ப்ரமையென்னும் அஸ்த்ரத்தினால் வைராக்யமென்னும் லக்ஷ்மணன் மூர்ச்சையடைய, நிதித்யாஸனமென்னும் ஹநுமானை ப்ரோத்ஸாஹப்படுத்தி நிஷ்டையென்னும் ஸஞ்சீவி பர்வதத்தைக் கொணர்வித்து, வைராக்யமென்னும் லக்ஷ்மணனை மூர்ச்சைதெளிவித்து, விபரீதமென்னும் இந்த்ரஜித்தைக்கொன்று, ஸஞ்சிதமென்னும் மூலபலங்களையெல்லாம் ஸாதனமென்னும் மோஹனாஸ்த்ரத்தினால் நிர்மூலப்படுத்தி, துர்வாஸனையென்னும் அஸுரர்களையெல்லாம் நாஶப்படுத்தி, ஸத்வாஸனையென்னும் கபி ஸைன்யங்களை ஆதரித்து காம்பீர்யமென்னும் தநுவைக் கைப்பிடித்து ராஜஸமென்னும் ராவணனையெதிர்த்து, ஜ்ஞானமென்னும் திவ்ய பாணத்தை ப்ரயோகித்து, அஹங்காரமென்னும் அம்ருத கலஶத்தைப் பேதித்து தஶகண்டன் (காம க்ரோத லோப மோஹ மத மத்ஸர. ஈர்ஷை அஸூயை டம்ப தர்ப) என்னும் தஶ சிரங்களையுடைய ஶிரஸைக்கண்டித்து, (இதுவிஷயம் 39-ம் பக்கம் பார்க்க) ஆனந்தமென்னும் ஸீதையை அங்கீகரித்து, மோக்ஷமென்னும் அயோத்யாபுரியைச் சேர்ந்து, ஜீவத்வ நிவர்த்தியென்னும் பட்டாபிஷேகம் வஹித்து ப்ரஹ்மமென்

னும் தமாதரோ தானுப் கேவல ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரமென்னும் ராஜ்யாதிபதித்வத்தை அடைந்தனர். இதுவே ஸ்ரீராமாயணத்தின் பரமகோப்யமான அந்தரார்த்தம். இதுவிஷயம் பகவத்கீதை அத்யாயம் 4, ஸ்ரீ 8-ல் விரிவாய்க் காணலாம்.

தன் நிஜஸ்வரூபத்தைத் தெரிந்துகொள்ள ஶிஷ்யனுக்கு உபதேசித்தல்.

ருக்வேதத்தில் "ப்ரஜ்ஞாந"மே ப்ரஹ்மம்; யஜுர்வேதத்தில் "அஹம் ப்ரஹ்மாஸ்மி"யே ப்ரஹ்மம்; ஸாமவேதத்தில் "தத்வமஸி"யே ப்ரஹ்மம்; அதர்வணவேதத்தில் "அயமாத்மா"வே ப்ரஹ்மம், என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

ஶிஷ்யன்:—ப்ரஜ்ஞாநமென்றால் எது? ப்ரஹ்மமென்றால் எது? ஆத்மா எவ்விதமாய்ப் பரமாத்மாவாகும்? இவ்வம்ஶங்களை விவரமாய்த் தெரிவிக்கவேண்டும்.

ஆசார்யர்:—ப்ரஜ்ஞாநமென்றால் ஆத்மா; ப்ரஹ்மமென்றால் பரமாத்மா; ப்ரஜ்ஞான ஸ்வரூபமே ப்ரஹ்மமென்று தெரிவிப்பதே முதல்வாக்யத்தின் அந்தரார்த்தம்.

ஶப்த ஸ்பர்ஶ ரூப ரஸ கந்தங்களென்னும் விஷயங்களையெல்லாம் தெரிந்துகொள்ளும் இந்த்ரியங்களும், அந்த இந்த்ரியங்களைத் தெரிந்துகொள்ளும் அந்தக்கரணங்களும், அந்த அந்தக்கரணங்களைத் தெரிந்துகொள்ளும் சிதாபாஸனாகிய ஜீவன் மாயையால் மறைவுபட்டிருக்கின்றது; ஸாக்ஷிமாத்ரமாய்ப் ப்ரகாஶித்துக்கொண்டிருக்கும் பதார்த்தமே ப்ரஜ்ஞாநமென்றும், இவ்விதமாய் ஸமஸ்த பதார்த்தங்களினும் நிவஸித்து அவைகளையெல்லாம் தெரிந்துகொள்ளும் ஸர்வஸாக்ஷியே ப்ரஹ்மமென்றும் வேதங்கள் முறையிடுகின்றன. கூடஸ்த ப்ரத்யகாத்ம ஸச்சிதாநந்த நித்ய நிர்மல நிர்க்குண நிர்விகார நிரஞ்சனமென்னும் பஹுவித நாமங்களுக்கு

ஆதாரமாய் ஸாக்ஷிமாத்ரமாய்ப் ப்ரகாஶித்துக் கொண்டிருக்கும் ஜ்ஞானமே ஆத்மாவென்றும், பரப்ரஹ்ம பரிபூர்ண பராத்பர நிராகார நிஷ்களங்க நிஷ்க்ரிய நிஸ்சல அக்ஷய அகண்ட ஆதி அநாதி அப்ரமேயமென்னும் பஹுவித நாமங்களையுடையவனாய் ஸர்வஸாக்ஷியாய் ப்ரகாஶித்துக்கொண்டிருக்கும் ப்ரஹ்மமே பரமாத்மாவென்றும் உபநிஷத்துக்கள் முறையிடுகின்றன.

ஶிஷ்யன்:—ஓர் தேஹத்திற்கு ஸாக்ஷியாயிருக்கும் ஆத்மா எவ்விதமாய் ஸர்வ ஸாக்ஷியாகிய பரமாத்மாவாகும்?

ஆசார்யர்:—தீபம் தீவட்டி யென்னும் நாமங்கள் வெவ்வேறாயிருந்த போதிலும் அவைகளின் ப்ரகாஶம் மாத்ரம் பின்னமாகாமலிருப்பதுபோல் ஆத்மா பரமாத்மாவென்னும் நாமங்கள் பின்னமாயிருந்தபோதிலும் அதன் குணங்கள் மாத்ரம் ஒன்றாயிருக்கும். பெரிதாயிருப்பதனால் ஏரியென்றும், சிறிதாயிருப்பதனால் மடுவென்றும், நீரோட்டமாயிருப்பதனால் நதியென்றும், சிலதூரம்போவதனால் கால்வாயென்றும், மனிதர்கள் அநேகம்சேர்ந்திருந்தால் ஸங்கமென்றும், ஒருவனிருந்தால் மனுஷ்யனென்றும், வ்ருக்ஷங்கள் அதிகமாயிருந்தால் தோப்பென்றும், ஒன்றிருந்தால் மரமென்றும் நாமபேதங்கள் உண்டானபோதிலும்; ஜலங்களினுடையவும் மனிதர்களினுடையவும், வ்ருக்ஷங்களினுடையவும் குணம்மாத்ரம் வேறுபடாமல் ஒரேவிதமாயிருப்பதுபோல், ஸகல தேஹத்திற்கும் ஸாக்ஷியாயிருப்பதனால் பரமாத்மாவிற்கு, உபாதிபேதங்களினால் நாமங்கள் ஏற்பட்டனவேயன்றி தத்வ விசாரணை செய்தபோது ஆத்மாவிற்கும் பரமாத்மாவிற்கும் சிறிதேனுமில்லை.

1. ஶிஷ்யன்:—ஆத்மாவிற்கும் பரமாத்மாவிற்கும் பேதமில்லாவிடில் முக்தியடையவேண்டியது எது?
2. பந்தத்திற்கு அகப்படுவது எது?
3. ஆத்மாவிற்குக் கைவல்யம் கொடுக்கப்பட்டவர்கள் யார்?

4. ஆத்மாவிற்கு பிறப்பு இறப்பு உண்டா?
5. ஜீவன் முக்தியடைவதற்கு ப்ரயத்னப்படவேண்டியதென
6. ஸஜ்ஜன ஸாங்கத்யம் அவஶ்யம் செய்யவேண்டுமா?
7. ஶாஸ்த்ர விசாரணை ஏன் செய்யவேண்டும்?
8. குரு ஶுஶ்ரூஷையால் உண்டாகும் பலன் என்ன?
9. தெய்வபக்தி இருந்தே தீரவேண்டுமோ?

ஆசார்யர்:—1. முக்தியடைவது ஆத்மாவேயன்றி வேறல்ல.

2. அந்த ஆத்மாவின் ஸ்வரூபத்தை ஸரியாய் விசாரித்துப் பார்த்தபோது, அது ஶாந்த ஶூன்யமென்று மேலே மௌனகட்டத்தில் சொல்லப்படும். அப்போது ஸ்பஷ்டமாய் உனக்குத் தெரியவரும். நிழலுடன் யுத்தம்செய்ய ஆரம்பிப்பதுபோல, இந்த்ரிய விகாரங்களுக்குக் கட்டுப்பட்டு தாபிமானத்திற்குட்பட்டு சிறுபிள்ளைகள் விளையாட்டில் இவன் ராஜன் இவன் மந்த்ரியென்று தம்மில் ஏற்படுத்திக்கொண்டு வ்யவஹரிப்பதுபோல் ஆத்மாவில் மித்யா ஜீவத்வமொன்று ஆரோபித்து அநித்யமாகிய மாயாஸம்ஸாரத்தில் ப்ரமித்து அபாவத்தைக் கற்பிப்பதில் அதிக ஸாமர்த்யத்தை வஹிக்கச் செய்து அவித்யைக்குட்பட்டு ஜனனமரண ரூபமான ஸம்ஸார ஸாகரத்தில் மூழ்கி ஸதாகாலமும் துக்கத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் தான், ஸச்சிதானந்த ஸ்வரூபமான ஆத்மாவாயிருந்தும் மாயாந்தகாரத்தினால் மூடப்பட்டு தன்னைத்தான் மறந்து தானல்லாத தேஹாதி ப்ரபஞ்சமெல்லாம் தானாய்ப்பாவித்து புத்ர மித்ர களத்ர க்ருஹ தனதான்யாதிகளாகிய பதார்த்தங்கள் ஶாஶ்வதமென்றும் ஸந்ததியினால் ஸுகமுண்டென்றும் மனதில் த்ருடமாய் நம்பி க்ஷணபங்கமாகிய தேஹத்தில் அபிமானம்வைத்து ஸ்த்ரீ போகத்தில் ஸதாகாலமும் மூழ்கித் தன் ஸ்வரூபம் இப்படிப்பட்டதென்று தெரிந்துகொள்ளாமல் தேஹேந்த்ரியாதி ப்ரபஞ்ச பாவத்தை யடைவதே பந்தம்.

3. இந்த பந்தத்தில் அகப்பட்டவர்களுக்கு கோடிஜன்மங்களிலாயினும் ஶரீராபிமானம் விடமாட்டாது. தானல்லாத தேஹாதி ப்ரபஞ்சத்தைத் தானென்று நினைக்கப்பட்ட ப்ரமை கொஞ்சமேனும் நீங்காது. ஸ்தூல ஸூக்ஷ்ம காரணங்களென்னும் ஶரீர த்ரயங்களை விசாரித்து ஆத்மதத்வங்களைத்தெரிந்துகொள்ளாவிடில் ஜ்ஞானம் உண்டாகமாட்டாது. தன் தேஹம், தன் நேத்ரம், தன் காணங்கள், தன் மனம், தன் ப்ராணன், தன் ஜீவன் என்று ப்ரமிக்கப்பட்ட தான், தேஹாதி ப்ரபஞ்சத்திற்குப் பின்னமாய் (வேறாயிருந்து) ஸாக்ஷிமாத்ரனாய் பார்த்துக்கொண்டு ஜாக்ராவஸ்தையில் இந்த்ரியவ்யாபாரமும், ஸ்வப்னாவஸ்தையில் மனோவ்யாபாரமும், ஸுஷுப்த்யாவஸ்தையில் ஶூன்யத்தையும் பார்த்துக்கொண்டிருக்கும் விஷயங்களையெல்லாம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரிவிக்கப்பட்ட காரணாசார்யரே கைவல்யத்தை ப்ரஸாதிக்கப்பட்டவர்.

4. ஆத்மாவிற்கு பிறப்பு இறப்பில்லை. அது ஒருவரால் கொல்லப்படமாட்டாது; ஒருவரையும் கொல்லாது. ஏனென்றால், அது நாமரூபங்களில்லாதது. ஆதலால், தானும் ஒருவரைக்கொல்லாது. ஒருவரால் தானும் கொல்லப்படமாட்டாது. ஆத்மாவிற்கு பிறப்பு இறப்பு உண்டென்று மூடர்கள் என்னுவார்கள். (இது விஷயம் ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம் 2, ஶ்லோ - 23-24-25 - பார்க்க.)

5. ஸம்ஸாரத்தில் மூழ்கி ஜனனமரணமென்னும் ஸமுத்ரத்தின் அலைகளில் அகப்பட்டுக்கொண்டு நரகத்தில் வீழ்ந்து அனந்தரம் துக்கத்தை அனுபவிக்காமல், ஸதா ஆனந்தகரமாகிய ஶாஶ்வத பதவியை அடைந்து ஸுகிப்பதற்காக அவஶ்யமாய் ஜீவன், முக்தியை ஸம்பாதிக்கவேண்டும்.

6. துர்க்கந்தமாகிய மலத்தைத்தின்று ஸந்தோஷிக்கும் பன்றியைப்போல, விஷயஸுகங்களில் அகப்பட்டு ம்ருத்யுவிற்கு இரையாகாமல் தேஹாபிமான துக்கங்களையெல்லாம் ஸுகமென்று தோன்றச்செய்யும் இந்த்ரிய விகாரங்களும், பல

விதங்களாகிய துராலோசனைகளை உண்டாக்கும் துர்ச்சங்கத்தையும் பூர்த்தியாய் நிவர்த்திசெய்துகொண்டு, இந்த்ரிய வர்க்கங்களை நிக்ரஹித்து, வைராக்யத்தை யடைந்து, ஸர்வதா ஸமாதி நிஷ்டையிற்சொக்கி, அதில் உண்டாகும் அகண்டானந்தத்தை யநுபவித்துக்கொண்டு த்ருப்தியடைவதற்காக ஸத்ஸஹவாஸம் அவஶ்யமாய்ச் செய்யவேண்டும்.

7. * அநித்யமாகிய தேஹத்திற்கு ரக்ஷகனாயிருக்கும் நித்யமாகிய பரப்ரஹ்மத்தைத் தெரிவிப்பதற்கு ஸஹாயகாரியாயிருக்கும் ஹரிஸ்மரணை அல்லது ஶிவபக்திசெய்து அதனால் மறுஜன்மத்தில் அதிக பக்தியுண்டாய் ப்ரஹ்மோபதேசத்திற்குப் பாத்ரனாகச்செய்து ஆதரிப்பது தத் தர்மமே யாதலால் அதை ஸம்பாதிக்க அவஶ்யமாய்ப் பாடுபடவேண்டும். பாமரர்களிற் சிலர் அப்ரயோஜனர்களாகிய கர்மகுருவினுடைய ஆடம்பரங்களைப்பார்த்து மிகவும் பெரியவரென்று ப்ரமித்து அவரை ஆஶ்ரயித்து அவரால் உபதேசம்பெற்று தப்புமார்க்கமாகிய விபரீத விஷயங்களையெல்லாம் பரமார்த்தமென்று நினைத்து அவைகளை அநுஸந்தானஞ்செய்து தன்னிஷ்டம்போல் திரிந்துகொண்டு இதரர்கள் வேறோர் மார்க்கத்தை உபதேசித்து உத்க்ருஷ்டமானதென்று ஶ்லாக்யமாய்ச்சொல்ல ப்ரமித்து முதலில் போதித்த விஷயங்களை அதுவரையில்விட்டு இதை அநுஷ்டித்துக்கொண்டுவர, மற்றொருவர் மற்றொரு விஷயங்களைப்போதிக்க இரண்டாவதிலும் நிஶ்சயபுத்தியில்லாமல் கடைசியில் அதையும் போக்கடித்துக்கொண்டு ப்ரஷ்டனாய் அஜ்ஞானமென்னும் பாழ்ங்கிணற்றில்வீழ்ந்து பாழாகின்றார்கள். ஆதலால், ஸ்திரசித்தம், ஸம்தர்ஶனம், ஸந்தோஷம், ஶாந்தம், நிஶ்சலத்வம், அநுபவ ஜ்ஞானம், அவஸ்தாதீதம், மனோலயம், பந்தவிமோசனம் முதலாகிய ஸத்விஷயங்களையெல்லாம் ஸந்தோஷத்துடன் ஸ்திரமாய் நிறைந்துவருதற்காக ஶாஸ்த்ரவிசாரணை தவறாமல் செய்யவேண்டும்.

* இந்த 7. பங்க்தியை ஒவ்வொருவரும் நிச்சயமாய் கவனிக்கக்கடவர்.

8. மோஹாந்த கூபத்தில் வீழ்ந்து துக்கத்தை அநுபவித்துக்கொண்டு, யுக்தாயுக்த பரிஜ்ஞானமில்லாத பஶுப்ராணிகள் ஸம்போகம் நித்ரை ஆஹாராதி வ்யர்த்தமாகிய வ்யஸனத்தில் மூழ்கி மரணபயமென்னும் மஹா ஸர்ப்பங்களில் அகப்பட்டுத் தத்தளிக்காமல் ஜ்ஞானக்கண்களைத் திறப்பித்து அநேகஜன்மங்களுக்குக் காரணபூதமாயிருக்கும் ஸஞ்சித கர்மங்களை, (ஒரு தீப்பொறியானது பஞ்சுப்பொதிகளை பஸ்மீகரப்படுத்துவதுபோல்) பஸ்மம் செய்வித்து ஸச்சிதானந்த ஸ்வரூபத்தைத் தெரிவித்து, ஸதானந்தமுண்டாகச் செய்தவரே ஆசார்யராவர். ஆதலால், அவரிடத்தில் பக்தி ஶ்ரத்தையுடையவனாய் நிரந்தரம் ஶுஶ்ரூஷை செய்யவேண்டும்.

9. அந்யாயமாய் அதோகதி செய்விக்கும் ஶத்ருவாகிய மனோவிகாரங்களையெல்லாம் அடக்கி அபம்ருத்யு முதலாகிய ஆபத்திலிருந்து தப்பித்துப் பரிபூர்ண ஜ்ஞானமடைவதற்குமுன், ஒருவேளை காலகதியடைந்தால் மறுஜன்மத்தில் நல்லறிவுண்டாய் ஸர்வாபீஷ்டங்களும் அநுக்ரஹித்து கண்களை இமைகாப்பதுபோல காத்து இஷ்டதெய்வத்தின்மேல் பக்தி அதிகம் உண்டாகும். அதற்காகவே தெய்வபக்தி முக்யமாய் வேண்டும்.

ஆதலால், 'நேதிநேதி' யென்னும் மஹா வாக்யத்தினால் தேஹாதி ப்ரபஞ்சமெல்லாம் வேறுபடுத்தி, அவைகளுக்கெல்லாம் விலக்ஷணனாயிருக்கும் ஆத்மாவே பரமாத்மாவென்னும் நிஶ்சயமுடையவனாயிருந்து அதனால் உண்டாகும் ப்ரஹ்மானந்தத்தை அநுபவித்துக்கொண்டிருக்கவேண்டும்.

ஶிஷ்யன்:— ஆத்மாவே பரமாத்மாவென்று தெரிந்துகொண்ட மாத்ரத்தில் ஆனந்தம் எவ்விதமாய் உண்டாகும்?

ஆசார்யர்:—நீயே ஆனந்த ஸ்வரூபமாயிருக்க வேறோர் ஆனந்தத்தைத் தேடவேண்டிய அவஶ்யமில்லை.

சிஷ்யன்:—நான் எவ்விதமாய் ஆனந்தஸ்வரூபனானேனோ அப்பேர்ப்பட்ட ஆனந்த ஸ்வரூபத்திற்கு, இந்த துக்கங்கள் எவ்விதமாய் உண்டாயினவோ அதைத் தெரிவிக்கவேண்டும்.

ஆசார்யர்:—உனது யதார்த்த ஸ்வரூபத்தை நீ இன்னும் த்ருஷ்டமாய்க் காணாததனால், அஜ்ஞான வசத்தினால் உனக்கு ஆனந்தம் தோன்றாமலிருக்கின்றது.

சிஷ்யன்:—தேஹத்திற்கும், இந்த்ரியங்களுக்கும், அந்தக்கரணத்திற்கும், ப்ராணனுக்கும் மத்தியில் ப்ரகாசித்துக் கொண்டிருப்பதே ஆத்மாவென்று ஸ்திரமாய் நான் தெரிந்து கொண்டிருந்தபோதிலும் ஆனந்தம் மாத்ரம் உதிக்கவில்லையே!

ஆசார்யர்:—தேஹாதி ப்ரபஞ்சமெல்லாம் தானல்லவென்றும் அவைகளுக்கெல்லாம் விலக்ஷணமாயிருக்கும் ஆத்மாவே தானென்றும் த்ருஷ்டமாய்த் தெரிந்துகொண்டதுபோல் ஆத்ம ஸ்வரூபமாய் நின்றாலேயொழிய ஆனந்தம் உண்டாகமாட்டாது.

சிஷ்யன்:—ஆத்ம ஸ்வரூபம் எப்பேர்ப்பட்டதோ, அதை அடைவதற்கு ஸாதனங்கள் எவைகளோ அவற்றைத் தயை செய்து அநுக்ரஹிக்கவேண்டும்.

ஆசார்யர்:—தேஹாதி ப்ரபஞ்சங்களெல்லாம் தானல்லவென்று தெரிந்துகொண்டு நீக்கிவிட்டதுபோல் சரீரதுக்கங்களுக்கும், இந்த்ரிய ஸுகங்களுக்கும்; மனோ விகாரங்களுக்கும் எவ்வளவேனும் இடங்கொடாமல் அவைகளையெல்லாம் நிக்ரஹித்து, ஆத்மாவே தானென்று நிச்சயித்து விஷய வ்யாபாரங்களையெல்லாம் அடக்கி * மானாபிமானங்களைத் தூரப் படுத்தி மௌன முத்ரையைத் தரித்து, ஸங்கல்ப விகல்பங்களையெல்லாம் நசிக்கச் செய்து நிர்விகல்ப ஸமாதியில் நிச்சலத்வமடைந்து ஸுகமாயிருப்பதே ப்ரஹ்மானந்தமென்றும் அதுவே ஆத்ம ஸ்வரூபமென்றும் பெரியோர்கள் சொல்லுவார்கள்.

சிஷ்யன்:—பாஹ்ய (வெளி) த்ருஷ்டியை நிக்ரஹித்து அந்தர் (உள்) த்ருஷ்டியை அவலம்பித்து நிச்சலத்வமடைந்த மாத்ரத்தில் ப்ரஹ்மானந்தமனுபவிக்க எப்படி ஸாத்யமாகும்?

ஆசார்யர்:—ஜாக்ரத்தில் ஸுஷுப்தியை அடைந்து தன்மயமாயிருப்பதே ப்ரஹ்மானந்தமேயொழிய இதைவிட ஆனந்தம் வேறொன்றில்லை.

சிஷ்யன்:—த்ருச்ய ப்ரபஞ்சங்களெல்லாம் தூரப்படுத்தி ஸாக்ஷிமாத்ரமாய் ப்ரகாசித்துக்கொண்டு சித்ரப் பதுமையைப் போல் நிச்சலத்வம் அடைந்திருந்தபோதிலும் ஆனந்தம் மாத்ரம் உதிக்கவில்லையே?

ஆசார்யர்:—இந்த்ரியம் அந்தக்கரணம் முதலாகிய வ்ருத்திகளெல்லாம் அடங்கியிருக்கும் ஸுஷுப்த்யாவஸ்தை எவ் விதமாயிருந்ததோ சொல் பார்ப்போம்.

சிஷ்யன்:—ப்ரபஞ்ச வ்யாபாரம், மனோவிகாரங்கள் முதலானவைகளெல்லாம் இல்லாமலிருந்ததனால் அவ்விதமாய்த் தோன்றிற்று. ஸுஷுப்தியில் ஸுகதுக்கங்களுக்கெல்லாம் காரண பூதமாயிருக்கும் மனம் காணாமற்போவதால் இந்த்ரியங்கள் யாவும் தலைகாட்டாமல் மறைந்து ஆத்மா ஒன்றே ஸாக்ஷிமாத்ரமாய் ப்ரகாசிப்பதனால் ஆனந்தமாய்த் தோன்றிற்று.

ஆசார்யர்:—அந்த ஆனந்தமே இதுவரையிற் சொல்லப்பட்ட ஆத்மஸ்வரூபமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

சிஷ்யன்:—ஸுஷுப்தியில் தோன்றும் ஆனந்தத்தை ஜாக்ரத்தில் எவ்விதமாய் அடைவதற்கு ஸாத்யமாகும்?

ஆசார்யர்:—அந்தர் (உள்) பஹிர் (வெளி) பார்வைகளெல்லாம் துக்கமயமாயிருக்கும்; ஆத்மமாத்ரம் ஆனந்தமயமாயிருக்கும். இந்த விஷயங்களை அறியாமல் தேஹஸம்பந்தமாகிய உபாதிகளெல்லாம் ஆத்மாவிலேயே காணப்படுகின்றன.

ஶிஷ்யன்:—தேஹேந்த்ரியாதி து:கங்களினால் ஆத்மானந்தம் மறைவு படுகின்றதேன்?

ஆசார்யர்:—ஶரீரம் இருக்கும் வரையில் அதன் லௌகிக து:கங்கள் அநுபவிக்காமல் தீராது. ஆத்மாநுபவமுடையவர்களுக்கே ஶரீர ஸம்பந்தமான லௌகிக து:கங்களெல்லாம் ஸ்வப்னத்திற் காணப்பட்டதுபோல் தோன்றினாலும் மித்யையாயிருக்கும். அவ்விதமாய்த் தோன்றியும் தோன்றாமற்போவதும் அப்யாஸிகளுக்கேயன்றி ஆரூடனுக்கு அது எவ்வளவேனும் தோன்றாது. நிரந்தரம் அவன் கேவலானந்த மயமாகவேயிருப்பான்.

ஶிஷ்யன்:—அந்த ஆனந்தஸ்வரூபத்தை அடைந்த ஒருவனுக்கே மோக்ஷ ஸாம்ராஜ்யபதவி உண்டாகுமேயன்றி, மற்றவர்களுக்கு உண்டாகமாட்டாதுபோல் தோன்றுகின்றது.

ஆசார்யர்:—அகண்டகைவல்ய ஸாம்ராஜ்யத்தை அநுபவிப்பதற்கு ப்ரஹ்மவித், வரன், வரீயான், வரிஷ்டன் என அதிகாரிகள் நால்வருண்டு. அவர்களில் தான் இந்த்ரியப்பட்டவனென்றாலும் தான் இந்தலோகத்தில் இருக்கின்றேனென்றாலும் மனதால் விவர்ஜனமாலும் ஷட்ரஸங்களாகிய எவ்வித ருசிகளையும் அறியாமல் பொறிபுலன்களால் ஸமாதியிலாழ்ந்து ஸதா மூர்ச்சிட்டில் சலனமறநின்று தானுண்டதும், அப்யாஸனப்பட்டதுமாகிய இரண்டும் தெரியாமல் தன்மயமாய் ஸஞ்சரிக்கும்வரிஷ்டனே ஶ்ரேஷ்டமானவன். அவன் ஒருவனே ப்ரஹ்மானந்த ஸமுத்ரத்தில் மிதந்துகொண்டு தன்னைத்தான் மறந்து ஜீவன்முக்தி பதவியை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் அடைவான். ஆகலால், பரமோத்க்ருஷ்டமான வரிஷ்டன்பதவியை நீயடைந்து ஸதா ப்ரஹ்மானந்தத்தை அநுபவிக்கக்கடவாய்.

ஶிஷ்யன்:—ப்ராணனோடிருந்து மோக்ஷம் எப்படி அடையலாம்?

ஆசார்யர்:—மோக்ஷமென்றால் என்னவென்று தெரிந்துகொண்டாய்? ப்ராணனை விட்டு விடுவது மோக்ஷமல்ல! மோக்ஷமென்றால், பந்தத்திலிருந்து விடுபடுதல்; பந்தமே நரகம்; பந்த விமோசனமே மோக்ஷம். து:கமே நரகம், து:க நிவர்த்தியே மோக்ஷம், இதைவிட மோக்ஷம் வேறொன்றில்லை. ஆகலால், து:கமயமாகிய வ்ருத்தியைவிட்டு நிஶ்சல சித்தத்துடன் ஆனந்தத்தையடையக்கடவாய். (இது விஷயம் ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம் 5, ஶ்லோ. 24, பார்க்க.)

ஶிஷ்யன்:—நான் ஸதா ஆனந்தத்திற்சொக்கி ஜீவன்முக்திபதவியை அடைவதற்கு எவ்வளவுகாலம் செல்லுமோ அறியேன்.

ஆசார்யர்:—ஜீவன்முக்தி பதவியை அடைவதற்கு எவ்வளவோகாலம் பிடிக்காது. இன்றுமுதல் தேஹாபிமானத்தைவிட்டு, நிஶ்சல சித்தத்துடன் பரப்ரஹ்மத்தில் நிரந்தரம் தைலதாரையைப்போல் த்யானித்துக்கொண்டு பேதவாதங்களுக்கு அகப்பட்டு ப்ரமிக்காமல் சித்தவ்ருத்திகளெல்லாம் மனதிலும், மனதை அஹங்காரத்திலும், அஹங்காரத்தை மாயையிலும், மாயையை ஆத்மாநுபவத்திலும் ஐக்யம்செய்து ஸ்வாநுபவத்தினால் ஆத்மஸ்வரூபியாய்ப்ரகாஶித்துக்கொண்டு நிரந்தரம் ஜடாரக்நியைத் தணிப்பதற்காக அகப்பட்டபதார்த்தங்களை ருசிபக்வமறியாமல் புஜித்து மானாபிமானங்கள், ஜயாபஜயங்கள், லாபநஷ்டங்கள், லௌகிக து:கங்கள் முதலானவைகளையெல்லாம் ஸமத்ருஷ்டியாய்ப் பாவிக்கவேண்டும். பரப்ரஹ்மத்தைவிட ப்ரத்யகாத்மா வேறென்று நினைக்கப்பட்ட புருஷனுடைய இந்த்ரியங்களும் மனஸும் தம்வஶப்படாமல் விஷயபோகங்களுக்கு உட்பட்டு பலவித ஸங்கடங்களை யுண்டாக்கிக்கொண்டிருக்கும். ஆகலால், ப்ரஹ்மமே நானென்னும் நிஶ்சய ஜ்ஞானத்தினால் தஶேந்த்ரியங்களையும் அவைகளுக்குக் காரணமாயிருக்கும் மனதையும் வஶப்படுத்தி அரிஷட்வர்க்கங்களை அதாவது காமக்ரோதாதிகளை ஜயித்து நிர்மல ப்ரஹ்ம

மாகார வ்ருத்தியினால் கேவல பரிபூர்ண தத்வ ஸ்வரூபத்தைத் தர்ஶித்து ஆனந்தமுடையவனும் ஸர்வப்ரபஞ்சத்தையும் உன்னிடத்திலேயே லயிக்கச்செய்து சித்தவிஶ்ராந்தியடைந்து கர்ம பக்தி ஜ்ஞானயுக்தமாகிய விதிகளின் எண்ணங்களையெல்லாம் தலையெடுக்கவிடாமற்செய்து ஸச்சிதானந்த மயமாகிய பரப்ரஹ்மத்திற் கலந்து கர்மவஶத்தினால் ஸம்ப்ராப்தமான துக்கங்களுக்குப்பயப்படாமல் அப்ராப்தமான ஸுகங்களுக்குவிசாரப்படாமல் ராகத்வேஷ பய க்ரோதங்கள் முதலாகிய துக்கங்களையெல்லாம் நிவர்த்திசெய்து பக்திபூர்வகமாய் ஆஶ்ரயிக்கப்பட்டவர்களுக்குத் தத்வோபதேஶம்செய்து ஸங்கல்பவிகல்பங்களை எவ்வளவேனும் ஹ்ருதயத்தில் நுழையவிடாமல் ஸமாதியிற்சொக்கி ஆனந்தத்தை அடையக்கடவாய்.

ஓ ஸத்குருநாதா! அந்த ஸமாதிநிலை எப்படிப்பட்டது? அதை அறிவிக்கக் கடவீராக.

ஶ்ரு || "ஸமாதிநிர்தூதமலஸ்ய சேதஸோ நிவேஶிதஸ்யாத்மநி யத்
ஸுகம்பவேத் ந ஶக்யதே வர்ணயிதுங்கிரா ததா ஸ்வயம்
ததந்த:கரணேந க்ருஹ்யதே."

மலினவாஸனை, காமக்ரோதாதிகள் முதலானவைகளை ஸமாதியில் போக்கடித்து மனதை பரப்ரஹ்மத்தில் ஐக்யம் செய்தபோது எப்படிப்பட்ட ஸுகம் உண்டாகுமோ அந்த ஸுகத்தை வாக்கினால் வர்ணிப்பதற்கு ஸாத்யமாகாது; நிர்மலமாகிய தனது புத்தியினாலேயே க்ரஹிக்கவேண்டும்.

ஶ்ரு || "நிர்விகாரதயா வ்ருத்யா ப்ரஹ்மாகாரதயா புந:
வ்ருத்தி விஸ்மரணம் ஸம்யக் ஸமாதிரபிதீயதே."

என்னும் உபநிஷத் வாக்யரீதியாய் நானே ப்ரஹ்மமென்னும் த்யானத்தை மறந்து வ்ருத்தி ஶூன்யமாய் ஸதாகேவல நிர்குண நிர்விகார சின்மாத்ரனாயிருப்பதே ஸஹஜ நிர்வாண ஸமாதி எனப்படும். இந்த ஸஹஜ நிர்வாண ஸமாதியிலிருந்து உன் ஸ்வாநுபவத்தைச் சொல்லக்கடவாய்.

ஶிஷ்யன் தன் ஸ்வாநுபவத்தை ஆசார்யரிடம் சொல்லுதல்.

ஓ யோகீஶ்வரரே!

எதிரிற் காணப்படும் நாமரூப ஜகத், ஸ்ருஷ்டிக்குப் பூர்வத்தில் எங்குபோயிருந்தது? இப்பொழுது எப்படி உண்டாயிற்று? மறுபடியும் ப்ரளயத்தில் எங்கு லயித்தது? இப்பொழுது ப்ராந்தியினால் இருப்பதாய்த் தோன்றுகின்றது. இந்த ஜாக்ராவஸ்தையில் ஸர்வமும் காணப்படுகின்றதேயொழிய நித்ராவஸ்தையில் பூர்த்தியாய்க் காணப்படுவதில்லை. ஆஹா! இது எவ்வளவு ஆஶ்சர்யகாமாயிருக்கின்றது! இதைவிட வேறே ஆஶ்சர்யமொன்றுண்டோ? இப்படி காணப்படுவது மாயா ப்ராந்தியினாலேயே. மனமே ப்ராந்தி ரூபமாயிருக்கின்றது! ப்ராந்தியில்லாவிடில் ஜகத் இல்லை. எல்லாம் பரிபூர்ண ப்ரஹ்மமே. ஆதலால், எது அந்யம், எது விலக்ஷணம், எது விதி, எது நிஷேதம், எது ஶுத்தம், எது அஶுத்தம். இவையெல்லாம் அஸத்யமே.

பரிபூர்ண ப்ரஹ்மானந்த நிஷ்டையில் நானேயிருக்கின்றேன்; என்னைவிட அந்யமாய் எதையும் கேட்பதில்லை; எதையும் பார்ப்பதில்லை, நான் எதையும் அறிவதில்லை; பரிபூர்ண பரப்ரஹ்மத்தை என்னிடத்திலேயே நான் அநுபவித்துக் கொண்டிருக்கின்றேன். ஸமுத்ரத்தில் காற்று ஸஞ்சரிப்பதனால் அலைகள் அநேகவிதம் பிறந்து பிறந்து நஶிப்பதுபோல் ஜ்ஞானாநந்த ஸ்வரூபியாகிய என்னிடத்தில் மாயையென்னும் காற்று ஸஞ்சரிப்பதனால் ப்ரபஞ்சமென்னும் அலைகள் அநேகவிதம் பிறந்து பிறந்து நஶிக்கின்றன. ஆத்மஸ்வரூபியாகிய நான் என்றைக்கும் நாஶமில்லாத அத்விதீய பரிபூர்ண பரப்ரஹ்மமாயிருக்கின்றேன். (அபேதவித்வாந் புண்ய பாபே விதூய நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி) என்பதுபோல் என்னைவிட

அற்பமானது ஒன்றுமில்லை. எனக்கு விதி நிஷேதங்களில்லை. எனக்கு புண்யமேது, பாபமேது. மனோவாக் காயமென்னும் த்ரிகரணஸாக்ஷியாய் நான் புண்ய பாபங்களைச் செய்வதில்லை. நான் அஸங்கன், நான் அடையாளமில்லாதவன், நான் அஸரீரி, நான் அசலன். ஸம்ஸார பந்தத்தையும் அஜ்ஞான பாசங்களையும் ஹரித்ததனால் நான் ஹரி, நான் ப்ரஸாந்தன், நான் அந்தமில்லாதவன், நான் பரிபூர்ண பரப்ரஹ்மம், நான் அகர்த்தன், நான் அபோக்தன். என்றால், நான் எந்தகார்யங்களையும் செய்வதில்லை, எதையும் அநுபவிப்பதில்லை. நான் பிறப்பு இறப்பில்லாதவன், நான் கர்மமில்லாதவன், நான் நித்ய மங்கள ஸ்வரூபன்.

ஓ ஸத்குருநாதா! மாயாந்தகாரத்தினால் மூடப்பட்ட என்னை உமது கடாக்ஷத்தினால் பாபமென்னும் மாலையினின்று நீக்கிப் பரமபதியுடன் சேர்ப்பித்த என் ப்ரபுவே! இப்போதல்லவோ என்னை நான் அறிந்தேன்; இப்பொழுது உனக்கும் எனக்கும் யாதொரு பேதமுமில்லை. நாமிருவரும் ஏக பரப்ரஹ்ம ஸ்வரூபமே.

ஆசார்யர்:—உன்னை நீ அறிந்த ஓ குமாரா! இப்பொழுது ஒன்று சொல்லுகின்றேன் கேள்.

ஸ்ரு. "ப்ரமாதோ ப்ரஹ்ம நிஷ்டாயாம் கர்த்தவ்யம் கதாசந ப்ரமாதோ ம்ருத்யுரித்யாஹ வித்யாயாம் ப்ரஹ்மவேதிந: யதா ப்ரக்ருஷ்டம் ஸைவாலம் க்ஷணமாத்ரம் ந திஷ்டதி ஆவ்ருணோதி ததா மாயா ப்ராஜ்ஞம்வாபி பராங்முகம்." [அத்யாத்மோபநிஷத்.]

என்னும் உபநிஷத் வாக்யரீதியாய் ஸாதாரணமாய் எல்லோருக்கும் அவஸானகாலத்தில் ம்ருத்யுண்டாகமாட்டாது. ப்ரஹ்ம நிஷ்டையை மறப்பதே ம்ருத்யு. ஒரு தடாகத்தினுள்ள பாசியை எவ்வளவுதூரம் போக்கியபோதிலும் மறுபடியும் உடனே அந்தப் பாசியானது யதா ப்ரகாரமாய் அந்த ஜலத்தை மூடிக்கொள்வதுபோல் அப்பேர்ப்பட்ட ப்ரஹ்ம

வேத்தனாயிருந்தபோதிலும் ப்ரஹ்ம நிஷ்டாப்யாஸத்தில் ஸ்ரத்தையில்லாமல் பராமரிக்கையாயிருந்தால் அவனையும் ஆவரண விக்ஷேப ஸ்வரூபமாயிருக்கும் மாயாஸக்தி க்ஷணமே ஆவரித்து (மூடி)க்கொண்டு அவனுக்கு ஜனனமரணங்களை உண்டாகச்செய்யும். ஆதலால், நீ ஒருபோதும் ப்ரஹ்ம நிஷ்டாப்யாஸத்தை மறக்கவேண்டாம். ஸர்வ வ்யாபகமான ஸச்சிதானந்த பரப்ரஹ்மத்தை ப்ரஹ்மவேத்தாக்கள் தமது ஆத்மஸ்வரூபமாய் அறிகின்றார்கள். அந்த பரப்ரஹ்மம் ஆகாயத்தைப்போல் எங்கும் வ்யாபித்திருக்கின்றது. அந்த பரப்ரஹ்மம் ஸகல ஜீவர்களின் ஹ்ருதயத்தில் ஸாக்ஷிமாத்ரனாயிருந்துகொண்டு நேத்ரம் ஸகல ரூபங்களையும் அறிவதுபோல், தேஹேந்த்ரியாதி ப்ரபஞ்சம் ஸர்வம் அறிந்துகொண்டிருக்கும். அஹங்கார மமகார ஸூன்யர்களான ப்ரஹ்ம வேத்தாக்கள் அப்படிப்பட்ட பரப்ரஹ்மத்தைத் தமது ஆத்ம ஸ்வரூபமாய் அறிந்து ஸதா ஆத்மாநுஸந்தானம் செய்துகொண்டிருப்பதுபோல் நீயும் செய்யக்கடவாய்.

மௌனமென்றால் எது? ஸமாதியென்றால் எது.

ஸ்ரு || "ஸந்த்யக்த வாஸநாந் மௌநாத்ருதே
நாஸ்த்யுத்தமம் பதம்" [முக்திகோபநிஷத்.]

ப்ரஹ்ம ஜ்ஞானிக்கு ஸர்வ வாஸனைகளும் ஸூன்யமாய் மௌனத்தைவிட ஸ்ரேஷ்டமானது யாதொன்றுமில்லை. மௌனமென்றால் ப்ரபஞ்சதர்ம ஸம்பந்தங்களை விட்டு ஸகல ஸங்கல்பங்களும் நசித்து ப்ரஹ்ம ஸ்வரூபனாயிருக்கப்பட்டவனுக்கு ஆனந்தஸமாதி லபிக்கும். இந்த மௌனமே த்யானமென்று சொல்லப்படும்.

ஸ்ரு || "பால்யேந திஷ்டாஸேத் பால்யஞ்ச நிர்வித்ய பாண்டித்யேந
திஷ்டாஸேத் பால்யஞ்ச பாண்டித்யஞ்ச நிர்வித்ய மௌநோ
திஷ்டாஸேத் பால்யம் பாண்டித்யம் மௌநஞ்ச நிர்வித்ய
அதப்ராஹ்மண:" [ப்ருஹதாரண்யோபநிஷத்.]

பால்யமென்றால் ஶ்ரவணம், பாண்டித்யமென்றால் மனனம்; மௌனமென்றால் நிதித்யாஸனங்கள். இம்மூன்றையும்விட்டு தன்னைத்தான்மறந்து ப்ரஹ்மஸ்வரூபியாயிருப்பதே மௌனம்.

ஶ்ரு || "கடாகாஶ மஹாகாஶ இவாத்மானம் பராத்மனி விலாப்யாகண்ட பாவேந தூஷ்ணீம்பவ ஸதாமுநே" "ஸ்வாத்மனி ஸதாநந்தே தேஹாரூட மஹந்தியம் நிவேஶ்ய லிங்கமுத்ஸ்ருஜ்ய கேவலோபவ ஸர்வதா." [அத்யாத்மோபநிஷத்.]

கடாகாஶம் மஹாகாஶம் ஏகமாவதுபோல் ஆத்மாவே பரப்ரஹ்மமென்றும் பரப்ரஹ்மமே ஆத்மாவென்றும் ஐக்யபாவத்தை அடைந்து ஆத்ம ஸ்வரூபியாகிய நீயே ப்ரஹ்மமென்று நிஶ்சயித்து ஸகல எண்ணங்களையும் மறந்து மௌனவடிவமாய்ச் சும்மாவிருப்பதே மௌனம்.

ஶ்ரு || "வாஸநாஸ்த்வம் பரித்யஜ்ய த்ருஶ்யஶப்தாநு ஸமஸ்த்வேஹா பவ நிர்மாத்ரவாஸநா: தாமப்யத: பரித்யஜ்ய மனோபுத்தி ஸமாதாம் ஶேஷஸ்த்வ ஸமாதானோ மயித்வம் டவமாருதே அஶப்த ஸ்பர்ஶ மீத்யாதி." [முக்திகோபநிஷத்.]

வாஸனாத்ரயங்களும் மோக்ஷத்தின் இச்சையும் விட்டுவிட்டு ஜகத்ஸர்வம் அநித்யமென்றும் ப்ரஹ்மமே ஸத்யமென்றும், ப்ரஹ்மத்தை த்யானிக்கவேண்டும். பிறகு அந்த த்யானத்தையும் விட்டுவிட்டு மனோ புத்திகள் இரண்டையும் சஞ்சலமில்லாமல் (அலையாமல்) ஸ்திரமாய் நிறுத்தி,

ஶ்ரு || "ஹ்ருதயம் நிர்மலம்க்ருத்வா சிந்தயித்வா ப்யநாமயம் அஹமேவ பரம் ஸர்வமிதி பஶ்யேத்பரம் ஸுகம்" [பயிங்கலோப.]

ஹ்ருதயத்திலிருக்கும் காமக்ரோதாதிகளாகிய அழுக்குகளையெல்லாம் நீக்கி மனஸை நிர்மலமாகச் செய்துகொண்டு அந்த பரப்ரஹ்மமே நானென்றும் நானே ஸர்வமென்றும் மௌனமாய்ச் சும்மாவிருப்பதே பரமஸுகம்.

ஶ்ரு || "அஹமேவ பரம்ப்ரஹ்ம ப்ரஹ்மாஹமிதி ஸம்ஸ்திதிஸ்ஸமாதி ஸ்ஸநிர்விகல்பரூப ஸ்ஸர்வவ்ருத்தி விவர்ஜித:." [த்ரிஶிகிப்ராஹ்மணோபநிஷத்.]

ஆத்மஸ்வரூபியாகிய நானே ப்ரஹ்மமென்று ஐக்யபாவத்தில் த்ருடமாய்நின்று ஸகல மனோவ்ருத்திகளும் ஶூன்யமாய் எந்த எண்ணங்களுமில்லாமல் ஸகல த்ருஶ்யங்களும் மறந்து தானே தானாய் ஸாக்ஷிமாத்ரனாயிருப்பதே ஸமாதி.

ஶாஸ்த்ரவிசாரணை ஜபதபங்கள் இவைகளினால் உண்டாகும் பலன்.

ஶ்ரு || "விஹாய ஶாஸ்த்ரஜாலானி யத்ஸத்யம் ததுபாஸ்யதாம் அக்நிகர்ம ஶௌசஞ்ச ஜபோயஜ்ஞ ஸ்நானம் நைவச தீர்த்தயாத்ராபி கமாம்யாவத் தத்வம் ந விந்ததி." [பைங்கலோபநிஷத்.]

ஸகல ஶாஸ்த்ரங்களையும் வாசிக்கவேண்டுமென்னும் ப்ராந்தியை விட்டுவிட்டு ஆத்மாவே ஸத்யமாகிய பரப்ரஹ்மமென்று அறிந்து ஆத்மாநுஸந்தானம் செய்துகொண்டிருக்கவேண்டும். ஸ்நான ஸந்த்யாவந்தன ஜப தப ஹோம நியம யாக தீர்த்தயாத்ரை முதலாகிய ஸத்கர்மங்களைச் செய்வதனால் தத்வஜ்ஞானம் உண்டாக மாட்டாது; ஆத்மாநுபவத்தை அடையமாட்டான்.

ஶ்ரு || "அதீத்ய சதுரோ வேதாந் ஸர்வஶாஸ்த்ராண்யனேகஶ: ப்ரஹ்மதத்வம் நஜாநாதி தர்வீ பாகரஸம் யதா." [முக்திகோபநிஷத்.]

"சட்டசட்டி சட்டுவம் கறிச்சுவை யறியுமோ."

மதுரமாகிய பதார்த்தங்களைச் சமைத்து அதில் அகப்பையைப்போட்டு வைத்தால், அவ்வகப்பை அந்தப் பதார்த்தங்களின் ருசியை அறியாததுபோல், ஸகல ஶாஸ்த்ரங்களையும் வாசித்து பண்டிதனென்று பெயரெடுத்தபோதிலும், குருகடாக்ஷத்தினால் வேதாந்த ஶாஸ்த்ரங்களைக்கேட்டு ஶ்ரவண மனன நிதித்யாஸனமுடையவனாய் தத்வஜ்ஞான ஸம்பன்னனாயிருந்தபோதிலும் ஆத்மாநுபவம் அடையாவிட்டால் அவன் வ்யர்த்தனே.

ஶ்ரு || "ஸத்யஜ்ஞ ஹ்ருத்த கோஹரஸ்தம் தேவமர்ஹம் ப்ராபாத்தி யே தே ரத்னமபிவாஞ்சந்தி த்யக்த ஹஸ்தஸ்த கௌஸ்துபா." [மஹோபநிஷத்.]

"கட்டைக்கல்லும் பேசுமோ காதலுள்ளிருக்கையில்"

என்றபடி ஹ்ருதயகமலத்திலிருக்கும் ஆத்மதேவதையைத் தெரிந்துகொள்ளாமல், வேறேயிடத்தில் தெய்வமிருக்கின்றதென்று எண்ணப்பட்டவர்கள், ஹஸ்தத்திலிருக்கும் தேவலோகத்திலுள்ள தேவரத்னமாகிய கௌஸ்துபமணியை விட்டுவிட்டு பூலோகத்திலுள்ள ஸாமான்யமாகிய ரத்னத்தைத் தேடப்பட்டவனுக்குச் ஸமானமாகின்றார்கள்.

ஶ்ரு || "பஹுஶாஸ்த்ரகதாகந்தா ரோமந்தேந வ்ருதைவ கிம் அந்வேஷ்டவ்யம் ப்ரயத்நேந மாருதே ஜ்யோதிராந்தரம்." [முக்திகோபநிஷத்.]

ஸகல ஶாஸ்த்ரங்களையும் வாசிப்பதனால் ப்ரயோஜனமில்லை; முக்தி அடையமாட்டார்கள். இந்த தேஹத்தில் வஸித்துக்கொண்டிருக்கும் பரப்ரஹ்மமாகிய ஆத்மாவை அந்தரங்க த்ருஷ்டியினால் தர்ஶித்தால்தான் முக்தி அடையலாம்.

ஶ்ரு || "ஸ்வயமாத்மா ப்ரவசநேநாபி லப்யதே பஹுஶ்ருதேந புத்திஜ்ஞானஶ்ருதேந நமேதயா நவேதைர் நயஜ்ஞைர் நதபோபிருக்ரைர் நஸாங்க்யைர் நயோகைர் நாஶ்ரமைர் நாந்யைராத்மாநமுபலபந்தே." [ஸுபாலோபநிஷத்.]

ஆத்மஸ்வரூபம், ஸ்ரேஷ்டமாகிய ஶ்ரவணங்களினாலும் புத்திசாதுர்யங்களினாலும் யாகம்செய்வதனாலும், தேவதா த்யானங்களினாலும், தவம்செய்வதனாலும், ஸாங்க்ய ஹடாதி யோகங்களினாலும், வர்ணாஶ்ரமதர்மங்களைத் தப்பாமல் அநுஷ்டிப்பதனாலும் உண்டாகமாட்டா.

ஶ்ரு || "அம்ருதேந த்ருப்தஸ்ய பயஸா கிம் ப்ரயோஜனம் ஏவம் ஸ்வாத்மாநம் ஜ்ஞாத்வா வேதை: ப்ரயோஜனம் கிம் பவதி." [பைங்கலோபநிஷத்.]

அம்ருதபானம் செய்தவனுக்கு க்ஷீரபானம் செய்வதனால் ப்ரயோஜனம் இல்லாமலிருப்பதுபோல், வேதாந்த விசாரணையினாலும் குருவினாலும் ஆத்மஸ்வரூபம் அறிந்தவனுக்கு வேதங்களினால் ப்ரயோஜனமில்லை. இந்த வேதங்கள் எப்படியிருக்கின்றனவென்றால்,

ஶ்ரு || "அப்தவர்ஷ ஸஹஸ்ராயுஶ் ஶாஸ்த்ராந்தம் நாதிகச்சதி விஜ்ஞேயோக்ஷர தந்மாத்ரோ ஜீவிதம்சாபி சஞ்சலம் விஹாய ஶாஸ்த்ர ஜாலாநி யத்ஸத்யம் தது பாஸ்யதாம்." [பைங்கலோபநிஷத்.]

உலகத்தில் ஸமுத்ரம்போல் அனேக ஶாஸ்த்ரங்கள் அபாரமாயிருக்கின்றன. ஒவ்வொரு மனுஷ்யனும் ஆயிரவருஷங்கள் ஜீவித்திருந்து, ஶாஸ்த்ரங்களை வாசித்துக்கொண்டிருந்தபோதிலும் ஶாஸ்த்ரங்கள் ஸம்பூர்ணமாகமாட்டா. ஆதலால், ஶாஸ்த்ரவிசாரணையைவிட்டு நமது ஜீவிதகாலம் மிகவும் சலனமாயும் தாமரையிலையின் மீதுள்ள ஜலபிந்துவைப்போல் இருக்கின்றதென்று எண்ணி அதிதீவரப்பட்டு இந்நூலில் உபதேசித்திருக்கும் ராஜயோகத்தின் ரஹஸ்யத்தைத் தெரிந்துகொண்டு ஸதாகாலமும் த்யானத்திலேயே இருக்கவேண்டும். அப்படிக்கில்லாமல்,

ஶ்ரு || "நாநாஶாஸ்த்ர பரேலோகே நாநாதேவஞ்ச பூஜனம் ஆத்மஜ்ஞானம்விநா பார்த்த ஸர்வகர்ம நிரர்த்தகம்" "ஆசாரக்ரியதே கோடி தானஞ்ச இரிதாஞ்சகம் ஆத்மதத்வம்விநாஸ்தி முக்திர்நாஸ்தி குருர்விநா கோடியஜ்ஞம் க்ருதம் வா கோடிகோஹய தானம் கஜானம் ஸஹஸ்ரஞ்ச முக்தி ஜ்ஞானம்விநா நச." [கர்ப்பகீதை.]

ஸகலஶாஸ்த்ரங்களையும்வாசித்து பண்டிதனென்று பெயரெடுத்தபோதிலும், ப்ரஹ்மா விஷ்ணு மஹேஶ்வராதி ஸகல தேவதைகளையும் பூஜித்தபோதிலும் ஆத்மஜ்ஞானமில்லாவிடில் மேற்சொல்லியவைகளெல்லாம் நிஷ்ப்ரயோஜனமே. வர்ணாஶ்ரம தர்மங்களைத் தப்பாமல் அநுஷ்டித்தபோதிலும், மஹாமேரு பர்வதமவ்வளவு தங்கம் கோடிமுறைகளில் தானம் கொடுத்தபோதிலும் ஆத்மஜ்ஞானம் இல்லாவிட்டால் நிஷ்ப்ரயோஜனமே. கோடியஜ்ஞங்கள் செய்தபோதிலும், கோக்கள் குதிரைகள் யானைகள் கோடிகோடியாய் தானம்கொடுத்தபோதி

னும் முக்தி உண்டாகமாட்டாது. குருகடாக்ஷமில்லாமல் ஆத்மஜ்ஞானம் உண்டாகமாட்டாது; ஆத்மஜ்ஞானமில்லாமல் முக்தி லபிக்காது: ஆகலால்,

ஸ்ரு || "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய நிர்மமோ நிரஹங்காரோ பூத்வா ப்ரஹ்மேஶம் ஶரணமுபகம்ய தத்வமஸி ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம நேஹநாநாஸ்தி நிஞ்சநேத்யாதி மஹாவாக்யார்த்தாநுபவ ஜ்ஞாநாத்ப்ரஹ்மைவாஹமஸ்மீதி நிஶ்சித்ய நிர்விகல்ப ஸமாதிநா ஸ்வதந்த்ரோ யஶ்சரதி ஸ ஸந்யாஸீ ஸமுக்த: ஸ பூஜ்ய: ஸ யோகீ ஸ பரமஹம்ஸ ஸ்ஸோவதூதஸ் ஸ ப்ராஹ்மண: இதி." [நிராலம்போபநிஷத்.]

அநித்யமான ஸம்ஸாரஸுக விஷயங்களாகிய புத்ரமித்ர களத்ர க்ஷேத்ராதி ஸகலத்திற்கும் நானே யஜமான் என்னும் அஹங்காரத்தையும், இதுஎனது இதுஎனது என்னும் மமகாரத்தையும், ஸகலமனோவ்யாபாரங்களையும்விட்டுப்ராஹ்மத்தை த்யானித்து, மஹா வாக்யார்த்தங்களை அறிந்தபிறகு தத்வ விவேகத்தினால் ப்ரஹ்மமேநான் நானேப்ரஹ்மமென்று நிஶ்சயித்து ஸகலமும் மறந்து, நிர்விகல்பஸமாதி நிஷ்டையென்னும் ஆத்மஸாக்ஷாத்காரத்தை அடைந்தவனே ஸந்யாஸி, அவனே முக்தன், அவனே பூஜ்யன், அவனே ராஜயோகி, அவனே பரமஹம்ஸன், அவனே அவதூதன், அவனே ப்ராஹ்மணன்.

காஷாயவஸ்த்ரங்களைத் தரித்துக்கொண்டிருப்பதனால் ஸந்யாஸியும், கௌபீனமில்லாமல் திரிவதனால் அவதூதனும், நாலிழைகளையுடைய பூணூலைத் தரித்துக்கொண்டிருப்பதனால் ப்ராஹ்மணனும் ஆகமாட்டான் என்று அறியவேண்டும்.

"பரமஹம்ஸ" என்றால் எவன்?

ஸ்ரு || "யோயம் பரமஹம்ஸமார்க்கோ லோகே துர்லபதரோ நது பாஹுல்யோ யத்யேகோ பவதி ஸ ஏவ நித்யபூதஸ்ஸ ஏவ வேதபுருஷ இதி விதுஷோ மந்யந்தே மஹாபுருஷோ யச்சித்தம் தத்ஸதா மய்யேவாவதிஷ்டதே தஸ்மாதஹம் ச தஸ்மிந்நேவாவஸ்தீயதே ஸௌஸ்வபுத்ர மித்ரகளத்ர பந்த்வாதீஞ் ஶிகாம் யஜ்ஞோபவீதம் யாகம் ஸூத்ரம் ஸ்வாத்யாயம் ச ஸர்வகர்மாணி ஸந்யஸ்யாயம் ப்ரஹ்மாண்டம் ச ஹித்வா கௌபீநம் தண்டம் மாச்சாதநம் ஸ்வஶரீரோபபோகார்த்தாய லோகஸ்யோபகாரார்த்தாய ச பரிக்ரஹேத் தச்ச ந முக்யோஸ்திகோயம் முக்ய இதி சேத் அயம் முக்ய:." [பரமஹம்ஸோபநிஷத்.]

ப்ரபஞ்சத்திலுள்ள ஜீவகோடிகளெல்லாம் விடப்பட்ட ஶ்வாஸநிஶ்வாஸங்கள் "ஹம்ஸ" என்றுசொல்லப்படும். இந்த 'ஹம்ஸ'த்தை தன் ஸ்வாதீனம் செய்துகொண்டு நடத்தப்பட்டவனே பரமஹம்ஸன் (ராஜாங்கத்தில் பெயர்பெற்றவனுக்கு பஹதூர் பட்டம் சக்ரவர்த்தியினால் எப்படிகொடுக்கப்படுகின்றதோ அதுபோல்) ஹம்ஸத்தை தன் ஸ்வாதீனம் செய்துகொண்டவனுக்கு பரமஹம்ஸ என்னும் பட்டம் அவனது குருவினால் கொடுக்கப்படும்.

இந்த பரமஹம்ஸமார்க்கம் உலகத்தில் பஹு துர்லபமானது; அநேக ஜன்மங்களாய் புண்யகர்மங்களை அனுஷ்டித்துவந்து அந்தப்புண்யகர்மங்களின் பரிபக்வத்தினால் இந்த ஜன்மத்தில் லபிக்குமேயொழிய ஸாதாரணமாய் லபிக்கத்தக்கதல்ல. ப்ரஹ்மசாரிகள் க்ருஹஸ்தர்கள் இருப்பதுபோல் இந்த பரமஹம்ஸர்கள் எங்கும் இருக்கமாட்டார்கள். பவித்ரமாகிய புண்யதீர்த்த ஸ்தலங்கள் எங்கெங்குண்டோ அங்கங்குத்தேடித் தேடித்திரிந்து அலைந்துபார்த்தபோதிலும் ஒருவன் அகப்படுவதும் மிகவும்கஷ்டம். அந்தப்பரமஹம்ஸனே நித்ய பவித்ரன். அவனுக்கு லௌகிக சின்னங்கள், ஶிகா யஜ்ஞோபவீதங்கள் இல்லாவிட்டாலும் அவன் நித்யபூஜ்யனே. நித்யபூஜ்யன் என்னும் ஶப்தத்திற்கு ஸ்ரீ ஶங்கராசாரியர் சொல்லுகின்றார்.

ஸ்ரு || "நித்யம் ஸர்வதா, காலத்ரயே பி அஶேஷவிஶேஷ ஶூன்யதோ பூதம் பவித்ரம், ஶிகாயஜ்ஞோபவீத வேதாத்யயநாதிக்ரியாஶூன்யத்திகாரணம் ஸத்யஜ்ஞாநாநந்த மாநந்தாத்மஸ்வரூபம் யத் ப்ரஹ்ம தஸ்மிந்நிதமஹமஸ்மீதி ஐக்யேநாவதிஷ்டதி இதி நித்யபூதஸ்தூ யதஸ்த்ர: ஶிகாயஜ்ஞோபவீத வேதாத்யயநாதிபரித்யாக்யபி ஶூத்ராதி ஸமாநத்வேந ஶங்கநீய: கிந்து ஸயேவ நித்யபூதஸ்தோ நத்யந்யோ வேதாத்யயநாதி மாந் அபி."

காலத்ரயங்களிலும் ஶிகா (குடுமி), யஜ்ஞோபவீதம் (பூணூல்), வேதாத்யயநாதிகங்கள் (வேதபாராயணங்கள்) இல்லாவிட்டாலும், மனோ ஶூன்யத்திக்குக் காரணமாகிய ஸத்ய (ஸத்யமானதும்) ஜ்ஞாந (ஜ்ஞாநஸ்வரூபமானதும்) ஆநந்த (ஆதிமத்ய அந்த்யமில்லாததும் ஆநந்தாத்ம ஸ்வரூபமானதுமாகிய) எந்த பரப்ரஹ்மமுண்டோ அந்த பரப்ரஹ்மமே நான் என்று ஐக்யமாயிருப்பவனே நித்யபூஜ்யனென்று சொல்லப்படுவான். அப்படிப்பட்டவனுக்கு ஶிகா யஜ்ஞோபவீதங்கள் இல்லாவிட்-

டாலும் அவனே ப்ராஹ்மணனாவான். இப்படிப்பட்ட ப்ரஹ்மைக்யானு ஸந்தானமில்லாமல் கேவல் ஶிகாயஜ்ஞோபவீத வேதாத்யயனங்கள் உடையவனாயிருந்தாலும் அவன் ப்ராஹ்மணனாகமாட்டான். அதாவது ஶிகாயஜ்ஞோபவீத வேதபாடாப்யாஸங்களினால் புண்யமுண்டாகுமென்னும் விஷயங்களை ஶாஸ்த்ரங்களில் சொல்லியிருப்பதை எப்படி நம்புகின்றோமோ அதுபோலவே வைராக்யமுடையவன் ஶிகா யஜ்ஞோபவீதங்களை த்யாகம்செய்ய வேண்டுமென்று (நீக்கிவிட வேண்டுமென்று) ஶாஸ்த்ரங்களில் சொல்லியிருப்பதனால் அதை பரமஹம்ஸன் அநுஷ்டித்து வருகின்றான். அதனால் அவனுக்குத் தோஷமில்லை. இந்த விஷயத்தில் யாதொரு ஸந்தேஹமும் இல்லை. ப்ரஹ்மாத்மைக்யத்வத்தை அடைந்தவனுக்கு ஶிகா யஜ்ஞோபவீதங்கள் இல்லாவிட்டாலும் அவன் பவித்ரனே ஆவான். அவனே வேதபுருஷன் காலாத்மபுருஷனும் (காலமும் ஆத்மாவும்) அவனே. அதாவது, என்னைவிட பின்னமானவனன்று என்று ஹிரண்யகர்ப்பன் நாரதமஹருஷிக்கு சொல்லினர். ஆதலால், ஶூரனாயிருக்கப்பட்டவன் ரணக்களத்தில் ஆயுதங்களினால் விசேஷகாயம் பட்டபோதிலும் அவைகளையெல்லாம் லக்ஷ்யம்செய்யாமல் ரணக்களத்தில் தீரனாய்நின்று எப்படி யுத்தம்செய்கின்றானோ அதுபோலவே ப்ராணாயாமம்செய்யப்பட்ட பரமஹம்ஸனுக்கு தன்தேஹத்தில் எவ்வளவு பாதைகள் உண்டானபோதிலும், அவைகளையெல்லாம் லக்ஷ்யம் செய்யாமல் தன் அப்யாஸத்தைத் தவறாமல் ப்ரதிதினமும் செய்து வருவான். இப்படி அப்யஸித்து வருவதனால், அவனது இந்த்ரியங்களின் வேகமெல்லாம் அடங்கிவிடும். அப்போது பரமஹம்ஸன் எப்படியிருப்பானென்றால், நன்றாய்ப்பழகிய குதிரைகளை ரதத்தில்கட்டி நிறுத்திவைத்தபோதிலும் ஸாரதியினுடைய ப்ரேரேபணை (தூண்டுகோல்) இல்லாமல் எப்படி செல்லாமலிருக்கின்றனவோ அதுபோலவே, பரமஹம்ஸனுடைய இந்த்ரியங்கள் எங்கும்ஓடாமல் நிஶ்சலனமாய் நின்றிருக்கும். இப்படி இந்த்ரியங்களை ஜயித்தவன் தத்வார்த்த லக்ஷ்யபூதனாய் ஆத்மாவைவிட நான் வேறு பதார்த்தமல்லவென்று பேதபுத்தியில்லாமலிருப்பான்.

ஜீவ பரமாத்மா ஶரீரத்தில் குடியிருந்து கிளம்பிவிடுதல்.

ஓ ஸஹோதரிகளே! ஓ ஸஹோதரர்களே!!

எங்கும் நிறைந்திருக்கும் பரமாத்மா ஶரீரத்தில் குடியிருக்கின்றதா என்னவென்று யோசிக்கவேண்டாம். பரமாத்மா ஶரீர ஹ்ருதயகமலத்தில் நிவஸிப்பதாய் தைத்ரீயோபநிஷத்திலும் ஸுபாலோபநிஷத்திலும் யோகஶிகோபநிஷத்திலும் சொல்லப்பட்டிருக்கின்றது. உபநிஷத்தில் சொல்லியிருப்பதை பரீக்ஷிப்பதற்காக ஹ்ருதயகமலத்தை அறுத்துப்பார்த்தோம். அப்போது மேற்படி உபநிஷத்துக்களில் சொல்லிய விஷயங்களெல்லாம் அந்தக்கமலத்தில் ஸரியாய் அமைந்திருந்தன. ஆனால், பரீக்ஷித்தபோது கமலத்தின் மத்தியிலிருந்த ஜலம் மாத்ரம் உபநிஷத்தில் சொல்லியதுபோல் காணப்படவில்லை. ஏனென்றால், ஆத்மா ஜலத்துடன் ஸம்பந்தப்பட்டிருப்பவனாதலால் ப்ராணப்ரயாணகாலத்தில் மேற்படி கமலத்திலிருக்கும் ஜலம் வற்றிவிடும். அப்போது ஜலமத்தியில் நிவஸித்துக்கொண்டிருந்த ஜீவன் கிளம்பிவிடுகின்றது. அதனால் களேபரத்தின் கமலத்திலிருக்கும் ஜலத்தைக் காணமுடியாது. அந்த ஜலம் தவிர மற்றவைகளை எல்லாம் உபநிஷத்தில் சொல்லியிருப்பதுபோல் ப்ரத்யக்ஷ த்ருஷ்டாந்தமாய் அந்தக்கமலத்தில் காணலாம். ஆதலால், பரமாத்மா ஹ்ருதயத்தில் நிவஸிப்பதாய் உபநிஷத்துக்களின் ஆதாரங்களைக்கொண்டு இதனடியில் தெரிவிக்கின்றோம் கேளுங்கள்.

"பத்மகோஶப்ரதீகாஶம் ஹ்ருதயம் சாப்யதோமுகம்
அதோநிஷ்ட்யா விதஸ்த்யாந்தே நாப்யாமுபரி திஷ்டதி
ஹ்ருதயம் தத்விஜாநீயாத் விஶ்வஸ்யாயதநம் மஹத்
ஸந்ததம் ஶிராபிஸ்து லம்பத்யாகோஶஸந்நிபம்,
தஸ்யாந்தே ஸுஷிரம் ஸூக்ஷ்மம் தஸ்மின்ஸர்வம் ப்ரதிஷ்டிதம்

தஸ்யமத்யே மஹாநக்நிர் விச்வார்ச்சிர் விச்வதோமுக:
ஸோக்ரபுக்விபஜந்திஷ்டந்நாஹாரமஜர: கவி:
ஸந்தாபயதி ஸ்வம் தேஹமாபாத தலமஸ்தக:
தஸ்யமத்யே வஹ்நிசிகா அணீயோர்த்வா வ்யவஸ்திதா:
நீலதோயதமத்யஸ்தா வித்யுல்லேகேவ பாஸ்வரா
நீவாரசூகவத்தந்வீ பீதா பாஸ்வத்யணூபமா
தஸ்யா: சிகாயா மத்யே பரமாத்மா வ்யவஸ்தித:
ஸ ப்ரஹ்ம ஸ சிவ: ஸ ஹரி: ஸேந்த்ர: ஸோக்ஷர: பரம: ஸ்வராட்.”

[தைத்ரீயோபநிஷத்.]

“ஹ்ருதயாம்புஜமத்யே கேவலம் ப்ரக்ருதிமண்டலம் தத் ஹ்ருதயபுண்டரீகம் குஹாயாம் ... ஸ்ததோ அப்யந்தரே ஸர்வ ஸமுத்ரஸ்யமத்யே கோசஸ்தாநம் ... ப்ரபஸ்தோயம் ... தத்ர விமலம் பரம் வேதி ... புண்டரீகம் புண்டரீகமத்யே யோகமாயா ... ஸமாயாவேத ... பரமாத்மா.” [... ோபநிஷத்.]

“அங்குஷ்டமாத்ர: புருஷோங்குஷ்டஞ்ச ஸமாச்ரித: ஈச: ஸர்வஸ்ய ஜகத: ப்ரபு: ப்ரீணாதி விச்வபுக்.” [தைத்ரீயோபநிஷத்.]

பத்மகோசப்ரதீகாசம் - தாமரைக்கமலத்திற்கு ஸமானமான, ஹ்ருதயம் சாபி - ஹ்ருதயத்தில், அதோமுகம் - தலைகீழாய், நிஷ்ட்யா - கொருக்கு, விதஸ்த்யாந்தே - ஜாணளவு அத: - கீழ், நாப்யாம் - நாபிக்கு, விதஸ்த்யாந்தே - ஜாணளவு, உபரி - மேல், திஷ்டதி - இருக்கின்றதோ, தத் - அந்த, ஹ்ருதயம் - ஹ்ருதயம், விச்வஸ்ய - ப்ரபஞ்சஸ்வரூபனை பரமாத்மாவிற்கு, மஹத் - ச்ரேஷ்டமான, ஆயதநம் - ஸ்தானமாய், விஜாநீயாத் - தெரிந்துகொள்ளவேண்டும். தத் - அந்த ஹ்ருதயம், கோசஸந்நிபம் - கமலத்திற்கு ஸமானமாய், ஸிராபிஸ்து - நரம்புகளுடன் கூட, லம்பதே - தொங்குகின்றது. தஸ்ய - அதனுடைய, அந்தே - மத்தியில், ஸூக்ஷ்மம் - ஸூக்ஷ்மமாகிய, ஸுஷிரம் - ரந்த்ரம், அஸ்தி - உண்டு, தஸ்மின் - அதில், ஸர்வம் - ஸர்வஸ்வரூபனாகிய பரப்ரஹ்மம், ப்ரதிஷ்டிதம் - இருக்கின்றான். (த்யானிக்கப்படுபவர்களை அனுக்ரஹிப்பதற்காக இருக்கின்றான்.) தஸ்ய - அந்த ஹ்ருதயத்தின், மத்

யே-மத்தியில், விச்வதோமுக: - எங்கும் வ்யாபித்திருப்பதாயும், விச்வார்ச்சி: - எங்கும் ஜ்வாலையுடையதாயும், மஹாந் - பெரிதாயும், அக்நி: - ஜாடராக்நி, வர்த்ததே - இருக்கின்றது, ஸ: - அந்த அக்நி, அஜர: - ஜரையற்றதாயும், கவி: - ஸர்வஜ்ஞதையுடையதாயும், திஷ்டந் - இருந்து, ஆஹாரம் - ஆஹாரத்தை, (புசிக்கப்பட்ட - ஜீர்ணிக்கப்பட்ட ஆஹாரங்களை) விபஜந் - பங்கிடுவதற்காக, அக்ரபுக் - புசித்து, (முதல் சாப்பிடும் பதார்த்தங்களைத்தான் முதலாய் புசித்து) ஆபாததலமஸ்தக: - பாதம்முதல் மஸ்தகம் (உச்சி) வரையில், ஸ்வம் - தனது, தேஹம் - தேஹத்தை, ஸந்தாபயதி - தபிக்கச் செய்கின்றான். (உஷ்ணத்தையுண்டாக்கச்செய்கின்றான்.) தஸ்ய - அந்த ஹ்ருதயத்தின், மத்யே - மத்தியில், வஹ்நிசிகா - அக்நிஜ்வாலை, அணீயோர்த்வா - மேல்கிளம்பி, வ்யவஸ்தித: - இருக்கின்றது. நீலதோயதமத்யஸ்தா; நீல - கறுத்த, தோயத - மேகத்தின், மத்யஸ்தா - மத்தியிலிருக்கும், வித்யுல்லேகேவ - மின்னலின் கொடிபோல், பாஸ்வரா - ப்ரகாசித்துக்கொண்டு, நீவாரசூகவத் - நெல்லினுடைய நுனியிலிருக்கும் முள்ளைப்போல், தந்வீ - ஸூக்ஷ்மமானதும், பீதா - பசுமஞ்சள் நிறமுடைய காந்தியுடையதும், அணூபமா - இதற்கு உபமானம் சொல்லுவதற்கு வேறொன்றும் இல்லாததாய், பாஸ்வதீ - இருக்கின்றது. தஸ்யா: - அப்படிப்பட்ட, சிகாயா: - சிகையின், மத்யே - மத்தியில், பரமாத்மா - பரமாத்மா, வ்யவஸ்தித: - இருக்கின்றான். ஸ: - அவனே, ப்ரஹ்ம - பரமாத்மா, ஸ: - அவனே, சிவ: - சிவன், ஸ: - அவனே, இந்த்ர - ப்ரஹ்மன், ஸ: - அவனே, அக்ஷர: - நாசமில்லாமல், பரம: - ச்ரேஷ்டனாய், ஸ்வராட் - ஸ்வயமாய் ப்ரகாசித்துக்கொண்டிருக்கும் பரமாத்மாவாயிருக்கின்றான். (காமத்திற்கு பத்தப்படாத பரமாத்மா என்பதேயாம்.)

அதாவது, ப்ரம்மனைத்தும் சேர்ந்து நரம்புகளுடன் கூடி சிவந்த நிறமுடைய தாமரைக்கமலம் போன்ற ஹ்ருதயத்தில் அதோமுகமாய் (தலைகீழாய்) தொங்கிக்கொண்டிருக்கும். அந்தக்

கமலம் ☞ எதிரிலிருக்கும்படம் No. 1-ல், காட்டப்பட்டிருக்கின்றது. அது, நெஞ்சுக்கு(தொண்டைக்கு) ஜாணளவுகீழும், நாபிக்கு ஜாணளவு மேலுமாய் இருக்கின்றது. அந்தக்கமலத்தின்மத்தியில் முக்யமான ரந்த்ரமொன்றுண்டு. அந்த ரந்த்ரமத்தியில் அங்குஷ்ட (அங்குல)ப்ரமாணம் ஆகாசம் உண்டு, அந்த ஆகாசம் மலர்ந்த வெண்மையான தாமரை மலரைப்போலிருக்கின்றது. அது ☞ எதிரிலிருக்கும் No. 2. படத்தில் அம்பிறால் காட்டப்பட்டிருக்கின்றது. அந்த ஆகாசமத்தியில் அமுதம்போல் ஜலம் நிறைந்திருக்கும். அந்த ஜலத்தின் மத்தியில் பரமாத்மா, நெல்லின் நுனிபோன்ற சிறிய ரூபமுள்ளவராயும் கறுத்த மேகங்களின் மத்தியில் தோன்றும் மின்னலைப்போலவும் மிகவும் ப்ரகாசமானதாயும், அதற்கு [illegible] வேறொன்றும் இல்லாததாயும், பச்சைநிறமுள்ள காந்தியுடையதாயும் இருக்கின்றது. அந்தப்பரமாத்மா ஜடராக்நிரூபமாய் உஷ்ணத்தையுண்டாக்கி ஜீவராசிகள் புசிக்கும் ஆகாரங்களை பஸ்மம் செய்வித்து பாதப்பெருவிரல்முதல் உச்சிவரையில் உஷ்ணத்தையுண்டாக்குகின்றான். இப்படிப்பட்ட பரமாத்மா ஹ்ருதயகமலத்திலிருக்கும் ஜலத்துடன் சேர்ந்து இருப்பதனால் அவனுக்கு நாராயணன் என்று பெயர்வந்தது. அதாவது, (நார-ஜலம், அயனஸ்தானம்) ஜலத்திற்கு ஸ்தானமாயிருக்கும்படியாலால் அவனுக்கு நாராயணன் என்று பெயர்வந்தது. அன்றியும், ஆலிலையின்மீது பள்ளிகொண்டான் என்றுசொல்வார்கள். ஏனென்றால், ஹ்ருதயகமலம் இதழ்களாய் விரிந்தபோது ஆலிலை வடிவமாயிருக்கும். அது, ☞ No. 2. படத்தில் காட்டப்பட்டிருக்கின்றது. அந்த ஆலிலையின்மீதிருக்கும் ஜலத்தின்மீது மிதந்துகொண்டிருப்பதனால் அவனுக்கு ஆலிலையின்மீது பள்ளிகொண்டான் என்று பெயர்வந்தது.

"மகிழ்ச்சியுடன் மார்க்கண்டர் வாராய்காண்
வாலாறு நீவெண்மை யுயிவாய் சொல்வாய்
கட்சியுடன் கருதிப்பார் புகல்கின்றேனும்
ருட்சிக்க [illegible]

SEAT OF THE PARAMATMAN IN THE LOTUS OF THE HEART

ஹ்ருதயகமலத்தில் பரமாத்மா நிவஸிப்பது

హృదయకమలమునందు పరమాత్మనివసించుట



BLOCK & PRINTING BY SOLDEN & CO., MADRAS, S. E.

அகட்டிலுள்ள அனிலமே விழுப்பாரையா
அப்போது இம்மட்டில் எல்லாருமே
இசைந்திட்ட ஜீவராசிகளின் வேதனை
இல்லாத்தலை யானறிவே னயனைக்கேளீர்.

ஆகலால், ஆகாசத்தில் பள்ளிகொண்டிருக்கும் பரமாத்மாவே நாராயணன். இந்த நாராயணனே பிரமன்; இவனே பரமசிவன்; இவனே இந்திரன்; இவனே சித்திரகுப்தன். இந்த சித்திரகுப்தம் (ஆகாசம்) அபிமானத்தில் புராணங்கள், சித்திரபுத்திரன் என்று வழக்கச்சொல்லாய் சொல்லுகின்றார்கள். ஜீவஜந்துக்கள் செய்யும் புண்ணியபாபங்களையெல்லாம் சித்திரபுத்திரன் இருந்து பார்த்துக்கொண்டு கணக்கு எழுதுவதல்ல; அவனவன் செய்து வரும் புண்ணியபாபங்களையெல்லாம் அந்தந்தகாலத்தில் சாக்ஷியாயிருக்கும் ஆத்மா பார்த்துக்கொண்டு வருகின்றது. புண்ணியபாபங்களைப் பார்த்துக்கொண்டு வருவதுபோலல்லாமல் ஜீவஜந்துக்கள் ஒரு நிமிஷம் சுவாசம் செய்துகொண்டு வரும் உச்சுவாச நிச்சுவாசங்களையெல்லாம் அந்தந்த ஜீவஜந்துக்களில் சாக்ஷியாயிருக்கும் ஆத்மா கணக்குப்பார்த்துக் கொண்டுவருவதுமல்லாமல், ஜீவஜந்துக்களின் ஆயுர்பாகம் ப்ராணமேயொழிய வருஷசங்க்யைகள் கணக்குப்படியானதல்ல. ஒவ்வொரு மனிதனுக்கும் இத்தனைகோடி ப்ராணங்கள் என்று, பகுதியில் அப்படியே தேவலாய் ஆகாயமென்னும் பஞ்சபூதங்களினால் உண்டான சரீரத்திலுள்ள ஜீவகோடிகளிடத்தில் சேர்ந்திருப்பதனால் ஆத்மா, ப்ராணங்களை கணக்குப் பார்த்துக்கொண்டு 45, 36,000 ப்ராணங்கள் முடிந்தவுடனே ப்ராணன்கள் இருக்கும்போதே ஜீவனுக்கு வேறு சரீரம் கொடுத்து செய்து வருகின்றது. அதாவது, நாளொன்றுக்கு நடக்கும் ப்ராணங்கள், 21, 600. மாதம் ஒன்றுக்கு நாட்கள் 210 ஆகவே, 21, 600 × 210=45,36,000 ப்ராணங்கள் இருக்கும்போதே வேறு சரீரம் ஆத்மா கொடுத்து செய்து விடுகின்றது.

இதற்கோர் த்ருஷ்டாந்தம் சொல்லுகின்றோம் கேளுங்கள். வெங்கடராமையர் என்பவர் ஒருவரிருந்தார். அவருக்கு ஆயுர்ப்பாகத்தில் ஏற்படுத்தியிருந்த ஶ்வாஸமென்பவம் செலவழிந்து நாற்பத்தைந்து லக்ஷத்து முப்பத்தாறாயிரம் இருக்கும்போதே ஜீவனை வேறு ஜன்மத்தில் ஸ்ருஷ்டிசெய்ய ஆத்மா ஆலோசித்து அவன் ப்ராரப்தத்தில் கொண்டுவந்த புண்யபாபங்கள் போகஶேஷமாய் முன் தங்கியிருக்கும் ஸஞ்சிதமென்னும் புண்யபாபங்களையும் இந்தஜன்மத்தில் செய்துவந்த ஆகாம்யமென்னும் புண்யபாபங்களையும் கணக்குப்பார்த்து முன்ஜன்மத்தைவிட இந்தஜன்மத்தில் இவன் கொஞ்சம் புண்யம் அதிகமாய்செய்திருந்தால் இவனை யார்வீட்டில் ஸ்ருஷ்டிசெய்யலாமென்று ஸாக்ஷியாயிருக்கும் சித்ரகுப்தனென்னும் ஆத்மா யோசிக்கும். (இந்த ஸஞ்சித ப்ராரப்த ஆகாம்யகர்மங்களைக்குறித்து இந்நூல 28 பக்கம் பார்க்க.) இவ்விதமாய்யோசித்து இவனை மைஸூர் ராஜனது பார்யாளின் கர்ப்பத்தில் போடவேண்டுமென்று தீர்மானித்து மைஸூர்ராஜன் பத்னியுடைய மாதவிடாய் நிறுத்தி கர்ப்பம்தரிக்க ஆத்மாசெய்கின்றது. ஆனால் மைஸூர்ராஜனுக்கு ப்ராரப்தத்தில் புத்ரஸந்தானம் இருந்தால்மாத்ரம் அவ்விடத்தில் ஸ்ருஷ்டிசெய்யுமேயொழிய ப்ராரப்தத்தில் புத்ரஸந்தானம் இல்லாவிட்டால் இவனுக்கு ஸமானமாய் செல்வமும் புத்ரஸந்தானமும் இருக்கப்பட்ட வேறு எந்தஅரசன் வீட்டிலோ அல்லது அரசனுக்கு ஸமானமான பெருத்த செல்வமுடையவன்வீட்டிலோ ஆத்மா ஸ்ருஷ்டி செய்விக்கின்றான். இவ்விதமாய் ஸ்ருஷ்டிக்கு கர்ப்பம்தரித்தபின் வெங்கடராமையனை ஆணாய் ஸ்ருஷ்டிசெய்யலாமா அல்லது பெண்ணாய் ஸ்ருஷ்டிசெய்யலாமென்று ஆத்மாயோசித்து வெங்கடராமையனை ஆணாகவே ஸ்ருஷ்டிசெய்ய வேண்டும். ஏனென்றால், இவன் புத்ரன்மீது அதிக ப்ரீதி வைத்து ஸதாகாலமும் அவனையே ஸ்மரித்துக்கொண்டிருப்பதனால் இவன் ப்ராணப்ரயாணகாலத்தில் இவனது குமாரன்

ரூபத்தை நாமல்லவோ சித்ரகுப்தபடத்தில் காட்டப்போகின்றோம்.

ஆதலால், இவனை ஆணாகவே ஸ்ருஷ்டிசெய்ய வேண்டுமென்று ஆத்மாதீர்மானித்து ஷை அய்யர் முன்வரப்போகும் ஜன்மத்தில் அநுபவிப்பதற்காக, அவனது ஸஞ்சிதமென்னும் புண்யபாபங்களின் க்ரமத்திற்குத்தக்கபடி அவனுக்கு இத்தனைபுத்ரர்களென்றும் இத்தனைபுத்ரிகளென்றும் அவர்களில் ஒருவன் இன்னவயதில் மரணமடைய வேண்டுமென்றும் மற்றொருவனுக்கு இங்கு விவாஹம் நடக்கவேண்டுமென்றும் இவை முதலானவைகளும், இவன் இன்னின்ன விஷயங்களினால் மனோவ்யாகூலமடையவேண்டுமென்றும் இத்தனைகோடி ரூபாய்கள் ஆர்ஜிதம்செய்து கடைசியாய் இன்ன வ்யாதியினால் மரணமடையவேண்டுமென்று ப்ராரப்தத்தில் அநுபவிக்கத்தக்கது ப்ரமாணமாய் ஸ்ருஷ்டிசெய்து விடுகின்றான். இவ்விதமாய் ஸ்ருஷ்டிசெய்து, ராஜஸ்த்ரீ கர்ப்பத்திலிருக்கும் ஶிசுவிற்கு மாதங்கள் பூர்த்தியாகுவதற்கும், வெங்கடராமையர் தரித்திருக்கும் ஶரீரத்திலுள்ள நாற்பத்தைந்து லக்ஷத்து முப்பத்தாறாயிரம் ஶ்வாஸங்கள் செலவாவதற்கும், கணக்கு சரியாய்விடும்.

பிறகு வெங்கடராமையர் தரித்திருக்கும் ஶரீரத்தைவிட்டுக் கிளம்புவதற்குமுன், அதாவது இருபத்தோராயிரத்து அறுநூறு ஶ்வாஸங்கள் இருக்கும்போதே, என்றால் ஒருநாள் முழுமையும் வெங்கடராமையர் ப்ரஜ்ஞை தப்பும்படி ஆத்மாசெய்வித்து, வெங்கடராமையர் பால்யதசையிலிருந்து மரணகால பர்யந்தம் எந்தெந்த ஸ்த்ரீகளை இச்சைகொண்டிருந்தானோ அவர்களையும் எந்தெந்த வஸ்துக்களின்மீது அதிக ப்ரீதிவைத்திருந்தானோ, அவைகளையும் 'பயாஸ்கோப்பில்' படங்களை எவ்விதமாய் ஒன்றன்பின் ஒன்றாய்க் காட்டிக்கொண்டு போகின்றதோ அதுபோல, இவன் ஆவல்கொண்டிருந்த வஸ்துக்களையெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாய் வெங்கடராமையர் எதிரில்

காணப்படும் சித்ரகுப்த (சித்ரகுப்தபடம், சித்ரபடம், குப்த ரஹஸ்யம். அதாவது ரஹஸ்யமான) படத்தில் கட்டிக் கொண்டேசென்று பிறகு அதிக ப்ரீதிவைத்திருக்கும் தன் குமாரனது ரூபத்தை அந்தப்படத்தில் ஸ்படிகமாய்க் கொண்டு வந்து நிறுத்திவிடும். இதற்கு யோகசிகோபநிஷத் ப்ரமாணம்.

"தேஹாவஸானஸமயே சித்தே யத்யத்விபாவயேத்
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
அவ்வண்ணம் [illegible]
[illegible]."

அந்தப் படத்தில் நிறுத்தியிருந்த குமாரனது ரூபத்தைப் பார்த்து ஐயோ குமாரா! உன்னைவிட்டு பிரிகின்றேனே யென்று வெங்கடராமையர் ஸ்மரித்துக்கொண்டிருப்பார். அந்த ஸமயத்தில், அவனைச் சுற்றி ஜனங்களெல்லாம் ஆவலைக் கொண்டு அன்று [illegible] பரமனைச் சென்னையில் [illegible] என்று சிலரும் மற்றும் சிலர் நாராயணா என்று சொல் ராமா என்று சொல் கோவிந்தா என்று சொல் க்ருஷ்ணா என்று சொல்லென்றும் இவ்விதமாய் அவரவர்க்கு தெரிந்தவைகளை யெடுத்துக்கொண்டிருப்பார்கள். இவர்கள் எவ்வளவு பிரிந்து பார்த் தாலும் சொல்லியபோதிலும் அவருக்கு எந்த சப்தமும் கேட்கமாட்டாது. மனமும் சித்ரகுப்தபடத்திலிருக் கும். குமாரனது ரூபத்தைப் பார்த்துக்கொண்டிருப்பதால் அவருக்கு எந்த சப்தமும் கேட்காது. இவ்விதமாய் ப்ராணன்களெல்லாம் சென்று ஒடுங்கியும் மனம் படத்திலிருக்கும் குமாரனது ரூபத்தைப் பார்த்து பெருமூச்சு விட்டுக்கொண் டேவந்து கண்டத்திலிருக்கும் ப்ராணனுடன் மனம் சேர்ந்து ஓ குமாரா உன்னைவிட்டுவிட்டுச் செல்லுகின்றேனே என்று

ஸ்மரித்துக்கொண்டே மனம் ஆத்மாவுடன் சேர்ந்து கிளம்பி விடும். இதற்குள் ராஜனது பத்னிக்கு மாதம்பூர்த்தியாய் விடும். வெங்கடராமையர், குமாரனை ஸ்மரித்துக்கொண்டே பரீரத்தைவிட்டுக் கிளம்பினவுடன் ராஜனது பத்னியின் கர்ப் பத்திலிருக்கும் பிண்டத்தினுடைய ஹ்ருதயகமலத்திலிருக்கும் ஜலமத்தியில் போய்ப்ரவேசிக்கின்றான். ப்ரவேசித்தவுடன் பிண்டம் தலைகீழாகத்திரும்பும்; அதுமுதல் ஜனனகாலம் வரையில், கர்ப்பப்பையில் அடைபட்டிருக்கும் ஜீவன், எண்பத்துநான்குலக்ஷ ஜீவராசிகளின் நானுயோனிகளில் பிறந்து அந்தந்த ஸமயத்தில் வந்துகொண்டிருந்த புத்ர பௌத்ர களத்ர தனதான்யாதிகளையெல்லாம் நினைத்து நினைத்து துக்கப்படும்படி, இவனுடன்கூடவே ஸாக்ஷி ஸ்வ ரூபமாய் வந்துகொண்டிருக்கும் ஆத்மா, ஒவ்வொருஜன்மத் திலும் தன்பூர்வ ஜன்மங்களையெல்லாம் கர்ப்பத்தில் காட்டிக் கொண்டேவருகின்றான். அதாவது, ராஜபத்னீ கர்ப்பத்தில் ப்ரவேசிக்குமுன் குமாரனை நினைத்துக்கொண்டே ப்ராணனை விடுமுன் வெங்கடராமையராயிருந்த ஜன்மத்தில் வந்த பெண்டுபிள்ளைகளையும் தனதான்யங்களையும் சற்றுநேரம் நினைத்து துக்கித்து அதைமறந்து அதற்குமுன் க்ஷத்ரியனு யிருந்தபோது வந்த பெண்டு பிள்ளைகளையெல்லாம் சிலநே ரம் நினைத்துநினைத்து துக்கித்து அதைமறந்து அதற்குமுன் சண்டாளஜன்மத்தில்வந்த பெண்டுபிள்ளைகளையும் ஜாதிபேதங் களையும் சிலநேரம் நினைத்து நினைத்து இவ்விதமாய் எத்தனைத் ஜன்மங்களை ஜீவன் அடைந்துகொண்டு வந்ததோ அந்தந்த ஜன்மங்களையெல்லாம் சிலசில நிமிஷங்கள் நினைத்து நினைத்து துக்கித்தும் ஜனனகாலம் ஸமீபிக்காவிட்டால் மறுபடியும் ஆதி யிலிருந்து தன் பூர்வஜன்மங்களையெல்லாம் நினைத்து நினைத்து துக்கித்துக்கொண்டிருக்கும் அதாவது எட்டொன்பதாவதுமாதங் கள்வரையில் பூர்வஜ்ஞானத்துடன் இருந்து, முன் பிறந்து இறந்த ஜன்மங்களையெல்லாம் நினைத்துக்கொண்டிருக்கும்

ஸமயத்தில் ஜனனகாலம் ஸமீபித்து ராஜனது பத்னி ப்ரஸவ வேதனைபடுவாள். அப்போது ஶிஶு ஈஶ்வரனுக்கு தெண்டம் ஸமர்ப்பிப்பதற்காக இரண்டுகைகளையும்குவித்து ஶிரஸின்மேல் வைத்து ஐயோ! மாயா ப்ரபஞ்சத்தில் தள்ளுகின்றாயா வென்று கும்பிட்டுக்கொண்டே, யோனியிலிருந்து புறப்பட்டு ஜன்மிக்கின்றது. ஶிஶு ஜன்மித்தவுடன் மாயைமூடிக்கொண்டதென்றும் தெரியாமல் திக்ப்ரமையுடனிருக்கும். அப்போது கலியுகஜலத்தை ஶிஶுவின் முகத்தில் ப்ரோக்ஷிக்கின்றார் (தெளிக்கின்றார்)கள். தெளித்தவுடன் ஶிஶு திமிறிக்கொண்டு க்வா! க்வா! க்வா! என்று வீறிட்டு அழுது பூர்வஜ்ஞானத்தைமறந்து பராதீனஸ்வரூபமாயிருக்கும். பிறகு பதினோராவது நாள் புண்யாஹவாசனம்செய்து அந்தஶிஶுவிற்கு வெங்கடராமையர் என்னும்பெயர்போல் ஸ்ரீ ராமராஜ உடையார் என்று நாமகரணம்செய்து விசேஷ தானதருமங்களைச் செய்கின்றார்கள். இவ்விதமாய்ச்செய்து ஶிஶு வளர்ந்து இரண்டுவது வயது தொடங்கினவுடன் அத்தை அண்ணா அக்கா மாமா வென்று சொல்லென்று அக்குழந்தைக்கு சில நாள்கள் முதனமாய் வார்த்தைகளைக் கற்றுக்கொடுத்து பிறகு கண்ணெது மூக்கெது வாயெது காதெது கையெது காலெது தலையெது என்றும், அம்மாயார் அத்தையார் மாமாயார் என்று முதனமான வார்த்தைகளையெல்லாம் கற்றுக்கொடுத்து ஆள்களைக்குறிப்பிட்டுக்காட்டுகின்றார்கள். இவ்விதமாய்கற்றுக்கொடுத்தபிறகு ஐந்தாவதுவயதில் வாசிப்பதற்காக பள்ளிக்கு அனுப்புகின்றார்கள். வாசித்து படிப்பில்தேர்ந்து யௌவன வயதுவந்தவுடன் தான் தாயின் கர்ப்பத்தில் இருந்தபோது இன்னவிடத்திலிருந்து பார்யாள் வரவேண்டுமென்றும், அவளுக்கித்தனை புத்ரர்கள் உண்டாகவேண்டுமென்றும் ப்ராரப்தத்தில் எழுதி இருக்கின்றதென்று முன்சொல்லியிருக்கிறோமல்லவா? அதுபோல், அந்த இடத்தில் விவாஹம் முடிந்து தான் அனுபவிக்கவேண்டிய சௌக்யங்களையெல்லாம் ப்ராரப்தகர்மம்போல் அனுபவித்து

மறுபடியும் புண்யபாபங்களைச்செய்து ப்ராரப்தகர்மத்தின்படி வரவேண்டிய வியாதிகள் உண்டாய் இவன் பார்யாளின்மீது அதிக ப்ரீதியை வைத்திருந்தவனானதால் ப்ராண ப்ரயாணஸமீபத்தில் சித்ரகுப்தனென்னும் படத்தில், இவன் பார்யாளின் ரூபத்தை ஸாக்ஷிஸ்வரூபமாயிருக்கும் ஆத்மா காட்டுகின்றான். பார்யாளை ஸ்மரித்துக்கொண்டே ப்ராணனைவிடுகின்றான். அப்போது, இவன் புண்யபாபத்திற்குத்தக்கபடி வேறு தாயின் கர்ப்பத்தில் ஸ்ருஷ்டிசெய்திருக்கும் பெண் ஶரீரத்திலுள்ள ஹ்ருதய கமலத்திலிருக்கும் ஜலமத்தியில்போய் ஆத்மா ப்ரவேஶித்து, ஜனனகாலம்வரையில் ஜீவன் பூர்வ ஜ்ஞானத்துடன் இருந்து பிறகு பெண் ஶிஶுவாய் பிறக்கின்றது. பிறந்த பதினோராவதுநாள் புண்யாஹவாசனம்செய்வித்து 'கமலாபாய்' என்னும்பெயருடன், முன்சில வருஷங்கள் வெங்கடராமையராகவும் சில வருஷங்கள் ராமராஜ உடையாராகவும் இருந்த ஜீவன் இப்போது பெண்ரூபம்கொண்டு கமலாபாய் என்னும் பெயருடன் வளர்ந்து வருகின்றது. ஆதலால், காமக்ரோத லோப மோஹ மத மத்ஸர டம்ப தர்ப ஈர்ஷை அஸூயை என்னும் பத்துகுணங்களும்; தாரேஷணை புத்ரேஷணை தனேஷணை என்னும் ஈஷணாத்ரயங்களும் நசிக்கும்வரையில் ஜீவன் எப்பொழுதும் எதையோ ஓர் ஶரீரத்தை அடைந்துகொண்டே வரும் (இதன்விஷயம் ஸ்ரீக்ருஷ்ணார்ஜுந ஸம்வாதரூபமாய் எழுதியிருக்கும் ஸ்ரீ பகவத்கீதை - முதற்பதிப்பு அத்யாயம், 2 - ஶ்லோகம், 16 - முதல், 22 - வரையில் பார்க்க.)

ஆத்மா எந்த ஶரீரத்தைவிட்டுக் கிளம்புகின்றதோ அந்த ஶரீரத்திலுள்ள, ஹ்ருதய கமலத்திலிருக்கும் அங்குலப்ரமாண ஆகாஶத்திலுள்ள ஜலம்,வற்றிக்கொண்டேவரும். அந்த ஆகாஶம் சால் படத்தில் காட்டியிருக்கின்றது. அந்த ஜலம் வற்றவற்ற [illegible] உண்டாக்கும். அப்போது நாக்கைத்தொட்டுப்பார்த்தால், அதில் சிறிதேனும் ஜலமில்லாமல் 'சர்'வறண்டு முன்னேபோல் காணப்படும். இவ்விதமாய் ஶரு

ஹ்ருதயகமலத்திலிருக்கும் ஜலம் வற்றிக்கொண்டே வரவர அப்போது ஜலமத்தியிலிருக்கும் நாராயணன் (ஆத்மா) கடைசியாய் வெளிவரும் ச்வாஸத்துடன் கூடவே கிளம்பி, அவனவன் கர்மானுஸாரமாய் எந்தெந்த தாயின் கர்ப்பத்தில் ஸ்தூலசரீரத்தை ஆத்மா, ஸ்ருஷ்டி செய்திருக்கின்றதோ அந்தந்த சரீரத்திலுள்ள ஹ்ருதயகமலத்திலிருக்கும் ஜலமத்தியில் ஏழாவதுமாதம்போய் ப்ரவேசிக்கின்றது.

ஹ்ருதயகமலத்தில் பரமாத்மா இருக்கும் ஜலமிருப்பதினால் ஜீவராசிகளின் 'நா'வில் ஜலம் சுரந்துகொண்டிருக்கும். அந்தப்பரமாத்மா சரீரத்தைவிட்டுக்கிளம்பும்போது ஹ்ருதயகமலத்திலிருக்கும் ஜலம் வற்றுவதனால், 'நா' வறண்டுபோம். இவ்விதமாய் நா வறண்டுகொண்டே வந்து, ஆத்மா கடைசியாய்வரும் ச்வாஸத்துடன் கூடவே கிளம்பிவிடுகின்றான். பிறகு ச்வாஸம் ஆடாமல் நின்றுவிடும். அப்போது சரீரம் ப்ரேதமாய்விடும். அப்படிக்கேட்காமல்,

“ஸதம் சைகா ச ஹ்ருதயஸ்ய நாட்யஸ் தாஸாம் மூர்த்தாநமபி நிஸ்ருதைகா தயோர்த்வமாயந்நம்ருதத்வமேதி விஷ்வங்ஙந்யா உத்க்ரமணே பவந்தி.” [கடோபநிஷத்.

முன்சொல்லியகமலத்தில் நூற்றெட்டுநாடிகள் உண்டு. இந்த நூற்றெட்டு நாடிகளிலும் ஸுஷும்நா என்னும் ஸூக்ஷ்மநாடி ஒன்று இருக்கின்றது.

அந்நாடியை ஸ்வாதீனம் செய்துகொண்டு அதன்வழியாய் யோகபலத்தினால் உச்சியைத்திறந்து ஆத்மாவைவிட்டவன் ஜனனமரணமென்னும் ஸமுத்ரத்தைத்தாண்டி முக்தியை அடைகின்றான். மற்றநாடிகளின் வழியாய் ஆத்மாசென்றால் மறுபடியும் ஸம்ஸாரத்தை அடைகின்றான். இந்த ஆத்மாவைக் குறித்து ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம், 18 - ஸ்லோகம், 61 - ல்,

ஈஸ்வர ஸ்ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேஸேர்ஜுந திஷ்டதி
ப்ராமயந் ஸர்வபூதாநி யந்த்ராரூடாநி மாயயா.

ஓ அர்ஜுநா! எல்லாபூதங்களுக்கும் ஆஜ்ஞாபிக்கப்பட்ட ஈச்வரன், எல்லாப்ராணிகளின் ஹ்ருதயகமலத்தின் மத்தியி

லிருந்துகொண்டு ஸூத்ரதாரியால் ஆட்டப்படும் பொம்மைபோல் ஆட்டி மாயையால் ப்ராணிகளை ப்ரமிக்கச்செய்கின்றான். என்று ஸ்ரீக்ருஷ்ணபகவான் சொல்லியிருக்கின்றார். ஆதலால்,

“கபாலகுஹரேமத்யே சதுர்த்வாரஸ்யமத்யமே ததாத்மா ராஜதே தத்ர யதாவ்யோம்நி திவாகர: கோதண்டத்வயமத்யேது ப்ரஹ்மரந்த்ரேஷு ஸக்திதஸ் ஸ்வாத்மாநம்புருஷம்பஸ்யேத் மநஸ்தத்ர லயம்கதம் ரத்நாநிஜ்யோத்ஸ்நிநாதம் துபிந்துமாஹேஸ்வரம்பதம்.” [த்யாநபிந்து.]

ப்ரஹ்மகபாலத்திற்கு (உச்சிக்கு) நான்கு த்வாரங்களுண்டு. அதற்குமத்தியிலிருக்கும் ஆகாசத்தில், ஸூர்யன் ப்ரகாசித்துக்கொண்டிருப்பதுபோல் ஆத்மா ப்ரஹ்ம கபாலத்தில் ப்ரகாசித்துக்கொண்டிருக்கின்றான். அவன், நாத (ப்ராணன்) பிந்து (மனஸ்)களுடன்கூடி மஹேச்வர ஸ்வரூபமாயிருக்கின்றான். அன்றியும் கோதண்டம்போலிருக்கும் புருவமத்தியில் ஆத்மா ஸுஷும்நா நாடியுடன்கூடியிருக்கின்றான்.

இந்த ஆத்மா, ஹ்ருதயகமலத்திலிருக்கும் அங்குஷ்டப்ரமாண ஆகாசத்திலிருக்கும் ஜலமத்தியில் இருப்பதாய் முன் சொல்லியிருக்க, இப்போது ப்ரஹ்மகபாலத்தி (உச்சியி)லும் வில்லைப்போலிருக்கும் புருவமத்தியிலும் இருப்பதாய் மறுபடியும் சொல்லியதற்குக்காரணம் தியானபிந்துபநிஷத்தின்படி இதனடியில் சொல்லுகின்றோம் கேளுங்கள்:—

பெருந்தபட்டணங்களிலுள்ள விளக்குகளை எல்லாம் ஏற்றுவதற்காக எலெக்ட்ரிக்மிஷின் (Electric Machine) ஒன்றை ப்ரத்யேகமாய்வைத்து அதை ஆடும்படிசெய்து அதிலிருந்து உண்டாகும் கரண்டுகளை (Current) யெல்லாம் வேறோரிடத்தில் சேகரித்து வைப்பதற்காக மற்றொரு கட்டடம் கட்டி கரண்டுகளை அவ்விடம்சேர்ப்பித்து அதன்மூலமாய் பட்டணங்களிலுள்ள தீபங்களையெல்லாம் ப்ரகாசிக்கும்படிசெய்விக்கின்றார்கள். அதுபோலவே, ஹ்ருதயகமலத்திலிருக்கும் பரமாத்மாவிற்கு, உச்சியும் புருவமத்யமும் ஸ்தானமாயிருந்துகொண்டு சரீரத்திலுள்ள நாடி நரம்புகளுக்கெல்லாம் உஷ்ணத்தை உண்டாக்கி முன்சொல்லிய யந்த்ரம்போல் ஆடும்படிசெய்விக்கின்றான். இதற்கு ப்ரமாணம் வராஹோபநிஷத்.

“ப்ரஹ்மரந்த்ரே ப்ருவோர்மத்யே ஹ்ருதயே சித்ரவிம் ஹரிம் கோபீசந்த்ரமாவிபய தத்தியாத்வாபதுயாத்பரம்.”

என்னும் ஸாஸ்தேவோபநிஷத் வாக்யரீதிப்ரகாரம், பரமாத்மா உச்சியிலும், புருவமத்தியிலும், ஹ்ருதயகமலத்திலும் வசித்துக்கொண்டிருப்பதினால் அந்த மூன்று இடங்களிலும் பரமாத்மா இருக்கின்றாரென்று காட்டுவதற்காக கோபீசந்தனமாகிலும், திரிசூர்ணமாகிலும், விபூதி சந்தனமாகிலும் தரிக்கின்றார்கள். இவைகளெல்லாம் வேதங்களினுடையவும் குருவினுடையவும் மஹாரஹஸ்யங்கள். இப்படிப்பட்ட மஹாரஹஸ்யார்த்தங்களை எல்லாம் உங்களுக்கு புஸ்தகமூலமாய்த் தெரிவித்தோம்.

ஆனால் சில புருஷர்கள், ஆண் ஆணாகவும் பெண் பெண்ணாகவும் பிறக்குமென்று சொல்வார்கள் அது, அறியாத்தன்மையே. ஆத்மா காற்றுருவமாயிருக்கப்பட்டது. அது எந்த ஶரீரத்தை நினைக்கின்றதோ அந்த ஶரீரத்தை அடையுமேயன்றி வேறு ஶரீரத்தை அடையாது. காற்றுருவமாயிருக்கும் ஆத்மாவை எந்த ஶரீரத்திலும் போடலாம். ஜடபரதர் ப்ராணனைவிடும்போது மானை நினைத்துக்கொண்டே ப்ராணனை விட்டபடியால் அவர் மான்ஶரீரம் எடுக்கநேரிட்டது. மானாய்ப் பிறந்தபோதிலும் பூர்வஜன்ம வாஸனையினால் இவர் ருஷிகளுடன் கூடவே இருந்தபடியால் ருஷிகள் மானைக்கண்டு இதென்ன இம்மான் நம்முடன்கூட இருப்பதற்குக் காரணமென்னவென்று ருஷிகள் யோகத்ருஷ்டியினால் பார்த்து ஓஹோ! இவர் பூர்வஜன்மத்தில் ஜடபரதராய் இருந்தவர் மரணகாலத்தில் தான் வளர்த்திருந்த மானை நினைத்துக்கொண்டே ப்ராணனை விட்டபடியால் இவருக்கு மான்ஶரீரம் உண்டாயிற்றென்று தெரிந்து கொண்டார்கள். ஆதலால், நாம் ஈஸ்வரத்யானமில்லாமல் ஸம்ஸாரத்திலேயே அதிகமாய் உழன்றுக் கொண்டிருந்தால் நமது மரணகாலத்தில் அந்த ஸம்ஸாரஞாபகமே உண்டாகும். அப்படி உண்டாகாவண்ணம் இப்போதிருந்தே ஈஸ்வரபக்தி அதிகமாய்ச்செய்துவந்தால் அப்போது ஈஸ்வர ஞாபகமே உண்டாகும். அவ்வாறு உண்டானவர்களுக்கு மறுஜன்மத்தில் மேலானபதவிக்கு ஆத்மா சென்றுவிடுமென்று அறியக்கடவீர்களாக.

மனம் ஸுஷுப்தியில் ஹ்ருதயகமலத்திலிருக்கும் பரமாத்மஸ்வரூபத்தில் சிலநேரம் லயித்து (அடங்கி) இருக்கும். பிறகு, பரமாத்மாவினின்று மனம் பின்னிட்டு (வேறாய்

ஜாக்ரத்திற்குவந்தவுடன் நித்திரைவிட்டெழுந்து ஸுகமாய் நித்திரித்து எழுந்தேனென்று சொல்லுகின்றது. அந்தமனம் அஜ்ஞானத்துடன்கூடி ஆத்மாவில் லயித்திருந்தபடியால் ப்ரஹ்மானந்தஸுகம் அவ்விடம் தோன்றவில்லை. மனம் அஜ்ஞானத்துடன்கூடி ஸுஷுப்தியில் இல்லாமல் ஜாக்ராவஸ்தையிலிருந்து பத்மாஸனத்துடன் உட்கார்ந்து கண்களைமூடி நித்திரையைப்பிடித்து எந்தவெண்ணங்களுமில்லாமல் உட்காரவேண்டும். அப்போது மனம் வெளியிலோடாமல் நின்றிருப்பதனால் சில நிமிஷங்களுக்குள் தேஹமாத்யந்தம் ஜில்ஜில்லென்றிருந்து ஓர்ஸுகத்தை உண்டாக்கி புருவமத்தியில் இழுத்துப்பிடிப்பதுபோலிருக்கும். அப்படி சிலநேரம் இருந்தபிறகு ஸாஜ்ஞைதப்பி தன்னைத்தான் மறந்துவிடுகின்றான். அப்போது ஓர்விதமான ஆனந்தத்தையுண்டாக்குகின்றது. அந்த ஆனந்தம் இவ்விதமாயிருக்கின்றதென்று இதிலெழுத புத்திக்கு எட்டாததாயிருக்கின்றது. ஸாதாரணமாய் ஸம்போககாலத்தில் ஸுகமாகிலும் அல்லது ப்ரபோஜனமாகிலும் ஸ்கலிதமாகும்போது இவ்வித ஸுகமாயிருக்கின்றதென்று ஸ்த்ரீ புருஷர்களால் சொல்ல ஸாத்யமாகாமலிருக்க இந்த ப்ரஹ்மானந்த ஸுகத்தைச்சொல்ல யாவரால்தான் முடியும். இந்தஸுகம் ஹரிஹராதிகளாலும் சொல்லக்கூடியதல்ல. இது, அநுபவிக்கப்பட்டவர்களுக்கு மாத்திரம் தெரியவருமேயொழிய இவ்விதமாயிருக்கின்றதென்று இதரர்களுக்குச்சொல்ல அவர்களால் ஸாத்யமாகாது. நிஷ்டையில் உட்கார்ந்து மனம் ஸூன்யமாகும் ஸமயத்தில் ஶரீரமெல்லாம் ஜில்ஜில்லிப்பை உண்டாக்கும் வரையில்மாத்திரம் சொல்லலாமேயொழிய அதற்குமேல் சொல்லமுடியாது. இந்த ஸுகம் அடையவேண்டுமென்று கோரப்பட்ட புருஷன் ப்ராணாயாமம் அப்யஸித்துவந்தால் ஶீக்ரமாய் இந்தஸுகம் அநுபவிக்கலாம். அப்படி ப்ராணாயாமம்செய்ய ஶக்தியில்லாதபுருஷர்கள், இதில் உபதேசித்திருக்கும் "ஸோஹம்" மந்த்ரம் "பஞ்சாக்ஷர" மந்த்ரம், இவைகளில் ஏதாகிலும் ஒன்றை எடுத்துக்கொண்டு ஶ்வாஸத்துடன் சேர்த்து சிலகாலம் அப்யஸித்துவந்தால் மனம் ஓர் நிலையில் நிற்கும். பிறகு அந்த ஓர் நிலையுமற்று முன்சொல்லிய ப்ரஹ்மானந்த ஸுகத்தை அடைவார்கள்.

பஞ்சாக்ஷர மந்த்ரத்தினால் உண்டாகும் பலன்:

—*—

ப்ரபஞ்சத்திலுள்ள எல்லா க்ஷேத்ரங்களிலும் ப்ரஸித்தியடைந்தது 'காசீ' க்ஷேத்ரம். இது, ப்ரஹ்மருஷி, தேவருஷி, ராஜருஷி இவர்களால் பூஜிக்கப்பட்டது. இந்தக்ஷேத்ரம் கைவல்யத்தை ப்ரஸாதிக்கத்தக்கது. ப்ரஹ்ம ஹத்தி முதலாகிய மஹாபாபங்களையும் நாசஞ்செய்யத்தக்கது. இது, ப்ரளயத்தில் ஜலத்தில் மூழ்காமலிருப்பதற்காக காலபைரவன் தன் சூலத்தினால் தாங்கிக்கொண்டிருக்கப்பட்டது. இந்த காசீ க்ஷேத்ரத்தில் கணபதி, காலபைரவன், பிந்துமாதவன், விச்வேச்வரன், பார்வதி, குஹை, பாகீரதி, மணிகர்ணிகா முதலானவைகளும் உண்டென்று காசிகாண்டத்தில் சொல்லியிருக்கின்றது. இப்படி ப்ரஸித்தியடைந்த க்ஷேத்ரத்தை விச்வநாதசங்கர் என்னும் அரசன் அரசாண்டுவந்தான். அவனுக்கு காசீவிச்வநாதர் க்ருபையால் ஓர் பெண்குழந்தை உண்டாயிற்று. அந்தக் குழந்தைக்கு 'களாவதி' என்று நாமகரணம் வைக்கப்பட்டு வளர்ந்துவந்தது. இக்குழந்தைக்கு எட்டுவருஷங்கள் பூர்த்தியாயின. இப்படியிருக்க ஒருநாள் 'தூர்வாஸ' மஹருஷி காசிராஜனிடம் வந்தார். ராஜன், அவரைக்கண்டு ஷோடசோபசாரங்களால் பூஜித்து அர்க்ய பாத்யம் செய்து பாததீர்த்தத்தை உட்கொண்டு சிரஸில் ப்ரோக்ஷித்துக்கொண்டு ஷட்ரஸோப பலங்களால் உபசரித்து ருஷிவந்த காரியத்தைக்குறித்து கேட்டான். ராஜனிடம் சிலகாலம் இருக்க வேண்டுமென்று எண்ணிவந்ததாய் ருஷி சொல்லினர். அப்போது அரசன் தன்குமாரத்தியை வரவழைத்து "அம்மா! இவர் தூர்வாஸமஹருஷி! இந்தமஹாத்மா ஈச்வரனுக்கு ஸமானமானவர். நாம் முன்ஜன்மங்களில் ஏதோ நல்ல புண்யம் செய்திருக்கின்றோம். அந்தப் புண்யவிசேஷத்தினால், இந்த மஹானுபாவர் நமது க்ருஹத்திற்கு எழுந்தருளினார்; இவர் எழுந்தருளியது எப்படி இருக்கின்றதென்றால், "பாததூளி பட்டதலால் இவ்வுலகம் பாக்யம் எய்தவே" என்பதுபோல் இருக்கின்றது.

இவரது பாதஸம்பந்தம் க்ருஹத்தில்பட்டமாத்ரத்தில் நமது முன்னோர்களும் நாமும் பவித்ரர்களானோம். இப்படிப்பட்ட

மஹாத்மா சிலகாலம்வரையில் நம்முடனிருக்க உத்தேசித்து வந்திருக்கின்றனர். இவரை சுச்ரூஷை செய்தால் ஜகத்தெல்லாம் ஸந்தோஷமடையும். ஆதலால், நீ இவருக்குவேண்டிய உபசாரணைகளைச் செய்துவரக்கடவாய்" என்று அரசன் ஆஜ்ஞாபித்தான். இவைகளையெல்லாம் ராஜகுமாரத்தி கேட்டு மிகவும் ஸந்தோஷித்து தூர்வாஸமஹருஷியினது பாதத்தில் ஸாஷ்டாங்கமாய் விழுந்து நமஸ்கரித்து எழுந்துநின்று இருகைகளையுங்குவித்து அஞ்சலிஹஸ்தத்துடன் நமஸ்கரித்து "ஓ மஹானுபாவ! எங்கள் வம்ச பரம்பரையிலுள்ளவர்களெல்லோரும் எப்படிப்பட்ட புண்யங்களைச்செய்தவர்களோ தெரியவில்லை. நாங்கள் செய்த புண்யமே புண்யம். தேவரீருடைய பாததூளி இங்கு பட்டமாத்ரத்தில் நாங்களும் எங்கள் வம்சத்தில் வந்தவர்களெல்லோரும் க்ருதார்த்தர்களானோம்" என்றுசொல்லி நமஸ்கரித்து, 'தேவரீருடைய நந்தவனத்திற்கு எழுந்தருளவேண்டு' மென்றுசொல்லி தூர்வாஸ மஹருஷியினது ஹஸ்தத்தைப் பிடித்துக்கொண்டு தனதுநந்தவனத்திற்கு அழைத்துச்சென்று அவ்விடமிருக்கும் அரண்மனையிலுள்ள ஓர் உன்னதாஸனத்தின் மீது எழுந்தருளச்செய்து உபசரித்தனள். பிறகு ப்ரதிதினம் ஸந்த்யாகாலங்களில் ஸ்நானம் செய்வித்து நல்ல பட்டுபீதாம்பரங்களையுடுத்தி பூஜைக்குவேண்டிய வஸ்துக்களையெல்லாம் சேகரித்துவைத்து தர்ப்பாஸனம் வ்யாக்ராஸனம் முதலானவைகளை அமைத்துவைப்பாள். பிறகு ருஷியானவர் பூஜாஅறைக்குள்சென்று பூஜையை முடித்துக்கொண்டு வெளியில் வந்தவுடன் மதுரமான அறுசுவைபதார்த்தங்களுடன் திவ்யமாகிய அன்னம் பரிமாறி மிகவும் பரிசுத்தமான குளிர்ந்தஜலம் வைத்து விசிறியினால் விசிறிக்கொண்டிருப்பாள். ருஷியானவர் புஜித்து எழுந்தவுடன் கைகால்களை சுத்திசெய்து ஹம்ஸதூளிகா மஞ்சத்தின்மீது சயனிக்கும்படிசெய்து ச்ரமம் தீரும்படி பாதங்களைப்பிடித்து அவர் நித்ரித்த பிறகு ருஷியினது உச்சிஷ்டம் புஜிப்பதற்காக தான் எழுந்துசெல்வது வழக்கம். இவ்விதமாய் ப்ரதிதினம் அவரை இணைபிரியாமல் உபசரித்துவந்தனள். சிலமாதங்கள் சென்றவுடனே அவருக்கு இக்கன்னிகைமேல் விசேஷப்ரீதியுண்டாய் மிகவும் ஸந்தோஷித்து ராஜகுமாரத்தியைப்பார்த்து பின்வருமாறுசொல்லி உபதேசஞ்செய்யப்போகின்றார். "அம்மா குழந்தாய்! உனது நல்ல வ்ருத்திக்கும் உன் விநயத்திற்கும் விவேகத்திற்கும் மிகவும்

ஸந்தோஷமடைந்தேன். உனக்கு "பஞ்சாக்ஷர" மந்த்ரத்தை இப்போது உபதேசிக்கின்றேன்; அதைப் பெற்றுக்கொண்டு ஸதாகாலமும் அனுவேளையும் சோராமல் இடைவிடாத ஜல ப்ரவாஹம்போல் அதையே ஸ்மரித்துக்கொண்டு ஸமாதிநிஷ்டையில் இருந்து காலம்கழித்துவருவாயாகில் உனது ஸஞ்சித கர்மங்களெல்லாம் ஒழிந்து மஹத்தாகிய கைவல்யபதவியை அடைவாய்" என்றுசொல்லி பஞ்சாக்ஷர மந்த்ரத்தை உபதேசித்துச்சென்றார். அந்த பஞ்சாக்ஷரமந்த்ரம் உபதேசம்பெற்ற நாள்முதல் விவாஹமாகும் வரையில் நித்ரைவேளைதவிர மற்றக்காலங்களெல்லாம் அந்த த்யானத்திலேயே இருப்பாள். சில வருஷங்கள் சென்றவுடன் ராஜகுமாரத்தி யௌவனத்தை அடைந்தாள். பிறகு ராஜன் தன் குமாரத்திக்கு விவாஹம் செய்ய உத்தேசித்து இவளுக்குத்தகுந்த வரன் எவ்விடமிருக்கின்றானென்று தூதனுப்பினான். தூதர்கள்சென்று பலவிடங்களில் திரிந்து எங்கும் தகுந்த வரன் கிடைக்கவில்லையென்று வந்துவிட்டார்கள். பிறகு சிலதூதர்களை வேறுவேறிடங்களுக்கு அனுப்பினான். அவர்களும்சென்று பலதேசங்களிலும் திரிந்துபார்த்து தக்கவரன் அகப்படாமல் கடைசியில் மதுராபுரிக்குச்சென்றார்கள். அந்ததேசத்தை ஆண்டுவரும் யதுவம்சத்தைச்சார்ந்த தாசார்ஹன் என்னும் அரசனுக்கு ஓர் குமாரனிருந்தான். அவன், நல்ல ஐச்வர்யமும் கீர்த்தி ப்ரபாவமுடையவனும் ஸகல ப்ரஜைகளின் ஸௌக்யத்தைக் கோரியவனென்று தூதர்கள் ப்ரஜைகளால் தெரிந்துகொண்டு தன் ராஜனிடம் சென்று ராஜகுமாரனது பராக்ரமங்களையெல்லாம் சொல்லினார்கள். ராஜன், அதைக்கேட்டு மிகவும் ஸந்தோஷித்து அவனே நமது குமாரத்திக்குத் தகுந்த வரன் என்று தீர்மானித்து, மதுராபுரி அரசனையும் அரசகுமாரனையும்வரவழைத்து வேதவிதிப்படி கல்யாணமுஹூர்த்தத்தில் விவாஹம் செய்வித்துக்கொடுத்தான். பிறகு மாப்பிள்ளையுடன்கூட, தன் குமாரத்தியையும் சில தாதிகளையும் யானை குதிரைகளையும் சில ஸைன்யங்களையும் கூட்டி அனுப்பினான். அரசகுமாரன் இவர்களை அழைத்துக்கொண்டு தன்பட்டணம் போய்ச்சேர்ந்தான். பிறகு, ஒருநாள் நல்ல ஸமயத்தில் நிஷேகமுஹூர்த்தம் செய்வித்தார்கள். முஹூர்த்த அறையில் சென்றவுடன் அரசகுமாரன் தன் பத்னியின் ஹஸ்தத்தைப்பிடித்தான். பிடித்தவுடன் அக்ஷணமும், உலைகளில்

தில் வைத்துக் காய்ச்சிய இரும்பு எவ்வளவு சூடாயிருக்குமோ அவ்வளவு சூடாயிருந்தது. அரசகுமாரன் அந்தச் சூட்டை ஸஹிக்கமுடியாமல் கையை விட்டுவிட்டு, மஹா ஆச்சர்யப்பட்டு தன் நாயகியைப்பார்த்து "உன் தேஹத்தை தீண்டிய மாத்ரத்தில் என்சரீரமெல்லாம் நெருப்பைப்போல் தீச்சுடு கொளுத்திவிட்டதற்குக் காரணமென்ன" வென்றுகேட்டான். அப்போது ராஜகுமாரத்தி, "ஓ அரசே! உமது சரீரம், ஆசாரங்களில்லாமல் ஜீவஹிம்ஸைசெய்து மாம்ஸங்களைப் புஜித்து வளர்ந்து நீசத்வமடைந்திருக்கின்றது; எனது சரீரமோ அப்படியல்ல துர்வாஸமஹருஷியால் பஞ்சாக்ஷரமந்த்ரம் உபதேசம் பெற்று அதை ஸதாகாலமும் இடைவிடாத ஜலப்ரவாஹம்போல் ஜபித்துக்கொண்டுவருகிறபடியால் ஸகலபாபங்களும் நசித்து இச்சரீரம் பவித்ரமாய்விட்டது; அதனால் அக்நியை ஒப்பாயிருக்கின்றது. இப்படிப்பட்ட பரிசுத்தமுடைய சரீரத்தை நீர் தீண்டலாகுமா? வ்ரதம்செய்யும் ஸதீகள் உபவாஸமுள்ள ஸ்த்ரீகள் கர்ப்பிணிஸ்த்ரீகள் தீர்க்கவ்யாதியுள்ள ஸ்த்ரீகள் முதலானவர்கள் ஸம்போகத்திற்கு அர்ஹரல்லர்" என்றுசொல்லினாள். இதைக்கேட்டராஜகுமாரன் மிகவும் சிந்தாக்ராந்தனாய் தன்நாயகியைப்பார்த்து ஓ நாயகி! நீயே அப்படிப்பட்ட மஹாபாபங்களையெல்லாம் நிர்மூலம்செய்யத்தக்க மஹா மந்த்ரமாகிய "பஞ்சாக்ஷர"த்தை நீ எனக்கு உபதேசம் செய்ய வேண்டுமென்றுகேட்டான். அதற்குப் பத்னியானவள் சொல்லுகின்றாள், "ஓ ப்ராணவல்லபா! நான் உமக்கு நாயகியாயிருக்கின்றேன். ஆதலால், இந்த மஹாபஞ்சாக்ஷரத்தை உமக்கு உபதேசிக்கலாகாது; நமது குலகுருவாகிய கர்கமஹாமுனியிடம் உபதேசம்பெற்றுக்கொண்டு பவித்ரரானபிறகு என்னைத்தீண்டலா"மென்றுசொல்லி தன்நாயகனை அழைத்துக்கொண்டு அர்த்தராத்ரிவேளையில் கர்கமஹாமுனி ஆச்ரமத்திற்குச்சென்றாள். அவ்விடம்சென்று, தாம் வந்திருக்கும் சேதியை கர்கமஹாமுனிக்குக் கூறும்படி சிஷ்யர்களிடம்சொல்லியனுப்பினள். சிஷ்யர்கள்சென்று இளவரசியார்வந்திருக்கும் சேதியை முனீச்வரரிடம் சொல்லினர். பிறகு முனீச்வரர் அவர்களை ஆச்ரமத்திற்குள் வரவழைத்து தம்பதிகளைத்தன் பீடத்து உட்காரும்படிசொல்லி ஆசீர்வதித்து "அம்மணி! நீங்கள் பள்ளியறையைவிட்டு இந்த அர்த்தராத்ரிவேளையில் இவ்விடத்திற்கு யாத்ராசாரிகளாய்வருவதற்குக் காரணமென்ன" என்று

கேட்டார். இளவரசியும் இளவரசனும் முனீஸ்வரரது பாதத்தில் வீழ்ந்து எழுந்து நமஸ்கரித்து நின்று,

"ஓ ஸ்வாமீ! இவ்வரசன் ப்ராக்ருத புருஷனையும் ஸதாசார வர்ஜிதனுமிருந்து பரஸ்த்ரீகளைமோஹித்து ஜீவஹிம்ஸை செய்து மாம்ஸங்களைப்புசித்து மஹாபாபங்களுக்குட்பட்டு ரோகவமடைந்திருக்கின்றார். ஆதலால், இவரது பாபகர்மங்களையெல்லாம் (பஞ்சப்பொதியிலபட்ட நெருப்புப்பொறி எவ்விதமாய் பஞ்சப்பொதிகளை பஸ்மம் செய்விக்கின்றதோ அது போல்) பஸ்மம்செய்விக்கத்தக்க மஹாமந்த்ரமாகிய 'பஞ்சாக்ஷர'த்தை இவ்வரசனுக்கு உபதேசம் செய்விக்கும்பொருட்டு இந்த அர்த்தராத்ரிவேளையில் தேவரீருடைய ஆஸ்ரமத்திற்கு வந்தோம். இவரது சரீரம் பவித்ரமாகும்வரையில் அடியாளைத் தீண்டலாகாது" என்று முனிவரிடம் சொல்லினள். இவ்வார்த்தைகளையெல்லாம் கேட்ட கர்கமஹாமுனி மிகவும் ஸந்தோஷித்து அவர்களிருவரையும் யமுனாநதிக்கு அழைத்துச் சென்று களாவதியைக் கரைமீதிருக்கும்படி சொல்லி அரசனை நதியில் இறங்கும்படி செய்து ஸங்கல்பபூர்வகமாய் அகமர்ஷண (பாபங்களைப்போக்கடிக்கத்தக்க) ஸ்நானம்செய்வித்து விபூதியைத் தரிக்கும்படிச் சொல்லி, பிறகு அரசகுமாரன் கரைமீது வந்தவுடன் கிழக்குமுகமாய் நிற்கும்படிசெய்து அரசனது இரண்டு ஹஸ்தங்களையும் ருஷியினது பாதத்தின்மீது வைக்கும்படிசொல்லி ஸாஸ்த்ரவிதிப்படி உடல் பொருள் ஆவி இம்மூன்றையுந்தத்தம்செய்துகொண்டு ஹஸ்தமஸ்தகஸம்யோகம் செய்து சிவபஞ்சாக்ஷரீமந்த்ரம் உபதேசித்தார். உபதேசம் பெற்றவுடன் மனதை ஸ்திரமாய்நிறுத்தி பஞ்சாக்ஷர மந்த்ரத்தை ஸ்மரித்துக்கொண்டிருந்தான். இப்படி ஸ்மரித்துக் கொண்டிருக்கும்போது அரசனுடைய பாபகர்மங்களெல்லாம் அநேகங் காகரூபங்கொண்டு அரசனது சரீரத்திலிருந்து புறப்பட்டு கணமாத்ரத்தில் படபடவென்றடித்துக்கொண்டு எரிந்து சாம்பலாய் யமுனாநதியில் விழுந்தன. இவைகளையெல்லாம் அரசகுமாரன்பார்த்து மிகவும் ஆச்சர்யப்பட்டு இவ்விஷயங்களெல்லாம் தன் குருவாகிய கர்கமஹரிஷியிடம் சொல்லினன். அதைக்கேட்ட ருஷியானவர்சொல்லுகின்றார், "ஓ அரசனே நீ முன்ஜன்மங்களில் செய்துவந்த பாபகர்மங்களெல்லாம், பஞ்சாக்ஷரமந்த்ர ஜபத்தால் காகரூபங்கொண்டு (பஞ்சப்பொதியிலபட்ட தீப்பொறியானது

பஞ்சப்பொதிகளை எவ்விதமாய் பஸ்மம்செய்விக்கின்றதோ அதுபோல்) இந்த பஞ்சாக்ஷர அக்னி உன் பாபகர்மங்களையெல்லாம் பஸ்மம்செய்துவிட்டது. ஆதலால், நீ இன்றுமுதல் இந்த பஞ்சாக்ஷரமந்த்ரத்தை ஸதாகாலமும் ஸ்மரித்துக்கொண்டே வரவேண்டும்" என்றுசொல்லி இளவரசனையும் இளவரசியையும் ஆசீர்வதித்து அனுப்பினார். பிறகு அரசகுமாரன் குருவினிடம் ஆஜ்ஞைபெற்றுத் தன் நகரம்சேர்ந்து தம்பதிகளிருவரும் பஞ்சாக்ஷரமந்த்ரஜபம் தவறாமல் ஸதாகாலமும் ஸ்மரித்துக்கொண்டுவந்தார்கள். அப்படிப்பட்ட பஞ்சாக்ஷரமந்த்ரம் ஜபம்செய்யும்முறையை இதனடியில் சக்ரரூபமாய்க் காட்டி உபதேசித்திருக்கின்றோம். அதுபோல ஸதாகாலமும் இடைவிடாத ஜலப்ரவாஹம்போல் அதாவது பேசும் வேளைகளில் தவிர மற்றக்காலங்களெல்லாம் அணுவேனும் சோராமல் அப்யஸித்து வரப்பட்டவர்களினுடைய புண்யபாப கர்மங்களெல்லாம் பஞ்சாக்ஷர அக்னியினால் பஸ்மமாய் மோக்ஷமென்னும் பதவியைத் தப்பாமல் அடைவார்கள்.

பஞ்சாக்ஷர மந்த்ரோபதேசம்.

பஞ்சாக்ஷரமந்த்ரம் ஜபம்செய்யவேண்டுமென்று கோரப்பட்ட ஸ்த்ரீகளாயினும் புருஷர்களாயினும் மனம் சஞ்சலமில்லாமல் (ஓடாமல்) அசைவற்று நிற்பதற்காக ஸப்தங்கள்கேளாத ஏகாந்த அறையைப் பூஜைவீடாகச் செய்யவேண்டும். அவ்வீட்டில் மனம் லயிக்க இருக்க பரிமளமுள்ள வாஸனை வஸ்துக்களை வைத்து அதில் இதரர்கள் ப்ரவேசிக்காதபடி நிர்ணயம்செய்து, தான் பஞ்சாக்ஷரமந்த்ரம் ஜபம்செய்வதற்காக ஓர்பெரிய மணையின்மீது மான்தோல் அமைத்து அதன்மீது அபானவாயு படாவண்ணம் வெள்ளைவஸ்த்ரம் மடித்துவிரித்து சித்தாஸனத்துடன் உட்கார்ந்து இடுப்பு வளையாமல் சித்ரப்பதுமைபோல் ஸரியாய்நிறுத்தி முகத்தைநிமிர்த்தி நேராய்நிறுத்தி இந்நூல் 204-வது பக்கம் காட்டியிருக்கும் 'சின்முத்திரை'யைப் பிடித்து அடியில்காட்டியிருக்கும் சக்ரத்தில் அமைத்துள்ள பஞ்சாக்ஷரமந்த்ரம் ஜபஞ்செய்யவேண்டும்.

ந ம சி வ ய

இதுவே பஞ்சாக்ஷரமந்த்ரம்.

காண்பேனே 'ந'காரமது 'ம'காரப்புக்கும்
கருத்தான மகாரமது சிகாரப்புக்கும்
தெண்பேனே சிகாரமது 'வ'காரம்புக்கும்
சிவசிவா வகாரமது 'ய'காரம்புக்கும்
கோண்பேனே யகாரமது கட்டிற்புக்கும்
குருவான கட்டோடி மணியிற்புக்கும்
கண்டான மணியோடி பரத்திற்புக்கும்
கற்பூரத்தான் சிவயக்கு சிவத்தைச்சேர்

காரமாகிய தேசியாய் நந்தெனவெறுத்து
மகாரமாகிய மயலெல்லாம் வேருடன்களைந்து
வகாரமாகி வணக்கிருக்கும் பிரப்பாரி
சிகாரமாகிய சிவனையடைந்தனன் ஜீவன்.

ந ம சி வ ய

என்னும் நான்கு மந்த்ரங்களுக்கும் 'ய' என்னும் மந்த்ரம் ஜீவனாயிருக்கின்றது. இந்த 'ய' என்னும் ஜீவனால் 'நமசிவ' என்னும் மந்த்ரங்களை ச்வாஸத்துடன் சேர்த்து உள்ளுக்கிழுத்து வெளியில்விடவேண்டும். இந்த பஞ்சாக்ஷரமந்த்ரமே, ப்ருதிவி அப்பு தேயு வாயு ஆகாசங்களெனும் இவைகளே ப்ரஹ்மா விஷ்ணு ருத்ரன் மஹேச்வரன் ஜீவன். இவ்வைவருமேபோ களும், ஸ்வாதிஷ்டானம் மணிபூரகம் அநாஹதம் விசுத்தி ஆஜ்ஞேயங்களுக்கு அதிதேவதைகளாயிருந்து ச்வாஸத்தை நடத்திக்கொண்டு வருகின்றார்கள். இந்த குரு ரஹஸ்யத்தை அடியில்சொல்லுகின்றோம். அதை அறிந்து அதுபோல் அப்யாஸம் செய்துவரவேண்டும்.

கெ. 5-ல் காட்டிய படத்தில் 'ய' என்னும் மந்த்ரத்தை மத்தியிலிருக்கும் 'கால்' மூக்குத்தண்டு. அதன் வலது இடது பாகங்களிலுள்ள மூக்கின் ரந்த்ரங்கள் சிவன் (ஸூர்யநாடி) சக்தி (சந்த்ரநாடி)கள் நடக்கும்படியான மார்க்கங்கள். இம்மார்க்கமாய் 'ய' என்னும் ஜீவாக்ஷரத்தை நீக்கி 4, 3-கெம்பரில்காட்டிய 'நம' என்னும் மந்த்ரத்தை ச்வாஸத்துடன் உள்ளுக்கிழுத்து ச்வாஸம் வெளிவிடாமல் சிலநேரம் 'ஓம்' என்று மனதினால் நினைந்து மறுபடியும் ச்வாஸம் வெளியில் விடும்போது 2, 1-கெம்பரில் காட்டிய 'சிவ' என்னும் மந்த்ரத்துடன் வெளியில் விடவேண்டும்.

அதாவது ஒவ்வொரு ச்வாஸமும் உள் ப்ரவேசிக்கும்போது அதனுடன் 'நம' என்னும் மந்த்ரத்தைச்சேர்த்து உள்ளுக்கிழுத்து 'ஓம்' 'ஓம்' என்னும் மந்த்ரத்துடன் சற்றுநேரம் நிறுத்தி மறுபடியும் ச்வாஸம் வெளிவிடும்போது 'சிவ' என்னும் மந்த்ரத்துடன் விட்டு மறுபடியும் ச்வாஸம் உள் செல்லும்போது 'நம' என்னும் மந்த்ரத்தினால் உள்ளுக்கிழுத்து 'ஓம்' என்னும் மந்த்ரத்துடன் சற்றுநேரம் நிறுத்தி மறுபடியும்

ஸ்வாஸம் வெளிவிடும்போது 'சிவ' என்னும் மந்த்ரத்துடன் சேர்த்து விட்டுக்கொண்டு வரவேண்டும்.

என்றால், ஸ்வாஸம் 'நம' என்னும் மந்த்ரத்துடன் உள்ளுக்கிழுத்து 'ஓம்' என்னும் மந்த்ரத்துடன் சிறுநேரம் நிறுத்தி ஸ்வாஸம் வெளிவிடும்போது 'சிவ' என்னும் மந்த்ரத்துடன் வெளியில் விடவேண்டும்.

'ய' என்பது ஜீவன். இந்தஜீவனால் மற்ற நான்கு மந்த்ரங்களையும் ஜபிக்கவேண்டும். கை-பீ-ல், காட்டிய 'ய' என்னும் அக்ஷரத்தில் இரண்டு கால்கள் காட்டப்பட்டிருக்கின்றன. அந்தக்கால்களே, உஸ்வாஸ நிஸ்வாஸங்களாகும். அந்த உஸ்வாஸ நிஸ்வாஸங்களை 'ய' என்னும் ஜீவன் உள்ளுக்கும் வெளிக்கும் இழுத்துக் கொண்டிருக்கின்றதென்று அறிவீர்களாக. இதை யாரொருவர் விடாமுயற்சியாய் அப்யஸித்து வருகின்றார்களோ அப்படிப்பட்டவர்களின் மனம் இறந்து ஆத்மஸ்வரூபத்தில் லயித்து ஸமாதி அடைந்த ஸுகம் அடைவார்கள். இதன் அநுபவம் ப்ரத்யக்ஷமாய் அப்யாஸம் செய்து வரப்பட்டவர்களுக்கு மாத்ரம் தெரியவருமேயொழிய இதரர்களுக்குத் தெரியவரமாட்டாதென்று அறிவீர்களாக.

ஞானமடையும் மார்க்கம்.

"தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்
தடந்திரையா லெற்றுண்டு பற்றொன்றின்றிக்
கனியைநேர் துவர்வாயா ரென்னுங் காலாற்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்டு,—"

ஓ பரப்ரஹ்மமே! யான், ஜனனமரணமென்னும் கடலில்மூழ்கி, அஹங்காரமாகிய முதலைவாயிற் சிக்கி, இருவினைகளாகிய அலைகளால் எறியப்பட்டு, மாதர்களுடைய காமமாகிய சுழற்காற்றடிக்க, ஆசையாகிய காட்டாறு மேன்மேலும்வந்து மோத, திறந்தோணிக்காரர்போல, ஞானமாகிய மரக்கலத்தையும் கைசோரவிட்டு, மதிமயங்கி, திருட்டுக்கப்பல்போன்ற யமதூதர் வருவரேயென்று அஞ்சி அருவியாறு போலக் கண்ணீரைப் பெருக்கிநிற்கும் எளியேனை மோக்ஷமாகிய கரையைச் சேருமபடிக்குக் கருணைசெய்வாய்.

அதாவது, ஸம்ஸாரமானது இருளடைந்தகாட்டைப்போன்றது; மிகவும் பயங்கரமானது; அது வீடு வாசல் தோட்டம் தாரபுத்ர மித்ர களத்ர தனதான்யாதிகள் முட்களையுடைய புதராயிருக்கின்றது. இதில், காம க்ரோத லோப மோஹ மத மத்ஸரமென்னும் ஆறு கள்வர்களும், ரோகமென்னும் வ்யாக்ரமும், பாபமென்னும் கோரராக்ஷஸர்களும், துர்வாஸனையென்னும் ஸர்ப்பங்களும், (இழத்தன)மென்னும் பிசாசமும், ம்ருத்யுவென்னும் ஸஹஜ ஸ்வபாவமும் இவ்வரண்ய ப்ரதேசத்தில் தன்னிஷ்டம்போல் திரிந்து கொண்டிருக்கின்றன. தாரித்ரியம் ஹிமவத் பர்வதம்போல் சுற்றிலும் கோட்டைகட்டியவண்ணம் சுற்றிக்கொண்டிருக்கும்; ரோகஷத்தோஷங்கள் பயங்கரமான பனிக்காற்றைப் போன்றன. துக்கமென்னும் காடு மஹாவேகமாய்த் தழைத்துக்கொண்டேயிருக்கும். விஷயங்கள் தேள்களாகவும், இந்த்ரியங்கள் ஸர்ப்பங்களாகவும்,

காமக்ரோதாதிகள் வேங்கைகளாகவும், ஸங்கல்ப விகல்பங்கள் ஸிம்ஹங்களாகவும், எண்ணங்கள் வேட்டை நாய்களாகவும், அஜ்ஞானம் காடாந்தகாரமாய் மூடிக்கொண்டு மாயாக்காரத்தில் கட்டுப்பட்டு மார்க்கங்காணாமல் ஸம்ஸாரமென்னும் ஸமுத்ரத்தில் அதாவது மனமென்னும் மச்சமானது கோரமாகிய ஸம்ஸாரமென்னும் ஸமுத்ரத்தில் தாராபுத்ராதிகளென்னும் ஜலத்தில் அழுந்தி வெளியேறும் தோன்றாமல் முகளிருந்து அர்த்தபலவரையில் கீர்த்தாம் புண்யபாபங்களுக்குட்பட்டு வண்டியின் சக்ரம்போல் திரிந்துதிரிந்து விஸ்ராந்தியடைய யுக்தமான ஸ்தலம் எங்கும் அகப்படாமல் ப்ரமப்பட்டு, முன் எத்தனை ஜன்மங்கள் எடுத்தேனோ இனி எத்தனை ஜன்மங்கள் எடுப்பேனோவென்று பயந்து புத்ரமித்ர களத்ர தனதான்யாதிகளில் இச்சையில்லாதவனாய் ஸ்வர்க்கம்முதல் ஸத்யலோகம்வரையில் அநுபவிக்கும் ப்ரதான ஸாதனங்களாகிய நித்ய நைமித்யாதி கர்மங்களை நிஷ்காம பலாபேக்ஷையில்லாமல் ஈஸ்வரார்ப்பணமாய்ச்செய்து சித்தசுத்தியடையவேண்டும். காமமென்னும் மதகஜம் (மதயானை) ஜ்ஞானமென்னும் அங்குசம் ஒன்றினாலே வசமாகுமேயன்றி மற்றவைகளால் வசப்படமாட்டாது. ராக்ஷஸர்கள் எவ்வளவோ கஷ்டப்பட்டு ஸம்பாதித்துக்கொண்ட அம்ருதத்தைக் காமத்தினால் நிமிஷத்தில் கஷ்டப்படுத்திக்கொண்டார்கள். காமமென்பது ஸம்போகமேயன்று, எந்த வஸ்துவும் வேண்டுமென்று இச்சிப்பதே காமமாகும்.

மோஹ ப்ரவாஹங்களில் வீழ்ந்து மூழ்கிக்கொண்டிருக்கும் மனிதர்களுக்கு எவ்விதமாய் ஜ்ஞானோதயமாகும்? சரீரம் யாருடையது? சரீரத்திற் குடியிருப்பவன் யார்? என்பதையும் தெரிந்து ஆத்மதத்வத்தை விசாரிக்குமளவில், இந்த்ரியங்களுக்கெல்லாம் மனமே ராஜன், இந்த ராஜனைப்பிடித்து சிறைச்சாலையில் அடைத்தபோது அதாவது பரப்ரஹ்ம ஸ்வரூபமாயிருக்கும் ஆத்மாவில் மனதை ஐக்யம் செய்தபோது சபலத்வமுடைய ஸங்கல்ப மென்னும் சேனைகளெல்லா

ஓடிப்போய்விடுவார்கள். (ஸ்ரீபகவத்கீதை அத்யாயம் 2 ஸ்லோகம் 60-61, பார்க்க.) விசாலமாகிய ஆகாயத்தை மேகங்கள் மூடிக்கொண்டு காணப்படாமற் செய்வதுபோல் ஸ்தூல ஸூக்ஷ்ம தேஹத்தின் மத்தியில் அத்விதீயமான ஸத்வஸ்து நிறைந்திருக்கின்றது. ப்ரஹ்மாண்டத்திலுள்ள பதார்த்தம் பிண்டாண்டத்தில் உண்டு. அது, மாயையால் மூடப்பட்டிருப்பதால் காணப்படாமலிருக்கின்றது; அந்த மாயையின் மஹிமையினாலேயே நான் என்னுடையதென்னும் ப்ராந்திகள் உண்டாயிருக்கின்றன. விவேகத்தினால் தத்வங்களை விசாரித்தபோது ப்ராந்தியும், அஜ்ஞானமென்னும் இருளும், பூர்வஜன்மங்களின் ஸஞ்சிதகர்மங்களும் ஸூர்யனைக்கண்ட இருளைப்போலும் பனியைப்போலும் தமக்குத்தாமாகவே ஒழிந்து நிர்மலத்வமடையும். த்வைதத்தைவிட்டு அத்வைதத்தைப் பார்க்குமளவில், ஸர்வத்திற்கும் எந்தப் பதார்த்தம் ஆதாரமாயிருக்கின்றதோ அந்தப்பதார்த்தமே உனக்கும் எனக்கும் காரணமாயிருக்கின்றது. அந்தப் பதார்த்தம் கண்களில்லாமலே ஸர்வ ஸர்வமும் பார்த்துக்கொண்டும், செவிகளில்லாமலே ஸர்வமும் கேட்டுக்கொண்டும், கைகளில்லாமலே ஸகலகார்யங்களைச் செய்துகொண்டும், கால்களில்லாமலே எங்கும் ஸஞ்சரித்துக் கொண்டும், வாயில்லாமலே அபரிமிதவாக்காய்ச் சொல்லிக் கொண்டும், மனமில்லாமலே ஸங்கல்பித்துக்கொண்டும், எந்த அவயவங்களும், எந்தரூபமும் இல்லாமல் ஸர்வமும் தானாய், ஸச்சிதானந்த ஸ்வரூபனாய், ஆதிமத்யாந்த ரஹிதனாய், அப்ரமேயனாய், அபரிச்சின்னனாய், வேதங்களினாலும், ஸத்புருஷர்களினாலும் நிரூபிக்கக்கூடாமல் ஸர்வஸாக்ஷியாய்ப் ப்ரகாசித்துக் கொண்டிருக்கும். அப்படிப்பட்ட பரமாத்மா தன் மஹத்வத்தினால் எதை நடத்தவேண்டுமானாலும் நடத்தும்.

இத்தகைய பரமாத்மாவை, எந்தமனுஷர்கள் தனது புத்ர களத்ராதிகளை விட்டு ஸதாகாலமும் த்யானிக்கின்றார்களோ அப்போப்பட்டவர்களுக்கு அந்தப்பரமாத்மா ஸஹாயஞ்செய்து

கொண்டிருப்பார். இப்படிப்பட்ட பரமாத்மா எவ்விடம் வஸிக்கின்றாரென்றால், நமது தேஹமத்தியில் புத்தியென்னும் குகையில் அந்தர்யாமியாய் ஸாக்ஷிஸ்வரூபமாய் ப்ரகாசித்துக்கொண்டிருக்கின்றார். இந்தப் பரமாத்மா, தேவ, மானவ க்ருமி கீடாதி ஸகல ஜந்துக்களிலும் இருந்துகொண்டு, ஸகல கார்யங்களையும் செய்வதைப் பார்த்துக்கொண்டு, ஸாக்ஷியாயிருக்கின்றார். இப்படியிருந்துகொண்டு மரணகாலத்தில் அவனவன் செய்யும் புண்யபாபங்களுக்குத்தக்க ஜனனத்தைத் தருகின்றார். ஆதலால், அதையறிந்து லோபத்வமில்லாமல் ஸத்கார்யங்களில் தனத்தை உபயோகப்படுத்தவேண்டும். ஸத்கார்யங்களில் தனத்தை உபயோகப்படுத்தாவிடில் மறு ஜன்மத்தில் தரித்ரனாய்ப் பிறப்பான். தாரித்ரிய தோஷத்தினால் யுக்தாயுக்த பரிஜ்ஞானமில்லாமல் பாபகார்யங்களில் ப்ரவேசிப்பான். பாபகார்யத்தினால் நரகம் ஸம்பவிக்கும். அதனால், ஜன்மங்கள்தோறும் தரித்ரனாய்ப்பிறந்து துஷ்கார்யங்களுக்கு மடிபிடித்து துன்மார்க்கனாய் பாபங்களுக்குட்பட்டு அதிக கஷ்டதசையை அனுபவிப்பான். அப்பேர்ப்பட்டவன் எப்பொழுதும் கடைத்தேறமாட்டான்.

"பரோபகாரார்த்த மிதம் சரீரம்" என்னும் வாக்யத்தை ச்ரவித்துத் தன்னை ஆச்ரயித்தவர்களுக்கும் ஜனங்களுக்கும் சக்த்யானுஸாரம் வஞ்சனையில்லாமல் எந்த விதத்திலாயினும் உபகாரஞ் செய்யவேண்டும். வ்ருக்ஷங்கள் ஸஹிதம் தம்மை ஆச்ரயித்தவர்களுக்கு நிழலையும், தம்மால் உண்டாகும் கனி வர்க்கங்களையும் தந்து உபசரித்துக் கொண்டிருக்கும். மேகங்கள் உலகத்திற்கு வேண்டிய ஜலத்தைத்தந்து ஆதரிக்கின்றன. ஜடபதார்த்தங்களுக்கே அவ்வளவு பரோபகாரார்த்த முண்டாயிருக்க விவேகமுடைய மனிதர்களுக்கு எவ்வளவு இருக்கவேண்டும். விசேஷித்தும் தனக்கு அபகாரம் செய்யப்பட்ட குரூர குணமுடையவனுக்கும் தீங்குசெய்யாமல் [illegible] உபகாரம் செய்யவேண்டியதே யொழிய கெடுதி செய்யக்

கொஞ்சமேனும் எண்ணலாகாது. இதரர்கள் எதைச் செய்தபோதிலும் அதில் தனக்கு அப்ரியமாய்த் தோன்றினால் அக்கார்யங்களைத் தான் அந்யர்களுக்குச் செய்யாமல் ஜாக்ரதையாய் ப்ரவர்த்திப்பது பரம தர்மமாகும்.

"அஹிம்ஸா பரமோ தர்ம:" என்றிருப்பதனால் எந்த ஜந்துக்களையும் ஹிம்ஸை செய்யலாகாது. ஹிம்ஸையென்றால், ஜந்துக்களை ஹிம்ஸிப்பதே யல்ல; இதரர்களின் மனதை நோகப்பேசுவதும் ஹிம்ஸையே. வ்யபிசாரமென்றால், புருஷனை வஞ்சித்து இதரர்களுடன் வ்யபிசரிப்பதல்ல; பரபுருஷனை மனதில் நினைப்பதும் வ்யபிசாரமே. பூஜையென்றால், கர்மா வாயினால் ஸ்துதிசெய்வதல்ல; மனசாந்தியுடன் செய்யும் பக்தியே பூஜை. ப்ரேமையென்றால், இருவரும் ஆலிங்கனம் செய்துகொள்வதல்ல; மனதில் எப்பொழுதும் மறவாமலிருப்பதே ப்ரேமை. ஆதரணையென்றால், பஞ்சபக்ஷ்ய பாயஸங்களுடன் ஸந்துஷ்டிசெய்வதல்ல; த்ரிகரண சுத்தியுடன் ப்ரியமாய் ஸந்தோஷப்படுத்துவதே ஆதரணை. ஸ்நானமென்றால், கங்கா யமுனா காவேரிகளில் ஸ்நானம் செய்வதல்ல; மனதில் எந்தக் கல்மஷங்களும் இல்லாமலிருப்பதே ஸ்நானம். சுசியென்றால், ஈரவஸ்த்ரங்களைக் கட்டிக்கொண்டு மடியாயிருப்பதல்ல; மனச்சுத்தியைவிட்டுப் பரிசுத்த சித்தத்துடனிருப்பதே சுசி. காம்பீர்யமென்றால், கூடகோபுரம் மாடமாளிகைகள் கட்டிக்கொண்டு பூஷணங்களைத் தரித்துக்கொண்டிருப்பதல்ல; ஸத்யம் தவறாமல் நடப்பதே காம்பீர்யம். சூரனென்றால், யுத்தத்தில் ஜயமடைபவனல்ல; தனது இந்த்ரியங்களை ஜயித்தவனே சூரன். தாதாவென்றால், தானம் செய்யப்பட்டவனல்ல; பூததயை பச்சாத்தாபமுடையவனே தாதா. வக்தன் (வகீல்) என்றால், பாரிஸ்டர் வகீலல்ல; ஸத்யமாய் வார்த்தையாடுபவனே வக்தா (வகீல்). சிஷ்டனென்றால், ஆசனத்தின்மீதுட்கார்ந்து கண்களைமூடித் தான் உபதேசம் பெற்ற மந்த்ரங்களை மனதினால் அஜபாவாய் உச்சரித்துக்

கொண்டிருப்பதல்ல; ஸங்கல்ப விகல்பங்களில்லாமல் மௌன முத்திரையைத் தரிப்பதே விஷேஷ பாண்டித்யமென்றால், வேத ஶாஸ்த்ரங்களைக்கற்று விண்விவாதங்களில் ப்ரவேசிப்பதல்ல; ப்ரத்யக் ஜ்ஞானமடைந்து ப்ரஹ்மானந்தத்தை அனுபவித்திருப்பதே பாண்டித்யம். மேற்சொல்லிய விஷயங்களையெல்லாம் நிவர்த்திசெய்து "ஆத்மவத் ஸர்வ பூதாநி" என்னும் வாக்யரீதியாய் ஸகல ஜீவஜந்துக்களிலும் ஆத்மா வஸித்துக்கொண்டிருப்பதனால்; ஸகல பூதங்களையும் தன்னைப்போல் பாவித்து ஸஞ்சரிக்கும் புருஷர்களுக்கு சித்தஶுத்தி உண்டாகும். சித்தஶுத்தி அடைந்த புருஷர்கள், பூமியானது ஸகல ஜந்துக்களுக்கும் ஆதாரமாய் அவைகளின் காரியத்திறமெல்லாம் ஸஹித்துக்கொண்டிருப்பதுபோல் ஸகலத்தையும் ஸஹித்துக்கொண்டிருக்கவேண்டும். ஸ்படிகக்கல்லில் எத்தனை குணங்களிருந்தபோதிலும் ப்ரயோஜனப் படமாட்டா. பர்வதங்கள் ஸகல ஜீவகோடிகளுக்கும் ஆதாரமாயிருப்பதுபோல், இதரர்கள் விஷயமாய் நிரந்தரம் உபகாரஸ்ம்ருதியுண்டாயிருக்கவேண்டும். மூலச்சேதம் செய்தபோதிலும், அதாவது கிளைகளை வெட்டியபோதிலும், பட்டைகளைச் செதுக்கியபோதிலும், வ்ருக்ஷங்கள் பலருக்கும் உபயோகப்படுவதுபோல், தனக்கு ஆபத்து வந்தபோதிலும் நிர்ச்சலசித்தத்துடன் பின் வாங்காமலிருக்கவேண்டும். குளத்தில் ஸ்நானம் செய்தபோதிலும் குளத்துஜலம் பரிஶுத்தமாயிருப்பதுபோல், ஸத்ப்ரவர்த்தனத்தினால் எப்பொழுதும் ஶுசிர்பவனாயிருக்கவேண்டும். அக்னி எப்பொழுதும் அந்தகாரமாயிராமல் தேஜோமயமாயிருப்பதுபோல். அஜ்ஞானத்தினால் மூடப்படாமல் ஸாக்ஷாத் விசிஷ்டனாயிருக்கவேண்டும். ஸமித்துக்களின் சேர்க்கையினால் அக்னி ப்ரகாசிப்பதுபோல் ஶுத்தமான தபஸினால் ப்ரகாசித்துக் கொண்டிருக்கவேண்டும். அக்னி அப்ரயத்னமாய் ருசிபுசியாமல் தனக்கு ஸமித்வஸ்துக்களை நிறுத்தாமல் தஹனமே பண்ணுஞ்செய்வதுபோல் எப்பொழுது எந்தப்பதார்த்தம்கிடைக்கின்றதோ அதை

ருசி புசியாமற் புஜிக்கவேண்டும். மனதை அந்தப் பதார்த்தத்தில் செலுத்தாமல் புஜித்தால் ருசியை அறியமாட்டாது. இதை அப்யாஸம் செய்து தெரிந்துகொள்ளவேண்டும். வாயு, மந்த வேகங்கள் ஸுகந்த துர்க்கந்தங்கள் சீதளம் உஷ்ணம் முதலாகிய குணங்களுடன் கூடி வீசியபோதிலும், அந்தக் குணங்களெல்லாம் அதற்கு ஸம்ஸர்க்க தோஷங்களினால் உண்டானதேயொழிய ஸஹஜமல்லாததுபோல், தேஹத்தில் வஸிக்கும் ஆத்மாவிற்கு கர்மவஶத்தினால் ஸம்பவித்த ஸுக துக்கங்கள் முதலாகிய விகாரங்களெல்லாம் அஜ்ஞானவசத்தினால் தோன்றுமேயொழிய ஸஹஜமல்லவென்று அறியவேண்டும்.

ப்ராணவாயு, எவ்விதமாகிய ருசிபக்ஷங்களைக் கோராமல் ஸாமான்யமாகிய அன்னோதகங்களினால் த்ருப்தியடைவதுபோல், எப்பொழுதும் விஷயஸுகங்களுக்கு அனுகூலமாகிய ஆஹாரத்தை புருஷன் விஸர்ஜித்து தேஹதாரணத்திற்கு மாத்ரம் வேண்டிய ஸாதாரணமாகிய ஆஹாரத்தைப் புஜிக்கவேண்டும்.

ஆகாஶம், சராசரரூபமாகிய ஸமஸ்த பதார்த்தங்களிலும் ஒட்டாமல் நிறைந்திருந்தபோதிலும், எதிலும்படாமல் விலக்ஷணமாயிருப்பதுபோலும் பரமாத்மா ஸகலவஸ்துக்களிலும் பஹிரந்தரங்களில் எங்கும் நிறைந்திருந்தபோதிலும் விலக்ஷணமாயிருக்கின்றதென்றும், ஆகாஶத்தினிடமாய் தன்னிடம் தோன்றும் மேகங்கள் மின்னல்முதலாகியவைகளையெல்லாம் ஆகாஶம் பற்றாமலிருப்பதுபோல், பரமாத்மா காலவஶத்தினால் தோன்றும் உத்பத்தி ஸ்திதி நாஶனங்கள் ஆகிய எவற்றையும் அடையாமல் ஸச்சிதானந்தமயமாய் ப்ரகாசித்துக்கொண்டிருக்கின்றதென்றும் அறியவேண்டும்.

வ்ருத்தி க்ஷயங்கள் சந்த்ரகலைக்கே யொழிய சந்த்ரனுக்கில்லாமலிருப்பதுபோல், ஷட்பாவ (காமக்ரோதாதி) விகாரங்கள் ஶரீரத்திற்கேயொழிய ஆத்மாவிற்கல்லவென்று அறியவேண்டும். ஸூர்யன் தன் கிரணங்களினால் ஜலத்தை ஆகர்

ஷித்த போதிலும் அதைத் தான் உபயோகப்படுத்திக்கொள்ளாமல், மறுபடியும் பூமியில் விட்டுவிடுவதுபோல் இதரர்கள் தனக்குக்கொடுத்த பதார்த்தத்தைத் தன்கோஶத்தில் உபயோகப்படுத்தாமல் தன்னை ஆஸ்ரயித்தவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கவேண்டும். காதினால்கேட்ட ஶப்தாதி விஷயங்களை க்ரஹித்தபோதிலும், மனதில் நிறுத்தாமல் அவைகளை உடனே நிவர்த்திசெய்யவேண்டும். சிறுபிள்ளைகள் மானவமானம், ஶத்ருமித்ருக்கள், லோகதுக்கங்கள் முதலானவைகளையெல்லாம் கவனித்திருக்காமல் தமது ஆட்டத்தில் ஆசையுடையவர்களாய் ஆனந்திப்பதுபோல், ஞானவிஶத்தினால் மானவமானங்களெல்லாம் ஶரீரத்திற்கேயொழிய ஆத்மாவிற்கில்லையென்று தெரிந்து புத்ர களத்ராதி விஷயசிந்தையில்லாமல் த்ருட *வைராக்யத்தினாலும் † அப்யாஸ யோகத்தினாலும் மனதைச்சிதற விடாமல், ஆடாமல் தூங்கிவிட்ட பம்பரம்போல் நிறுத்தி இதர சிந்தனைகளில்லாமல் தைலதாரையைப்போல் அவிச்சின்னமாகிய த்யானத்துடன் பரமாத்மாவிலேயே த்ருஷ்டியை நிறுத்தவேண்டும். அது எப்படியெனில்:—

"ஆடாமலோய்ந்திட்ட பம்பரம் போலவிகை
 யடங்கிமனம் வீழ்ந்தபோ
 யறியாமை யானன்ற விருளகல வருளொளியு
 மல்லா திருந்த வெளிபோற்.
கோடா தெனைக்கண் டெனைக்குணமறை சாந்தவெளி
 கூடியின் பாதிருங்
 கூடினே ஞேசரியை கிரியையின் மூவன்மெறி
 கூடினே னெவல்லனியா
வீடாக வேயாகு வீட்டினி னியம்பியே
 விலங்கினர் பிராணனென்று

* வைராக்யமென்றால், இந்திரியங்களை விஷயங்களிற் போகவிடாமல் நிர்ப்பந்தப்படுத்தல்.

† அப்யாஸயோகமென்றால், மனதை பரமாத்மாவில் நிச்சலமாய் சேர்ப்பதற்குப் பழக்கப்படுத்தல்.

 விருத்தி யினைக்கூடி யோகபா ரூடனா
 வேழைக் கும்பனுக்
தேடா தறிக்கவொரு மதிவந்த தென்கொலோ
 தேடரிய சத்தாகியென
 சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
 தேஜோ மயானந்தமே."

ஶ்ரு|| "ப்ரணவோ தநு: ஶரோஹ்யாத்மா ப்ரஹ்ம தல்லக்ஷ்ய
 முச்யதே அப்ரமத்தேந வேத்தவ்யம் ஶரவத்தன்மயோ பவேத்"

என்னும் த்யானபிந்தூபநிஷத் ஶ்ருதியால், ப்ரணவமே தநுஸு, ஜீவனே பாணம், லக்ஷ்யமே பரப்ரம்மமென்று சொல்லப்படும். ஆதலால், வில்லேட்டன் வில்லுபில் லக்ஷ்யம் வைத்து பாணத்தை விட்டபோது அந்தபாணம் குறிதப்பாமல் அந்த லக்ஷ்யத்திலேயே சேர்ந்து குத்திக்கொண்டு அதிலேயே ஒட்டிக்கொண்டிருப்பதுபோல், ப்ரம்மஞானியும் ப்ரணவமென்னும் தநுவில் ஜீவனென்னும் பாணத்தைப்பூட்டி ப்ரம்மமென்னும் லக்ஷ்யத்தில் குறிவைத்து ப்ரயோகித்தபோது இந்தஜீவனென்னும் பாணமானது அந்தலக்ஷ்யமென்னும் பரப்ரம்மத்திற்சேர்ந்து அதிலேயயிருந்து தன்மயமாகும்.

‡ குளவி தான்பிடித்துக்கொண்டுவந்த புழுவைக் கூண்டில் வைத்து அதைச் சுற்றிச்சுற்றி ரீங்காரஞ் செய்துகொண்டிருப்பதனால் அப்புழுவானது பயத்தினால் தன் லக்ஷ்யங்களையெல்லாம் அந்தக்குளவியின்மீது வைத்துக் கடைசியில் அதன் ரூபத்தை யடைவதுபோல், பயத்தினாலோ ஸ்நேஹத்தினாலோ தேஹதாரி எந்தப் பதார்த்தத்தில் மனதை த்ருடமாய் நிறுத்தி த்யானம் செய்கின்றானோ, அந்தப்பதார்த்தத்தின் ஸ்வரூபத்தை ஸத்யமாய் அடைவானென்று தெரிந்துகொண்டு பகவத் ஸ்வரூபத்தில் மனம் கலக்க த்யானிக்கவேண்டும். விஷயானந்த பூர்த்தியாய் சுகிக்கும் வரையில் பரப்ரம்மத்தில் திவ்யமங்கள ஸ்வரூபத்தை அடையமாட்டான்.

பூர்ணமாய் அஜ்ஞானத்தினால் மூடப்பட்டவர்களுக்கு தேஹமே தானெனவும், த்ருஸ்ய ப்ரபஞ்சமெல்லாம

த்யமென்றும் தோன்றுவது ஸ்வப்நமேயாதலால், அப்படிப் பட்டவர்கள் அவசியமாய் யமநியமாதிகளோடு ஸத்கர்மங்களில் ப்ரவர்த்திக்கவேண்டும். அவர்களிலே அதிக விவேகமுடையவர்கட்கு ஜீவனீச்வரனென்றும், இந்த ப்ரபஞ்சமெல்லாம் காலக்ரமத்தில் நிலையற்றுப் போவதனால் அநித்யமென்றும் தோன்றுவது வைராக்யமாதலால் அப்படிப்பட்டவர்கள் முக்யமாய் சித்தசுத்திக்காக [illegible] களாய் பக்திமார்க்க ப்ரவிஷ்டர்களாய் ப்ரவர்த்திக்கவேண்டும்.

பூர்வ ஜன்ம [illegible] பட்டவர்களுக்கு [illegible] விசாரணையினால், ப்ரஹ்மமே நானென்றும், இந்தப் ப்ரபஞ்சமெல்லாம் மித்யையென்றும் தோன்றுவது ஞானமாதலால், அப்படிப்பட்டவர்கள் [illegible] ப்ரஹ்மத்திற்கனுகூலமான [illegible] அந்த 'நான்' என்னும் [illegible] நீங்கி [illegible] ஸ்வரூபமாய் ஸ்திரமாய் அடைந்திருக்கவேண்டும்.

[illegible] ஞானத்தால் [illegible] கேவல [illegible] யில் [illegible] விசேஷமுக்தியை யடையவேண்டும்.

ஆதலால், [illegible] இந்த [illegible] அபிப்ராயத்தை [illegible] [illegible] ஞானார்ந்த [illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible] பரமாத்மா [illegible] ப்ரஹ்மமே [illegible] தம் [illegible] மந்த்ர [illegible] தர்ம [illegible] மார்க்கம் [illegible] மார்க்கம்."

அடியேனுடைய [illegible] ஜீவனை [illegible] ஞானேந்த்ரியங்களும், மனோ புத்தி சித்த அஹங்காரங்களாகிய அந்தக்கரணங்களும், பஞ்சப்ராணன்களும், [illegible] களும், [illegible] ஆத்ம ஸ்வரூபத்தினின்று [illegible] வேதாந்த [illegible] ப்ரஹ்மம், [illegible] ஆத்ம ஸ்வரூபியாகிய அடியேன் அந்தப் ப்ரஹ்மத்தை [illegible] அடியேனை [illegible] அந்தப் ப்ரஹ்மத்தின் [illegible] அடியேனுக்கு அந்தப் [illegible] அந்தப் ப்ரஹ்மத்தில் [illegible] அடியேனுக்கு [illegible] அடியே [illegible] ஆ! ப்ரஹ்ம ஸ்வரூப மாகிய பரப்ரஹ்மமே! ஆ! குருவே! மார்க்கமும் மார்க்கமும் [illegible] பணிந்து கொண்டேன்!

ஸ்ரீ பரமஹம்ஸ வேதாந்த ரஹஸ்யம்

முற்றுப்பெற்றது.

[illegible] மாணிக்கம் பார்க்க.

[illegible]

[illegible]

ஸர்வம் பூர்ணப்ரம்மமயமே [illegible]

Paramahamsa Sachithanantham

* [illegible]

551

ஸ்ரீ கபீர்தாஸ் சரித்ரம்.

இது, பக்திசெய்து முக்தியடைந்த ஜவர் சரித்ரங்களில் ஒன்று; இந்நூலாசிரியரால், பாலர் பாலிகைகளுக்கும் விளங்குமாறும்படி இனியதமிழ்நடையில் எழுதப்பட்டுள்ளது. இதிலுள்ள முக்யமான விஷயங்கள் இதனடியில் சொல்லப்பட்டிருக்கின்றன. அவை வருமாறு:—

1. பகவானுடைய ஞானாம்சமாய், ஸ்ரீசுகர், ஸிஸுரூபமாய் முத்துச்சிப்பியிலவதரித்து க்வா! க்வா!! க்வா!!! என்று விரிட்டழுது பெருவிரலை வாயில் வைத்துக்கொண்டு கங்கையில் மிதந்துபோதல்.
2. ஸிஸு தமால்கையில், அகப்பட்டு கபீர் என்னும் பெயருடன் வளர்ந்து வருதல்.
3. தேவாம்சை, ஸூதரை மோஹித்ததனால் பூலோகத்தில் அவதரித்து ஸுந்தரா என்னும் பெயருடன் வளர்ந்துவருதல்.
4. கபீர், ஸுன்னத் செய்யவந்த காஜியுடன் தர்க்கம் செய்து ஜயித்தல்.
5. கபீர் தாயார் ஜிஜாபீபீ தன் மகனை நெசவுசெய்யும் தொழிலில் விடுதல்.
6. ப்ராம்மணரூபமாய்வந்த பகவானுக்கு கபீர் வஸ்த்ர தானம் செய்தல்.
7. பகவான், கபீருக்கு ஸகுணோபாஸனத்தை உப தேசித்தல்.
8. பகவான், கபீரைச்சோதிக்க பகீர் வேஷத்துடன் வருதல்.
9. பகீருக்கும் கபீருக்கும் ஸம்வாதம் நடக்குதல்.
10. பகீர், ஜிஜாபீபீயிடம் சென்று கோள்சொல்லி சண்டையைசெய்வித்தல்.
11. பகவான் கபீருக்கு தர்ஸனம் கொடுத்தல்.
12. ராமானந்தர் சிஷ்யர்கள், கபீரை அடித்து மடத்திலிருந்து துரத்துதல்.

13. மறுபடியும் கபீர், ராமாநந்தரை வேண்டி அவரிட மிருந்து ஆசீர்வாதம் பெறுதல்.
14. ராமாநந்தரிடம் கபீர், தாரகமந்த்ரம் உபதேசம் பெறுதல்.
15. கபீர், மறுபடியும் [illegible] ஜயித்தல்.
16. கபீர், கோரக்கரை ஜயித்தல்.
17. தமால், கபீருக்கு [illegible]செய்ய ப்ரயத்னப்படுதல்.
18. கபீருக்கும் லோகாவுக்கும் விவாஹ மஹோத் ஸவம் நடத்தல்.
19. கபீர் ஸ்ரீலக்ஷ்மியை நிவர்த்திசெய்தல்.
20. கபீர், ஸ்ரீலக்ஷ்மியை [illegible]வென்று உபதேசம் செய்தல்.
21. பகவான், கபீரை பரீக்ஷித்தல்.
22. கபீர் தன் பார்யையாகிய லோகாவை [illegible] [illegible] என்பவனிடம் கொண்டுபோய் விடுதல்.
23. பகவான், லோகாவின் [illegible] [illegible] ஆபரணம் [illegible] ஞானோபதேசம் [illegible] செய்தல்.
24. தமாலும் ஸ்ரீ[illegible] [illegible] அடைதல்.
25. பகவான், கபீர் வஸ்திரத்தில் [illegible] புரிதல்.
26. [illegible] [illegible] [illegible] கபீருக்கு ஸ்ரீ[illegible] [illegible] சொல்லுதல்.
27. கபீருடைய [illegible], பெருமையோடு [illegible] [illegible] செய்தல்.
28. பகவான், கபீர் [illegible] [illegible] ஆகித்தல்.
29. கபீர், [illegible] [illegible] உபதேசம் செய்தல்.
30. அர்த்தராத்ரியில் வந்த [illegible] [illegible] [illegible] பதார்த்தம் கொண்டுவரும்படி கபீர் தன் [illegible] [illegible] அனுப்புதல்.
31. அர்த்தராத்ரியில் [illegible] பதார்த்தம் கொண்டுபோவதற்கு பகவான் [illegible] கொண்டுவருதல்.
32. கபீர், பதார்த்தம் தந்த [illegible] [illegible] [illegible] கொண்டுபோய் [illegible]தல்.

33. கபீர் குமாரன் கமால், தீர்த்தயாத்திரை செய்தல்.
34. கபீருக்கும் ரோஹிதாஸருக்கும் ஸம்வாதம் நடக் குதல்.
35. பகவான் வந்து, கபீரையும் ரோஹிதாஸரையும் ஸமா தானம் செய்தல்.
36. கோரக், இரண்டாவது முறை கபீரிடம் வந்து தோல்வியடைந்து பரிஹாஸமாகுதல் (அவர் முதலில் தோல்வியடைந்தா னென்று கபீருக்கு [illegible] [illegible] தெரிய [illegible] [illegible] செய்து, இறந்து கிடக்கும் காகம் குயிலை [illegible] கொண்டுவந்து கபீர் முன் போட்டு "இந்தக் குயிலின் சரீரத்தில் புகுந்து செல்லப்பார்ப்போம்" என்று சொல [illegible] "இது பெரிதான காரியமல்ல" என்று சொல்லி, [illegible] [illegible] [illegible] நின்றிருக்கும் ஓர் இறந்து [illegible] "இவன் [illegible] [illegible]" என்று சொல்லி [illegible] [illegible] (தங்களின்) [illegible] தன் [illegible] [illegible] இந்தக் குயிலின் சரீரத்தில் புகுந்து செல [illegible] என்று [illegible] இறந்தவனது ஆத்மா தன் சரீரத்தைவிட்டு குயிலின் கலேபரத்தில் ப்ரவேசித் [illegible] [illegible] [illegible]. உடனே கோரக் தன் சரீரத்தைவிட்டுக் காகத்தின் கலேபரத்திற்புகுந்து குயிலைத் [illegible] ஆரம்பித்ததை, குயில் வந்து கபீரை சரணாகதி [illegible], உடனே கபீர், அதனை கோரக் சரீரத்தில் புகும் படி சொல்லினர். அது, கோரக் சரீரத்தில் ப்ரவேசித்தது. காகம் வந்து பார்க்கப்போகுது தன் கலேபரத்தில் இறந்தவன் புகுந் திருப்பதைக்கண்டு [illegible] கபீரை சரணாகதியடைந் [illegible] [illegible] கோரக் சரீரத்திலிருக்கும் இறந்தவனைத் தன் கலே பரத்தில் [illegible] கபீர் சொல்லினர். உடனே இறந் தவன், கோரக் சரீரத்தைவிட்டு தன் கலேபரத்தில் [illegible] புகுந்தான். [illegible] [illegible] இருந்த கோரக், தன் கலேபரத் திற்போய்ப் புகுந்தான். இது, படிக்கப்படிக்க மிகவும் அத்புத மாயிருக்கும்.)
37. பகவான் கபீருக்கு [illegible], [illegible] வந்து [illegible] [illegible] [illegible] தன் [illegible] [illegible] [illegible] [illegible]தல்.

88. கபீர், ப்ராணாயாமம் செய்து நாபியிலிருக்கும் குண்டலி சக்தியைக் கிளப்பி ப்ரஹ்ம கபாலத்தை (உச்சியை)த் திறந்துகொண்டு பரப்ரஹ்ம ஸ்வரூபியாய்ச் செல்லுதல்.

89. கபீர் களேபரம், பாதிமலர்கள் துளசிகளாகவும் பாதிமலர்கள் மல்லிகை மலராகவும் காணப்பட்டது. அதை ஹிந்துக்களும் மஹம்மதியர்களும் அம்பாரியின் மீது வைத்து ஊர்கோலத்துடன் சென்று பூஜித்தல். இந்த ரூபப்படத்தோடு பதசரித்ரங்களும் படிக்கப்படிக்க மிகவும் அற்புதமாயிருக்கும்.

இப்படிப்பட்ட மஹா யோகீச்வரர்களாகிய இவர்களின் சரித்ரம், ஆதியில் (மூலநூல்) ஹிந்துஸ்தானமாய் மஹாராஷ்டிர பாஷையில் எழுதப்பட்டது; அதிலிருந்து ஸ்ரீ பக்தமாலிகையிலும், ஹிந்தியிலிருந்து குஜராத்தி பாஷையிலும், குஜராத்தி பாஷையிலிருந்து மஹாராஷ்ட்ர பாஷையிலும், மஹாராஷ்ட்ரத்திலிருந்து கன்னடத்திலும், வெளிவந்திருக்கிறது. இப்படிப்பட்ட உத்க்ருஷ்டமான சரித்ரங்களை சமதா, ஸ்வாமிகள் கன்னடத்திலிருந்து தமிழ் பாஷையில் மொழிபெயர்த்து எழுதியிருக்கின்றனர், இவை நூல்வொன்றாய் அச்சிட்டு வெளிவரும். இவ்விரண்டு சரித்ரங்களும் சாதாரணமான சரித்ரங்களென்று எண்ணவேண்டாம். மோக்ஷமடைய சாதனமான சரித்ரங்களென்று அறியவேண்டியது. இதற்குமுன் ஸ்ரீ ஸ்வாமிகளால் எழுதப்பட்ட ஸ்ரீ துளஸிதாஸ் ஸ்ரீ ஞானதேவ் சரித்ரங்கள் இரண்டும் ஒரே புஸ்தகமாய் அச்சிட்டு வெளியாய்போகின்றன. இவைகள் நூல்வொன்றாம் மஹா அத்புதமான விஷயங்களாகவேயிருக்கும். முன் தெரிவிப்பவர்களின் பெயரை ரிஜிஸ்டர் செய்துகொண்டு, அச்சானவுடன் போஸ்ட் மூலமாய் தெரிவிக்கப்படும். அப்போது உங்கள் விலாஸத்துடன் தெரிவித்தால் வேண்டும் புஸ்தகங்களை அனுப்புகின்றோம். ஸ்வாமிகளின் நூல்கள் வேண்டுபவர்கள் அடியிற் கண்ட விலாசத்திற்கு எழுதிப்பெறலாம்.

T. கல்யாணசுந்தரம் A. ராஜகோபால்

பெரம்பூர் பாரக்ஸ்,

சென்னை.

கபீர்தாஸ் சரித்ரம்.

அன்பார்ந்த ஐயா! இதைக் கவனித்து வாசித்துப்பாருங்கள்!!

இந்நூலாசிரியராகிய சாது ஸ்ரீ ராமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீச்வரர், மூன்று நான்காம்படிகளாகிய யோக, ஞானமார்க்கங்களை மாத்ரம் ஜீவப்ரஹ்மைக்ய வேதாந்தரஹஸ்யத்தில் விசேஷமாய் போதித்திருக்கின்றார். மோக்ஷமடைய முக்யமான நூல் இதுவேயாம். மேற்படி ஸ்வாமிகள் 'ஸ்ரீ பகவத்கீதை' ஆறு அத்யாயம் வரையில் விசேஷார்த்தங்களுடன் ஸ்ரீ க்ருஷ்ணார்ஜுன ஸம்வாதரூபமாய் எழுதிமுடித்திருக்கின்றார். அதனை ஜீவ ப்ரஹ்மைக்ய வேதாந்தத்தில் ஆங்காங்கு த்ருஷ்டாந்தங்களாகக் காட்டியிருக்கின்றனர். முதல் இரண்டுபடிகளில் இருக்கப்பட்டவர்களுக்கு இந்நூல் பிடிபடுவது மிகவும் கஷ்டம். வேதாந்தம் எப்படிப்பட்டதென்றால், "விரும்பு சரியைமுதல் மெய்ஞ்ஞானம் நான்கும் அரும்புமலர் காய்கனி போலன்றோ பராபரமே," என்பதுபோல், அரும்பு மலர் காய் கனியைப்போன்றது. கனியாயிருக்கும் நான் இந்த நான்குபடிகளையும் அறியும். அதாவது, நான் அரும்பாயிருந்ததையும் அறியும், அதன்பின் மலராயிருந்ததையும் அறியும், அதன்பின் காயாயிருந்ததையும் அறியும், அதன்பின் கனியாயிருந்துகொண்டிருப்பதையும் அறியும், கனியாயிருக்கும்நான், முன்னிருந்த மூன்றுபடிகளையும் அறியும். நமது ஸ்வாமிகள், அரும்பு மலர்களை நீக்கி காய்கனியைப்போன்ற யோகஞானமார்க்கங்களைமாத்ரம் ஜீவப்ரஹ்மைக்யத்தில் விசேஷமாய் போதித்திருக்கின்றார். ஸ்த்ரீ புருஷ ரூபமாய் சஞ்சரித்துக்கொண்டு மாயையால் கட்டுப்பட்டு மிகவும் அகாதமான ஸம்ஸாரமென்னும் பாழுங்கிணற்றில் வீழ்ந்து ஆசையென்னும் வியாதியினால் பிடிக்கப்பட்டு விஷயவாஸனாரூபமாகிய அல்பசுகங்களுக்குட்பட்டு நிரந்தரம் பரிதபித்துக்கொண்டிருக்கப்பட்ட சில பாமரர்களுக்கு இந்நூல் பிடிபடுவது மிகவும் கஷ்டம். இப்படிப்பட்ட ஸ்த்ரீ புருஷர்களுக்கு முதலில் பக்திரஸத்தை ஊட்டவேண்டும். அப்போது அவர்களின் மனம் ஓர் நிலையில் நின்று மேற்படி ஏறுவதற்கு மார்க்கம் உண்டாகும். ஆதலால், பக்திசெய்து முக்தி அடையத்தக்க க்ரந்தங்கள் சிலவற்றை எழுதும்படி சிலபக்தர்கள் மேற்படி ஸ்வாமிகளைக் கேட்டுக்கொண்டபடியால், இது விஷயங்களைக் குறித்து ஸ்வாமி

கள் செவ்வனாய் ஆலோசித்து எதுவிஷயம் போதித்தால் ஜனங்கள் சீக்ரமாய் க்ரஹிக்கக்கூடுமென்று யோசித்துக்கொண்டிருக்கும் சமயத்தில், பரத கண்டத்திற்கு வடக்கே லோகரக்ஷணார்த்தமாய் பகவதாஜ்ஞானுசாரமாய் இந்தக் கலியுகத்தில் அவதரித்த பரம பாகவதர்களின் சரித்ரங்களையெல்லாம் விஸ்தரம்செய்து படனம் செய்யப்பட்டவர்களினுடையவும் கேட்கப்பட்டவர்களினுடையவும் ஹ்ருதயத்தை மூடிக்கொண்டிருக்கும் பாமரத்வங்களையெல்லாம் நீக்கி பக்தி வைராக்யங்களை உண்டாக்கி இஷ்டார்த்தங்களையெல்லாம் தீர்த்த 'மஹாபக்தவிஜயம்' என்னும் இந்த புராணத்தை முதல்முதல் புத்தவதாளர் என்பவரால் லோகோபகாரார்த்தமாய் ஸம்ஸ்க்ருத பாஷையில் எழுதப்பெற்றது. இவர், பண்டரீபுர நிவாஸர். மிகவும் பரிசுத்தமனமுடையவர். பிறகு கலியுகாதி 4732-வது ஆண்டில் ப்ரஹ்மாம்ஸராகிய நாபாஜிசித்தர் என்பவர் அதை ஹிந்துஸ்தானி பாஷையில் எழுதி, க்ருஷ்ண வஸிஷ்டாதி முனிவரிஷ்டர்களுக்கு வாசித்துக்காட்டினர். பிறகு விருத்தவஸிஷ்டர் கர்மாநுஷ்டித்தரிட்டு கேட்ட சரித்ரங்களை கீர்வாணபாஷையில் எழுதித் தமது சிஷ்யர்களுக்கு உபதேசித்தார். பிறகு கலியுகாதி 4862-ல் மஹிபதிபாவா என்பவர் அதை மஹாராஷ்ட்ரபாஷையில் ப்ரசித்திசெய்தார். பிறகு கலியுகாதி 4890-ஆவது ஆண்டில் தஞ்சைதேசத்தில் வசித்துக்கொண்டிருந்த ஸ்ரீ க்ருஷ்ணபாத யோகீஸ்வரர் அதை ஸம்ஸ்க்ருதபாஷையில் எழுதி ப்ரசித்தி செய்வித்தனர். பிறகு மைசூர்தேசத்தை ஆண்டுவந்த அரசர்களில், 21-வது அரசராகிய ஸ்ரீ க்ருஷ்ணராஜ உடையார் பஹதூர் அவர்கள் தம் காலத்தில் இந்த க்ரந்தத்தை கன்னடபாஷையில் எழுதிவைத்தனர். இப்படிப்பட்ட உத்க்ருஷ்டமான க்ரந்தம், நமது ஸ்வாமிகள் இருக்கப்பட்ட ஆஸ்ரமத்தினிடமே அகஸ்மாத்தாய் கிடைத்தது. ஸ்வாமிகள் அதைப்பார்த்து, மானிடயாக்கையெடுத்த ஒவ்வொருவருக்கும் பக்திரஸத்தை ஊட்டுவதற்கு இதுதான் சரியான நூல் என்றெண்ணி பண்டரிநாதனை பக்திசெய்து முக்தியடைந்த மஹாநுபாவர்களாகிய ஸ்ரீ கபீர், ஸ்ரீ துளஸீதாஸ், ஸ்ரீ ஞானதேவர், ஸ்ரீ ஜயதேவர், ஸ்ரீ நாமதேவர் ஆகிய இவ்வைந்து பக்தர்களின் சரித்ரங்களைக் கன்னடத்திலிருந்து தமிழ்பாஷையில் மொழிபெயர்த்து எழுதியிருக்கின்றனர். இதில் உண்டாகிய சரியான 'பக்தவிஜயம்' முழுக்ரந்தம் இதுவேயாம்; இப்படிப்பட்ட க்ரந்தம் இதுவரையில் தமிழ்பாஷையில் வெளியாகவில்லை. பக்தவிஜயமென்று பெயர்வைத்து வேறு வேறு விஷயங்களை எழுதி இதுவரையில் அச்சிட்டிருக்கின்றார்

கள். அதற்கும் இதற்கும் விசேஷ தாரதம்யம் உண்டு. இப்போது கபீர்தாஸ் சரித்ரத்தை இதில் சற்றே சுருக்கிக்காட்டியிருக்கின்றது. அதாவது—,

பூலோகத்தில் பாமரர்களுக்கு பக்தி ஜ்ஞானங்களை உபதேசிப்பதற்காக பகவான் ஸ்ரீ சுகப்ரஹ்மரிஷியை ஸிசுரூபமாய்ச்செய்து கங்காநதியில் மூன்றுமுறைமூழ்த்தி முத்துச்சிப்பியில்வைத்து கங்கையில் விட்டுவிட்டார். பகவான் ஸிசுவை கங்கையில் மூன்றுமுழுக்குகள் முழுத்தினவுடனே ஸ்ரீ சுகர் மாயையால் மூடப்பட்டு திக்குமுக்கலாடி, ஹரி ஹரி தேவா! தேவா!! தேவா!!! என்று அழுது முத்துச்சிப்பியில் கிடந்துகொண்டிருந்தது. கங்காதேவி, முத்துச்சிப்பியை தன் அலைகளாகிய கைகளால், கங்கைக்கரைமேல் தவம்செய்துகொண்டிருக்கும் தமால் ஸமீபமாய்க் கொண்டுபோய் நிறுத்தினாள். அப்போது ஸிசு 'தமால்' கையில் அகப்பட்டு கபீர் என்னும் பெயருடன் வளர்ந்துவந்தது. ஆதியில் 'ரம்பை' சுகரை மோஹிக்க வந்து பாலசரீரத்துடன் ... அவர் செல்லும் மார்க்கத்தில் பாணசாலைகட்டி அதிலே வசித்துக்கொண்டு அவர் செல்லும் மார்க்கத்தில் ... அநேகமான தவம் செய்பவளைப்போல் நடித்துக் காட்டினள். அப்போது சுகர், வேஷதாரி ஸ்த்ரீயைக்கண்டு பேசியபோது, 'தவத்தை கெடுத்தாய்' என்று கோபித்துச் சபிப்பதாய் ஸ்த்ரீயாகிய ரம்பை சொல்லினள். சுகர் மன்னிக்கும்படி கேட்டார். 'என் கோரிக்கையை நிறைவேற்றினால் மன்னிப்போம்' என்று ரம்பை சொல்லினள். சுகர் அதற்குச் சம்மதித்தவுடன் ரம்பை காஷாய வஸ்த்ரத்தை நீக்கி தன் நிஜஸ்வரூபத்தைக் காட்டி போகிக்கும்படி சொல்லினள். உடனே சுகர் இக்கட்டு பதில்சொல்ல யாதொன்றும் தோன்றாமல் சிலநேரம் சென்றபிறகு 'கலியுகத்தில் உன்னிஷ்டத்தைப் பூர்த்திசெய்கின்றேன்' என்று வரங்கொடுத்தனுப்பினர். அதுபோல், இக்கலியுகத்தில் அதிக ரூப லாவண்ய விலாசத்துடன் 'ஸுந்தரா' என்னும் பெயருடையவளாய்க் கபீருக்கு நெருங்கிய பந்துக்களில் அவதரித்தாள். கபீர் இவளை மணம்புரிந்து கோடாலி யந்த்ரங்களில் ... செய்வதுபோல் மஹம்மதகாம்யிருந்துகொண்டு மாலைகளை ... தும்சம்செய்வதுபோல் ... கோடாலிக்காம்பாயிருந்து ... பக்தி மதத்திற்கெல்லாம் ... ப்ரபஞ்சத்தைச் சீர்திருத்தி முடிந்தவுடன், பகவான் மார்க்கங்களினால் ப்ரபஞ்சத்தைச் சீர்திருத்தி முடிந்தவுடன், பகவான் ப்ரத்யக்ஷமாய், "கபீர! நீ அவதரித்த காரியம் முடிந்தது. இனி பரமபதம் வந்து சேரக்கடவாய்" என்று ஆஜ்ஞாபித்து ஸுந்தராதேவியைத் தன்னுடன்கூட அழைத்துக்கொண்டு விமானத்தின்மீதேறி

உட்கார்ந்தவுடன், அந்த திவ்ய விமானம் ஆகாசமார்க்கமாய்க் கிள
மிகவும் வேகமாய்ச் சென்று மறைந்தது. பிறகு கபீர், பகவ
ஞானசாரமாய்ச் சந்தோஷத்துடன், 'இந்த சரீரத்தை தகன
செய்யலாகாது; ஸமாதியும் செய்யலாகாது' என்று கைப்
எழுதிவிட்டு பத்மாஸனத்துடன் உட்கார்ந்து யோகபலத்தினால்
விருக்கும் குண்டலினீசக்தியைக் கிளப்பி ப்ரஹ்மரந்த்ரத்தைத் திற
கொண்டு சுகப்ரஹ்மரிஷியாய் திவ்ய விமானமேறிச் செல்லும்போ
ஸுரர்களும் முனிவர்களும் வந்து எதிர்கொண்டு அழைத்துச்செ
றார்கள்.

பொழுது விடிந்தவுடன் கபீர் பரமபதம் அடைந்த விஷ
பட்டணமெங்கும் வியாபித்து ஹிந்துக்களும், மஹம்மதியர்களும் இ
எங்கள் கலேபரம் இது எங்கள் கலேபரம் என்று சண்டையிட்டு
ஒவ்வொருவர் சண்டைகளை உடைத்துக்கொண்டார்கள். அ
இது விஷயம் கேட்டு நூர்மியும் வந்து இவர்களை சமாதானப்படுத்
கபீர் கையினால் எழுதியிருக்கும் வாக்யத்தை வாசித்து கபீ
ஸ்து செய்த பட்டுப் பீதாம்பரத்தை கலேபரத்தின்மீது மூடி,
விலக்கிப் பீதாம்பரத்தைத் திறந்து பார்த்தபோது கபீர் சரீரம் ப
துளசி தளமாகவும் மற்றப் பாதி சரீரம் மல்லிகை புஷ்பமாக
இருந்தது. உடனே அரசன் இரண்டு பாகத்தையும் கூப்பிட்டு
ரவர்களின் பாகங்களை அவரவர்களே எடுத்துக்கொள்ளும்படி ஆக்
பித்தார். உடனே ஹிந்துக்கள் துளசிதளங்களையும் மஹம்மதியர்
மல்லிகை புஷ்பங்களையும் எடுத்துக்கொண்டு அம்பாரி மீது வைத்
பேரிகை முதலிய வாத்யங்களுடன் ஊர்கோலம்சென்று உசிதமா
ஸ்தலத்தில் வைத்துப் பூஜித்து வந்தார்கள். இது வாசிக்க வாசி
ஆனந்தத்தை உண்டாக்கிப் பக்தியை விருத்திசெய்விக்கும்.

இது ஸொந்தமான கடிதங்கள் காலிகோ பயிண்டு
விலை ரூபா 2 4

இப்புஸ்தகம் வேண்டுவோர்கள்,

T. கல்யாணசுந்தரம்,

பெரம்பூர் பாரக்ஸ், சென்
என்று எழுதிப் பெறலாம்.

வெளிவரப்போகின்றது!

வெளிவரப்போகின்றது!!

துளஸீதாஸ் சரித்ரம்.

ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீச்வரர் எழுதிமுடித்த "ஸ்ரீ துளஸீதாஸ்" "ஸ்ரீ ஜ்ஞானதேவ்" சரித்ரங்கள் இரண்டும் ஒரே புஸ்தகமாய் உயர்ந்த கடிதத்தில் அச்சிட்டு காலிகோ பயிண்டுடன் வெளிவரப்போகின்றது. அதன் விலை ரூபா 2 4 0. இந்த சரித்ரம், வால்மீகி அம்சமே "ஸ்ரீ துளஸீதாஸ"ராகவும், விஷ்ணுமூர்த்தி அம்சமே "ஸ்ரீ ஜ்ஞானதே"வாகவும், ப்ரஹ்மதேவன் அம்சமே "ஸ்ரீ ஸோபானதே"வாகவும், பராசக்தி அம்சமே "முக்தாபாய்" ஆகவும், நாரதர் அம்சமே "ஸ்ரீ பாதஸ்வாமி"யாகவும், அருந்ததிதேவி, வஸிஷ்டர் அம்சமே "முக்தாபாய்" "விடோபா"வாகவும், பரமசிவன் அம்சமே "நிவ்ருத்திதே"வாகவும், பிறந்து கலியுகத்தைச் சீர்திருத்த வந்தவர்களின் கதைகளைக் குறிக்கவேயாம். ரிஷிகளும் ஆதிராக்கியும் மூர்த்திகளும் அவதரித்து பாமரஜனங்களுக்கு ஜ்ஞானோபதேசம் செய்தவைகள் இந்தசரித்ரங்கள் எவ்வளவு ப்ரோத்ஸாஹமானதாயிருக்கலாமோ அவைகளைச் சற்று ஆலோசித்துப் பாருங்கள். இதில் அடங்கிய விஷயங்களின் அட்டவணை, சற்றே சுருக்கமாய் கீழ்கண்டபடி எழுதப்பட்டிருக்கின்றது. அவை வருமாறு:—

1. வால்மீகி அம்சத்தில் ஸ்ரீ துளஸீதாஸ் அவதரித்தல். 2. ஸ்ரீ துளஸீதாஸ் தாஸிகளின் மோஹவலையில் அகப்பட்டுக் கொண்டது. 3. வைராக்யஜ்ஞானாரமமாய் தேவகன்னிகை ..... 4. பரப்ரேதலோகத்திலிருந்து வந்து துளஸீதாஸருக்கு புத்திசொல்லது. ஸ்த்ரீ ஆனவளும் பாபமென்று ஆத்மாராமன் ஸ்ரீ துளஸீதாஸருக்கு உபதேசித்தல். 5. வைராக்யஜ்ஞானாரமமாய் தேவகன்னிகை இரண்டாவதுமுறை ஸ்ரீ துளஸீதாஸ் இடம் வருவது. 6. ஸ்ரீ துளஸீதாஸ் தன் பார்யாளின்மீது மருள்கொண்டிருப்பது.

7. ஸ்ரீ துளஸீதாஸ் பாதுஷாவிடமிருந்து வந்து மமதாதேவியிடம் செல்வது. 8. மமதாதேவி ஸ்ரீ துளஸீதாஸுக்கு புத்தி சொல்வது. 9. ஸ்ரீ துளஸீதாஸ் விரக்தி அடைதல். 10. தாயாகிய ரத்னபாயும் பார்யாளாகிய மமதாதேவியும் ஸ்ரீ துளஸீதாஸைதேடி காசிக்குச்செல்லுதல். 11. ஆத்மாராமன் குமாரனிடம்சென்று பரமஸித்தி அடைதல். 12. ஸ்ரீ துளஸீதாஸ் பசதீர்த்தத்திலும் வேதாளன் ஸர்ப்பம் ஸ்வாரஸ்யமாகுதல். 13. வேதாளன் ஹநுமானை தர்சிக்க ஸ்ரீ துளஸீதாஸனுக்கு உபாயம்சொல்வது. 14. ஸ்ரீ துளஸீதாஸ், ஹநுமான் ப்ரஸாதம் பெறுதல். 15. ஹநுமான் வாக்கின்படி ஸ்ரீராமமூர்த்தி மாறுவேஷமாய் துளஸீதாஸனிடம் செல்லுதல். 16. ஆஞ்சநேயர் விஸ்வரூபம்தரித்து வைகுண்டம் அடியுடன் பெயர்க்க ப்ரயத்னப்படுதல். 17. பகவான் ஸ்ரீராமமூர்த்திரூபமாய் ஸ்ரீ துளஸீதாஸனுக்கு ப்ரத்யக்ஷமாகுவது. 18. ஸ்ரீ துளஸீதாஸ் ப்ரஹ்மஜ்ஞானம்பெற தன்னில்தான் ஆலோசனைசெய்வது. 19. ஹநுமான் ஸ்ரீ துளஸீதாஸனுக்கு ப்ரஸன்னமாய் ஜ்ஞானோபதேசம்செய்தல். 20. ஸ்ரீ துளஸீதாஸ்மடத்திற்கு பகவான் காவல்காத்து கள்ளர்களை வதைப்பது. 21. ஸ்ரீ துளஸீதாஸ் ராமநாமத்தின் ப்ரபாவம் வெளியிடுதல். 22. ஸ்ரீ துளஸீதாஸ் தன்பார்யாளை கண்ட ப்ராஹ்மணனுக்குக் கொடுப்பது. 23. பகவதனுக்ரஹத்தினால் மமதாதேவி பக்தியுடன் பரமபதம் செல்வது. 24. மரணமடைந்தவர்களை துளஸீதாஸ் ஆசீர்வாதத்தால் பிழைப்பது. 25. ஸ்ரீ துளஸீதாஸ் விஷயத்தில் துலுக்கர்கள் யுக்திசெய்வது. 26. துளஸீதாஸ் பாதுஷாவிற்கு தத்வோபதேசம்செய்தல். 27. ஸ்ரீ துளஸீதாஸ் பாதுஷாவிற்கு ஜகத்பக்தி உபதேசித்தல். 28. பகவான் தன் ஹஸ்தத்தால் ஸ்ரீ துளஸீதாஸ் சரித்ரம் எழுதுவது. 29. ஸ்ரீ துளஸீதாஸ் பண்டரிபுரத்தில் பிறவிக்குருடனுக்கு கண்கொடுத்தது. 30. ஸ்ரீ துளஸீதாஸ் காசிராஜனுக்கு தத்வோபதேசம் செய்வது. 31. ஸ்ரீ துளஸீதாஸ் பரமஸித்தி அடைவது.

ஜ்ஞானதேவ் சரித்ரம்.

1. விடோபா தீர்த்தயாத்திரைசெய்வது. 2. ஸித்தோபந்தனுக்கும் விடோபாவிற்கும் ஸம்வாதம் நடப்பது. 3. விடோபா விவாஹம் செய்துகொள்வது. 4. விடோபா தாய்தந்தைகளிடம் சொல்வது. 5. விடோபா ஸ்ரீ பாதஸ்வாமிகளை ஆச்ரயித்து ஸந்யாஸம் பெறுதல். 6. ஸ்ரீ பாதஸ்வாமி அலங்காபுரி வருதல். 7. மறுபடியும் விடோபா க்ருஹஸ்தாச்ரமத்தில் ப்ரவேசிப்பது. 8. ப்ராஹ்மணர்கள் விடோபாவை ஜாதியிலிருந்து வெளிப்படுத்துதல். 9. ருக்மாபாய் கர்ப்பத்தில் நிவ்ருத்திகளும் பரமமுக்தியும் அவதரிப்பது; 10. குழந்தைகளை நீக்கி விடோபா துக்கப்படுவது. 11. விடோபாவை ஜாதியிலிருந்து வெளிப்படுத்தினவர்கள் தண்டனை செய்வித்தல். 12. ஜ்ஞானதேவுக்கும் விடோபாவிற்கும் நடந்த ஸம்வாதம் 13. ஜ்ஞானதேவ் எருமைக்கடாவினால் வேதம் சொல்லுவித்தல். 14. சாங்கதேவ் ஜ்ஞானதேவைப்பார்க்க புலிவாஹனத்தின்மீது செல்லுதல். 15. ஜ்ஞானதேவ் நாமதேவ் முக்தாபாய் முதலானவர்கள் சுவரின்மீதேறி அதைநடப்பித்து சாங்கதேவை எதிர்கொள்வது. 16. முக்தாபாய் சாங்கதேவிற்கு தத்வோபதேசம் செய்வது. 17. விடோபாஎன்னும் வர்த்தகன் ஜ்ஞானதேவினால் ஜ்ஞானவானாகுதல்.

இந்த 48 சரித்ரங்களும் வாசிக்கவாசிக்க மிகவும் அத்புதமாயிருக்கும். இவைகளை ஆதியில் "யுக்தவதாஸர்" லோகோபகாரார்த்தமாய் எழுதினார். அதை "நாபாஜிசித்தர்" ஹிந்துஸ்தானிபாஷையில் எழுதி வ்ருத்தவஸிஷ்டர் முனிவரிஷ்டர்களுக்கு வாசித்துக்காட்டினார். பிறகு விருத்த வஸிஷ்டர் நாபாஜிசித்தரிடம்கேட்ட சரித்ரங்களை க்வாலியர்பாஷையில் எழுதித் தமது சிஷ்யர்களுக்கு உபதேசித்தார். கலியுகாதி 4862-ல், மஹீபதிபாவா என்பவர் அதை மஹாராஷ்ட்ர பாஷையில் ப்ரஸித்திசெய்வித்தார். பிறகு கலியுகாதி 4890-ல்,

ஆண்டில் தக்ஷிணதேசத்தில் அவதரித்துக்கொண்டிருந்த ஸ்ரீ கிருஷ்ணபாத யோகீஸ்வரர் அதை ஸம்ஸ்க்ருதபாஷையில் எழுதி ப்ரசித்திசெய்வித்தனர். பிறகு ஸௌராஷ்ட்ரதேசத்தை ஆண்டுவந்த அரசர்களில் 21-வது அரசராகிய ஸ்ரீ க்ருஷ்ணராஜஉடையார் பஹதூர் தம்காலத்தில் இந்த க்ரந்தத்தை கன்னடபாஷையில் எழுதிவைத்தனர். இப்படிப்பட்ட உத்க்ருஷ்டமான க்ரந்தத்தை ஸம்ஸ்க்ருதம் கன்னடத்திலிருந்து தமிழ்பாஷையில் எழுதிவைத்தனர். இவைகள், இப்போதுதான் முதன்முறை அச்சிட்டு வெளிவந்து போகின்றது. இதில் உண்டாயிரு சரியான பக்தர்களின் சரித்ரங்கள் இதுவேயாம். இப்படிப்பட்ட க்ரந்தங்கள் இதுவரையில் தமிழ்பாஷையில் வெளிவரவில்லை. ஆனால் பக்தவிஜயமென்ற பெயர்வைத்து ஒரே விஷயங்கள் எழுதி இதுவரையில் அச்சிட்டிருக்கின்றார்கள். அவைகளிலிருந்து இதுவரையில் வாசித்திருக்கிறோம். அவைகளுக்கும் இதற்கும் விசேஷ பேதமுண்டு. ஆகையால், இதை வாசிக்கப்பட்ட நல்லொருமைப்பாதர்களின் கீர்த்தனம் ஸக்தி ஸ்வாமிகளால் எழுதிய இவ்வற்புதமான சரித்ரங்கள் இருக்கும்படியாகத்தில், இதனையீக்ஷணம் நல்லொரு ஸமயத்தில் ஸமேயாத்தார்களுக்கும் ஸுலபமாக யாவரும் வாசித்தறியும் இவ்வித ஸ்ரீ ஸ்வாமிகளால் எழுதப்பட்ட எல்லாப்புஸ்தகங்களும் அடியில்கண்ட விலாசத்தில் அதிகோபயோகமாயிருக்கிறது பக்தர்களுக்கு விற்பனை செய்யப்படும். அடியில்கண்ட விலாசத்தில் தவிர மற்றவிடங்களில் எங்கும் விற்பனை செய்யப்படமாட்டா. அநேகர்கள் விலாசம் தெரிந்துகொள்ளாமல் அநேகபுஸ்தக ஷாப்புகளில்சென்று விசாரித்து ஏமாந்துபோகின்றார்கள். என்னுடைய விலாசம் எங்களுக்குத் தெரியவந்தது. ஆதலால் ஸ்ரீ ஸ்வாமிகளால் எழுதியபுஸ்தகங்கள், அடியில்கண்ட விலாசத்திற்கு எழுதிப்பெறலாம். இவைகளுடைய வேறுபுஸ்தகங்கள் இவ்விலாசத்தில் கிடைக்கமாட்டாது. ஸ்வாமிகளின் புஸ்தகங்களே யாதொம் கிடைக்கும்.

இப்படிக்கு,

T. கல்யாணசுந்தரம், A. ராமகோபால் ...

... பேட்டை

சென்னை.